# சிறுகதைகள்
# சுஜாதா

Font: TAB-LFS-Kamban font

# பொருளடக்கம்


1. இரண்டணா ........ 3
2. அரிசி ........ 7
3. வாஷிங் மெஷின் ........ 11
4. நிஜத்தைத் தேடி ........ 15
5. திமலா ........ 20
6. குதிரை சிறுகதை ........ 26
7. மூன்று கடிதங்கள் ........ 32
   கடிதம்-1 ........ 32
   கடிதம்-2 ........ 36
   கடிதம்-3 ........ 36
8. இடது ஓரத்தில் ........ 38
9. யாகம் ........ 41
10. ஜில்லு ........ 45
11. அப்பா அன்புள்ள அப்பா ........ 51
12. முதல் மனைவி ........ 54
    Part 1 ........ 54
    Part 2 ........ 56
    Part 3 ........ 59
13. ஜன்னல் ........ 62
14. ஓரிரவில் ஒரு ரயிலில் ........ 67
    Part 2 ........ 71
    Part 3 ........ 75
    Part 4 ........ 80
15. கடவுள் இயந்திரம் ........ 86
16. தேஜஸ்வினி ........ 90
17. கைது ........ 100
18. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - சீனு ........ 107
19. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - அரசு பகுத்தறிவுப் பாசறை ........ 121
20. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - உஞ்சவிருத்தி ........ 134
21. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - என் முதல் தொலைக்காட்சி அனுபவம்! ........ 143
22. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - வேதாந்தம் ........ 152
23. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - பாப்ஜி ........ 161
24. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - மஞ்சள் சட்டை ........ 171
25. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - ராமன் ........ 183
26. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - வாழ்வா சாவா ........ 193
27. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - மாஞ்சு ........ 201
28. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - கதையா ? கற்பனையா ? ........ 213

## 1. இரண்டணா




இப்போதும் சிலர் இரண்டணா நாலணா என்ற சொற்களைப் பயன்படுத்தினால் சுதந்திரத்துககு முன் பிறந்தவர்கள் என்று நிச்சயமாக சொல்லலாம் இரண்டணா ஒரு தனி நாணயம். பித்தளை. சதுர வடிவில் இருக்கும். ஒரணா போல அசிங்கமான நெளிநெளிகள் இல்லாமல் கூர்மையான முனைகளை மழுப்பி ஒருபககததில் ஆறாம் ஜார்ஜ் மன்னர் தன் தலையில் கிரீடத்துடன் சைடுவாகாக பார்த்ததுக கொண்டிருப்பார். அவர் கிரீடத்தை துக்கிப் பார்ததால் அப்போது தான் கிராப்பு வெட்டிக் கொண்டிருக்கலாம் என்று தோன்றும்
இரண்டணா அந்த தினங்களின் பொருளாதாரத்தில் முக்கியமான நாணயம் இந்த நாட்களின் எட்டுபைசாவுக்கு சமம் என்று அதை அலட்சியம் பண்ணிவிடாதீர்கள் நான் சொல்லும் நாட்களில் சீரங்கம் திருச்சி பஸ் கட்டணம் இரண்டணா. பெனின்சுலர் கபேயில் தோசை இரண்டணா . கிருஷ்ணன் கோட்டை வாசலில் இலநதைப்பழம் லேக்கா உருணடை கொடுக்காப்புளி எல்லாமே காலணாதான் அதாவது இரண்டணாவில் எட்டில் ஒரு பங்கு. டிபிஜி கடையில் அழிக்கும் ரப்பர் கட்டைபேனா மசிக்கூடு ரூல்டு பேப்பர் ப்ளாட்டிங் பேப்பர் வாங்கியும் இரண்டணாவுக்கு சில்லரை தருவார் அல்லது ஒரு புளிப்பு மிட்டாய் தருவார் . வைகுண்ட ஏகாதசி திருவிழாவின் போது மார்கழி மாதத்தில் பகல் பத்தில் தேர்முட்டியருகில் தரையில் பள்ளம் தோண்டி துருத்தி வைத்து சாணி பூசி பெரிய வாணலி அமைத்து அதில் கொள்ளிடம் மணலைக் கொட்டி அதனுடன் வருக்கப்பட்டு உற்சாகமாக வெடிக்கும் பட்டாணி ஒரு பை நிறைய இரண்டணாவுக்கு கிடைக்கும், இரவு பெடரமாக்ஸ் வெளிச்சத்தில் பெரிய எழுத்து விக்ரமாதித்தன் கதை கொக்கோகம் போன்ற புத்தகங்கள் எங்கேயோ பார்த்துக்கொண்டு வாங்கலாம். ரங்கராஜாவில் 'காப்டன் மார்வல் 'படம் தரைடிக்கெட் இரண்டணா. தங்கராசு மிதிவண்டி நிலையத்தில் அவர்சைக்கிள் இரண்டணாவுக்கு எடுக்கலாம் அதற்கு கீழே ஒரணா அரையணா காலணா தம்பிடி போன்ற பரிவார நாணயங்கள் இருந்ததால் இரண்டணா இருக்கிறவன் ஆகாகான் போல உணரலாம் விகடன் பத்திரிகை நீல நிறத்தில் அச்சிட்ட சிறுவர் மலருடன் இரண்டணா .ஒரு பாக்கெட் கலர்கலராக இருக்கும் பலப்பம் இரண்டணா. லிப்ஸ்டிக் போல சிவப்படிக்கும் மிட்டாய் ஐஸ்கட்டியை சரக்சரக் கென்று தேய்த்து சர்பத் ஊற்றி உறிஞுசுவதுடன் ஒரு காத்தாடி தலையாரி பம்பரம் எல்லாம் வாங்கலாம் என்ன என்ன வெல்லர்ம இரண்டணாவில் வாங்கலாம்!
அப்பேற்பட்ட இரண்டணா நாணயத்தை தொலைத்துவிட்டேன் சொல்கிறேன் பாட்டி என்னை ஒரு ஆழாக்கு எண்ணெய் வாங்கிக்கொண்டு வா என்று இரண்டணா கொடுத் அரையர் கடைக்கு அனுப்பினாள் கூடவே ஒரு கிண்ணியும் கொடுத்தாள். ஈயம் பூசினது வாயகன்றதுநான் அந்தவயசில் ஸ்தலத்திற்கு ஸ்தலம் ஓட்டம் தான் ஒரு நிமிஷத்துக்குள் அரையர் கடைக்கு வந்து "மாமா ஒரு ஆழாக்கு எண்ணெய்" என்றேன் அரையர் கடை என்று எப்படி பெயர் வந்தது தெரியாது கடை சொந்தக் காரர் அரையர் இல்லை அய்யங்கார்தான். ஆனால் கோவில் அரையர்கள் பரம்பரையெல்லாம் கீழ உத்திர வீதியில் இருந்தார்கள் இநத அரையர் எங்கள் வீட்டிற்கு எடடுவீடு தள்ளி இருந்தார் சாதி வழக்கத்துககு மாறாக பலசரக்கு கடைவைத்திருநத ஒரே அய்யங்கார் சன்னமான குரலில் வரவேற்பார் எப்போதும் பலகையில் உட்கார்ந்து கொண்டிருப்பார் நிலக்கடலையோ முந்திரிப்பருப்போ எதையும் கண்ணெதிரே ,இருந்தாலும் வாயில் போட்டுக் கொள்ள மாட்டார். கையில் பனை விசிறிக்கொண்டு இருப்பார் அவர் கடையில் ஏலக்காய் கிராம்பு கோதுமை அரிசி லவங்கப்பட்டை சீமெண்ணை எல்லாம் கலந்து ஒரு சுகமான வாசனை வீசும்

"என்ன எண்ணெடா நல்லெண்ணெயா தேங்கா எண்ணெயா ஆமணக்கு எண்ணெயா விளக்கெண்ணெயா வேப்பெண்ணெயா " என்றார்
அப்போதுதான் இவ்வளவு எண்ணெய் இருப்பது தெரிந்து நான் மீண்டும் பாட்டியிடம் ஓடி வந்து "என்ன எண்ணெ பாட்டி?"
"உன்னை கன்னம் கன்னமா இழைக்கணும் நம்மாத்தில எப்பவாவது நல்லெண்யைதவிர எதாவது பயன்படுத்துவமா நல்லெண்ணெதாண்டா"
மீண்டும் ஓடிப்போய் " ஒரு ஆழாக்கு நல்லெண்ணெ மாமா"
"நல்லெண்ணெ ஆழாக்கு ரெண்டரை அணா ஆச்சேப்பா பாட்டி கிட்ட போய் இன்னும அரைணா வாங்கிண்டு வரயா" நான் மீண்டும் ஓடி வந்து சொல்ல" ஏண்டா மடயா ஆழாக்கு ரெண்டரை அணான்னா ரெண்டணாவுக்கு உண்டானதை வாங்கிண்டு வரதுக்கென்ன புத்திகிடையாதா உனக்கு" இப்படி பரபக்கபரக்க ஓடிண்டேருப்பியா"
"நீ சொல்லவே இல்லையே பாட்டி" என்றேன் நியாயம் தானே "காதுல வாங்கிக்கோ அரையர் கிட்டபோயி போன வாரம்தான் ரெண்டணா ஆழாக்கு ஒரு முழு ஆழாக்கு கொடுத்தாரேன்னு கேளு இல்லைன்னா முக்காலே மூணுவீசம் ஆழாக்கு போடச் சொல்லு நன்னா பார்த்து எல்லா எண்ணெயும் பாத்திரத்தில விழுந்து கீழசொட்டாம வாங்கிண்டு வா வரப்ப ஓடி வராதே கொட்டிடப்போறே " இந்த எச்சரிக்கைகளுக்கெல்லாம் தேவை இல்லாதபடி அடுத்த முறை அரையர் கடைக்கு போக விடாமல் வழியில் ஒரு சம்பவம் நிகழந்தது
ராஜன் கேர்ள்ஸ் ஸ்கூல் எதிரில் தெரு நடுவில் தேர்முட்டியருகில் கொட்டு சப்தம் கேட்டது அதைக் கடந்துதான் அரையர் கடைக்கு போக முடியும் கூட்டம கூடிக்கொண்டிருந்தது நையாண்டி மேளம் கேட்டது . மத்தளம் அவ்வப்போது உருமியது பைஜாமா அணிந்த ஒரு சிறுமி அலட்சியமாக உள்ளங்கைகளை தரையில அழுத்தி பல்டி அடித்து சுற்றி வந்தாள் அவளைவிட சற்றே பெரிய சிறுவன் ஒரு கழியை லாவகமாக துக்கி நிறுத்த மஸ்தான் தரையில் வட்டம வரைந்து அதில் பாம்புப் பெட்டிகள் ஒரு மகுடி வேறு என்னஎன்னவோ உபரகணங்கள் கோழிமூககு இறகு போர்த்திய போர்வை கருப்புத் துண்டு என்று பலவித உபகரணங்களை பரப்பிக் கொண்டிருக்க "வாங்க வாங்க நாகூர் பாபா மோடி மஸ்தான் பரம்பரை , மனுசனை பாம்பாக்குவேன் பாம்மை மனசனாக்குவேன் " ஒரு கீரி ஆணியில் தனிப்பட்டு சுற்றி வந்து கெர்ணடிருக்க மோடி மஸ்தான் என்னையே பார்த்து "பயப்படாத பக்கத்ல வந்து குந்து" என்று என்னை அழைத்தான் அந்த பரட்டைததலை சிறுமி சின்ன பல்வரிசையில் என்னைப் பார்த்து சிரித்தாள்
ஆழாக்கு எண்ணெயை மறந்தேன் முதல் வரிசையில்போய் உட்கார்ந்துகொண்டுவிடடேன் அவ்வப்போது மத்தளம் தட்டிக்கொண்டு அவன் இடைவிடாமல் பேசினான்
"கந்துமதக்கரியை வசமாக்கலாம் கரடிபுலி வாயைக் கட்டுவேன் சிங்கத்தை முதுகிலல போட்டுப் பேன் பாம்பை எடுத்து ஆட்டுவேன் ... இது என்ன?" என்ற சபையோரில் ஒருவரை கேட்டான்
"ஒரணா"
"என்னது ஒக்காளியா" என்று கேட்க சபையில் சிரிப்பு
"நெருப்பில அரதம்வச்சு வேதிச்சு வித்துருவேன் வேற யாருமபார்க்காம உலகத்தில உலாவுவேன் எப்பவும் இளமையா இருப்பேன் மத்தொருவன் சரீரத்தில பூந்துருவேன் தண்ணில நடப்பேன் நெருப்பில குந்துவேன் எல்லாம் எதுக்காக?" என்று கேள்வி கேட்டு தயங்கி தன் சட்டையை நீக்கி பட்டென்று வயிற்றில் எதிரொலிகேட்கத் தட்டி "பாழும் வவுத்துக்காக!"
"நீ காசு கொடுக்கவாணாம் உன் காசை உம் மடிலயே வெச்சுக்க வித்தை பாரு பாத்து மஸ்தான் குஷியாயிருச்சுன்னு ஒரணா ரெண்டணா கால் ரூபா அரை ரூபா ஒரு ரூபா தட்ல போடு பச்சைப்புள்ளையை பந்தாடப் போஷுற்ன்" எல்லாரும் பலமா கைத்தட்டுங்க என்று சொல்லி நாங்கள் கைதட்ட காத்திராமல் உய் உய் என விசிலடித்தான்
நான் அவன் வித்தையில் பரிபூர்ணமாக ஐக்கியமானேன் "தகிரியமுள்ளவங்க யாராச்சும் இருந்தா வாங்க" என்று கேட்க ஒரு சிறுவன் முன்னால்வந்து நின்றான் அந்தப் பையனை கூப்பிட்டு அவன்முன் விரல்களை என்னவோ பண்ண அவன் சட்டென்று துங்கிப்போக

அழுக்குத் துணடால் போர்த்திப் படுக்க வைத்தான் "யார் வூட்டுப் புள்ளையோ இது" என்றான் தரையில் ஒரு முகம் வரைந்தான் அந்த முகத்திற்கு ஒரு வாய் மட்டும் பெரிசாக வரைந்தான் பக்கத்தில் ஒரு பேனாக்கத்தியை வைத்தான் பாம்புப் பெட்டியைத திறந்து அதை உசுப்பிவிட ஒரு முறை அவன் மணிக்கட்டில் கொத்தியது த என்று அதை அதட்டினான் உள்ளுணர்வில் அங்கிருந்து விலகவேண்டும என்றுதான் தோன்றியது ஆனால் கட்டிப்போட்டவன் போல ஆகிவிட்டேன சன்மத்துககு இந்த இடத்தைவிட்டு விலகப் போவதில்லை கீரிப்பிள்ளை ஒன்றுக்குப்போனது அந்த பைஜாமா சிறுமி பெரிய கொம்பை வைத்துக் கொண்டு அவன் தோளிலிருநது கயிற்றுக்கு எவ்வி அதன்மேல லாவகமாக நடந்தாள் அதன்பின் கழி முனையில் படுத்திருக்க இவன் கீழே இருந்து பாலன்ஸ பண்ணி அவளை சுற்றினான் இந்த நேரத்தில் எல்லாம் பையன் கண்மூடிப் படுத்திருந்தான் எனக்கு மிகவும் கவலையாக இருந்தது "யார் பெத்தபுள்ளையோ இதை எழுப்பவாணாமா?"
"வித்தை பாத்திங்கோ இப்ப நம்ம ராணி தட்டு கொண்டாருவா ஒரணா ரெண்டணா" என்று சொன்னபோது சபையோர் மெல்ல எழுநதிருக்க "ஏய்!" என்று குலை நடுங்குமாறு ஒரு அதட்டுப் போட்டான் "பாப்பார தெருவில வித்தை காட்டிட்டு காசு வாங்காம போகமாட்ன் நீ மட்டும காசு தராம வூட்டுக்கு போனே என்ன ஆகும்பாரு" என்று கையில் அந்த பேனைக்கத்தியை எடுத்து தரையில் வரைந்திருந்த வாயில் கீறினான் படுத்திருந்த பையன் வாயிலிருந்து ரத்தம் வடிந்தது "இதான் உனக்காகும் ராத்தரி" அப்டியே எல்லோரும் மூச்சடங்கி கதிகலங்கி ப்போய் நின்றோம் மௌமான சூழ்நிலையில் அவன் கத்தியைக் காட்டிக்கொண்டே மெல்ல எங்களிடம வந்தான் நான் எனனிடமிருந்த இரண்டணாவைப் போட்டதை அவன் பார்க்கக் கூட இல்லை உடுக்கை அடித்துக் கொண்டே சுற்றி வந்தான் கீரி சுற்றிக் கொண்டு இருந்தது வித்தை எப்போது முடிந்தது ஞாபகமில்லை மெல்ல கனவிலிருந்து விடுபட்டவன்போல நடந்து வந்தேன் வீட்டின் அருகில் வந்தபோதுதான் நிஜ உலகத்து நிதர்சனங்கள் எனக்கு உரைக்க "எங்கே இரண்டணா" என்பதுமட்டுமின்றி எங்கே கிண்ணி? கிண்ணியையும் வைத்துவிட்டு வந்துவிட்டேன பாட்டி சமயலறையிலிருநது குரல் கொடுத்தாள்" ஏண்டா இத்தனை நாழி எண்ணையை மோடைமேல வச்சுட்டு பாடம் படிக்கபோ" என்றள் மீண்டும தெருக்கோடிக்கு ஓடினேன் அதற்குள் வித்தைக்காரன் சாமக்கிரியைகளை கவர்நதுகொண்டு சென்றிருக்க வேண்டும விறிச்சோடியருந்தது தெரு. போய்விட்டான்

நான் செய்வதியறியாது திகைத்து நிற்க தெற்கு சித்திரை வீதி மூலையில் மீண்டும் கொட்டு சப்தம்எதிரொலிததது சப்தம் வந்த திசையை நோக்கி ஓடினேன் தெற்குவாசல் அருகில் வாணி விலாஸ் பிரஸ் எதிரில் அவன் அடுத்த டேரா போடடிருக்க மெல்ல கூட்டம் கூடிக் கொண்டிருந்தது வித்தைககாரன் அருகில் சென்ஷுற்ன அந்தப்பையன், வாயில் ரத்தம் வந்து கிடந்தவன் பைஜாமா பெண்ணுடன் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தான்

வித்தைக்காரன் எங்கள் விட்டுக் கிண்ணியை திருப்பித் திருப்பிப் பார்ததுக் கொண்டிருந்தான் இது எவ்வளவு பெறும் என்பதுபோல்

"வா தம்பி"

"நான் வந்து கீழ சித்திரைவீதில விதைத பார்க்க வந்தேங்க கிண்ணியை விட்டுட்டு போய்ட்டடங்க அந்த கிண்ணி என்னுது"

"தம்பி வந்தியா கிண்ணி தரேன் ஆனா ஒருகண்டிசன்

"என்ன

"எங்கூட வரியா வித்தைகாட்ட லர்ல்குடி பிச்சாண்டாரகோவில் இந்தபக்கம் குளித்தலை அந்தப்பக்கம் புதுக்கோட்டை வரைக்கும போகலாம்" என்றாள்.

பைஜமா சிறுமி என்னைப் பார்த்து மோகனமாக சிரித்தாள்

"ஏபிசி புஸ்தவம் வெச்சிருக்கியா" என்று கேட்டாள் நான் அங்கேயே உட்கார்ந்து கொண்டு விசும்ப ஆரம்பித்தேன் "என் கிண்ணியை கொடு" " கொடுக்கறேன் கொடுக்கறேன் " அவன் என்னிடம அந்த கிண்ணியை கொடுக்காமல் அவவப்போது நீட்டி நீட்டி கொடுப்பதுபோல் கொடுதது கையை இழுத்துக கொண்டான் நான் பெரிசாக அழ ஆரமபித்ததும் கொடுத்தான் "கிண்ணியை கொடுத்துட்டு வந்துரு நல்ல ஐயர் வூட்டு சாப்பாடு போடடறேன் ஊர் உலகமெல்லாம் சுத்தலாம் பனாரஸ் அலகாபாத் கல்கத்தா " நான் வீட்டுக்கு திரும்பும்போது

அந்தப் பெண் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள் "வரல்ல? வரப்ப ஏபிசி பொஸ்தவம் கொண்டுட்டுவா" என்றாள் நான் ஓடிவந்து அவசரமாக என் உண்டியலை உடைதது எட்டு காலணா சேர்த்து அரையர் கடைக்கு போய் எண்ணை வாங்கிக்கொண்டு வந்து விட்டேன்,

*****

பாட்டி திட்டுவாளோ என்று நான் வித்தைக்காரருடன் போயிருந்தால் என்ன ஆகியிருப்பேன் என்று இந்த வயசில் எப்போதாவது எண்ணிப் பார்ப்பேன் தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு ஒருகையால் மத்தளம் தட்டிக்கொண்டு மற்றொரு கையால்புல்லாங்குழல் வாசிக்க அந்தப் பெண் சுழனறு சுழன்று ஆட.... எது எப்படியோ இந்தக் கதையை எழுதியிருக்க மாட்டேன் .

## 2. அரிசி




உலகத்தில் உள்ள அத்தனை கார் மெக்கானிக்குகளும் ஏமாற்று வேலைக் காரர்கள் என்றால் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்.இரண்டு மூன்று பேர் நல்லவர்களும் இருக்கிறார்கள். எனக்கு வாய்த்த மெக்கானிக் துரதிர்ஷ்ட வசமாக, முன் பட்டியலைச் சார்ந்தவர்.'தேமேனு' சென்று கொண்டிருநத என் காரின் உட்பகுதியில் சில வினோத சப்தங்கள் திடீரென்று ஜனிக்க, மெக்கானிக்கிடம் அழைத்துச் சென்றேன். அவர் ஒரு முறை ஓட்டிப் பார்த்து 'ஸஸ்பென்ஷன் புடுங்கிக்கிச்சு' என்று சொன்னார்.
என்னதான் நான் இன்ஜினியாரக இருந்தாலும் என் திணை துறை எல்லாம் வேறு. மோட்டாரின் உள் அவஸ்தைகளைப் பற்றிய என் அறிவை ஒரு பஸ்டிக்கெட்டின் பின் பக்கத்தில் எழுதிவிடலாம் உதாரணமாக ஸஸ்பென்ஷன் எங்கிருக்கிறது என்று சுத்தமாகத் தெரியாது எனக்கு இருந்தும் என் அறியாமையை மெக்கானிக்கிடம் காட்டிக் கொள்ள விழையாமல் "அப்படியா? மாத்திட்டாப் போச்சு" என்றேன்
அந்த ஆள் உடனே ஒரு பழைய சாக்கை விரித்து காரின் அடியில் மறைந்தார்.அங்கிருந்து பேசினார் "கிட்டு நீங்க வாங்கிட்டு வரீங்களா! நான் வாங்கிட்டு வரவா"
"அது எங்க கிடைக்கும்?"
"ஜே,ஸி, ரோடு போகணும்"
சரிதான் நீங்க ஒண்ணு செய்யுங்க மொத்தமா ரிப்பேருக்கு எவ்வளவு ஆகும்னு எஸ்டிமேட் போட்டு சொல்லிடுங்க"
"அதெப்படிங்க முளுக்க பார்க்காம சொல்லிட முடியாதே"
"முளுக்கப் பாருங்களேன்"
அவர் பார்க்கும் நேரத்தில் நான் அந்தப் பட்டறையை விட்டு வெளியே வந்தேன்.திரும்பிப் பார்த்தால் என் கார் ஜாக்கி போடப்பட்டு பரபரவென்று முன் சக்கரங்கள் நீக்கப் பட்டு எண்ணைக் கசிவுடன் வெவ்வேறு வடிவங்களில் உதிரிப் பாகங்களை இழந்து கொண்டிருந்தது. என் வயிற்றில் கவலை கவ்விப் பிடித்தது. கழற்றிக் கழற்றி இதற்கு நூறு அதற்கு ஐம்பது என்று ஏற்றிக் கொண்டே செல்லப் போகிறார்.கார் உள்ளே சத்தம் வந்தால் என்ன குறைந்து போய்விடும் ? வெட்டி வம்பில் மாட்டிக் கொண்டேன் என்று சுயமாகச் சபித்துக்கொண்டே வெளியே வந்தேன்.
அந்தப் பட்டறை தெரு முனையில் இருந்தது.மில்கார்னர் சென்ட்ரலுடன் ஒட்டிக் கொள்ளும் இடம். காலை பத்து.போக்கு வரத்து கணிசமாக இருந்தது.எத்தனையோ கார்கள் ஆரோக்கியமான சஸ்பென்ஷனுடன் சென்று கொண்டிருந்தன.அருகே ஒரு ஓட்டலில் காப்பி சாப்பிட்டு விட்டு என் பலிபீடத்துக்குத் திரும்புகையில் அந்த விபத்தைப் பார்ததேன். ஒரு கிழவன் செள்ட்ரல் தியேட்டர் பக்கத்திலிருந்து சைக்கிளில் 'லொடக்கா லொடக்கா'என்று சப்தமிட்டுக் கொண்டு வந்து கொண்டிருந்தான். மெயின் ரோடில் காவி நிறத்தில் ஒரு 'மெட்டடார்' வேன் வந்து கொண்டிருந்தது. கிழவன் யோசிக்காமல் ,பார்க்காமல் ,நிறுத்தாமல், முட்டாள்தன மாக சரேல் என்று திரும்பி வேனின் குறுக்கே சென்று விட்டான்.அதன் டிரைவருக்கு ப்ரேக் போட சந்தர்ப்பமே கிட்டவில்லை . டம் என்று சப்தம் கேட்டது அப்புறம் நான் கிழவனைப் பார்க்கவில்லை. என் வயிற்றில் பந்து சுருண்டு கொண்டது.
பரபரவென்று கூட்டம் கூடிவிட்டது. எனக்கு என்ன ஆயிற்று என்று அறிந்து கொள்ளும் ஆவல் பற்றிக் கொண்டது. ஆனால் அங்கே செல்லத் தயக்கமாக இருந்தது . இருந்தும் மெல்ல நெருங்கினேன். வேன் நின்றிருந்தது.கிழவன் மேல் சுத்தமாக ஏறிவிட்டது. சைக்கிள் காய்ச்சிய அப்பளம் போலக் கிடந்தது.

கிழவன் கீழே ஒருக்களித்துப் படுத்தவாறு இருந்தான்.அவன் மண்டையில் அடிபட்டு பக்கவாட்டில் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது வாய் திறந்திருந்தது.உடல் ஒரு வித நடுக்கம் போல் ஆடிக் கொண்டிருந்தது அவன் உயிர் விரைவில் பிரிந்து கொண்டிருந்தது. அவனைச் சுற்றியிருந்த நாங்கள் அதாவது பங்களூர் நகரத்தின் பொறுப்புள்ள பிரஜைகள் எப்படி நடந்துகொண்டோம்? சொல்கிறேன்.
"டிரைவர் எங்கய்யா?"
"அதோ உக்காந்துக்கிட்டிருக்காரு"
"நான் இல்லிங்க டிரைவர்"
"ஆசாமி இறந்துக்கிட்டிருக்கான் துக்குங்க"
"தூக்காதிங்க! போலிஸ் வரட்டும்"
"அந்த ஆட்டோவை நிறுத்துய்யா"
நிறுத்தப் பட்ட ஆட்டோ கூட்ட வளையத்தை முத்தமிட்டுவிட்டு உடனே வேகம் பிடித்துப் பறந்தது அருகே கடந்த பி.டி.எஸ் பஸ்ஸின் ஜன்னல் பூரா முகங்கள்!"பிரசன்னா சீக்கிரம் வந்து பாரு!" என்று பஸ்ஸின் உள் ஒரு அழைப்புக் கேட்டது.
"போலிஸ் வரட்டும் அது வரைக்கும் ஒண்ணும் செய்யக் கூடாது"
"டெலிபோன் செய்யுங்களேன்"
"ஸார் நீங்கதான் போய் செய்யுங்களேன்"
"எனக்கு அர்ஜண்டா வேலை இருக்கு.போலிஸ் வந்துருவாங்க"
இப்போது கிழவனின் நடுக்கம் நின்றிருந்தது. வாயால் பெரிசாக மூச்சு விட்டதால் வழிந்த ரத்தத்தில் காற்றுக் கொப்புளங்கள் வெடித்தன.
"ஆள் யாருங்க"
"யாருக்குத் தெரியும்"
"கூட ஒருத்தரும் வரலியா"
"நீங்க என்ன பண்றிங்க எதிர்த்தாப்பல ஓட்டலுக்குப் போய் போன் பண்ணிடுங்க" என்று என்னை ஒருவர் தேர்ந்தெடுத்தார். நான் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் ஓட்டலுக்குச் சென்றேன்.அங்கே உற்சாகமாக எல்லோரும் டிபன் பண்ணிக் கொண்டிருந்தார்கள்
"டெலிபோன் செய்யணும்"
"எழுபத்தஞ்சு பைசா"
"தர்றேன்"
"முதல்ல கொடுத்துடுங்க எஸ்.டி டி கூடாது"
"இல்லை . போலிசுக்கு போன் செய்யணும். ஒரு ஆக்ஸிடெண்ட்"
"பண்ணிக்கங்க"
"டைரக்டரி வேணும்.அவசர போலிஸ் உதவிக்கு என்ன நம்பர் செய்யணும்?"
"தெரியாது"
"டைரக்டரி இல்லையா?"
"இல்லை!"
"அந்தாளு இறந்துகிட்டு இருக்கான்"
"ஸார் நான் உங்களுக்கு ஒரு விஷயம் சொல்லட்டுமா-"
"என்ன?"
"இதில மட்டும் மாட்டிக்காதிங்க"
"எதில?"
"ஆக்ஸிடெண்ட் கேஸில நான் ஒரு முறை ,இந்த மாதிரி ஆகஸிடெண்ட் கேஸ்தான், வழில கிடக்கான்.கார்ல எடுத்திட்டு ஆஸபத்திரிக்குப் போனேன்.'அங்க ஏன் கொண்டு வந்தே மெடிக்கோ லீகல் கேஸ். விக்டோரியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போ'ன்னாங்க.விக்டோரியா எவ்வளவு துரம்?- அங்கே போனேன் ."அங்க போனா 'போலிஸ்காரங்க இல்லாம எப்படி நீ பாடிய மட்டும கொண்டு வரலாம்'னு ஒரு ஓரத்தில் ஒன்றரை மணி நேரம் காக்க வெச்சாங்க அதுக்கப்புறம் அங்க போன் பண்ணி இங்க போன் பண்ணி போலிஸ் வந்தாங்க முதல்லயே என்மேல ஏறினாங்க'எப்படிய்யா எங்களுக்கு சொல்லாம இங்க கொண்டுட்டு வரலாம்னுட்டு என்னைத் திட்டினாங்க அவங்க ஆஸபத்திரில கேஸ் எடுத்துக்கிட்ட போது

ஆள் போய்ட்டான்' டெட் ஆன் அரைவல்'னு முடிச்சுட்டு கையெழுத்துப் போட்டு கிடங்குங்குக்கு அனுப்பிச்சுட்டாங்க."கேஸ் அத்தோட நின்னுச்சா? இல்லை நான்தான் ஸார் சாட்சி ஆறு மாசம் இழுத்து அடிச்சாங்க கோர்ட்டுககு .சம்மன்ஸ் வரும் அங்கே போவேன் இன்ஸபெக்டர் வந்தா கவர்மெண்ட் வக்கீல் வரமாட்டாரு ரெண்டு பேருமே வந்தா டிரைவரோட வக்கீல் ஒத்திப் போட்டுருவாரு "அன்னிக்கு ஒரு சின்ன கணக்குக்காக மொத்தம் என்ககு ஆன செலவை கணக்குப் பண்ணிப் பார்ததேன். கிட்டத் தட்ட ஆயிரம் ரூபா அதோட நின்னுச்சா கேஸ் ? என்ன ஆச்சு கேளுங்க ஏறக்குறைய அந்த விபத்துககு நானே காரணம்ங்கற மாதிரி குறுக்கு கேள்வி போட்டு கண்ல விரலை விட்டு ஆட்டிட்டான் வக்கீல். விட்டாப் போதும்னு ஆயிருச்சு எல்லாம் எதுக்காக? ஒரு குடிமகன்ங்கற முறையில் என் பொறுப்பை என் கடமையை செஞ்சதுக்கு"

"நான் பிரமிப்புடன்கேட்டுக் கொண்டிருந்துவிட்டு "யாராவது போலிசுக்கு போன் செய்ய வேண்டாமா" என்றேன்

"நீங்க தாராளமா போன் பண்ணுங்க கூப்பிட்டா கூட போய்ட்டு வாங்க .எனக்கு நடந்ததெல்லாம் சொல்லிட்டேன்"

"நம்பர் தெரியலையே"

"நூறு பண்ணுங்க"

நான் போலிஸுக்கு டெலிபோன் செய்துவிட்டு திரும்ப அங்கே சென்றேன்

ஏற்கெனவே இரண்டு டிராஃபிக் போலிஸ் ஆசாமிகள் நின்று சாக்கட்டியில் கோடு போட்டுக் கொண்டிருந்தாரகள் நான் சென்றதும்

"இவர்தாங்க " என்றார் ஒருவர் என்னை சுட்டிக்காட்டி

"போலிசுக்கு சொல்லிட்டேன்" என்றேன்

"போலிஸ் வந்தாச்சு .பக்கத்தில்தானே சேஷாத்ரிபுரம் போலிஸ் ஸ்டேஷன். அங்கே போய் கூட்டி வந்துட்டார் டிரைவரு"

போலிஸ் இன்ஸபெக்டர என்னைப் பார்தது "கொஞ்சம் வாங்க" என்றார் நான் தயக்கத்துடன் சென்றேன்.

"நீங்க இந்த ஆக்ஸிடெண்ட்டை பார்த்திங்களா?"

" ம்.. பார்த்தேன்"

"உங்க பேரு?" அவர் பையிலிருந்து ஒரு டயரி புறப்பட்டது.என்னுள் எச்சரிக்கை சக்திகள் உயிர் பெற்றன ."எதுக்கு?"

" எதுக்கா?..விட்ன்ஸ் ஸார்! சாட்சி. நீங்க பார்க்கலை?"

"அது வந்து ... பார்ததேன் துரத்தில இருந்து சரியாப் பார்க்கலை"

"இப்பதான் பார்ததேன்னு சொன்னிங்க? அட்ரஸ் சொல்லுங்க"

"அட்ரஸ் வந்து.. நான் ஊருக்குப் புதுசுங்க"

"ஊருக்குப் புதுசா? பங்களூர்ல தங்கறவர்தானே?"

"அதாவது மெட்றாஸ்காரன் நான்"

" சரி. இங்க வேலை செய்யறவரா?"

" இல்லை.. இன்ஃபாக்ட் நான் இன்னிக்கு பிருந்தாவன்ல திரும்பிடறேன்"

அவர் நான் சொன்னதை சுத்தமாக நம்பவில்லை.என்னை வருத்தத்துடன் பார்த்துச் சிரித்தார்

"ஏன் ஸார் சாட்சி சொல்றதுக்கு அவ்வளவு பயமா?"

"பயம்னு இல்லிங்க. வந்து நான் ஊர்லயே இல்லாம இருந்தா எப்படி சாட்சி சொல்ல முடியும் இதோ இவர் கூடப் பார்த்தார்"

"அய்யோ நான் பார்க்கலை இப்பத்தான் வரேன்"

"யாராவது பாத்தவங்க சாட்சி சொல்ல வரமாட்டிங்களா? யாராவது?

கூட்டம் மெல்லக் கலைந்தது நான் ஒரு சின்ன சமாதான முயற்சியாக"ப்ளீஸ் லுக் இன்ஸபெக்டர் ! தி ஃபாக்ட் இஸ் திஸ்! என்னால சாட்சிக்கு வரமுடியும் எனக்கு எந்தவிதத் தயக்கமும் கிடையாது.சந்தோஷமா வருவேன். ஆனா வெளியூர்க்காரன்.. அதனால மெட்றாஸ்ல இருந்தா எப்படி.." இன்ஸபெக்டர் கோபததுடன் "போய்யா! மெட்றாஸ் போய்யா இங்க ஏன் நிக்கறே ! போ" என்றார்.கிழவனின் அருகில் சென்றார் அவன் இது நேரத்தில் இறந்திருந்தான் நான் சற்று க்ஷநெரம் நின்றேன். மெதுவாக அருகில்

இருப்பவரிடம்"மெட்றாஸ்ல இருந்து வந்து எப்படி சாட்சி சொல்ல முடியும் சொல்லுங்க"
"அதானே! ஆவுறதில்லை அது" என்று அனுதாபித்தார் திரும்ப மெக்கானிக் ஷாப்பிற்கு வந்தேன் அவர் என் காரின் அக்கக்கான பாகங்களைக் கணக்கெடுத்துக் கொண்டிருந்தார்
"கிளட்சு ப்ளேட்டு கூட தேஞ்சிருக்கு மாத்திரலாமா" என்றார் "செய்யுங்க"
"இன்ஜினை டவுன் பண்ணணும் மூணு நாளாகும்"
"செய்யுங்க. எஸ்டிமேட் கொடுத்துடுங்க"
"மொத்தம் முன்னுத்தம்பது, எல்லாத்துககும் பில் கொடுத்துர்றேன்" "சரி"
"உங்க அட்ரஸ் சொல்லுங்க"
சொன்னேன்
"எத்தனை வருசமா அந்த ஃபாக்டரில இருக்கிங்க"
"ஒம்பது வருஷமா"
"புதன் கிழமை வந்துருங்க"
"சரி" என்று வெளியே வந்தேன்
இப்போது அந்த காவி வர்ண வேனைக் காணவில்லை. கூட்டம் விலகியிருந்தது ஒன்றிரண்டு பேர்களே இருந்தனர். போலிஸ்காரர்களையும் காணோம். நான் விபத்து நடந்த இடத்தை மறுபடி கடக்க வேண்டியிருந்தது கிழவன் கிடந்த இடத்தில் அடையாளமாக உறைந்த ரத்தத்திட்டு இருந்தது. சைக்கிள் கிடந்தது. ஏறக்குறைய கிழவனின் வயசிருக்கும் போல் புராதன சைக்கிள். அதன் ஹாண்டில் பாரில் ஒரு அழுக்குப்பை மாட்டியிருந்தது அதில் கிழவன் அரை கிலோ அரிசி வாங்கி வைத்திருந்தான் போலும். அந்த அரிசி சாலையில் சிதறியிருந்தது. பாதி அரிசி ரத்தத்தில் இருந்தது இரண்டு சிறுவர்கள் ரத்தம் படாத அரிசி மணிகளை ஆர்வத்துடன் அள்ளி டிராயர் பைக்குள் அவசரமாகத் திணித்துக் கொண்டிருந்தார்கள்.

Authors note On this S.Story

This is one of my much discussed stories.Written more than a decade ago When I was in Bangalore, this was translated into many Indian languages . The incident happened in front of me almost in full. But a true incident like this is not sufficient theme for a short story Traffic accidents occur every day in every town.Old men on bicycles die every day .That is mot enough .Only when I saw the two little boys picking up the scattrerd grains of rice it suddienly transformed into a truly effective theme for a short story.The implied message in this is wantonly left unsaid.Just imagine how the effect of the shock ending could be destroyed if I had added one more sentence like :-
என்னே இந்த சமூகத்தின் கொடுமை!"

## 3. வாஷிங் மெஷின்

இன்றைக்கும் வேலைக்காரி வரவில்லை.ஸவேதாவுக்கு ஆம்லெட் கொடுக்கும் போது,அவள் சீருடைக்கு இஸ்திரி போட வேண்டியிருக்கும் போது, வாசல் மணி அழைக்கும்போது ஃபோன் தொணதொணக்க "ஃபோனையாவது எடுக்கக கூடாதா?காலைல எத்தனை காரியம் ஒருத்தி செய்ய முடியும்"என்று ஹாலில் பேப்பரில் மறைந்திருந்த கணவனைக் கேட்டாள்.
"உங்களுக்குத்தான்"
"இல்லைன்னு சொல்லிடு" என்றான் சதீஷ்
"காலை வேளையில பொய் சொல்லி எனக்குப் பழக்கமில்லை"
"பொய் சொல்ல வேளை பார்க்கக் கூடாது சாவித்ரி"
மீண்டும் கதவு மணி ஒலிக்க கணவன் பெரிய மனது பண்ணி திறக்க சம்மதித்து "சாவித்ரி பேப்பர்க் காரன்" எல்லாக் காரியமும் சாவித்ரியைச் சுற்றித்தான் "இன்னிக்கு இல்லைப்பா, ஏம்பா உம் பொஞ்சாதியை வீட்டு வேலைக்கு வரச் சொன்னேனே" "ஆறு வூட்ல செய்றாம்மா.சி.ஐ.டி காலனில் ஒரு வூட்டை விட்டபறம் ஒண்ணாந்தேதி வர்றதா சொன்னாங்க"
"ஒண்ணாந்தேதியா? அ து வரைக்கும் எப்படிப்பா சமாளிப்பேன்"
"என் தங்கச்சி அல்லாட்டி தம்பி சம்சாரத்தை வேணா கேட்டுப் பார்ககறேன் பேப்பர் இல்லிங்களா?" "இருக்குப்பா எடுத்து பார்த்து போட எனக்கு எங்க அவகாசம்?"
"அய்யா?"
"அய்யாவா "என்று ஏளனமாக"அய்யா பேப்பர் போட்டுட்டா மழை வந்துரும்பா இருக்கற பேப்பரை சரியா மடிச்சு வெச்சாலே பாக்யம்"
சதீஷ் ஸ்போர்ட்ஸ் பேஜை முடித்துவிட்டு குறுக்கெழுத்துப் பக்கத்தை நாலாக மடித்துக் கொண்டான் "என்ன என் தலையை உருட்டியாறது"
"அய்யா எல்ப் பண்ணுவாரான்னு கேக்கறான் பண்ணுவாரே கெடியாரத்துக்கு சாவி கொடுப்பார்ன்னேன்"
எல்லாமே செல்லமான கோபங்கள்தான் .சாவித்ரிக்கு இந்த அதிகாலை டென்ஷன் பிடிக்கும் ஆனால் வேலைக்காரி வராத தவிப்புத்தான் "டூ மச்" "உனக்கு வேலைக்காரி வரலைன்னா எம்மேல பாயற"
"உங்க மேல யார் பாஞ்சா? கொஞ்சமாவது ஒத்தாசை பண்ணா சரி இன்னிக்கு லீவுதானே?"
"இல்லை ஆபிஸ் போகணும். வீடு பெருக்கணுமா" "அதெல்லாம் வேண்டாம், மேசை மேல இருக்கற லெட்டர்ங்களை ஒழுங்கா பொறுக்கி வெச்சா போதும் என்னால எல்லா காரியமும் பண்ண முடியாது.பாத்திரம் தேய்க்க முடியறது. துணி தோய்க்கறிதுதான் பெரிய உபத்திரவம்"
அவனுக்கு இரண்டாம் வேளை காப்பி கொடுக்க சதீஷ் சோபாவில் இடம் மாறி உட்கார்ந்துகொண்டு "லெட்மி ஸீ ஒரு நாளைக்கு எத்தனை துணி ஆறு துணியா?"
"பதினெட்டு துணி"
"மூணுபேருக்கா?"
"ஆமாம், உங்க டீஷர்ட் டென்னிஸ் ஷர்ட் வாக்கிங் போன ஷர்ட் ஆபிஸ் ஷர்ட்..ஸாக்ஸ்.. ஸ்வேதாவோட யூனிஃபாரம்,அப்புறம் அவ சுடிதார்,அப்றம் நைட்டி உங்க நைட் ஷர்ட் ரெண்டு செட் புடவை உள்பாவாடை பாடி ரவிக்கை கணக்கு என்ன வரது?"
"கொஞ்சம் கொஞ்சமா தவணை முறைல தோய்க்கிறது"
"அப்படி பண்ணித்தான் மொத்தம அம்பது துணி சேர்ந்திருக்கு"
"இதுவரை யார் தோச்சுண்டிருந்தா"
"எல்லாம் வேலைக்காரிதான்.அப்பப்ப கூடைல போட்டுருவோலம் .செட்செட்டா தோச்சு மொட்டை மாடில உணர்ந்திருவா" "அவ வரலையாக்கும்"
"ஆமாம் , அதான் ப்ராப்ளம்"
"சாயங்காலத்துக்கள்ள சால்வ் பண்றேன்"
"என்னால தோய்க்க முடியும். யாராவது ஒத்தாசை செய்தா போதும். தோச்சதை பிழிஞ்சு

உணத்தினா போதும்.ஏதாவது"
"எல்லாத்துககும் ஒரு வழி பண்றேன்"
சதீஷ் போனை எடுத்து டெலிபேலான் டைரக்டரியின் மஞ்சள் பக்கங்களைப் புரட்டி'சங்கர் எம்போரிய'த்துக்கு போன் செய்தான் "ஒரு வாஷிங் மெஷின் எத்தனை இருக்கும்"
"ஸார் டோண்ட் ஒர்ரி எபவுட் தி ப்ரைஸ் சார்.அட்ரஸ் சொல்லுங்க எங்க சேல்ஸ்பர்ஸன் வந்து டெமோ பண்ணுவார்.அப்றம் விலை பேசலாம். அதுவும் எங்க இன்ஸ்டால்மெண்ட் ஸ்கீம்ல இனிஷியல் பேமெண்ட் சிக்ஸ அண்ரட் கொடுத்தாபோதும் பாக்கியை முப்பத்தாறு.."
"அதெல்லாம் வேண்டாம் இருக்கறதுக்குள்ளயே நல்ல மெஷின் அனப்புங்க டவுன் பேமெண்ட்" போனை வைத்துவிட்டு "வாஷிங் ப்ராப்ளம் சால்வடு.அப்புறம் என்னவேணும் டிஷ்வாஷர்? வீடு பெருக்க வாக்வம் க்ளீனர்?"
"நான் அதெல்லாமா கேட்டேன்.கொஞ்சம் எ ல்ப் பண்ணா போதும் நானே எல்லாக் காரியமும செய்துக்கறேன்னுதானே சொன்னேன்.வாஷிங் மெஷினை எல்லாம் எனக்கு இயக்கத் தெரியாது"
"கத்துக்கலாம்மா" என்றாள் ஸ்வேதா
"நீ கத்துக்கயேன் அம்மாவுக்கு எல்பா இருக்கும்"
"நோ வே நான் வாஷிங் மெஷின் இல்லைப்பா கம்ப்யுட்டர்"
"மெஷின் னா பயப்படக்கூடாது எதுக்கும் அவன் வருவான் எப்படி இயக்கறதுன்னு சொல்லித்தருவான்"
கணவன் ஒரு குட்டித்துக்கம் போடச் சென்றதும் சமையலை முடித்துவிட்டு சற்று நேரம் தமிழ க்கத் தொடர் பார்த்தாள்.அதில் யாரோ பாட்டிலைத திறந்து விஷம் குடிக்குமுன் கண்ணயர்ந்தபோது சதீஷ் ஓசைப்படாமல் அவளைப் பின்னாலிருந்து அணுகி அணைத்துக் கொள்ள முயன்ற போது திடுக்கிட்டு எழுந்தாள் "எதுக்காக நீ கஷ்டப் படணும்"என்று கணவன் பரிவுடன் அவைள அணைத்துக் கேட்டான். "இந்த முறை ஹாலிடே ரிசார்ட் என்ன ஆனாலும் சரி, போயே ஆகணும் ஒவ்வொரு வருஷமும் தவறிப் பேய்ட்றது"
பரவால்லைங்க ஆபிஸ் வேலை முக்யமில்லையா?" "என்ன பெரிய ஆபிஸ் தட்டுக் கிடறது? நான் உழைக்கிறேன்னு எங்கிட்ட எல்லா வேலையையும் கொடுத்துட்டடு மற்ற விபி எல்லாம் டார்ஜிலிங் கொடைக்கான்லனு குழந்தை குட்டியோட போய்டறாங்க"
"அதனாலென்ன"
"எனக்கு ரொம்ப கில்ட்டியா இருக்கு சாவித்ரி கடுமையா உழைக்கிறே உனக்கும் ஒரு ரெஸ்ட் வேண்டாமா? வேணும்னா ஒரு பதினஞ்சு நாள் மாயவரம் போய்ட்டு வாயேன்"
"வேண்டாங்க ஸ்வேதாவுக்கு பாடம் சொல்லித்தரணும்.மேலும் எங்க அம்மாவே எதுக்கு வந்தே எதுக்கு வந்தேன்னு தொணதொணத்து மாப்பிள்ளை கஷடப்படுவார்னு துரத்தி அனுபிபிருவா. எனக்கு எதும் வேண்டாம் உனக்கு ஒரு ரெஸ்ட் வேண்டாமான்னு கேக்கறிங்களே பரிவோட அதுபோதும் எனக்கு"என்றாள்
"உன்னை ம்யுசியத்திலதான் வெக்கணும்"என்றுஅவளைப் பின்பக்கத்திலிருந்து அணைத்து "அழகான ம்யுசியம் பிறவி.என்ன கொஞ்சம் தலைக்க டை போட்டு ப்யுட்டி பார்லர்ல போய் திருத்தம் பண்ணிக்கிட்டு வந்தா ஸ்வேதாவை உன் தங்கையான்னு கேப்பாங்க எல்லாரும். சாவிதிரி நீ ஏன் உன் தோற்றத்தைப் பற்றிக் கவலைப் படறதே இல்லை?" "யாருக்காக நான் அலங்காரம் பண்ணிக்கணும்?" "எனக்காகத்தான்" "நீங்க இந்த வெளி அலங்காரத்தினாலதான் எம்மேல அன்பா இருக்கிங்களா?" "சேச் சே நீ என்ன ரூபத்திலயும் எனக்கு அழகானவதான். என்று அவளை மறுபடி முத்தமிட்டுவிட்டு 'இன்னும் ஒரு காப்பி 'என்ற போது போன் மணியடித்தது "சாவித்ரி ஆபீஸ் போறேன்.அந்த வாழிஷங் மெஷின் காரன் சேல்ஸ்மன் வருவான் காட்டச் சொல்லு.எனக்காகக் காத்திருக்க வேண்டாம்.கொஞ்சம் லேட்டாகும் ஆபிஸ்ல" என்றான் போகும் போது கூட அவளை இன்பமாக மோளில் அழுத்திவிட்டுத்தான் சென்றான்.
சாயங்காலம் அந்த இயந்திர் கொடுவரப் பட்டது.வெளிர் நீலத்தில் ஒரு நெற்குதிர்க் குழந்தைபோல் இருந்தது பளபளவென்று இரண்டு மூடிகள். அருகே விதவிதமான குழாய் இணைப்புக்கள் தண்ணீருக்காக. டை கட்டின இளைஞன் நாயை"இந்த டாக் கடிக்கங்களா"என்று கை சொடக்கினான். டோன அவனை மாதிரி பார்த்தது."கட்டிப்

போடறிங்களா?" என்றவனைப் பார்த்துவாலாட்டியது "நான் ஒரு நாய் நேசன்" என்றான் அவன் "நீங்க எதுவுமே செய்யவேண்டாம் மிஸஸ் சதீஷ் குமார் இந்த துணிகளை இந்த ச்சூட்டுக்குள்ள போட்டு இந்த பட்டனைஇமுக்கினா போதும் இந்த விளக்கு எரியும்.ஃபஸ்ஸி லாஜிக் மைக்ரோப்ராஸஸர் கண்ட்ரோல் ஆறு வாஷிங்ப்ரொக்ராம்.பதினெட்டு காம் பினேஷன் அஞ்சு கேஜி துணிபோடலாம். ரம்பா வீட்டிலகூட இதே மாடல்தான்.உங்க துணிங்களுக்கு தகுந்தாப்பல டைமிங்ஸை தானே அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டு முதல்ல ரின்சிங், வாஷிங்,ஸ்பின் ட்ரையிங்,பை டைரங்கஷனல் ரெண்டு டரைக்ஷன்லயும் பண்ணிட்டு இந்தப் பாருங்க ,வெளிய வரப்ப ஏறக்குறைய காஞ்ச நிலையில வரும்.எடுத்து ஒரு உதறு உதறிப் போட்டுக்கலாம் அவவளவுதான் பட்டன் உடையாது, ப்ரைட்னஸ் போகாது. அதும் 'டிஜிட்'னு ஆப்டிக்கல் ப்ரைட்டனர் சேரத்திங்கன்னா.."

"என்ன விலை" "பதினஞ்சாயிரம்.கூட ஒரு வால்கிளாக் இலவசமா தரோம்" சாவித்ரி அந்த விந்தை இயந்திரத்தை அவன் இயக்க ஆர்வத்துடன் பார்த்தாள் அதிலிருந்து ஆரோக்கியமான சப்தங்கள் வர சற்று நடுங்கிவிட்டுத் தானே நின்றது யுவன் விற்பனை விற்பன்னன்.தன் டையை தோளில் போட்டுக் கொண்டு முக்கால் வாசி உலர்ந்த பளிச்சென்ற துணிகளை வெளியே எடுக்க சாவித்ரிக்கு ஹைடெக் யுகத்தில் பிரவேசிப்பதில் பெருமையாக இருந்தது

சாயஙகாலம் சதீஷ் அலுவலகத்திலிருந்து வரத் தாமதமாகிவிட்டது. அதற்குள் சாவித்ரி வாஷிங் மெஷினைப் பழகிவிட்டாள்.வீட்டின் பின் முற்றத்தில் பளபளவென்று எல்லாத் துணிகளும் காற்றில் ஆட அலாவுதீனின் ஜீனி போல அருகில் நின்றது மாடல் நம்பர் டிஆர்ஏ 934. "டெக்னாலஜி இருக்கறப்ப வீட்டு வேலையெல்லம் பெரிய சுமையே அல்லை சாவித்ரி சப்பாத்தி மெஷின் வந்துடுதது ரெடிமிக்ஸ் இட்லி மாவு வந்துடுதது எது வேணும் சொல்லு" "எதும் வேணாம் இந்த வாஷிங் மெஷினைவிட எனக்கு ஒண்ணுதாங்க பெரிசு" "என்ன" அருகில்வந்து களைத்துப் போன முகத்தை நிமிர்த்தினான். "உங்க அன்புப் பெண்டாட்டி கஷ்டப் படறாளேன்னு பரிவா ஒரு வார்த்தை சொல்றிங்களே அது போதுங்க எட்டு ஊருக்கு உழைப்பேன்"

"அன்புக்கு என்ன சாவித்ரி?நமக்கு எத்தனை வருசமாச்சு கல்யாணமாகி"

"தை வந்தா பதினஞ்சு"

"இன்னைக்கும் அப்படியே இருக்கே" என்று அவள் மூக்கு நுனியை விரலால் தொட்டான் சதீஷ் "கிவ் மி எ கிஸ்"

"பாக்கித் துணியை தோச்சுட்டு வந்துர்றேன்"

சாவித்ரி உள்ளம் பொங்ககி நிறைந்த சந்தோஷத்தோடு வாஷிங் மெஷினில் போடுவதற்கு கணவன் கழற்றிப் போட்ட சட்டையை எடுத்துச் சென்றாள் கணவனின் சட்டை என்பதே ஒரு கிறக்கத்தை ஏற்படுத்த அன்புடன் அதை முகர்ந்து பார்த்தாள் முதுகுப் பக்கத்தில் லேசான பர்ஃப்யும் வாசைன. நம் விட்டில் இந்த வாசனை கிடையாதே!

Author's note on this story

When I started writing this story I didn't have a clue how it was going to develop and end. Popular writers often have to work to deadlines I had a pending request from `kalki` magazine to send a story I opened the day's newspaper and saw an ad for a washing machine; the link to the urban housewife was immediately established and after that the story wrote itself I AM NOT RECOMMENDING THIS METHOD TO BEGINNERS Dont forget this method is employed by a person who has 37 years of writing and reading at the back of his mind including such great masterpieces like Katherine Mansfield's. `Bliss`

## 4. நிஜத்தைத் தேடி



கல்யாணமாகி ஒன்பது வருஷத்துக்குப் பிறகு ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை கிருஷ்ணமூர்த்தியும் சித்ராவும் ஹாலில் எதிர் எதிரே உட்கார்ந்திருந்தார்கள்.பழக்கப்பட்ட மௌனம்.கிருஷ்ணமூர்த்தி செய்தித்தாள் படித்துக்கொண்டிருக்க சித்ரா குக்கர் சப்தம் வரக் காத்திருக்கும் நேரத்தில் தொடர்கதை படித்துக் கொண்டிருந்தாள்.மர கேட்டைத் திறக்கும் சப்தம் கேட்டது.ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான்.சுமார் முப்பது வயது இருக்கக் கூடிய ஒருவன் கையில் தட்டுடன் காலில் செருப்பின்றி தோட்டத்தில் நடந்து வந்தான்."யாரு?" என்றான்.சற்றுத் திடுக்கிட்டு கிருஷ்ணமூர்த்தியைப் பார்தது தன் சோகக் கதையை காப்ஸ்யூல் வடிவத்தில் சொன்னான்: "ஊருக்குப் புதுசுங்க.வேலை தேடி வந்தேங்க .என் மனைவி காலைல இறந்து போய்ட்டாங்க பிணம் கிடக்குதுங்க .எடுக்கக் காசில்லை. பெரிய மனுசங்க உதவி பண்ணணும்" அவன் வைத்திருந்த தட்டில் சில ரூபாய் நோட்டுக்கள் இருந்தன.எதற்கோ புஷ்பங்கள் இருந்தன. ஒரு ஊதுவத்தி புகைந்து கொண்டிருந்தது.

"பாத்தியா விமலா! இந்தக் குழந்தைங்க படற அவஸ்தையை" என்பதுடன் கதையை நிறுத்திவிட்டு சித்ராவும் எட்டிப் பார்த்தாள்.
அவன் முகத்தில் மூன்று நாள் தாடி. கண்களில் தேவைக்குப் போதுமான சோகம்
"என்னவாம்" என்றாள்.
அவன் "ஊருக்குப் புதுசு வேலை தேடி வந்தேங்கம்மா" என்று துவங்கி மறுபடி அத்தனையும் சொன்னான்.
மனைவியின் மரணம் என்பது உடனே கேட்டவனை உலுக்கிவிடக்கூடிய சோகம். உடனே உள்ளே போய் பணம் எடுத்துக் கொடுக்கவேண்டியதுதானே? கிருஷ்ணமூர்த்தி அபபடிச் செய்யவில்லை. செய்யமாட்டான்.எதையும் விசாரிப்பான். சித்ராவுக்குத் தெரியும்.
"வீடு எங்கே" என்றான்
"இஙகதான் ஸார் கோகுலா பக்கம். தெரிஞ்சவங்க வீட்டில நிகழ்ந்து போச்சுங்க" "சரி அட்ரஸ் சொல்லு"
"போனாப்போறது எதாவது கொடுத்து அனுப்பிடுங்களேன்" என்றாள் சன்னமாக "இரு"
"நான் இங்க பெங்களுர் வந்தே மூணே நாள்தான் ஆவறது ஸார்!காலைல இறந்துட்டா"
"சரிதாம்பா,அட்ரஸ் என்ன? சொல்லேன்!"
அவன் சற்றே யோசித்து "மூணாவது கிராஸ்"என்றான் "மூணாவது க்ராஸ்னா?எச்.எம்.ட்டி லே அவுட்டா?சுந்தர் நகரா? இல்லை கோகுலா காலனிக்குள்ளயா?"
"சொல்லத் தெரியலிங்களே,சினிமா தியேட்டர் பக்கததில"
"அவனோட என்ன வாக்குவாதம்?" "இப்ப நீ சும்மா இருக்கப் போறியா இல்லையா? எந்த சினிமா தியேட்டர்யா?"
"என்ன ஸார் இப்படி கேக்கறிங்க இருக்கறதே ஒரு சினிமா தியேட்டர் தானே! பேர் தெரியாதா உங்களுக்கு?"
"எனக்குத் தெரியும். நீ சொல்லு"
அவன் மறுபடியும் அனுபல்லவியைப் பிடித்தான் "பங்களூர் வந்தே மூணு நாள் ஆவுது ஸார் காலைல இறந்துட்டா"
"சரிப்பா.எந்த இடம்? அதைச் சொல்ல மாட்டியா?"
"என்ன ஸார்,பெண்டாட்டி செத்துப் போன துக்கத்தில இருக்கேன்,என்ன என்னவோ போலிஸ்காரங்க மாதிரி கேக்கறிங்களே. காசு கொடுக்க முடியும் இல்லைன்னு சொல்லிடுங்க, நான் போவணும்.பிணம் கிடக்கு அங்கே!"
"அட்ரஸ் சரியா சொல்லு தரேன் "
"அதான் சொன்னேனே"
"சரியா சொல்லு"
"அய்யோ" என்றான் ."வேண்டாம் ஸார்.என்ன நீங்க"
சித்ரா எதிர்பார்த்தாள்."என்ன ஒரு மனிதாபிமானமில்லாத ஆசாமி அய்யா நீ" என்று திட்ட ஆரம்பிப்பான் என்று நிச்சயம் எதிர்பார்த்தாள். அவன் அப்படிச் சொய்யாமல் திடுதிப்பென்று அழ ஆரம்பித்தான் . தட்டைக் கை மாற்றிக்கொண்டு மௌனமாக அழுதான்."வரேன் ஸார்" என்று திரும்பி நடந்தான். போகும்போது வாசல் கேட்டைத் தாளிட்டுவிட்டுச் சென்றான்.
கிருஷ்ணமூர்த்தி இந்தச் செயலை எதிர பார்ககவில்லை "போய்ட்டான்" என்றான்.
"கூப்பிடுங்க அவனை!" என்றாள் சித்ரா.

"எதுக்கு? எல்லாம் பாசாங்கு. தெரியுமோல்லியோ?"
"ப்ளீஸ். அவனைக் கூப்பிடுங்கோ. கூப்ட்டு எதாவது கொடுத்து அனுப்பிடுங்கோ"
கிருஷ்ணமூர்த்தி சிரித்து வெளியே பார்த்தான்.சற்று தூரத்தில் அவன் தெரிந்தான்.இன்னும் அழுது கொண்டே சட்டையால் முகத்தைத் துடைத்துக்கொண்டே சென்று மறைந்தான். "அவன் சொல்றது உண்மையா இருந்தா பளிச்சுன்னு அட்ரஸ் சொல்லியிருப்பானோ இல்லியோ? ஏன் தயங்கணும் ? அட்ரஸ் சரியா சொல்லிருந்தா நான் கொடுத்திருக்க மாட்டேனோ?"என்றான்
"அவன்தான் ஊருக்குப் புதுசுங்கறானே.சரியா அட்ரஸ் சொல்லத் தெரியலையோ என்னவோ" "சேச்சே உனக்குத் தெரியாது சித்ரா, இது பெரிய்ய ரேக்கெட்.அவனைப் பார்த்தான மனைவி செத்துப் போனவன் மாதிரியா இருந்தது? திருதிருவென்று முழிச்சானே"

"எனக்கென்னவோ அப்படிப் படலை.எதுக்கு அழுதான்?"
"அதுவும் அவனுடைய நாடகத்தில ஒரு பகுதி"
"ஏதாவது கொடுத்திருக்கலாம், பா..வம்"
"மறுபடியும் மறுபடியும் அசட்டுத் தனமா பேசறியே. வெளி உலகத்தில எத்தனை பொய் இருககு தெரியுமா? எவ்வளவு ஏமாத்து வேலைகள்? வீட்டுக்குள்ளயே இருக்கறவ நீ. ரொமபப் பித்தலாட்டம் நடக்குது தெரியுமா?"
"எனக்கு அவன் மூஞ்சியைப் பார்த்தா பொய் சொல்றவன் மாதிரி தெரியலை" "உனக்கு அந்த அறிவு போறாது"
"சரி போதாதுன்னு வெச்சுக்கலாம் அவன் பொய் சொல்றான்னே வெச்சுக்கலாம்.ஒரு ரூபா ரெண்டு ரூபா கொடுத்தா என்ன தேஞ்சா போய்டுவோம்?எவ்வளவு செலவழிக்கிறோம் கன்னா பின்னான்னு"

"அது வேற விஷயம். வீடு தேடி வந்து ஆளுங்களை முட்டாள் அடிக்கிறவனுக்கு நாம ஹெல்ப் பண்ணனுமா என்பதுதான் ப்ரச்சனை. இப்ப அவன் நேர வந்து'ஸார் நான் ஒரு ஏழை, அடுத்த வேளை சோத்துககு காசில்லை'ன்னு யோக்கியமா வந்து கேட்டிருந்தா ரெண்டு ரூபா என்ன அஞ்சு ருபா கூட கொடுப்பேன் அதை விட்டுட்டு அனியாயத்துகக பெண்டாட்டி செத்துப்போனதா சரடு விட்டுட்டு சாவுன்ன உடனே கேள்வி கேக்காம தந்துருவாங்கன்னு ஒரு கதையை ஜோடிச்சு... என்ன ஒரு பித்தலாட்டடம் பாத்தியா இதை எப்படி நாம என்கரேஜ் பண்ண முடியும்? சொல்லு."

சித்ராவுக்கு எத்தனையோ சொல்ல வேண்டும் போலிருந்தது அவன் முகத்தில் பொய்யில்லை என்று சொல்ல வேண்டும் நியாயமாகவே அவனுக்கு இருந்த சோகத்தில் புதுசாக சரணடைந்த வீட்டின் விலாசத்தை சொல்வதில் கழப்பம் இருந்திருக்கலாம் என்று, நீங்க செஞ்சது எனக்கு கட்டோடு பிடிக்கவில்லை என்று , சொன்னால் வாக்குவாதம் வரும் சண்டை வரும் எக்கேடு கெட்டுப்போ என்ற சாப்பிடாமல் வெளியே போய்விடுவார் குக்கர் பெருமூச்சுவிட்டது. சித்ரா உள்ளே சென்றாள்.

கிருஷ்ணமூர்ததி செய்தித் தாளில் ஆழ்ந்தான். நியுஸ்ப்ரிணட் வார்த்தைகளில் அவன் கவனம் நிலைக்கவில்லை.. தான் செய்தது சரிதான் என்பது அழுத்தமாக ஏன் இவளுக்குப் புரியவில்லை? சுளித்துக் கொண்டு உள்ளே சென்றதிலேயே ஏமாற்றத்தைக் காட்டினாளே அவளுக்கு என்ன தெரியும். இங்கிருந்து பேசினான்-

"இப்படித்தான் ஒரு தடவை திருப்பதிக்கு போறேன்னு ஒரு அம்மா மஞ்சள் புடவையோட வந்து அஞ்சு ருபா வாங்கிண்டு போனாளே! என்ன ஆச்சு? தியேட்டர்ல பார்க்கலை நாம?"
"ஆமாம்"
"அப்புறம் அனாதைப் பள்ளிக்கூடம் நடத்தறோம்னு நோட்டீசு ரசீது புஸ்தகம் எல்லாம் அடிச்சுண்டு ஒருத்தன் வந்தானே என்ன ஆச்சு?"
"என்ன ஆச்சு" என்றாள் உள்ளிருந்து
"அந்த மாதிரி தெருப் பேரே இந்த ஊர்ல இல்லைன்னு கண்டு பிடிச்சுக் காட்டினேனே இல்லையா?" "ஆமாம் ஞாபகம் இருக்கு"
"அப்படி யெல்லாம் சுலபமா ஏமாறக்கூடாது பத்து ரூபாய்க்காக பெத்த தாயையே செத்துப் போனதா சொல்லிடுவாங்க. இந்த உலகத்தில எத்தனை பொய் இருக்கு தெரியுமா சித்ரா?"
சித்ராவிடமிருந்து பதில் வரவில்லை
"சித்ரா?"
பதில் இல்லை
கிருஷ்ணமூர்த்தி பேப்பரை மடித்து வைத்துவிட்டு சமையலறைப் பக்கம் சென்றான்.சித்ரா அடுப்படியில் அழுது கொண்டிருந்தாள். திடுக்கிட்டான். "இப்ப எதுக்காக அழறே?" அவசரமாக கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.
"எதுக்கா இப்ப அழுகைன்னு கேக்கறேன்" என்று அதட்டினான் "ஒன்றுமில்லை"

"பொய் சொல்லாதே நான் அவனை விரட்டினதுக்காகவா?"
"இல்லை..இல்லை" விசம்பல்களுக்கிடையே சொன்னாள்."எனக்கென்னவோ அவன் பொய் சொல்லலைன்னு தோணித்து அவன் திடீர்னு அப்படி விக்கி விக்கி அழுததை நினைச்சுண்டேன் யாரோ ஒரு ஜீவன் ஏதோ ஒரு துக்கம் அதை எனக்கும் கொஞ்சம் கொடுத்துட்டுப் போய்ட்டாப்போல ஆய்டுத்து" "எல்லாம் பொய்னு எத்தனை தடவை சொல்றது"
"எப்படித் தெரியும் உங்களுக்கு" என்று தன்னியல்பாகக் குரலை உயர்த்திக் கேட்டாள். அவன் அவளை உக்கிரமாகப் பார்த்தான். "எப்படித் தெரியுமா ? சொல்றேன். அனுபவம்டி .வெளில எனக்கு ஏற்பட்ட அனுபவம். சித்ரா நீ எல்லாத்தையும் இமோஷனலா பார்க்கறே அதான் உங்கிட்ட தப்பு. நான் ப்ராக்டிக்கலா பார்ககறேன்"

"சரி, நீங்க சொல்றதுதான் சத்தியம். நான் அழலை" என்றாள். "ஆனா" "என்ன சொல்லு. மனசில நினைச்சிண்டிருக்கிறதை சொல்லிடு" "நீங்க சொல்றாப்போல நிறையப்பேர் பொய் சொல்றா ஏமாத்தறா தப்பிப்போய் இவன் சொன்னது மட்டும் நிஜமா இருந்து தொலைச்சுடுத்துன்னா.. அவ்வளவு துக்கத்தில இருக்கிறவனை வாசல்ல நிக்கவெச்சு கேள்வி கேட்டு மடக்கி அவனும் சொல்லத் தெரியாம முழிச்சு காசும் கொடுக்காம துரத்திட்டமே அது தப்பில்லையா? எதுக்காக கேள்வி கேட்கணும் அவனும் பொய் சொல்றான்னா எக்கேடு கெட்டுப் போகட்டும்னு ரெண்டு ரூபாய் கொடுத்திருந்தா இத்தனை.." "மறுபடியும் மறுபடியும் அதையே சொல்றியே ரெண்டு ரூபாய் பெரிசில்லை எனக்கு சித்ரா ப்ரின்சிப்பிள் அதான் முக்கியம்!"

"சரி" என்றாள் சுருக்கமாக. சற்று நேரம் மனைவியையே பார்த்தான்."ஆல்ரைட் உனக்கு இன்னும் சமாதானமாகலை.ஒண்ணு செய்யறேன் அவன் என்ன சொன்னான்? தியேட்டர் பக்கத்தில மூணாவது கிராஸ்னுதானே? தியேட்டர் கிட்டத்தில்தான் இருக்கு மூணாவது கிராஸ் போய் அங்க இருக்கானான்னு விசாரிச்சுண்டு வந்துடலாம் வா! அப்பதானே உனக்கு நிம்மதி ஆகும் ? வா காரை எடுத்துண்டுபோய் ஒரு நிமிஷம் பாத்துட்டு வந்துரலாம்" "வேண்டாம். நீங்க சொன்னது எனக்கு கன்வின்ஸ் ஆய்டுத்து.நான் ஏதோ பைத்தியக் காரத் தனமா அழ ஆரம்பிச்சுட்டேன்."
"இல்லை நீ கன்வின்ஸ் ஆகலை. நான் சொன்னது சரின்னு உனக்கு இன்னும் புரிபடலை"
"நான் வரலை! எனக்கு நிறைய வேலை இருக்கு"
"நீ வரலைன்னாக் கூட நான் போய்ப் பார்க்கத்தான் போறேன்"
"எதுக்காக விதண்டாவாதம் மறங்க"
"இல்லை இந்த கேஸில யார் சரின்னு பார்த்தாகணும் நீயா நானா"
"நீங்க சொன்னதுதான் சரி ஒப்புத்துண்டுட்டேனே"
"நீ இன்னும் மனசார ஒப்புததுக்கலை. உனக்கு ப்ரூஃப் வேணும்தானே நான் போய்ப் பார்த்துட்டு வந்துடறேன்"
"இது என்ன பிடிவாதம் நீங்க அங்க போய் அவன் சொன்னது நிஜம்னே தெரிஞ்சா என்ன செய்யப்போறிங்க"
"தோல்வியை ஒப்புத்துண்ணடு பத்து ருபா அல்லது பதினஞ்சு ரூபா கொடுத்துட்டடு வந்துருவேன் ஆனா அப்படி நடக்காது லைஃப்ல நிறைய பார்த்துட்டேன் சித்ரா"
"அவ்வளவு ஷ்யுரா இருந்தா எதுக்குப் போகணும்"
"உனக்காகத்தான் சித்ரா நீ அருவியா அழுத பாரு? அது தப்புன்னு ஸ்தாபிக்கிறதுக்கு"
"எனக்கு இப்ப சிரிப்பு வரது"
"அப்புறம் சிரிக்கப் போறது யாருன்னு சொல்றேன்"

கிருஷ்ணமூர்த்தி ஷெட்டை திறந்து பெரிய கேட்டைத் திறந்து காரைக் கிளப்பி சீறிப் புறப்பட்டான் தியேட்டர் ஒரு மைலுக்குள் இருக்கும். நிச்சயம் போய்ப் பார்த்து விடவேண்டும் மூணாவது கிராஸ் என்று தானே சொன்னான் ? என்னை என்னவென்று நினைத்துக் கொண்டாள் கருணை இல்லாதவன் என்றா? இவளுக்கு என்ன தெரியும் கேள்வி

கேட்காமல் காசை சமர்ப்பிக்க நான் என்ன முட்டாளா? அழு மூஞ்சி இப்படித்தான் ஒரு தடவை...

தியேட்டருக்கு அருகில் மூன்றாவது கிராஸ் இருந்தது. அதில் திரும்பியதும் வெறிச் சென்ற அந்த சிறிய தெரு பூராவும் தெரிந்தது. தெருவின் நடுவில் ஒரு சட்டி வைக்கப்பட்டு அதனுள் நெருப்பு புகைந்து கொண்டிருந்தது.பச்சை மூங்கில்கள் காத்திருந்தன.ஓரத்தில் தலையில் கை வைத்துக்கொண்டு அவன் மண்ணில் உட்கார்ந்திருந்தான். கிருஷ்ணமூர்த்தி சற்று நேரம்தான் தயங்கினான். காரை ரிவர்ஸ் செய்தான் .சீறிப் புறப்பட்டான், திரும்பவும தன்வீட்டை நோக்கி.

"என்ன ஆச்சு?" என்றாள் சித்ரா அசுவாரஸ்யமாக "நான் சொன்னது சரியாப்போச்சு அவன் சொன்ன மூணாவது க்ராஸ் முழுக்க விசாரிச்சுப் பார்த்துட்டேன் ஒண்ண்ணும் இல்லை"
"அப்படியா? அப்பா! எத்தனை பொய்!" என்றாள் சித்ரா.

Author's notes on this story?
This was written in June 1980.Still many people remember this story essentially because of its implied male dominance. Coupled with this " the depiction of a guilt feeling associated with a wrong decision, the husband's stubborn refusal to say `I could be wrong` and the simple genuine emotions of the wife make this a significant story" so wrote a reviewer Some times the writer feels the urge to revise, sharpen, or edit a story when he reads it after a long time In this story I didnt feel it even though there is a slight shift in the viewpoint somewhere about two thirds of the story. Some of the feedback I received in this web page suggested a kind of FAQ on short story writing. I' d like to have your views on this. Sujatha

A note on the illustrator

Mr Maniam Selvam who has illustrated this short story is the leading Illustrator of Tamil Nadu. You can see his drawings in almost all the Tamil periodicals. He is the son the late Maniam who was a great artist and added a dimension of joy to kalkis serials like 'Ponniyin Selvan'. the son is a very versatile artist with a mix of skills like craftsmanship imagination perspective knowledge and beautiful lines.

## 5. திமலா




"உங்களைப் பார்க்க உங்கள்..." என்று வெளி ஆபீஸ் சொல்லி முடிப்பதற்குள் ஆத்மா குறுக்கிட்டு "எத்தனை முறை சொல்லியிருக்கிறேன். இந்த வேளையில் பார்வையாளர்களை அனுமதிக்காதே என்று" வெட்டினான். கோபக் கதவு திறந்தது

"நான் பார்வையாளர் இல்லை. உன் மனைவி"
"ஓ நித்யா! நீயா?"
"உள்ளே வரலாமில்லையா?"
"தாராளமாக.உனக்கு யார் தடை செய்ய முடியும்? அருகே வா! முத்தம் தருகிறேன்"
நித்யா அருகே செல்லாமல் தீர்க்கமாக தன் கணவனைப் பார்த்தாள். ஆத்மாவின் மேசையில் டெர்மினல் திரையில் எழுத்துக்கள் அதி விரைந்தன.சுவற்றில் உயர வரைபடங்கள் சிவப்பிலும் பச்சையிலும் உயிர் பெற்று 'ஆத்மா அண் கோ'வின் அந்த நிமிஷ ஆரோக்கியத்தை அடித்துக் காட்டின. ஆத்மா டச் போனில் "நியுயார்க்" என்று கூப்பிட்டு விட்டு "உட்காரேன் நித்யா" என்றான்.
நித்யா உட்காராமல் கைகளைக் கட்டிக்கொண்டு கணவனைக் கவனித்தாள்.
"நியு யார்க் நியு யார்க்!"
"நியுயார்க் ஸர்"
"எத்தனை வேண்டுமாம்?"
"இருபது மிலியன்"
"பத்தொன்பதுக்கு தீர்த்துவிடு"
"நிக்ஸ் ஸர்"
"வாங்குவது யார்?"
"ராத்சைல்டு"
"அந்தக் கழுகா? சரியாக ஒரு நிமிஷம் பார் அதன்பின் பத்தொன்பது நாற்பது வரை போ"
"சரி"

ஆத்மா டச் போனிலிருந்து நிமிர்ந்து நித்யாவை ஒரு மில்லிசெகண்டு புன்னகைத்து விட்டு ""பிஸி பிஸி பிஸி. இந்த சமயத்தில் வந்தாயே?"என்றான் நித்யா பதில் சொல்லவில்லை ஆத்மா தன் கோட்டின் உட்பறத்தில் கைவிட்டு பேஸ்மேக்கரை அமைத்து இதயத் துடிப்பை அதிகரித்துக் கொண்டான். மூளைக்கு ரத்த ஆக்ஸிஜன் அளவை அதிகரிதது்க் கொண்டான். துல்லியமாக சிந்திக்க முடிந்தது. அந்த வரைபடங்கள் இன்னும் நடனித்துக் கொண்டிருந்தன."க்ரேட் ! ஒரு நிமிஷத்தில் ஒரு லட்சம் செய்துவிட்டேன். நித்யா நீ நிற்கிறாயே என்னவேண்டும் சொல்" "நான் யார் தெரியுமா உனக்கு?"

"என்ன பைத்தியக்காரக் கேள்வி? நீ என் மனைவி. ஹலோ ந்யுயார்க் பத்தொன்பது ஐம்பதா? முடியாது இன்னும் நாற்பது செகண்டு தயங்கி நாற்பத்தி ஐந்துக்கு முடித்து விடு. என்ன சொன்னே நித்யா"
"ஒன்றுமே சொல்லவில்லை. என் கணவன் இயங்குவதைப் பார்ததுக் கொண்டிருக்கிறேன்.
"என்னவேண்டுமா? சொல்லவே இல்லையே"
"ஆத்மா,எனக்கு நீ வேண்டும்"
"நானா? அதுதான் எதிரிலேயே இருக்கிறேனே"
"என் எதிரில் இருப்பது ஒரு பணம் பண்ணும் இயந்திரம்"
"பணம் சக்தி நித்யா. வந்த காரியத்தை நாற்பது செகண்டுக்குள் சொல்"
"ஆத்மா நீ ஒரு மணிநேரம் எனக்கே எனககு என்று பிரத்தியேகமாக வேண்டும்"
"ராத்திரிதான் வருகிறேனே"
"வருகிறாய் ,மாத்திரை விழுங்குகிறாய் இதயத் துடிப்பைக் குறைத்துக் கொள்கிறாய். துங்கி விடுகிறாய்.காலை எழுந்து நான் காண்பது காலிப் படுக்கை"
"தேவைப் பட்ட போது ஸ்டிவியில் பேசிக் கொள்கிறோமே?"
"அது வெறும் பிம்பம் எனக்கு வேண்டியது நிஜ நீ"
"ஹலோ டோக்கியோ"
நித்யா டச்போனை பட்டென்று நிறுத்தினாள்.
"என்ன நித்யா இது?"
"ஆத்மா நான் சொல்வதை தயவு செய்து கவனி போன வருஷம் திமலா போவதற்கு அனுமதி கேட்டு எழுதினோமே ஞாபகம் இருக்கிறதா?"
"அதற்கென்ன?"
"அனுமதி கிடைததிருக்கிறது" என்று ஆர்வததுடன் ஒரு மஞ்சள் அட்டையை எடுதது அவனிடம் காட்டினாள் அதில் கம்பயுட்டர் அச்சில்

**திமலா நிர்வாகம்**
**உங்கள் வேண்டுகோள்- '**
**20-2-2080 அனறு காலை**
**10-16 உங்களுக்காக**
**ஒதுக்கப் பட்டிருக்கிறது**
**நேரந்தவறாமல் வரவும்**
**இந்த அட்டையையும்**
**கொண்டு வரவும்**
**உங்கள் பார்வையாளர் எண் 164396**
**(இது செயற்கைக் காகிதம்)**

ஆத்மா அதை அவளிடம் திருப்பிக் கொடுத்து விட்டு "அப்பாடா கடைசியில் அனுமதி கிடைத்து விட்டது சந்தோஷம் போய்வா" என்றான் நித்யா கோபத்துடன் தெளிவாகப் பேசினாள் "ஆத்மா நீயும் என்னுடன் வருகிறாய் வந்துதான் ஆகவேண்டும். ஒரு மணி நேரம்தான் ஆகும். வரவில்லையென்றால் இந்த அலுவலகத்தை நாசம் பண்ணிவிட்டுத்தான் போவேன் அத்தனையும் உடைத்து.."

"இரு இரு எப்போது போகவேண்டும்"
"நாளை காலை 10-16"
"ஹேய் கம்ப்யுட்டர் நாளை காலை 10-16 க்கு நான் ஃப்ரீயா?"
அறையில் ஓர் அமானுஷ்யக் குரல் ஒலிததது.
"நாளைக் காலை 10-16க்கு வத்தாநபே வருகிறார் "
"ஓகாட்! வத்தாநபே ஜப்பானியன். மிக முக்கியமான சந்திர காண்ட்ராக்ட்.ஸாரி நித்யா நான் வரமுடியாது"
நித்யா இப்போது அழுந்தி உட்கார்ந்தாள்."முடியாது நாளை நீ என்னுடன் வந்துதான் ஆக

வேண்டும்.டச்போன் கொடு ஜப்பான்காரனுடன் பேசகிறேன். ஹேய் கம்ப்யுட்டர் வத்தாநபே கொடு" "ஸாரி கிடைக்கவில்லை" என்றது குரல்.




"போய் உன் தலையைத் தின்னு"
"ஸாரி தலை கிடையாது"
"இரு நித்யா கோபிக்காதே நான் வந்துதான் ஆகவேண்டும என்று என்ன கட்டாயம்? நீதான் திமலா பார்க்கத் துடித்துக் கொண்டிருந்தாய.தனியாகப் போயப் பாரேன் மற்றொரு முறை உன்னுடன் வருகிறேன்"
நித்யா பதற்றத்துடன் " ஆத்மா எப்படி இதைச்சொல்வேன் இரண்டுபேரும் போவதாகத்தானே முதலிலிருந்தே பேச்சு.அட்டையைப் பார் அனுமதி இரணடுபேருக்கு!"
"கூட யாரையாவது அனுப்பட்டுமா?"
நித்யா அழ ஆரமபித்தாள்
"நித்யா என்ன இது? இந்த நுற்றாண்டில் யாரும் அழுவதில்லை"
மேலும் அழுதாள்.
"இதோ பார் நித்யா உனக்கு என்ன குறை? கல்யாணம் செய்துகொள்ளும்போது என்னுடன் வாழ்க்கை இப்படிததான் இருக்கும் என்று நான் சொல்லவில்லையா?"
"ஒரே ஒரு மணி நேரம். அப்படி நான் என்ன பெரிசாகக் கேட்கிறேன்?"
"ஒன்று செய்யலம் திமலா எவ்வளவு துரம்?"
"நுற்றம்பது கிலோ"
"நீ முதலில் போ நான் சட்டென்று அவனுடன் பேச்சை முடித்துவிட்டு வந்துவிடுகிறேன்"
"முடியாது நீ வரமாடடாய்.எனக்குத் தெரியும் . நன் போகிறேன்.உனக்கு வாழ்க்கைப் பட்டதற்கு பதில் ஒரு கம்ப்யூட்டரைக் கட்டிக்கெண்டிருக்கலாம் ஹேய் கம்ப்யூட்டர் என்னைக் கல்யாணம் செய்து கொள்வாயா"
"ஸாரி பதில் இல்லை"
ஆத்மா சிரித்தான்
"சிரிக்கிறாய! எனக்குப் பற்றிக்கொண்டு வருகிறது. ஆத்மா நாம் பிரிந்து விடுவோம் என்று நினைக்கிறேன்.எனக்காகப் பத்து பேர் மனுப் போட்டிருக்கிறார்கள்"
"அப்படி எல்லாம் பேசாதே நித்யா"
"பின்னே என்ன?"
"அந்த திமலா அப்படி என்ன முக்கியம் உனக்கு"
"முக்கியம் ஆத்மா.அங்கே போக வேண்டியது என் நிம்மதிக்கு முக்கியம்,என் மனநிலை ஸ்திரமடைவதற்கு முக்கியம்.ஒரு வருஷமாக நான் இதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அங்கே நமக்கு கிடைக்கப்போகும் ஆறுதலும் நிம்மதியும் பிரபஞ்சத்தில் எங்கேயும் இல்லை"
"இந்த நூற்றாண்டில் இதெல்லாம் அபத்தமாக பிற்போக்காகப் படுகிறது எனக்கு"
"ஒரு முறை வந்துபார்.உன் மனம் மாறிவிடும் கணவன் மனைவியாகப் போவது பெரும் பாக்கியம் என்கிறார்கள்" "இந்த முறை மன்னித்துவிடு நித்யா மற்றொரு மனுப்போடலாம் ஹலோந்யூ யார்க் என்ன ஆச்சு?" நித்யா டச்போனைப் பிடுங்கி எரிச்சலுடன் கீழே எறிந்தாள் ஹை இம்பாக்ட் பாலிமரில் செய்யப்பட்ட அது சேதமடையவில்லை. ஆத்மா அதைப் பொறுக்கிக்கொண்டு "கோபம் கூடாது என் மனைவியே"என்றான்.
"நான் அனி உன் மனைவி இல்லை"
கம்ப்யூட்டர் குறுக்கிட்டது "ஒரு புதிய செய்தி வந்திருக்கிறது"
"என்ன?"
"வத்தாநபேக்கு வேறு அவசர வேலைகள் இருப்பதால் நாளை வர முடியாதாம் அதிக மன்னிப்புக்கள் கேட்கிறார்"
நித்யா முகம் மலர்ந்தாள் "வாழ்க வத்தாநபே. கம்ப்யூட்டரே நீயும் வாழ்க"என்று கூவினாள்
"மிகைப் பட்ட உற்சாகம் எதற்கு என்று தெரியவில்லை எனினும் வாழ்த்துக்களும் அஸ்ட்ரா

கம்பெனியின் சார்பாக வந்தனமும்"என்றது கம்ப். ஆத்மா சிரிதது" திருப்திதானே? நாளை வருகிறேன். முதம் உண்டா?"
நித்யா அவன் உதடுகளில் முத்தமிட்டாள்

மறு நாள் ஒன்பது மணிக்கே தயாராகிவிட்டாள்.ஸ்டி.வி அலுவலகத்தில் சொல்லி விடுமுறை வாங்கிக்கொண்டாள்.தன்னை மெலிதாக அலங்கரித்துக் கொண்டள். ஸின்த்ரானில் பாட்டு அமைத்தாள்.பைக்குள் தேவையான சாமான்களை அடைத்துக் கொண்டாள். டச்போனை எடுத்து வானடாக்ஸியை அழைத்தாள்.ஒன்பது பதினைந்துக்கு மேல்மாடிக்கு வந்து காத்திருந்தாள். நிறைய சமயமிருக்கிறது

திமலா!
அவள் எதிர்பார்த்து ஏங்கிய திமலா!

கணவனுடன் சென்று வரவேண்டும் என்ற ஒரு வருஷ வைராக்கியம் ஏன், விரதம் இன்று பூர்த்தியாகப் போகிறது. நித்யா மற்ற பெண்களைப் போல் இல்லை கணவன் மனைவி உறவுக்கு இந்த நுற்றாண்டின் புதிய அர்த்தங்கள் அவளுக்குப் பிடிக்கவிலலை.அயற்சேர்க்கை விழாவுக்கு அவள் போவதே இல்லை குருட்டுக் கூட்டுக்கள் அவளுக்கு பிடிக்காது.கணவன் மனைவி உறவில் இன்னும் சில கவிதை கலந்த சங்கதிகள் இருப்பதாகவே நம்புகிறவள். அவள் ஜீன்களில் கோளாறு என்று ஆத்மா சொல்லியிருக்கிறான் . இருக்கட்டும் கோளாறு அவளுக்குப் பிடித்திருக்கிறது.எனக்கு ஆத்மா ஒருவன் போதும, அவனுடன் என் சுக துக்கங்கள் அனைத்தும் ஐக்கியமாகட்டும் மெலிதாக பெருமூச்சு விட்டுக்கொண்டு வான டாக்ஸி வந்து வரைந்த வட்டதத்தில் இறங்கி சுவாசித்தது. நித்யா ஏறிக் கொண்டாள் "எங்கே" என்றான் டாக்ஸி ஓட்டி

"முதலில் அஜாக்ஸ் கட்டிடம். அங்கே கணவனை அழைத்துக்கொண்டு திமலா போகவேண்டும் பத்தே காலுக்குள்.உன்னிடம் பூஸ்டர் இருக்கிறதா?" "இருக்கிறது. நிறைய சமயமும் இருக்கிறது. அஜாக்ஸ் கட்டித்தில் எத்தனை நேரம் காத்திருக்க வேண்டும்?"
"அதிகப் படியாக ஐந்து நிமிஷம்"
"சரி"
டாக்ஸி நழுவியது.
அஜாக்ஸ் கட்டிடத்தில் இறங்கிய போது ஒன்பது நாற்பது முப்பது.
"ஒரு நிமிஷம்" என்று சொல்லி அதிவேக லிஃப்ட்டில் இறங்கி ஆத்மாவின் அறைக்குள் சென்றாள்.
எப்போதும் போல் அவன் பணம் பேசிக்கொண்டிருந்தான் "ஹலோ லண்டன்! ஸூப்ராமெட்ரோவில் டாக்டர் டாம்லின்ஸன் வேண்டும்.ஹலோ நித்யா" "நேரமாகிறது கிளம்பு கிளம்பு"
"ஒரு நிமிஷம் டாக்டர் டாம்லின்ஸன் ஆத்மா ஹியர் ஐயம் ஹோல்டிங் எங்கே போகிறோம்?"
"நாசமாப் போச்சு. திமலா!"
"ஓ எஸ் திமலா திமலா நமக்கு அனுமதி கிடைத்து விட்டதல்லவா? இன்னும அரை மணி இருக்கிறதே இதோ வந்துவிட்டேன்"
ஆத்மாவை ஒரு வழியாக பிடுங்கிக்கொண்டு வர பத்தாகி விட்டது.பத்து பதினாறுக்கு அனுமதி. நித்யாவுக்கு கவலை அதிகரித்தது. கடவுளே! போக்கு வரத்துக் குழப்பமில்லாமல் போய்ச் சேரவேண்டும்.V "டிரைவர் பத்து பதினைந்துக்கு நங்கள் அங்கே இருக்க வேண்டும்"
"கவலைப் படாதீர்கள் ஃப்யூல் செல்கள் எல்லாம் புதிதாக சார்ஜ் வாங்கியிருக்கின்றன பூஸ்டர் வைத்திருக்கிறேன் . திமலாவில் எந்த ப்ளாட்பார்ம்?"
"புரிய வில்லை"
"உங்கள் அனுமதி அட்டை என்ன நிறம்?"
"மஞ்சள்"
"பத்தாவது ப்ளாட்பார்ம்"

வான டாக்ஸி அம்பாக விரைந்தது. அதன் வேக ஈர்ப்புடன் நித்யாவின் வயிற்றில் எதிர்பார்ப்பின் ஈர்ப்பும் கலந்திருக்கிறது. ஆத்மாவை முழுசாக பககத்தில் வைத்துக் கொண்டிருக்கிறாள். அவனை உரசிக் கொணடாள்




திமலாவுக்கு அவர்கள் வந்து சேர்ந்தபோது பத்து பதிநான்கு நாற்பது. அப்பாடா! ஒரு வழியாக வந்து சேர்ந்தோம். நீண்ட ப்ளாட்பாரத்தில் அதிகம் சந்தடி இல்லை.'திமலாவுக்கு வரவேற்கிறோம்' என்று ஸோடியம் ஒளிர்ந்தது. நித்யா வேகமாக நடந்தாள். நீண்ட சதுர இயந்திரங்கள் 'உங்கள் அனுமதிச் சீட்டை செருகுங்கள் ' என்றன. செருகினாள். உள்ளே அதன் காந்த எண்கள் படிக்கப் பட்டு" நீங்கள் ஒரு நிமிஷம் முன்னதாக வந்திருக்கிறீர்கள் ஒன்பதாம் எண் கன்வேயரில் செல்லவும்"

சற்று தூரம் நடந்தார்கள்.ஒன்பதாம் எண் கன்வேயருக்கு ஒரு வரிசை காத்திருக்க மேலே ஒரு ஆரஞ்சு வண்ண விளக்கு பளிச் பளிச்சிட்டது. 'இன்னும் முப்பது செகண்டுகளில் புறப்படும்' என்றது ஒலிபெருக்கி ஆத்மாவும் நித்யாவும் அதன்மேல் ஏறிக்கொள்ள சற்று நேரத்தில் ஆரஞ்சு சிவப்பாகி டர்ன்ஸ்டைல் பூட்டிக் கொள்ள ஊஷ் என்ற சப்தத்துடன் பெல்ட் நகர ஆரம்பித்தது.
முதலில் ஒரு மண்டபத்தின் ஊடே விரைந்தது.மேலும் வேகம் பிடித்து மிக மெலிதான கட்டத்துடன் சுற்றி வந்து ...கோபரம் தெரிந்தது. நித்யாவின் துடிப்பு அதிகரிக்க ஆத்மாவை அப்படியே அணைத்துக் கொண்டாள். பிரதான வாசல் திறந்திருந்தது . அவர் இங்கிருந்தே தெரிந்தார் நித்யா துள்ளினாள். "பார் ஆத்மா, அவர்தான்!"
வேகம் குறைந்து சரியாக பத்து பதினாறுக்கு ஆத்மாவும் நித்யாவும சன்னிதியில் அனுமதிக்கப் பட்டார்கள். மெலிதாக ஏர்கண்டிஷனரின் மூச்சு கேட்டது அருகே அருகே அருகே சென்றார்கள். "அப்பா! என்ன ஜாஜ்வல்யம் என்ன கம்பீரம்!"
"உங்களுக்காக சரியாக இருபது செகண்டு அனுமதிக்கப் பட்டிருக்கிறது ஆசை தீர சேவிக்கலாம்'என்று குரல் மேலே ஒலித்தது. அர்ச்சகர் பட்டாடை அணிந்து நெற்றியில் நாமம் அணிந்து "அர்ச்சனை உண்டா? என்ன மொழி?" என்றார். "தமிழ்" என்றாள் நித்யா அர்ச்சகர் அருகே இருந்த பட்டன்களைத் தொட்டார்.மெலிதான இசை பரவியது. துல்லியமான கணீர் என்ற பெண் குரலில் பாட்டுக் கேட்டது-

**"குன்றம் ஏந்திக் குளிர் மழை காத்தவன்**
**அன்று ஞாலம் அளந்த பிரான் பரன்**
**சென்று சேர் திருவேங்கட மாமலை**
**என்றுமே தொழ நம் வினை ஓயுமே"**

"சேவிங்கோ சேவிங்கோ! நன்னா கண்குளிரச் சேவிங்கோ சீனிவாசப் பெருமாள்! முன்னெல்லம் திருப்பதி திருவேங்கடம் திருமலைன்னு பேரு.இப்பதான் கம்ப்யூடட்ருககுத் தோதா திமலான்னு சின்னதாக்கிட்டா... பூலோக தெய்வம்..பிராசீனமான கோயில். நின்ற திருஉருவம் திருமுடியும் தாளும் தடக்கையும்.."
கற்பூர ஒளியில் ஆத்மா "த்ரில்லிங்!"என்றான்

Author's Note on this story
This is one of my early science fiction stories. I have written about forty of them. The basic requirement for a `soft` SF like this is a concept called `cognitive estrangement` You can create an estranged world but it should have some recognizable contemporary emotion in it. The Science in science fiction is essentially used to create new rules of interaction it need not be accurate Hard

SF fantasizes a lot; for example in Yarby's Dune stories the new concept is \`Moisture is wealth\` not gold not silver.

A man possessing a glass of water is a very rich man Moisture is sought and wars are waged If you are new to this genre I would recommend the stories of Ursula La Guin. Clifford Symack. Ray Bradbury. Brian Aldiss .Theodore Sturgeon and Douglas Adams the delightful British author SF stories are more challenging and more difficult to write It is like playing a new game forming your own rules The only thing more difficult to write is humour We will see an example in the next story

## 6. குதிரை சிறுகதை



சிலருக்கு லாட்டரியில் பரிசு விழுகிறது. சிலரை பிரபல டைரக்டர் பஸ்ஸடாண்டில் பார்த்து "அடுத்த அமாவாசைக்கு ஷூட்டிங்குக்கு வா" என்கிறார்.இப்படித் திடீர் என்று தனிமனிதர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.ஏதோ ஒரு வகையில் பிரசித்தி பெறுகிறார்கள்.அம்மாதிரி நானும் பிரசித்தமானேன். என்னை ஒரு குதிரை கடித்ததால்!

"குதிரையா?" என்று வியப்புடன் கேட்கிறீர்கள் அல்லவா? உங்களுக்குச் சொல்கிறேன். முதலில் என்னைப் பற்றி. அப்புறம் குதிரையைப் பற்றி. என்பேர் கிஷ்ண சாமி அதை கிச்சாமி என்று சுருக்கி மனதில் ஒரு பிம்பம் ஏற்படுததிப் பாருங்கள். அதேதான் நான். தொழில், தோற்றம் என்று எந்த வகையிலும் எனக்குப் பிரத்தியேகம் கிடையாது. தினப்படி காப்பி குடித்து, பேப்பர் படிதது, துணி மடித்து, பஸ் பிடித்து அங்குலம் அங்குலமாக மாயும் மனித எறும்பு.

மனைவி, குழநதை ,மாமனார், வாடகை வீடு, பாத்ருமில் பாட்டு, மண் தொட்டியில் ஒன்றிரண்டு மலர்ச்செடிகள், தவணை முறையில் ரேடியோ என்று பிரகாசமற்ற பிரஜைதான் நான்.

குதிரை கடிக்கும் வரை!
குதிரையும் அவ்வளவு பிரசித்தமில்லாத ஜட்கா வண்டிக் குதிரைதான்.எங்கள் வீட்டிலிருந்து அஹமத் ஸ்டோர்ஸ்க்கு போகும் வழியில் ஆஸ்பத்திரி இருக்கிறது.அதன் வாசலில் வழக்கம்போல் இளநீர் காலி பாட்டில்கள் எல்லாம் விற்கும் இடத்துக்கு எதிரே ஒரு குதிரைலாயம் இருக்கிறது. பொதுவாக எல்லா ஆஸ்பத்திரிகளுக்கும் எதிரில் இந்த லாயம் இருப்பதை நீங்கள் கவனித் திருக்கலாம்.இந்த லாயங்களில் மற்றொன்றையும் கவனித்திருக்கலாம், திருச்சி தென்னுர் போனலும் பிட்ரகுண்டா போனலும். ஒரே அமைப்பு. உயரமான கருங்கல் கம்பங்கள் மேல் ஜாக்கிரதையாக ஓடு வேய்ந்திருக்கும். நடுவே 1938 ல் ஏதோ ஒரு உள்ளுர் நாயுடுவின் உபயத்தில் கட்டடப் பட்டது என்று அறிவித்து ஒரு தண்ணீர்த் தொட்டி இருக்கும்.நகரச் சந்தடியில் ஒரு சோம்பேறித் தீவாக கொஞ்சம் சேணம்,கொஞ்சம் லத்தி ஈரப்புல் கலந்து நாற்றமடிக்கும்.

வண்டிக் காரர்க்ள் சுகமாக எங்கேயோ கவனித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பார்கள். ஒன்றிரண்டு குட்டிக் குதிரைகள் தெனபடும்.அவை அழகாக இருக்கும். திடீர் என்று குதிரைக் குட்டி உற்சாகம் பெற்று வெறி பிடித்தாற்போல போக்கு வரத்தின் ஊடே ஓடும். இந்த மாதிரித் தான் நான் சொல்லும் இடமும். அதைக் கடந்து செல்லும்போது லேசாக மழை பெய்ததால் சற்று ஒதுங்கி குதிரைகளின் கிட்டே நடந்து போனேன்.சில குதிரைகள் என்னை சட்டை செய்யாமல் அவ்வப்போது உடம்பில் எதிர்பாராத இடங்களைச் சிலிர்த்துக்கொண்டு தெய்வமே என்று வண்டிக்காரன் கொடுத்ததை மென்று கொண்டிருந்தன. எல்லாமே கிழட்டுக் குதிரைகள். முதுகெலும்புகள் தெரிய தோள்பட்டையில் தழும்போடு கால்கள் ஜபேட் அடித்து குதிரையா கழுதையா என்று தீர்மானமாக சொல்ல முடியாத அளவுக்கு இருந்தன. அவற்றில் ஒன்று என் முழங்கையைக் கடித்துவிட்டது.

நான் நடந்து கொண்டே இருக்கும் போது முழங்கைப் பகுதியில் சுரீர் என்கிறதே என்று பார்த்தால் குதிரை கடித்து முடித்துவிட்டு என்னைப் பார்த்தது. தொள தொள என்ற உதடுகளுடன் சிரித்தது. நான் 'ஸ்ஸ்ஸ்' என்று முழங்கையைப் பார்ததுக்கொணடு குதிரைக் காரனைத் தேடினால் காணவில்லை. ஒரே ஒரு பையன் எங்கோ பார்ததுக் கொண்டு நின்றான். மறுபடி கடித்துவிடப் போகிறதே என்று விலகி வந்து காலை வெளிச்சத்தில் காயத்தை ஆராய்ந்தேன். லேசாகப் பல்லுப் பட்டிருந்தது.

அது ஒன்றும் நிகழவில்லைபோல் என் மேல் சுவாரசியம் விலகிப் போய் எதையோ மென்று கொண்டிருந்தது.என்னை யாரும் பார்க்கவில்லை.'ச்சே' என்று பொதுப்படையாகத் திட்டிவிட்டு அடிக்கடி காயத்தைப் பார்த்துக் கொண்டே' டெட்டால்' போட்டு அலம்பிக் களிம்பு தடவ வேண்டும் என்று எண்ணிய படி வீட்டுக்கு விரைந்தேன். என் மனைவி வாசலில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.கடைக்குப் போன கணவன் குதிரை கடித்து இத்தனை சீக்கிரம் திரும்பி வருவான் என்று எதிர் பார்க்கவில்லை.



"என்ன வந்துட்டிங்க? அகமத் ஸ்டோர் மூடியிருக்கா?"
"இல்லை வரவழியில.."
" என்ன ஆச்சு? என்ன கையில"
"உள்ள வாயேன் சொல்றேன்"
"என்ன ஆச்சு விழுந்திட்டிங்களா?"
"இல்லை ஆஸபத்திரிக்கு எதிர்ல கதிரை லாயம் இருக்கு பாரு அது வழியா நடக்கறபோது குதிரை கடிச்சுடுத்து"
"என்னது,குதிரையா?"
"ஆமாம்"
"கடிச்சுதா?" மாமனார் உள்ளே வர "அப்பா குதிரை எங்கயாவது கடிக்குமா?" என்று அவரிடம் கேள்வி.
"எதை"
"மனுஷாளைப்பா"
"சேச்சே"
"இதோ உங்க மாப்பிள்ளையைக் கடிச்சிருக்கு"
"அப்படியா, ஆச்சரியமா இருக்கே! என்ன மாப்பிளளை எதாவது அதைப்போய் சீண்டனம் பண்ணேளா?"
"இல்லே ஸார் அந்தப் பக்கமா நடந்து போயிண்டிருந்தபோது லபக்குன்னு கவ்விடுத்து"
"குதிரை லாயத்துக் கெல்லாம் எங்க போறேன். கல்யாணி நீ எதாவது வண்டி கொண்டுவரச் சொன்னாயா?"
"இல்லைப்பா ஸ்டவ்வுத் திரி வாங்கிண்டு வர அகமத் ஸ்டோர்ஸ்க்கு அனுப்பிச்சேன். எதுக்கு நீங்க குதிரை கிட்டல்லாம் போறேள்? அய்யோ நன்னாப்பல்லுப் பட்டிடிருக்கே. விஷப் பல்லா இருந்துடப் போறது. அப்பா அதைப் பாருங்க"
மாமனார் கிட்ட வந்து பார்த்து,"கன்னித்தான் போயிருக்கு. மாப்பிள்ளை நீங்க எதுக்கும் ராயர் கிட்டக் கொண்டு காட்டிடுங்கோ. கல்யாணி, அழைச்சுண்டு போயிடு. ஜட்கா வண்டிக் குதிரையா"
"ஆமாம்"
சற்று யோசித்து"ஜட்கா வண்டிக் குதிரை கடிக்காதே" என்றார் ஜ.வ.குதிரைகளில் டாக்டர் பட்டம் வாங்கினவர் போல். "இந்தக் குதிரை கடிச்சுது ஸார் என்ன பண்ண?" என்றேன்.
"இவருக்கு மட்டும எல்லாம் ஆகும்பா, கணக்கால் அளவுக்கு தண்ணீர் போதும் இவருக்கு முழுகிப்போய்டுவார்.இப்படித்தான் திருச்சினாப்பள்ளியில உய்யக் கொண்டான் வாய்க்கால்ல.."

"சரிதான் நீ ஆரம்பிக்காதே" என்று அதட்டினேன்.
"எதுக்கும் டாக்டர் ராவ் கிட்ட கொண்டு காட்டிடறது நல்லது" என்றாள். எனக்கும் காயத்தைப் பார்த்ததில் அபபடித்தான் பட்டது.ஆனால் இதை டாக்டரிடம் எப்படிச் சொல்லப் போகிறேன் என்று கவலையாக இருந்தது.

நரஹரி ராவ் எங்கள் குடும்பத்து டாக்டர் . அறுபது வயசானாலும் நல்ல ப்ராக்டிஸ், நாங்கள் போனது காலை வேளையாக இருந்தாலும் நல்ல கூட்டம்.குழந்தைகளும் தாய்மார்களும் க்ளார்க்ககுகளும் மப்ளர்காரர்களுமாக அடைத்துக் கொண்டு காத்திருந்தார்கள்.சின்ன இடம் அதில் பாதி தடுத்து நரஹரிராவ் உள்ளே உட்கார்ந்துகொண்டு யாரையோ 'ஆ' சொல்லிக் கொண்டிருப்பது பனிக் கண்ணாடியில் குழப்பமாகத் தெரிந்தது. எங்களுக்கு உட்கார இடம் இல்லை. அடுத்த முறை பையன் வெளியே வந்தபோது கல்யாணி "இந்தாப்பா டாக்டர் கிட்ட சொல்லு அவசரமா பார்க்கணும்னு" என்றாள்.

"எல்லாருக்குந்தாம்மா அவசரம்"
"இல்லைப்பா இவரை குதிரை கடிச்சுடுத்துப்பா. ரத்தமா கொட்டறது பாரு "என்றாள்.
"கல்யாணி! என்ன சொன்னே? சரியாக் காதுல விழலை குதிரையா?"
"ஆமாம் மாமி. போயும் போயும் குதிரை கிட்ட கடி பட்டுண்டு வந்திருக்கார். என்னத்தைச் சொல்லி மாள?"
"குதிரை வளக்கறிங்களா?"
"அதுங்கிட்ட எதுக்குப் போனார்?
" எல்லோரும் என்னையே பார்த்தார்கள்.
"உள்ளே வாங்க கிச்சாமி" என்றார் டாக்டர். "என்ன குதிரை கிட்டல்லாம் போய் விளையாடிண்டு இந்த வயசில"
"டாக்டர் அது வந்து ஆஸ்பத்திரிக்கு எதிர்த்தாப்பல நடந்து போயிண்டிருநதேனா.." என் கதையைத் தணிந்த குரலில் சொன்னேன்." டாக்டர் அதுக்கு எதாவது விஷப் பல்லு இருக்குமா" என்றாள் கல்யாணி இடையே.
"தெரியலைம்மா. இருக்காதுதான். ஆனா கல்யாணி நானும் இதே மில்கார்னர்ல முப்பது வருஷமா ப்ராக்டிஸ் பண்ணிண்டிருக்கேன்.குதிரை கடிச்ச கேஸை இப்பதான் முதல்ல பார்க்கறேன்" என்றார்.
"என்ன பண்றது டாக்டர்? ஆக்ஸிடெண்ட்டுக்குன்னே பொறந்தவர் இவர்.ஸ்கூட்டர் ஓட்டக் கத்துக்கறேன்னு ஸ்கூட்டரை ஸ்டாண்டில இருந்து எடுக்கறதுக்கு முன்னாடியே ஆக்ஸிடெண்ட் பண்ணிட்டார்.தொப்புன்னு போட்டுண்டு கீழே விழுந்தார். கால்ல பாருங்ஙகோ தழும்பு" டாக்டர காயத்தை கவனித்தார். "வலிக்கிறதா? இருங்க காட்டரைஸ் பண்ணிடறேன்" என்று குட்டியாக இருந்த ஸ்பிரிட் அடுப்பைப் பற்ற வைத்து விட்டு அலமாரியிலிருந்து தடிமனான ஒரு புத்தகத்தைப் பிரித்து அதன் பின் அட்டவணையில் குதிரை, குதிரைக் கடி என்று தேடினார்.
"ம் ஹூம் டெக்ஸ்ட் புக்லயே இல்லை. எதுக்கம் கவலை படாதங்கோ சீட்டு எழுதிக் கொடுக்கறேன். நேரா ஆஸபத்திரிக்குப் போய் இன்ஜெக்ஷன் ஒரு கோர்ஸ் ஆரம்பிச்சுடுங்கோ இப்பவே"என்றார்.
"அந்த இன்ஜெக்ஷனை இங்கேயே போட்டுண்டடுடலாமே டாக்டர்"
"எங்க கிட்ட ஸீரலம் கிடையாது, ஆதுவும் இல்லாம டாக்டர் கோபி எல்லாம் தேர்ந்தவர். அவர் பார்த்து தேவைப் பட்டுதுன்னாத்தான் ஊசி போட்டுக்கணும். இப்ப காட்டரைஸ் பண்ணி அனுப்பிச்சுர்றேன்" என்று சொல்லிவிட்டு கொஞ்ச நேரம் சிரித்துவிட்டு "குதிரை" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு"டாக்டர் கோபிக்கு லெட்டர் கொடுக்கறேன் உடனே போம்" என்றார்.
ஆஸபத்திரியை நோக்கி நடக்கும்போது ஒரு மாடு கிழிசல் பனியனை மென்று கொண்டிருந்தது. "பாத்து வாங்கோ .இது வேற கடிச்சு வெக்கப்போறது" என்றாள் கல்யாணி.
"என்ன கல்யாணி சொல்றே? வேணும்னுட்டா கடிச்சுப்பா?"
"வேணுமோ வேணாமோ நம்மாத்தில மட்டும்தான் இந்தமாதிரியெல்லாம் நடக்கறது. டாக்டர்

சொன்னார் பாருங்கோ"
"எல்லாம் எனக்கும் கேட்டுது. அதபாரு குதிரை கடிக்காதுதான் என்னைக் கடிச்சுடுத்து என்ன பண்ணச் சொல்றே ? ஏன் கடிச்சேன்னு வேணா விசாரிச்சுன்டு வரட்டுமா?"
"வேண்டாம். மறுபடியும் கடிச்சு வெக்கப் போறது. கடிக்கறதுன்னா அந்தப் பக்கம் ஏன் போகணும்?"
"குதிரை கடிக்கும்னு யாருக்குடி தெரியும் மூதேவி!"

நடுரோடில் எங்களை வேடிக்கை பார்கக கூட்டம் கூடிவிடவே நாங்கள் கலைந்து நடந்தோம்.ஆஸபத்திரியில் டாக்டர் கோபிநாத்தைத் தேடிக்கொண்டு சென்றேன்.நீண்ட பெஞ்சு போட்டு பலபேர் உட்கார்ந்திருந்தார்கள். கல்யாணி இங்கே வந்து "குதிரை கடித்துவிட்டது" என்று இரைந்து கூறி சலுகை கேட்கப் போகிறாளே என்று பயமாக இருந்தது.ஆககால் கல்யாணி பேசாமல்தான் உட்கார்ந்தாள்.அங்கே உட்கார்ந்திருந்தவர்களை விசாரித்ததில் பெரும்பாலோர் நாய்க்கடிக் காரர்கள் என்று தெரிந்தது. அங்கங்கே ஒன்றிரண்டு எலி தேள் இருந்தன. எல்லாருடைய சீட்டுகளிலும் நாய் நாய் என்றுதான் எழுதியிருந்தது.அங்கே அருந்த சிப்பந்தி அவற்றை அடுக்கி வைக்கம் போது என் சீட்டு வந்தபோது மட்டும மயங்கினான்.

"குதிரை! இங்க யாருப்பா கிருஷ்ணசாமி"
"கிருஷ்ணசாமி நான்தான் "என்றேன்.
"உங்க டிக்கெட்டில் தப்பா போட்டிருக்கு குதிரை ன்னு. கொஞ்சம் திருத்திக் கொடுக்கறிங்களா"
"இல்லை ஸார் என்னை குதிரைதான் கடிச்சிருக்கு"
இப்போது அத்தனை பேரும் திக்கித்துப் போய் என்னைப் பார்க்க, சிப்பந்தி உடனே உள்ளே போய் கோபிநாத்திடம் சொல்ல "கூப்பிடு உள்ளே அவரை முதல்ல" என்றார்.
"வாங்க உக்காருங்க. ராயர் போன் பண்ணிச் சொன்னார். நீங்கதானா அது? குதிரை எங்கே கடிச்சுது உங்களை?"என்று விசாரித்தார்.
"ஆஸ்பத்திரிக்கு எதித்தாப்பல ஸ்டாண்டு இல்லை? அங்கே"
"அதைக் கேக்கலை.உடம்பில எந்த பாகத்தில?"
நான் என் கைச்சட்டையை வழித்துக் காட்டினேன்."காட்டரைஸ் பண்ணாரா?"என்று அலமாரியிலிருந்து தடியான புத்தகம் ஒன்றை எடுத்தார்.
"அந்தப் புஸ்தகத்தில் 'குதிரைக்கடி' கிடையாது டாக்டர்"என்றாள் கல்யாணி.
"எப்படிச் சொல்றிங்க?"
"டாக்டர் ராவ் பார்த்துட்டார்"
"மிஸடர் கிருஷ்ணசாமி ஒண்ணு பண்ணலாம் நான் குதிரை கடிச்ச கேஸை இதுவரை ட்ரீட் பண்ணதில்லை எதுக்கு ரிஸ்க் எடுக்கணும். ஒரு ஷார்ட் கோர்ஸ் ஆரம்பபிச்சுர்றேன் ஸ்ப்க்யுட்டேனியஸ்ஸா.."
"டாக்டர் உயிருக்கு ஆபத்து எதும்ம இல்லையே?"
"சேச்சே பயப்படாதிங்கம்மா.மிஸ்டர் கிருஷ்ணசாமி எதுக்கும் ரெண்டு மூணுநாள் அந்தக் குதிரையை வாட்ச் பண்ணிக்கிட்டு இருங்க.செத்து கித்து வெக்குதான்னு.
எந்தக் குதிரை கடிச்சுது ஞாபகம் இருக்குமோல்லியோ?"
"ம்" என்றேன் சந்தேகமாக
"மூணு நானைக்கு எதுக்குப் பார்க்கணும்" என்றாள் கல்யாணி.
"அதுக்கு வெறி கிறி எதாவது பிடிச்சிருந்தா செத்துப்போய்டும் . அது உயிரோட இருந்தா கவலைஇல்லை.எதுக்கும் பயப்படடிதிங்க ரிஸ்க் எடுத்துக்காம கோர்ஸை ஆரம்பிச்சுர்றக்ஷன். தினம் காலை இந்த வேளைக்கு வந்துடுங்க என்ன ?"
"பகவானே என்ன க்ஷசொதனை பாத்திங்களா?" என்று புலம்பிக்கொண்டே வெளியே வந்தாள் கல்யாணி.வந்ததும் அங்கே உட்கார்ந்திருந்தவர்களிடம சட்டென்று பேச்சு நின்று போய் ஒரு சிலர் உள்ளங்கையால் வாயை மறைத்துக்கொண்டு பக்கத்தில் இருப்பவரிடம் என்னைக் காட்டிப் பேசுவதை கவனித்தேன்.

முதுகில் கூட அவர்களது பார்வை பட்டது. திடீரென்று திரும்பி 'குதிரை கடிச்சா என்னய்யா?" என்று சத்தமாகக் கேட்க நினைத்தேன். ஆஸ்பத்திரியை விட்டு வெளியே போகும் போதே குதிரையை ஒரு நடை விசாரித்து விட வேண்டும் என்று கல்யாணி சொன்னாள். எனக்கு அது தேவையாகப் படவில்லை. இருந்தும் அங்கே போனோம்.
"குதிரையை ஞாபகம் இருக்கோல்லியோ?" என்றாள்.
"இருக்கும்னு நெனைக்கிறேன்.நெத்தில டைமண்ட் ஷேப்பில வெள்ளையா ஒரு திட்டு இருந்ததா ஞாபகம்."



லாயத்துக்குப் போனபோது ஏறக்குறையக் காலியாக இருந்தது. சிறுவன் மட்டும் காலை ஆட்டிக்கொண்டு பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தான். "ஏம்பா எல்லாக் குதிரையும எங்கே?"
"எல்லாம் சவாரி போயிருக்குதுங்க. கொச்ம் இருங்க வந்துடும். பாடி கொடுத்துட்டாங்களா"
"பாடியா?"
"இவன் என்ன சொல்றான்" என்றாள் கல்யாணி.
"ஏம்பா இந்த அடத்தில எத்தனை குதிரை இருக்கு?"
"ஏங்க எதாவது எலக்சனா? குதிரைச் சின்னத்தில் நின்னறிங்களா? ஊர்கோலம் போகணுமா? எத்தனை குதிரை வேணும்?"
"ஒரே ஒரு குதிரைதாம்பா. நெத்தில டைமண் மாதிரி இருக்கும்"
"கரீம்பாய் குதிரையை சொல்றிங்க. இதோ இப்ப சவந்துடுங்க. கபர்ஸ்தான் போயிருக்குது"
"அது உயிரோட இருக்கில்லே?"
"இல்லாம,பின்ன?"
"நல்லது" என்று புறப்பட்டு வந்துவிட்டோம்.
"தினம் ஆஸ்பத்திரிக்கு வர வழியில ஒரு விசை குதிரையை விசாரிச்சுண்டு வந்துருங்கோ" என்றாள் கல்யாணி.
மறுதினம் ஆஸபத்திரிக்குப் போகிற வழியில் என்னைக் கடித்த குதிரையை மறுபடி சந்தித்தேன் அந்தப் பையன்தான் " கரீம்பாய் கல் பூச்சானா? ஓ ஆத்மி ஆயா " என்றான். கரீம்பாய்க்கு காலையிலேயே கண்கள் கலங்கியிருந்தன. என்னைப் பார்தது, "என்ன சாமி நம்ம சுல்தானைப் பத்தி விசாரிச்சிங்களாமே?"என்றான்.நான் கிட்டப்போய்ப் பார்த்ததில் என்னைக் கடித்த குதிரை அதுதான் என்று தெரிந்துபோய்விட்டது. "பாய்! இந்தக் குதிரை நல்லாத்தானே இருக்குது? உயிரோடதானே இருக்குது?"
சேணம் எல்லாம் கழற்றிப் போட்டு எண்ணெய் தேய்த்துக் கொள்வதற்கு முன்பிருக்கும் நங்கை போல் இருந்தது.
"ஏன் சாமி"
"நேத்திக்கு இது என்னை கடிச்சிடுச்சுப்பா. குதிரை உயிரோடதான் இருக்கான்னு தினம் பார்க்கச் சொல்லியிருக்கார் டாக்டர்"
"கடிச்சுதா? அதெல்லாம் செய்ய மாட்டானே நம்ம சுல்தான், க்யூன் சுல்தான் ஸாப்கோ காட்டா?" குதிரை "பிஹிர்ர்ர்" என்றது. "என்னா குதிரைங்க இது?" என்று அதன் கழுத்தருகில் சொரிந்து கொண்டே சொன்னான். "ரேக்ளா ரேஸ்ல எல்லர்ம ப்ரைஸ் வாங்கிருக்கு. க்யுன் சுல்தான்?"
"பிஹிர்ர்ர்"
"ஏதோ சௌக்கியமா இருந்தா சரி. அதோ பார் முழங்கையைக் கடிச்சுடுச்சு. தினப்படி ஊசி

போட்டுக்க வேண்டியிருக்கு. குதிரையைக் கட்டுப் படுத்தி வெச்சுக்கக் கூடாதாப்பா?"
"ஊசி போட்டுக்கறியலா?" என்று சுல்தான் போலவே சிரித்தான்.
"எதுக்கு? குதிரை கடிச்சதுக்கா? இத பாரு."என்று தன் கையைக் காண்பித்தான்.
"எத்தனை தடவை புல் குடடுக்கறப்ப கொள் கொடுக்கறப்ப சுல்தான் என்னைக் கடிச்சிருக்கான் தெரியுமா? ஊசியா போட்டுக் கிட்டேன்? க்யூன் சுல்தான்?"
எதற்கும் நான் ரிஸ்க் எடுத்துக் கொள்ளவில்லை.ஆஸ்பத்திரிக்குப் போகும் போதெல்லாம் சிப்பந்திகள் குதிரைக்காரர் வந்துட்டாரு" என்று பேசிக்கொண்டாலும், எதிர் வார்டிலிருந்து நண்பர்களையெல்லாம் கூட்டி வந்து என்னைக் காட்டினாலும், வீட்டில் கல்யாணியின் பல உறவினர்கள் பேருக்குப் பேர்"குதிரை கடிச்சுடுத்தாமே " என்று விசாரித்தாலும் மதிக்காமல் பிடிவாதமாக சிகிச்சைக்குச் சென்றேன்.சில நாட்களில் காயம் ஆறிவிட்டது. ஆனால் அந்த சம்பவத்துக்குப் பின் என் பெயர் மாறிவிட்டது 'குதிரைக் கிச்சாமி' என்று.

ஊருக்கு ஊர் கிச்சாமி இருக்கிறார்கள், ஆனால் நாட்டில் ஒரே ஒரு 'குதிரைக் கிச்சாமி' நான்தான் என்பதில் ஒரு அற்ப சந்தோஷம்.

Author's note on this story.
This is also one of my much anthologised stories. Published in `Kalaimagal` Deepavali issue 1983 first, its Hindi translation appeared in a Sahithya Academy collection of Indian short stories. This experience was narrated by my cousin in Bangalore who was actually bitten by a horse. More than the bite the disbelief of the people that a harnessed city horse can bite, was described humourously by him. That gave me the idea for the story. The descriptions are a mixture of the horsecart stands, invariable features in front of many municipal hospitals I have seen in Trichy and other places.

A note on Madan the illustrator
My association with Madan the `Inai Aasiriyar` of Vikatan spans more than a decade. He is more than a cartoonist and illustrator. He is a versatile writer, a very well read thinker and a delightful conversationalist with a glint of humour in his eyes. He makes the whole Tamil nadu laugh but it is difficult to make him laugh though I have succeeded in extracting a chuckle or two from him occasionally. My collaborative effort with him in `Junior Vikatan` called `Een etarku Eppadi` was a delightful experience , Madan providing ideal editorial support which created minor history in popularising science in Tamil and got me a national award.

## 7. மூன்று கடிதங்கள்

### கடிதம்-1

"அன்புள்ள திரு சுஜாதா அவர்களுக்கு,
வணக்கம்.இது ஒரு எழுத்தாளருக்கு நான் எழுதும் முதல் கடிதம் என்பதால் ஒரு சிறு அறிமுகம்.என் பெயர் ஆர் மீனாட்சி சுந்தரம்.ICWA இண்டர் முடித்து விட்டு ஒரு தனியார் நிறுவனத்தின் அக்கவுண்ட்ஸை கவனித்துக் கொண்டிருக்கும் 33 வயது இளைஞன்! என் தந்தை தங்கள் கதைகளைப் பற்றி நிறையச் சொல்லுவர். அவர் பாதுகாத்து வைத்திருந்த'நில்லுங்கள் ராஜாவே'என்கிற கதைதான் நான் படித்த முதல் சுஜாதா கதை.தொடர்ந்து படித்தும் வந்திருக்கிறேன்.

எப்போதும் தங்களுக்கு எழுத வேண்டும் என்று தோன்றியதில்லை.'மீண்டும் மத்யமர்' என்ற பொதுத் தலைப்பின் கீழ் தாங்கள் எழுதிய பதினோரு கதைகளைப் படிக்கும் வரை.சில கதைகள் எனக்குப் பிடித்திருந்தன. தாங்கள் 'மத்யமர்' என்று குறிப்பிடுவது யாரை? அதற்கான தகுதி எனக்கு இருக்கிறதா? தெரியவில்லை.மாத வருமானத்தால் சொல்லவில்லை நீங்கள் என்பது தெரிகிறது.ஒருவித மனப்பாங்கைத்தான் குறிப்பிடுகிறீர்கள் என்று நினைக்கிறேன்.'மிடில் க்ளாஸ் மெண்டாலிட்டி' என்று இங்கிலீஷில் சொல்வதற்கு ஈடாக என எண்ணுகிறேன். அந்தத் தகுதியில் நான் ஒரு மிடில்க்ளாஸ் கணவன்தான்.மனைவியிடம் கோபிக்கும், சண்டை போடும், சந்தோஷமாகப் பேசும் கணவன். டீவி பார்ப்பதில் ஈடுபாடுள்ளவன். அறிவு ஜீவிப் பசாங்குகள் எதுவும் இல்லாதவன். வைரமுத்துவின் வரிகளுக்கு மயங்குகிறவன். பட்டுப்புடவை பாத்திரம், சௌபாக்கியா வெட்கிரைண்டர் போட்டிகளில் கலந்து கொள்வேன்.நான் இறந்து போனால் எந்த சரித்திரமும் எனக்கு இடம் கொடுக்காது. அப்படிப் பட்டவன்தானே உங்கள் மத்யமன்?

ஆனால் நான் சரித்திரத்தில் இடம் பெறுமாறு ஒரு காரியம் செய்துவிட்டேன்.அதை உங்களிடம் சொல்லி எனக்கு உரிய இடத்தை எடுத்துக் கொள்ளவே ஏன், பிடுங்கிக் கொள்ளவே இந்தக் கடிதம்.இதைப் படித்த பின் நீங்கள் என் கதையை எழுதத் தீர்மானிக்கலாம்.எனக்கு சமீப காலத்தில் ஏற்பட்ட ஒரு மிகப் பெரிய,அதிர்ச்சி என்பதா ,ப்ரச்னை, மனஉளைச்சல் என்பதா? சங்கடம் என்பதா? அதை நான் சமாளித்ததுதான் இந்தக் கடிதத்தின் விஷயம். தற்கொலையை நாடும் அளவுக்கு சென்ற தீவிரமானது.

பொதுவாக இந்த வகைக் கடிதங்கள் உங்களுக்கு அவ்வப்போது வரும்.'அவைகளுக்கு நான் பதில் அளிப்பதே இல்லை. மற்ற பேரிடம் கதை கேட்டு அப்படியே எழுதுவதை நான் விரும்பாதவன். எனக்கு நான் கேட்கும் பார்க்கும் அனுபவிக்கும் சம்பவங்களின் வினோதக் கலவையைத்தான் எழுத விருப்பம்.வரிக்கு வரி மற்றொருவர் கதையைப் படியெடுக்க எனக்குப் பிரியமில்லை!'என்று நீங்கள் ஒரு முறை எழுதியிருக்கிறீர்கள்.(நீங்கள் பெரிய பத்திரிகைகளில் எழதியது அத்தனையும் படித்திருக்கிறேன்.'கணையாழி' போன்ற பத்திரிகைகளை நான் படிப்பதில்லை.) ஆனால் பதில் போடாவிட்டாலும் ஒரு நாள் என்னைப் பார்க்க வருவீர்கள் என்பது எனக்கு உறுதியாகத் தெரியும்.பீடிகை போதும் என எண்ணுகிறேன். இனி 'ஹிந்து' நாளேட்டின் இருபதாம் தேதி மூன்றாம் பக்கத்திலும், தினத்ந்தி. தினகரன்,தினமலர் தினமணி போன்றவைகளில் முதல் பக்கத்திலும் வெளியான செய்தியை நீங்கள் பார்த்திருப்பீர்களோ அல்லவோ. `woman gangraped` என்று ஹிந்து Today's engagements' அருகில் வெளி வந்திருந்தது.அந்த சம்பவத்தில் பலாத்காரம் செய்யப்பட்டு மனதிலும உடலிலும் கலைக்கப் பட்டவள் என் மனைவி.

நீங்கள் இந்த அதிர்ச்சிக்கு தயாராக இல்லை தெரியும். அதற்காகத்தான் பலத்த பீடிகை! 'ஒரு எழுத்தாளன் கிட்ட வாழ்க்கை சிக்கல்களுக்கு விடை கிடைக்கும்னு நீங்க

எதிர்பார்த்திங்கன்னா ஏமாற்றம்தான்'னு நீங்களே பேட்டில சொல்லியிருக்கிறீர்கள். அதனால் உங்களிடம நான் விடை கேட்கவில்லை.விடை எனக்குப் புலப்பட்டு விட்டது.

விஷயம் ரொம்ப சிம்பிள் ஸார். என் மனைவியை ரெண்டு பேரோ மூணு பேரோ (சரியாகச் சொல்ல மாட்டேன் என்கிறாள்) ரவுடிகள் பலாத்காரம் பண்ணிவிட்டார்கள். அவளுடைய ஆபிசில் ஓவர்டைம் பாழாப்போற ஓவர்டைம் பண்ணிக்கொண்டிருக்கும் போது இந்த கோர சம்பவம் நடந்தது .அப்புறம் என்னுடைய 'மிடில்க்ளாஸ்' மனது இவளை ஏத்துக்க மறுத்தது.டைவோர்ஸ் வரை போய்,அதே சமயம் பாவம் அவ என்ன செய்வான்னு பச்சாதாபமும் மிஞ்சியது.இதான் என் தர்மசங்கடம்.

நான் ஒண்ணும் உத்தம புருஷன் இல்லை. ஒவ்வொருமுறையும் அவளைப் பார்ககறப்ப 'அவங்க தொட்ட கன்னம் தானே இது அவங்க அணைச்ச உடம்பு தானே இது'ன்னு விபரீத எண்ணங்கள்ளாம் முதல்ல தோணும்.சைக்கியாட்ரிஸ்ட்டைப் பார்ததேன்.

விஜயராகவன்னு மாம்பலத்தில இருக்காரே அவரைப் பார்ததேன். அவர் அதை ஒரு விபத்து போல எடுத்துக்கங்க. கார்ல அடி படறதில்லையா, ஒரு கார் விபத்தில் அடி பட்டா என்ன செய்விங்க இந்த மாதிரி எடுத்துக்கங்கன்னாரு. முடியலை.

எப்படி ஸார்? திருமணம் என்பது பவித்ரமான உறவு ஒருவனுக்கு ஒருத்தி என்கிற அஸதிவாரத்தில அமைஞ்சது. சிறுவயசிலிருந்தே தேச்சு தேச்சு மனசுக்குள்ள உருவேத்தப்பட்ட எண்ணத்தை ஒரு நாளில் உதறி எறிஞ்சுட முடியமா? என் ஒய்ஃப் இதை எப்படி எடுத்துக்கிட்டான்னு கேப்பிங்க. மௌனமா இருந்தா. அதைப் பத்தி பேச்சு எடுத்த போதெல்லாம் பக்கத்து ரூமுக்குப்போய் கதவை சாத்திக்கிடுவா.இல்லை சாயங்கால வேளைகளில அழுவா.அவ கூட முழுமையா அதை விவாதிச்சு தீர்வு காண முடியாத ஒரு நிலையில இருந்தேன். நடந்ததை கொஞ்சம் விவரமாவே சொல்றேன். உங்களுக்கு ஒண்ணும் இதில சொந்த ஆர்வமோ எட்டிப் பார்க்சிகற கிறுக்குத்தனமோ இருக்காதுனனு எண்ணிக்கிட்டுத்தான் இந்த அந்தரங்க விவரங்களை உங்களுக்கு(உங்க வாசகர்களுக்கும்) சொல்றேன் .

அவ ஒரு தனியார் மல்ரட்டி நேஷனல் கம்பெனில வேலை பார்க்கிறா.நீங்க இதை எழுதினா பேரை மாத்தித்தான் எழுதுணும்.அதனால கம்பெனி பேர் குறிப்பிட மாட்டேன். பெரிய கம்பெனி.பம்பாய் பார்சிக்காரங்க ஓனர்ஸ்.அவங்க தயாரிக்காத அல்லது விற்காத பொருள்கள் இல்லை.இலமாரில இருந்து சோப்பு, ஷாம்பு, காஸ்மெட்டிக்ஸ், ஸ்கூட்டர், கம்ப்யுட்டர் சமாசாரம் அத்தைனையும் விக்கறாங்க.நிறைய டர்ன ஓவர். நல்ல சம்பளம். போனஸ்.

இவங்களுக்கு ஒரு முறை நான் ஆடிட் போறப்போ பேச்சு வாக்கில ஒரு ரிசப்ஷனிஸ்ட் கம் டெலக்ஸ் ஆப்பரேட்டர் வேக்கன்சி இருக்கறதா தெரிஞ்சு என் மனைவி சும்மாதானே வீட்டில இருக்கிறா..குழநதை இல்லை.. அது வரை போய்ட்டுவான்னு சொன்னேன் இண்டர்வியூவில் கிடைச்சுருச்சசு. சம்பளமும் நல்ல சம்பளம்.எளிதான வேலை, ' 'ஒரு நாளைக்கு முப்பது தடவை ஸ்மைல் பண்ணணும் அவ்வளவுதாம்'பா இனிமையா பேசணும் கூரியர் தபால் வரதையெல்லாம் கையெழுத்து போட்டு வாங்கிக்கணும்.மூணு நாலு டெலக்ஸ் அனுப்பணும் அப்பப்ப ஜெராக்ஸ ஆப்பரேட்டர் வரலைன்னா மானேஜருக்கு காப்பி எடுத்துக் கொடுக்கணும். அதுலதான் வந்தது வினை.

வெள்ளிக் கிழமை மாலை வேளையில மானேஜர் ஒரு முக்கியமான ரிப்போர்டடை ஜெராக்ஸ எடுத்துக் கொடுத்துட்டடுப் போன்னு சொல்லிருக்கார். அன்னிக்குப் பார்த்து பவர்கட்டு ஐந்து மணிக்குள்ள முடிக்க முடியலை.கரணட் வரவரைக்கும் வெயட் பண்ணிட்டு இருந்துட்டு வேலையை முடிச்சுட்டு புறப்படறப்ப ஏழுமணி.

என் மனைவி கொஞ்சம் தளதளன்னு இருப்பா. அடக்கமா டிரஸ் பண்ணிக்கன்னு நிறைய தடவை சொல்லிருக்கேன்.ரிஸப்ஷன் ட்யூட்டியில கொஞ்சம் பளிச்சுன்னு டிரஸ் பண்ணிக்க வேண்டியிருக்கிறதுன்னு திருத்தாம விட்டுட்டேன். அவங்க ஆபிஸ்ல கேஷுவல் லேபர் ங்க உண்டு, ஸ்திரமான வேலையில்லாத சின்னப் பசங்க தினக்கூலில.ஆபீஸ் முடிஞ்சப்புறம் க்ளீன் பண்ண வருவாங்க.அவங்க ரெண்டு பேர் வந்திருக்காங்க. இவ பேப்பர்ங்களை அடுக்கிகிட்டே இருக்கறப்ப அவளை மறிச்சு, நேரா ரிக்கார்டு ரும்ல தள்ளி கதவைச் சார்த்தி, ரெண்டு பேரும் மாத்தி மாத்தி அவளை பலாத்காரம் பண்ணிருக்காங்க.மூணாவது ஒருத்தன் இருந்திருக்கானான்னு அதிர்ச்சியில இவளுக்கு சரியா தெரியலை.வாயைப் பொத்தி மர்ரல முழங்காலை வைத்து அழுத்தி உடைகளை உயர்த்தி...இதுக்கப்புறம் சொல்ல விரும்பலை. அப்படியே அவளை விட்டுட்டுப் போய்டடாங்க .கடிச்சு கிழிச்சு எதிர்த்திருக்கா.சாரியெல்லாம் ரத்தம்.

இது நடந்தது ஏழரை மணி இவ போட்ட கூக்குரல் ட்ராபிக் சப்தத்தில் யாருககும் கேட்கலை.கேட்டிருந்தாலும் மதிக்கலை.பக்கத்திலேயே ஒரு கூரியர் கம்பெனி அங்க மூணுபேர் தபால் பிரிச்சு பைகளைக் கட்டிக்கிட்டு இருந்திருக்காங்க.அவங்க என்னமோ டீவிலதான் சப்தம் வருதுன்னு கவனிக்கலை.

எட்டு மணி வரை நான் ஆபிஸ்ல இருநதேன். அவளை என் மோட்டார் சைக்கிள்ள பிக் அப் பண்ணிக்கும்படி போன் பண்ணிருந்தா.நான் போறேன் மேசையெல்லாம் சிதறியிருக்கு காப்பியிங் மெழிஷினுடைய 'டோனர்' கொட்டி முகமெல்லாம் கறுப்பு.ரிக்கார்டு ரூம்லருந்து முனல் கேக்கறது.போய்ப் பார்தத..(சில விவரங்கள் விடப் பட்டிருக்ககின்றன -சுஜாதா) முதல்ல லேடி டாக்டர் கிட்ட கூட்டிட்டுப் போனேன்.அவங்க எதும் விபரீதமா நடக்கலைன்னுதான் சொன்னாங்க.கேட்ட கேள்வி எதுக்கும் அவளால பதில் சொல்ல முடியலை அந்த டாக்டர் ரொம்ப கோவிச்சுக்கிட்டாங்க.பாதுகாப்பு இல்லாம அவளை ஓவர்டைம் பண்ணச் சொன்ன மானேஜருக்கு போன் போட்டுக் கூப்பிட்டடாங்க. எனக்கும் என்ன செய்யறது இந்த மாதிரி சம்பவத்தை எப்படி அணுகறதுன்னு யோசனையே இல்லை.பிரமிப்பிலதான் இருந்தேன். மனசில இனிமே என்ன? இனிமே என்ன? ங்கற கேள்விதான் பெரிசா விசுவருபம் எடுத்தது.

"அவங்க வந்து.. அவங்க வந்து.. என்னை .. என்னை.." இவ்வளவுதான் சொல்றா நந்தகுமார்னு மானேஜர் வந்து ரொம்ப வருத்தப் பட்டார்.உடனே போலிஸ் கம்ப்ளெயிண்ட் கொடுத்தார்.இதுக்கு பப்ளிசிட்டி இல்லாம பாத்துக்ககறேன்னு சொன்னார். ஆனா நடந்தது வேற .உலகத்தில் உள்ள அத்தனை பத்திரிகைக்காரங்களும் வந்துட்டாங்க.எங்கயோ அவங்களுக்கு மூக்கில வேர்க்கறது.இந்த மாதிரி சம்பவங்கள் எல்லாம அவங்களுக்கு அல்வா மாதிரி.அவளைப் படம்ட எடுக்காம காப்பாத்தறதுக்குள்ளற எனக்கு அப்படியே நரம்பெல்லாம் தளர்ந்து போச்சு.ஒருத்தன் காமிராவைப் பிடுங்கி பிலிமைப் பிச்சுப் போட்டேன். இவங்களுக்கெல்லாம் சம்பவத்தின் பரபரப்புத்தான் முக்கியமே தவிர அதில இருநத பரிதாபமோ அதனால எங்களுடைய வாழ்க்கை எத்தனை சிதறிப் போவுது உடைஞ்சு போன வாழ்க்கையை நாங்க எப்படி பொறுக்கி ஒட்டவைக்கப் போறோம் ங்கற எதைப் பத்தியும் கவலை இல்லாம பெரிசா எட்லைன் ந்யுஸ் போட்டுட்டாங்க.

என்னால முதல்ல செய்ய முடிஞ்சது. கோத்தகிரியில அவ அத்தை வீடு அங்க போய் விலவு எடுததுக்கிட்டு பரபரப்பு அடங்கியதும் வந்தோம். அந்தப் பையன்களைக் கண்டு பிடிச்சுட்டாங்க.என் மனைவியை அடையாளம் காட்டச் சொன்னாங்க. நீங்க 'இருள் வரும் நேரம்'ல எழுதின மாதிரி எந்த வக்கீலும் எங்களை வந்து தொந்தரவு செய்யலை.போலிஸ் ஸ்டேஷன் போய் அவங்களை தெளிவா அடையாளம் காட்ட முடிஞ்சுது.திருதிருன்னு முழிச்சுக்கிட்டு ஒருத்தனுக்கு பத்தொம்பது வயசிருக்கும்.மத்தவனுக்கு இருபத்தஞ்சு . இன்னொருத்தனுக்கு மீசை கூட முளைக்கலை. அவங்களுடைய அப்பா அம்மா வந்து 'நல்லாத்தானேங்க வளர்ததோம் ' என்று அங்கலாயத்தது எல்லாம் எனக்கு தற்காலிகமான

ஆரவாரங்கள்தான்.இந்த சம்பவத்தின் பின்னால் என் மனைவிக்கும் எனக்கும் என்ன உறவு தொடர்வதுஙகறதுதான் பெரிய ப்ரச்னையாயிருந்தது.நடந்ததுக்கு யாரைக் குற்றம் சொல்றது? விதியையா? சமூகத்தையா? எப்படியும் என் மனைவியைக் குற்றம் சொல்ல முடியலை.

இருந்தும் தனி ரூம்ல படுத்துக்க விரும்பினேன்.அவ மனசை அது என்ன பாடு படுத்தியிருக்கும்னு தெரியாமல் கேனத் தனமா நடந்துண்டேன் .ஆண் என்கிற ஈகோ காயம் பட்டு விட்டது. எதுக்கெடுத்தாலும அவ மேல எரிஞ்சு விழுந்தேன்."பாத்தா வத்தக் குச்சி மாதிரி இருந்திருக்கான்.மண்டைல ஒரு பேப்பர் வெய்ட்டையாவது எடுத்துப் போடறது.பேப்பர் கத்தியை எடுத்துக் குத்த வேண்டியதுதானே? பே ன்னு பாத்துக்கிட்டு இருந்தியா.." இப்படி யெல்லாம் அவகிட்ட பேச ஆரம்பிச்சேன்.

லேடி டாக்டர் இசகுபிசகா எதும் நடக்கலை. சேதம் இல்லை முழங்கால்ல கொஞ்சம் சிராய்ப்பு அரை குறையா முயற்சி பணிணிருக்காங்க ஆளரவம் கேட்டு ஓடிப் போயிருக்காங்கன்னு சொன்னாலும்... உடல் காயத்தை விட மனக்காயம் தான் அதிகம். துவங்கினது என் உள் மனப் போராட்டம் அவளுக்கு ஆறுதல் சொல்றதுக்கு பதிலா அவளை எப்ப அணுகறபோதும நான் அவளைப் பார்க்கிற பார்வையே வேற மாதிரி ஆய்டுத்து. ஒரு மனசு அவளை டீஸ் பண்ணக் கூடாது ஆதரவா,ஆறுதலா ஏதாவது பேசுன்னு சொன்னாலும் மற்றொரு நெருப்பு மனசு சந்தர்ப்பம் கிடைச்ச போதெல்லாம் அவளை சீண்டிக் கொண்டே இருந்தது. அவளுக்கே ஒரு நாள் தாங்காம"ஆமாம் நான் களங்கப் பட்டுட்டேன் என்னைப் பிடிக்கலைன்னா தள்ளி வெச்சுருங்க .நான் கோத்தகிரிக்குப் போறேன்,எங்கயாவது" என்று சொல்லிப் புறப்பட்டுப் போய்ட்டா. தனிமையில இருக்கறப்ப மனோகர்னு ஒருத்தரை சந்திச்சேன் நிறைய படிச்சவர்.அவர் கீதை படிக்கச் சொன்னார். உங்க 'எப்போதும பெண்'புத்தகத்தையும படிச்சேன். அதில சொல்லிருக்ககிற ஒரு கருத்து என்னை பாதிச்சுது.'ஒரு பெண்ணுக்கு மணவறையில் கணவன் கூட நிகழ்வது கூட ஒரு பலாத்காரம்தான்.அவளை அறியாச் சிறுமியிலிருந்து ஒரு மனைவியாக மாற்றும் செயலில் அடிப்படையாக அவள் கன்னிமையை உடைக்கும் ஒரு பலாத்காரம் நிகழத்தான் செய்கிறது.அது மெல்ல மெல்ல நிகழ்வதில்லை. கொடூரமாக ஒரு திரை கிழிக்கப் படும்போது அவள் ஒரு புதிய உலகிற்குள் திணிக்கப் படுகிறாள்.'என்று எழுதியிருந்திங்க.பெண் பெண்மை என்பதன் மேல் ஒரு பச்சாதாபம் ஏற்பட்டது. கீதையில் பலவிஷயங்கள் எனக்குப் புரியவில்லை. இருந்தும் நிஷ்காம்யகர்மா என்கிற தத்துவம் மட்டும எனக்கு ஒரு விதமான நிம்மதி தந்தது. மிகுந்த சிந்தனைக்குப் பின் ,திருவிழாக் கூடடத்தில் இடிபடும்போது என் மனைவி பிறர் மேல் பட்டதில்லையா? தொடடதில்லையா டாக்டர தொடறதில்லையா தம்பி, அவ கஸின்ஸ் எல்லாம் தொட்டதில்லையா?மூன்று பேர் அவளைத் தாக்கினதால அவள் உள் மனத்தின் புனிதம் எந்த விதத்தில் பாதிக்கப் படுகிறது? அவள் அழகு குறைந்து விட்டதா? கண்களில் ஒளி மங்கி விட்டதா? சிக்கலான சமூக அமைப்பில் நகர வாழ்க்கைக்கும் நெருக்கடிக்கும் ஏழைமைக்கும் கொடுக்கும் விலை இது. சம்பவம் திரும்ப நிகழாமல் பாதுகாக்க வேண்டும் அவ்வளவுதான்.அதனால் அவளுடன் நான் கழித்த அத்தனை இன்பமான வேளைகளை மொத்தமாக ஒதுககிவிட்டு என்னை நானே வருத்திக் கெகாள்வது விவேகமல்ல.அறியாமை என்று அவளை கோத்தகிரி போய் திரும்ப அழைத்து, ஒரு நீண்ட மௌனமான நடைக்கு அப்புறம் "போனால் போகிறது இனிமே நான் அதைப் பத்தி பேசவே மாட்டேன் என் தாய் மேல் ஆணை" என்று பெரிதாகச் சொன்னேன்.
"என்னை மன்னிச்சுடுங்க" என்றாள்.
"பைத்தியமே மன்னிக்க வேண்டியது நீ என்னை.நான்தான் கிறுக்குத்தனமா நடந்துக்கிட்டேன்" என்றேன்.
என் மனைவிக்கு நிகழ்ந்தது களங்கமல்ல ஒரு விபத்து என்ற ஞானோதயம் வரும் வரை நான் ஒரு மத்யமனாக இருந்தேன். இப்போது? இதைத்தான் உங்களிடம் கேட்கத் தோன்றியது.

இப்படிக்கு அன்புடன்,
ஆர் மீனாட்சி சுந்தரம்.

* * * * *

**கடிதம்-2**

சென்னை 18
10-3-97
அன்புள்ள மீனாட்சி சுந்தரம்,

தங்கள் கடிதம் கிடைத்தது. நிச்சயமாகத் தாங்கள் செய்த காரியம் தங்கன் மனைவிக்கு நேர்ந்த விபத்தைப் பற்றித் தங்களுக்கு ஏற்பட்ட விவேகம் தங்களை 'மத்யமர்' அல்ல உத்தமர் என்று காட்டுகிறது எல்லா சாதாரண மனிதர்களிடமும் சில அசாதாரண குணங்கள் எதிர்பாராமல் வெளிப்படுவதை நான் அறிவேன். அவைகளைச் சிறைப் பிடித்து எழுதுவது ஓர் எழுத்தாளனின் முக்கிய பணி என்று கருதுகிறேன்.உங்கள் கடிதம் அந்தப் பணியை எனக்கு மிக எளிதாக ஆக்கி விட்டது. தங்கள் கடிதத்தை அப்படியே,ஓரிரு காட்டமான வரிகளை மட்டும் நீக்கிவிட்டுப் பிரசுரிக்க விரும்புகிறேன்.தங்களிடமிருந்து ஆட்சேபம் இல்லாத பட்சத்தில். எல்லாக் கணவர்களுக்கும் ஓர் உதாரண புருஷராக அந்தக் கடிதம் உங்களைக் காட்டுகிறது.

அன்புடன்,
சுஜாதா

* * * * *

**கடிதம்-3**

திரு சுஜாதா என்கிற ரைட்டருக்கு

தங்களுக்கு கடுதாசி எழுதிய மீனாட்சி சுந்தரத்தின் மனைவி பவித்ரா எழுதிக் கொள்வது நீங்கள் என் புருஷனுக்கு எழுதிய கடிதம் பார்த்தேன். அதில் அவரை ஓவராகப் புகழ்நதி ருந்திங்க. அவர் செய்த காரியம் ஒரு உத்தம புருஷனின் காரியம் என்று எழுதியிருந்ததைப் படித்தேன். அந்தக் கடுதாசைப் பிரசுரம் பண்ணா மத்த புருஷர்களுக்கு அது வழி காட்டியாக இருககும்னும் எழுதியிருந்தீர்கள் .மன்னிக்கவும்.எனக்கு தமிழ் அத்தனை தெளிவாக வராது.முதல் எட்டு கிளாஸ் நான் கன்னடத்தில் படிச்சேன். அப்புறம்தான் தமிழ். அத்தனை அழகாக எழுத வராது. அவர் நல்லா எழுதுவார். என் புருஷன் உங்களுக்கு என்ன எழுதினாரோ தெரியல்லை. உங்க கடிதம் அகஸ்மாத்தா அவர் ஜோபில இருந்ததை படிக்க நேர்ந்தது. அவருடைய கடுதாசியைப் பிரசுரம் பண்ணும் பட்சத்தில் என் இந்தக் கடுதாசியையும் பிரசுரம் பண்ணவேண்டும் , அதுவே என் தாழமையான விநத்தி. எனக்கு நடந்தது விபத்து என்று என்ன என்னவோ எழுதியிருக்கிறீர்கள்.அவர் என்ன எழுதினாரோ தெரியாது.நடத்நது இதுதான்.நான் வெள்ளிக்கிழமை ஆபிசில் ஓ.டி பண்ணும்போது இரண்டு பேர் என்னை ரேப் பண்ணப் பார்ததாங்க.நான் அவர்களை ஆபிஸ் குப்பைத் தொட்டியை எடுத்துக் கவிழத்து அடித்து கூலர்ல போட்டேன். அவர்கள் என் சொக்காயை(பிளவுசை) கிழிக்க முயற்சி பண்ணார்கள்.பக்கத்தில இருந்த கூரியர் கம்பெனி காரர்கள் சத்தம கேட்டு ஓடிவந்து அவங்களில் ஒத்தனை பிடிச்சாங்க.மத்தவன் ஓடிப் போய்ட்டான்.நான் சுதாரிததுக் கொண்டு ஒரு தம்ளர் தணணி குடிச்சுட்டு என் புருசனுக்கு போன் போட்டு வரவைழைத்தேன்.அவர் வந்ததும் பூமிககும் விட்டத்துக்கும் எகிறினார். கூப்டு மேனேஜரை.லேடி டாக்டர் கிட்ட காட்டணும் .போலிஸ் கம்பளெயிண்ட் கொடுக்கணும்

என்றெல்லாம் பெரிசாக சப்தம போட்டார்.அந்த ராத்திரியிலேயே எல்லா பிரஸ்காரங்களையும் கூப்ட்டனுப்பிச்சார் .போட்டோ எல்லாம் எடுக்க விட்டார்.ஒண்ணுமே விபரீதமா நடக்கலைன்னு சொன்னாலும் அவர் கேட்கவில்லை.'எங்கெல்லாம் தொட்டான்.என்னவெல்லாம் செய்தான்?'என்று அசிங்கமாக எல்லார் முன்னாலும் கேள்வி கேட்டார் மானேஜர் நந்தகுமார் வந்ததும் பெரிசாக சண்டை போட்டார். எனக்கு அப்போதுதான் சந்தேகம் வந்தது .ஒரு வேளை இது எல்லாமே அவர் சூழ்ச்சியா இருககுமோ என்று கூடத் தோணிடிச்சு.அவ்வளவு வெறுப்பேத்தினார்.ஒரு முறை கோபத்தில் கேட்கக்கூடக் கேட்டுட்டேன்.என்னை டிவோர்ஸ் பண்ணணும்னு குதித்தார். ஏதோ மறு கல்யாணத்துக்கு அடிபோடறார்னு நான் எதும் பேசாம கோத்தகிரிக்கு -எங்க அத்தை வீட்டுக்குப் போய்ட்டேன். சின்ன விஷயத்தைப் போய் இப்படி பெரிசு படுத்திறாரே என்று எனக்குப் புரியவில்லை. அப்புறம் திடீர் என்று ஒரு நாள் கோத்தகிரிக்கு வந்தார்.வந்து' என்னை மன்னிச்சுரு நான் செய்தது பூர்த்தி எல்லாம் தப்பு. உனக்கு நேர்ந்தது ஒரு விபத்துதான் அதற்கான மனப் பக்குவம் எனக்கு இது வரை இல்லை.சுஜாதா புக்ஸ் படிச்சேன் தெளிஞ்சுட்டேன்'னு என்ன என்னவோ சமாதானம் சொல்லி வீட்டுக்கு பிடிவாதமாக கூட்டி வந்து இனிமே அந்த பேச்சையே எடுக்க மாட்டேன்னு கைல அடிச்சு அம்மா படத்தின் மேல சத்தியம் பண்ணிச் சொன்னார்.மெட்ராஸ் திரும்பினதும்தான் அவருடைய மனசு மாறினதுக்கு காரணம் புரிஞ்சுது. எங்க ஆபிஸ் மேனேஜர் நந்தகுமார் ரொம்ப நல்லவர். அவர் எனது மன வருத்தத்துக்கு நெகிழ்ந்து போய் மேலிடத்துக்கு சிபாரிசு பண்ணி,பெரிசா லெட்டர் போட்டு ஏழு லட்ச ரூபாய் 'எக்ஸ்கிரேஷியா பேமெணட் ஃபர் மெணட்ல் அகனி'ன்னு காம்பென்சேஷன் சாங்ஷன் வாங்கி எங்க எம்டி ஆதித்யா தஸ்துர் கையெழுத்துப்போட்டு அருமையான ஒரு லெடடரும் என் பேருக்கு செக்கும் வந்தது. அதான் அவர் மனமாற்றத்துக்கு காரணம் ஆகவே அவருடைய லெட்டரைப் போடுவதா இருந்தா இதையும் போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்

இப்படிக்கு
எம். பவித்ரா

Author's note on this story
I wrote a series of twelve stories twice in `Kalki` under the common title மத்யமர் கதைகள் & மீண்டும் மத்யமர் கதைகள் This was the last of the second series This is an illustration of the technique of the `letter narration` There are advantages and disadvantages in this method.Reader participation is very high but we cant have too much of descriptive passages as these will make the letters sound phony. As a matter of fact the first letter is almost a verbatim reproduction of an actual letter I received; the incident was woven into it and the other two letters are imaginary. Many readers felt that they were all real and commented `this man has no time perhaps and hence has sent some of his correspondence as a story` There could be no better tribute :-))

## 8. இடது ஓரத்தில்

அறையில் மங்கலான வெளிச்சம். அதன் நடுவில் ஒரு கட்டில். அந்தக் கட்டிலில் அவள் படுத்திருக்கிறாள். படுத்திருக்கிறாள் என்று சொல்வது தப்பு. மார்பில் கத்தியால் குத்தப் பட்டுத் துவண்டு கிடக்கிறாள்.அவள் அணிந்திருக்கும் நீல நிறப் புடவை கலைந்திருக்கிறது அருகில் அவள் கணவன் குனிந்த தலையுடன் வாயைக் கைக்குட்டையால் மூடிக்கொண்டு சோக உருவமாக நிற்கிறான்.போலிஸ் இன்ஸபெக்டர் கையிலுள்ள நோட்டுப் புத்தகத்தில் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறார். போலிஸ் புகைப்படக் காரர் தன் உதவியாளருடன் எதிர்ச்சுவரில் பதிந்திருக்கும் விரல் அடையாளங்களை ஆராய்ந்து கொண்டிருக்கிறார். இடது ஓரத்தில்...

ராகவனுக்கு மிக அவசரமாக 180 ரூபாய் பணம் தேவையாக இருந்தது. மிக மிக அவசரம்! இதோ நாளைக்கே ஊரிலிருந்து தம்பியிடமிருந்து மணி ஆர்டர் வந்துவிடும்.இன்று சாயங்காலம் எடுத்து நாளைக் காலை திருப்பி விடலாம். இதில் என்ன, முன்னே போட்டு பின்னே புரட்டுகிற சமாசாரம்.

இந்த நம்பிக்கையில் ஆபிஸ் பணம் ருபாய் நுற்றெண்பதை எடுத்து அந்த நீல நிறப் புடவையை வாங்கிவிட்டான்.பளபளக்கும் அதன் அழகில் மயங்கி அவன் மனைவி மோகனமாய்ச் சிரித்தபோது நுற்றெண்பது என்ன ,ஆரத்து எண்ணுறு ருபாய் கூடக் கையாடலாமே என்று தோன்றியது.

மாலை இருவரும் சினிமாவுக்குப் போனபோது எதிரே வந்த ஸர்தார்ஜியைப் பார்த்ததும் சுரீர் என்றது ராகவனுக்கு. ஸர்தார்ஜி..குருநானக்.. குருநானக்கின் பிறந்த தினம்.. நாளைக்குத் தபால் ஆபிஸ் விடுமுறை.

நாளைக்கு மணி ஆர்டர் வராது. ஆபிசில் கையாடிய பணத்தைத் திருப்பி வைக்க முடியாது. ஐயையோ!

சினிமாவில் மனம் எப்படிச் செல்லும் ராகவனுக்கு? எதிரே விசாலமான திரையில் அவனை வேலையைவிட்டு நிக்கிவிட்டதையும் சிறையிலே அடைப்பதையும் படமாகக் காட்டுவது போலிருந்தது! நகத்தைக் கடித்துக்கொண்டான்.

மனைவி "ஏன் ஒரு மாதிரியாக இருக்ககிறீர்கள்" என்றாள், ராகவன் பதில் பேசவில்லை. இடைவேளயின் போது குளிர்பானம் குடித்ததும் சற்று அமைதி ஏற்பட்டது. சாதாரணமாக ஆபிசில் இருபதாம் தேதிக்குப் பிறகு திடீர்ச் செலவுகள் வருவது கிடையாது.மானேஜர் பணம் எதும் கேட்கமாட்டார்.இன்றைக்குத் தேதி இருபத்திரண்டு. முதல் தேதி வரை எப்படியும் சமாளித்து விடலாம். ராகவனுக்கு கொஞ்சம் தைரியம் ஏற்பட்டது.

முதல் தேதியன்றுதான் சம்பளம் கொடுக்குமுன் மேனேஜர் போனமாதக் கண்கைச் சரி பார்ப்பார் ஆனால் அதற்குள் மணி ஆர்டர் வந்துவிடும் இதோ நாளை மறுநாள் வந்துவிடும்! பயப்படாதே நிச்சயமாக பயப்படாதே என்று சொல்லிக் கொண்டான். ரகவனின் துரதிரஷ்டம் மறுதினமோ அதற்கு மறுதினமோ மணிஆர்டர் வரவில்லை. மூன்றாவது தினம் கடிதம்தான் வந்தது. "அண்ணா இந்தத் தடவை நீ என்னை மன்னித்துத்தான் ஆகவேண்டும் உனக்காக அனுப்பப் பணம் வைத்திருந்தது உண்மை. ஆனால் அதற்குள் அம்மாவுக்கு கடும் ஜுரம் வந்து அந்த மைஸின் இந்த மைஸின் என்று மருநதுக்கும் டாக்டருக்கும் செலவாகிவிட்டது அம்மா பிழைத்தது உன் பணத்தால்தான். மன்னித்துக் கொள் மனனித்துக்கொள்."

ராகவன் பதறினான்.

மன்னிப்பு யாருக்கடா வேண்டும்? பாவி, பணம் வேண்டும் பணம். இல்லாவிட்டால் வேலை போய்விடும். சிறை வாசம் கூட நேருமே.இப்போது என்ன செய்வேன் முதல் தேதி மேனேஜர் கணக்குப் பார்கரும் போது உதைக்குமே இருப்பது ஆறு நாள் வேண்டியது நுற்றெண்பது ரூபாய். டென்ஸிங் எவரெஸ்ட்சிகரத்தை எட்டிப் பிடிக்கக் கிளம்பியதுபோல் ராகவன் ரூபாய் புரட்டக் கிளம்பினான்.நான்கு முக்கியமான நபர்களைக் கடன் கேட்க எண்ணினான். அதில் இரண்டுபேர் இவன் போன சமயம் வீட்டில் இல்லை.மூன்றாமவன் ரூபாய் என்றதும் பெரிய ஹாஸ்யத்தைக் கேட்டதுபோல் இடி இடி யென்று சிரித்து விட்டு இல்லை என்பதற்கு அத்தாட்சியாகத் தான் குடிக்கும் சிகரெட் 'ப்ராண்டை'க்காட்டினான் (அந்த வகை சிகரெட் ,மட்டத்திலும் மட்டமாம்!). நான்காவது நண்பன் இவன் கேட்க வாயெடுப்பதற்குள் தானே கேட்டுவிட்டான் ராகவனை. அலுததுப்போய் வீட்டுக்கு வந்ததில் அந்த எண்ணம் உதயமாயிற்று. மனைவியின் சங்கிலியைக் கேட்டோ அல்லது திருடியோ எடுத்துச் சென்று விற்றால்? சே! புடவையை வாங்கிக் கொடுத்து விட்டு சங்கிலியைப் பறிப்பதாவது! முட்டாள்தனம் .வேறு என்ன செய்வது?

தன் அறையில் வந்து உட்கார்ந்து செய்தித்தாளைப் புரட்டினான், உடனே துள்ளினான்.
அந்த இடத்தில்
அந்த வினாடியில்
அவனுக்கு அதிர்ஷ்டம் அடித்தது
செயதித் தாளின் நடுப்பக்கததில் அவன் பார்த்த செய்தி!
'ஆசிரியருக்கு கடிதங்களில் இரண்டாவது கடிதம் தான் அவனைத் துள்ளவைத்தது.
அந்தக் கடிதத்தில்-
"ஐயா

நமது நாட்டின் தலைசிறந்த ஓவியர்களில் ஒருவரான ஜஸ்வந்த் கடந்த மாதம் 13ம் தேதி தன் 53 வது வயதில் மாரடைப்பால் காலமானது யாவரும் அறிந்ததே ஜஸ்வந்த் ஒரு முதல் தர சித்திரக்காரர். அவர் சித்திரங்களில் உள்ள உண்மைத்தன்மை எவரையும் கவரும் ஜஸ்வந்த் தன் இளமைப் பருவத்தில் மிகவும் கஷ்டப்பட்டு வாழ்க்கை நடத்தினார். அப்போது அவர் தமது ஓவியங்கள் பலவற்றை மிகவும் குறைந்த விலைக்கு விற்றிருக்கிறார். அப்படி அவர் விற்றவை இதற்போது யார் யாரிடம் இருக்கிறது என்று கண்டு பிடிக்க முயன்றோம் தோல்வி அடைந்தோம் .அவற்றை எல்லாம் சேகரித்து ஒரு 'ஜஸ்வந்த் நினைவு மலர்' வெளியிட வேணடும என்பதே எங்கள் ஆசை. உங்கள் வாசகர்கள் யாரேனும ஜஸ்வந்தின் ஓவியங்கள் வைத்திருந்து அதை அவர்கள் விற்கத் தயாராக இருந்தால் நாங்கள் மிக மகிழ்சசியுடன் ஏற்றுக் கொள்வோம். நன்கொடையாக வழங்கினாலும் சரி அல்லது விலைகேட்டாலும் வாங்கிக் கொள்கிறோம்.
பி ஜானகிராம்.

கடிதத்தைப் படித்ததும் ராகவன் கூடத்துக்கு ஓடினான். ஆம் அவன் எப்பொழுதோ பத்து ரூபாய்க்கு வாங்கின ஜஸவந்தின் படம் ஒன்று அங்கே மாட்டப் பட்டிருந்நதது. அதைக் கழற்றி ஒரு செய்திததாளால் மூடிச் சுற்றிக்கொண்டான். மாடி வீட்டிற்கு ஓடினான் .அங்கே டெலிபோன் டைரக்டரி இருந்தது. அதிலிருந்து ஜஸவந்த் கழகத்தின் விலாசத்தை தெரிந்துகொண்டு உடனே புறப்பட்டான்.

நுங்கம் பாக்கத்தில் அந்த வீட்டின் கதவைத்தட்டும போது ராகவனுக்கு கை நடுங்கியது பதற்றத்தால். திறந்தவர் ஒரு கண்ணாடி போட்ட வயதானர்.பிரித்துக் காட்டிய சித்திரத்தில் அந்த மனிதர் ஆழ்ந்துவிட்டார். அவர் கண்களில்நீர் தளும்பியது. செக் புஸ்தகத்தை எடுத்து "எவ்வளவு வேண்டும்" என்று கேட்டார்.

"இருநுறு ரூபாய்" என்றான் ராகவன்.
செக் எழுதிக கொடுத்து விட்டு "மிக்க நன்றி இந்த சித்திரத்தை நான் மாதக்கணக்காகத் தேடிக்கொண்டிருகிறேன்" எனறார் ஜானகிராம். செக்கை பையில் போட்டுக் கொண்டு தப்பினேன் என்று சுதந்தரமாக மூச்சுவிட்டான் ராகவன் . பாங்கில் மாற்றிப் பணத்தை எடுத்த இடத்தில் திருப்பினான்.

இனி இந்த மாதிரி வேலையில் இறங்குவதில்லை என்று பளார்பளார் என்று கன்னத்தில் போட்டுக் கொண்டான். சில மாதங்களுக்குப்பிறகு ஜஸ்வந்த் ஞாபகார்த்த மலரின் ஒரு பிரதி ராகவனுக்கு வந்தது. அதில் அவன் விற்ற சித்திரம் அழகாக அச்சடிக்கப் பட்டிருந்தது.

அந்த சித்திரத்தில் -
அறையில் மங்கலான வெளிச்சம். அதன் நடுவில் ஒரு கட்டில். அந்தக் கட்டிலில் அவள் படுத்திருக்கிறாள். படுத்திருக்கிறாள் என்று சொல்வது தப்பு. மார்பில் கத்தியால் குத்தப் பட்டுத் துவண்டு கிடக்கிறாள்.அவள் அணிந்திருக்கும் நீல நிறப் புடவை கலைந்திருக்கிகறது அருகில் அவள் கணவன் குனிந்த தலையுடன் வாயைக் கைக்குட்டையால் மூடிக்கொண்டு சோக உருவமாக நிற்கிறான்.போலிஸ் இன்ஸபெக்டர் கையிலுள்ள நோட்டுப் புத்தகத்தில் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறார். போலிஸ் புகைப்படக் காரர் தன் உதவியாளருடன் எதிர்ச்சுவரில் பதிந்திருக்கும் விரல் அடையாளங்களை ஆராய்ந்து கொண்டிருக்கிறார். இடது ஓரத்தில்...
சாய்வாக ஜஸ்வந்த் என்று கையெழுத்து காணப்படுகிறது

Author's note on this story
I have written more than 150 short stories till now.Many readers ask me which was my first published story. It was in a magazine called `Sivaji` and the year was 1953 when I was 18. I dont have a copy nor do I remember its content.Then there was a long gap I did my graduation , got a job and was posted to Delhi During those worldly pursuits, I didnt write at all. In Delhi one day a friend showed me a short story he had written. It was bad. I rewrote it for him. He sent it in his name and it got published in `Kumudam` I realised for the first time that I had some talent. I wrote some of my own and sent them to `Kumudam` A few got rejected and at last the first one was published.It was August 23.1962 issue of `Kumudam`. Nothing earth-shaking happened It was an ordinary story and is given here just to show that good writers need not always have to arrive with a bang like Arundhati Roy! Perhaps this story can be analysed for some of its early indictors like short sentences. the desire to be clever and the desire to be slightly different from the usual rut Officially this is my first published story.

## 9. யாகம்



சிகாகோவின் ஓ-ஹேர் விமான நிலையத்தில் ப்ளேனைத் தவறவிட்டு நாற்காலியில் உட்கார்ந்த போது அருகில் குடுமி சாஸ்திரியை முதலில் கவனிக்கவில்லை.காசு போட்டுவிட்டு நாற்காலிக் கைப்பிடியிலே இருந்த குட்டி டெலிவிஷனில் ந்யுஸ் பார்த்தேன்.எப்படி இன்னும் ஐந்து மணிநேரத்தைப் போக்குவது என்று கொட்டாவி விட்டு விட்டு மூக்கைத் திருப்பியபோது சந்தன வாசனை கற்பூர வாசனை அடித்தது.பக்கத்தில் பார்த்தால் சாஸ்திரிகள்.அமெரிக்கன் தான். இருந்தாலும் வைதிக சாஸ்திரிபோலக் குடுமி. அதை புதன்கிழமை-புதன்கிழமை சவரம் போலும்.பஞ்சக் கச்சம் கட்டிக் கொண்டு முரட்டு வேஷ்டி கையால் செய்ததாக இருக்க வேண்டும்.கோடிக்கரைத் துண்டைப் போட்டுக் கொண்டு மாராப்பை மூடிக்கொண்டு மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோவிலில் இருந்தால் நம்பக் கூடிய ஆசாமி. சிகாகோவில் என்னைப் பார்த்துச் சிரித்தான் கொஞ்சம் பழுப்பேறிய புஸ்தகத்தில் சமஸ்க்ருதத்தில் படித்துக் கொண்டிருநதான். என்னை மணி என்ன என்று கேட்டான். சொன்னேன்.

"நீங்கள் பாரத தேசமா?" என்றான். ஆங்கிலத்தில்தான்.'இண்டியா'என்ற பதம் உபயோகிக்க வில்லை.
"ஆம்"
"பெயர்?"
சொன்னேன். "நீங்கள்?"
"என் பெயர் மிட்சல். அது பூர்வ ஜன்மத்துப் பெயர். இப்போது பாரத்துவாஜன்"
"இஸ்கான் இயக்கமா?"
"சேச்சே அவர்கள் யாவரும் போலிகள்"(ஃபோனி என்ற வார்த்தையை உபயோகித்தான்)"நாங்கள் தீவிர நோக்கம் உள்ளவர்கள் 'பேக் டு தி வேதாஸ்', வேதங்கள் என்னும் சொத்தைப் பற்றி பாரத தேசத்தவரான உங்களுக்குத் தெரிந்திருக்கும்.ரிக், தைத்திரியம், சாம, அதர்வ வேதம்" "தைத்திரியம் இல்லை யஜுர்" என்றேன்.
"தைத்திரியம் என்பது யஜுர் வேதத்துக்கு வேறொரு பெயர்"என்றான் எனக்குக் கொஞ்சம் வெட்கமாக இருந்தது. "எனகது சம்ஸ்க்ருதம் தெரியாது நான் ஒரு கம்ப்யுட்டர இன்ஜினியர். உங்கள் நாட்டில் பயிற்சிக்காக வந்திருக்கிறேன்
" அவன் சிரித்து" நான் உங்கள் நாட்டுப் புத்தகங்களைப் படித்துக் கொண்டிருக்கிறேன்".
"ஆச்சரியம். இதை ஒரு முழு வட்டம் என்றுதான் சொல்லவேண்டும்.எங்களுக்கு வேதமும் உபநிஷத்தும் உபயோகமில்லாமல் போய்விட்டது. அவைகளை நீங்கள் பிடித்துக் கொண்டு விட்டீர்கள்"
அவன் புன்னகையுடன் என்னைப் பார்த்தான்."நீங்கள்தான் இழந்து விட்டீர்கள்"
"இல்லை .அவையெல்லாம் இன்றைய நடைமுறைக்கு ஒவ்வாதவை. படிக்கலாம் அவ்வளவுதான்" "யார் சொன்னார்கள்? எங்கள் 'பேக் டு த வேதாஸ்'இயக்கத்தில் நடை முறையிலும் வேதங்களின் படி எல்லாமே செய்து கொண்டிருக்கிறோம்"
"இயலாதது"
"நீங்கள் வேதங்களைப் படிக்காமல் எப்படிச் சொல்ல முடியும்?"
"படித்த வரையே சொல்லலாம். இம்பாஸிபிள். வேதங்கள் முழவதும் யாகங்கள் யக்ஞங்கள்தாம்"
"வேதம் முழுதும் என்று சொல்வது தப்பு. வேதம் என்றால் அறிவு.ரிக் வேதம் பல தெய்வங்களுக்குரிய பிரார்த்தனைப் பாடல்களைச் சொல்வது.ஸாம வேதம் இசைப் பொருளை

உணர்த்துவது.யஜுர் வேதம்தான் நீங்கள் சொல்கிற மாதிரியாக விதிகளை உணர்த்துவது இதிலும் கிருஷ்ணயஜுர், சுக்லயஜுர் என்று இரு வகை உண்டு.அதர்வண வேதம் மாந்திரிக வசியக் கிரியைகளைக் கூறுகிறது." அதன்பின் ரிக் வேதத்தில் எத்தனை மண்டலம் எத்தனை சூக்தங்கள் என்று அவன் தீவிரமாக எனக்கு சொல்லத் துவங்கியபோது எனக்குச் சிரிப்பு வந்தது.என்ன ஒரு வினோதமான அபத்தம்.கம்ப்யுட்டர் படிக்க வந்த இந்திய அந்தணனுக்கு அமெரிக்க குடுமி சாஸ்திரி வேதங்களைப் பற்றி ஓஹேர் விமான நிலையத்தில் அத்தனை நவீனங்களுக்கு மத்தியில் ஃபைபர் நாற்காலியில் காசுபோடடு டெலிவிஷன் யுகத்தில்.
"யாகங்களை நடை முறையில் நடத்த முடியாது என்று சொல்வது தப்பு. நாங்கள் எங்கள் வேத புரியில் வாஜஸநேயி ஸம்ஹிதையில் உள்ள நாற்பது பகுதிகளிலும் உள்ள அத்தனை யாகங்களையும் நடத்திக் கொண்டிருக்கிறோம்.அக்னிஹோத்திரம் சாதுர்மாஸ்ய்ம் எல்லாம் செய்கிறோம்."
"வேதபுரியா?"
"ஆம். இங்கிருந்து நாற்பது மைல் துரதில் உள்ளது அதுதான் எங்கள் தலைமைச் செயலகம்" அவன் மறுபடி என்னை மணி கேட்டான். மணிக்கட்டைத் திருப்பி மணி பார்த்து"இன்னும் நாலரை மணி உள்ளது.உங்களுக்கு இஷ்டமிருந்தால் நான் அழைத்துப் போகிறேன். உங்களுக்கு இஷ்டமிருந்தால்தான்!" நான் சற்று நேரம் யோசித்தேன். போய்த்தான் பார்ககலாமே. இந்தக் கண்ணாடிக் கூண்டுக்குள் அடைபட்டிருப்பதை விட இது பராவயில்லை. என்னதான் செய்கிறார்கள் பார்க்கலாம்" "என்ன சிரிக்கிறீர்கள்?"
"நான் ஒரு பிராமணன். என்னைப் போன்றவர்கள் இந்தியக்காடுகளில் செய்யவேண்டிய வேலைகளை ஜெட் வேக நாட்டில் அமெரிக்கரான நீங்கள் செய்கிறீர்கள்"
"தப்பு சிரேளத யாகங்களில் நான்கு வகையான புரோகிதர்கள் பங்கெடுக்க வந்தனர்.ஹோதர், உத்காதர்,அத்வரியு,பிராமணர் என்று" அவனுடைய அமெரிக்க சம்ஸ்க்ருதம் வேடிக்கையாக இருந்தாலும் அவன் என்னைவிட அதிகம், மிக அதிகம் வேதம் படித்தவன் என்பது சுலபமாகத் தெரிந்தது. ஆர்வமான கண்கள். எதையும் தீரக் கற்றுக்கொண்டுவிடும் அமெரிக்க ஆர்வம். அவனிடம் வார்த்தை விடக்கூடாது என்று தீர்மாநினத்தேன். இருந்தும் என்னதான் செய்கிறார்கள் பார்த்துவிடலாம் என்று தோன்றியது."வருகிறேன்" என்றேன். "எங்கள் புருஷமேதத்தில் கலந்துகொள்ள உங்களுக்கு இச்சைதானே" "ஆம்" என்றேன்.
அவன் உற்சாகமாக"வாருங்கள்" என்றான்.
ஏர்போர்ட்டை விட்டு வெளியே வந்தோம் மூடுபனி விலகியதால் நிமிஷத்துக்கு பத்துப் பதினைந்து ப்ளேன்கள் ரன்வேயில் அசௌகரியமாக இறங்கிக்கொண்டிருந்தன. எக்ஸ்ப்ரஸ்வே யில் கார்ச்சங்கிலி தொடுவானம் வரை தெரிந்தது.
"இதிலிருந்தெல்லாம் விலகத்தான் வேதபுரி" என்றான்.அவன் கார் ஏர்போர்ட்டிலிருநது அரைமைல் துரத்தில் எட்டாவது அடுக்கில் பார்க் பண்ணியிருந்தது.காவிக் கலரில் பிடிவி என்றும் ஓம் என்றும் எழுதியிருக்க சீட் கவர்கள் கூட காவி வண்ணத்தில் இருந்தது.கொஞ்ச நேரம் ஊர்ந்து எக்ஸ்ப்ரஸ் பாட்டையை விட்டு விலகிவிட்டோம்.குறுகிய மௌனமான பாதையில் அமெரிக்காவில் கூட இம்மாதிரியான பாதைகள் உள்ளனவா என்று ஆச்சரியப்படும்படியாக இருந்தது.குலுங்கிக் குலுங்கி பாதையில் ஆரண்யத்தில் புகுவது போலத் தோன்றியது.அவன் பேசிக்கௌர்ண்டே ஓட்டினான்." உணவு, நடைமுறைகள் அத்தனையும் வேதகாலம்தான்.வேதங்களில் உள்ள கருத்துக்கள் மனித நாகரிகத்தின் மகோன்னதமான கருத்துக்கள்.இப்போது இவர்கள் சொல்லும் Big bang தத்துவத்தை ரிக்வேதம் சொல்லியிருக்கிறது. இருளை மூடி இருள் இருந்தது என்றும் மகாப்ரளயம் ஏற்பட்டு தவம் மூலமாக ஒரு ஏகவஸ்து என்றும் .." "இந்த மாதிரி கவைக்கு உதவாத புத்தகங்களால்தான் எங்கள் நாடு சீரழிந்து பிற்போக்காக இருக்கிறது.அதையெல்லாம் கொளுத்திப் போட்டிருந்தால் நாங்கள் உருபட்டிருப்போம். எங்களுக்கு உங்களிடமிருந்து வேண்டியது வேதம் இல்லை டாலர்"என்றேன். அவன் மனம் புண்பட்டுவிட்டது போலும் அதன்பின் அவன் மௌனமாகவே வந்தான். சற்று நேரத்தில் 'வெல்கம் டு வேதபுரி'என்றும் 'ஸுஸ்வாகதம்' என்றும் ஆங்கிலத்திலும் சம்ஸ்க்ருதத்திலும் போர்டு போட்டு உறுதியாக கம்பி வேலி போட்டு அடரத்தியான காட்டுப் பிரதேசம் தெரிந்தது.பாதை இன்னும் குறுக சிற்சில மான்கள் துள்ளியோடின.துரத்தில் குடிசைகள் தெரிந்தன.எங்கிருந்து இவர்களுக்கு

ஓலை கிடைத்தது என்று ஆச்சரியமாக இருந்தது.நாங்கள் இறங்கி நடக்க கொஞ்சம் சதுரமான பர்ணசாலை போன்ற இடத்தில் புகைந்து கொண்டிருந்த செங்கற்களால் சிறகு விரிந்த பறவை வடிவத்தில் ஒரு இடம் அமைந்திருக்க அதைச் சுற்றிலும் அக்னி சதா எரிந்துகொண்டிருக்க,அதில் நெய் ,ஆம்,நெய் ஊற்றிக்கொண்டு சிற்சில வெள்ளைக்கார செம்பட்டைத்தாடி முனிவர்கள் ஓம் ஓம் என்று மந்திர உச்சாடனம் செய்துகொண்டிருந்தார்கள்.

"அக்னி சயனக் கிரியை"என்றான் என்னுடைய அமெரிக்க பாரத்வாஜன்! சற்று மேற்புறம் நோக்கியதில் வெளிர் மஞ்சளில் புடவை அணிந்த வெள்ளைக்கார ஸ்திரீகள் நின்று கொண்டிருக்க அவர்களுக்கு மிக அருகே ஐந்து பசுக்களின் தலைகள் வரிசையாக வைக்கப் பட்டிருந்தன.அவைகளின் நெற்றியில் குங்குமம் இட்டிருக்க வேதகோஷம் உச்சஸ்தாயியில் இருந்தது. "அசுவினி இந்திர தேவர்களுக்கு பலி" என்றான்.அந்த இடத்தைக் கடந்து சென்று ஆசிரம நிழலில் மரத்தடியில் இருந்தவரிடம சென்று"மஹாப்பிரபு! அழைத்து வந்திருக்கிறேன்" என்றான். "நல்லது என்ன பெயர்?"என்றார் அந்த ரிஷி.பூனைக்கண் செம்பட்டைத் தாடி டெக்ஸஸ் வகை ரிஷி. கமண்டலம் ருத்திராட்சம் சடாமுடி நீவல்.. எனக்கு எந்த இடத்தில் எந்த தேசத்தில் இருக்கிறோம் என்கிற குழப்பம் ஏற்பட்டுவிட்டது.

"சங்கர நாராயணன்" என்றேன்.

"அந்தண குலமா?"

"ஆம்"

"மிக நல்லது! பிங்கலை இவனை அழைத்துப்போ "என்க அந்தப் பெண்களில் ஒருத்தி புன்னகையுடன் என் அருகில் வந்து "வாருங்கள்" என்றாள். ப்ரா அணியாததால் முலை குலுங்குவது வேதகாலமோ கம்ப்யூட்டர் காலமோ இதமாகத்தான் இருந்தது. பிங்கலை என்னை மற்றொரு நாலாபுறமும் திறந்த இடத்துக்கு அழைத்துச் சென்று சிவப்பாகத் துண்டும் வேட்டியும் கொடுதது "அணிந்து கொள்ளுங்கள்" என்றாள்.

"எதற்கு?"

"உங்கள் நவீன உடை யாகத்துக்குப் பொருந்தாது"என்றாள்.

"அணிவித்து விடுவீர்களா?" என்றேன்.

"ஓ அதற்கென்ன என்று என் அருகில் வந்து என்மேல் பட்டு என் சட்டையை நீக்கினாள். கழுத்தில் மஞ்சள் பூக்களால் மாலையிட்டு நெற்றியில் திலகமிட்டாள்.

"என்ன யாகம்?" என்றேன்.

"பாரத்வாஜன் சொல்லவில்லை? பசிக்கிறதாய் இருந்தால் பழங்கள் உண்ணலாம்"

"சொல்லவில்லை. என்னயாகம்"

"புருஷமேதம்"

"அப்படியென்றால்?"

அவள் என்னை நமிர்ந்து பார்த்து "ப்ரஜாபதி சொல்லவில்லை?"என்றாள்.

"இல்லையே ஏன்?"

"புருஷமேதத்தில் நுற்றி எண்பத்து நான்கு வகை உண்டு!யஜுர் வேதத்தில் முப்பதாவது பகுதியில் உள்ளது இன்றைக்கு.. நீங்கள் பாடகரா?"

"இல்லை என்?"

"பிராமணரா?"

"ஆம்"

"புரிகிறது .புரோகிதருள் சிறநதவனாக ஆக பலியிடப் போகிறார்கள்"

"வெயட் எ மினிட் ! என்ன சொன்னாய்? பலியா?"

"அமாம், உன்னை பலியிடப் போகிறார்கள் புருஷமேதம் என்பது அதே. அரசர்களுக்கு வீரனை துறவிகளுக்கு சூத்திரனை,இருளுக்கு கள்வனை, காமத்துக்கு விபச்சாரியை,சொர்க்கத்திற்கு வழுக்கைத் தலையனை என்று இபபடி யஜுர் வேதத்தில் நியதிகள் இருக்கிறது"

"யு மஸ்ட் பி ஜோக்கிங்" என்றேன் சிரித்துக் கொண்டே.

"இல்லை" என்றாள். என் கையைப் பின்பக்கத்தில் கட்டினாள்."அழைத்துச் செல்லுங்கள்"

என்றாள்.
ஆறு பேர் என்னை நெருங்கினார்கள்.

Author's Note on this story

one of the themes of Science Fiction is placing an ancient ritual in modern settings. Authors like Brian Aldiss have used this theme effectively, I would recommend a delightful collection called `Untouched by Human Hands` Ira Levin's novel ` Rosemary's Baby` is also of this type This short story occured to me while waiting for a delayed flight in Chicago I did meet a person like the one in the story and was talking to him more or less in the same lines. The `Vedapuri` idea suddenly occured. I kept the plot in my mind and wrote it only after I did some reading on Vedic rituals.

Incidentally, this short story was made into a humourous play by my friend Ram of Los Angeles and staged in LA recently to an appreciative audience

# 10. ஜில்லு



ஜன்னலுக்கு வெளியே தொடுவானத்தில் ஒரே ஒரு மேகம் கருப்புத் தீற்றலாகத் தெரிந்தது.ஆத்மா கதவைச் சார்த்தினான் .வரப்போகிறது. தெரிந்துவிட்டது.அவர்கள் கணக்குப்படி சாயங்காலம் மழை வந்து விடும். அதற்குள் புறப்பட்டுவிட வேண்டும். திரும்பினான். நித்யா பெட்டியில் துணிகளை அடைத்துக் கொண்டிருந்தாள்."சீக்கிரம் நித்யா!"
"எதை எடுத்துக்கறது எதை விடறது?"
"மொத்தமே மூணு பேருக்கும் எட்டு கிலோதான். ரொம்ப அவசியமானதை மட்டும் எடுத்துக்க" "அவசியமானதுங்கறது எது?"
அந்த கேள்விக்கு இந்த சந்தர்ப்பத்தில் 'மூச்சு' என்பதைத் தவிர ஆத்மாவிடம் வேறு பதில் இல்லை . தோருவின் வால்ட்டன் ஞாபகம்வந்தது.ஒன்றுமே தேவையில்லைதான் ,எல்லாமே புதுசாக அமைத்துக் கொள்ளலாம்.
ஆத்மா ஹாலைச் சுற்றிலும் நிதானமாகப் பார்த்தான்.பதினைந்து வருஷ மண வாழ்க்கையின் சேகரிப்புகள்.அவ்வப்போது சந்தோஷம்,செய்தி,அறிவு,இதம் தந்த எத்தனை சாமான்கள்!ஸ்டீரியோவின் ஸ்பீக்கர்கள் இடம் வலமாக மௌனமாக நின்று கொண்டிருந்தன . உடன் இணைத்த காஸட் டெக் ப்ளேயர் ஒலி பெருக்கி.வண்ண ஜாக்கெட்டுகளில் உறைந்திருக்கும் மணிக் கணக்கான சங்கீதம். பீத்தோவன், பாஹ், ஹரிபிரசாத் சௌரஸ்யா எல்லாமே இப்போது தேவையில்லைதான்.அருகே டைப்ரைட்டர் இருந்தது, ம்ஹூம் வேண்டாம். கவிதை அடிப்பதற்கு இதுவா சமயம்? அலமாரி நிறையப் புத்தகங்கள் இருந்தன எதையாவது எடுத்துச் செல்லலாம். எதை? தொல்காப்பிய ஆராய்சசி, முக்கூடற்பள்ளு? பாண்டி நாட்டுத் திருப்பதிகள்? புதுக்கவிதை-நாலு கட்டுரைகள்?தமிழர் நாட்டுப்புற இயல் ஆய்வு? பாலையும் வாழையும்? பைபிள் ? திருக்குறள்?
எதை? எல்லாமே இப்போது சப்தங்கள்,வெறும் சப்தங்கள்.

"குண்டுகள் எறிந்து
கூரைகள் எரித்து
பெண்டுபிள்ளை வயோதிகரைக்
கொன்று குவிப்பது
அன்றாடப் பொழுதுபோக்கு!"

"பாஸ்டர்ட்ஸ்!"என்று யாரையோ திட்டினான்.
"என்ன புஸ்தகம் எடுத்துக்கணும்"
"ஏதாவது எடுத்துக்கலாம் பிரயாணத்தில படிக்கறதுக்கு"
"என்ன, சீக்கிரம் சொல்லுங்க"

ஆத்மா மறுபடி அந்த அலமாரியை வருடினான்."இது போதும்!"என்று 'ராணி' இதழைப் பெட்டியின் மேல் போட்டான்.
"நகைப் பெட்டிகளை என்ன பண்றது?"
"எல்லாத்தையும் போட்டுண்டுவா.அங்க போனா வித்து மரவள்ளிக் கிழங்கு வாங்கலாம்"
நித்யா அவனைக் கலவரத்துடன் பார்த்தாள்.
"ஆளுக்கு மூணு செட்டு துணி வெச்சிருக்கேன்.குமாருக்கு ஸ்வெட்டர் எடுத்துக்கிட்டிருக்கேன்"
"இது என்ன பெரிசா?"
"நம்ம கல்யாண போட்டோ ஆல்பம் இதை விட்டுப் போக மனசு வரலை"
ஆத்மா அதைப் பிரித்தான்.ஒல்லி ஆத்மா.பொம்மை போல் நித்யா. மனசுக்குள் புன்னகை விரிந்தது."உன்னை நான் முதல்ல தொட்ட போது நடுங்கியது".
நித்யா கவனிக்காமல் "பூட்டு போறலை.மொத்தமே நாலு பூட்டுத்தான் இருக்கு" "பூட்டா? எதுக்கு?"
"வீட்டைப் பூட்டிட்டுப் போகவேண்டாம்?"
ஆத்மா கை தட்டிச் சிரிதது "பைத்தியமே பூட்ட வேண்டாம். திருடறதுககு ஒரு ஆள் கிடையாது இந்த வீட்டில இருக்ற அத்தனையும் ஃபரிஜ்,ரேடியோ, டிவி, புஸ்தகங்கள், கித்தார் நாற்காலி, யானை பொம்மை எல்லாமே இங்கதான் இங்கயேதான் இருக்கப் போறது. நுறு வருஷம் ஆனாலும் இங்கேதான் இருக்கப்போறது.ஆல்ஃபா கதிர்களிலும் பீட்டா துகள்களிலும் ஜொலிச்சுண்டு"
நித்யா சற்று நேரம் மௌனமாக இருந்தாள்."ஆத்மா நாம் எங்க போறம்?"
"யாருக்குத் தெரியும்? அரபிக் கடல்ங்கறாங்க,மினிக்காய்ங்கறாங்க லட்சத் தீவுங்கறாங்க. காத்துக்கு எதிர்ப்பக்கம் எங்கயாவது கூட்டிட்டுப் போவாங்க"
"முதலில் பம்பாய் போகணுமா?"
"பம்பாயா?அசடே! பம்பாய் காணாமப் போய்டுத்து.ஃபணால்!ப்ஷ்ஷ் ராட்சச நாய்க்குடை. இப்ப அங்க ஒருத்தரும் இல்லை.மெட்றாஸ் போச்சு. டெல்லி போச்சு கல்கத்தா போச்சு நாம ஏதோ இந்த ஊர்ல மாற்றலாகி வந்து சேர்ந்தோம்! தப்பிச்சோம்! மழை துரத்தத் துரத்த ஓடிக்கிட்டே இருக்கலாம்! அதிர்ஷ்டம்!"
"அது அதிர்ஷ்டமா?" என்றாள் நித்யா.
"சரியான கேள்வி. பதில் தெரியலை. குமார் எங்கே-".
"வெளியில விளையாடிட்டு இருக்கான். குமார்?"
குமார் உற்சாகத்துடன உள்ளே வந்து "அப்பா அப்பா ஏ..ழு எலிகாப்டர். வந்து பாரேன்"என்றான் ஆத்மா மகனுடன் பால்கனிக்கு வந்தான். படப்படப்பட என்று சிறகு சுற்றி ஸ்டெபிலைசரின் க்றீ...ச்சுடன் அந்த இயந்திரப் பூச்சிகள் மைதானத்தில் இறங்குவதைப் பார்த்தான்.
"நித்யா, வந்துட்டாங்க சீக்கிரம் பாக் பண்ணு"
"அப்பா நாம எலிகாப்டரில் போகப்போறமா?"
"ஆமாடா கண்ணு"
"எங்க போறோம்?"
"து..ரத்துககு"
"ஸ்கூல் லீவா?"
"இனிமே லீவுதான்"
"எப்ப வருவோம்?"
"திரும்பி வரமாட்டோம்"
"ஏன்?"
"ஏன்னா பாக்கிஸ்தான் இல்லை பாக்கிஸ்தான்? அவாளும் சைனாவும் சேர்ந்துண்டு நம்மோடு சண்டை போட்டுட்டு டபால்னு நிறயப்பேர் செத்துப் போய்ட்டா! நாம இன்னும் செத்துப் போகலை-"
நித்யா உள்ளே இருநது "ரொம்ப காரியமா குழந்தைக்கு இதெல்லாம் சொல்லியே ஆகணுமா?"
"ஹி மஸ்ட் நோ நித்யா"

குமார் யோசித்து" அதுக்கு ஏன் ஊருக்குப் போறோம்" என்றான்.
"அவாள்ளாம் வெடிச்ச பட்டாசினால புகை நிறைய ஆய்டுத்து. அதில விஷம் நிறைய இருக்கு அது நம்மகிடட வந்துண்டிருக்கு"
"நாம அவாளை ஷூட் பண்ணலியா?"
"ம்! நாமும் ஷூட் பண்ஷும்.ஒரே தமாஷ். தீபாவளி மாதிரி வெடிச்சோம்.கராச்சி, ராவல்பிண்டி லாஹூர்,பீக்கிங்"
"ஏன் நிறுதிதிட்டோம்?"
"பட்டாசெல்லாம் தீர்ந்து போச்சு நிறுத்திட்டோம்"
"ஊருக்குப் போனதும் எனக்கும் வாங்கித்தாப்பா"
"என்னது?"
"ஆட்டம் பாம்"
ஆத்மா சிரித்தான்."நீதாண்டா தலைவன்"
"குமார் குமார் உன் சமானெல்லாம் எடுத்துண்டியா?"
" ஆச்சு அம்மா" என்று சிறிதாகத் தன் பள்ளிப் பையைக் காட்டினான். அதனுள் ஸ்லேட்டுக்குச்சி, ரப்பர், பம்பரக் கயிறு,தீப்பெட்டி லேபல்கள்,ஸ்டாம்புகள் கண்ணாடிக் கோலி.
"இவ்வளவு தானா?"
"இவ்வளபுதாம்பா,ஜில்லுவுக்கு இடம் வேணும் இல்லையா?"
"என்னது? ஜில்லுவா?"
தன் பெய்ர உச்சரிக்கப் படடதை உணரந்து கடடில் அடியில் படுத்திருந்த ஜில்லு திடீர் என்று காதுகளை உயர்த்திக்கொண்டு வெளியே வந்து குமாரிடம் வந்த வாலை ஆட்டியது.
"ஜில்லு ஷேக்காண்ட்" ஒரு காலைத் துக்கியது.
"ஜில்லு நட நட"
இரண்டு கால்களில் நின்று நாலு தப்படி நடந்து காட்டியது.
சின்ன நாய். பொம்மைபோல் கன்னங்கரேல் என்று கண்களுடன் சடைசடையாக வாசனையாக ஒரு சந்தோஷப் பந்தாக.
குமார் அதை தொம்சம் பண்ணினான். காதைப் பிடித்து இழுத்துக் கட்டிக் கொண்டு புரண்டு காலை வாரிவிட்டு குழந்தை செய்த அத்தனை ஹிம்சைகளை சட்டை செய்யாமல் அவனுடனேயே ஒட்டிக்கொண்டது. இரண்டு குழந்தைகள்.
"ஜில்லுஜில்லுஜில்லு.. அப்பா நாம ஜில்லுவையும் கூட்டிப்போறமில்லை"
"இல்லை கண்ணா விடடுட்டுப் போறம்"
"பொய் ! அம்மா கூட்டிடடுப் போலாம்னு சொன்னாளே"
"அம்மாதான் பொய் சொன்னா.இதபார் குமார், அந்த எலிகாப்டர்ல மனுஷாளுக்கே இடம் இல்லை ஜில்லுவை உள்ள விடமாட்டா"
குமார் உடனே அழ ஆரம்பித்தான் நாயைக் கட்டிக் கொண்டான் "நான் வரலை."
"நீ வந்துதான் ஆகணும் இங்கே ஒருத்தரும் இருக்க மாட்டா"
"நானும் ஜில்லுவும் வீட்டில இருக்கோம் நீ போய்ட்டுவா"
நித்யா வந்து"என்ன சண்டை" என்றாள் குமார் ஏன் அழறே"
"அப்பா ஜில்லு வேணடாங்கறார்"
"யார் சொன்னா? ஜில்லுவை கூட்டிண்டுதான் போகப்போறோம் நீ உள்ளபோடா கண்ணா"
குமார் தீர்மானமின்றி கண்ணைத் துடைத்துக் கொண்டு நாயைக் கவலையுடன் அள்ளிக் கொண்டு உள்ளே சென்றான். ஆத்மா மைதானத்தில் இப்போதே க்யு வரிசை அமைவதைப் பார்த்தான். ஏழ ஹெலிகாப்டர்களும் இளைப்பாறிக் கொண்டிருந்தன.
"எதுக்காகப் பொய் சொல்ற? குழந்தை கிட்ட நாயை அனுதிக்கமாட்டான்னு தெரியும். இல்லையா"
"அதை அவன் கிட்ட எதுக்கு சொல்லணும்? கடைசீல சமாதானப் படுத்தி அழைச்சுட்டு போகலாம்னு பார்த்தேன் நீங்க போட்டு உடைச்சுட்டிங்க"
" இல்லை நித்யா இந்த ஏமாற்றத்துக் கெல்லாம் அவனைத் தயார்ப்படுத்தணும்.சும்மா கனவுகளை சப்ளை செய்துக்கிட்டே இருக்கக் கூடாது.இன்றைய உலகம் என்னன்னு

தெரிஞ்சுக்கணும்.நெஞ்சில் உறுதி வரணும்"
"ஆ..மாம் ஏழுவயசில இதெல்லாம் தேவையாக்கும்? இத பாருங்க,அவன் இன்னும் குழந்தை. நாயை வுட்டுட்டுப் போறம்னு தெரிஞ்சா தாங்க மாட்டான்.அது மேல அவனுக்கு உசிரு ஜுரம் வந்துரும்.கடைசில சொல்லி எப்படியாவது சரிக்கட்டிடலாம்.. நாயைக் கூட்டிட்டுப் போறம்னே சொல்லுங்க"
இன்னும் இரண்டு மணி நேரம்.
அறைக்குள்ளிருந்து "ஜில்லு பயப்படாதே.. நான் அழைச்சுட்டுப் போறேன் உன்னை விடமாட்டேன். விடாட்டா அவாளை ஷுட் பண்ணிடலாம்"
நித்யா திடீர் என்று "இப்படி செஞ்சா என்ன?"எனறாள்.
"என்ன?"
"பொட்டில இடம் இருக்கு பேசாம ஒரு துண்டில சுத்தி.."
"ம்ஹும் கத்திக் கத்தி செத்துப் போய்டும்."
"கைல ஒரு கூடை வெச்சக்கலாமில்லையா?"
"இதபார் நித்யா அனாவசியமா காம்ப்ளிக்கேட் பண்ணாதே.விட்டுட்டுப் போயிரலாம். சாப்பாட்டுக்குத் தவிக்கும். வெள்ளைக்காரனா இருந்தா சுடட்டுப் போய்டுவான்"
"எனக்குக் கூட இந்த சனியனை விட்டுட்டுப் போறதில இஷ்டமே இல்லை"
"என்ன செய்யறது? தேவடியா பசங்க அவசரப் பட்டு விபரீதம் பண்ணிட்டாங்களே?"
"ஆத்மா ப்ளீஸ்"
அவர்கள் கிளம்பும்போது மணி ஐந்து. அந்தக் கருமேகம் கொஞ்சம் பெரிசாகி இருந்தது. ஆத்மாவும் நித்யாவும் குமாரும் வெளியே வந்து நின்றார்கள்.தனியான திறந்த வீட்டை, மல்லிகைப் பந்தலை, மாமரத்தை, மகிழ மரத்தை, கதவருகில் நீலத்தில் ஆர் எஸ் ஆத்மா என்ற சிறிய பெயர்ப் பலகையை ஒரு முறை கடைசியாகப் பார்த்தான்.
"காஸை மூடினேனோ ஞாபகமில்லை!" என்றாள்.
"சட்! வா. காஸ் மூடினா என்ன திறந்தா என்ன"
ஒரு பெட்டி, ஒரு சிறிய கூடை
கூடை!
"ஏய் கூடைக்குள்ள என்ன?"
"நீங்க பேசாம வாங்க ஜில்லு தூங்கறது சமாளிச்சுரலாம்"
"இதபாரு, வம்பு வீண் வம்பு கூடையைத் திறந்து பார்த்தா அசிங்கமாப் போய்டும்!வேண்டாம் வுட்டுரு" என்று கூடையைப் பிடுங்கினான்.குமார் வீறிட ஆரம்பித்தான்.
"விடுங்கோ நான் சமாளிக்கிறேன்.அவா ஒண்ணும் செக் பண்றதில்லையாம்"
ராணுவத்தின் மூன்று டன் வண்டி ஒன்று வந்து நின்றது.
"கமான் க்விக் க்விக்" என்று ஒரு சீருடைக் குரல் கேட்டது.
ஆத்மாவும் நித்யாவும் குமாரும் பெட்டியும் கூடையுமாக ஏறிக்கொள்ள வண்டி புறப்பட ஆத்மா அந்த முகங்களைப் பார்த்தான்.கவலை முகங்கள். எதிர்காலம் அறியாத முகங்கள். எங்கே போகிறோம் எங்கே நிற்போம் ,எந்த திசை, எந்த மண் எதுவும் தெரியாமல்.. வண்டி ஆடி ஆடி மைதானத்தை நெருங்கியது. ஆத்மா கூடையை அடிக்கடி கவலையுடன் பார்த்துக் கொண்டிருநதான்.
மைதானத்தில் இறங்கி மெல்ல நகரும் வரிசையில் ஒட்டிக் கொண்டார்கள்.ராணுவ உடையில் அதிகாரிகள் மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தார்கள்.ஏழு ஹெலிகாட்ர்களிடமும் ஏழு வரிசைகள் இருந்தன. நகரத்தின அத்தனை பேரும் வித்தியாசங்கள் இன்றி சற்றே தவிப்புடன் சற்றே அவசரத்துடன் அந்தப் புரியாத வாசலில் தடுமாறி ஏறிக் கொண்டிருந்தார்கள் இளம் ராணுவ அதிகாரிகள் வயதானவர்களைத் துக்கி ஏற்றிக் கொண்டிருந்தார்கள். நிற்பவர்கள், நடப்பவர்கள்,சக்கர நாற்காலிகள்,கைத்தடிகள்,ஏழைகள் குழந்தைகள் .. நகரம் முழுவதும் இன்னும் ஒரு மணி நேரத்தில் காலியாகிவிடும். ஆத்மாவும் நித்யாவும் குமாரும் மெல்ல மெல்ல அந்த இயந்திரப் பறவையை அணுக அணுக அவன் இதயம் தவித்தது.எப்படியாவது உள்ளே சென்று ஏறிக்கொண்டு விட்டால்,கிளம்பி விட்டால் அப்புறம் அசட்டு சிரிப்பு சிரித்து சமாளித்து விடலாம்.
அருகே அருகே

"ஒரு பெட்டிதானே" என்றார் அதிகாரி.
"ஒரு பொட்டி இந்தக் கூடை" அதன் மேல் துண்டு போட்டு மூடியிருந்தது.
ராணுவ அதிகாரி பெட்டியை குத்து மதிப்பாகத் துக்கிப்பார்த்து "போங்க உள்ளே சீக்கிரம்"
"அப்பாடா"
நித்யா கூடையைத் துக்கிக் கொண்டாள்.அந்த சமயம் அதனுள் உறங்கிக் கொண்டிருந்த ஜில்லு கீச்சுக்குரலில் முனக ஆரமபித்தது. "சீக்கிரம் ஏறு நித்யா"
இப்போது ஜில்லு ஸ்பஷ்டமாக ஊளையிட ஆரம்பித்தது.
"ஜஸ்ட் எ மினிட் மேடம்"
அதிகாரியின் உப அதிகாரி அவளிடமிருநது கூடையைப் பிடுஙகிக்கொண்டார்.சடுதியில் அதன் மேலிருந்த துணியை விலக்கினார்.
"நாய்!" ஜில்லுவைப் பொறுக்கி மேஜைமேல் வைத்தார்.
"மைகாட் யார் நாய்யா இது"
ஆத்மா "ஆபிஸர் இட்ஸ் லைக் திஸ் என் பையன்.."
"ஏன்யா உங்களுக்குப் படிச்சு படிச்சு சொல்லலை? லவுட் ஸபீக்க்ரல சொல்லலை?வீடு வீடா வந்து சொல்லலை? மிக அவசியமான பொருள்களை மட்டும் எடுத்துட்டு வரணும்னுட்டு.
நாய்! காட்! வாட் ஸ்டுபிடிட்டி ஐ ஸே"
"ஆபிசர் நான் சொல்றதைக் கேளுங்ககஷ என் பையன்"
"லுக் மிஸ்டர உன்னோட வாதாடிக்கிட்டிருக்க நேரமில்லை.ஹெலிகாப்டர் புறப்பட்டாகணும். அத பாருங்க மேகம்..கதிரியக்க மழை வந்துகிட்டு இருக்கு. நாம எல்லோரும் சாவில இருந்து சிலமைல் துரமே இருக்கோம மனுஷஙகளுக்கே இடமில்லை. நாயைக் கூட்டி வரேங்கறியே! உனக்கு இப்ப சலுகை தந்தா அந்தளு பியானோ எடுத்துக்கிட்டு வரேம்பான் இன்னொருத்தன் என் பசு மாட்டை ஏன் விடணும்பான் நாம எல்லாம் உயிர் வாழறதுக்கு ஓடிக்கிட்டு இருக்கோம். உங்களுக்கு எட்டு கிலோ சலுகை கொடுத்ததுக்கே ஸி ஓ என்னைக் காச்சறார். முடியாது நாயை அனுமதிக்க முடியாது"
"இது எங்க குழந்தை மாதிரி ஸார் " என்றாள் நித்யா.
"உள்ளபோங்க உள்ளபோங்க .நாய் கிடையாது. அடுததது அடுத்தது"
"படு பாவிப் பசங்களா" என்றான் ஆத்மா
"என்னது?"
"உங்களாலதானடா சண்டை வந்தது"
"பொறுப்பில்லாம அவசரப் பட்டு அவன் மேல அணுகுண்டைப் போட்டுட்டு அவன் திரும்பிப் போட்டு உங்க மாதிரி ராட்சசப் பிரஜைகளோட அவசரப் போக்கினாலதானே,கொலை வெறியினாலதானே சண்டை வந்து நாங்க,ஒண்ணுமே தெரியாதவங்க மாட்டிக்கிட்டு இறந்து போயி பிரிஞ்சு போயி இப்ப ஊர் ஊரா எல்லாத்தையும் துறந்து ஓட வேண்டியிருக்கு ப்ளடி மிலிட்டரி ராஸ்கல்ஸ் !பாஸ்டர்ட்ஸ்"
ஆத்மாவின் கன்னத்தில் பளேர் என்று அறை விழுந்தது
"லுக் மிஸடர் ! நாங்க இல்லை காரணம். தலைவர்கள்தான்! ஹால் ஹிம் அப் ஐஸே"
ஆத்மா குண்டுக் கட்டாக துக்கப்பட்டு உள்ளே திணிக்கப் பட்டான் .நித்யாவும் ஏற்றப்பட்டு அவசர அவசரமாக மற்றவர்கள் ஏற்றப்பட்டு இறதியில் ராணுவ அதிகாரிகள் ஏறிக் கொள்ள கதவு மூடப்பட்டு
மண்டைச் சிறகுகள் சுற்ற ஆரம்பித்து சுழற்சி அதிகமாகி ஹெலிகாப்டர்கள் ஒவ்வொன்றாக சாய்வுப் பாதையில் உயர்ந்தன. "ஆத்மா வலிக்கிறதா?" என்றாள் நித்யா.ஏகப்பட்ட ஜனங்கள் அடைந்திருந்தார்கள். நித்யாவும் ஆத்மாவும் ஒரு ஓரத்தில் பதிய நின்று கொணடு மேலே கிடைத்ததைப் பற்றிக் கொள்ள ஹெலிகாப்டர் மேலே மேலே செல்ல,வயிற்றுக்குள் பயப் பந்து சுருட்டிக் கொள்ள "குமார் நாம் ஊருக்குப் போனதும் வேற நாய் வாங்கிக்கலாம் " என்றான் ஆத்மா.
"குமார்?"
"ஏய் குமார்! நித்யா குமார் எங்கே?"
"உங்க கூடத்தானே இருந்தான்"

"இல்லையே உன் கையைன்னா பிடிச்சிட்டிருந்தான்"
"குமார் ? குமார்! குமா ஆஆஆஆ ர்!"
நித்யாவின் அலறல் அந்த மெஷின் படபடப்பில் கரைந்தது.
"அய்யா அய்யா என் மகன். என் மகனை விட்டுட்டோம். திறங்க. கதவை திறங்க" என்று ஆத்மா மோதினான். ஒரு வலுவான கரம் அவனை அடித்து வீழ்த்திப் பிடித்தது.
ஹெலிகாப்டர்கள் வானத்தில் புள்ளிகளாக மறைய குமார் பெஞ்சின் அடியில் பதுங்கியிருந்தவன் ஜில்லுவைத் தடவிக் கொடுத்துக்கொண்டே வெளியே வந்தான்.
"கவலைப்படாதே ஜில்லு.அப்பா அம்மா ஊருக்குப் போய்ட்டு வந்துருவா.நாம வீட்டுக்குப் போகலாம் வா"
சிறுவனும் நாயும் மெல்ல உற்சாகமாக நடந்து செல்ல யாருமில்லாத பிஸ்கட் கடையில் அடுக்கி வைத்திருந்த பிஸ்கட்களில் நிறைய எடுத்துக்கொண்டு ஜில்லுவுக்கும் கொடுத்து தானும் சாப்பிட்டுவிட்டு வீட்டை நோக்கி நடக்கையில் வந்த மழையில் சிறுவனும் நாயும் ஆனந்தமாக நனைந்தார்கள்.

Author's Note on this story
Some of the predictions made in my science fiction stories have come true. It is sometimes gratifying and sometimes embarassing .This story written almost twenty years ago has now come very close to reality. We wish and fervently pray this does not ever happen.

# 11. அப்பா அன்புள்ள அப்பா

செய்தி வந்த உடனே பஸ் பிடித்து சேலம் போய்ப் பார்ததால் அப்பா படுக்கையில் உட்கார்ந்திருந்தார்.
"எங்கே வந்தே" என்றார்.
"உனக்கு உடம்பு சரியில்லைன்னு" என்று மழுப்பினேன்.
"நேற்று வரை சரியில்லாமல்தான் இருந்தது. டாக்டர்கள் என்னமோ பண்ணி உட்கார வைத்து விட்டார்கள்.சாப்ட்டியா?"என்றார்" எனக்கு என்ன வாங்கிண்டு வந்தே?"
"என்னப்பா வேணும் உனக்கு"
"உப்பு பிஸ்கட். கொஞ்சம் பாதாம் அல்வா. அப்பறம் ஒரு சட்டை வாங்கிக் கொடுத்து விட்டுப் போ-"<BR< என்றார்.
பல்லில்லாத சிரிப்பில் சின்னக் குழந்தை போலத்தான் இருந்தார்.
நர்ஸ் வந்து "தாத்தா உங்க மகன் கதைகள் எல்லாம் படிச்சேன். ரொம்பஇன்டெலிஜெண்ட்" என்றதற்கு "நான் அவனை விட இன்டெலிஜெண்ட்" என்றார்.
பேப்பர் பேனா எடுத்து வரச்சொல்லி "உன் முன்னோர் யார் என்று அபபுறம் தெரியாமல் போய் விடும்" என்று வம்சாவழியைச் சொல்லி எழுதிக் கொள்ளச் செய்தார். ஞாபகம் தெளிவாக இருந்தது. முதன் முதன் முதல் திருவாரூரில் நூறு ரூபாய் சம்பளத்தில் பதவியேற்ற தேதி சொன்னார். கணக்கம் பாளையம் பின்கோடு நம்பர் சொன்னார். "பழைய விஷயங்கள் எல்லாம் ஞாபகம் இருக்கிறது. சமீப ஞாபகம்தான் தவறிப்போகிறது. நீ வந்தால்கேட்கவேண்டும் என்று ஏதோ ஒன்று. என்ன என்று ஞாபகம் இல்லை. ஞாபகம் வந்ததும் ஒரு காகிதத்தில் குறித்து வைக்கிறேன்"
"அப்பா உனக்கு எத்தனை பென்ஷன் வருகிறது தெரியுமோ?"
"தெரியும் .ஆனால் பணத்தில் சுவாரஸ்யம் போயவிட்டது. எத்தனை இருந்தால் என்ன? நீங்கள் எல்லாம் என்னைக் காப்பாற்றாமலா போவீர்கள்?"
"ஏதாவது படித்துக்க காட்டட்டுமா அப்பா?"
"வேணட்ம். நிறையப் படித்தாயிற்று. இப்போது அதெல்லாம் எதற்கு என்று ஒரு அலுப்பு வந்து விட்டது. நீ போ உனக்கு எத்தனையோ சோலி இருக்கும். அமமாவின் வருஷாப்திகம் ஏப்ரல் ஒண்ணாம் தேதி வருகிறது. அப்போது வநதால் போதும். நான் படுத்துக் கொள்ளட்டுமா? களைப்பாக இருக்கிறது. காலையில் போவதற்குள் ஒரு முறை சொல்லிவிட்டுப் போ" என்றார்.
பெங்களூர் திரும்பிவந்து ஒரு வாரத்துககுள் மறுபடி சீரியஸ் என்னனனறு தந்தி வந்தது.
என்.எஸ் பஸ்ஸில்" என்ன ஸார் அடிக்கடி சேலம் வர்றிங்க?"
"எங்கப்பா சீரியஸா இருக்கார்ப்பா"
"ஓ அப்டிங்களா? டேய் அந்த மல்லி மூட்டையை பாத்து இறக்குங்கடா"
ஸ்பெஷல் வார்டில் அவரைப் பார்த்து திடுக்கிட்டேன். படுக்கையில் கண்மூடிப் படுத்திருந்த முகத்தில் தாடி. காலில் பட்டர்ஃப்ளை ஊசி போட்டு சொட் சொட்டெனறு ஐவி க்ளுக்கோஸ் உள்ளே போய்க்கொண்டிருந்தது. சுவாச மூக்கில் ஆக்ஸிஜனும் ஆஸ்பத்திரி வாசைனயும் வயிற்றைக் கவ்வியது.
கண்ணைக் கொட்டிக்கொட்டிக் கண்ணீரை அடக்கிக்கொண்டு "அப்பா அப்பா" என்கிறேன்.
கண்ணைத் திறக்கிறார் பேசவில்லை. "நான்தான் வந்திருக்கிறேன்" என்று கையைப் பற்றுகிறேன்.
பேசும் விருப்பம் உதடுகளில் தவிக்கிறது.கையை மெல்லத் துக்கி முக்கில் இருக்கும் குழாய்களை அகற்றப் பார்க்கிறார். தோற்கிறார்.
"நீ போனப்புறம் ஒரு நாளைக்கு சரியா இருந்தார் அதுக்கப்புறம் இப்படி"
படுக்கையில் பூஞ்சையாக நெற்றியைச் சுருக்கிகொண்டிருக்கும் அபபாவைப் பார்க்கிறேன். இவரா ஆயிரம் மைல் தனியாகக் கார் ஓட்டிக்கெண்டு சென்றவர்? இவரா மின் வாரியத்தை தன் டிஸிப்ளினால் கலக்கியவர் "நல்ல ஆபிஸர்தான் ஆனா கொஞ்சம் முன் கோபிங்க" இவரா அணைக் கட்டின் பாரப்பெட் சுவரின் மேல் ஏறிக்கொண்டு விளிம்பில் ஒரு ஃபர்லாங்

நடந்தவர்?"என் வில் பவரை டெஸ்ட் பண்ணிப் பார்ககணும் போலிருந்தது" இன்ஜினியரிங் படிப்பையும் இளம் மனைவியையும் விட்டு விட்டு காங்கிரசில் சேருகிறேன் என்று காணமால் போனவர் இவரா?"ஐ வாஸ் கிரேஸி தட் டைம்"
மேல் நர்ஸ் வந்து அவரை உருட்டி முதுகெல்லாம் யுடிகொலோனும் பேபி பவுடரும் போடுகிறார். "பெட்ஸோர் வந்துரும் பாருங்க"
ஸ்டாஃப் வந்து பக்கத்துககு ஒரு ஊசி கொடுத்து "நீங்கதான் ரைட்டர்ங்களா?" என்கிறார். நான் ஆஸபத்திரியைத் திகைத்துப் போய்ப் பார்க்கிறேன்.
ஆஸபத்திரியிலிருந்து தப்பிப்பதைப் பற்றி ஸர்வைவல் புத்தகங்கள் ஆங்கிலத்தில் எழுதீயிருக் கிறார்கள். டாக்டர்கள் எல்லோரும் நல்லவர்கள். ஆனால் ஸ்பெஷலிஸ்டுகள்.
"ஒரு ஸிடி ஸ்கான் எடுத்துரலாமே டாக்?"
"முழுங்கறதுக்கு ரொம்ப கஷ்டப்படறார், ஒரு பேரியம் மீல் கொடுத்துப் பார்த்துரலாம். அப்றம் ஒரு ஆன்ஜியோ"
"ஃப்ளுயிட் ரொம்ப கலெகட் ஆயிருச்சு. புட் ஹிம் ஆன் எ ஹெவி டோஸ் ஆஃப் லாஸிக்ஸ்"
எல்லா டாக்டர்களுமே திறமைசாலிகள்தான், நல்ல நோக்கமுள்ளவர்கள் தான், ஆனால்
ராத்திரி முழுக்க அவர் அருகில் கீழே படுத்திருக்கிறேன். துக்கமில்லை. கொஞ்ச நேரம் வராந்தாவில் உட்கார்ந்து காற்று வாங்குகிறேன். கான்க்ரீட் மேடையில் வேப்ப மரம் முளைத்திருக்கிறது. காகங்கள் ஸோடியம் விளக்குகளைச் சூரியன் என்று குழம்பிப்போய் இரை தேடச் செல்கின்றன. இங்கிருந்து அப்பா தெரிகிறார். அசையாமல் படுத்திருக்கிறார். முகத்தில் வேதனை எழுதியிருக்கிறது. கூப்பிடுகிறாரா? கிட்டப்போய்க் கேட்கிறேன்.
"என்னப்பா?"
"போதும்ப்பா என்னை விட்டுருப்பா" என்று மெல்லச் சொல்கிறார்.வில்லியம் ஹண்ட்டரின் கட்டுரை ஞாபகம் வருகிறது. If I had strength enough to hold a pen. I would write how easy and pleasant it is to die.
பொய்!
ஆனால் இவர் அவஸ்தைப் பட்டால் எனக்கு அபத்தமாகத்தான் படுகிறது. இவர் செய்த பாவம் என்ன? ப்ராவிடணட் பண்டில் கடன் வாங்கி பையன்களைப் படிக்கவைத்ததா? அவர்களுக்கு வரதட்சணை வாங்காமல் கல்யாணம் செய்துவைத்ததா? ஏழை உறவினர்களுக்கும் ஆசிரியருக்கும் மாசாமாசம் பென்ஷனிலிருந்து பணம் அனுப்பியதா? குடும்ப ஒற்றுமைக்காகப் பாடுபட்டதா? பிரபநதத்தில் ஒரு வரி விடாமல் மனப்பாடமாக அறிந்ததா?
காலை ஐந்து மணிக்கும்பிக்கத்தில் இருக்கும் சர்ச் எழுந்து ஒலி பெருக்கி மூலம் ஏசுநாதரைப் பேசுகிறது. அப்பாவுக்கு இது கேட்குமா? ரேடியோ சிலோனில் சுவிசேஷத்தை தவறாத ஆர்வததுடன் கேட்கும் தீவிர வைஷ்ணவர் "பைபிளில் பல இடங்களில் நம்ம சரணாகதி தத்துவம் சொல்லியிருக்கு தெரியுமோ? சில இடங்களில் ஆழ்வார் பாடல்க ளுக்கும் அதற்கும் வித்தியாசமே தெரிவதில்லை" பங்களூரில் குரான் முழுவதையும் படிக்கச் சொல்லிக் கேட்டது நினைவுக்கு வருகிறது.
ஆஸபத்திரி புது தினத்துக்குத் தயாராகிறது.மணி அடித்துவிட்டு சில்லரை கொடுக்காதவர்களை யெல்லாம் விரட்டுகிறார்கள். டாக்டர் ரவுண்ட்ஸ் வருகிறார். "இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி இருப்பார்னு சொல்லமுடியாது.இன்னிக்கு கொஞ்சம் இம்ப்ருவ்மெண்ட் தெரிகிறது. கன்னத்ததைத் தட்டி "நாக்கை நீட்டுங்கோ" மெல்ல நாக்கை நீட்டுகிறார்.
"பேர் சொல்லுங்கோ"
"சீனிவாசரா.."
"அஃபேஸியா அத்தரோ சிலிரோஸிஸ் .ஹி இஸ் மச் பெட்டர நெள. டோண்ட் ஒர்ரி"
புதுசாக பல்மனரி இடீமா உன்று சேர்ந்து கொண்டு அவரை வீழ்த்தியது.
சென்ற மாதம் இருபத்திரண்டாம் தேதி பிற்பகல் மூன்று மணிக்கு இறந்து போனார் உடன் அப்போது இருந்த சித்தி "கண் வழியா உசிர் போச்சு "என்றாள். பம்பாயிலிருந்து தம்பி வரக் காத்திருந்து மூன்று பிள்ளைகளும் அவரைச் சுற்றி நின்று கொண்டு அவர் மார்பைக் கண்ணீரால் நனைத்தோம்..வீட்டுக்குக் கொண்டு வந்ததும் வாசலில் நெருப்புக் கொண்டுவைத்தார்கள்.

நண்பர்கள் வந்தார்கள். ஆஸபத்திரி வண்டியில் எடுத்துக் கொண்டு போய் "வீட்டில் ஒருவரில்லை வெட்டவெளியாச்சுதடி காட்டில் எரித்த நிலா கனவாச்சே கண்டதெல்லாம்" என்று முழுமையாக எரித்தோம்.
காலை எலும்புகளைப் பொறுக்கிச் சென்று பவானி போய்க் கரைத்தோம்.இந்து பேப்பரில் இன்ஸர்ஷன் கொடுத்தோம். "மாலை மலர்ல செய்தி வந்திருந்ததே பார்த்திங்களோ?" உறவுக் காரர்கள் வந்தார்கள். சினிமாவுக்குப் போனார்கள். வாத்தியார் கருட புராணத்தின் பிரதியை என்னிடம் கொடுத்தார். பிராமண போஜனம் செய்விக்காதவர்களை யெல்லாம் சிரித்துக்கொணடே கொடுமைப் படுத்திக் கொண்டிருந்தார்கள். ஏதோ ஒரு நதியைக் கடப்பதற்கு கோதானம் இல்லையென்றால் ஒரு தேங்காய் கிளுசித்து ஹிரண்யம்! அப்பா மரணத்தைப் பற்றி ஒரு முறை சொன்னது ஞாபகம் வருகிறது "அது ஒரு முற்றுப் பள்ளி.வி ஸீஸ் டு எக்ஸிஸ்ட்.எபிக்யுரஸ் சொன்னதை மறுபடி படி"
"Death is nothing to us since so long as we exist death is not with us but when death comes. we do not exist".
ஒன்பதாம் நாள் பத்தாம் நாள் பதினோராம் நாள்.. பிரேதத்தின் தாகமும் தாபமும் திருவதற்காக அதன் ரெப்ரசெண்டேடிவ்வாக வந்த "ஒத்தன்" என்னைப்பார்த்து சிரித்து "நீங்க எழுதின ரத்தத்தின் நிறம் சிவப்பு குங்குமத்தில நன்னா இருக்கு ஸார் அடுத்ததடவை ஒரு ஸோஷல் தீமா எடுததுண்டு எழுதுங்களேன்"
சேலம் கடைத் தெருவில் பத்தாறு வேஷ்டிகளுக்கும சொம்புகளுக்கும் அலைந்தோம். ங்கத்திலிருந்து ப்ரபந்த கோஷ்டி வந்து எங்கள் தலையில் பரிவட்டம் கட்டி நாலாயிரமும் ராமானுச நுத்தந்தாதியும சரம ஸ்லோகமும் சொல்லிவிட்டு"எனக்கினி வருத்தமில்லை" இரண்டு மணி பஸ் பிடித்துப் போனார்கள்.
"அவ்வளவு தாம்பா பிள்ளைகள்ளாம் சேர்ந்துண்டு அவரை பரமபதத்தில ஆசார்யன் திருவடி சேர்த்துட்டேள். இனி அந்த ஆத்மாவுக்கு ஒரு குறையும் இல்லை! மாசிய சோதம்பத்தை மட்டும் ஒழுங்கா பண்ணிடுஙகோ".
சுபஸ்வீகாரம். எல்லோரும் பந்தி பந்தியாக சாப்பிடுகிறோம். எட்டணா தட்சணைக்காக வாசல் திண்ணையில் ஒன்பதுபேர் காலையிலிருந்து காத்திருக்கிறார்கள். காஷவுல்ட்டியில் எனக்கு ட்ரங்க் டெலிபோன் வருகிறது.தொடர் கதைக்கு டைட்டில் கேட்டு. பங்களுர் திரும்பி வருவதற்கு முன் அப்பாவின் அந்த கடைசிக் குறிப்பைப் பார்க்கிறேன். Ask Rangarajan about Bionics ஓவர்சீஸ் பாங்கில் மிசையில்லாத என்னைப் பார்தது சிரிப்பை கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்கிறார்கள். அப்பாவின் 'எய்தர் ஆர் சர்வைவர்' அக்கவுண்டில் அவர் தகனத்துககு ஆன செலவு முழுவதும் இருக்கிறது.

Author's Note on this story
This is not a story. It is an article I wrote immediately after the death of my father When it was published in `Kumudam` many people pointed out its short story structure When describing a real poignant incident like this the writer's craft comes in in the selection of incidents and non emotional narration. Incidentally the short story "நிஜத்தைத் தேடி" was re-published in Kungumam weekly and was selected as the best story of the month by "இலக்கிய சிந்தனை" a literary forum which holds its meeting rain or shine, every month for more rhan twenty five years now. Ironically when the story was published first time twenty years back it wasn't noticed.

# 12. முதல் மனைவி

## Part 1

கல்லுரியிலிருந்து திரும்பி வருவதற்குள் மழை பலமாகி கடைசி பர்லாங்கில் ராஜலட்சுமி நனைந்து விட்டாள்.போதாக் குறைக்கு பஸ் ஒன்று உற்சாகமாக சகதியையும் சேற்று நீரையும அவள மேல் வாரி இறைத்துவிட வீட்டு வாசலை அடையும்போது கோபம் மூக்கு நுனியில் துவங்கியிருந்தது. பால்காரன் வரவில்லை. மேனகா சாவியை எடுத்துக்கொண்டு சென்று விட்டாள்.பூட்டிய வீட்டுக்குள் டெலிபோன் பிடிவாதமாக ஒலித்துக் கொண்டிருந்தது.கோபம் இப்போது அவள் பார்வையை மறைத்தது. கைகளை இறுக்க அழுத்திக் கொண்டதால் ரத்தம் செத்து மணிக்கட்டு வெளுப்பாகியிருந்தது.
'ராஜலட்சுமி கோபத்தைக் குறை. கோபத்தைக் குறைத்தால்தான் ப்ளாட்ப்ரஷர் விலகும். பால் வரா விட்டால் என்ன? மேனகா கொஞ்சம் லேட் பண்ணால் என்ன?
டெலிபோன்ஒலித்தால்என்ன? மேனகா சற்றே பயத்துடன் சைக்கிளிலிருந்து இறங்கினாள். அவள் பாண்ட்டும் பட்டனில் அலட்சியமாக இருந்த சட்டையும் ராஜலட்சுமியின் கோபத்தை இன்னும் அதிகரித்தன.
"எப்பம்மா வந்தே?"
"போன் அடிக்கிறது கதவைத் திற" என அதட்டினாள்.
மேனகா "ஈஸி மம்மி"
"சரிபோடி கதவைத் திற முதல்ல அப்புறம் பெரியவாளுக்கு உபதேசம் பண்ணு"
"லுக் அட் திஸ்! நான் என்ன உபதேசம் பண்ணேன்"
கதவைத் திறந்து போனை நோக்கி ஓடி அதை எடுப்பதற்கு முன் அடிப்பது நின்று போனது.
"சே!" என்று சோபாவில் விழுந்தாள்.
"ரிலாக்ஸ் மம்மி. முதல்ல ஈரப் புடவையை மாத்தலாமா?"
அத்தனை கோபத்திலும் மேனு அழகாக இருப்பதை கவனிக்க முடிநத்து. சடையின் கருநாகம் போன்ற வளர்த்தி பயமுறுத்தியது. கல்யாணம் பண்ண வேண்டுடம். நல்ல கணவனாகப் பார்தது என் கணவனைப் போல இல்லாமல்.
போன் மறுபடி ஒலிக்க மேனு எடுத்தாள்.
"..."
"ராங் நம்பர்" என்றாள்.
எதிர் போன் மறுபடி ஏதோ கேட்க மேனகா "ஆமாம்..நம்பர் கரெக்ட்தான் உங்களுக்கு யாரு வேணும்"
"..."
"மிஸஸ் ராமச்சந்திரன் னு யாரும் இல்லை இங்கே"
"இரு" என்று அவளிடமிருந்து ராஜலட்சுமி போனைப் பிடுங்கிக் கொள்ள,
"யாரும்மா மிஸஸ் ராமச்சந்திரன்?"
ராஜலட்சுமி போனை எடுக்கும்போது அவள் கரம் நடுங்கியது.
"ராமச்சந்திரன்ங்கறது உங்கப்பா பேரு"
"ஹலோ யாரு?"
"மிஸஸ் ஏவி ராமச்சந்திரன் வீடுங்களா அது? நம்பர் கொடுத்தாங்க"என்று கேட்டது. நடுத்தர வயதுப் பெண்குரல்.
"ஆமாம் நீங்க யாரு?"
"நான் எம் ஆர் ஆஸ்பிட்டலருந்து மேட்ரன்பேசறேன்"
"என்ன விஷயம்?"
"உங்க ஹஸ்பண்ட் இங்கே அட்மிட் ஆகி போன ஒருவாரமா நினைவு இல்லாம படுத்திருக்காரு.
அட்மிஷன் ரிஜிஸ்தர்ல் அட்ரஸூம் போன் நம்பரும் இருக்குது. சார்ஜஸ் யாரும் எதும் கட்டலே.
அதுக்குத்தான்"

"அவருக்கு என்ன?"
"த்ராம்பாஸிஸ். நினைவில்லாம கிடக்கிறார். கேட் ஸ்கான்எடுக்கறதுக்கு எழுதிருக்கார் டாக்டர் ஆனா யாரும் பணம் கொடுக்காததனால.."
ராஜலட்சுமியையே மேனகா உற்றுப் பார்த்துக் கொண்டிருக்க
எம ஆர் ஆஸபத்திரி தெரியாதா? பூந்தமலலி ஹைரோடில ஈகா தியேட்டர் தாண்டினவுடனே திரும்பினிங்கன்னா.."
"ரூம் நம்பர் சொல்லுங்க"
"பதினாலுல படுத்திருககார் வரீங்களா? கேஷா கொண்டு வந்தா நல்லது"
"எத்தனை கொடுக்க வேண்டியிருக்கும்?"
"ஒரு ஆயிரத்து எழுநுத்து சொச்சம் பாக்கி"
"சரி வரேன்" என்றாள் ராஜலட்சுமி
"யாரும்மா?"
"உங்கப்பாடி"
"என்னவாம்"
"ஆஸபத்திரில பேச்சு மூச்சில்லாம படுத்திருக்காராம்"
"அதனால"
"பணம் பாக்கியிருக்காம்.. டிஸ்சார்ஜ் வாங்கிட்டு"
"என்னம்மா பேத்தறே? அவன் யாரு? அவனைப் போய் நீ என்ன பார்க்கறது?"
"அவன்லாம் பேசாதேம்மா. என்ன இருந்தாலும் உன் அப்பா அவர்"
"நோ மம்மி நோ அந்தாளு உன்னை விட்டு எத்தனை வருஷம் ஆச்சு"
அப்போது மேனு மூன்று வயதுக் குழந்தை
"அவன் மூஞ்சிகூடத் தெரியாதும்மா. உன்னைத் தனியா விட்டுட்டு யாரவ? அவ பேரு என்னவோ சொன்னியே யாரு அவ?"
"புனிதவல்லி"
ராஜலட்சுமி ஈரப புடவையை மாற்றிக்கொண்டு தலையை அவசரமாக வாரிக்கொண்டு பர்ஸில் இருக்கும் பணத்தை எண்ணி செக் புத்தகத்தை எடுத்துக்கொண்டாள்.
"என்னம்மா நான் சொல்லச் சொல்ல காது கேக்கலையா?"
"என்ன?"
"அங்கே போகப் போறியா?"
"ஆமாம் நீயும் வரே"
"நோ வே. இந்த ஜன்மத்தில் நடக்காது"
"மேனு அப்புறம் விதண்டாவாதம் பண்ணலாம் இப்போ என்கூட வந்தே ஆகணும். நீ வேணும்னா பார்க்க வரவேண்டாம்"
"மம்மி உனக்குப் பைத்தியம் புடிச்சிருக்கா"
பவுடர் போட்டுக் கொண்டு நெற்றிப் பொட்டை விஸ்தாரம் பண்ணிக் கொண்டு "பாரு உன் அப்பா இல்லை. என் கணவன் இல்லைன்னாலும் ஒரு ஸ்ட்ரேஞ்சர்னு வெச்சக்கலாமே"
"மம்மி யு ஆர் அன்பிலீவபிள். பாரத நாரி!என்ன இப்படி ஒரு மதர் இண்டியா வேஷம். பதினஞ்சு வருஷமா எட்டிப் பார்ககாத பன்னாடைக்கு"
"அதுக்கு முன்னாடி பதினஞ்ச வருஷம் பழகிருக்கேனே"
"இது பைத்தியக்காரத்தனம். நான் பரத்துக்கு போன் பண்ணிச் சொல்லப் போறேன்"
"எல்லாம் அப்புறம் வெச்சுக்கலாம். வரப்போறியா நான் தனியா போகணுமா?"
ஆட்டோவில்போகும்போது மழைவிடாமல்அவள் கால் ஓரத்துப் புடவையை நனைத்தது. சின்ன பள்ளங்களில்எல்லாம் துள்ளித் துள்ளி அந்த ஆட்டோ செல்ல மழை இரைச்சலின் இடையே மேனு புலம்பிக் கொணடே வந்தாள்.
"இந்த மாதிரியும் ஒரு ஆள்! இந்த மாதிரியும் ஒரு மனைவி"
"பேசாம வா முதல்ல அவரைப் போய் பார்ககலாம் என்ன ஸ்திதின்னு"
"அந்தாளு போயாச்சு. காலி க்ளோஸ்!"
எதற்காக அவரைப் பார்க்கப் போகிறேன்? என்னைப் பாடு படுத்தியதற்கு பகவான் கொடுத்த தண்டனையை கண்கூடாக ஊர்ஜிதமாகப் பார்ப்பதற்கா? இல்லை இன்னா செய்தாரை நாண

வைப்பதற்கா? ஏன்தான் இப்படிப் படபடப்பாக பதினைந்து வருஷம் காணாத கணவனை நோக்கிச் செல்கிறேன்?
"இந்த லெட்டர் யாரு எழுதிருக்கா?"
படிச்சப் பாத்தியே கடைசில என்ன எழுதிருக்கு? புனிதவல்லின்னு தானே"
"யாரு இந்த புனிதவல்லி?"
"யாராயிருநதா உனக்கென்ன"
"ஃப்ரெண்டா?"
"இப்போதைக்கு அப்படித்தான்"
"அப்புறம்?"
"கல்யாணம் பண்ணிக்க சான்ஸ் இருக்கு"
"இப்படி கூசாம நேரா ஆணி அடிச்சாப்பல தாலிகட்டின பெண்டாட்டிகிட்ட சொல்றியே பிராமணா.. இது நியாயமா? நான் என்ன குறை வெச்சேன் உங்களுக்கு"
"ஒரு குறையும் இல்லை ராஜி"
"பின்னே எதுக்கு இவ?"
"அது வந்து ஒரு விதமான தேவையாய்டுத்து ராஜி. உனக்கு சொன்னா புரியாது உனக்கு எந்த விதமான குறையும்இல்லாம.."
"உங்கப்பாவுக்கு தந்தி கொடுத்து வரவைவழையுங்கோ"
"வரவழைச்சா போச்சு.எனக்கு பயமில்லை"
"எனக்கு புகலிடம்இல்லை தைரியம் இல்லை படிப்புஇல்லை சாமர்த்தியம் இல்லை ஒரு வேலை பார்க்கத் தெம்பு இல்லேங்கறதாலதானே இப்படி அழிச்சாட்டியமா"
"பி ரீஸனபிள் இதனால எந்த விதத்தில நீ பாதிக்கப் படறே? உன்னண்ட கறை இருக்கணும்னு கட்டாயம்இல்லை. பலபேர் ரெண்டு பெண்டாட்டி கல்யாணம் பண்ணிண்டு சந்தோஷமா இருக்கா தெரியுமோல்லியோ பெருமாளே தவி பூதேவின்னு "
"எனக்கு சந்தோஷம் கிடையாது இதில"
"இப்ப யாரு கல்யாணம் பண்ணிக்கப் போறதா சொன்னா? ஒருபேச்சுக்கத்தானே சொன்னேன். அசடு போ மூஞ்சி அலம்பிண்டு பிளளையார் கோயிலுக்கு போயிட்டு வா"
"தயவு பண்ணி எனக்கு துரோகம் பண்ணிடாதிங்கோ எனக்கு அப்பா அம்மா யாரும் இல்லை அண்ணா வீட்டுல எனக்கு வாழ்வு இல்லை. ஒண்டியா என்னால எதும் யாரையும் எதிர்கக முடியாது. ப்ளீஸ் என்னைக் கைவிட்டுடாதிங்கோ"
"சே அபபடி நடக்காது. எழுந்திரு. காலை விடு முதல்ல"

மேனாக ரிஸப்ஷனில் இருப்பதாகச் சொன்னாள். "எனக்கு யாரையும்பார்க்கவேண்டாம். சரியா அரைமணிதான் காத்திருப்பேன்"என்றாள்.
"எங்கேயும்போயிடாதே செல்லம் ப்ளீஸ்! இன்னிக்கு மட்டும அம்மாவுக்கு ஒத்தாசையாஇரும்மா"
"அழாத போ"
பதினாலாம் எண் அறையை மெல்ல அடைந்தாள் ராஜலட்சுமி.

Authors note:
This short novel will be given in three parts In this instalment you may notice the technique of the implied flash back used.The flashback sequence is easily recognized by the narrative comtent itself. This story appeared in `Anandavikatan` and has been dramatised into a tv play.

## Part 2

பதிநாலாம் எண் அறையை மெள்ள அடைந்தாள் ராஜலட்சுமி. வெண்மை சக்கரத் திரை லேசாக ஃபேன் காற்றில் அசைந்துகொண்டிருக்க,ட்ரிப் கொடுத்து மார்வரை போர்ததி அந்த ஆசாமி படுத்திருந்தான். வாயில் குழாய் சொருகியிருந்தது. அறையில் வேறு யாரும்

இல்லை. ராஜலட்சுமி படுக்கையில் கால்மாட்டை அணுகினாள். கண்ணீர் இயல்பாக வடிந்தது. ராமச் சந்திரனின் முகத்தில் ஒரு வாரத்துக்கு உண்டான தாடி இருந்தது. ஊசிக்காக பொத்தல் பண்ண பல இடங்களில் கரு ரத்தமாக இருந்தது. வாய் திறந்திருந்தது. மூச்சு மட்டும் கேட்டுக் கொண்டிருக்க கண்கள் மூடியிருந்தன.

'இந்த முகமா இந்த முகமா இதுவரை நான் பிரிந்த கணவன்?'
"நீ சிவப்பா நான் சிவப்பா சொல்லு"
"நீங்கதான் இதிலென்ன சந்தேகம்."
"சின்ன வயசில கடுக்கன் போட்டுண்டு காது தொள்ளைக்காதா போயிருக்கும்.வைர கனம் தாங்காம. எங்கப்பா பாபநாசம் மைனர்னு பேரு.ஆயிரம் வேரில நிலம் ஒழிச்சே கட்டினார்"
"வந்துட்டிங்களா?" என்று குரல் கேட்கத் திரும்பினாள்.ஒரு நர்ஸ் விரைவாக உள்ளே வந்தாள். அவள் கர்ப்பமாக இருந்தாள்.
"இவர்தான்.. இவர்தான்"
"அவங்க சம்சாரமா நீங்க?"
"ஆமாம்மா"
"ராஜலட்சுமி உங்கபேரு?"
நர்ஸ் சார்ட்டைப் பார்தது கையை எடுத்து நாடி பிடித்து கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டாள்.
"இப்போ இவருக்கு எப்படி இருக்கு?"
"டாக்டர் சொல்வாரு. ஆமா ஒரு வாரமா இந்த மாதிரி போட்டுட்டு போயிட்டிங்கன்னா எப்டிங்க? யாருன்னு தெரியும்?கேட்ஸ்கான் எடுக்கணும்னு ந்யுரே என் எஸ் அனத்தாறாரு"
"இவருக்கு எப்படி இருக்கு?"
"அதான் பாக்கறிங்களே பெட்ஸோர் வராம பாத்துக்கிட்டு இருக்கோம். அவ்வளவுதான்"
"பேசறாரா?"
"மாரைச் சொறிஞ்சா எப்பவாவது முழிச்சுப்பாரு. அந்தம்மா யாரு முதல்ல வந்தாங்களே"
பதில் சொல்லவில்லை.
"பேசாம டிஸ்சார்ஜ் வாங்கிட்டு வீட்டுக்கு எடுத்துட்டுப் போயிருங்க . இங்க ஒரு நாளைக்கு இருநுத்தம்பது ஆகுதில்லை"
"ராமு சார்" என்று வலுக் கட்டாயமாக ராமச்சந்திரனை ஆட்டினாள் நர்ஸ்.திடுக்கிட்டு விழித்துக் கொண்டு பார்த்தான்.
"நான் வந்திருக்கேன்" என்றாள். "தலையணை மாத்திரலாமா?" கண்கள் கலங்கியிருந்தன.எலும்பாக இருந்த கையைப் பிடித்தாள்.
"ராஜி வந்திருக்கேன்" என்றாள்
கண்கள் அவளை அடையாளம் தேடின. கண்டு கொண்டனவா கண்டு கொண்டபின் துக்கப் பட்டனவா.. எதும் தெரியாமல் மறுபடி கண்மூடிக் கொண்டான்.
"பேசுவாரா?"
"இல்லிங்க பேச்சு மூவ்மெண்ட் எதும் இல்லை. லம்பார் பங்ச்சர் எடுத்தப்ப கட்டி கட்டியா ரத்தம்.
"ஆகாரம்?"
"எல்லாம் ட்யுப் வழியாத்தான். எஸ் என் வந்தா கேட்டுருங்க டிஸ்சார்ஜ் பண்ணிட்டு வீட்டுக்கு எடுத்துட்டு ஒரு நைட் நர்ஸைப் போட்டு வெச்சுக்கறதுதான் நல்லது"
"அவங்க யாரும் வல்லையா?"
"யாரு? வந்து அட்மிட் பண்ணதோட சரி. க்ஷஒருசிவ்த்த ஆளு அந்தம்மா கூட வந்திருந்தாரு என்னவோ அவங்களுக்குள்ளயே பேசிக்கிட்டாங்க'அவளை வரச்சொல்லி ஒப்படைச்சுரு'ன்னு திருப்பித் திருப்பி வாதாடிக்கிட்டிருந்தாங்க. அவங்க கிட்ட கொஞ்சம் கடுமையாக் கூட இருக்க வேண்டியிருந்தது. பேரு என்னவோ சொன்னாங்களே ராமு ராமுன்னு கூப்பிட்டுக்கிட்டே இருந்தாங்களே?"
"புனிதவல்லி"
"ரெண்டு சம்சாரமா? ராமு சார், பெரிய ஆளு நீங்க" என்று ராமச்சந்திரனின் கன்னத்தை லேசாக நர்ஸ் தட்ட அதற்கேற்ப தலை ஆடியது.

"நீங்க மூத்தவங்களா?"
"ஆமாம்"
"எத்தனை நாளா இப்படி?"
ராஜலட்சுமி சட்டென்று முகத்தை மூடி விசும்பி விசும்பி அழுதாள்."
என் எஸ் வர்ற நேரம் அழுவாதிங்க கோவிப்பாரு"
கண்களைத் துடைத்துக்கொண்டு "கீழே என் பெண் மேனகான்னு.. வரச்சொல்றிங்களா?"
"வார்டு பாய் கிட்ட தகவல் சொல்லி அனுப்பறேன்.டிஸ்சார்ஜ் வாங்கிடட்டு போயிருங்க செலவு குறையும். எனக்கென்னவோ அதிக நம்பிக்கையா தெரியலிங்க. நெறைய ரெஸ்ட் எடுத்தா செலப்ப சரியாகும். பிரெட் ஏதாவது வேணுமா சொல்லுங்க"
"இதுதானா எங்கப்பா?"
திடுக்கிட்டுத் திரும்ப மேனகா நின்று கொண்டிருந்தாள்.
"இதானா அந்தாளு?"
"சத்தம் போடாதிங்கம்மா. மற்ற ரூம்கள்ள பெஷண்டுங்க இருக்காங்க இல்லை? பாப்பா நீ இவரு மகளா?"
"அப்டின்னு சொல்லித்தான் தெரியும். மம்மி பாத்தாச்சில்லை..போக வேண்டியதுதானே? அப்றம் ஆடடோ பஸ் எதும் கிடைக்காது"
"இரு மேனு டாக்டர் வரப்போறாராம் அவரைப் பாத்து"
"அவரைப் பாத்து?"
"என்ன விஷயம்னு கேக்கணும் யாராவது பொறுப்பேத்துக்கணும்லே?"
"மம்மி இதில நாம தலையைக் கொடுக்கறது நல்லதில்லை.நான் கீழே ஆபிஸ்ல விசாரிச்சேன் முதல் மூணு நாளைக்கு பேமெண்ட் பண்ணிருக்கா.அதுக்கப்புறம் யாரும் வரலை. பாக்கி மட்டும் ஆயிரத்து எழுநுறு ரூபா இருக்கு.அதைக் கொடுத்தாத்தான் டிஸ்சார்ஜ் பண்ணுவா"
"பணம் பெரிசில்லை மேனு"
"அந்த பொம்பளை வந்திருந்தாங்களாம்மா?"
"சொன்னனே.. முதநாள் மட்டும் வந்து ரெண்டு பேத்துக்குள்ள ஏதோ வாக்குவாதம் பண்ணிக்கிட்டாங்க அதுக்கப்றம் யாரும வரலை"
"அவங்க அட்ர்ஸ் இருக்குமா"என்று மேனகா கேட்டாள்.
"ரெஜிஸ்தர்ல இல்லை"
"ரெஜிஸ்தர்ல நம்ம அட்ரஸ் போன் நமபர் எல்லாம் கரெக்டா அவா யாரோ கொடுத்திருக்காம்மா.ரொம்ப க்ளெவரா பண்ணியிருக்கா.எனக்கு அந்த புனிதவல்லி எங்கே தங்கிருக்கான்னு தெரிஞ்சாகணும்"
; "மைலாப்புர்ல எங்கயோ இப்ப அதுக்கென்ன?"
"அதுக்கென்னன்னா? இந்தளை டிஸ்சார்ஜ் பண்ணி குண்டுகட்டா அவ வீட்டு வாசல்ல கொண்டு வெச்சுட்டு வரவேண்டாமாம்மா?"
"என்ன மேனு?"
"ஆமாம்மா சரியா கேட்டுக்கோ இவனை வீட்டுக்கு கீட்டுக்கு அழைச்சுண்டு வர்றதா எதாவது யோசனை இருந்தா கைவிட்டுரு !முதல்ல இபபடி திருட்டுத்தனமா நம்ம விலாசத்தை கொடுத்துட்டு அவா பொறுப்பில இருந்து கழட்டிக்க முடியாது"
"மேனு இந்த சமயத்தில் இதெல்லாம் பத்தி ஆர்க்யு பண்ண வேண்டாம்னு தோணறது"
"பேச்சே கிடையாது.சிஸ்டர் இந்தாளு எங்கம்மாவை எப்படி ட்ரீட் பணியிருக்கார் தெரியுமா? என் அண்ணா பரத் சொல்லியிருக்கான்.அப்போது நான் கையில குழந்தை. மழையில நிஜமாவே தமிழ் சினிமாவில வர்றா மாதிரி வாசல்ல தள்ளி கதவைச் சாத்தி யிருக்கார். ஒரு மெடிக்கல் ஷாப்பில ராத்திரி மழை நிக்கற வரைக்கும் காத்திருந்தோமாம் ராத்திரி சாப்பாடே இல்லை. இவங்க அண்ணா வீட்டுக்குப் போய் கதவைத் தட்டியிருக்காங்க அவங்க சம்சாரம் பால்கனியில் இருந்தே திருப்பி அனுப்பியிருக்காங்க இதெல்லாம் இமாஜின் பண்ணிப் பார்க்க முடியாது உங்களால. வாங்க மம்மி போகலாம்"
"அப்படியா? ராமு சார் அப்பபேர்ப்பட்ட ஆளா நீ" என்று பத்திருந்தவன் கன்னத்தை நர்ஸ் தட்டுவதற்கேற்ப தலை மறுபடி ஆடியது.

"எந்த நியாயத்தின் பேர்ல நாங்க இவரை உள்ள சேர்ததுக்க முடியும் சொல்லுங்க-" நர்ஸ் "இப்போ இந்தாளு இதுக்கெல்லாம் பதில் சொல்லக்கூடிய நிலையில் இல்லை ஒரு மூட்டை மாதிரிதான்.பிளாட்பாரததில் விட்டாலும் படுத்திருப்பார்.அப்படியே இருப்பார்" "காது கேக்குமா?" மேனாக சார்ட்டைப் பார்ததாள் கத்தையாக காகிதங்களில் பத்து நாள் சரித்திரம் எழுதியிருந்தது.ஸெரிப்ரல் த்ராம்பாஸிஸ், எம்பாலிஸம் என்றெல்லாம் எழுதியிருந்தது.
"இல்லை கேக்காது" .நர்ஸ் திடீர்என்று மௌனமாகி சைகை மூலம் பெரிய டாக்டர் வருவதைக் காட்டினாள்.

## Part 3

பெரிய டாக்டருக்கு அதிகம் வயசாகவில்லை.முப்பத்தைந்து இருககலாம் போல. வெள்ளைக் கோட்டின் பையருகே"ஜி.ஆர்.கோபிநாத்"என்று எழுதியிருந்தது "ஹலோ அட்லாஸ் ஸம்ஒன் என்னம்மா எல்லாரும் இந்தாளை த்ராட்டில வுட்டுட்டுப் போயிட்டிங்க?"
"இவங்க முதல் சம்சாரம் டாக்டர்"
"யாராயிருந்தாலும் தினப்படி யாராவது பொறுப்பேத்துக்கணும் அண்டர்ஸ்டாண்? நீங்க டாட்டாரா?"
மேனகா தலையசைத்தாள்.
"லுக் யங் லேடி, யுர்ஃபாதர் இஸ் ரியலி ஸிக்.கண்ட்ரோல் பண்ணாத டயப்படிஸ், ஹைப்பர் டென்ஷன், ஆர்ட்டிரியல் திக்கனிங், த்ராம்பாஸிஸ் ஆகி ப்ளாட் க்ளட் ஆகியிருக்கு அஃபேஸியா இருககு எல்லாம் சேர்ந்து ஒரு பக்கமே பாரலைஸ் ஆகியிருககு.நிறைய க்ளாட்ஸ் இருக்கும் போல இருக்கு அதைக் கரைக்கத்தான் தொடர்ந்து மருந்து கொடுததுக்கிட்டு இருக்கம் ஒரு ஸி.டி.ஸ்கான் எடுக்கணும் எந்த அளவுக்கு டாமேஜ்னு தெரியணும். ..யாரு பொறுப்புன்னு பார்த்தா அட்மிட் பண்ணவங்க ஆளையே காணம்ங்கறாங்க.ரொம்ப வினோதம்"
"நான் சொல்றேன் டாக்டர்"
"மேனு சும்மாரு.டாக்டர் இவர் உயிருக்கு ஆபத்தா?"
"அப்படி இல்லை பெட்ஸோர் இல்லாம பாத்துக்கிட்டு வேளாவேளைக்கு ஃபீட் பண்ணா பத்துநாள்ள சில ஃபாகல்ட்டிஸ் எல்லாம் திரும்ப பெற சான்ஸ் இருக்கு. எழுந்து நடக்க முடியாட்டாலும் ரைட் ஹாண்ட் கண்ட்ரோல் வரும்னு நம்பிக்கை இருக்கு"
"டாக்டர் திஸ பாஸ்டர்ட் ட்ரீடடட் மை மதர் லைக் ஷிட்" என்று ஆரம்பித்த மேனகாவைத் திரும்பி நிதானமகாப் பார்த்து"லுக் இந்தாள என்னைப் பொறுத்தவரையில ஒரு பேஷண்ட். இவர் பர்ஸனல் லைஃப்ல எப்படி இருந்தார்னு எனக்கு அக்கரை இல்லை கொலைகாரனா இருந்து பெயில்ல வந்தாலும் இதே ட்ரிட்மெண்ட் தான் கொடுப்பேன்.எனக்க இவர் ஒரு பல்ஸ் ஒரு மூச்சு ஒரு எக்ஸ்ரே ஒரு ஸ்கான் இமேஜ் ஒரு ஸிண்ட்ரோம் அவ்வளவுதான்"
"அந்த ஸகான என்னவோ சொன்னிங்களே அதை எடுக்க எத்தனை பணமாகும்?"
"ஆபிஸ்ல கேளுங்கோ சொல்வா நாளைக்கு எடுத்துரலாம்.இவரை இன்னம் பத்து நாளாவது வெச்சுக்கிட்டா நினைவு வர சான்ஸ இருக்கு.இப்பவே நிறைய இம்ப்ரூவ்மெண்ட் மாரைப் பிராண்டினா முழிச்சுப்பார் பாருங்க"
டாக்டர் "ராமசசந்திரன் வேக் அப் வேக் அப் ராமச்சந்திரன் .. யார் வந்திருக்கா பாருங்க " என்று மூர்க்கத்தனமாக அசைத்தார்.
"பததுநாள் கழிச்சு அவரால பேச முடியுமா?" என்றாள் மேனகா.
"பேச்சு வரதுக்கு கொஞ்ச நாள் ஆகலாம்"
"சொல்றதைப் புரிஞ்சுப்பாரா?"ராமச்சந்திரன் கண் விழித்து விழிகள் உருண்டன. "இப்பவே அரசல் புரசலா புரியும்.என்ன ராமச்சந்திரன் இது யாரு சொல்லுங்கோ? உங்க டாட்டர்"
"அவர் பதினஞ்சு வருஷமா பாத்ததில்லை டாக்டர்"
"அப்டியா? எங்கயாவது அமெரிக்காவில இருந்தாளா?"
"இல்லை, அசோக் நகர்ல" என்றாள் மேனகா
இப்போது மேனகாவை உற்றுப் பார்தத டாக்டர்"ஸாரி பர்னஸனல் ட்ராஜடி போல இருக்கு

சரியானப்புறம் இந்தாளை உலுக்கிரலாம் கவலைப்படாதிங்க" என்றார்.
நர்ஸ் அவர் போனதும் "இண்டியாவிலயே இவர்தாங்க பெரிய ந்யுரோ ஸர்ஜன். என்ன யங்கா இருக்கார் பாருங்க"
மேனகா அதை கவனிக்காமல் "மம்மி போகலாமா?"
"இல்லை. ராத்திரி நான் இங்கயே இருக்கேன் நீ போய் மாற்றுப் புடவையும் டாய்லெட் செட்டும் கொண்டு வந்துரு கார்ததால காலேஜீக்கு போன் பண்ணிச் சொல்லிரு நாலு நாளைக்கு வரமாட்டேன்னு"
அவள் சொல்வதில் கவனமில்லாமல் மேனகா தன் தாயையே ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்து "திஸ் லேடி இஸ் அன்பிலீவபிள்"என்றாள்"சிஸ்டர் இந்தாள் சூட்டுத் தழும்பு இருககு எங்கம்மா புஜத்தில"
"மேனு ஜாஸ்தி பேசாம போறியா இப்ப?"
மேனகா படுத்திருந்த ராமச்சந்திரனைப் பார்த்து "பாருய்யா பாரதப் பண்பாடு! சட் யு ஆர் டிஸ்கஸ்டிங்" விருட்டென்று புறப்பட்டுச் சென்றாள்.
போனதும் நர்ஸ் "இந்த வயசில புரியாதுங்க"என்று தன் வயிற்றைத் தடவிக் கொண்டாள்.

***

தினம் காலை மேனகா ஆட்டோ ரிக்ஷாவில் அவிஷ்கார் ரெஸ்டாரண்ட்டிலிருந்து அம்மாவுக்கு சாப்பாடும மாற்று உடையும் கொண்டு கொடுத்து விட்டுத்தான் காலேஜ் போவாள். மாலை திரும்ப வந்ததும் காபி டிபன் வாங்கிக்கொடுப்பாள்.தாய்க்கும் மகளுக்கும் அதிகம் பேச்சே இல்லை. ராஜலட்சுமிதான்"இன்னிக்க முழிச்சு முழுசா என்னைப் பார்த்தார்" என்பாள்.
"அடையாளம் தெரிஞ்சாப்பல இருந்தது கண்ணுல தண்ணி வந்தது"
"மருந்தோட ரியாகஷ்னா இருக்கும். மம்மி உன்னை ஒண்ணு கேக்கணும்"
"என்ன?"
"இவர் நிஜமா பிழைச்சு எழுந்து நடமாடறார்னு வெச்சுக்கோ என்ன செய்யறதா உத்தேசம்?"
"என்ன செய்யறதுன்னா?"
"எங்க தங்கப் போறார் எங்க அன்பான அபபா? பரத்துக்கு எழுதினேன்
அவனும் நம்பவே இல்லை"
"நம்ம கூடத்தான்"
"நோ வே நான் ஹாஸ்டல் போயிருவேன். ஐ ஜஸ்ட் காண்ட் ஸ்டாண்ட் திஸ் ரோக்"
"அதெல்வாம் அப்புறம் பேசிக்கலாம் முதல்ல பிழைச்சு எழுந்திருக்கட்டும்.
"அந்தப் புனிதவல்லிகிட்டருந்து தகவல் உண்டா?"
"இல்லை.அவா கைகழுவிட்டான்னு தோணறது"
"சக்கையா உறிஞ்சுட்டு இந்தாளை கொட்டை துப்பறாப்பல துப்பிட்டா அதைப் பொறுக்கி வெச்சுண்டிருக்கே மம்மி நீ என்ன நிருபிக்க விரும்பறே-"
"ஒண்ணுமில்லை மேனு.ஒண்ணுமே நிருபிக்க விரும்பலை"
"இவர் உன்னைப் படுத்தினதெல்லாம் மறந்து போச்சா?"
"இல்லை"
"பின்னே எதுக்காக?"
"ஏதோ ஒரு அனாதைக்கு செய்யறதா ஒரு மனிதாபிமானமா வெச்சுக்கலாமே. அதோட பழைய பந்தம்னு ஒண்ணு அது என்னவோ எங்க தலை முறையில அழியாத பந்தம்னு தோணறது"
"இன்க்ரெடிபிள் லேடி"என்று அவள் அருகில் வந்து க்னனத்தோடு ஒட்டித் தேய்த்து விட்டுச் சென்றாள் மேனகா.

***

டாக்டர் கோபிநாத் எதிர்பார்த்தபடியே எட்டாம் நாள் ராமச்சந்திரனுக்கு முழு நினைவு வந்தது வலது கையை அசைக்க முடிந்தது.கண்களில் அடையாளம் தெரிந்தது.

"என்னைத் தெரியறதா?"
தலையை ஆட்டினான்.
"பேச மாட்டாரா?"
"பேச்சு வரதுக்கு இன்னும் மூணு நாலு நாள் ஆகும்"
அபபோதுதான் உள்ளே வந்த மேனகாவைப் பார்த்து டாக்டர்"மேனகா நான் சொன்ன வாக்கை காப்பாததிட்டேன்.உங்கப்பாவுக்கு முழு நினைவு வந்துடுத்துது என்ன என்னவோ கேக்கணும்னியே என்ன வேணா கேட்டுக்க தி மான் இஸ் ல்யுஸிட் நௌ.
"சிஸடர் இன்னிக்கு வார்டு பாயை ஷேவ் பண்ணச் சொல்லுங்க"
மேனகா தன் தகப்பனாரை கண்கொட்டாமல் பார்த்தாள்.
"பேசறாரா?"
"இல்லை புரிஞ்சுக்கறார். இவ யாரு தெரியறதா?" கலங்கிய கண்கள் அவளை ஏறிட்டுப் பார்த்து அடையாளம் தேடின.
"இவ மேனகா! அப்போ மூணு வயசு. உங்க பொண்ணு மேனகா.. மேனகா"
ராமசசந்திரனின் கண்கள் தன் மகளை மெதுவாக நிரடின.
மேனகா படுக்கையருகே வந்து மிக அருகில் நின்றாள்.
"சொன்னியாம்மா? எட்டு நாளா நீ இவருக்கு மூத்திரம் பீ வாரினதை சொன்னியாம்மா? உன்னை நடுதெருவில துரததி விட்டதுக்கு எப்படி எங்களை யெல்லாம் வளர்த்தே . சொன்னியாம்மா?எப்படி ஆளாக்கினே, எப்படி நீ வேலைக்குப் போப்ச் சேர்ந்து எங்களை படிக்க வெச்சே சொல்லும்மா உறைக்கட்டும் சொல்லு"
"மேனு அதெல்லாம் வேண்டாம்"
ராமச்சந்திரனின் கை மெதுவாக அசைந்து உயர்ந்து மேனகாவின் கையில் வைத்திருந்த நோட்டுப் புத்தகத்தைக் காட்டியது.
"என்ன சொல்றார்?"
"நோட்டு வேணுங்கறார் போல இருக்கு"
"எதாவது எழுதணுமா?"
ராமச்சந்திரன் தலையை அசைக்க மேனகாவிடமிருந்து பேனாவையும காகிதத்தையும் வாங்கி அவன் மடியில் ராஜலட்சுமி வைத்தாள் ராமசசந்திரன் விரலிடுக்கில் பேனாவை வைக்க அவன் மெல்ல எழுதினான்:-
"புனிதவல்லி எங்கே?"

## 13. ஜன்னல்

ஆச்சா. முதல் காரியமாக ஒரு காயிதம் எழுதினேன். ரொம்ப மோசமான தமிழில். தமிழ், காதல் காயிதம் எழுதுவதற்குத் தகுதியான மொழியில்லை. இங்கிலீஷில் விளையாடியிருப்பேன். அந்தப் பெண்ணுக்கு இங்கிலீஷ் வராது. எப்படி எழுதினேன்? உன்னைப் பார்த்ததிலிருந்து எனக்குச் சாப்பாடே பிடிக்கவில்லை... உனக்குப் பட்டுப்புடவை வேண்டுமா? உன் போட்டோ அனுப்பு, பூஜை பண்ண வேண்டும். இப்படிக்கு என் பெயர்.

ஏய் எங்கேடா ஓடுகிறாய், மிச்சத்தையும் எழுதாமல்..?

_ இப்படித்தான் காதலிக்க _ இப்படிதான் காதலிக்கிறார்கள்.

* * * * *

அவன் நுழைந்தபோது அந்த இடத்தில் ஐந்தாறு பேர்கள் உட்கார்ந்திருந்தார்கள். நடுவே ஒரு பழைய வீக்லி கந்தலாக இருந்த□து. அலமாரிக்குள் நிறைய மருந்துகள் அடுக்கி இருந்தன. பாதி கண்ணாடியும் பாதி மரமுமாக இருந்த தடுப்பின் கண்ணாடி பகுதி கன்ஸல்டிங் நேரம் மாலை ஆறிலிருந்து எட்டரை வரை என்றது; தடுப்புக்கு அந்தப் பக்கம் டாக்டர் ஆ சொல்லு என்று சொல்வது கேட்டது. ஒரு மின்விசிறி மிக மெதுவாகச் சுழன்று கொண்டிருந்தது. அதன் நிழல் சுவற்றில், பெஞ்சின்மேல், அந்த பெண்ணின் மார்பின்மேல், புத்தகங்களின் மேல் என்று மடங்கியும் நிமிர்ந்தும் நெளிந்தும் சுழன்று கொண்டிருந்தது.

புதிதாக வந்தவன் பெஞ்சில் இருந்த வெற்றிடத்தை உடனே அடைத்து உட்கார்ந்தான். எதிரே இருப்பவரைப் பார்த்து புன்னகைத்தான். அவர் மஃப்ளரின் நிழலில் பதில் புன்னகை செய்யவில்லை. அவர் அருகில் இருந்த பெண் தன் புடவையை இன்னும் சரிசெய்து மறைத்துக்கொண்டு இன்னும் நெற்றியைச் சுருக்கிக் கொண்டாள்.

புதிதாக வந்து உட்கார்ந்தவனுக்கு நாற்பது வயதிருக்கலாம். அல்லது நிஜ நாற்பதாக இல்லாமல் முப்பது வயது முதிர்ந்த நாற்பதாக இருக்கலாம். அவன் சிரிக்க முயன்றதில் பொதுவாக ஒரு சிநேகிதம் விரும்பும் தன்மை இருந்தது. பக்கத்தில் இருப்பவரிடம் கேட்டான்.

ரொம்ப நேரமாக காத்துக் கொண்டிருக்கிறீர்களோ?
ம்? என்றார் அவர்.
அவன் கேள்வியை மறுபடி கேட்க பதினைந்து நிமிஷம் என்றார்.
அந்த அம்மாள் அவனைப் பார்த்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு குழந்தைக்கு மீஸில்ஸா? என்று கேட்டான்.

குறிப்பிட்ட குழந்தை ஜுர வேகத்தில் தூங்கிக்கொண்டிருக்க அதன்தாய் பதில் சொல்லவில்லை. அந்தப்பெண் இன்னும் அவனை வெறுத்தாள்.

அந்த அறைக்கதவு திறந்து உள்ளே ஆ என்று சொல்லக்கேட்டதற்கு ஆ என்று சொன்னவர், கையில் ஒரு புதிய, வெளுத்த காகிதத்துடன் வெளியே வந்தார். டாக்டர் தெரிந்தார். குட்ஈவினிங் டாக்டர் என்றான்.

டாக்டர் ஈவினிங் என்று பதில் சொன்னார். அவனைப் பார்க்கவில்லை. நீங்க வாங்க அம்மா என்றார். அந்தப் பெண் உள்ளே சென்றாள். உடனே எல்லோரும் மௌனமாக, சிரத்தையாக கண்ணாடிக்குப் பின் கேட்கப்போகும் வார்த்தைகளில் கவனமாக இருந்தார்கள்.

அவள் பேசுவது தெளிவாகக் கேட்கவில்லை. தாழ்வாக இருந்தது. அவள்_டாக்டர் சம்பாஷணை.

புதிதாக வந்து உட்கார்ந்து சிநேகிதம் தேடின ஆசாமி பக்கத்தில் இருப்பவரை உங்களுக்கு என்ன? என்று கேட்டான். கையிலே கட்டி என்று கையைக் காட்டினார். பென்ஸிலின் நாலு இன்செக்ஷன் போட்டு நேற்றுதான் உடைஞ்சுது, அப்படியா சற்றுத் தாழ்ந்த குரலில் இவர் நல்ல டாக்டர் ஸார். கைகாரர் ஸார். நல்ல காசு என்றார் அவரும் தாழ்ந்த குரலில். நான் இவரிடம் இப்பொழுதுதான் முதல் தடவை வருகிறேன். இவரிடம் வந்ததே சரியா என்று எனக்குத் தெரியவில்லை. எனக்கு உடம்பு சரியா இல்லையா என்பதுகூட எனக்குச் சொல்லமுடியாது. எனக்கு இவர் வைத்தியம் சொல்ல முடியுமா என்பதுகூட எனக்குச் சரியா சொல்ல முடியாது...

உனக்கு என்ன என்று அவர் கேட்கவில்லையே என்று வருத்தப்பட்டான். அப்படியா என்று மட்டும் சொல்லியிருந்தார்.

அடுத்த தடவை டாக்டர் கதவைத் திறந்தபோது அவன் டாக்டர் ஒரு நிமிஷம் என்று சற்று உரக்கவே சொன்னான். எல்லோரும் அவனையே பார்த்தார்கள்.

டாக்டர் எனக்குக் கொஞ்சம் அவசரம். என்னைக் கொஞ்சம் சீக்கிரம் அனுப்பிவிட முடியுமா?

என்ன உங்களுக்கு ஜுரமா? என்று கேட்டார் டாக்டர்.
இல்லை
பின் என்ன?
உள்ளே வந்து சொல்கிறேனே என்று அசந்தர்ப்பமாகச் சிரித்தான்.
டாக்டர் சற்று இருங்கள். இந்த பேஷண்டைப் பார்த்துவிட்டுக் கூப்பிடுகிறேன். ராமநாதன் வாங்க என்றார்.
ராமநாதன் (கையில் கட்டி) உள்ளே சென்றார்.

மற்றவர்கள் அவனை, க்யூவை மீறப்போகும் அவனைப் புதிய வெறுப்புடன் பார்த்தார்கள். அவர்கள் மறுக்க மாட்டார்கள் எனத் தோன்றியது. டாக்டர் கோபக்காரராக இருக்கலாம். டாக்டர் பொதுவாகவே தீவிரமாக வரிசை முறையைப் பாதுகாத்தவராக இருக்கலாம். அவன் சிநேகிதம் தேடும் முயற்சியை விட்டுவிட்டான். அந்த வீக்லியை அவன் எடுத்துப் பிரித்தான். அதை கவனமில்லாமல் திருப்பினான்.

மற்றொரு பெண் நுழைந்தாள். அவளுடன் ஒரு நான்கு வயதுப் பையன் வந்தான். வந்தவுடன் உட்கார்ந்திருந்தவர்களை எல்லாம் பார்த்தான். வீக்லியைப் புரட்டிக் கொண்டிருந்தவன் சற்று ஒதுங்கி அவனுக்கு இடம் தர சின்னப் பையன் சுதந்திரமாக உட்கார்ந்து கொண்டு அதில் ஏரோப்ளேன் படம் இருக்கா என்று கேட்டான். அவன் வீக்லியைத் தீவிரமாக ஆராய்ந்து ஏரோப்ளேன் படம் தேடினான். பையன், பக்கங்கள் புரட்டப்பட அது என்ன இது என்ன என்று கேட்டான்.

நீங்க வாங்க ஸார் என்று கதவு திறந்ததும் டாக்டர் கூப்பிட்டார். உள்ளே இருந்தவர் மெதுவாகப் பேசிக்கொண்டே வந்தார். வீக்லியைப் பையனிடம் கொடுத்துவிட்டு அவர் கட்டியைப் பற்றி விசாரித்துவிட்டு அவன் உள்ளே சென்றான். அவன் உள்ளே வந்ததும் டாக்டர் கதவைச் சார்த்தினார்.

டாக்டர் உட்கார்ந்திருந்த நாற்காலிக்கு எதிரில் சிறிய மேஜை இருந்தது. அதில் எனாமல் தட்டில் இருந்த பஞ்சில் இருந்த ரத்தம் அவனைக் கவர்ந்தது. அதையே பார்த்துக் கொண்டிருந்தான். உட்காருங்கள் என்றார் டாக்டர். அவன் டாக்டர் அருகில் இருந்த ஸ்டூலில் உட்கார்ந்தான். டெலிபோன் இருந்தது. அந்த மின் விசிறியின் நிழல் கண்ணாடித் தடுப்பையும் அடிக்கடி வருடிக் கொண்டிருந்தது.

என்ன உங்களுக்கு?

டாக்டர் நான் உங்களுடன் பேசவேண்டும். என் பெயர் சீனிவாசன். சாதாரணப் பெயர்! எனக்கு ஏதும் ஜுரமில்லை. ஜலதோஷமில்லை. நான் பக்கத்து பில்டிங்கில் இருக்கிற வங்கியில் வேலை செய்கிறேன். அங்கே நான் ஒரு காம்ப்ட்டாமீட்டர் ஆப்பரேட்டர். எனக்கு ஒரு விதமான பயம் இருக்கிறது.

டாக்டர் அவனையே பார்த்துக்கொண்டு அவன் மேலே பேசக்காத்திருந்தார்.

காம்ப்ட்டாமீட்டர் என்கிறது கூட்டல் யந்திர மிஷின். சென்ற ஒன்பது வருஷங்களாக நான் அந்த யந்திரத்திலே கூட்டல் செய்திருக்கிறேன். அதுதான் என் வேலை. எண்கள் எண்கள் எண்கள். அனுமார் வால் போல அன்றன்றைக்கு ட்ரான்ஸாக்ஷன்களை எல்லாம் அதில் டைப் அடித்துக் கூட்டிக்கொண்டே இருக்க வேண்டும். ஒரு நாளைக்கு எட்டு மணிநேரம். ஒரு வாரம் ஒரு மாதம் ஒரு வருஷம். ஒன்பது வருஷம் எத்தனை எண்கள்!

டாக்டர் எனக்கு எப்படி இதைச் செய்வது என்று தெரியவில்லை. எனக்குக் கல்யாணம் ஆகிப் பத்து வருஷமாகிறது. எனக்குக் குழந்தை கிடையாது. என் மனைவி, என் வீடு, என் ஆபீஸ், என் காம்ப்ட்டாமீட்டர். தினம் மனைவியிலிருந்து விடுபட்டு ரயிலேறி எண்களாக எட்டு மணி நேரம் எண்ணிவிட்டு மனைவிக்குத் திரும்பி மனைவியுடன் பேசிவிட்டு சாப்பிட்டுவிட்டு உறங்கிவிட்டு மறுபடி விடுபட்டு மறுபடி எண்களைத் துரத்தி மறுபடி...

டாக்டர் நான் உங்களிடம் வந்ததே சரியா என்பது எனக்குத் தெரியவில்லை. எனக்கு எப்படிப்பட்ட உதவி தேவை என்பதும் தெரியவில்லை. எந்தவிதத்தில் உங்களைப் போன்ற ஜெனரல் ப்ராக்டிஷனர் எனக்கு உதவி செய்யக்கூடும் என்பதும் தெரியவில்லை. இருந்தும் என்னிடம் ஏதோ தப்பு ஏற்பட்டிருக்கிறது டாக்டர்.

இன்று காலை 9.06 ட்ரெயினில் நல்ல கூட்டம். வாயிற் பக்கம் கம்பியை இரண்டு கையாலும் தொத்திப் பிடித்துக்கொண்டு மற்றவர்களுடன் என் காம்ப்ட்டாமீட்டர் நோக்கி விரைந்து கொண்டிருந்தபோது விர்விர் என்று எலக்ட்ரிக் கம்பங்கள் அருகே அருகே கடக்கும்போது எனக்கு திடீர் என்று அந்த ஆசை_மிகக் கவர்ச்சிகரமான ஆசை ஏற்பட்டது! கை எதற்காகப் பிடித்துக்கொண்டு எதற்காக இப்படித் தொத்திக் கொண்டு எங்கே போகிறேன்! ஏன் நான் கையை விட்டுவிட்டால் என்ன? அவ்வளவு தீவிரமாக அந்த ஆசை ஏற்பட்டது. அப்படியே கையை விட்டுவிட்டு அந்த வேகமான வண்டியிலிருந்து விலகி விழுந்துவிடுவதற்கு ஒரு கணம், அந்த ஆசையின் தீவிரம் என்னை ஆட்கொண்டு என் கைகள் சக்தியில்லாமல் போக திடீரென்று சுதாரித்துக் கொண்டேன். ஒரே ஒரு கணம்தான் அந்த ஆசை இருந்தது. உடனே போய்விட்டது.

டாக்டர், நான் உங்கள் நேரத்தை அதிகம் விரயம் பண்ணவில்லை என்று நம்புகிறேன். அந்த ஆசை மறுபடி சாயங்காலம் சற்றுமுன் எனக்கு ஏற்பட்டது. ஓவர்டைமில் என் ஆபீஸில் தனியாக இருந்தேன். மூன்றாவது மாடியில் இருக்கிறது அந்த அறை. நானும் என் காம்ப்ட்டாமீட்டரும் தரையில் புரண்டு புரண்டு சுருண்டிருந்த காகிதத் தொடரில் என் விரல்கள் பதிப்பித்த எண்களும்...

நிமிர்ந்து பார்த்தேன். பெரிய ஜன்னல் தெரிந்தது. வானம் தெரிந்தது. ஜன்னல் திறந்திருக்கு. காற்றில் ஆடின ஜன்னல் திரை என்னை வாவா என்று அழைத்தது. அந்த அழைப்பை என்னால் எதிர்க்கமுடியவில்லை. நடந்து சென்று ஜன்னல் விளிம்பில் ஏறிநின்று கொண்டு கீழே தங்கசாலையில் ஊர்ந்து கொண்டிருந்த வாகனங்களின் மத்தியில் சொத் என்று காக்கை எச்சம் போல் விழ எவ்வளவு ஆசையாக இருந்தது தெரியுமா? இப்பொழுதும் ஒரு கணம்தான். அதற்குள் கை நடுங்கி வியர்த்து கண்ணாடிக் கதவைப் பிடித்துக்கொண்டு சமாளித்து விட்டேன். உடனே நான் தீர்மானித்துவிட்டேன். என்னில் ஏதோ தப்பு இருக்கிறது. உடனே நான் டாக்டரைப் பார்க்கவேண்டும் என்று தோன்றிவிட்டது. ஆபீசுக்கு மிக அருகில் இருக்கும் உங்களைத் தேடி வந்துவிட்டேன்!

டாக்டர் உங்களிடம் எவ்வளவோ சொல்லவேண்டும் என்று நினைத்து வந்தேன். பாதி கூடச் சொல்லவில்லை. அந்தப் பயம் ரொம்ப உண்மையான பயம். அப்படியே ஒரு புயல் காற்றுப் போல ஒரு போர்வை போல என்னைச் சுற்றிக்கொள்கிறது. இன்று நிச்சயம் அந்த ஜன்னலிலிருந்து குதித்திருப்பேன், சமாளித்துக்கொண்டுவிட்டேன்... எப்படிச் சொல்வது எப்படி...

அவன் கை நடுங்கியது. சிரித்தான். டாக்டர் புரிகிறது என்றார். அவன் சட்டைப் பித்தானை அவிழ்க்கச் சொன்னார். ஸ்டெதாஸ்கோப்பை வைத்து அவன் இருதயத்தைக் கேட்டார். அவன் ரத்த அழுத்தத்தை எடுத்தார். இரவில் சரியாகத் தூங்குகிறாயா என்று கேட்டார். அவன் தூங்குகிறேன் என்றான். காலை ஒழுங்காக மோஷன் ஆகிறதா என்றார். அவன் யோசித்து ஆமாம் என்றான். அவன் கவனம் அந்த ரத்தப் பஞ்சில் நின்றது.

டாக்டர் சொன்னார் உன் ரத்த அழுத்தம் சரியாகத்தான் இருக்கிறது. எல்லோருக்கும் இந்த ஃபெடிக் வரும். இப்பொழுது என் கேஸையே எடுத்துக்கொள். நான் மாலை நேரம்கூட சுதந்திரமாக வெளியில் சென்றதில்லை. இந்த இடத்தில் 6 லிருந்து 8.30 வரை வீட்டில் போனால் பேஷண்ட்கள். அதற்கு முன் பேஷண்ட்கள். காலை, மாலை. உனக்கு காம்ப்ட்டாமீட்டர். எனக்கு பேஷண்ட்கள். எனக்கும் ஒரு நாள் எல்லாவற்றையும் உதறி எறிந்து கிராமத்துக்குப் போய்விடலாமா என்று தோன்றும். எனக்கு முடியாது. பிழைப்புப் போயிடும்.

உனக்கு முடியும். நாளைக்கு ஆபீசுக்குப் போகாதே. அவசியம் லீவு எடுத்துக்கொள். ஒரு மாதம் இல்லை. இரண்டு மாதம். சர்ட்டிபிகேட் வேண்டுமானால் தருகிறேன். உனக்கு வேண்டியது மாறுதல். டெலிபோன் மணி அடித்தது. எடுத்துக் கேட்டார் ம்ம் என்றுதான் திரும்பத் திரும்பச் சொன்னார். கடைசியில் மட்டும் சரி என்று சொல்லிவிட்டு வைத்தார். அது என் மனைவி என்றார். டெலிபோனில் பேசிக்கொண்டி-ருக்கும்போதே காகிதத்தில் எழுதி முடித்துவிட்டார். சரக் என்று கிழித்தார். இந்த டானிக்கை சாப்பாட்டுக்குப்பின் இரண்டு டீஸ்பூன் சாப்பிடு. ஒரு பாட்டில் சாப்பிட்டுவிட்டு என்னை மறுபடி வந்துபார் என்று அவனிடம் அந்தக் காகிதத்தைத் தந்தார்.

அவன் அந்தக் காகிதத்தை பிரமிப்புடன் பார்த்துப் படிக்க முயன்றான்.
டாக்டர், அவன் எழுந்து செல்லக் காத்திருந்தார்.
டாக்டர் நான் உங்களுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும்?
ஐந்து ரூபாய் என்றார்.

அவன் தன் பையில் தடவி சில ரூபாய் நோட்டுக்கள் சில எட்டணா நாலனா பத்து பைசா நாணயங்கள் என்று சேர்த்துக்கூட்டிப் பார்த்து என்னிடம் நாலு ரூபாய் 30 பைசாதான் இருக்கிறது என்று மன்னிப்புக் கலந்த குரலில் பயத்துடன் சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு மேஜை மேல் அவ்வளவு பணத்தையும் வைத்தான். டாக்டர் சரி என்றார்.

அவன் அந்தக் கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்றான். உடனே உள்ளே வந்த அந்தப் பெண் தன் கையில் போர்த்தியணைத்திருந்த குழந்தையை ஜாக்கிரதையாகத் திறந்து, காலையிலிருந்து விட்டுவிட்டு ஜுரம் அடிக்கிறது டாக்டர். ஒரு தடவை வாயிலெடுத்துவிட்டான். கண்ணைத் திறக்காமல் ஜுரம். அப்பொழுது டாக்டர் மறுபடி ஸ்டெதாஸ்கோப் அணிந்து கொண்டார். அந்தக் குழந்தையைப் பரிசோதித்தார். அதன் வயிற்றை அழுத்திப் பார்த்தார்.

இருமல் இருக்கா
இல்லை டாக்டர்
பேர் என்ன?
சுரேஷ்... சுரேஷ் டேய், டாக்டர் மாமாடா!
நாலு
டாக்டர் எழுதிக் கொண்டிருக்கையில் வெளியே சாலையில் அபஸ்வரமாக அந்த சப்தம், மிக அவசரமாக ப்ரேக் போடுவதால் டயர் தேயும் சப்தம் கேட்டது.

## 14. ஓரிரவில் ஒரு ரயிலில்




ஓரிரவில் ஒரு ரயிலில் உன்னைக் கண்டேன்
பார் முழுதும் ஊடுருவும் மின்னல் கண்டேன்

ஒரு ராத்திரியிலேயே ரயிலில் அவளைச் சந்தித்து, ஏறக்குறைய கல்யாண ஏற்பாடு வரை வந்துவிட்டது. இந்த இன்டர்நெட் யுகத்தில் கூடக் கொஞ்சம் வேகம்தான். அதுதான் நடந்தது.

நான் யார், அவள் யார் என்பதைச் சொல்லுமுன், உங்களுக்கு ஆர்.பி. என்னும் ராஜ பண்டிதரை அறிமுகப்படுத்த வேண்டும். அவர்தான் நானும் அவளும் சந்திக்க மறைமுகக் காரணம்.

ஆர்.பி., இந்துக்களின் முக்கியமான தலைவர். அவர் கையசைத்தால் அடி பணிய மத்திய மந்திரிகளும், பிர்லா மனைவிகளும், கோடீஸ்வர செட்டியார்களும், நாயுடுக்களும், டால்மியாக்களும் காத்திருக்கிறார்கள். மாநில முதல்வர்கள் மந்திரிசபை மாற்றுமுன், கட்சியைப் பிளக்குமுன், பதவியைத் துறக்குமுன், அம்பானிகள் புதிய பெட்ரோ கெமிக்கல்கள் தொடங்குமுன், பல கட்டங்களில் ஆர்பியை ப்ரைவேட் ஜெட் பிடித்து ஒரு நடை வந்து, ஓவர்நைட் சந்தித்து, ஒரு வார்த்தை கேட்டுவிட்டுத்தான் செய்வார்கள்.

இந்திய அரசியலின் மறைமுக சூத்ரதாரி என அவரைச் சொல்கிறார்கள். இதனால் அவருக்கு நண்பர்கள் ஏராளம். அவர் பரம சாதுவாக இருந்தாலும், அவரைச் சுற்றுப்பட்டவர்கள் வன்முறையின் பல வண்ணங்கள் கலந்தவர்கள். அதனால் அவருக்கு எதிரிகளும் ஏராளம். பின்னவர்களிடமிருந்து அவரைக் காக்கத்தான் நான்...

என் பெயர் அஷோக். ஐ.பி.எஸ். தேறின கையோடு, ஸி.ஐ.எஸ்.எஃப், ஸி.ஆர்.பி.எஃப் என்று இலாகாக்கள் மாறி டில்லி ரா வில் கொஞ்ச காலம் இருந்துவிட்டு, இப்போது மத்திய உள்துறையின் வி.ஐ.பி. செக்யூரிட்டி பிரிவில் போஸ்ட்டிங் ஆகி, ஊர் ஊராக சாமியார்கள், அரசியல் தலைவர்கள், உச்சகட்ட மோசடிக்காரர்கள் பின்னால் அலையும் அபாக்கியன். இப்போது ஆர்.பி.க்கு பாதுகாப்பாக பாண்டியனில் மதுரை வரை போகிறேன்.

நாளை அவரது பிறந்த தினத்தை ஆரவாரமாகக் கொண்டாடுகிறார்கள். முற்றும் துறந்தவருக்கு எதற்கு பிறந்த நாள் விழா என்று கேட்கமாட்டேன். அது என் கவலை அல்ல. என் கவலை மதுரை ஜங்ஷன் வரை அவரைப் பத்திரமாக சேர்ப்பிப்பது. ஆர்.பி.யை பார்த்தால் இத்தனை சக்தியுள்ள ஆசாமி என்று தெரியாது. சாந்த சொரூபி; கரு கருவென்று தாடி; கன்றுக் குட்டிக் கண்கள்; ஊடுருவி மனசுக்குள் குடையும் பார்வை; எப்போதும் உலகத்தை நோக்கி ஒரு புன்னகை. என்னை நேசி என வற்புறுத்தும் குரல். மோகனமாகப் புன்னகைத்தார்.

``அலோ அஷோக், நீங்களும் வர்றீங்களா? என்றார் ஒன்றுமே தெரியாதது போல்.
``உங்களுக்காகத்தானே வரேன் சுவாமி

``எனக்காகவா?
``உங்க மேல ஒரு `த்ரெட் இருக்குதே, சொல்லியிருக்கோமே

``யாருமே கொல்வதில்லைப்பா, நாயம் ஹந்தி நா ஹன்யதேன்னு கீதைல சொல்லியிருக்காப்பல கொல்வான் என்று நினைக்கிறவனும், கொல்லப்படுவான் என்று நினைக்கிறவனும் இருவருமே அறியாதவர்கள். இவன் கொல்வதுமில்லை; கொல்லப்படுவதும் இல்லை என்றார்.

``அந்த மனநிலை எங்களுக்கெல்லாம் வர நாளாகும் என்றேன். முதல் வகுப்பு ஏஸியில் அவருடைய கூப்பே கம்பார்ட்மெண்ட்டில் நுழையுமுன், ``என் கடமையைச் செய்கிறேன் சுவாமி என்று பெட்டி படுக்கைகளை மெட்டல் டிட்டெக்டரால் வருடினேன்.

``செய்... செய்... பரமாத்மா கூட அதைத்தான் சொல்லியிருக்கார்
``சுவாமிக்கு மினரல் வாட்டர் வாங்கிட்டு வரவா? என்றேன். கூட வந்திருந்த சிஷ்யர்களில் ஒருவர் ``இருக்கு என்றார். சிஷ்யர்கள் அனைவரும் திடகாத்திரர்களாக இருந்தார்கள். ஒருவர் சுவாமிக்குப் படுக்கை போட்டார். பிறிதொருவர் கலர் கலராக மாத்திரைகளை எடுத்துக் கொடுத்தார். ஒருவர் பட்டுத்துணியைத் தென்னக ரெயில்வே படுக்கை மேல் விரித்தார். ஒருத்தர் ப்ளாஸ்க்கிலிருந்து வென்னீர் ஊற்றி ஹார்லிக்ஸ் போல எதையோ கரைத்துக் கலக்கிக் கொடுத்தார்.

``சுவாமி நான் பக்கத்து காபினில்தான் இருக்கிறேன். செக்யூரிட்டி கார்ட்ஸ் எப்பவும் வெளிய நிப்பாங்க என்றேன்.

``இதெல்லாம் சன்யாசிக்குத் தேவையே இல்லைன்னு எச்.எம்.கிட்ட சொல்லியாச்சு

``அதே மினிஸ்ட்ரிலதான தேவைன்னு நினைக்கிறாங்க சுவாமி

``என்னை, அவனைத் தவிர யாருப்பா அழைக்க முடியும்? என் மரணத்துக்கு மேல இருக்கறானே பரம புருஷன், அவன்தான் தேதி வெச்சிருக்கான். அதுக்கு முன்னாடி சில காரியங்கள் கொடுத்திருக்கான். அதை செய்யற வரை எதும் நடக்காது. இப்ப பெட்டி படுக்கையெல்லாம் மெட்டல் டிட்டெக்டர் வெச்சு தடவறே பாரு, அது கூட அவன்தான் செய்யறான். எதாவது மிரட்டல் கடிதம் வந்ததா?

``இல்லை சுவாமி உங்கள் பத்திரத்துக்குத்தான் கூட வர்றோம். நீங்க நிம்மதியா உறங்கலாம்

``வேளை வரலைன்னா, யாராலயும் கொல்ல முடியாது. வேளை வந்தாச்சுன்னா ஒரு புல்லால கூட என்னைக் கொல்ல முடியும். பரீக்ஷித்து மகாராஜா கதை தெரியுமா

``கேட்டிருக்கேன்

``சுவாமியுடைய ஜாதகம் யோக ஜாதகமாக்கும். ஆயுளாதிபதி தொண்ணூற்றாறு பிராயம் வரைக்கும் ஜீவிச்சு இருக்கிறதாக்கும் என்றார் ஒரு சீடர், மலையாளம் நனைந்த தொனியில்.

``நீங்கள்லாம் இங்க இருக்கக் கூடாது. அடுத்த கம்பார்ட்மெண்ட் போயிடுங்க. இவருக்குத் தேவையான மினிமம் ஜாமான்கள விட்டுட்டு மற்றதை எடுத்துட்டுப் போயிர்றீங்களா..? ஒரு எச்சரிக்கைக்குத்தான்

``எனக்குத் தேவை கீதை மட்டும்தான் என்றார்.

உள்ளே தாளிடுமுன் வாயில் வரை வந்து என்னை மறுபடி கேட்டார் "எதாவது கலாட்டா எதிர்பார்க்கறீங்களா? முகத்தில் கலவரம் எதும் இல்லை. யதார்த்தமாகத்தான் கேட்டார்.

``இல்லைங்க. ஒரு ப்ரிக்காஷனுக்குத்தான். அபாயம் எதும் இருந்தா விழாவையே அனுமதித்திருக்க மாட்டோம்

``நாளைக்குப் பெரிய ராலி மதுரைல நடக்க போறது
``தெரியும் - ராஜ மாணிக்கம் வராறா?
``ஆமாம் அவரும் கலந்துக்கறார். துரைவேலன் வர்றார். தமிழ் யோகி வர்றார். வடக்கேயிருந்து பிரதாப் போதார் ராஜசிங் வர்றார். பெரிய கூட்டம்
``பசு வதையா?

``இல்லை லோக க்ஷேமத்துக்காக தென்மாநிலங்களில் மழை பெய்யறதுக்கு, காவேரியில் தண்ணீர் பிரவகிக்கிறதுக்கு, கோவில்களில் கூட்டம் வர்றதுக்கு ஒரு யாகம்; அப்றம் ஒரு ஊர்வலம். நீங்களும் கலந்துக்கணும். எனக்கு பகவான் வேற உத்தேசங்கள் வைத்திருக்கார். டிசம்பர்ல ஆல் ரிலிஜனும் இக்யுமெனிக்கல் கான்பரன்ஸ்ல வாஷிங்டனுக்கும், வாடிகனுக்கும் அழைச்சிருக்கார். மதுரையில என்கூட இருப்பீங்களா?

``இல்லை சுவாமி. மதுரை ஜங்ஷன் வரைதான் என் பொறுப்பு. அப்புறம் ஸ்டேட்ல பொறுப்பெடுத்துக்கறது, ஸிபிஸிஐடி. நான் அகர்தாலா போறேன். எஸ்.எஸ். உண்டா உங்க மதுரை கூட்டத்தில?

``பேசப்படாது என்றார் சீடர்.
எஸ்.எஸ். என்பது சத்சங் என்கிற தீவிர அமைப்பு.
``எனக்கு ஒரே ஒரு எஸ். சர்வேசுவரன்தான் என்று சிரித்தார். ஷ ``இது என்ன பழுப்பா? என்றேன்.
``பனம் கல்கண்டு ஒரு சீடன் பாலைக் கலக்கிக் கொண்டே.
``சுவாமி கார்டு ரெண்டு பேர் வெளியில நின்னு ராத்திரி விஸர்ஜனத்துக்குக் கூட வருவோம்
``பாவம் அவங்களுக்கு நித்திரை வேண்டாமோ?
``உங்க நித்திரைதான் முக்யம் சுவாமி, வரட்டுமா... பக்கத்திலயே இருக்கேன்
``நம் எல்லாருடைய பக்கத்திலும் அந்த கோவிந்தன், கோவர்தனன் இருக்கான்பா. குன்றம் ஏந்திக் குளிர் மழை காத்தவன்
``பதினாலு பாஷை தெரியும் சுவாமிக்கு

``கொஞ்சம் இருங்க அஷோக் அவர் பட்டுப் பையிலிருந்து ஒரு ஆப்பிள் எடுத்து அதனுடன் ஒரு மஞ்சள் சரடு வைத்து எனக்குக் கொடுத்தார். என் உள்ளங்கையில் அதை வைத்து அழுத்தும்போது அந்த விரல் மெத்தென்று, தண்ணென்று இருந்தது. "நல்ல க்ஷேமமும், ஆரோக்கியமும் உனக்கு இருக்கிறது

``சந்தோஷம் சுவாமி. நிம்மதியா படுத்துக்கங்க. எதுவும் பயமில்லை
``உன் முகத்தில தேஜஸ் தெரியறது. உன் ராசி என்ன?
``டாரஸ் ஆப்பிள் விபூதி வாசனை அடித்தது.
``ரிஷபம். ஓ, இன்னைக்கு கிரகங்கள் இடம் மார்றது. ராத்திரி ஒரு பெரிய சந்தோஷம் வரப்போறது உனக்கு, திருமணம் ஆச்சா?
``இல்லை சுவாமி

``உன் எதிர்கால மனைவியை இந்த ரயிலிலேயே சந்திக்கும் தருணம் வந்துவிட்டது. அந்தப் பெண் மூலம் உனக்கு மூன்று புத்திர பாக்யம் உண்டு. அதில் நடு மைந்தன் உலகப் புகழ்





பெறுவான். இதைவிடப் பெரிய வேலை உனக்கு உண்டு. அந்தப் பெண்ணின் பெயர் இரண்டாவது எழுத்தில் ஆரம்பிக்கும்

நான் சிரித்துக் கொண்டேன். எனக்கு இதில் எல்லாம் நம்பிக்கை இல்லை என்று சொல்லி எதற்கு விவாதம் துவங்க வேண்டும்?

``உனக்கு நம்பிக்கை இல்லையா? என்றார் என் மனத்தைப் படித்து.
``நம்ப விரும்பறேன் சுவாமி. இப்போதைக்கு கல்யாணமல்ல என் கவலை. உங்கள் பத்திரம்
``எனக்கு பத்திரம் தர நீ யார்? என்றார் கோபமில்லாத அதட்டலுடன்.
``உன் மனைவியுடன் என்னைத் தவறாமல் வந்து பார் என்றார்.

நான் செல்வராஜ், அகஸ்டின் இருவரையும் ரைஃபிளுடன் நிற்க வைத்தேன். டிடிஇயுடன் பேசி வெஸ்டிப்யுலை அடைத்து ஏசி ஸ்லீப்பரிலிருந்து யாரும் வராதபடி செய்தேன்.

``நடுராத்திரியில திறக்கறதா இருந்தா எனக்குத் தகவல் சொல்லிட்டுத்தான் திறக்கணும். ஊருக்கு ஊர் சிஷ்யங்க வருவாங்க" என்றேன்.

கவலையேபடாதீங்க ஸார். இந்த சுவாமி இதே வண்டில மாதா மாதம் போறார். எங்களுக்கு ருட்டின் எல்லாம் அத்துபடி. நல்ல ஆத்மா- யாரும் இவரைக் கொல்ல மாட்டாங்க

கம்பார்ட்மெண்டை விட்டு வெளியே வந்தேன். அவுட்லுக், வீக், குமுதம், ஜூவி இதழ் வாங்கிக் கொண்டேன். தற்செயலாக `வீக் இதழில் அட்டைப் படத்தில் சுவாமி சிரித்துக் கொண்டிருந்தார். ஆர்.பி கிங்மேக்கர் என்று மஞ்சளில் தலைப்பு. நெஸ்கஃபே வாங்கிக் குடித்தேன். அவசரத்தில் உதட்டை சூடு போட்டது. ரயில் புறப்பட சமயம் இருந்தது. ப்ளாட்பாரம் வெறிச்சென்று இருந்தது. பயிற்சி பெற்ற கண்களால் வருடினேன். எல்லாரும் உண்மையான பிரயாணிகள். கூஜாவுடன் மாமி, பார்பி டால் சிறுமி, விரல் தொட்டு ஓடி வரும் சிறுவன், டிடி பின்னால் பர்த்துக்கு ரப்பர் தலையணையுடன் அலையும் மொத்த வியாபாரி, திறந்த சன்னல் வழியே மனைவியுடன் பேசாதிருக்கும் மௌனக் கணவன், தயிர்சாத பாக்கெட்டுகள் விற்காமல் சோர்ந்து நொண்டி பெஞ்சில் அடுக்கும் வெண்டர். தலைப்பாகையை உதறிவிட்டு குடிக்கச் செல்லும் முதிய போர்ட்டர். பயணிகள் எல்லாரும் ரயிலேறி விட்டார்கள். ரயில் எதற்காகவோ காத்திருந்தது. ``அஷோக் என்று குரல் கேட்டுத் திரும்பினேன்.

அந்தப் பெண் நின்று கொண்டிருந்தாள்.
``நீங்க, நீங்க... பாத்த மாதிரி இருக்கு. ஸாரி...
``ப்ருந்தா, கமலநாத்துடைய சிஸ்டர்
``ஓ, நீங்களும் இந்த ட்ரெய்ன்ல வர்றீங்களா?
``ஆமா செகண்ட் ஏசியில இருக்கேன். நீங்க? என்றாள்.
``நான் பக்கத்திலதான் எச் ஒன்ல ஒரு சாமியாருக்குப் பாதுகாப்பா போறேன்.
``பார்த்தேன். ஏகப்பட்ட காவி ஆசாமிங்க. நீங்க போலீசா அஷோக்?
``ஆமாம் ஐஎஸ் பிரிவுல சூப்ரண்ட். நீங்க?
``நீங்கன்னா வயசான மாதிரி இருக்கு. நீன்னே கூப்பிடலாம். நான் இன் பிட்வீன் ஜாப்ஸ். நான் ஒரு மேனேஜ்மெண்ட் கன்சல்டண்ட். சாமியார் பேர் என்ன?
``ராஜ் பண்டிட்
``கல்யாணம் ஆய்டுச்சா?
``அவருக்கா?
``இல்லை உங்களுக்கு?
``இல்லை, மதுரைல என்ன நீங்களும் ராலியா?
``சேச்சே, மதுரைல எங்க மாமாவுக்கு அறுபதாம் கல்யாணம் அதுக்குப் போறேன்

``கமல் வந்திருக்கானா?
அவள் முகம் சட்டென்று மாறியது. ``கமல் இறந்துட்டானே போன செப்டம்பர்ல... தெரியாது?
"ஓ மை காட். ஐம் ஸோ சாரி. நான் அப்ப மவுண்ட் அபுவில ட்ரெய்னிங்ல இருந்தேன். வெரி ஸாரி என்னாச்சு?
``புறப்படற சமயத்தில ஞாபகப்படுத்திக்க விரும்பலை. மதுரைல சாவகாசமா சந்திக்கலாமே என்றாள்.
``நான் மதுரைல தங்கலை. உடனே புறப்படறேன். ஃப்ரியா இருக்கறப்ப கம்பார்ட்மெண்ட் வந்து பாக்கறேன்
``உங்க கடமை?
``சாமியாரைப் பாத்துக்க பத்து பேர் இருக்கோம். கலாஷ்நிக்காவ் சகிதமா என்றேன். ரயிலே எங்களுதுதான் இப்ப. பர்த் நம்பர சொல்லுங்க

அவளைக் கடைசியில் ஒரு கல்யாணத்தில் பார்த்ததன் தொடர்ச்சி இப்போது மனசில் கிடைத்து விட்டது. செதுக்கி வைத்தாற் போல முகம். சற்று எடை அதிகம். இரண்டு கிலோ இழக்கலாம். நெற்றியில் தவழ்ந்த கூந்தல்- அடர்த்தியாக குட்டையாக இருந்தது. கண்கள் தயக்கமில்லாமல் விகற்பமில்லாமல் நோக்கின. நகைகள் எதும் இல்லாத எளிமை. வெளிர் நீலச் சட்டையும், அதே நீல ஜீன்ஸும் அணிந்திருந்தாள். `ஃபெமினாவுடன் கையில The poems of Ancient Tamil என்ற புத்தகம் வைத்திருந்தாள்.

சிக்னல் அம்பருக்கு மாறியது. ``பயணிகள் கவனத்திற்கு என்று எதிரொலித்து, மணியடித்து, ``செங்கல்பட்டு, விழுப்புரம், திருச்சி மார்க்கமாக மதுரை செல்லும் பாண்டியன் எக்ஸ்பிரஸ்... அவள் ``ஸீயு என்று தன் பெட்டிக்குள் ஏறும் போதுதான் எனக்கு அவள் பெயர் உரைத்தது. பிருந்தா. பி, இரண்டாவது எழுத்து!

## Part 2

வண்டி புறப்பட்டு வேகம் பிடித்து, சபர்பன் ரயில் நிலையத் தீற்றல்கள் விரைவாய் மறைய, ரயில் பெட்டியின் இடைகழிக்கு வந்து சிகரெட் பிடித்தேன். என்னைப் பார்த்ததும் ஜவான் விறைப்பாக சல்யூட் அடித்தான். கல்யாணம் ஆனதும் நிறுத்திவிடலாம் என்று மிச்சம் வைத்திருக்கும் பழக்கம். வேலையில் ரொம்ப டென்ஷன்; அதனால்தான் சிகரெட் குடிக்கிறேன் என்று நண்பர்களிடம் நொண்டிச் சாக்கு சொல்லிக் கொண்டிருக்கிறேன். இதை விட டென்ஷன் பார்ட்டிகள் எல்லாம் குடிப்பதில்லை. முழுக்க முழுக்க ஒழுக்கமுள்ளவனாக இருக்க முடியாது, கூடாது என்பது என் கொள்கைகளில் ஒன்று. நிறுத்த முடியாத, பிடிவாதமான பழக்கமல்ல. ப்ருந்தா மாதிரி ஒரு பெண் சொன்னால் நிறுத்தலாம்.

சுவாமி சொன்னது சிந்திக்க வைத்தது. ``உன் எதிர்கால மனைவியை இந்த ரயிலிலேயே சந்திக்கும் தருணம் வந்துவிட்டது அந்தப் பெண் மூலம் உனக்கு மூன்று புத்திர பாக்யம் உண்டு. அதில் நடு மைந்தன் உலகப் புகழ் பெறுவான். இதைவிடப் பெரிய வேலை உனக்கு உண்டு. அந்தப் பெண்ணின் பெயர் இரண்டாவது எழுத்தில் ஆரம்பிக்கும்''

ப்ருந்தா. பி இரண்டாம் எழுத்து.

ஆங்கிலத்தில் அல்லவாஇரண்டாம் எழுத்து. சுவாமி சொன்னது தமிழ் எழுத்தா? ஆங்கில எழுத்தா? தமிழ் என்றால் `ஆ' வில்தானே துவங்கவேண்டும்? தமிழில் `ஆ' வில் நிறைய பெயர்கள் இல்லையே.... ஆனந்தி. ஆண்டாள், ஆதிரை? ம்ஹூம். இவ்வாறு தாறுமாறாக யோசித்தேன். ஆனால் எனக்கு வியப்பாகவே இருந்தது. எப்படி அது? ஒரு பெண்ணை சந்திப்பாய் என்று சொல்கிறார். சொன்ன கையோடு ப்ளாட்பாரத்தில் தேவதை போல

வருகிறாள். ப்ருந்தா. குருட்டாம்போக்கா இல்லை இதில் ஏதாவது சமாசாரம் இருக்கிறதா? என்னவோ கிரகங்கள் நிலை தளர்வதைப் பற்றிச் சொன்னாரே.

சிகரெட்டை அணைத்துத் திணித்துவிட்டு இருக்கைக்கு வந்தேன். நான் உபாதிகாரியுடன் உட்கார்ந்திருந்தது பி காபினில். முதல் வகுப்பின் சி காபினில் சுவாமி தனியாக இருந்தார். கூபேயில் அவர் மட்டும்தான்.. உள்ளே தாளிட்டுக் கொண்டிருக்கிறாரா சோதிக்க ஒரு முறை சென்று பார்த்தேன். திறந்துதான் வைத்திருந்தார். தலைமாட்டு விளக்கைப் பொருத்திக் கொண்டு சாய்ந்த நிலையில் புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். படிக்கும் கண்ணாடி மூக்கு நுனியில் அபத்திரமாக உட்கார்ந்திருந்தது.

``சுவாமி நீங்க கதவை உள்ளே சாத்திக்கிடறது நல்லது'' என்றேன்.

``நீ பக்கத்து காபின்ல இருக்கிற போது எனக்கு என்ன அபாயம்? படிக்காமல் தூங்க முடியாது. ஒரு தடவை பாத்ரூம் போய்விட்டுத் தூங்குவேன். பல் விளக்க வேண்டும். வா உட்கார்'' என்று அருகில் தட்டினார். நான் உட்காரவில்லை.

``என்ன தயங்குகிறாய்? ஏதாவது கேட்க விரும்புகிறாயா?'' என்றார்.
``சுவாமி நீங்கள் எந்த ஆதாரத்தில் சொன்னீர்கள்?''
``என்ன சொன்னேன்?''
``என் எதிர்கால மனைவியைச் சந்திப்பேன் என்று''
``சந்தித்தாயா?''

``என் பழைய நண்பன் ஒருவனின் தங்கையை நீண்ட நாளைக்குப்பின் சந்தித்தேன். இதில் வேடிக்கை என்னவென்றால் அவள் பெயர் ப்ருந்தா. ஆங்கிலத்தில் இரண்டாம் எழுத்து. நீங்கள் சொன்னது ஆங்கிலத்திலா, தமிழிலா?''

புன்னகைத்தார். ``பகவானுக்கு பாஷை முக்கியமில்லை. ஏதாவது மொழியில் இரண்டாவது எழுத்தாக இருந்தாலே சர்வேசுவரனுக்குச் சம்மதம்''

``நீங்கள் எப்படிச் சொன்னீர்கள்?''

``நான் சொல்லவில்லை. அவன் சொல்ல வைக்கிறான். என் மூலம் அவன் வாக்கு உனக்குக் கேட்கிறது. அந்தப் பெண் இந்த வண்டியில் வருகிறாளா?''

``ஆம். அடுத்த பெட்டியில் இருக்கிறாள்''
``வர வேண்டியது விதி.. அழைத்து வாயேன். பேசலாம்''
``இப்போது வேண்டாம். எல்லாக் கதவுகளும் அடைத்தாயிற்று.''
``சரி சந்தர்ப்பம் வந்தே தீரும்''

``சுவாமி நான் அதிகம் ஆன்மிகம் அறியாதவன். படித்ததெல்லாம் ஃபாரன்ஸிக் சைன்ஸ், சட்டம், கொலை, கொள்ளை, பறிமுதல், ஜூரிஸ்புடன்ஸ், பொருளாதாரக் குற்றங்கள் இப்படி. ஆன்மிகத்துக்கு எனக்கு சமயம் கிடைக்கவில்லை. புரிவதும் இல்லை. உங்கள் வாக்கு இவ்வளவு சீக்கிரம் பலித்ததிலிருந்து இது என்ன என்று தெரிந்து கொள்ள ஆசை ஏற்பட்டது''

``என்ன தெரிந்து கொள்ள விரும்புகிறாய்?''
``உண்மையை''
சுவாமி தன் அருகே வைத்திருந்த ஒரு பழத்தை எடுத்து

``இதன் உண்மை என்ன?''
``இது ஒரு பழம் என்பது''

``அது ஒரு உண்மை. மற்றொரு உண்மை, இது ஏதோ ஓர் ஊரில், ஒரு நிலத்தில், ஒரு மரத்தில் கனிந்தது என்பது. மற்றது இதன் வேதியல் உண்மை. ஆர்கானிக் மாலிக்யூல். இன்னொரு உண்மை இதன் டிஎன்ஏ அமைப்பு. ஆனால், உண்மையான உண்மை இது ஓர் உயிர் என்பது. நம்மாழ்வார் சொன்னது போல் எல்லாம் பிரான் உருவே என்பதே''

எனக்குப் புரியவில்லை. மையமாகச் சிரித்தேன்.

``புரியவில்லையல்லவா? பரவாயில்லை. நான் சொல்ல வந்தது நம் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு கணமும் நிர்ணயிக்கப்பட்டது அவனால். இவன் மரணம், அவன் ஜனனம், என் மரணம் உன் திருமணம் எல்லாமே தீர்மானிக்கப்பட்டது.''

``நீங்கள் டிடர்மினிஸம் பேசுகிறீர்கள் என நினைக்கிறேன்''

``இல்லை எதிர்காலத்தை நிகழ்காலத்தால் மாற்றவே முடியாது. மாற்றுவதாக நாம் செய்வதெல்லால் பாசாங்குதான். அந்தப் பாசாங்கு இல்லையெனில் நம்மால் இயங்க முடியாது. குறிக்கோளின்றித் திரிவோம். யோசித்துப்பார். கீதையில் ஞானயோகத்தில் சொல்லியிருக்கிறது. பல்லாயிரம் மனிதர்களில் ஒருவனே யோக சித்தி அடைய முயல்கிறான். அப்படி முயன்று சித்தி அடைந்தவர் பலரில் யாரோ ஒருவனே என்னை உண்மையாக அறிகிறான் என்று பகவான் சொல்லியிருக்கிறார்.''

அவர் பேசியது புரிந்ததோ இல்லையோ சொன்ன பாணியும் வசீகரமான ஆழ்ந்த குரலும் என்னை ஸ்பரிசித்து மெஸ்மரிசித்தன. ஏன் பலர் அவர்பின் அலைகிறார்கள், பின்பற்றுகிறார்கள் என்பது ஒருவாறு புரிந்தது. சித்தி பெற்ற அந்த ஒருவர் அவர்தானோ என்று தோன்றியது. அவரைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும். அவரை ஏன் சிலர் எதிர்க்கிறார்கள் என்பதுதான் புரியவில்லை. கேட்டுவிட்டேன்.

``சுவாமி மன்னிப்பதாக இருந்தால் உங்களை ஒன்று கேட்கலாமா? இத்தனை மகானான உங்களுக்கு ஏன் பாதுகாப்பு தேவைப்படும் அளவுக்கு கொலை மிரட்டல்?''

அவர் புன்னகைத்தார். ``சரித்திரத்தில் எல்லா மகான்களுக்கும் உள்ளதே? கொலை மிரட்டல் இல்லாத மகான்களே இல்லை. சீஸர் ரத்தம் சிந்திய இடத்தில்தான் ரோஜா மிகச் சிவப்பாக பூக்கும் என்று உமர்கய்யாம் கவிதை ஒன்று உள்ளது. இதை யோசித்துப் பார். இதைப் பற்றி எனக்குக் கவலையோ பயமோ இல்லை. `பயக்ருத் பய நாஸனஹ' என பகவான் பயத்தைத் தருபவனும், நீக்குபவனும் அவனே. என்னைப் பாதுகாக்கும்போது நீங்கள் உங்களைத்தான் பாதுகாத்துக் கொள்கிறீர்கள்''

``எப்படி?''
``உங்கள் டிப்பார்ட்மெண்ட்டுக்குப் பாதுகாப்பு அளிக்க இயலவில்லை என்கிற அவச் சொல்லிலிருந்து காப்பாற்றிக் கொள்கிறீர்கள். சன்யாசிக்கு மரணம் உண்டு. ஆனால் மரண பயம் இல்லை''

``தாங்கள் பெங்களூரில் பேசிய பேச்சு ஒன்றுதான் ஒரு வன்முறைச் சம்பவத்துக்கும் துப்பாக்கிச் சூட்டால் சில சாவுகளுக்கும் காரணம் என்று எங்கள் மினிஸ்ட்ரியின் குறிப்புகள் உள்ளன."

``அனைத்துக்கும் காரணம் அவனே. மேலும் யாரும் சாவதில்லை'' என்றார்.
``அந்தப் பக்குவம் எங்களுக்கு இல்லை சுவாமி..!''
அவரிடமிருந்து விடை பெறும் போது, ``சுவாமி நீங்க என்னதான் சொன்னாலும் கதவைச் சாத்திக்கிட்டுத்தான் தூங்கணும்'' என்றேன
. ``கவலைப்படாதே. அழைப்பு எப்போது வரும் என்பது எனக்குத் தெளிவாகவே உள்ளது.''
திரும்ப என் காபினுக்கு வந்தபோது அவர் வார்த்தைகள் என்னுள் எதிரொலித்தன.
``அழைத்து வாயேன்.''

தூக்கம் வரவில்லை. மணிபார்த்தேன், பதினொன்று. ப்ருந்தாவைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. கமல்நாத்தைப் பற்றிக் கேட்க வேண்டும். அடுத்த பெட்டியில்தான் இருக்கிறாள். இடைக் கதவு அடைத்திருந்தாலும் நான் சொன்னால் திறப்பார்கள். ``ரத்தினம் அரைமணியில் வர்றேன். முழிச்சுக்கிட்டிருங்க" என்று சொல்லிவிட்டு இரண்டு பெட்டிகளின் இடையே உள்ள கதவை கண்டக்டரிடம் திறக்கச் சொன்னேன். ``தெரிஞ்சவங்க அடுத்த பெட்டியில இருக்காங்க சார்ட்டைக் காமிங்க.''

சார்ட்டில் ப்ருந்தா குமார் என்று பெயர் போட்டிருந்தது (ஃபீமேல், 25). குமார் என்பது அப்பா பெயர் என்று ஞாபகம். சன்னலோரம் நீளவாக்கில் இருந்த கீழ் பர்த்தில் முழந்தாளிட்டு யோசனையுடன் உட்கார்ந்திருந்தாள். சன்னல் கண்ணாடியில் அழகாகத் தெரிந்தாள். ஏசி குளிருக்கு சர்க்கார் போர்வை போர்த்தியிருந்தாள்.

``ஹாய் ப்ருந்தா'' என்றேன்.

என்னைப் பார்த்ததும் அவள், முகம் மலர்ந்து இயல்பாக புன்னகைத்தாள். ``வாங்க. ஏன் வந்துட்டிங்க? சாமியார் பத்திரமா இருக்காரா?''

``ஹி இஸ் ஸேஃப். நிறைய பேசினோம்''

``அப்படியா...!''

``என்ன என்னவோ சொல்றார். கீதையிலிருந்து, உமர் கய்யாம் வரை நிறையப் படிச்சிருக்கார்'' ``இம்ப்ரெஸ் ஆயிட்டிங்களாக்கும்?''

``நான் அதில் இம்ப்ரெஸ் ஆகலை. உன்னை நான் எக்மோர்ல சந்திக்கப் போறதை முன்னாடியே சொல்லிட்டாரு''

``அப்படியா? ஆச்சரியமா இருக்குதே. பேர் சொன்னாரா?''

``இல்லை. தப்பா நினைச்சுக்காதே. அவர் சொன்னது எக்ஸாக்டா என்னன்னா `நீ உன் எதிர்கால மனைவியை சந்திக்கிற வேளை வந்துருச்சு. அவ பேரு இரண்டாவது எழுத்தில ஆரம்பிக்கும், இதை கேட்டுட்டு வெளியே வர்றேன். உன்னை நாலு வருஷம் கழிச்சு பார்க்கறேன்''

``என் பேரும் ப்ருந்தா, ஹௌ ஸ்ட்ரேஞ்ச்!''

``ஆமா பேரும் ப்ருந்தா. இதுக்கு என்ன சொல்றே? மூணு குழந்தை கூடப் பிறக்குமாம். இரண்டாவது மகன் உலகப் புகழ் பெறுவானாம்''





என் முகத்தருகே வந்து சதிப் பார்வை பார்த்து கண்களில் ஓர் உவகை பொங்க ``என்ன சொல்றிங்க? இங்கயே கல்யாணம் பண்ணிக்கிடலாமா?'' என்றாள்.

``ஜோக்ஸ் அபார்ட், அவர் சொன்னதில நான் ஆடிப்போயிட்டேன்''
``ஐ திங்க் இட்ஸ் ஜஸ்ட் எ கோயின்ஸ்டன்ஸ்''
``நீ அவரை மீட் பண்ணி ஆகணும். ரிமார்க்கபிள் மேன்..!''
அவள் மையமாகச் சிரித்தாள்.
``கமல் எப்படி இறந்து போனான்?''
அவள் சிரிப்பு பாதியில் நின்றது.

``அதைப் பற்றி பேசவே விருப்பமில்லை. பயமாக இருக்கிறது. அந்தத் துக்கத்தின் அதிர்ச்சி ஒரு வருஷமாகியும் விலகவில்லை. அதிலிருந்து மீளத்தான் இப்படி மாமா அறுபதாம் கல்யாணத்துக்கெல்லாம் மெனக்கிட்டுப் போய்க்கொண்டிருக்கிறேன். ரூமில் தனியாக இருந்தால் கமல் என்னைத் துரத்துகிறான் நினைவுகளால்''

அவள் கண்களில் நீர் நிறைந்தது. ``அப்பா இல்லாத எங்களுக்கு அவன் தான் எல்லாமாக இருந்தான். அநியாயமாகச் செத்தான்.''

``சுவாமி சொல்கிறார். யாருமே சாவதில்லை என்று. அவரிடம் உனக்கு ஆறுதல் கிடைக்கலாம். சொல்லிப் பாரேன்''

அவள் யோசித்தாள். ``நிம்மதி கிடைக்கும் என்கிறீர்களா?''

``நிச்சயம்...!''

``நம் இருவருக்கும் கல்யாணம் கில்யாணம் பண்ணிவைத்துவிட மாட்டாரே...?''

``பண்ணி வைத்தால் என்ன... பண்ணிக் கொள்ளலாமே...!''

``போலீஸ்காரரையா? நோ வே'' என்று சிரித்தாள். அந்தச் சிரிப்பில் லேசான சம்மதமும் விருப்பமும் இருந்தது. என் மனம் துள்ளியது. சுவாமி சொன்னது பலிக்கப் போகிறது என்று உள்ளுக்குள் ஊர்ஜிதமாகிவிட்டது.

அவளை அழைத்துக் கொண்டு காரிடாரில் நடந்து கடந்து வந்தேன். வண்டியின் ஆட்டத்துக்கு என் கையை இயல்பாகப் பிடித்துக் கொண்டாள். என்னுள் அட்ரினலின் பாய்ந்தது. முதல் வகுப்புப் பெட்டிக்கு வந்தோம். ஏமாற்றம். சுவாமியின் காபின் கதவு உள்ளே தாளிடப்பட்டிருந்தது. தட்ட விருப்பமில்லை. ``தூங்கிவிட்டார். காலை மதுரை ஜங்ஷனில் பார்க்கலாம்'' என்றேன். கதவு சட்டென்று திறந்தது.

``சுவாமி நீங்கள் இன்னும் தூங்கவில்லையா?''
``பேச்சுக் குரல் கேட்டது''
``மன்னிக்கவும் சுவாமி. நான் சொன்னேனே இதுதான் ப்ருந்தா''
``வா ப்ருந்தா. நீ வருவாய் என எனக்குத் தெரியும்'' என்று அவளை அன்புடன் அழைத்தார்.

## Part 3

மூன்று பேருக்கு அந்த கூபே நெருக்கமாக இருந்தது.

"சுவாமி! உங்களுக்கு இப்படிப் பின்னிரவில் தொந்தரவு கொடுக்கிறோமே" என்றேன். ப்ருந்தா அவர் காலைத் தொட்டு வணங்கிவிட்டு காலடியில் உட்கார்ந்தாள்.

"நீதான் ப்ருந்தாவா?"

அவள் தலையசைத்தாள்.

"உன் முகத்தில் சோகம் தெரிகிறது" என்றார்.

நான் குறுக்கிட்டு "சுவாமி! இந்தப் பெண் என் நண்பனின் தங்கை. அவன் பெயர் கமல்நாத். அவன் இறந்து போன துக்கத்திலிருந்து இவளுக்கு முழு ஆறுதல் கிடைக்கவில்லை என்று எனக்குத் தெரிந்தது. அவனை நினைத்தாலே கண்ணீர் பெருகுகிறது பாருங்கள். இவளுக்கு ஆறுதலாக சில வார்த்தைகள் சொல்லத்தான் அழைத்து வந்தேன்." என்றேன்.

ப்ருந்தா, "காலையில் வருகிறேன். இப்போது என்னை ஆசிர்வதித்தாலே போதும். சுவாமி தூங்கட்டும்." என்றாள். சுவாமி "இரு" என்று சொல்லிவிட்டுக் கொஞ்ச நேரம் தியானித்தார்.

"பெண்ணே! மரணத்தின் சோகத்திலிருந்து ஆறுதல் பெற மனப்பக்குவம் வேண்டும். மரணம் என்பது என்ன என்பதை நீ அறியவேண்டும். அது என்னவென்று நீ நினைக்கிறாய்?"

அவள் யோசித்து "முழுமையான அழிவு, டோட்டல் அனைஹிலேஷன் என்று அறிவியல் சொல்கிறது" என்றாள்.

அவர் புன்னகைத்தார். "அது தப்பு. கொஞ்சம் விளக்குகிறேன். கவனமாகக் கேள். மரணம் முழுமையான அழிவு என்பது, ஒரு முக்கோணத்தின் கோணங்களைக் கூட்டினால் எப்போதும் 180 டிகிரி என்னும் கணித உண்மைபோல சாசுவதமான சத்தியமா? இல்லை நம்முடைய தன்னுணர்வு `கான்ஷ்யஸ்னஸ்' என்கிறார்களே... அது, மரணத்துக்கு அப்பாலும் தொடர்கிறது என்பதுதான் சத்தியமா? சொர்க்கம், நரகம் என்னும் பரிசும் தண்டனையும் நமக்காக மரணத்துக்கு அப்பால் காத்திருக்கின்றனவா? இவ்வாறான சந்தேகங்கள் நம்முடன் எப்போதும் இருக்கும். காரணம், மரணத்துக்குப் பின் எதுவும் இல்லை என்றால் தொடர்ந்து உயிர் வாழ்வதில் அர்த்தமே இல்லை. இதற்காகவாவது மறுபிறவியில் நம்பிக்கை வேண்டும்.

ஆனால், இதற்குச் சரியான விளக்கம் கீதையில்தான் இருக்கிறது. ஆத்மாவைப் பற்றி அது சொல்கிறது. என்ன? ஆத்மா ஒருக்காலும் பிறக்கிறதென்பதில்லை, முன்பு இருந்து பின்பு இருக்காது என்பதில்லை, இது பிறப்பற்றது, என்றுமுள்ளது, என்றென்றும் ஒரே விதமாக இருப்பது...

இதனை ஆயுதங்கள் வெட்டுவதில்லை, நெருப்பு எரிப்பதில்லை, ஜலம் நனைப்பதில்லை,



காற்று உலர்த்துவதில்லை. இது பிறப்பற்றது, குறைவற்றது, என்றுமுள்ளது, நாசமற்றதென்று அறிகிறவன் யாரையும் கொல்வதில்லை; யாரையும் கொல்விப்பதும் இல்லை என்கிறார் பகவான் அர்ச்சுனனிடம். எனவே உன் சகோதரன் இறக்கவில்லை. அவன் ஆத்மா அழியவில்லை என்று கொள். அவன் தேகம்தான் மாண்டது. கிழிந்த வஸ்திரங்களை எறிந்துவிட்டு தூய வஸ்திரங்களை அணிவதுபோலத்தான் பிறப்பும் இறப்பும்."

"என் அண்ணன் கிழிந்த வஸ்திரமாக சாகவில்லை சுவாமி. இளம் வயது. பண்டிகைக்கு கடைத்தெரு சென்று எல்லோருக்கும் புதிய வஸ்திரங்களை வாங்கிக்கொண்டு தன் பாட்டுக்கு நடந்து சென்றான். உலகத்துக்கு எந்தத் தீங்கும் செய்யவில்லை.

தீவிரவாதிகளால் கொளுத்தப்பட்டான். இது எந்த கீதையில் நியாயம்?" அந்த மென்மையான பெண்ணிடமிருந்து இத்தனை ஆழமான கேள்வி சுவாமியையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

"உனக்குப் புரிய வயது போதாது. சாவே இல்லை என்னும்போது சாவிற்கு நியாயம் ஏது, அநியாயம் ஏது? மாரிஸ் மீட்டர்லின்க் சொன்னபடி,

We are the prisoners of an infinity without outlet, where in nothing perishes, where in everything is dispersed, nothing lost. இப்போது வாழ்வைப் பற்றி பேசுவோம். அஷோக்கை நீ திருமணம் செய்து கொள்ளப்போவதாக பகவான் என்னிடம் சொன்னார்."

"அஷோக் இதைப் பற்றிச் சொன்னார். எனக்கு வியப்பாக இருந்தது. என்ன சொல்வது என்று திகைக்கிறேன்."

"நீ வருவாய் என்பது எனக்கு எப்படித் தெரிந்தது? ஞானக் கண்மூலம். உனக்கு ஞானக் கண்ணில் நம்பிக்கை உண்டா? லாப்சாங் ரம்பா படித்திருக்கிறாயா? த தர்ட் ஐ."

அவள் அவரை மையமாகப் பார்த்து புன்னகைத்தாள். சுவாமி தன் கையிலிருந்து ஒரு மோதிரத்தைக் கழற்றி அவளிடம் கொடுத்து "இதை அஷோக்குக்குப் போடு" என்றார். தயங்கினாள். நான் என்னை அறியாமல் கை நீட்டிக் கொண்டிருந்தேன். சற்று நேரம் தயங்கினபின் "ஒய் நாட்" என்று தோளைக் குலுக்கிவிட்டு, அதை எனக்கு அணிவித்தாள். அவள் கை மென்மையாக இருந்தது. அந்த தொடுகையில் ஓர் இன்பம் இருந்தது.

"உங்கள் திருமணம் முடிந்தது" என்றார்.

நான் அவளைப் பார்த்தேன். வண்டி விழுப்புரத்தில் வந்து நின்றது. "அஷோக்! நான் என் பெட்டிக்குச் சென்று விடுகிறேனே" என்றாள். அவசரமாக பிளாட்பாரத்தில் இறங்கி அவளை வேகமாக அடுத்த பெட்டிக்கு அழைத்துச் செல்லும்போது, "இந்த மோதிர சமாசாரத்தை சீரியஸாக எடுத்துக் கொள்ளாதே. சுவாமி நல்ல ஆத்மா. நம்மை மகிழ்விக்க சிறுவனைப் போலச் செய்த காரியம் அது." என்றேன்.

"கல்யாணம் என்பது விழுப்புரம் ரயில் நிலையத்தில் ஒரு மோதிரம் போட்டுக் கொண்டால்போதும் என்று நீங்கள் எண்ணாத வரை இதில் எனக்குக் கோபமில்லை" என்றாள்.

மீண்டும் முதல் வகுப்புக்கு வரும்போது ஆர்பிஎஃப் சூப்ரண்ட் ஒருவர், "மிஸ்டர் அஷோக் இந்த மெஸேஜ் மைக்ரோவேவ் சானல்ல வந்தது, உங்ககிட்ட உடனே காட்டும்படியா."

நான் அதைப் படித்தேன். டெலிடைப்பில் அடித்திருந்த வாசகங்கள்.

`சுவாமி ராத்திரிக்குள் இறந்து போவார் என்று தொலைபேசியில் யாரோ கூப்பிட்டுச் சொன்னதாக இன்ட்டெலிஜென்ஸ் ரிப்போர்ட் வந்திருக்கிறது. ஆவன செய்யவும்.'

நான் ஆர்பிஎஃப் அதிகாரியைப் பார்த்தேன். அவர் முகத்தில் கலவரம் தெரிந்தது.

"உங்க பேரு?"

"லாரன்ஸ் ஸார்."

"இந்த ஸ்டேஷன்ல பாம் டிட்டெக்ஷன் உபகரணங்கள் ஏதும் இருக்கா?"

"இல்லை. எட்க்வார்டர்ஸ்ல சென்னைலதான் இருக்கு. மெட்டல் டிட்டெக்டர்ஸ் வச்சிருக்கோம். இப்ப என்ன செய்யறது?"

"அடுத்தது என்ன எக்ஸ்பிரஸ்?"

"ராக்ஃபோர்ட்னு நினைக்கறேன். இப்பத்தான் ஒரு வண்டி செங்கல்பட்டு தாண்டியிருக்கு.''

நான் உடனே தீர்மானித்தேன். "ரிஸ்க் எடுக்க வேண்டாம். பெட்டி பெட்டியா சோதனை போடணும். உங்க ஆர்பிஎஃப் ஜவான்கள் அத்தனை பேரையும் கூப்பிடுங்க. அதுவரைக்கும் வண்டி போகக்கூடாது. கார்டையும் எஸ்.எம்.மையும் கூப்பிடுங்க."

"பாசஞ்சர்களை இறங்கச் சொல்லணுமா?"

"ஆமாம். தேவைப்பட்டா ஸ்பெஷல் ரயிலிலோ அடுத்த ரயில்லயோ அனுப்ப வேண்டியிருக்கும்."

``ரொம்ப கலாட்டா ஆயிடுங்க.''

``பாம் வச்சிருக்கலாம்னு சொன்னாத்தான் கலாட்டா ஆகும். எதுக்கு செக் பண்றம்னு சொன்னா ஒழுங்கா காலி பண்ணிடுவாங்க. சொன்னதைக் கேப்பாங்க. உங்க சாமர்த்தியத்தைப் பொறுத்திருக்கு.''

``இந்த தரித்திரம் புடிச்ச சாமியாருக்கு இது மூணாவது வாட்டிங்க. முந்தின ரெண்டு வாட்டியும் `ஃபால்ஸ் அலாரம்' தாங்க''

``இருந்தாலும் ரிஸ்க் வேண்டாம். அவங்க அவங்க உடைமைகளைக் கைல கூடவே எடுத்துக்கிட்டு எல்லாரும் இறங்கிறட்டும். மிச்சமிருக்கிறதை அப்புறப்படுத்திரணும். பக்கத்தில் போலீஸ் ஸ்னிஃபர் டாக்ஸ் ஏதும் இருக்கா?''

``எல்லாம் சென்னையிலிருந்து தான்

வரவழைக்கணும். இந்த மாதிரி நடுராத்திரி நடுவாந்திர ஸ்டேஷன்கள்ல வசதி போதாதுங்க''

``அப்ப ஒரு வழிதான் இருக்கு. வண்டி பூரா காலி பண்ணிட்டு பெட்டி பெட்டியா பாத்துரணும். பவர்ஃபுல் டார்ச்சாவது கொண்டாங்க. இல்லை வாங்குங்க. நான் சுவாமியை முதல் வகுப்பு வெய்ட்டிங் ரூமுக்கு அழைச்சுட்டுப் போக ஏற்பாடு பண்ணிர்றேன். அதிகம் பயமுறுத்தாம நட்போட சாந்தமா பயணிங்ககிட்ட பேசுங்க. ஒத்துழைப்பாங்க. பதட்டமில்லாம ஒருத்தர் ஒருத்தரா எறங்கட்டும். முதல்ல முதியோர்கள், குழந்தைகள், பெண்கள் அப்புறம் இளைஞர்கள்.''

லாரன்ஸ் செல்லும்போது, ``கழுத்தறுப்பு பேஜாருப்பா இந்த சாமியாருங்களோட'' என்று அலுத்துக் கொண்டு சென்றார். வண்டி தூங்கும் மலைப்பாம்பு போல தனக்குள் பொதிந்திருக்கும் அபாயத்தை அறியாமல் கவலையில்லாமல் ப்ளாட்பாரத்தில் படுத்திருந்தது. சுவாமியிடம் சென்றேன். அப்போதுதான் படுத்துக் கொண்டிருந்தார். கதவை இருமுறை தட்டியதில் திறந்தார். பல்செட்டை அவசரமாக அணிந்து கொண்டார்.

``சுவாமி! கொஞ்சம் சிரமம் கொடுப்பதற்கு மன்னிக்கவும்.''

``என்ன?''

``ஒரு இன்டெலிஜன்ஸ் மெஸேஜ் வந்திருக்கு. உங்க உயிருக்கு ஆபத்துன்னு.''

``பாமா?''

"ஏதும் தெரியல.... சாதாரணமா ரயில்ல பாம் வெக்கறதுதான் தமிழ் நாட்டு வழக்கம். பாம் வெச்சுட்டு டைமரை செட் பண்ணிடுவாங்க. அதைக் கண்டுபிடிச்சாகணும். அதனால நீங்க உங்க பத்திரத்துக்காக இறங்கிக்கணும்."

"எல்லாருடைய பத்திரமும்தான் முக்கியம்பா."

"எல்லாரையும்தான் இறங்கச் சொல்லப் போறேன்."

"அவங்க எல்லாரும் எறங்கினப்புறம் எறங்கிக்கறேனே."

"சுவாமி! எனக்கு நிறைய ஜோலி இருக்கிறது. கொஞ்சம் ஒத்துழைங்க. இன்னும் பெட்டி பெட்டியா அலையணும்."

"அஷோக்! எனக்கு அழைப்பு இன்னும் வரலப்பா. இது எல்லாமே வெட்டி வேலை. நான் இப்ப சாகமாட்டேன்."

"இருக்கலாம் சுவாமிஜி. ஆனா நான் ரிஸ்க் எடுக்க விரும்பலை. கொஞ்சம் ஒத்துழைத்தா எங்களுக்கு நல்லது."
"ரயில் போகாதா?"

"ஒரு ரெண்டு மணிநேரமாவது ஆகும். முதல்ல பயணிகளை இறக்கப் போகிறோம்.

பின்னாலதான் தீர்மானிப்போம். சந்தேகம் இருந்தா ஒரு பாசஞ்சர்லயும் அடுத்து வர்ற எக்ஸ்பிரஸ்லயும் அனுப்புவோம். உங்களுக்கு நாளைக்கு மதுரைக்கு போய்த்தான் ஆகணுமா?"

"ஆமாம்பா. காலைலருந்து ப்ரோக்ராம்."

"அப்ப உங்களுக்கு ஒரு டாக்ஸியும் எஸ்கார்ட்டும் ஏற்பாடு செய்யறமே."

"இதெல்லாம் அனாவசியம் என்று எனக்கு உள்ளுணர்வு தோன்றுகிறது. வண்டில பாம் இல்லை."

"இருந்தும், என் கடமையை செய்ய வேண்டியது முக்கியம். நீங்களே சொல்லியிருக்கீங்களே, என் கடமை உங்க பத்திரம். ரிஸ்க் எடுக்காம உயிர் சேதத்தைத் தவிர்க்கிறது."

சுவாமி வண்டியிலிருந்து இறங்க, அவரை மிக பாதுகாப்பாக ஸ்டேஷன் மாஸ்டர் அறையில் உட்கார வைத்தேன்.



சீடர்கள் இன்னும் உறங்கிக் கொண்டிருக்க வேண்டும். ஆர்பிஎஃப் அதிகாரி மெல்ல, தூக்கத்தில் எழுப்பிய, பிரமிப்பு நீங்காத பயணிகளை ஒவ்வொருவராக இறக்கிக் கொண்டிருந்தார்கள்.

"இந்த நாடு எங்க போறதுன்னே தெரியல." என்று ஒரு தாத்தா சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்தவாறே பொதுவாக சொல்லிக் கொண்டிருந்தார்.

"சாமியார்ங்கள்லாம் ப்ளேன்ல போக வேண்டியதுதானே? இல்லை ஸ்பெஷல் ரயில் விடறது."

சூப்ரண்ட் வந்து "எல்லா பெட்டியையும் பார்க்கணுமா? இல்லை, ஃபர்ஸ்ட் ஏஸிக்கு இந்தப் பக்கம், அந்தப் பக்கம் செக் பண்ணா போதுமா?" என்றார்.

ஏசி ஸ்லீப்பரில் நுழைந்தபோது ப்ருந்தா தூங்கிக் கொண்டிருந்தாள்.

நான் சற்றுத் தயக்கத்துடன் அவுட் லுக் இதழால் அவள் தோளில் தட்டினேன். திடுக்கிட்டு எழுந்தாள்.

"மதுரை வந்துருச்சா?" என்றாள்.

## Part 4

``மதுரை இன்னும் வரலை. விழுப்புரம்தான் வந்திருக்கோம். ஆனா, நீ இறங்கணும்'' ப்ருந்தா ஏன் என்று புரியாமல் என்னைப் பார்த்தாள்.

``முதல்ல இறங்கு சொல்றேன். சாமான் பெட்டிகளை எடுத்துக்க''

``வண்டி போகாதா?'' என்று தன் சிறிய பெட்டியையும் கைப்பையையும் ஊது தலையணையையும் எடுத்துக் கொண்டு தொடர்ந்தாள். மற்ற பயணிகள் ஒவ்வொருவராக தூக்க விழிகளுடன் வண்டியை விட்டு வெளிவந்து கொண்டிருந்தனர்.

``சம்பத்து, சந்தானம், பாச்சு எந்திரிடா. செக் பண்றாளாம்'' போன்ற குழப்ப சப்தங்கள் கேட்டன.

``சார் நீங்க போலீசா, என்ன சார் அநியாயம் இது. நடு ராத்திரில பாதில இறங்கச் சொல்றீங்களே''

``எல்லாம் உங்க பத்திரத்துக்குத்தாங்க. ஒரு மெஸேஜ் வந்தது. அதைப் புறக்கணிக்க முடியுமா?''

``ஏய் அவர் சொல்றது சரிதாண்டா. நீங்க செக் பண்ணுங்க சார். லேட்டா போனாலும் உயிரோட போகலாம்''

``தட்ஸ் த ஸ்பிரிட்''

ப்ருந்தாவிடம் ``இந்த பெஞ்சில உக்காருங்க. டீ கொண்டு தரச் சொல்றேன்'' என்றேன்.
``என்னங்க விஷயம்?''

``சாமியாரைக் கொல்றதா த்ரெட் வந்திருக்கு''.
``அந்த நல்ல மனுஷனைப் போய் யார் கொல்வாங்க?'' என்றாள்.

``இவருக்கும் விரோதிங்க இருக்காங்க. பெங்களூர்லயும், மதுரைலயும் போனவருஷம் சாமி பேசின பேச்சு வன்முறையைக் கிளப்பிச்சு. இப்பல்லாம் அந்த மாதிரி அவர் பேசறதில்லை. இருந்தாலும், அதன் பின் விளைவு இன்னும் போகலை''

``இப்ப என்ன?''
``வண்டி பூரா சோதனை போட்டுட்டு க்ளியர் பண்ணப்பறம்தான் புறப்படும். நாளைக்கு உங்களுக்கு எத்தனை மணிக்கு முகூர்த்தம்?''
``அது வந்து... பத்து மணிக்குன்னு நினைக்கிறேன். மதுரை போனா போதும்''

``போயிருவோம். லேட்டாப்போகும். அதனால அசௌகரியம். உக்காந்திரு ப்ருந்தா. நான் சாமியாரைப் போய்ப் பார்த்துட்டு பத்திரப்படுத்திட்டு வர்றேன். எஸ்.எம்.ரூம்ல உக்காத்தி வெச்சிருக்கேன்''

அங்கு நான் போனபோது, சஞ்சலம் இல்லாமல் சர்க்கார் நாற்காலியில் நேராக உட்கார்ந்திருந்தார் சுவாமி. சிஷ்யர்கள் மூன்று பேர் வாசலில் காவல் காத்திருக்க, ஒருவர் சிறிய கிளாசில் அவருக்கு டீ கொண்டு வந்து கொடுத்தார்.

``சர்க்கரை போடலியே'' என்றார் ஒரு சீடர்.

என்னைப் பார்த்ததும் ``என்ன அஷோக். என் ஒரு ஆத்மாவினால் எத்தனைத் தொந்தரவு ஆனது பாரு''

``பெரும்பாலான பெட்டிகளை சோதிச்சுட்டோம். ஏதும் சந்தேகப்படும்படியா இல்லை''

``நான் சொன்னேனே அஷோக், எதுக்காக படபடப்பும் பரபரப்பும்? என் போன்ற அற்பமானவனைக் கொல்றதால யாருக்கு என்ன பிரியம்''

``என்னவோ பொலிட்டிக்கல் ஸ்டேட்மெண்ட் சுவாமி. நான் கவனிச்ச வரை உலகத்தில எல்லாருக்கும் விதிவிலக்கில்லாம ஒரு எதிரியாவது, இந்தாளு செத்துபோய்ட்டா நல்லதுன்னு நினைக்கறவங்க இருக்காங்க. காந்திக்கு, ஜான் லென்னனுக்கு, கென்னடிக்கு, மார்ட்டின் லூதர் கிங்குக்கு இல்லையா?''

``மனத்தினுடைய விசித்திரங்களால வருது. நான் போனாலும் பரவால்லை. என்னோட ஒண்ணுமறியாத மக்களை பெரிய அபாயத்துக்குள்ளாக்கறதுதான் சரியில்லை''

அப்போது என்னிடம் லாரன்ஸ் வந்து சொன்னார். ``ஆறு பெட்டியை பாத்துட்டோம். மற்றதில பாம் இருக்க சான்ஸ் இல்லைங்க. கிளம்பிரலாம்''

``எப்படிச் சொல்ல முடியும்?'' என்றேன்.

``சுவாமி எந்தப் பெட்டில போகிறார்ங்கறது நம்மைவிட அவங்களுக்கு சரியா தெரிஞ்சிருக்கும்ங்கற யூகம்தான்'' என்றார்.

``எதுக்கும் மற்ற பெட்டிகளையும் மேலாக சோதிச்சுருங்க. பாசஞ்சர்களை இறக்க வேண்டாம். கொஞ்சம் டயம் மிச்சமாகும். சுவாமி, ரயில் புறப்பட இன்னும் ஒரு மணி நேரமாவது ஆகும்.

உங்களை வேணும்னா பாதுகாப்போட ஒரு டாக்சி ஏற்பாடு பண்ணி மதுரைக்கு அழைச்சுட்டுப் போகட்டுமா?''

``இல்லை அஷோக். விழா நாள் முழுவதும் உள்ளது. சாயங்காலம் தான் ஊர்வலம். அதுக்குள்ள போய் சேர்ந்துட்டாப் போதும். மற்ற பேர் அதுவரைக்கும் சமாளிப்பாங்க. ஒரு பெரிய அபாயத்துக்கு காரணமா இருந்துட்டு வண்டியைப் புறக்கணிக்கிறது துரோகச் செயலாப்படுது. என்னாலதான் இந்தத் தாமதம். அந்தத் தாமதத்தின் விளைவுகள் எனக்கும் ஏற்படணும்'' என்றார்.

``சரி உட்கார்ந்திருங்க. நான் மற்ற காரியங்களைக் கண்காணிக்க வேண்டும்''

``அந்தப் பெண்ணை வரச் சொல். சற்று நேரம் பேசிக் கொண்டிருக்கிறேன்''

ப்ருந்தாவிடம் சென்றேன். சிமெண்ட் பெஞ்சில் சாய்ந்து கோழித் தூக்கம் தூங்கிக் கொண்டிருந்தாள். ஒரு முறை என்னைப் பார்த்ததும் முழுவதும் கண் விழித்தாள்.

``ப்ருந்தா சாமியாருக்கு உன்னைப் பிடிச்சுப் போச்சு, கூப்பிடறார்''

``எதுக்கு?'' என்றாள்.

``பேச்சுத் துணைக்குத்தான். வண்டி புறப்பட இன்னும் ஒரு மணி நேரமாவது ஆகும்''.

தன் உடைமைகளை எடுத்துக் கொண்டு ``எங்க இருக்கார்?'' என்றாள்.

``நேராப் போனா எஸ்.எம். ரூம்ல இருக்கார்''

அவள் சென்றதும் நான் துரிதமாக சோதனை வேலையைத் தொடர்ந்தேன். பயணிகள் தூக்கத்தில் இருந்ததால் அதிகம் கலவரம் ஏற்படவில்லை. தேவைப்பட்டபோது மட்டும் எழுப்பினோம். இருந்தாலும் பலர் கடுப்பில் இருந்தார்கள். குறை சொல்லிக் கொண்டு வந்தார்கள்.

``ஸ்டேஷனுக்குள்ள வர்றப்ப வண்டிய செக் பண்ணி அனுப்ப மாட்டாங்களா?''

``பூட்டித்தான் வெச்சிருக்கோம். ஆனா யார்டில இருக்கறப்ப பல விதங்களில் பத்திரக் குறைவு ஏற்படுது. காவலுக்கு ஆள் பத்தாதுங்க''

``முழு வண்டிக்கு ஒரே ஒரு ஆர்பிஎஃப் ஜவான்னா எப்படிங்க?''

``பயமுறுத்தல்தான். நிச்சயம் வெடிப் பொருள் இருக்காது. இருந்தாலும் உங்க நன்மைக்காக இந்தத் தாமதத்தை நீங்க சகிச்சுக்கத்தான் வேணும்''

``காலைல மதுரைல ஒரு இண்டர்வியூ இருக்கு சார், ஒம்பது மணிக்கு'' என்றான் ஒரு இளைஞன்.

``லெட்டர் கொடுக்கறேன். காரணம் தவிர்க்க முடியாம இருக்கிறதால இண்டர்வியூவ ஒத்திப் போட சம்மதிப்பாங்க''

``அதுக்குள்ள வேல போய்டும் ஸார்''

``அப்ப செக்கிங் வேணாம்ங்கறிங்களா?'' என்றேன் ஆயாசத்துடன்

. ``பண்ணுங்க பண்ணுங்க. கொஞ்சம் சீக்கிரமா பண்ணுங்க''

லாரன்ஸ் ஏழாவது பெட்டியில் இருந்த ப்ளாஸ்டிக் பையை எடுத்து வந்து ``இது ஒண்ணுதான் யாரும் க்ளெய்ம் பண்ணாம இருந்தது. திறக்கலாமா?'' என்றார்.

``கேர்ஃபுல். திறந்து வெச்சிருக்கா?''

``ஜிப் போட்டு மூடிருக்கு.''

``திறந்தா ஆக்டிவேட் ஆய்டும். அப்படியே எடுத்துட்டு தள்ளிப் போய் வெக்கறதுதான் உத்தமம்.''

நான் பையைப் பார்த்தேன். ரெக்ஸீன் பை. பச்சையும் மஞ்சளும் கலந்து மூடப்பட்டு, ஜிப்பில் ஒரு கொட்டைப் பாக்கு பூட்டு போட்டிருந்தது. மெல்ல லேசாக கையால் அழுத்திப் பார்த்தேன். மெத்து மெத்தென்று துணி இருந்தது. காதருகில் வைத்தேன். டிக் டிக் சப்தம் கேட்டது. உடனே வைத்துவிட்டேன்.

``ஒதுங்கிருங்க. டைமர் இருக்காப்ல தெரியுது. ஈஸி. ஈஸி. யாராவது பெரிசா குச்சி ஏதாவது வச்சிருக்கிங்களா? ஸ்டேஷன்ல ஒட்டடை அடிக்க'' எல்லோரும் ஒதுங்கினார்கள். ``கொடிக் கொம்பால அப்புறப்படுத்தி தூரத்தில் வைத்துவிடலாம்'' என்றார் சூப்ரண்ட்.

இப்போது கிட்டே போக பயப்பட்டார்கள். எனக்குக் கைகளில் குளிரிலும் வியர்வை துளிர்த்தது. எந்த நிமிஷமும் வெடிக்கலாம். மெல்ல ஏதோ ந்யூக்ளியர் சமாசாரம் போல அதைக் கொடிக்கம்பில் தொங்கவிட்டு, ஒரு முறை அது வழுக்கிய போது காதைப் பொத்திக் கொண்டார்கள். இதயம் ஒரு துடிப்பு தடுமாறியது. நல்லவேளை, அப்போது கூட்டத்தில் இருந்த ஒருவர் ``அந்த பேக் என்னுதுங்க'' என்றார் தெளிவாக.

``நாசமாப்போச்சு ஏன்யா முதல்லயே சொல்லலை?''

``இப்பத்தான் பாத்தேன். சீட்டுக்கு அடியில வெச்சத மறந்துட்டேன்''

``உள்ளுக்குள்ள என்னய்யா சத்தம் கேக்குது?''

``அது வந்துங்க அலாரம் கடிகாரம்ங்க. சைனா பஜார்ல வாங்கினேன். என் மச்சினிக்கு பரீட்சைக்கு படிக்க''

``உன்னால பாரு''

``சரியான தூக்கத்தில மறந்துட்டங்க. ஒரு ஒல்டால், ரெண்டு பெட்டி, கூஜான்னு ஞாபகம் இருந்தது. அப்புறம் இவதான் சொன்னா, மஞ்சப் பைய காணமேன்னுட்டு''

``நல்ல காரியம் பண்ணே'' எனக்கு நடுக்கம் தீர்ந்து சிரிப்பு வந்தது. பயம் என்பது எத்தனை வலுவான ஆயுதம் என்று மீண்டும் உணர்த்தப்பட்டேன்.

இதற்கு முன் கோஹிமா எல்லையில் ஒரு ரைஃபிள் எனக்கு நேராக காட்டப்பட்டு, அதன் ட்ரிக்கர் தயாரிக்கப்பட்ட க்ளிக் கேட்ட போது பயந்தேனே... அதே பயம்.

``பயக்ருத் பயநாசன'' என்று சுவாமி சொன்னது ஞாபகம் வந்தது.

காலை ஐந்து மணி ஆகிவிட்டது. சூப்ரண்ட் ``இட்ஸ் ஆல் க்ளியர்'' என்று சொல்ல, ஸ்டேஷனிலேயே பலர் பல் தேய்த்தார்கள். டீ, காபி கெட்டில்காரர்களுக்கு சுறுசுறுப்பாக வியாபாரம் ஆயிற்று.

பயணிகள் அனைவரும் தம் பெட்டிகளுக்குத் திரும்பி விட எஸ்.எம்.கார்டு கொடுத்த எல்லாக் காகிதங்களிலும் கையெழுத்திட்டேன். பயணிகள் இருக்கைகளுக்குத் திரும்பவும் என்று மீண்டும் மீண்டும் ஒலிபெருக்கியில் அறிவிப்பு செய்தோம்.

நான் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு மெல்ல சுவாமி இருந்த அறைக்குச் சென்றேன். அதை அவசரமாகப் பிடித்துப் போட்டு மிதித்துவிட்டு உள்ளே நுழைந்தேன்.

சுவாமி நாற்காலியில் வீற்றிருக்க, கால்மாட்டில் சிஷ்யர்கள் வீற்றிருக்க, ப்ருந்தா விளிம்பில் மண்டியிட்டு உட்கார்ந்திருந்தாள். அவள் முதுகின் பரப்பும், லேசாகத் தெரிந்த உள்ளாடையும், முழங்கையின் அழகான முடிச்சும், உடம்பில் இருந்த அலுப்பும், அங்க வளைவும், தங்க நிறமும் `இதெல்லாம் எனக்கா' என்றேன் மனசுக்குள்.

``அஷோக், என்ன எல்லாம் சுகமா?''

``ஆம் சுவாமி. இனி அபாயம் எதும் இல்லை''

``நான் சொன்னது சரிதானே. எனக்கு இன்னும் வேளை வரவில்லை என்பது சரிதானே''

``சரிதான். அதைப் பரிசோதனை செய்தபின்தான் எங்களைப் போன்ற பாமரர்களால் தெரிந்து கொள்ள முடிகிறது''

``ப்ருந்தா நீ என்ன சொல்கிறாய்?''

``சுவாமி உங்களிடம் இதுவரை பேசிக் கொண்டிருந்ததை நான் பாக்கியமாகக் கருதுகிறேன். நிறைய விஷயங்கள் தெளிவாயின. என் அண்ணன் இறந்ததன் காரணம் புரிந்தது''

காவி உடை அணிந்த ஒரு பெண் இனிமையாகப் பாடிக் கொண்டிருந்தாள். சுவாமி ப்ருந்தாவைப் பார்த்தார்.

``அருகில் வா மகளே. உனக்கு எல்லா சௌபாக்கியங்களும் உண்டாகட்டும். உனதிஷ்டப்படி உன்னை வரிப்பதற்காக வந்திருக்கும் இந்த அருமையான, கடமை உணர்ச்சி மிக்க இளைஞனை விவாகம் செய்துகொள். மூன்று புத்திரர்களைப் பெறுவாய். அவர்களுக்கு மதுசூதனன், நாராயணன், கோவிந்தன் என்று பெயரிடுவாய். மதுரையில் என்னை வந்து சந்திக்க முடியாவிட்டால் சென்னைக்கு வந்தால் அடுத்த மாதம் சலிவன் தோட்டத்தில் உள்ள எங்கள் ஆசிரமத்துக்கு வந்து சந்திக்கலாம். சர்வமங்களமும் உனக்கு உண்டாகட்டும்'' என்று அவளை ஆசிர்வதித்தார்.

``அஷோக் வா''

நானும், அவளுடன் சேர்ந்து ஆசிர்வாதம் பெற்றேன். எனக்கு பேருவகை தருமாறு எங்கள் இரு கரங்களையும் அவர் இணைத்தார். அவள் கை விரல்கள் என் விரல்களுடன் கோத்துக் கொண்டன. சற்று நேரம் தாமதித்து விடுவித்துக் கொண்டாள்.

``சுவாமி எனக்கு ஒரு கையெழுத்துப் போட்டுக் கொடுக்க வேண்டும்'' என்று தன் கைப்பையிலிருந்து ஒரு ஆட்டோகிராப் புத்தகத்தை எடுத்து தன் பேனாவைத் திறந்து கொடுத்தாள்.

சுவாமி அதில்,

`இன்பம், துன்பம், வெற்றி தோல்வி, இழப்பு, பேறு இவற்றை நிகரெனக் கொள். யாரும் சாவதில்லை.

_ கிருஷ்ணதாசன் ராஜ பண்டிதன்' என்று எழுதிக் கொடுத்தார்.

ப்ருந்தா அதை வாங்கிக் கண்களில் ஒத்திக் கொண்டாள். அதன் பின் ``சுவாமி என் அண்ணன் இறந்தது சென்ற வருடம். தங்கள் பொதுக் கூட்டமொன்றிற்குப் பிறகு ஏற்பட்ட வன்முறையால், கும்பலாக வந்தார்கள். பெயர் கேட்டார்கள். கமல்நாத் என்பதை, அவன் தாடியைப் பார்த்து கமால்கான் என்று கொண்டு, என்ன கெஞ்சியும் கேட்காமல் உயிரோடு கொளுத்தினார்கள்.''

``அவன் ஆத்மா அழியவில்லை பெண்ணே''

``அது உண்மையென்றால், சொர்க்கத்திற்குப் போகும் உங்கள் ஆத்மா என் அண்ணனின் ஆத்மாவை சந்தித்து நான் விசாரித்ததாகத் தகவல் சொல்லட்டும்''

ப்ருந்தா அதன் பின் தன் கைப்பையிலிருந்து ஒரு பிஸ்டலை எடுத்து சுவாமி ராஜபண்டிதரின் மார்பில் வைத்து அழுத்தினாள்.

சகலமும் உசுப்பப்பட்டு நான் அவள் மேல் பாய்ந்து பிடிப்பதற்குள் நேராகச் சுட்டாள்.

அதன் புல்லெட் அவரைத் துளைத்து சுவரில் ரத்தக் கோடிட்டது.

# 15.கடவுள் இயந்திரம்



ஆபீசில் அவ்வளவு உற்சாக தினமல்ல. ரூபன் விட்டுப் போய் விட்டான். திலீபனுக்கு எய்ட்ஸ். நேத்ரி இன்னும் வரவே இல்லை. பத்து மணிக்கு நித்யனைப் பெரியவர் கூப்பிட்டனுப்பினார். உள்ளே நுழைந்ததும் புஸ்தி மீசையும் கழுத்து வரை மூடியிருந்த ஸ்கார்ப்பும் பட்டாபட்டி டீ ஷர்ட்டுமாகப் புன்னகைத்து எதிர் சீட்டில் அமர்ந்திருந்த சிறிய மனிதரைக் காட்டினார். ஒட்ட வெட்டப்பட்ட கிராப்புடன் கச்சிதமாக இருந்தார். பக்கத்துச் சீட்டில் தன் சைஸுக்கு ஒவ்வாத பெட்டி வைத்திருந்தார்.

''பையா, மீட் ப்ரொபசர் ராகவானந்தம். இவர் ஒரு அற்புதம் கண்டுபிடித்திருக்கிறார். நம்ம கம்பெனி மூலம் அதை விளம்பரப்படுத்த வேண்டும். இது, நித்யன். இந்த கம்பெனியின் உயிர்நாடி!''

''என்ன ப்ராடக்ட்?'' என்றான் நித்யன்.

பேராசிரியர் அவனை அற்பமாகப் பார்த்ததை ரசிக்காமல், ''கடவுள் பெட்டி. விளம்பரமே இப்படி வெச்சுரலாமே ப்ரொபசர்,'' 'பெட்டிக்குள் கடவுள் உங்கள் முட்டிக்குள் கடவுள்' ''முழங்கால் முட்டி ஞாபகம் வரும். ப்ராடெக்ட் என்ன செய்யும் சொல்லுங்க,'' என்றான் நித்யன்.

''சொல்லுங்க, ப்ரொபசர். நீங்கதான் கம்பெனி முதலாளியா?''

''இல்லை நான் கண்டுபிடித்த விஞ்ஞானி,'' என்று இரண்டு ஆஸ்ப்ரின் மாத்திரைகளைக் கிழித்து வாயில் போட்டுக்கொண்டார்.

''கடவுள் பெட்டின்னா? கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்க.''

''சிம்பிள். கடவுள் எங்கும் இருக்கிறார். இந்த பெட்டிக்குள்ள. அவரைக் கொஞ்சம் சிரப் மாத்திரை கான்செண்ட்ரேட் மாதிரி அவரை கிரகிச்சு அடைச்சு வெச்சிருக்கேன்.''

''மை காட்!... எந்தக் கடவுள்?''

''எந்தக் கடவுள் தேவையோ, அந்தக் கடவுளை.''

''யு மஸ்ட் பி ஜோக்கிங் ப்ரொபசர்?''

''ஒருமுறை பாத்துட்டீங்கன்னா, நம்புவீங்க. மின்சாரம் இல்லையா? அதை பாட்டரியில அல்லது கப்பாசிட்டர்ல சேர்த்து வைக்க முடியும், இல்லையா? மின்சாரம் ஒரு சக்தி. அதுபோல கடவுளும் சக்திதான். எங்கும் இருக்கிறார். அதனால் சப்ளை ப்ராப்ளம் இல்லை, மின்சாரத்தைப் போல. மின்சாரத்தைச் சேர்த்து வைக்க முடியும்னா, கடவுளைச் சேர்த்து வைக்க முடியாதா?''

நித்யனுக்கு நம்பிக்கையில்லை. ஆனால் க்ளையண்ட் கஸ்டமர் சொல்வது அனைத்தும் வேதவாக்கு என்பது கம்பெனி பாலிஸி.

''அப்ப பெட்டிக்குள் கைவிட்டா ஷாக் அடிக்குமோ?'' என்றான், கேலியாக.

''சில சமயத்தில்தான் ஷாக் அடிக்கும். ராமர், கிருஷ்ணர் அதெல்லாம் மைல்ட். காளி கொஞ்சம் உதறும். அல்லா, ஏசுநாதர் இவங்களெல்லாம் ரொம்ப மைல்டு. புத்தர் புஷ்பம் மாதிரி. ரொம்ப பொறுமை. இந்தக் கிராமத்து மதுரை வீரன், காட்டு விரியன், முத்துக் கருப்பன் இவங்கதான் கொஞ்சம் அடக்க முடியாமப் போயிரும். அதுவும் மகமாயி...''

''என்ன சொல்றீங்க நீங்க? இந்தப் பெட்டிக்குள்ள எந்தக் கடவுளை வேணா அடைச்சு வெக்கலாமா?''

''அடைச்சு விற்கப் போறாரு.'' என்றார் பெரியவர்.

''அமேஸிங்? பெட்டியைக் கொண்டு வந்திருக்கீங்களா?''

அவர் தன்னருகில் இருந்த பெட்டியை எடுத்தார். ஒரு மாதிரி அரக்கு நிற ஓட்டுப் பெட்டிபோல உயரமாக, குறுகலாக இருந்தது. ஆனால் பளபளப்பாக அரக்கு நிற பழைய காலத்து கிராமபோன் போலவும் இருந்தது. அதிலிருந்து மையமாக ஆனால் விருப்பமான வாசனை வந்தது.

''லெட் மீ ஸீ, இதுக்குள்ள கடவுள் இருக்காருங்கறீங்க?'' என்றான் ஆச்சரியத்துடன்.

''ஆமாம். கடைசியா வெச்சது ஜோராஸ்ட்ரிய கடவுள்னு நினைக்கிறேன். கொஞ்சம் சூடா இருப்பார்; பாகன் கடவுள் ஒருவர் இருக்கார். இனிமையா ப்ளூட் வாசிக்கிறார். கிருஷ்ணர்கூட பரவாயில்லை. பிருந்தாவன சாரங்கா நன்றாக வாசிக்கிறார். தொட்டுக் கேட்டுக்கிட்டே இருக்கலாம்,'' என்றார்.

நித்யன் முதலாளியைத் தனியாக அழைத்து, ''திஸ் மேன் இஸ் எ நட்கேஸ்?'' என்றான்.

''நமக்கென்ன? விளம்பர ஏஜென்ஸி கொடுக்கறாங்க. ஜெனரல் எலெக்ட்ரானிக்ஸ் பெரிய பார்ட்டி. அதுக்குள்ள கடவுள் இருக்கோ, கடலை இருக்கோ? விளம்பர வாக்கியம் அமைச்சு வசீகரமாக விளம்பரம் செய்யணும், அதானே! தட்ஸ் இட்! பையா, கஸ்டமரின் மன ஆரோக்கியத்தைப் பற்றி நாம் கவலைப்படக்கூடாது.''

''இருந்தாலும் மக்களை ஏமாத்தறதில்லையா?''

''கடவுள் பெட்டிக்குள்ள இருந்தா என்ன வெளிய இருந்தா என்னப்பா, அந்தாளு சொல்றதில கொஞ்சம் அர்த்தம் இருக்கு. டயம் இருந்தா கேட்டுப் பார் ஸ்க்ரிப்ச்சர்ஸ் அத்தனையும் நெட்டுரு. பைபிள், குரான், தம்மபதா, கீதை. உன்னைப் பொருத்தவரை ஒரு விளம்பர வாக்கியம்; அவ்வளவுதான். தியாலாஜி பிலாசபி இதெல்லாம் வுட்டுரு அம்பேல்.''

''இந்தப் பெட்டி என்ன விலை?'' என்றான் நித்யன்.

''விலை கொஞ்சம் அதிகம்தான்.''

''கடவுள்னா சும்மாவா?''

''கேலி புரியுது. கடவுளுக்கு விலை இல்லை. கடவுள் சக்தியை கிரகிக்கத் தங்கத்தில் இன்லே ஒர்க் பண்ண வேண்டியிருந்தது. தங்கம் மின்சாரத்தை அதிகம் கடத்தும்னு தெரியுமில்லை?''

நித்யன் அவர் பால் நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு, ''டாக்டர் பரமானந்தம்....

''பேரு ராகவானந்தம்.''

''ஸம் ஆனந்தம். நீங்க நிசமாவே இதை நம்பறீங்களா?''

''இதிலே நம்பிக்கை பிரச்னையே இல்லைப்பா. கடவுள் இருக்கார். அவர் சக்தியும் இருக்குது. இன்ஸ்ட்ரக்ஷன் மான்யுவலைப் பாருங்க. பைபிள், குரான், கீதை, தம்மபதா, தாவ் எல்லாத்தையும் படிச்சு அதனதன் சாரத்தைக் கொண்டு வந்திருக்கேன். எகிப்திய சூரியக் கடவுள் ரா கூட ஆப்ஷனா கொண்டு வரப் போறேன்.''

''பிள்ளையார், முருகன்?''

''அதெல்லாம் ரொம்ப சுலபம்.''

''ஓகே, ஓகே. இது எப்படி வேலை செய்யுது சொல்லுங்க. கடவுளைப் பத்தி இன்னும் தீர்மானிக்காத என்னைப் போல பாமரனுக்குப் புரியும்படி.''

''சிம்பிள். பெட்டி மேல் ப்ளேட் இருக்கு பாருங்க. இதைத் தொட்டுக்கங்க. தொட்டுக்கிட்டு இந்தக் குமிழ் இருக்கு பாருங்க, இதை மெல்லத் திருகுங்க. உங்களுக்கு என்ன கடவுள் வேணுமோ நினைச்சுக்குங்க. அந்தக் கடவுள் உங்க மேல பரவுவார். அவருடைய சக்திகள் உங்களுக்கு ஏற்படும். இன் அதர் வோர்ட்ஸ், டைம் அவுட் வரைக்கும் நீங்க கடவுளா மாறுவீங்க.''

''அது என்ன டைம் அவுட்.''

''பெட்டிக்குள்ள எலக்ட்ரானிக் டைமர் இருக்கு... சொல்லுங்க, எந்தக் கடவுள் வேணும்?''

''ம். எனக்குப் பிடிச்சது கிருஷ்ணர்தான்.''

''லிஸ்ட் இருக்கு. சரி,'' என்று அதனுள் இருந்த எண் வரிசையில் எட்டாம் நம்பரை வைத்தார்.

நித்யன் பெட்டியைத் தொட்டுக்கொண்டு, மெல்ல அந்தக் குமிழைத் திருகினான். ''ம்ஹூம், எதுவும் இல்லை.''

''கிருஷ்ணர் தெரியலை உங்களுக்கு? சரியாப் பாருங்க. கிருஷ்ணருடைய மாயா சக்தி வர ஆரம்பிச்சிருக்குமே?''

''இல்லை.'' கண் மூடிக்கொண்டான். பார்த்தான். தெரிந்தது எல்லாம், எதிரே இருந்த கே.பி.வெங்கடரமணா கம்பெனி காலண்டர்தான். ப்ரொபசர் குமிழை கடைசி வரை திருகினார். ''இப்ப?''

''ம்ஹூம்! கடவுளும் இல்லை, கட் பாடியும் இல்லை.''

''கை எடுங்க,'' என்று ப்ரொபசர் பெட்டியைச் சாக்கிரதையாகத் திறந்து பார்த்தார்.

''ஓ! ஓ! இதுதான் ப்ராப்ளம்,'' என்று அதிலிருந்து சின்னதாக ஒரு பொருளை எடுத்து ''தைரிஸ்டர் புட்டுக்கிச்சு.''

நித்யன் அவரை வியப்புடன் பார்த்தான். இவரை மேதை என்பதா? பைத்தியமா? ஆனால் எந்தவித பாசாங்கும் இன்றி தீவிரமாக முகத்தை வைத்துக் கொண்டிருந்தார். தன் கைப்பையிலிருந்து ஒரு குட்டியான ஸால்ட்ரிங் அயர்னை எடுத்து, ''நல்லவேளை ஸ்பேர் இருக்கு,'' என்று பெட்டியைத் திறந்து எதையோ உருக்கிப் பற்ற வைத்தார். ''இப்ப பாருங்க,'' என்றார். இப்போது நித்யன் அதில் கை வைத்தபோது அதன் குமிழ் முழுவதும் திருப்பப்பட்டிருந்ததை ராகவானந்தம் கவனிக்கவில்லை.

நித்யன் முகத்தில் ஒருவிதமான மாறுதல் ஏற்பட்டது.

''தெரியுதா? உடல்பூரா பொங்குமே, பாட்டு? புல்லாங்குழல் கேக்குதா? அவர் சக்தி அனைத்தும் உனக்கு இத்தனை நேரத்துக்கு வந்திருக்கணுமே?''

குமிழைப் பார்த்தார். ''ஊப்ஸ்!! கொஞ்சம் அதிகம் வச்சுட்டேன்,'' என்று குமிழை அவசரமாக அப்பிரதட்சணமாகத் திருப்பினார்.

நித்யன் எழுந்து மெல்ல ஒரே திசையில் பார்த்துக் கொண்டு, நடந்து பெரிய சன்னல் கதவைத் திறந்து அதன் விளிம்பில் ஏறிக்கொண்டு கைகளை இறக்கைபோல விரித்துக்கொண்டு, ''பரித்ராணாயா சாதுனாம், வினாசாய சதுஷ்க்ருதாம், தர்ம சம்ஸ்தாபனார்த்தாய, சம்பவாமி யுகே, யுகே,'' என்று ஆறாவது மாடியிலிருந்து குதித்தான்.

அவன் பறப்பானா? பறந்தானா?

## 16.தேஜஸ்வினி

''பேர் வைத்தபோது நிஜமாகவே தேஜஸ்வினியாக இருந்து தொலைப்பாய் என்று யார் எதிர் பார்த்தார்கள்..?'' என்றார் ராஜாராம்.



தேஜஸ்வினிக்கு நேற்று இருபத்தேழாவது பிறந்த நாள். அழகாக இருக்கிற தன்னம்பிக்கையில். குரங்கு சேஷ்டைகள் எல்லாம் பண்ணுவாள். தப்புத் தப்பாக பொருத்தமில்லாமல் உடையணிவாள்.

''எதற்காக அலங்காரம் பண்ணிக் கொள்ள வேண்டும்? நான் என்ன பொங்கல் பொருட் காட்சியா?''

''ஹூம்...''

''என்னப்பா பெருமூச்சு?''

''உனக்கேற்ற பையன் கிடைப்பானா என்ற கவலை தேஜூ...''

''கல்யாணத்தைத் தவிர, வேறு எதுவும் பேச விஷயம் இல்லையா அப்பா?''

''என்ன பேசவேண்டும்?''

''காஸ்மாலஜி, காரைக்கால் அம்மையார், டெலிகம்யூட்டிங்... ஏதாவது பேசுங்களேன்... எத்தனை தெரியும் உங்களுக்கு?''

''தேஜூ, அதெல்லாம் இப்போது இரண்டாம் பட்சம். உனக்கு என்ன வயசு தெரியுமா?''

''கல்யாணமாகிக் குழந்தை பெற்றுக் கொண்டிருக்கவேண்டிய வயசு! ஸ்பான்சர் விளம்பரம் போல எத்தனை முறை சொல்லிவிட்டீர்கள்...''

''உனக்கே தெரிகிறதல்லவா? தள்ளிப் போட்டுக்கொண்டே போனால், உன் கல்யாணத் தகுதி வரவரக் குறைந்து வருகிறது என்பதை உணர்கிறாயா? கடைசியில் என்னை மாதிரி ஒரு கிழவாடிதான் கிடைப்பான்...''

‘‘எனக்கு ஆதாரமாக ஒரு கேள்வி எழுகிறது. பெண் கல்யாணம் பண்ணிக் கொள்ளத்தான் ஏற்பட்டவளா? அதில்லாமல் சந்தோஷமாக வாழ முடியாதா?’’

‘‘ஒரு முக்கியமான சந்தோஷம் மறுக்கப்படுகிறதே...’’

‘‘செக்ஸ்தா&னே?’’

‘‘இல்லை... தாய்மை! அதுதான் இயற்கையின் நியதி.’’

‘‘அது ஆட்டோரிக்ஷாவைத் தவிர, வேறு எங்கேயாவது எழுதியிருக்கிறதா? எந்த சாஸ்திரத்திலா வது, எந்தச் சட்டப் புத்தகத் திலாவது?’’

‘‘நிறையப் புத்தகம் காட்டுவேன். மனுதர்மத்திலிருந்து மேரேஜ் மேன்யுவல் வரை...’’
‘‘அதை எழுதினவர்கள் எல்லாரும் ஆண்கள். நார்மன் மெய்லர் சொன்னதில் மட்டும் எனக்குச் சம்மதம். ‘கல்யாணம் என்பதில் நாலு கட்டம் இருக்கிறது. முதலில் காதலிப்பது. இரண்டாவது கல்யாணம் செய்வது. மூன்றாவது பிள்ளை பெற்றுக் கொள்வது...’’

‘‘நான்காவது?’’

‘‘கணவன் மனைவியையோ, மனைவி கணவனையோ முழுவதும் அறிந்து கொண்டு விவாகரத்து செய்வது!’’

‘‘கல்யாணம் என்றால் பயமா? ராஜீவ் ரோஷனுக்கு என்ன தகுதி இல்லை?’’
‘‘அப்படியில்லை அப்பா... அவனைக் கல்யாண நோக்கத்துடன் பார்த்தால் இருபத்து நாலு மணி நேரமும் இரவும் பகலும் இதே முகத்துடன் வாழ வேண்டுமா? தூங்கி எழுந்ததும் பல் தேய்க்கையில், சாப்பாட்டு மேஜையில், டிராயிங் ரூமில், இரவு படுக்கையில், டாய்லெட் போகும்போது இதே மூஞ்சிதானா? இதே காதோர ரோமம்தானா, கண்சிமிட்டல்தானா என்று எண்ணும்போது அடிபட்டுப் போய்விடுகிறான். மேலும், நான் உண்மை பேசிவிடுவேன். மணவாழ்க்கைக்கு ‘ஐ லவ் யூ டார்லிங்’ போன்ற நிறைய பொய் தேவைப்படும் என்று தோன்றுகிறது...’’

அப்பாவுக்குக் கோபம் வந்துவிட்டது. ‘எக்கேடு கெட்டுப் போ’ என்று சொல்லிவிட்டு அலுவலகத்துக்குப் புறப்பட்டார். ‘ரூபி!’ என்றதும் டாஷ்ண்ட் தாவி ஏறிக்கொண்டது.

‘‘ரூபி! நீ ஒருத்தன்தாண்டா சொன்னதைக் கேக்கறே..?’’

ராஜாராம், மேம்பாலத்தில் திரும்பி ராதாகிருஷ்ணன் சாலையில் செல்லும்போது, ‘‘தப்புப் பண்ணிட்டேன் ரூபி... இந்தப் பெண்ணை இவ்வளவு தூரம் படிக்க வைத்திருக்கக்கூடாது. ஹோம் சயின்ஸோ, ஜியாக்ரபியோ, சைக்காலஜியோ படிக்கவைத்திருக்க வேண்டும்...’’ என்று சொன்னார். ரூபி காதுகளைத் தாழ்த்தி ஆமோதித்தது. எதற்கோ வாலை ஆட்டியது.

‘‘அழகாக இருக்கிறாள். ஐ.ஐ.டி>யில் தங்க மெடல் வாங்கினாள். ஐ.ஐ.எம். அகமதாபாத்தில் எம்.பி.ஏ.! தனியார் வங்கியில், இந்த வயசில் பெரிய பதவி. இதுவே ஒரு தடை. நான் பார்க்கும் பெரும்பாலான மாப்பிள்ளைகளைவிட, இவளுக்கு இரண்டு மடங்கு அதிக சம்பளம். உயரம் வேறு என்னைக் கொண்டிருக்கிறாள். இந்திய சராசரிக்கு அதிகம். அவள் சான்றிதழ்களையும் சிறப்பு களையும் சேகரிக்கும்போது, ஒவ்வொரு முறையும் அவளை உற்சாகப்படுத்தி விட்டு, ஜூனியர் லெவலில் செஸ் ஆட தாஷ்கெந்துக்கு எல்லாம் அனுப்பிவிட்டு, குடியரசுதின அணிவகுப் பில் கலந்துகொள்ளவும் சித்தார்த் பாசுவின்

கேள்விகளுக்குப் பதில் சொல்லவும் டெல்லிக்கு அனுப்பி விட்டு, நான் படிக்கும் கன்னாபின்னா புத்தகங் களையெல்லாம் அவளை யும் படிக்கவைத்து, இப்போது இருபத்தேழு வயதில் எதற்காகப் படிக்க வைத்தோம் என்று ஏங்குகிறே&ன... இதென்ன நியாயம் ரூபி... என்மேல் தா&ன தப்பு?''

'பப்' என்று சுருக்கமான பதில் அந்த சாக்லெட் கலர் ஜீவனிடமிருந்து வந்தது.

ஒரே பெண். நான்கு வயசில் அம்மாவை இழந்தவள். மறுகல்யாணம் செய்து கொள்ளாமல், அக்காவைத் துணைக்கு வைத்துக்கொண்டு... தாய்ப் பாசம் இல்லாமல் வளர்ந்ததாலா..? அக்காவை 'அம்மா' என்று தா&ன அழைப்பாள்.

நிறையப் படித்ததாலா?

'எந்த ஆண்பிள்ளையும் சரிப்பட்டு வரமாட்டான்' என்று சொன்னது அவருக்கு அச்சமாக இருந்தது. ஒருவேளை, அவளை மனோதத்துவ டாக்டரிடம் காட்ட வேண்டுமோ? வாழ்க்கை முழுவதும் இந்தப் பெண் தனியாக இருப்பது, ஆண்வர்க்கத்துக்கே செய்யும் துரோகம். இவள் மூலம் என் சந்ததி வளரவேண் டாமா?

உயரம், நிறம், பேச்சில் நளினம், உடலமைப்பில் போதுமான கவர்ச்சி. ஒரு ஐயோட்டாகூட ரகசியமோ, இச்சையோ இல்லாது விழுங்குவது போல் பார்க்கும் நேர்ப் பார்வை. எவருடனும் பேசும் போது அவள் கவனிக்கும் பாங்கே தனியானது. அவள் கண்களை நேராகப் பார்க்கச் சில ஆண்கள்தான் தயங்குவார்கள். இந்தப் பெண்ணைப் பற்றி வேறுவிதமாக நினைக்கிறோமே என்று குற்ற உணர்ச்சி ஏற்படுத்தி விடுவாள் தேஜஸ்வினி. பிரகாசினி.

இத்தனை அருமையான பெண்ணுக்கு இதுவரை பத்து மாப்பிள்ளைகள் பார்த்துவிட்டார். முதலில் ஒரே சப்செக்ட், சக ஜாதி என்று ஆரம்பித்து, அதன்பின் 'தமிழ் தெரிந்தவனாக இருந்தாலே போதும்' என்று தேடி, 'தமிழ் தெரியாவிட்டாலும் திராவிட மொழி எதாவது தெரிந்தால் போதும்' என்று மாற்றி... 'நல்ல வேலை, நல்ல குணம், தோற்றம் போதும்' என்று இன்னும் தளர்த்தி, இவ்வாறு மெள்ள மெள்ளத் தேடலின் விஸ்தீரணத்தை அதிகரித்து, இப்போது ஆபீஸில் அல்லது பார்ட்டிகளில் எந்த ஆணைப் பார்த்தாலும் பஞசாபியோ, பெங்காலியோ முதலில் 'இவன் நம் தேஜூவுக்குச் சரிப்பட்டு வருவானா?' என்று மனதுக்குள் ஒரு கேள்வி கேட்பார்.

வடிகட்டும் விதிகளைத் தளர்த்தித் தளர்த்தி, இதுவரை ஒரு அமெரிக்கன் உட்பட பத்துப் பேரைக் காட்டிவிட்டார்.

'காட்டுதல்' என்பது என்ன? அதன் பொதுவான கதை > வசனம் இவ்வாறு இருக்கும்:

''தேஜூ, இன்னிக்கு டின்னருக்கு செஜசுரி கிளப்ல ஒருத்தனை மீட் பண்றே நீ...''

''தாராளமாப்பா... ஐ'ம் எக்ஸைட்டட்!''

''கிண்டலா?''

''உண்மையாப்பா... எனக்கு மட்டும் அக்கறை இல்லையாப்பா, மிஸ்டர் ரைட்டைச் சந்திக்க...''

‘‘முதல்ல போன்ல பேசு...’’

‘‘ஹலோ...’’

‘‘ஹலோ...’’

‘‘ஐ’ம் வினய்...’’ (அல்லது விகாஸ் அல்லது தாஸ்குப்தா)

‘‘ஹாய் வினய்... உங்களுக்கு கேயாஸ் தியரி தெரியுமா?’’ ‘‘ஆரம்பிச்சியா... அவனை முதல்ல கொஞ்சம் பேச விடும்மா...’’

‘‘கேயாஸ் வாட்? ஐ’ம் ஸாரி... நோ ஐடியா! ஆளை விடு மச்சி...’’

‘‘உங்களுக்கு எதுல இன்ட்ரஸ்ட்?’’

‘‘ஐ லைக் டி.வி., மூவி, ஜீவி! ஜின் அண்ட் விஸ்கி... ஹாஹ்ஹா..!’’ சிரிக்காமல், ‘‘டி.வி>யில என்ன பார்ப்பீங்க?’’

‘‘எஃப். டி.வி. பார்ப்பேன். கிரிக்கெட் பார்ப்பேன்...’’ ‘

‘எல்லாம் ஆரோக்கியமான விஷயங்கள்தான்...’’

இதன்பின் பிரம்மாஸ்திரம். ‘‘நீங்க சமீபத்துல என்ன புத்தகம் படிச்சீங்க?’’ ‘ஸாரி! நான் புத்தகம் படிக்கறதில்லை. எல்லாம் நெட்ல பார்த்துப்பேன்’ என்றால், அந்த இடத்திலேயே ஆட்டம் க்ளோஸ்...

போனை வைத்ததும், ‘‘அப்பா... நான் இந்த ஆளைப் பார்க்கணுமா?’’ ‘‘ஏன்?’’

‘‘எஃப். டி.வி. பார்க்கிறவனோட உங்க பொண்ணு தினசரி வாழணும்னு விரும்பறீங்களாப்பா?’’

‘‘ஜோக் பண்றாம்மா... ரெண்டு பேரும் தனித்தனி டி.வி. வாங்கி வெச்சுக்குங்க. நீ ஹிஸ்டரி சேனல் பாரு... அவன் மிஸ்டரி பார்க்கட்டும்... என்னம்மா அடாவடித்தனமா இருக்கு...’’

‘‘இல்லைப்பா... இன்டலெக்சுவல் லெவல்ல இத்தனை வித்தியாசம் இருக்க வேணாம்ப்பா... நீங்க பார்க்கச் சொன்னா பார்க்கிறேன். ஆனா, இந்தாளு உச்சரிப்பே நல்லாயில்லை. ‘ஆளை விடு மச்சி’! என்ன வார்த்தை இது?’’

‘‘தமாஷ்ம்மா... மனசு நல்லா இருக்கணும்மா...’’

‘‘மனசு நல்லாயிருந்தா உச்சரிப்பும் நல்லாவே இருக்கும்ப்பா. உங்க இங்கிலீஷ் எவ்வளவு பண்பட்டதா இருக்கு. அன்னிக்கு அப்படித்தான்... அவன் யாரு அகர்வால், ஸ்கூலுக்கு இஸ்கூல்ங்கறான். டாக்டரேட் இன் பயோகெமிஸ்ட்ரி! எங்கருந்துப்பா இந்த மியூஸியம் பிறவிங்களைப் பிடிக்கறீங்க?’’

காரில், பக்கத்து ஸீட்டில் இருந்த செல்போன் ஒலித்தது. ‘‘ராஜாராம்!’’

‘‘ராஜா, நான் புருஷோத்தமன் பேசறேன்...’’

''எந்த புருஷோத்தமன்?''

''என்னப்பா நீ... என்னை மறந்துட்டியா? சரி, சரி... தேவ்ங்கிற பையனை சாயங்காலம் வந்து உன்னைப் பார்க்கச் சொல்லியிருக்கேன். விவரம் சொல்வான்...''

''ஹலோ...'' அவ்வளவுதான்... குரல் கரகரத்துக் கரைந்தது.

'புருஷோத்தமன், புருஷோத்தமன்...' என்று நினைவறைகளில் தேடினார். 'எந்த புருஷோத்தமன்? டெல்லியில் வேலை செய்தா&ன, எனக்கு சீனியர்... அவனா?அவன் இறந்துபோய் விட்டா&ன... மெரிக்காவில் ஒரு புருஷோத்தமன் ருக்கிறான். அவனோ? குரல் வேறு மாதிரி இருந்ததே...' > செல்லில் நம்பரைப் பார்த்தால் புதுசாக இருந்தது.

வாரம் நாலு நாள் அப்பாவும் மகளும் மெரீனாவில் மாலைவேளையில் மகாத்மாவிலிருந்து உ.வே.சா. வரை நடப்பார்கள். ரூபி சமர்த்தாகக் கூட வரும். லீஷை இழுக்காது. விசுக்... விசுக்கென்று ஆட்டி ஆட்டிக்கொண்டு, வயிறு தரையைத் தொட, ஓட்டமும் நடையுமாகத் தொடரும். ஐஸ்க்ரீம் வாங்கிக் கொடுப்பாள்.

சிமெண்ட் பெஞ்சில் சற்று நேரம் உட்கார்ந்துவிட்டு, கடற்கரைக்குச் சென்று கொஞ்ச நேரம் கால்களில் நண்டு குறுகுறுக்க நின்றுவிட்டுத் திரும்பிவருவார்கள். அப்போது, ''என்னப்பா... மாப்பிள்ளை ஊர்வலம் நின்று போய்விட்டது! கொஞ்ச நாளா யாரையும் காட்டலையே?'' என்றாள். '

'நீதான் யாரைப் பார்த்தாலும் குறைசொல்கிறாயே... நான் என்ன செய்வது?''

''அதெப்படி... எனக்குத் தகுந்த மாப்பிள்ளை பார்ப்பது, தகப்பனாகிய உங்கள் கடமை!''

''தேஜு... எதற்காக என்னை இப்படிப் படுத்துகிறாய்? வரவர உன்னை புரிந்துகொள்ளவே முடியவில்லை...''

''சிம்பிள்ப்பா... என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளத் தகுதியுள்ள ஆள் இந்த உலகத்தில் இருப்பதாகத் தெரியவில்லை...''

''தகுதியுள்ள ஆள் யாரு?''

''அவனைப் பார்த்தவுட&ன பாடி கெமிஸ்ட்ரியே சொல்லிடும்ப்பா...''

''தேஜு... உனக்காக ஒருத்தன் பிறந்திருக்கிறான், வளர்ந்திருக்கிறான். ஆனால், அவனை இன்னும் நாம் சந்திக்கவில்லை. அவ்வளவே! அவன் அடுத்த தெருவிலேகூட இருக்கலாம். ஏன், இந்தக் கடற்கரையில் நாம் சந்திக்கும் அடுத்த இளைஞனாகக்கூட இருக்கலாம். விதி அவனைக் கொண்டு வந்துவிடும்...'' என்றார்.

''ஹாய்!''

திரும்பிப் பார்த்தாள். விளக்குப் போடத் துவங்கிவிட்டார்கள். அதன் பிரமிப்பில், அவன் முகம் முழுவதும் தெரியவில்லை. ஒருவிதமான 'சில்ஹவுட்' போலத்தான் தெரிந்தான். தலைக்குப் பின் வெளிச்சம் வெள்ளிச் சிறகு போலத் தெரிந்தது.

''யார் நீங்க?''

‘‘என் பேர் தேவ்... மிஸ்டர் புருஷோத்தமன், உங்களைப் பார்க்கச் சொன்னார்...’’

‘‘செல்லில் தகவல் வந்தது. எந்த புருஷோத்தமன்?’’

‘‘என்ன சார், புருஷோத்தமனைத் தெரியவில்லை என்கிறீர்கள்..? அவர் உங்களை நன்றாகத் தெரியும் என்றார்!’’

‘‘வேலை விஷயமாகவா?’’

‘‘இல்லை... உங்கள் குமாரத்தியைச் சந்திக்கிற விஷயமாக. என்ன பேர் சொன்னாங்க? தேஜஸ்வினி... நல்ல பேர். பிரகாசம்! தேஜஸ்... ‘தேசுடைய சக்கரம், தேசும் திறலும் திருவும் உருவமும்’ பிரபந்தத்தில் 2291>வது பாட்டில் இரண்டாவது வரியில வருது. தேசுதான் தேஜஸ்...’’ என்றான் அலட்சியமாக. ஒரு வாக்கியத்தில் தன் அறிவின் விஸ்தாரத்தைக் காட்டி விட்டான்.

‘‘உட்காரலாமா... உங்களுக்கு ஆட்சேபனை இல்லையே?’’

இருவரும் வாயடைத்து நிற்க... ‘‘நீங்க பேசமாட்டீங்களா தேஜஸ்வினி?’’

அவன் குரல் வசீகரமாக இருந்தது. இப்போது அவனை முழுசாகப் பார்க்க முடிந்தது. சுருக்கமில்லாத வெளிர் நீலத்தில் கழுத்தை மூடும் பனியன் அணிந்திருந்தான். ஒருமாதிரி ஆரஞ்சு வண்ணத்தில் அரைடிராயர் என்பதா? பெர்முடாஸ், முக்கால் டிராயர் என்பதா? நீண்ட கரங்களை முழங்காலில் வைத்திருந்தான்.

அப்போதுதான் தெரிந்தது அவருக்கு > தேஜூவும் அவனையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டு வந்திருக்கிறாள் என்பது.

‘‘பேசமாட்டாங்களா?’’

‘‘பேசுவாளே தேஜ்?!’’

‘‘விதியைப் பற்றிப் பேசிக்கொண்டு வந்தீர்கள். விதி என்பது சர்வாதிகாரி கள் குற்றத்துக்கும் முட்டாள்கள் தோற்றதற்கும் சொல்லும் சால்ஜாப்பு. அ பீட்சுஹபிபீசூ க்ஸ்ஷயுசூக் கிச்சு ஷசுகூப்க் ஹபிக்ஷ ஹ கிச்ச்நூசூ க்ஸ்ஷயுசூக் கிச்சு கிஹகூநூயுசுக்..." என்றான்.

‘‘ஆம்ப்ரோஸ் பியர்ஸ்...’’ என்றாள்.

‘‘அட... நீங்களும் படிச்சிருக்கீங்களா? அதோட நீங்க அனுசரித்துப் போகிறீர்களா?’’

‘‘இப்ப நான் உங்களைச் சந்திக்க வந்தது விதியா?’’

‘‘தேவ் என்ன பண்ணிக்கொண்டிருக்கீங்க இப்ப?’’

‘‘சென்னைக்கு ஒரு நாள் விஜயத்துக்கு வந்திருக்கேன். ராத்திரி எட்டுக்குப் புறப்பட வேண்டும். ஆனால், அதைத் தள்ளிப்போடத் தீர்மானித்துவிட்டேன்...’’

''ஏன்?'' என்றாள்.

''தேஜஸ்வினியைச் சந்திச்சுட்டே&ன!''

அரை இருட்டிலும் அவள் கன்னம் சிவந்ததுபோல் தோன்றியது ராஜாராமுக்கு.

''நீங்க என்ன புத்தகம் படிப்பீங்க?'' என்று கேட்டாள் தேஜஸ்வினி.

''என்ன புத்தகம் படிக்கலைனு கேளுங்க... கைலாஷ் காலனில, எங்க இந்திரபுரிக்கு அடுத்து அங்கே ஒரு பெரிய லைப்ரரி இருக்கிறது. எல்லாம் படிப்பேன். எக்ளெக்டிக்னு சொல்லலாம். அல்லது டைலெட்டாண் டிசம்னு சொல்லலாம். எனக்கு எந்த சப்ஜெக்ட்டும் பிடிக்கும். ஆம்னிவோரஸ்ஸா படிப்பேன்...''

''கடைசியா என்ன படிச்சீங்க?''

''சொன்னா சிரிக்காதீங்க...''

''சிரிக்கலை...''

''தியாகராஜ சுவாமி கீர்த்தனைகள் ஒரு புத்தகமும் தியோடோர் ஸ்டர்ஜியன் சிறுகதைத் தொகுப்பும். பல பட்டறைனு பயந்துக்காதீங்க...''

''நான்கூட ஒரே சமயத் தில் இரண்டு சம்பந்தமில் லாத புத்தகம் படிப்பேன்...''

''குட்! ஒரே மாதிரி சிந்தனை...''

''தியாகராஜ சுவாமி கீர்த்தனைகளை அர்த்தம் புரிஞ்சு பாடினா, எவ்வளவோ உத்தமமா இருக்கும்பாங்க...'' என்றார் ராஜாராம்.

''ஆமாங்க... பக்கல நிலபடின்னு கரஹரப்ரியா வில கீர்த்தனை இருக்குங்க...''

''அதுக்கு அர்த்தம் தெரியுமா தேஜு?''

''நான் சொல்றேன்...'' என்றான் தேவ். ''பக்கல நிலபடி கொலிசே முச்சுட பாக தல்பராதா... பக்கத்தில் நின்றபடி ராமனுக்கு நீங்கள் சேவை செய்யும் மர்மத்தை எனக்குத் தெரிவிக்கலாகா தானு கேக்கறார். சீதை கிட்டயும் லஷ்மணன்கிட்ட யும் அவங்களை நேராகப் பார்த்தது போலவே...''

ராஜாராம் குறுக்கிட்டு, ''தேவ்... உங்களுக்குக் கல்யாணமாயிடுச்சா?'' என்று கேட்டார்.

''இல்லைங்க...''

''ஏன்?''

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கத் தகுதியுள்ள பெண் இந்த உலகத்துல இருக்கிறதா தெரியலை...'' என்றான்.

தந்தையும் மகளும் பார்த்துக்கொண்டார்கள்.

''அந்த அபிப்பிராயம் மாறும் போலிருக்கு...''

''டின்னருக்கு எங்கேயாவது போகலாமா?''

''ஒண்ணு பண்ணுங்க... ரெண்டு பேரும் பேசிக்கிட்டு இங்கேயே இருங்க. நான் போய்க் கொஞ்சமாவது டீசண்ட்டா டிரஸ் மாத்திக்கிட்டு வந்துடறேன். டிராயரோட பார்த்தா ஜனங்க பயந்துக்கும்...''

''அரை மணியில வந்துடுங்க. காத்திருக்கோம்...''

''பை...'' என்று அவள் கையைத் தொட்டு விட்டுச் சென்றான்.

அவன் போனதும் ராஜாராம், ''என்ன... கெமிஸ்ட்ரி வேலை செய்யுதா?''

''ஆமாப்பா... முதல் தடவையா எனக்கு வேற மாதிரி ஒரு ஃபீலிங் வருதுப்பா. இந்தாளைப் பிடிக்கும் போலத் தோணுது...''

''எனக்கும் பிடிச்சிருக்கும்மா. என்ன வேலை, சம்பளம் எல்லாம் விசாரிக்கலாம் முதல்ல...''

''அதெல்லாம் இப்ப முக்கியமா படலைப்பா... அவன் என் கையைத் தொட்டா&ன, அந்தத் தொட்டதே தெரியலை. அத்தனை லேசா இருந்தது! லேசான சூட்டிலேயே ஆயிரம் விஷயங்களைப் புரிய வெச்சுட்டான்பா...''

''அவசரப்படாதே..!''

''அவசரமே இல்லைப்பா... இந்தக் கணத்துக்காகத்தான் நான் காத்திருந்தேன். நான் பிறந்தபோதே தீர்மானிக்கப்பட்டது போலத் தோணுது. இதுக்காகத்தான் மத்ததெல் லாம் நடந்திருக்கிற மாதிரி...''

''முதல்ல அவனைப் பகல் வெளிச்சத்துல பார்க்கணும்மா...''

''இது என்னப்பா புடவை செலக்ஷனா?''

''இப்ப என்ன சொல்றே... ராத்திரியே கல்யாணம் வெச்சுக்கணும்கறியா?''

''ராத்திரியே கேட்டுடலாம்...''

நட்சத்திர ஓட்டலின் உச்சாணியில் இருந்த ரெஸ்ட்டாரண்டில் ஒருவர் ட்ரம்பெட்டில் பழைய பாட்டு வாசித்துக்கொண்டிருந்தார்.

'' 'செர்ரி பிங்க் அண்ட் ஆப்பிள் ப்ளாசம்' > லூயி ஆம்ஸ்ட்ராங் பிரபலப்படுத்திய பாட்டு...''

அவள் உட்காரும் நாற்காலியைப் பாங்காக இழுத்து உட்காரவைத்து தான் உட்கார்ந்து மெனு கார்டை மேய்ந்தான் தேவ்.

''டின்னர், நான் கொடுக்கறது...'' என்றார் ராஜாராம்.

''அதில் எனக்கு அபிப்பிராயப் பேதமே இல்லை...'' என்றான் தேவ்.

இப்போது ஓர் இளைஞர் கூட்டம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, சினிமா பாட்டு வாசிக்க... ‘‘கன்னத்தில் ஒருத்தி...’’ என்றான்.

‘‘உங்களுக்குத் தெரியாததே இல்லையா?’’

‘‘எனக்குத் தெரியாதது நிறைய இருக்கிறது. எல்லாம் பெரிய விஷயங்கள்...’’

‘‘உதாரணம்...’’

‘‘காலத்தின் ஆரம்பம் என்ன என்பது, கடவுள் காலத்துக்கு வெளிப்பட்டவரா என்பது’’ என்றவன், மேஜையில் வைத்திருந்த அநாவசிய மெழுகுவத்தியை ஒரு நிமிஷம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

‘‘உங்க சொந்த ஊர் எது?’’

‘‘சொன்னாரே... கைலாஷ் காலனி, இந்திரபுரினு... டெல்லிதா&னெ?’’

அவன் அவளையே பார்த்து, ‘‘மேலே கேட்கவேண்டிய கேள்விகள் எல்லாம் கேட்டுடுங்க. அம்மா, அப்பா எங்கே இருக்காங்க? ஃபேமிலி எப்படி? எல்லாத்துக்கும் பதில் சொல்றேன். முதல்ல இந்த நாராசத்துல இருந்து விடுதலை கிடைக்கட்டும்...’’

அந்த இளைஞர்கள் சத்தம் போட்டுக் கைதட்டி, கன்னாபின்னா ஆட்டம் ஆடிக்கொண்டிருந்தார்கள்.

‘‘நான் போய் மா&னஜர்கிட்ட கம்ப்ளெயிண்ட் கொடுத்துட்டு வரேன்...’’ என்று ராஜாராம் எழுந்து லிஃப்ட்டில் மறைந்தார்.

‘‘வாங்க...’’ என்று கண்ணாடிக் கதவைத் திறந்துகொண்டு, ஓட்டலின் மொட்டைமாடிக்கு வந்தார்கள். ஏ.ஸி>க்கான ராட்சத கூலிங் டவரில் நீர் சரிந்துகொண்டிருந்தது. சென்னை யின் வாகன இயக்கம் தரையில் வெகுஆழத்தில் தெரிந்தது.

கைப்பிடிச் சுவரைத் தொட்டுக் கொண்டு, விளிம்புக்கு வந்து வானத்தைப் பார்த்தான். விரலால் விண்ணில் தேடினான். ‘‘அதோ!’’

‘‘என்ன பார்க்கறீங்க?’’

‘‘ஆண்ட்ரமீடா காலக்ஸி...’’ என்றான். ‘‘இது ஒன்றுதான் ப்ளூ ஷிப்ட் காட்டும். இது மில்கிவே காலக்ஸியைவிடப் பல மடங்கு பெரியது. இதுதவிர, மற்றதெல்லாம் ரெட்ஷிப்ட் காட்டும். உங்களுக்கு அஸ்ட்ரானமியில் ஆர்வம் உண்டா?’’

‘‘உண்டு... ஹபிள்ஸ் லா தெரியும்...’’ என்றாள். அவளை அகலக் கண்களால் பார்த்தான்.

‘‘அப்பலேர்ந்து ஏதோ சொல்ல விரும்பறீங்கனு தோணுது...’’

‘‘தேவ், ஒண்ணு கேட்டா தப்பா நினைச்சுக்கமாட்டீங்களே..?’’

‘‘கேளுங்க...’’

‘‘என்னைக் கல்யாணம் செய்துப்பீங்களா? எனக்கு உங்களை வேறு எதுவும் கேட்க வேண்டாம். நீங்க யாரு, எந்த ஊரு, பேரு, குலம், கோத்ரம் எதுவும் கேட்க வேண்டாம். தேவ், நான் இத்தனை நாளா உங்களைத்தான் தேடிக்கிட்டிருந்தேன். உங்களுக்காகத் தான் காத்துக்கிட்டிருந்தேன். என்னைக் கல்யாணம் பண்ணிப்பீங்களா..?’’

‘‘தாராளமா... நிச்சயம் பண்ணிக் கிறேன் தேஜஸ்வினி. ஆனா, ஒரு கண்டிஷன்...’’

‘‘என்ன?’’

‘‘என்னைக் கல்யாணம் பண்ணிக்க, நீங்க செத்துப்போகணும்...’’

‘‘என்ன உளர்றீங்க?’’

‘‘ஆமாங்க... அப்பத்தான் எங்க உலகத்துக்கு நீங்க வரமுடியும்!’’

> இவ்வாறு சொல்லிவிட்டு, அவன் அந்த பாரப்பெட் சுவர்மேல் ஏறி, விளிம்பில் நின்றுகொண்டு, இரண்டு கைகளையும் சிறகுகள் போல விரித்துக்கொண்டான்.

‘‘தேவ்! பார்த்துப் பார்த்து... என்ன இது பைத்தியக்காரத்தனமா! விழுந்துருவீங்க...’’

‘‘ஓ... மைகாட்!’’ என்று அலறினாள். ‘‘தேஜஸ்வினி... ஸீ யூ..!’’

அவள், அவனைத் தடுப்பதற்குள் குதித்துவிட்டான்!

விழவில்லை...

பறந்துபோனான்!

## 17.கைது



ஏ.ஸி.பி. என்னை அவசரமாகக் கூப்பிட்டிருந்தார். மாசிலாமணியைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு கமிஷனர் ஆபீசுக்குச் சென்றபோது கோபிநாத் கடுப்பில் இருந்தார். என் சல்யூட்டை வாங்கிக் கொண்டு, ''வாய்யா! என்னாய்யா ஆய்கிட்டு இருக்கு உங்க போலீஸ் டிப்பார்ட்மெண்ட்டு?''

''உங்க போலீஸ் டிபார்ட்மெண்ட்ன்னா?'' என்றேன் ஆச்சரியமாக.

''டிப்பார்ட்மெண்ட்டை சேந்தவன்னே சொல்லிக்க வெக்கமா இருக்குது.''

நான் அவரை 'விவரமா சொல்லுங்க சார்,' எனக் கேட்க முடியாது. மேலதிகாரி அவர் மீசையை நீவிக் கொண்டே ஃபோன் பேசி இரண்டு மூன்று ஃபைல் பார்த்து முடியும்வரை காத்திருந்தேன்.

''உன் ஃப்ரெண்டு குணசீலன் தெரியுமில்லை? உன் ஃப்ரெண்டுதானே அவன்?''

''ஆமா ஸார்.''

''குணசீலனும் நான்கு கான்ஸ்டபிள்களும் சேர்ந்து ஒரு கீழ்சாதிப் பெண்ணை ரேப் பண்ணியிருக்காங்க. பாளாப்போற பொண்ணு ஸ்டேசன்லேயே உயிரை வுட்டுருச்சு. கலாட்டா நடக்குது. ரைட்டர் ரூமை சூறையாடிட்டாங்களாம். ஜீப்பை கொளுத்திட்டாங்களாம். மாலைக்குள்ள கைது பண்ணலை, தலை உருளும். வெயிட் பண்ணு. வாரண்டு ஏற்பாடு பண்ணிக்கிட்டு இருக்காங்க. வந்ததும் அவனைப் போய்ப் பார்த்து அரஸ்ட் பண்ணிக்கிட்டு வரணும். உன் ப்ரெண்டுதானே? நல்லபடியாச் சொல்லிப் போடு. ரெசிஸ்ட் பண்ணாம இருக்கச் சொல்லு. கையும் களவுமா மாட்டியாச்சு. அவனை பேரண்ட் ஸ்டேசன் பக்கம் போக விடாதே. கொளுத்திருவாங்க. அத்தனை கோபத்தில் இருக்காங்க. அவனுக்கு இப்ப பத்திரமான எடம் போலீஸ் கஸ்டடிதான்.''

''குணசீலனா?''

''ஆமா, என்ன பொருத்தமான பேரு பாரு, ஏன்யா இப்படி, புத்தி போவுது உங்க பேச்மேட்டுங்களுக்கு? போலீஸ் ட்ரெய்னிங் காலேஜ்ல என்ன எளவை சொல்லித் தந்தாங்க?'' எப்படி பதில் சொல்வேன்? குணசீலனா என்கிற அந்த அதிர்ச்சி நீங்கா நிலையில் வாய் பேசாமல் நிற்க, அவர் தொடர்ந்தார். சீலனும், நானும் ஒன்றாய் ஒரு வார இடைவெளியில் போலீசில் சேர்ந்தவர்கள். ஒரே ஊர், ஒரே காலேஜ், ஒரே பயிற்சி, போஸ்டிங். அங்கிருந்து பிரிந்து நான் ஃபாரன்சிக் பக்கம் போய்விட, சீலன் அத்தனை சென்னை போலீஸ் நிலையங்களையும் பார்த்துவிட்டு முரட்டு ஆசாமி என்கிற புகாரின் பேரில் செங்கல்பட்டுக்கு மாற்றலாகி, மாற்றலை ஏமாற்றுவதற்காக நகர வெளிப்புறத்திலுள்ள ஒரு சிறு நிலையத்தில் பொறுப்பேற்று, ''அது என்ன பேரு மகப்பேறா, என்ன போலீஸ் ஸ்டேசன்யா அது.''

''மடிப்பேறுங்க. வண்டலூர் போற வழியிலங்க.''

''அங்கதான் சம்பவம் நடந்திருக்கு. சௌகரியமான இடம். புருஷனைக் காணோம்னு புகார் கொடுக்க வந்திருக்காங்க. இருட்னப்புறம் தனியா பொம்பளையை ஸ்டேசன்ல நிறுத்தறதே சட்ட விரோதம். நாலுபேரும் சேர்ந்து லாக்கப் ரூம்ல படுக்கவெச்சு கிளிச்சிருக்காங்க. உன் ஃப்ரண்டுதான், 'துவக்க உரை'. தாங்க முடியாத எமர்ரேஜ் ஆய்ட்டுது. தாலுகா ஆசுபத்திரியில வஜைனல் ஸ்வாபெல்லாம் எடுத்து ரிப்போர்ட் எழுதிட்டான். டாக்டர் கடுப்பாயிட்டான். காலைல ஃபோன் செய்தான். ரிக்கார்டை மாத்தப் பாத்திருக்காங்க. ராத்திரியே கிராமத்துக்கு பாடியை அனுப்பிச்சு, உடம்பு சரியில்லை, வழியிலயே இறந்துட்டாள்னு அனுப்பிட்டாங்க. இடையில் புருஷன்காரன் வந்துட்டான். டாக்டரும் கிராமத்தில வந்து தகவல் சொல்லிட்டாரு. கிராமமே சூழ்ந்து கிட்டானுக. கைல பச்சைப் பிள்ளையைத் தூக்கிக்கிட்டு சிட்டிக்கு அலையறான் புருஷன்காரன்.''

''உன் நண்பன் ஓடி வந்துட்டான். அசோக் நகர்ல சொந்த வீட்லதான் தலைமறைவாக பதுங்கி இருக்கான்னு தகவல். போய்க் கூட்டி வந்துரு. அவன் மேலதிகாரி எஸ்.பி. இருக்காரு சுந்தரவேலுன்னு. அவர்கிட்ட ஒரு வார்த்தை நான் சொல்லிக்கிறேன். நீ போய்க் கூட்டி வா விசாரிக்கலாம்.''

''சரி ஸார்,'' என்றேன். என் குரல் கம்மியிருந்தது.

''எனக்கும் வருத்தமாத்தான் இருக்குது. குணசீலன் மாதிரி ஒரு போலீஸ் அதிகாரி உம் மாதிரி நூறு பேர் கட்டிக் காத்ததை ஒரே நாள்ள கலைச்சுர்றாங்க. எப்படிப்பட்ட ஆள்யா இந்த குணசீலன்.''

''தெரிஞ்ச வரைக்கும் நல்லவன்தான். கொஞ்சம் முரட்டு சுபாவம் உள்ளவன். அடிப்பான், தேர்ட் டிக்ரி எல்லாம் உண்டு. ஆனா இந்த லெவலுக்குப் போவான்னு நான் எதிர்பார்க்கலை ஸார்.''

''பெண்டாட்டி, கைப்பிள்ளை எல்லாம் இருக்குதாமே?''

''இருக்கு ஸார்.''

''மனைவியைத் தெரியுமா?''

''கல்யாணத்தின்போது பார்த்தது.''

அரஸ்ட் வாரண்ட் வந்தது. ஜீப்பில் ஏறிக்கொண்டு புறப்பட்டேன். மனசில் அலை அலையாக எண்ணங்கள் ஓடின. நானும் சீலனும் பிக்னிக் போனது. மதகடியில் நீரில் குதித்து அந்த கட்டுமஸ்தான தேகத்தைக் கண்டு வியந்தது. அவன் புன்னகை, மேற் செல்லும் மீசை, எப்போதும் கண்களில் இருந்த பிளேடு கூர்மை. அவன் கனம். ஹாக்கி நன்றாக ஆடுவான். கோல் கீப்பர். அவனைத் தாண்டி ஏதும் போகாது. போலீஸ் ட்ரெயினிங் காலேஜில் செகண்ட் பெஸ்ட்டாக வந்து வெள்ளிப் பதக்கம் பெற்றவன். எப்படி, எந்தக் கட்டத்தில் விகாரப்படுத்தப்பட்டு மாறிப் போனான். எங்கே மாறுகிறார்கள்? பயிற்சியெல்லாம் சரியாகத்தானே இருந்தது. ஒரு போலீஸ் அதிகாரியின் கடமைகள் என்னவென்று சரியாகத்தானே சொல்லித் தந்தார்கள். அதனுடன் தேசபக்தி, கடமை உணர்ச்சி, சமூகப் பொறுப்பு எல்லாம் சேர்த்து உருவேற்றி ஆரோக்கியமான உணவு, எண்ணங்கள், என்னவெல்லாம் கற்றுக் கொடுத்து டி.ஜி. வந்து மார்பில் மெடல் குத்தினபோது சீலன் கண்களில் எத்தனை பெருமை ஒளிர்ந்தது. அவன் போய் அபலைப் பெண்ணைக் கற்பழித்தானா? எங்கே ஏற்பட்டது இந்தச் சிதைவு? ஏதாவது காரணம் இருக்கத்தான்

வேண்டும். எங்கள் பயிற்சியில் எல்லாம் தவறே இல்லை. அவற்றை நடைமுறை உலகத்துக்குப் பயன்படுத்தும்போது விவகாரங்கள் வந்து விடுகின்றனவா?

அசோக் நகரை நோக்கி ஜீப் செல்ல, எப்படி இந்த மாறுதல் வந்திருக்கும் என்று யோசித்துப் பார்த்தேன். ஆசையா? அதிகாரம் இருக்கிறது என்கிற முரட்டுத்தனமா? எது? இல்லை, அபலைகளை, அனாதைகளை, ஏழைகளை யாரையாவது பார்த்தால் கையாலாகாமையால் சமூகத்தின் மேல் வரும் வெறுப்பும் கோபமும் சிலவேளை அவர்கள் மேலேயே மூர்க்கத்தனமாக வெடிக்கும் என்று சைக்காலஜி பாடங்களில் படித்தேனே அதுபோலவா?

கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் சிக்னலில் நின்றபோது-

சத்யமோகன் ஃபோட்டோப் படங்களைக் காண்பித்தார். ரேப்பான பெண்ணைப் பார்த்தால் தலையில் புழுதியும் தடித்த வெறும் கழுத்துமான பெரிய திறந்த வாயில் நிறைந்த பற்களுமாக, எப்படி இது நிகழ்ந்திருக்கும். புரியவே இல்லை.

அசோகரின் ஸ்தம்பம் அபத்தமாக சாலை நடுவே எதையும் நிரூபிக்காமல் நின்று கொண்டிருக்க, அதை வலம் வந்து ஈ.எஸ்.ஐ. ஆசுபத்திரியைத் தாண்டினதும் முழுமையாக மூன்று ப்ளாக்குகள் கடந்து தார் போட சிறுகற்கள் கொட்டியிருந்த அரைத் தெருவில் இருந்த வீடு, ஒரு கற்பழிப்புடன் எந்த விதத்திலும் இணைக்க முடியாதபடி மிக அமைதியாக இருந்தது. ஜீப்பை நிறுத்திவிட்டு கான்ஸ்டபிள்களை வர வேண்டாம் என்று மெல்ல அணுகினேன். வாசல் கதவு பாதித் திறந்திருந்தது. உள்ளே டி.வி. கேட்டது.

கதவின் மணியை அழுத்த, கொஞ்ச நேரம் கழித்து ஒரு பெண் கையில் குழந்தையுடன் வாசலுக்கு வந்தாள்.

என் சீருடையைப் பார்த்ததும் கதவை முழுவதும் திறந்தாள்.

''வணக்கம். சீலன் இருக்காரா?''

''இருக்காரு. நீங்க?''

''என் பேரு பழனி. சீலனோட அதே பாட்ச். நான் உங்க கல்யாணத்துக்கு வந்திருக்கேன். ஞாபகமிருக்குதா?''

அவள் கண்கள் என்னை அடையாளம் தேடின. ''உள்ளே வாங்க உக்காருங்க,'' என்று கீழே இரைந்திருந்த விளையாட்டுச் சாமான்களை நகர்த்தினாள்.

''சீலன் இருக்காரில்லை?''

''இருக்காரு. குளிச்சிக்கிட்டு இருக்காரு. உக்காருங்க.''

'பரவால்லை.''

''உக்காருங்க ப்ளீஸ். உக்கார வைக்கலைன்னா கோவிச்சுப்பாரு. என்ன சாப்பிடறீங்க?'' என்றாள்.

அவளுக்கு என் தங்கை சுகுணாவின் வயது இருக்கும். கொஞ்சம் அவள் போலத்தான் இருந்தாள். குழந்தையைக் கீழே விட்டதும் அழ ஆரம்பித்தது. அதை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டாள். மீண்டும் கர்ப்பமாக இருப்பதை வயிறு காட்டியது.

''எதையோ தண்ணி குடிச்சதில ஜுரம்ங்க. அதான் நச்சு நச்சுன்னு அழுவுது.''

நான், ''பாப்பா இங்க பாரு! பேரு என்ன?'' என்று கேட்டேன்.

''கவிதா!'' என்றாள்.

''பல் வந்திருச்சா?''

''நிரடுது'' என்றாள், அதன் வாயில் விரலை விட்டு, அது கக்கென்று இருமி விட்டுக் கண்ணீர் விட்டது.

குணசீலனின் மனைவியைப் பார்த்தேன். இளம் தாயின் அனைத்து அங்க லட்சணங்களும் அலுப்புகளும் உடலில் தெரிந்தன. கல்யாணமாகி இரண்டு வருஷம்தான் ஆகியிருக்க வேண்டும். உடம்பில் ஓவர்டைம் வாங்கிய அலுப்பு இருந்தது. மார்பு சற்றே துவண்டு போய், முதுகு லேசாகக் கூன் போட்டு, தலை மயிர் சரியாக வாரப்படாமல் இவள் கல்யாணத்தில் பார்த்தபோது எத்தனை அழகாகப் பளிச்சென்று இருந்தாள் என்பது ஞாபகம் வந்தது. என்னிடம் ஃபோட்டோ கூட இருக்கிறது.

''என்ன விஷயமா வந்தீங்க. ஏதாவது சாப்பிடறீங்களா?''

'கைது செய்ய' என்று சொல்ல முடியுமா?

''நீங்க இந்த வீட்டுக்கு எப்ப வந்தீங்க?''

''வந்து மூணு மாசமாச்சு. வேலைக்காரி கிடைக்கலை''

''சொந்த வீடா?''

''ஆமாம்.''

''துணி துவைச்சுப் போட்டு, இவருக்கு யூனிபார்ம் இஸ்திரி போட்டு, ரெண்டு நாளா லீவில் இருக்காரா அதனால் சமாளிக்க முடியுது. போலீஸ் டிப்பார்ட்மெண்டில் எல்லாருக்கும் லீவா? ரெண்டு நாளா போகவே இல்லையே? இங்கிருந்துதான் மோட்டார் சைக்கிள் எடுத்துட்டு மடிப்பேறு போய் வருவாரு.''

காலை பேப்பரே பார்ப்பதில்லையா! உன் கணவன் பேர் கொட்டை எழுத்தில் வந்திருக்கிறதே! ''பேப்பர் பார்த்தீங்களா?'' என்று கேட்டேன். ''எனக்கு டயம் எங்கங்க? இந்தப் பொண்ணுக்குத்தான் ஃபுல் டைம் அட்டென்ஷன் தேவைப்படுதே. ஜுரம் வேற, இதையும் பார்த்துக்கிட்டு, வீட்டு வேலையும் பார்த்துக்கிட்டு, துணியும் தோச்சுகிட்டு, சமையலும் செய்யணும். உங்களுக்குக் கல்யாணம் ஆயிருச்சா?''

''இல்லைங்க''

''இவரு வயசுதானே உங்களுக்கும்.''

''ஆமாம்.''

''ஏன் கல்யாணம் பண்ணிக்கலை?''

நான் மௌனமாக இருக்க-

''நல்ல காரியம் செய்தீங்க. எம்மாதிரி இன்னொருத்தி வயிற்றை சாச்சுகிட்டு வரப் போறவங்களுக்கெல்லாம் அவரு குளிக்கிறாரு, பல் தேய்க்கிறாருன்னு பதில் சொல்லிக்கிட்டு இருப்பா!''

நான் அவள் முகத்தை பார்த்தேன். வெறுப்போ கோபமோ இல்லை. களைப்புதான். ஒரு முழு யுகத்தின் களைப்பு''

''செய்யணும்.''

''அப்பா, அம்மா யாரையாவது கூப்பிட்டு வெச்சுக்கலாமே?''

''அவங்க ரெண்டு பேரும் போய்ட்டாங்க.''

''சீலன் சைடுல?''

''அவங்க துபாய்ல ஒருத்தரும் குளித்தலையில ஒருத்தரும் இருக்காங்க. மருதூர்ல நெலம் இருக்குதில்லை. துபாய்ல இவர் பிரதர் இருக்காரு, வயசானவங்களையும் சேர்த்துப் பராமரிக்கணும். ஒண்டியா சமாளிக்க வேண்டியிருக்கு.'' குழந்தை அவள் மடியை நனைக்க அதை முழங்காலில் லேசாக அடிக்க, அது உதட்டைப் பிதுக்கிக் கொண்டு அழ ஆரம்பித்தது.

''வேண்டாம் கண்ணு அப்பா வருவாரு. அப்பா வந்து ஆட்டோல போகலாம். கார்ல போகலாம். பெரிய காரு. அங்கிள் கூட்டிட்டுப் போவாரு.''

சன்னலுக்கு வெளியே தெரிந்த ஜீப்பைக் காட்டி, அது என்ன என்றபோது குழந்தை சட்டென்று அழுகையை நிறுத்தி விட்டு அவளை யோசனையுடன் பார்த்தது. ''என்ன காரு?''

''அம்பா''

''அம்பாசிடர்ல வரது சுரேஷ் மாமா. இந்த மாமா எதில வந்திருக்காங்க.''

''ஜீ''

''அத்தனை காரையும் அடையாளம் கண்டு புடிக்குது. இதை எப்படியாவது மெடிக்கல் படிக்க வெக்கணும்னு சொல்றாரு.''

''நீங்க கூட எம்.எஸ்ஸி. பண்ணியிருக்கீங்க போலிருக்கே.''

''ஆமாம், பாட்டணி.''

''வேலைக்குப் போகலாமே?''

''இத வெச்சுக்கிட்டா?'' என்று என்னை நிமிர்ந்து பார்த்தாள். கண்களில் சோகம் தெரிந்தது. ''நான்தான் படிச்சும் ஏதும் பயன் இல்லாம இந்த மாதிரி பீத்துணி தோச்சுகிட்டு இருக்கேன்.''

அவள் சட்டென்று கட்டுப்படுத்த முடியாமல் அழுதாள். ''உங்க ப்ரெண்டுகிட்ட சொல்லுங்க. என்னை ஒரு மனுஷியா நடத்தச் சொல்லுங்க. அடிமாடா இல்லை. மனுஷியா!''

''எனக்கு வெலவெலத்துப் போனது. எப்படி இவள் கணவனைக் கைது செய்து போவதைச் சொல்லப் போகிறேன்!''

''நாசியா வேற காலை எழுந்த உடனே பெரட்டுது. டாக்டரானா சோகை. ரத்தம் போதாது. ரத்தம் போதாதுங்கறாங்க.''

எனக்கு கவலையாக இருந்தது. எப்படிச் சொல்லப் போகிறேன். நண்பனின் மனைவியே மன்னிக்கவும். நான் உனக்கு ஆறுதல் சொல்ல முடியவில்லை. மாறாக உன் புருஷனை சிறைக்கு அழைத்துச் செல்லப் போகிறேன். நீ என்ன செய்வாய், எப்படிச் சமாளிப்பாய், யார் உனக்கு ஆதரவு. இதையெல்லாம் நான் கேட்கத்தான் வேண்டுமா? என்ன ஓர் உத்தியோகம் இது. யார் மேல் நான் இரக்கப்படுவது? அனுமதியின்றி கற்பழிக்கப்பட்டு இறந்துபோன பெண்ணின் மேலா? அனுமதியுடன் கற்பழிக்கப்பட்ட உயிருள்ள மனைவி மேலா?

நான் சொல்லிவிட்டேன்.

''பாருங்க மிஸஸ் குணசீலன். இந்தச் செய்தியை உங்ககிட்ட சொல்லியே ஆகணும். உங்க கணவரை நான் கைது பண்ணிக் கூட்டிட்டுப் போக வந்திருக்கேன்.''

''எதுக்கு? என்ன காரணமா?'' என்று அவள் நெற்றியைச் சுருக்கிக் கொண்டாள்.

''அவர் மேல ஸ்டேஷன்ல ஒரு குற்றச்சாட்டு. நிரூபிக்கப்படலை. நல்ல லாயராப் பார்த்து விடுதலை பெற்றுடலாம்.''

''என்ன குற்றச்சாட்டு?''

நான் தயங்கினேன்.

''சொல்லுங்க ப்ளீஸ்.''

''ஒரு பெண்ணை பலாத்காரம் பண்ணிட்டதாகக் குற்றச்சாட்டு. இவரும் நாலு கான்ஸ்டபிள்களும்.''

''இவ அப்பாவா?'' என்று குழந்தையைக் காட்டினாள்.

வ்வ் என்று வசீகரமாகச் சிரித்தது குழந்தை.

''ஆமாம். அது உண்மையா இல்லையான்னு நிரூபிக்க வக்கீலைப் பார்க்க ஏற்பாடு செய்யறேன். குற்றச்சாட்டுதான். டிபார்ட்மெண்ட்டில சஸ்பெண்டு பண்ணிருக்காங்க.''

எனக்கு ஒரு யோசனை சட்டென்று தோன்றியது. ''மிஸஸ் குணசீலன், நீங்க இருக்கற ஸ்திதியில என்னால ஒண்ணு செய்ய முடியும். உங்க நிலைமையில உங்க கணவரை இந்தச்

சந்தர்ப்பத்தில அரெஸ்ட் பண்ணிகிட்டுப் போறது எனக்கு கொடிய செயலாப்படுது. ஓர் உதவி செய்யறேன். நான் இப்ப வந்ததையே மறந்துருங்க. சாயங்காலம் வரேன். உங்களுக்கு உங்க கணவர்கிட்டப் பேசி முடிவு பண்ணி மாற்று ஏற்பாடுகளைச் செய்ய அவகாசம் தரேன். அதுக்கு முன்னாடி ஆண்டிசிப்பேட்டரி பெயிலோ வேற ஏற்பாடோ, துபாய்க்குப் போக ஏற்பாடோ அவரால் செய்ய முடியுமான்னு பாருங்க. நான் என்னைப் பொறுத்தவரையில் இந்தச் சலுகை குணசீலன் என் நண்பன்கிறதுக்காக இல்லை. உங்க பரிதாபமான நிலையில் மனிதாபிமானத்தோட உங்களுக்கு உதவறதுக்காகத்தான்....''

''ரேப் பண்ணாரா?''

''அப்படித்தான் குற்றச்சாட்டு?''

''கட்டின பெண்டாட்டி நான் இருக்க...ப்ப'' என்று அவள் கதற, அழுகை கட்டுக்கடங்காமல் போக அந்தக் குழந்தை அவள் முகத்தைத் திருப்பி வேடிக்கை பார்த்தது. தான் அழாமல் அம்மா அழுவது அதற்கு வியப்பாக இருந்தது.

''ஸாரி, வெரி ஸாரி. நான் இதை உங்ககிட்ட சொல்லியிருக்கக் கூடாதோ? இருந்தாலும் உங்களுக்கு உதவி செய்யணும்ங்கற எண்ணத்திலதான்....''

அவள் குழந்தையை அள்ளிக் கொண்டு இடுப்பில் வைத்துக் கொண்டு நிறைய அழுதபின், கன்னத்தில் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''உதவி எதும் வேண்டாம். அழைச்சுட்டுப் போங்க.'' என்று உள்ளே சென்றாள்.

## 18.ஸ்ரீரங்கத்து தேவதைகள் - சீனு



குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்புகாட்டி தென்திசை
இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுள் எந்தை
அரவணைத் துயிலுமாகண்டு
உடல்எனக்கு உருகுமாலோ
என்செய்கேன் உலகத்தீரே...

தொண்டரடிப் பொடியாழ்வார் காலத்திலிருந்தே பெருமாள் திருவடி காட்டிய கீழவீதிக்காரர்கள் நாங்கள். முதுகு காட்டும் வடக்குவீதியை அதிகம் மதிக்க மாட்டோம். வடக்கு வீதி அகலக் குறைவானது.

எப்போதாவது கிரிக்கெட் மாட்ச் ஆட 'பி' டீமை அனுப்புவோம். வடக்கு வீதி கொஞ்சம் தோசி டீம். சின்னப்பசங்கள் எல்லாம் ஆடுவார் கள். எங்களவர்கள் சுலபமாக ஜெயித்து விட்டு, ஸ்கோர் புக்கில் அவர்கள் கேப்டனிடம் கையெழுத்து வாங்கி வருவார்கள்.

தெற்குச்சித்திரை வீதி தாத்தாச்சாரியார் வீட்டு முன்னிலையில் வலுவான ஒரு டீம் இருந்தது. அதையும் வடக்கு அடைய வளைஞ்சான் முரட்டுப் பயல்களையும் கார்க்பாலில் வெல்வதற்காகத்தான் 'ஏ' டீமை அனுப்புவோம்.

எங்கள் டீமின் புரவலன் பெரிய பண்ணை சீனு. அவன் ஆடமாட்டான். எங்களுக்கு ஸ்டம்ப், கிளவுஸ் எல்லாம் வாங்கிக் கொடுப்பான். ஸ்ரீரங்கத்தில் விக்கெட் கீப்பிங் கிளவுஸ் வைத்திருந்த ஒரே டீம் எங்களுடையது. ஹைஸ்கூல் கிளவுஸ்கூடக் கட்டை விரலில் கிழிந்திருக்கும்.

என் அண்ணன் கிச்சாமி, சீமாச்சு வீரு போன்றவர்கள் ஸ்டார் பிளேயர்கள். நான் ஸ்கோர் ஏற்றத் தேவைப்படுவேன் (அப்போதே நல்ல கற்பனை வளம்). எனவே, நாங்கள் வடக்குவீதிப் பக்கம் அதிகம் போக மாட்டோம்.

வடக்குவாசலில் முடி வெட்டிக்கொள்ள சீனத்து லேடிகள் படம் கொண்ட கிராப்புக்கடைக்கு பாட்டி என்னை அனுப்புவாள். அது கூட 'கரப்பு நக்கினாற்போல் வெட்டுகிறான்' என்று ரங்க ராஜுவை வீட்டுத் திண்ணைக்கே வரச் சொல்லிவிடுவாள்.

எங்கள் 'நாம் ஐவர்' சங்கத்துக்கு விகடன், கல்கி, பேசும் படம் இதழ்கள் வாங்க சின்ன ராசு கடைக்குச் சில வேளை போவோம்.

இவ்வாறு எங்கள் கவனத்தை அதிகம் ஈர்க்காத வடக்குவீதிக்குத் திடீரென்று மவுசு வந்து, யாரைப் பார்த்தாலும் 'வடக்கு வாசல்வரை போயிட்டு வரேன்' என்று எங்கள் பையன்கள் அனை வரும் போய் வருவதும் வாடகை சைக்கிள் எடுத்துச் சுற்றுவதும் அவனவன்

புதுச்சட்டை போட்டுக்கொண்டு தரையில் தேய்த்துக்கொண்டு, ரெண்டு கைகளையும் விட்டு காலரைத் தூக்கிக் கொண்டு, காலால் போலிங் போடுவது போல் ஸ்டைலாக ஏறி சைக்கிள் ஓட்டுவதும் அவ்வப்போது கிராப்பை விரலால் கோதிக்கொள்வதும் காலரைத் திறந்து கர்ச்சீப்பை ஒரு சைடாகத் தொங்கவிடுவதும், 'பம்பரக் கண்ணாலே' சீட்டியடிப்பதும், குல்கந்து செண்ட் போட்டுக் கொள்வதும் வானிலையே மாறிவிட்டது!

ரங்கு, ''என்னடா ஆச்சு இவங்களுக்கெல்லாம்? பெரியாத்துல பொண்ணு கொடுத்தாப்பல அலையறாங்க...'' என்று வியந்தான். பட்டாம்பி தான் சொன்னான் - ''வடக்கு வீதியில் ஒரு தேவதை புதுசாக வந்திருக்கிறாள். இளைஞர்கள் நிம்மதியையெல்லாம் ஹோல்சேலாகக் கலைக்கிறாள்!'' என்று.

பெரிய பண்ணை சீனு ('தாமரை மைந்தன்') அந்தப் பெண்ணைப் பற்றிக் கவிதை எழுத, புதுநோட்டு வாங்கி இருக்கிறான் என்பதும் தெரிந்தது.

ரங்கு, ''பட்டாம்பி, அந்தப் பெண்ணை ஒரு தடவை பார்த்தாகணுமே... அப்படி என்னடா அதிரூபசுந்தரி?'' என்றான்.

''வருவா, வருவா... எங்க போறா? இந்தப் பக்கம் போறப்ப காட்டறேன், பாரு...''

''இந்தப் பக்கம் வரதெல்லாம் சாவாடு செத்துக் கிழிச்ச நாரா தேஞ்சு தேவாங்காத்தா&ன வரது...''

''இது வாழைத்தண்டுடா... சீனுவே மயங்கிட்டான்னா பாத்துக்கயேன்...'' என்றான்.

சீனு முதலில் அவளைக் கவனிக்கவில்லை. இவர்கள் எல்லாம் சொல்கிறார்களே என்று ஒரு முறை தன் புல்லட்டை அந்தப் பக்கம் எடுத்துச் சென்று, அடுத்த வீட்டு காசியார் வரதுவை விளித்தான்.

அவன் பதறிப்போய், ''சீனு! நீ எங்காத்துக்கெல்லாம் வரயா? கூப்ட்டனுப்பிச்சிருந்தா, நா&ன வருவே&ன... என்ன விஷயம்?''

''ம்... ம்... ஒண்ணுமில்லை! உங்க வீட்டில ஏணி இருக்குமா?'' - அவன் கண்கள் பக்கத் தாத்து வாசலில் நிலைத்திருந்தன.

''ஏணியா?''

''ஆமா... ஏணி!''

இதற்குள் அந்தப் பெண்ணே வெளிவந்து, திண்ணையில் உட்கார்ந்துகொண்டு, ஏதோ புக் படிக்க ஆரம்பித்ததை சீனு பார்த்து விட்டான்.

''ஏணியா?''

''அப்றம் வரேன்...''

சீனு ரொம்பப் பணக்காரன். ஒரே பையன். அந்தப் பணபலமே, அதன் ஊட்டமே ஓர் அழகு தந்தது. மகேந்திர மங்கலம், முசிறி, குவளக்குடியிலும் மருதூரிலும் ஏகப்பட்ட நில புலன்கள் இருந்தன. ஒரே பிள்ளை. சுவீகாரச் சொத்து வேறு... எட்டுத் தலைமுறைக்கு அழிக்கலாம்.

கோரதமுட்டி தாண்டி, மூன்றாவது பெரிய பண்ணையாம் என்று சொல்வார்கள். பச்சை கேட் பளபளப்பாக இருக்கும். திண்ணை வெண்ணெயாக இழைத்திருக்கும். வருஷம் பூரா பந்தல் போட்டிருக்கும்.

வாசலில் நான்கு பசுமாடு கட்டியிருக்க, வேளா வேளைக்குப் பால் கறக்கவே நான்கு பேர் வருவார்கள். பின்கட்டில் நிறைய மாடு, கன்றுக்குட்டி, எருமை, வேலைக்காரர்கள், பண்ணையாட்கள், துணி துவைத்துப் போட, இஸ்திரி போட ஆள்காரர்கள் பாட்ச் பாட்சாகச் சாப்பிட்டுக் கொண்டே இருப்பார்கள்.

மாடியில் சீனு, கீழே அப்பா - அம்மா, வயசானவர்கள் வாழ்ந்தார்கள். தளிகை பண்ண கோவிந்தையங்கார். பெரிய மிராசு சாம்ராஜ்யம். அந்த விவகாரங்களைப் பார்த்துக்கொள்ள பாச்சு ஐயங்கார் என்ற காரியஸ் தரும் குத்தகைக்காரனும் ஏமாற்றியது போகவே, லட்சக்கணக்கில் வருமானம், சாப்பாட்டுக்கு நெல், வாழைத்தார்கள், அரிசி, பருப்பு, மாம்பழமான மாம்பழம்!

பேட்டைவாய்த்தலை ஃபாக்டரி வந்தபின், ஏற்கெனவே புகளூருக்கு சப்ளை பண்ணிக் கொண்டிருந்த இவர்கள் நிலத்தில் கரும்பு பயிரிட்டு, அதில் வேறு எக்கச்சக்க வருமானம்! மானாவாரி கேஷ்கிராப்பாக உளுந்து, சின்ன வெங்காயம்! கடலை.

ஃப்யூடலிசத்தின் கடைசி நாட்களில் முடிசூடா மன்னன். அவனிடம் இருந்த கெட்ட பழக்கம் - தாமரைமைந்தன் (அவன் அம்மா பத்மா) என்ற பெயரில் கவிதை எழுதுவதும் அதை எங்களுக்கு எல்லாம் படித்துக் காட்டுவதும். சும்மா சொல்லக்கூடாது... பிராசம் இல்லாமல், அதென்ன புதுக்கவிதையா? அந்த வடிவில் ஷோக்காக எழுதுவான்.

எங்களுக்கு அதிகம் புரியா விட்டாலும் கேட்டுவிட்டு, ''சீனு... நன்னா இருக்குடா! எப்டிரா உனக்கு இப்டியெல்லாம் எழுத வரது?'' என்றாலோ, ''அது ஒரு கிஃப்ட்ரா!'' என்றாலோ... எட்டு இடமும் குளிர்ந்துபோய், பத்து ரூபாய்த்தாளை நவாப் ராஜமாணிக்கம் டிராமா நோட்டீஸ் போல வாரி இறைப்பான்.

மெயின்கார்டு கேட்டுக்கு காரில் இண்டியா காபி ஹவுஸ் அழைத்துச் செல்வான். பத்மாவில் பாதாம் அல்வா வாங்கித் தருவான். அதனால், அவனது கவிதைகளைப் புகழப் பழகிவிட் டோம். அவன் குறிப்பிடும் பிச்சமூர்த்தி, வேணுகோபாலன், செல்லப்பா எல்லாம் கறுப்பா, சிவப்பா தெரியாது!

''கரையோரக் கனவுகள் எதற்கு?'' என்று அவன் ஆரம்பிப்பதற்கு முன்&னயே, ''ஆஹா! என்ன ஒரு சொல்நயம்டா சீனு...'' என்போம், சங்க காலத்திலிருந்து இருக்கும் புரவல - இரவல வழக்கம்தான் அது.

''இர்றா... அவன் முழுக்கப் படிக்கட்டும்டா!''

சீனு ஒரு குழந்தை மாதிரி. எங்கள் புகழ்ச்சியில் பொதிந்திருந்த சுயநலங்கள் அவனுக்குத் தெரியவில்லை. ஒருத்தரைப் பிடித்துப் போய் விட்டால், வலது கையையே கழற்றிக் கொடுத்துவிடுவான். அந்தப் பெண்ணைப் பிடித்துப் போய் விட்டது... ரொம்ப!

ரங்கன் கடைக்கு ''நாற்பது பக்கம் நோட்டு இருக்குமா மாமா?'' என்று விசாரித்துக் கொண்டு வந்தபோது, எங்களால் கிட்டத்தில் அவளை முதன் முதலாகப் பார்க்க முடிந்தது. 'எதற்காக எல்லோரும் அலைகிறார்கள்?' என்பதும் புரிந்தது.

அரிதாகத்தான் இம்மாதிரி பெண்கள் பிறப்பார்கள். உயரம், தோற்றம், குரல், கண்கள், அங்கலாவண்யம் - எதிலும் பழுது சொல்ல முடியா மல், தான் அழகாக இருக்கிறோம் என்கிற இறுமாப்போ, ஏன் பிரக்ஞைகூட இல்லாமல் துறுதுறுவென்று இவள் மாதிரி ஒரு பெண் இந்த ஊரில் வருவதே, நம் மண்ணை மிதிப்பதே, இவள் கால்படுவதே பாக்யம்.

'பன்றிகள் உலா வும் சித்திரை வீதியிலா இத்தனை சுந்தரி... தேவ லோகத்தில் இருக்க வேண்டியவளல்லவா?' என்று தோன்றியது. நமக்கே கவிதை எழுதலாம் போல கை ஞமஞமவென்றது.

'எதற்காக அத்தனை பேரும் வடக்கு வீதிப் பக்கம் அலைகிறார்கள்? எதற்காக போஸ்ட்மேன் தப்பாக அவர்கள் வீட்டில் தபால் கொடுக்கிறான்? தையல்காரனும் இஸ்திரியும் பால்காரனும் தயிர்க்காரனும் அரை மணிக்கொரு தடவை விசாரிக்கிறார்கள்? சீனுவைத் தவிர, மற்ற எல்லாப் பையன்களும் ஏதாவது ஒரு வியாஜத்தை வைத்துக்கொண்டு வடக்குவாசல் போகிறார்கள்?' என்பது தெரிந்தது.

''சரியா மூணு மணிக்குப் பாட்டு கிளாஸ் போறாடா. நான்கூடச் சேரலாம்னு பாக்கறேன். நாலரைக்குத் திரை திறந்தவுட&ன தாயார் சந்நிதிக்கு... அப்றம் சித்த நாழி ரேடியோ கேக்கறா. எதுத்தாத்துல கிளாஸ்மேட் சுப்புணி தங்கை ஒண்ணு இருக்கே... ரொம்ப சிநேகம்! அதுங்கூட நோட்ஸ் வாங்கிப் போறா.

அவாத்துல குட்டிப் பாப்பா இருக்கே... மரவையாட்டம்! அதைக் கட்டிப்பா. அதிர்ஷ்டம் பண்ணதுடா. அதை மூக்கை மூக்கைத் தேச்சு கன்னத்தை இழைச்சுக் கொஞ்சறா பாரு. அது அப்பப்ப அவ தாவணி யைக் கலைக்கறது... டாண்ணு ஏழு மணிக்குத் திரும்ப வந்துர்றா. எட்டாவது மணி அவாத்துல சாப்பாடு, எட்டரைக்கு விளக்கணைச்சுர்றாடா. கார்த்தால அஞ்சுக்கெல்லாம் எழுந்துர்றா...'' என்று அவர்கள் வீட்டுத் தினசரி அட்டவணையே ரங்கு கடையில் விரிக்கப்பட்டது.

''செக்கச்செவேல் என்ற அந்த நிறமா? அந்த முகத்தில் தெரிந்த அறியாமையா? லேசாகத் தெரிந்த பல்வரிசையா? ஈரமான ரோஜா இதழ்களா?'' என்று தம்பியும் பட்டாம்பியும் அண்ணாசாமியும் பெரிய பட்டிமன்றமே நடத்தினார்கள். சீனு யோசனையில் இருந்தான்.

அவள் பெயர் மாலினி. அவள் தந்தை பெயர் ராகவன். திருச்சி ஜங்ஷனில் ரயில்வேயில் பெரிய ஆபீஸராம். குவார்ட்டர்ஸ் உண்டாம். இவருக்கு பெருமாள் சந்நிதியில் திருமாளிகை உபயம் உண்டாம். பெருமாளைச் சேவிப்பதற்காக, ஸ்ரீரங்கத்தில் வாடகை வீடு எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்களாம்.

ஒரு பெண்ணும் பையனுமாம். பையன் சின்னவன். எங்கள் வீதிப் பையன்கள் அனைவரும் அந்தப் பையனை முதலில் குழாயடித்து ஃப்ரெண்ட் பண்ணிக்கொள்ள பலவிதமான முயற்சிகள் செய்தார்கள். அவன் பெயர் ரகுநந்தன். 'நந்து' என்று தான் கூப்பிடுவார்கள்.

கடைக்கு வந்துவிட்டால், அவனைத்தான் எல்லோரும் முதலில் கவனிப்பார்கள். ''வா நந்து கண்ணா, எப்டிரா இருக்கே? நாமள்லாம் உறவு தெரியுமா? ரங்கு, என்ன வேணுமோ குடுத்து அனுப்பு... ரங்கு, என் அக்கௌண்ட்ல போட்டுரு...''

''உனக்கு ஏதுரா அக்கௌண்ட்?''

''சீனு அக்கௌண்ட் பேமெண்ட்டெல்லாம் அப்புறம் வெச்சுக்கலாம். மாலு எப்படி இருக்கா? என்னை விசாரிச்சாளா?''

''மாலு யாரு?''

''உன் அக்காடா...''

''அவளை நாங்க லின்னின்னா கூப்பிடுவோம்...''

''ஆஹா... லின்னி! என்ன பேரு, என்ன பேரு? நீ பொருளை வாங்கிண்டு போ. நந்து, நீ யாரு... நம்மாம்! உங்கப்பால் லாம் உறவு...'' என்றான் பட்டாம்பி.

''எப்படி?''

''ஏதோ உறவு... நீ போயேன். அக்காவை அனுப்பு. எம்ப்ராய்டரி நூல் ஜெயந்திகிட்ட கேட்டிருந்தாளா? என்ன கலர்னு தெரியலை... கடையையே வாங்கிண்டு வந்திருக்கேன். பாத்து செலக்ட் பண்ணிட்டுப் போகச் சொல்லு...''

இந்தச் சூழ்நிலையில் சீனு இறங்கிவிட்டான் என்று தெரிந்த தும் மற்ற பையன்கள் 'சம்பாத்யம் போய்விடும்' என்று ''சீனு, நீயும் உண்டுன்னா... அப்ப நான் சேவிச்சு ஒதுங்கிடறேன்...'' என்று விலகிவிட்டார்கள்.

கீழச்சித்திரை வீதிப் பசங்கள் மட்டும் இன்றி அடைய வளைஞ்சான் முரட்டுப் பசங்களும் தங்கள் ரூட்டை மாற்றிக் கொண்டு வடக்குவீதி வழியாக நடந்து வர ஆரம்பித்தார்கள். எதிரே சாவுக்கார் சத்திரத்தில் கூட ஆரம்பித்தார்கள். பட்டாம்பிதான் அப்படியே ஒரு கிறக்கத்தில் சீனுவுக்குத் தகவல் கொடுத்துக் கொண்டிருந்தான்.

சித்திரைத் தேர் தாண்டி, தெற்குப் பக்கம் கஸ்தூரி என்று இருந்தான். அவன் நந்துவுக்குப் புத்தம்புது கிரிக்கெட் பேட்டும் ரத்தச் சிவப்பில் பந்தும் வாங்கிக் கொடுத்திருந்தான்.

அவன்தான் சொன்னான் - ''திண்ணைல உக்காண்டு பல்லாங்குழி ஆடறா பார் சீனு... அவ கைல புளியங்கொட்டைகூட அழகா இருக்குடா! ஒவ்வொண்ணா போடற பதவிசும் நறுவிசும்... ஜெயந்தியைக் கேட்டேன். அவளைத் தொட்டுப் பார்த்தா பவ்னு இருக்காம். கையை அழுத்தினாலும் ரத்தச் சிவப்பாயிடறதாம். எங்கேயோ இருக்க வேண்டியவடா... ஆமாம்!''

''இந்தத் தத்தாரிப் பசங்களுக்கு வடக்குவீதியில என்ன வேலை?'' என்றான் சீனு. ''ரங்கு, விசாரி...''

ரங்கு துடைநடுங்கி, ''வராங்க பாரு, நீயே விசாரிச்சுக்கோ...''

அப்போது அடைய வளைஞ்சான் பையன்கள், ''இங்க உக்காந்துக்கலாமா பிரதர்? லேக்கா உருண்டை, பலப்பம் எல்லாம் இருக்கா பிரதர்?''

''எதுக்குடா?'' என்றான் ரங்கு.

''போஸ்ட் ஆபீஸ் திறக்கிறவரைக்கும் சப்பிக்கிட்டிருக்க...''

''போஸ்ட் ஆபீஸ் அடைய வளைஞ்சானுக்குப் போயிடுத்தே...''

''அது எட்போஸ்ட் ஆபீஸ். நமக்கு பிராஞ்ச் போதும். தெரிஞ்ச ஒரு குட்டி இந்த வழியாத்தா&ன போவாங்க...''

''எதுக்குடா ஐயரைக் கேட்டுக் கிட்டு, நாம ராஜன் ஸ்கூல்ல போய் உக்காரலாம்...''

''ஐயர் இல்லடா... ஐயங்கார்!''

''ஏண்டா, இது யாரு தெரியுல்லை...''

''யாரு?''

''சீனு, பெரிய பண்ணை...''

''ஓ! அப்டிங்களா? வணக்கம் பெரிய பண்ணை...''

''நாங்கள்லாம் சின்னப் பண்ணைங்க...'' என்று சொல்லிச் சிரித்தார்கள்.

''உங்களையெல்லாம் தார்க் குச்சியால கத்தி, மாட்டுச் சவுக்கால வீறணும்டா...'' என்றான் ரங்கு சன்னமாக.

''வீறு! ஆட்டுக்கும் மாட்டுக்கும் ரெண்டு கொம்பு. இந்த ஐயங்கார் சாமிக்கு மூணு கொம்பு...'' என்று பாடிக்கொண்டே, எதிரே ராஜன் பள்ளியில் போய் உட்கார்ந்தார்கள். மாலினி வரக் காத்திருந்தார்கள்.

சீனு, ''ரங்கு, கம்முனு இரு. நாளையிலருந்து இவங்க இந்தப் பக்கம் வரமாட்டாங்க...''

அப்போது மாலினி வந்துவிட, எல்லோருக்கும் சப்தநாடியும் அடங்கிப் போச்சு. சீனு வாயடைத்துப் போய்விட்டான்.

ரங்கு, ''என்ன வேணும் லின்னி?''

''எம்பேர் லின்னினு யார் மாமா உங்கிட்ட சொன்னா?''

''நந்துதான் சொன்னான். என்னை ரங்குனு கூப்டுமா... மாமாங்காதே! இன்னிக்கெல்லாம் எனக்கு என்ன வயசுங்கறே?''

சீனு, ''இவனுக்குக் கல்யாணம் ஆயி ஆத்துல ரெண்டு பொண்ணு இருக்கு...''

''அப்டியா! அவாளை நான் பாக்கணுமே...''

''என் பேர் சீனு...''

''எம் பேரு மாலினி. நாங்க இங்க வடக்குச் சித்திரை வீதிக்குப் புதுசா வந்திருக்கோம். எங்கப்பா...''

''தெரியும்... எல்லாம் தெரியும்!''

''எப்படி?''

''நீ வந்தது ஸ்ரீரங்கம் பூராவுமே தெரியுமே!''

''நான் என்ன அவ்வளவு ஃபேமஸா என்ன?'' என்றாள் விளையாட்டாக.

'என்ன குரல்டா இது!' என்று அவள் போன பின் பட்டாம்பி வியந்தான். அவன் திறந்தவாய் கால் இன்ச், அவள் போகும்வரை மூடவே இல்லை!

அந்த அடையவளைஞ்சான் பையன்கள் நெருங்கி வந்து, ''என்ன மாலினி, ராஜா டாக்கீஸ் வரியா? புதுப் படம்...''

''நான் எதுக்கு வரணும்... நீ யாரு?''

''பாப்பாரப் பசங்களோட மட்டும்தான் பேசுவியா?''

''ஏன் இப்படி அசிங்கம் அசிங்கமா பேசறான் இவன்? எங்கப்பாகிட்ட சொல்லிடுவேன். அவர் ரயில்வேல பெரிய ஆபீஸர்...''

''சொல்லாதே... பயமா இருக்கு!'' என்று அட்டகாசமாகச் சிரித்தார்கள்.

சீனு அவர்களை, ''பாருப்பா... உன் பேர் என்ன?''

''சக்திவேலு...''

''உன் பேரு?''

''ரங்கராஜு...''

அவர்கள் இருவரையும் தனியே அழைத்துச் சென்று சீனு பேசினான். ஐந்து நிமிஷம்தான். அவர்கள், ''நாங்க அப்புறம் வரோம் எஜமான். வரோம் சிஸ்டர்...'' என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டார்கள்.

சீனு, ''இனிமே அவங்க உன்னைத் தொந்தரவு பண்ணா எங்கிட்ட சொல்லு...''

''ஆமாம் சீனு! எப்பப் பாத்தாலும் பின்னாலயே வரா. பெருமாள் - தாயார் சேவிக்கப் போனா, பின்னால வந்து கும்பல்ல இடிக்கிறாங்க...''

''அடுத்த தடவை கோயிலுக்குப் போறப்ப தகவல் சொல்லிடு. சந்நிதியையே காலிபண்ணித் தரேன், என்ன?''

''பஸ்ல அத்தனை இடம் இருக்கு. பக்கத்துல வந்து உக்கார்றாங்க...''

''டி.எஸ்.டி., டி.வி.எஸ். ரெண்டு ஓனரையும் தெரியும். சொல்லி வெக்கிறேன். இனி பிராப்ளம் வராது உனக்கு...''

''தாங்க்ஸ்!''

''வெறும் தாங்க்ஸ் மட்டும் போதாது...''

''பின்&ன?''

''முத்தா கொடு!'' என்றான் சீனு.

அவள் ''ஆளைப் பாரு... போடா!'' என்று சொல்லிவிட்டு, அவன் கையைக் குலுக்கிவிட்டுப் போனாள்.

சீனு உடனே புறப்பட்டான்.

''இதைக் கவிதையா எழுதியே ஆகணும்டா...''

சீனு, அடையவளைஞ்சான் ரௌடி களை என்ன விலை கொடுத்து வாங்கினான் என்ற பொருளாதாரம் தெரியவில்லை. அவர்கள் தொந்தரவு ஓய்ந்துவிட்டது! பட்டாம்பியிடமும் கஸ்தூரியிடமும் சீனு பளிச்சென்று சொல்லி விட்டான்.

''நீங்க மட்டும் அவகிட்ட போய் ஏதாவது வம்பு பண்ணீங்க... கொட்டையைப் பிசிஞ்சுடுவேன். உங்க ஸ்டோர்ல எல்லோரையும் காலி பண்ணச் சொல்லிடுவேன். வீட்டை இடிச்சுருவேன்...''

பட்டாம்பி குடியிருந்தது - எட்டுக் குடித்தன ஸ்டோர் வீடு. சீனுவுடைய பதினாறு வீடுகளில் ஒன்று. இருபது வருஷமாகப் பதினஞ்சு ரூபாய் வாடகை.

சீனு தன் சுயகௌரவத்தை இழக்காமல், மாலினியைக் 'கணக்கு'ப் பண்ணினான். கோட்டைக்குப் போய் என்னென்னவோ வாங்கி, நந்து மூலம் கொடுத்துவிட்டான். நந்துவைப் பெரிய கடைத் தெருவுக்கு அழைத்துச் சென்று, பொம்மை போட்ட பனியன், புதுச் சட்டை, கண்டோன்மென்ட் இங்கிலீஷ் வேர் ஹவுஸில் மவுத்ஆர்கன் எல்லாம் வாங்கிக் கொடுத்தான்.

ராகவன் சாரைப் போய்ச் சந்தித்து, தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். அவர் வீடு சௌகரியப் படவில்லை என்றால், கீழ வீதியில் பாடசாலைக்குப் பக்கத்தில் தனக்குப் பெரிய வீடு ஒன்று பூட்டி வைத்திருப்பதாகச் சொன்னான். அதில் வந்துவிடலாம்!

''வாடகை எவ்வளவு?''

''பணம் இன்னிக்கு வரும், நாளைக்குப் போகும். வாடகை பெரிசில்லை. மாமா...''

''யோசிக்கிறேன்பா... கீழச் சித்திரை வீதியில கிடைக்கலைனுதான் வடக்கு வீதி, உத்தர வீதினு தேடினோம்...''

அவன் போனதும் ''கவனிச்சியாடா... 'மாமா'னு கூப்ட்டதுக்கு, அவர் எதுவுமே சொல்லலை. அப்டின்னா, என்ன அர்த்தம்?''

''அவாத்து மாப்பிள்ளையா போறேன்னா...''

''டேய், அது இன்னும் மேஜரே ஆகலைடா...''

''இருடா, இருடா... சீனு எல்லாம் மீன மேஷம் பாத்து வெச்சிருப்பான். ஒவ்வொரு ஸ்டெப்பும் யோசிச்சுத்தான் எடுப்பான். இல்லையாடா சீனு?''

சீனு பதில் சொல்லாமல் சென்றான். அவன் மனதில் இன்னொரு கவிதை உருவாகியிருக்க வேண்டும்.

''அஞ்சு ரூபா இருந்தா, குடு... சாயங்காலம் தந்துர்றேன்...'' என்றான் பட்டாம்பி, சமயம் பார்த்து.

''என்னிக்குச் சாயங்காலம்னு சொல்றானா பாரு சீனு...'' என்றான் ரங்கு.

''எனக்கு அவ நிச்சயமானா, உங்க கடன் எல்லாத்தையும் கான்சல்...''

''சீனு! மனசு வெச்சுட்டே... உன்னை விட்டு வேற யாரையாவது அவ கல்யாணம் பண்ணிக்க முடியுமா? எதுக்கும் தினம் ஒரு நடை போய்ப் பாரு...''

அதன்பின் நந்து மூலம் மாலினி ஒரு முறை செய்தி அனுப்பினாள்.

''மாமா, உங்காத்துல டெலிபோன் இருக்கானு லின்னி கேட்கச் சொன்னா...''

''இருக்கு! ரெண்டு போன்...''

''லின்னி அதை யூஸ் பண்ணிக்கலாமானு கேட்டா...''

''தாராளமா!''

''அதுக்கு உண்டான காசைக் கொடுத்துர்றதா சொன்னா...''

ரங்கு சிரித்து, ''சீனுகிட்ட டெலிபோன் எக்ஸ்சேஞ்சையே வாங்கறதுக்கு காசு இருக்குனு போய்ச் சொல்லு...'' என்றான்.

அவன் சென்றதும் சீனு பரபரப்பானான். அவசரமாக வீட்டுக்குப் புறப்பட்டான்.

''எல்லாம் போட்டது போட்டபடி இருக்கு. போய் ஒழிக்கணும்...'' என்றான்.

''பெருமாளே பார்த்து, இந்த ஏற்பாடெல்லாம் செய்யறார்டா! எங்கப்பாம்மாவும் அவளைப் பாத்துருவா. புடிச்சுப் போயிடும்...''

''ஏண்டா, அவாத்துல போன் இல்லையோ?''

''அவாத்துல ரயில்வே போன் மட்டும்தான் இருக்கோ என்னவோ?''

''இல்லைடா... பெரிய ஆபீஸர் கறுப்பு போனும் இருக்கு...''

''இல்லைடா முட்டாள்... அவளுக்கு சீனுமேல ஒரு இது வந்தாச்சு. ஏதாவது சாக்குச் சொல்லி, அவாத்தைப் பாக்க வரா...''

சீனு சந்தோஷத்தில், அவன் முதுகில் அறைந்து கையை முறுக்கினான்.

லின்னி, சீனுவின் வீட்டுக்குப் போய், சென்னைக்குத் தன் சிநேகிதிக்கு டிரங்க்கால் போட்டிருக்கிறாள். இங்கிலீஷ் நன்றாகப் பேசுகிறாளாம். டெல்லியில் இருந்ததால் இந்தியிலும் பேசினாளாம். சீனு, கூடத்திலிருந்து ஊஞ்சல் ஆடிக் கொண்டு, ஒட்டுக்கேட்டு வியந்தான்.

வெளியே வந்து, ''ஐய்... ஊஞ்சல்!'' என்று சீனு பக்கத்தில் உட்கார்ந்து ஆடியிருக்கிறாள். வீட்டைச் சுற்றிக் காட்டியிருக்கிறான். சீனுவின் அப்பா, அம்மாவையும் சந்தித்திருக்கிறாள். இரண்டு பேருக்கும் அவளை ரொம்பப் பிடித்துப் போய் விட்டது!

''எங்க சீனுவுக்குக் காஞ்சிபுரம், திருவல்லிக்கேணி, ஆழ்வார் திருநகரி, சீவில்லிபுத்தூர்னு எங்கெல்லாம் ஜாதகம் பாத்தோம். இங்கேயே - சீரங்கத்திலேயே இத்தனை அழகா, பதவிசா ஒரு பொண்ணு கிடைச்சாச்சே! சகோத்தரமா இருக்கு. அதனால என்ன... சீனுதான் சுவீகாரம் போயிருக்கா&ன...''

''எப்ப வேணா வா...'' என்று சீனு கொடுத்த ப்ளாங்கெட் பர்மிஷனின் பேரில் சீனுவின் வீட்டுக்குச் சென்று டிரங்க்கால் போட்டு, இரு முறை லின்னி தன் சிநேகிதியுடன் பேசியிருக் கிறாள்.

சீனு, ''எங்காத்துக்கு வந்திருக்கே... பாதாம் அல்வா சாப்ட்டே ஆகணும்!'' என்றான். அதைப் பிகு பண்ணாமல், நாசூக்காக முழுவதும் சாப்பிட்டாளாம்.

''எங்கப்பா, அம்மாவை விழுந்து சேவிச்சாடா - 'ஆசீர்வாதம் பண்ணுங்கோ மாமா'னு...''

''சீனு என்னை ரௌடிப் பசங்க கிட்டருந்து காப்பாத்தறார். சீனு மாதிரி பிள்ளை கிடைக்க, நீங்க குடுத்து வெச்சிருக்கணும்...''

''எல்லாம் ரங்கநாதன் அனுக்ரஹம்!''

''ஒரே பிள்ளைம்மா உன்கிட்ட சொல்ல என்ன தயக்கம்? ஏகாந்திரமா சொத்து...'' என்றாள் பத்மா மாமி.

''உனக்கு ஜாதகம் எடுக்க ஆரம்பிச்சிருக்காளோ?''

''அதெல்லாம் அம்மாவைக் கேட்டாத்தான் தெரியும் மாமி... படிப்பு முடியணுமே!''

''அதுபாட்டுக்கு அது... சீனு, அவாளை ஒரு நாள் மத்தியான டிபன் சாப்டக் கூட்டிண்டு வாடா. நீயும் வாம்மா, நகையெல்லாம் காட்டறேன்...''

அடுத்த முறை அவள் போன் பண்ண வந்தபோது முத்து செட், பவள செட், காசு மாலை, வைரஅட்டிகை என்று ஏகப்பட்ட நகைகளைக் காட்டியிருக் கிறார்கள்.

''லின்னி, எங்காத்து சீனுவைக் கல்யாணம் பண்ணிப்பியா?''

''என்ன படிச்சிருக்கார்?''

''புனால தபால் எழுதி, பெரிய சர்டிபிகேட் வாங்கியிருக்கான். சீனா, அதைக் காட்டுரா...''

மாமி 'வாய்ஸ் ஆஃப் ப்ராஃபஸி'யைப் பெரிய டிகிரி என்று எண்ணிக் கொண்டிருந்தாள்.

''மாமி, முதல்ல என் படிப்பு முடியட்டும்...''

''பட்ணத்துல யாரோட பேசி&ன?''

''அம்மா, அதெல்லாம் அவா ப்ரைவேட் மேட்டர்ம்மா...''

''இருடா... கேட்டு வெச்சுக்கலாம். நம்மாத்துக்கு வரப்போறா...''

''மாமி, நான் லக்னோவுலயும் பட்ணத்துலயும் படிச்சேன். என் கிளாஸ்மேட் ரமணினு... அவகிட்டருந்து ஒரு சர்டிபிகேட் தேவைப்பட்டுது...''

''சீனுகிட்ட சொன்னா, எட்டூருக்கு ஏற்பாடு பண்ணுவா&னெ?''

அடுத்த முறை அவள் சிநேகிதி ரமணியின் சகோதரன் ஸ்ரீரங்கம் கோயில் பார்க்க வருவதாக ஓட்டல் விசாரிக்கச் சொன்னாள்.

சீனு, ''ஏன்... நம்மாத்திலேயே தங்கட்டும். ஏகப்பட்ட ரூம் இருக்கு, திறக்காமலேயே...''

ரமணியின் சகோதரன் பெயர் ப்ரகாஷ். அவன் பெரிய கோயில், திருவானைக்காவல், சமயபுரம், மலைக்கோட்டையெல்லாம் பார்க்கவும் சீனு கார் ஏற்பாடு செய்திருந்தான். சீனுவும் லின்னியும் அவனுடன் சுத்திக் காட்டப் போனார்கள்.

மாலினி, ''சீனு... உனக்கு எப்படி தாங்க்ஸ் சொல்றதுன்&னெ தெரியலை!''

''உன் ஃப்ரெண்ட், என் ஃப்ரெண்ட்!''

''இவன் என் ஃப்ரெண்ட் கூட இல்லை. இவனை அதிகம் எனக்குத் தெரியாது. ஃப்ரெண்ட்டோட அண்ணன், அவ்வளவுதான்!''

சீனுவின் மேல் இரண்டு தடவை பட்டிருக்கிறாள். அவள் கூந்தல், அவன் முகத்தில் விளையாடியதாம். ''வேணும்னுட்டே பண்ணாளா, இல்லை அகஸ்மாத்தா தெரியலைடா. என்னைப் பார்க்கறப் பல்லாம் கொஞ்சம் லேட்டாவே தாவணியை ஒரு வீசு வீசிட்டுப் போட்டுக்கறா...''

''வேணும்னுட்டுத்தாண்டா...''

''எப்டிரா சொல்றே?''

''மத்தவாகிட்ட அப்படிப் பண்றதில்லையே!''

சீனு அந்த நாட்களில் மூணு வேளையும் லின்னியைப் பற்றிக் கவிதைகள் எழுதினான். லின்னி அடிக்கடி சீனுவின் வீட்டுக்கு வந்து, ப்ரகாஷுடன் பேசிவிட்டுப் போனாள். ரொம்ப டீசண்டாகத்தான் பழகிக் கொண்டார்கள்.

அவளுடன் பேசுவதற்கே வெட்கப் பட்டான். அம்மாவும் அவனுடன் ரொம்ப அந்நியோன்யமாகிவிட்டாள். கை ரேகை நன்றாகப் பார்த்தான். அடிக்கடி லின்னியின் கைரேகையைப் பார்த்து, ''நீ பெரிய இடத்துல கல்யாணம் பண்ணப்போறே...'' என்றான்.

லின்னி, சீனுவைப் பார்த்துச் சிரித்தாள். சீனுவின் கவிதை நோட்டு முக்கால் நிரம்பியிருந்தது.

''சீனுவுக்கு இந்தப் பொண்ணைக் கேக்கலாமானு பாக்கறோம் ப்ரகாஷ்...''

''கண்டிப்பா கேளுங்க... நல்ல பொருத்தம்! மாலினிகூட அருமையான பொண்ணு. மகனுக்கு ரொம்ப ஏத்தவ...'' என்றான்.

''சீனு, எப்பக் கல்யாணம்?'' என்று விசாரித்தபோது, சீனு வெட்கப் பட்டான்.

ப்ரகாஷ் ஊருக்குப் புறப்படுவதற்கு முன், ஒரு நாள் ராத்திரி சீனு பாத்ரூம் போக எழுந்தபோது, அவன் அறையில் ராத்திரி ஒரு மணிக்கு விளக்கு எரிந்துகொண்டிருக்க...

'ஒருவேளை, விளக்கை அணைக்காமல் படுத்து விட்டானோ?' என்று அறைக்குள் கதவைத் தட்டின போது, கொஞ்ச நேரம் கழித்து அவன் திறந்தான். உள்ளே போர்வை கலைந்திருந்தது. ரொம்ப வியர்த்திருந்தான்.

''ப்ரகாஷ்... தூக்கம் வரலையா?''

''ஆமாம்... கொஞ்சம் புழுக்கமா இருந்துச்சு!'' என்றான்.

அதிகாலை... ராகவன் சார் வீட்டுக்கு வந்தார்.

''லின்னி, இங்கே வந்தாளா சீனு?''

''லின்னியா... இப்பவா?''

''ராத்திரிலருந்து காணோம்!''

''அவ அடிக்கடி எங்காத்துக்கு போன் போட வருவா...''

''உங்காத்துக்கா... எங்காத்துல ரெண்டு போன் இருக்கே! யாரோட பேசினாளாம்?''

''ரமணின்னு சிநேகிதியாம்... மெட்ராஸ்ல!''

''ரமணியா... ரமணனா?''

''ப்ரகாஷ்னு அவள் அண்ணன் கூட மாடியிலதான் இருக்கான்...''

''ரமணப்ரகாஷா?''

''ப்ரகாஷ்னு சொன்னான்!''

''கூப்பிடு...''

மாடிக்குப் போனால், ப்ரகாஷையும் காணோம். படுக்கையில் லின்னியின் ஒரு ஜிமிக்கி இருந்தது.

''ஏம்பா... ஒரு வார்த்தை என்கிட்ட சொல்லியிருக்கக்கூடாதா, இந்தப் பையன் வந்திருக்கான்னு...''

''உங்ககிட்ட லின்னி சொல்லலை?''

‘‘சொல்லலையே... சொல்ல மாட்டாளே!’’

‘‘சமயபுரம், மலைக்கோட்டை எல்லாம் போனது சொல்லி இருப்பானு...’’

இதற்குள் லின்னியின் அம்மாவும் வந்துவிட்டாள். ‘‘வந்துட்டானா கடன்காரன்?’’ - அவர்கள் பேசிக்கொண்டது சீனுவுக்குச் சரியாகப் புரியவில்லை.

‘‘எதுக்காக மாத்திண்டு திருச்சினாப் பள்ளிக்கு வந்தோம்? அவனை மறந்துடுவான்னுதா&ன சொன்&ன... இங்கே வந்து, நம் மூக்கடியிலேயே காதல் பண்ணியிருக்கா. பாவம், இவாள்லாம் நல்ல மனுஷா... இவாளையும் ஏமாத்தி, சீனு... உங்களுக்கு ஒரு வார்த்தை, எங்களுக்குத் தகவல் சொல்லணும்னு தோணவே இல்லையா?’’

லின்னியின் அம்மா ரொம்ப அழுதாள்.

பத்மா மாமியும் அழுதாளாம். ‘‘எங்காத்து சீனுவுக்குப் பண்ணிட லாம்னு ரொம்ப ஆசையா எல்லா நகையும் காட்டி&ன&ன... போட்டுக் கூடப் பாத்துதே அந்தப் பொண்ணு! அப்றம், சீனு அவ பொறந்த நாளைக்குக் கொடுக்கறதுக்காக நாராயணசுவாமி கடைக்குப் போய், ஒரு புடவை வேற வாங்கி வெச்சிருந்தா&ன!’’

‘‘நாங்கதான் குடுத்து வெக்கலை மாமி!’’

எல்லாக் கதைகளுக்கும் ஓர் உற்சாக மான பாகமும் ஒரு சோகமான பாகமும் உண்டு. உற்சாக பாகம் போன பாராவிலேயே முடிந்துவிட்டது. சோக பாகத்தில் நான் அதிகம் தங்க விரும்பவில்லை. கதையின் முழுமைக்காகச் சொல்லித் தொலைக்க வேண்டியிருக்கிறது. சீனு, அதன்பின் ரங்கு கடைக்கு வரவே இல்லை! அவனை வெளியே பார்ப்பதே அரிதாகிவிட்டது.

ஒரு நாள் பட்டாம்பியும் ரங்குவும் அவசரமாக என்னை அழைத்தார்கள். சீனுவின் பெரிய வீட்டுக்குள் நான் முதன் முதலாக நுழைந்தேன். கீழே சீனுவின் அப்பா, அம்மா கன்னத்தில் கைவைத்து உட்கார்ந்திருந்தார்கள்.

‘‘போய்ப் பாருங்கோ... எல்லோரும் மாடில போய்ப் பாருங்கோ...’’ என்று பத்மா மாமி சிரிக்கிறாளா, அழுகிறாளா... தெரிய வில்லை! மெள்ள மாடிக்குச் சென்றோம். மாடியில் தேக்கு மர ஊஞ்சல். சீனுவுக்கு ஆதிசேஷன் மாதிரி வெல்வெட் சோபா. ஜி.இ. ஃபேன், குட்டி ஃபேன், நன்னாரி வேர் தட்டி போட்டு கூலாக இருந்தது.

பெரிய ஹாலில் ஆளுயர பெல்ஜியம் நிலைக்கண்ணாடி இருந்தது. ஸ்டெய்ன்ட் கிளாஸ் சாளரங்கள், கிராமபோன், மாஜிக்ஐ வைத்த ரேடியோ, சலவைக்கல் பதித்த தரையில் ரத்தினக் கம்பளம், ஏராளமான கதைப் புத்தகங்கள், அலமாரி நிறைய செண்ட் பாட்டில்கள் - பச்சையிலும் நீலமுமாக, விதவித ஷேப்பில்... பெரிய பெட்ரூம். அதில் சீனு, ஒரு புடவையில் விட்டத்தில் தொங்கிக் கொண்டிருந்தான்.

அண்மையில் வெளியான ஒரு தமிழ்ப் படத்தில் புதுமுகம் நளின மாலினியின் புகைப்படத்தைப் பார்த்தபோது, அச்சுஅசல் லின்னியைப் போலிருந்தது இந்தக் கதைக்குத் தேவையில்லை.

அவனுடைய வருஷாப்திகத் துக்கு, சீனுவின் ‘லின்னி’ கவிதைத் தொகுப்பை நாங்கள் எல்லாம் சேர்ந்து புத்தகமாகப் போட் டோம். அதற்கு ஜமால் முகமது காலேஜ் தமிழாசிரியர்

மாணிக்க னார், 'புதுக்கவிதையும் மரபுக் கவிதையும்' என்ற நீண்ட முன்னுரை எழுதிக் கொடுத்தார்.

இப்போது யோசித்துப் பார்த்தால், இந்தக் கதையையே முன்னுரையாகக் கொடுத்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

# 19.ஸ்ரீரங்கத்து தேவதைகள் - அரசு பகுத்தறிவுப் பாசறை

சுஜாதா



உளன் எனில்
உளன் அவன்
உருவம்
இவ்வுருவுகள்
உளன் அலன்
எனில் அவன்
அருவம்
இவ்வுருவுகள்
- திருவாய்மொழி

ஸ்ரீரங்கத்தில் அவ்வப்போது வைணவத்துக்கும் பார்ப்பனியத்துக்கும் எதிர்ப்புக்குரல்கள் எழும். நாங்கள் கீழச்சித்திரை வீதிக்காரர்கள்... அதைக் கண்டுகொள்ளாமல் தமாஷாகத்தான் எடுத்துக்கொள்வோம். சாத்தார வீதி மூலையில் திராவிடக் கழகப் பொதுக்கூட்டம் அவ்வப்போது நடைபெறும். தந்தை பெரியார் பேசுவது தெற்குவாசலில் கேட்கும். ராமனையும் கிருஷ்ணனையும் ரங்கநாதனையும் சில சங்கடமான கேள்விகள் கேட்பார். திருச்சி நகரத்தைப் பகுத்தறிவுப்பாசறை என்றே அவர்கள் சொல்லிக் கொண்டார்கள். சின்னக்கடைவீதி மூலையில் இருந்த கரீம்பாய் கடையில் பழைய புத்தகங்கள் வாங்கச் செல்வேன் (வீரமாமுனிவரின் 'சதுரகராதி' பழைய பதிப்பு அங்கேதான் கிடைத்தது). அப்போது பகுத்தறிவுக் கருத்துக்கள் ஒலிபெருக்கியில் காதில் விழும். திராவிடக் கழகத்தைச் சார்ந்த பண்ணனார் என்பவர் சித்திரை வீதியில் வீடு வாங்கிக்கொண்டு பால்சப்ளை செய்தார். பால் வியாபாரத்தையும் பார்ப்பன வெறுப்பையும் கலக்கவில்லை. பார்ப்பன எதிர்ப்புக் கூட்டங்களுக்கு அடிக்கடி தலைமை தாங்குவார். சில்க்கில் கறுப்புச் சட்டை போட்டுக் கொண்டிருப்பார். அவர் மனைவி பாட்டியுடன் தினம் ராத்திரி நிலவொளியில் பேச வருவாள். ''என்னடி... உன் புருஷன் பெருமாளே இல்லைங்கறானாமே?''

''அது எதோ சொல்லிக்கிட்டிருக்கும்.''

''பெருமாள் எப்டிரி, இல்லைன்னு சொல்லப்போகும்... ஒருநா அவனைக் கேட்டுச் சொல்லேன்... நீதான் கேளேண்டா.''

''பாட்டி, அவாள்லாம் நாஸ்திகாள்'' என்பேன்.

''சார்வாகன் மாதிரியா?''

''அதென்னவோ எனக்குத் தெரியாது. அவாள்லாம் நாஸ்திகாள்.''

''என்ன எழவோ... பால்ல தண்ணி குத்தாம இருந்தா சரி கோதாவரி..''

''கோதையம்மா, நான் எப்பனாச்சியும் உனக்குப் பால்ல தண்ணிவிட்டுக் கொடுப்பனா... கள்ளிச்சொட்டு மாதிரி கொடுக்கறனா, இல்லையா?''

''ஆமா... ஊத்தறச்சயே அந்தப் பக்கம் தெரியறது கண்ணாடி மாதிரி'' என்று பாட்டி சொல்வாள்.

பண்ணனார் மாசம் பால் பணம் வாங்க வரும்போது சிலசமயம் ''நாளைக்கு வாயேம்பா... இன்னும் மணியாடர் வரலை.''

''நாளைக்குத் திருச்சில பொதுக் கூட்டம் பாட்டியம்மா... அவசரமே இல்லை... நீங்க எப்பவேணா குடுங்க'' என்பதில் எந்த பிரமாண வெறுப்பும் இருக்காது.

''பெருமாள் இல்லைன்னு சொல்றியாமே நீ?''

''அதெல்லாம் மீட்டிங்ல பாட்டியம்மா. எளுதி வெச்சதைப் படிக்கிறேன்.''

''அதான பாத்தேன்... நீ ரொம்ப சாதுவாச்சே... குடுமியை எல்லாம் கத்திரிப்பேன்னியாம்.''

''யாரோ புரளி பண்ணிருக்காங்க. பாட்டியம்மா, ஒண்ணு சொல்றேன் கேட்டுக்க... குடுமியை அறுப்பேங்கறது உங்க பாப்பாரசாதிப் பைய&னா!''

அவர் குறிப்பிட்டது 'அரசு பகுத்தறிவுப் பாசறை'யின் தலைவன் ஆ.வி. அரசுவை. அவன் பெயர் ஆ. வரதராஜன். எனக்கு ரெண்டு மூன்று கிளாஸ் சீனியர். நேஷனலில் பி.ஏ. படித்தான். திருச்சியில் தனியார் கம்பெனி ஒன்றில் ஆடிட்ட ராக வேலையில் இருந்தான். ராஜன் ஸ்கூலுக்கும் டீபிஜி கடைக்கும் நடுவே இருந்த எந்த வீடு என்று சரியாக ஞாபக மில்லை. முன்&னற்க சரிந்து கூரை வேய்ந்த அரிதான வீடுகளில் ஒன்று. திண்ணையும் பெரிசாக இருக்கும். சுவரில் சாய்ந்து கொள்ள வட்டமாக இருக்கும். விளக்கேற்றுவதற்காக பிறைகள் இருக்கும்.

அரசு அழகாக இருப்பான். என்னைப் பார்த்தால் எப்போதும் புன்னகைப்பான். ''எப்போது சங்கத்தில் சேரப் போகிறாய்?'' என்று கேட்பான்.

அந்த சங்கத்தின் பெயர் அரசு பகுத்தறிவுப்பாசறை. தைரியமாக போர்டே போட்டிருந்தான்.

ரங்கு கடைக்கு வருவான். அவன் பேச்சை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருப்போம். மார்க்ஸ், மாஜினி, ரஸ்ஸல் என்றெல்லாம் பேசுவான். சார்வாகத் தத்துவத்தைப் பற்றியும் பௌத்தத்தைப் பற்றியும் விஸ்தாரமாகப் பேசுவான்.

ரங்குதான் பளிச்சென்று கேட்டான்.

''வரது, நீ என்னதான் சொல்ல வரே?''

''என்னை வரதுன்னு கூப்பிடாதே.. ஆ.வி. அரசு நானு.''

''ஆ.வி. அரசோ... அது என்ன புடலங்காய் அரசோ... நீ என்ன சொல்ல வரே..? பெருமாள் இல்லைன்னா?''

''பெருமாள் மட்டும் இல்லைடா.. சிவன், பிரம்மா, கிருஷ்ணன், ராமன் யாரும் இல்லை. கடவுள் இல்லை... எல்லாமே மூடக் கருத்துகள்... மக்கள் மனதில பயத்தை உண்டாக்கி காசு பிடுங்கற உத்திகள்.''

''அப்ப எந்தப் பெருமாளைத் தான் இருக்கறதா ஒப்த்துக்கறே?''

''டேய்! பெருமாளே இல்லைங்கறாண்டா சும்பா.''

''பெருமாளே இல்லயா?'' என்றான் வியப்புடன். ரங்குவுக்கு அதை நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை.

''இல்லை.''

''பின்ன சீரங்கம் கோயில், ரங்கநாதர், ஏகாந்த சேவை, உற்சவம், தைத்தேர், பங்குனி ரதம், குதிரை வாகனம், நித்யப்படி, திருமஞ்சனம் எல்லாம் வேஸ்டா?''

''வேஸ்ட் மட்டும் இல்லை... பித்தலாட்டம்.''

''என்னடா இப்படிச் சொல்லறான்... வரது, நீ என்ன வம்சம் தெரியுமா? உங்கப்பா ஆராமுது ஐயங்கார் கேட்டா ரொம்ப வருத்தப்படுவார்..''

''எங்கப்பா ஆராமுது ஐயங்கார்ங்கறதுக்காக நான் அவர் கருத்தையெல்லாம் ஏத்துக்கணும்னு எங்க ரூலு?''

''கிடக்கட்டும்... போர்டு போட்டிருக்கியே... பகுத்தறிவு பாசறைன்னு... என்ன ஆக்டிவிட்டி?''

''புரட்சிக் கருத்துக்களை மெள்ள மெள்ள நம் சிறுவர்களுக்கு மனசில பதியறா மாதிரி கொடுக்கப்போறேன்.. அவர்களுக்குச் சிந்தனா சக்தியை உண்டாக்கி எதையும் கேள்வி கேக்க வெக்கப்போறேன். அதுக்குத்தான் பசங்களைத் தேடிண்டிருக்கேன்.''

''பசங்க வருவாங்கற?''

''வராம பின்ன...''

''ஆளுக்கொரு லேக்கா உருண்டை கொடுத்தா லால்குடிக்குகூட வந்துரு வாங்க.''

''எனக்கு ஹோப்பில்லை'' என்றான் ரங்கு.

''பாரேன்... சனிக்கிழமை முதல் கூட்டம்.. அப்பறம் கீழவீதில குடுமி ஒழிப்புப் போராட்டத்தில ஜிட்டு வெச்சிருக்கவங்களை எல்லாம் கத்தரிக்கப்போறேன்.''

ஆச்சரியமாகவே இருந்தது சனிக்கிழமை... சித்திரைத் தேர் நிலையில் படி ஏறி உயரத்தில் கூட்டம் போட்டான். நிறையவே குட்டிப் பையன்கள் வந்திருந்தார்கள். எல்லோருக்கும் ரவா உப்புமா, டீ. அவர்கள் எல்லோரையும் உட்காரவைத்து –

''சிறுவர்களே! இப்ப நாம பாடப் போறது கடவுள் வீழ்த்து.''

''தப்பா சொல்றீங்க மாமா... கடவுள் வாழ்த்து.''

''வாழ்த்து இல்லை... வீழ்த்து!''

''சேச்சா, அது வேற கடவுள்டா.''

''கடவுளே இல்லைன்னு உங்களுக்கு எல்லாம் நிரூபிக்கப் போறேன்.''

''எப்டி மாமா?''

''இன்னிக்கு ரங்கநாதர் குதிரை வாகனமாடா?''

''கருட வாகனம் மாமா.''

''ஏதோ ஒண்ணு... அவர் இங்க வரப்போ அவரை வாயில வந்தபடி திட்டப்போறேன்... டாபோட்டு திட்டப்போறேன்... திட்னா என்ன ஆகும்?''

''உம்மாச்சி கண்ணைக் குத்திடுவார்'' என்றான் ஒரு வாண்டு.

''அவருக்குக் கோபம் வரும்படியா, எந்த மானஸ்தனும் வெக்கப்படும் படியா எல்லோர் முன்னாலயும் சத்தம்போட்டுத் திட்டப்போறேன்... பெருமாள் இருந்தா என்ன ஆகும் சொல்லு?''

குட்டிப் பையன் மறுபடி ''கண்ணைக் குத்திருவார்'' என்றான்.

''குத்தலைன்னா?''

''வேற எதாவது பண்ணிருவார்'' என்றான் இன்னொருவன்.

''பாக்கலாம்... நீங்க எல்லோரும் பெருமாள் வரப்ப இங்க வரணும்.''

கூட்டம் கலைந்ததும் ரங்கு அவனைக் கடைக்குக் கூப்பிட்டான். ''வரது, பைத்தியக்கார வேலையெல்லாம் பண்ணி செம உதை வாங்கப் போறே... இதெல்லாம் சாத்தாரவீதில டி.கே. மீட்டிங்கோட வெச்சுக்கோ... அங்க போய்ப் பேசறியாமே... என்னடா வரது வம்சத் துரோகம்டா இது... உத்தர சித்தரை வீதில வேணாம்டா... ஒண்ணுகிடக்க ஒண்ணு ஆயி உன்னை ஜாதிப்ரஷ்டம் பண்ணி கழுத்தைப் பிடிச்சுத் தள்ளிடுவா.''

''பாக்கலாமே!''

''ஏண்டா உனக்கு இப்படிப் புத்தி போறது...''

''நீங்கள்லாம் சிந்திக்கத் தெரியா தவங்க... சிந்திக்க மறுக்கறவங்க.. கோயிலே பணம் பிடுங்கிக் கோயில்.''

''ஏய்... வரது ஒருதடவை பெருமாள் சேவிக்கப் போயிருக்கான்... பெரிய க்யூ இருந்திருக்கு. மணியக்காரரும் நம்ம உபயக்காரரும் தடுப்புச் சங்கிலியைக் கழட்டிட்டு பத்துபேரை பெருமாள் சேவிக்க அழைச்சுண்டு வந்திருக்கார். அதான் பெருமாள் மேல கோவம்.''

''நாங்கள்லாம் முக்கால் மணியா காத்திண்டிருக்கோம்... இவருக்கு என்ன சலுகை? பெருமாளுக்கு முன்னால எல்லோரும் சமம்ங்கறா.. இதைக்கூடத் தடுக்க முடியலை இவரால... இவர் என்ன பெருமாள்? கையாலாகாதவர்... சந்நிதியைவிட்டு எறங்கி வந்து அந்த உபயக்காரரைச் சவிட்டிருக்க வேண்டாமோ?''

''கலியுகத்தில அதெல்லாம் கெடையாது வரது. திரேதாயுகத்தில தாண்டா பெருமாள் நேர்ல வருவார். மனுஷ ரூபத்தில வரதை இப்பல்லாம் நிறுத்திட்டார். கல்கி அவதாரம் இன்னும் ஆகலை.''

''ஏன்... ஏன்?''

''அப்படித்தான்.''

''ஏன்னா பெருமாள் இல்லை... மறுபிறவி இல்லை.''

''வேற என்னதான் இருக்கு? பொச்சும் புளியங்காயுமா?''

எல்லோரும் சிரிக்க...

''உங்களுக்கெல்லாம் விவஸ்தை கிடையாது... சிந்தனை மழுங்கிப் போன ஜன்மங்கள்.''

''எதுக்கும் ஜாக்கிரதையா இருந்துக்கோ... செம உதை படப்போறே.''

அரசு தன் பூணூலை பெருமாள் கருடவாகனத்தில் வீதிவலம் வரும்போது அறுத்துப்போட்டான். அவரைக் கண்டபடி திட்டினான். ''நீ உருப்படுவியடா'' என்று டா போட்டுத் திட்டினான். அதை யாரும் கவனிக்கவில்லை. ''மளிகைக்கடை ரங்கநாதனுக்கு வரது கொடுத்த கடனைத் திருப்பித்தராததால் திட்டுகிறான்'' என்றனர்.

ஒருமுறை அவன் தந்தை ஆராமுது ஐயங்கார் ரங்கு கடைக்கு ஸ்டவ் திரி வாங்க வந்திருந்தார்.

''வரது, இங்க வந்தானா?''

''வரது இல்லை... ஆ.வி. அரசு.''

''எதுக்குத்தான் இப்படி புத்தி போறதோ அவனுக்கு... ஏம்பா, நீங்கல்லாம் சொல்லக்கூடாதோ?''

''அவன் கோவையா வாதாடறது எங்களுக்கே சந்தேகம் வந்துர்றது மாமா.''

''ஒரு கல்யாணத்தைப் பண்ணி வெச்சுடுங்கோ மாமா.''

''நிச்சயம் ஆய்டுத்து... அதைச் சொல்லத்தான் வந்தேன்.''

''பொண்ணு யாரு?''

''அம்மா மண்டபம் ரோடு போற வழியில புதுசா தாத்தாச்சாரியார் காலனி வந்திருக்கே.. திருமஞ்சன காவேரி தாண்டி.. அங்க இருக்கா.''

''பேரு லோசனாவா?''

''ஆமாம்... எப்படித் தெரியும்?''

''அவ அப்பா எனக்கு ஒண்ணுவிட்ட மாமா உறவாக்கும் ஓய்'' என்றான் ரங்கு.

''அந்தப் பொண்ணு நம்ம வரதுக்குத் தோதுப்படுமா ரங்கு?''

''அவா என்ன சொல்றா?''

''குடுக்கறேங்கறா..''

''வரது ஒரு நாஸ்திகன்னு சொல்லிட் டிங்களா?''

''அதெல்லாம் சொல்லலை... நீ போய்ச் சொல்லிடாதே.''

''சொல்ல வேண்டாமோ?''

''எல்லாம் கல்யாணத்துக்கப்புறம் சரியா போய்டும்னு மெய்யு ஐயங்கார் சொல்லிருக்கார்.''

அவர் போனதும் ''ரங்கு, அந்தப் பொண்ணு எப்படிரா?''

''ரொம்ப பக்திடா... நாலு வேளை கோயிலுக்குப் போகும்.. ஒரு புறப்பாட்டை விடாது.. தினம் வீதிப் பிரதட்சணம் பண்ணும்... பாத்திருப்பியே.''

''ஓ... அந்தப் பொண்ணா! அதைப் போய் இந்த நாஸ்திகனுக்குக் கல்யாணம் செய்து வெக்கிறாளா... எப்படி ஒப்த்துண்டா?''

''அதான் ஆராமுது சொன்னாரே... அவாகிட்ட இதை மறைச்சிருக்கா.''

''அநியாயம்டா.''

''வரதுக்குச் சொத்து நிலபுலன்கள் எல்லாம் உண்டு. நாத்திகனா இருந்தா என்ன?''

இதற்குள் வரது வந்து சேர்ந்தான். ''ரங்கு, அவா பேப்பர்ல என் பேரு வந்திருக்கு பாரு'' என்று கட்டினான்.

திருவரங்கத்தில் சனாதனிகளின் கோட்டையில் ஒரு பகுத்தறிவுக் குரல்.. ஆ.வி. அரசு என்பவர் தீவிரமான ஐயங்கார் பார்ப்பன இனத்தைச் சேர்ந்தவர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது என்றெல் லாம் செய்தி போட்டு அவன் போட்டோ போட்டிருந்தது.

‘‘வரது, உனக்குக் கல்யாணமாமே?’’

‘‘யார்றா சொன்னா?’’

‘‘உங்கப்பாதாண்டா.’’

‘‘ஆமடா... அம்மா மண்டபம் ரோட்டில ஒரு பொண்ணு பாத்திருக்கா... ரோசனாவோ, லோசனாவோ பேரு.’’

‘‘அந்தப் பொண்ணு ரொம்ப பக்தியுள்ளவடா... சக்கரத்தாழ்வார் கோயில், தாயார் சந்நிதி எல்லாத்துக் கும் தினம் போறவ.’’

‘‘எல்லாத்தையும் மாத்திரலாம் ரங்கு.’’

‘‘எப்படி?’’

‘‘பேசியே என்னால யாரையும் கன்வின்ஸ் பண்ணமுடியும். அதுக்கு முன்னாடி இந்தக் குடுமி நீக்கப் போராட்டம் ஒண்ணு பாக்கியிருக்கு... கீழ வீதில யாரார்றா குடுமி?’’

குடுமி வழக்கொழிந்துகொண்டிருந்த காலகட்டம் அது. அங்கொன்று இங்கொன்றாக அது கார்டு வீட்டுக்கு எட்டாவது இருபத்தாறு ஏ வீட்டில் பப்புக்குட்டி என்பவனும் எங்கள் வீட்டுக்கு அடுத்த வீட்டில் ஒருவனும் சாவுகார்வீட்டு நான்காவது வீட்டில் இருந்த துவரம்பருப்புதுரை என்கிற துரைராஜனும் கட்டுக்குடுமி வைத்திருந்தார்கள்.

சொல்ல மறந்துவிட்டே&ன.. அந்த லோசனாவின் தம்பி விஜயராகவனும் வைத்திருந்தான். ஒன்றிரண்டு பேர் வடக்கு வீதியில் வைத்திருந்தார்கள்.

‘‘குடுமியை அறுக்கலாம்னா அதிகம் ஆட்கள் இல்லையேடா... உன் உட்பி மச்சின&ன குடுமி.’’

‘‘அதை வெட்டினாத்தான் கல்யாணம்! பப்புக்குட்டியையும் தயாரா இருக்கச் சொல்லு... எந்த நிமிஷத்திலயும் கத்தரிச்சிருவேன்’’ என்றான். ஆ.வி. அரசு.

பப்புக்குட்டி, ‘‘இது என்னடா வம்பாப் போச்சு? என் தலைமயிரு, என் குடுமி... இதை வெட்டறதுக்கு இவனுக்கு என்ன உரிமை? அநியாயமா இருக்கே.’’

‘‘அவன் கிறுக்குடா... எதுக்கும் நீ கொஞ்ச நாளைக்குக் கீழவாசல் பக்கம் வராம கோட்டைலிருந்து வரப்ப கோயிலுக்குள்ள நுழைஞ்சு கீழ உத்தர வீதி வடக்குவாசல் வழியாக கீழவீதின்னு வந்துரு.’’

ஆ.வி. அரசு தெற்குவாசல் தையல்காரரிடம் சென்று ஒரு நல்ல கத்திரி வாங்கிக் காத்திருந்தான்.

‘‘எங்கடா பப்புக்குட்டியை ஒரு வாரமா காணம்?’’

‘‘எங்க யாவுது ஊருக்கு கீருக்குப் போயி ருப்பான்.’’

''இல்லைடா... எங்கிட்டருந்து பம்மறான்... அவனைப் பாத்தா சொல்லு... அரசு காத்துண்டிருக் கான்னு.''

''அவ அப்பாகிட்ட செல்லட்டுமா... அவன்கிட்டயா?''

''அப்பாகிட்டயும் சொல்லு... அவர் குடுமியையும் வெட்டறேன்.''

''அவர் குடுமி ரொம்ப சின்னதுரா... கொத்தமல்லிக் கட்டு மாதிரி.''

வரது கல்யாணத்துக்கு மந்திரமெல் லாம் கூடாது என்றான். ரிஜிஸ்டரார். ஆபீஸில் தி.க. தலைவர்கள் முன்னிலை யில் சீர்திருத்தக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்றான்.

ஒருவழியாக அப்பா தாயே என்று கெஞ்சி அதிகாலையில் வைதிகமும் ராகுகாலத்தில் சீர்திருத்தக் கல்யாண மும் செய்துகொண்டான். அடிக்கடி மச்சினன் விஜியின் கட்டுக்குடுமியைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

லோசனா தோற்றத்தில் அவனுக்குப் பொருத்தமாக இருந்தாள். அரக்கு கலர் கூறைப்புடவையும் மடிசார்கட்டும் அவளுக்குப் பாந்தமாக இருந்தது. ஏகப்பட்ட நகை போட்டிருந்தார்கள். வரதுவின் கரம் பிடித்த கையில் மருதோன்றி செக்கச் செவேல் என்று பத்தியிருந்தது. மூக்கில் சின்னதாக வைரமூக்குத்தி, ஜடைபில்லை, நாகொத்து, சுட்டி எல்லாம் அணிந்து ஷோக்காக இருந் தாள். வரது அடிக்கடி அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

அவள் 'அப்படிப் பார்க்காதே' என்று அதட்டலாக அவனைப் பார்த்துவிட்டுச் சிரித்தாள்.

சின்ன வயசிலேயே வேண்டுதல் என்று திருப்பதி போய் வந்தார்கள். அரசு முதலில் வரமாட்டேன் என்று சொல்லிவிட்டானா... மாடிக்குப் போய் அவனை லோசனா கெஞ்சிக் கேட்டதில் தவிர்க்க முடியாமல் அவர்களைத் தொடர்ந்து சென்றான். அங்கே போயும் திருப்பதி பெருமாளைத் திட்டினானாம்.

''இவ்வளவு ஏழைகள் இருக்கறப்ப உனக்கு எதுக்குத் தங்கத்தில ரதம்?'' என்று கேட்டானாம். திருப்பதியில் இருந்து திரும்பியதும் அரசுவின் போராட்டம் தீவிரமாகிவிட்டது. ஒரு நாள் பப்புக்குட்டியைக் கடையில் வைத்துப் பார்த்தேன்.

''என்ன பப்பு, கிராப்பு திடீர்னு?''

''இந்தப் பைத்தியம் ஊருக்குப் போற வரைக்கும் மாமா கிராப்பு வெச்சுக்கச் சொன்னார். அன்னிக்கு என்ன ஆய்டுத்து தெரியுமா ரங்கு... வரது போட்டோக்காரங்ககூட என்னைப் பார்த்துட்டான்... போட்டோக்காரங்களைக் கூப்ட்டு பாய்கடைலிருந்து பெரிசா காடாத் துணி வெட்டற கத்தரியை எடுத்துண்டு வந்து இந்த க்ஷணம் கத்தரிப்பேன்னு துரத்தறான்.. தப்பிச்சேன்... பிழைச்சேன்னு மாடி எறிக் குதிச்சேன்... பகுத்தறிவு தினமாம்... ஒரு குடுமியையாவது வெட்டியே ஆகணுமாம்... நாந்தான் அம்ட்டேனா.. ஆளைப் பாரு.''

''அப்றம் என்ன ஆச்சு?''

''அந்தப் பொண்ணு அருமையான பெண்ணுடா... லோசனா வந்து எங்கம்மாகிட்ட மன்னிப்புக் கேட்டது. அம்மா விடுவிடுன்னுவிட்டா. 'உன் ஆம்படையான் என்னன்னு

நினைச்சிண்டிருக்கான்... திரிசமனெலாம். திருச்சில வெச்சக்கச் சொல்லு... இல்லை, உங்காத்துக்குள்ள வெச்சுக்கோ... அடுத்த தடவை போலீஸ் ஸ்டேஷன்ல ப்ராது கொடுத்து கைல விலங்கை மாட்டி ஊர்கோலமா அழைச்சுண்டு போவான்னு சொல்லு... எங்காத்துக் காரரை உனக்குத் தெரியாது... பாத்தா சாதுவா இருப்பார்... பாஞ்சா புலி..'

'மன்னிச்சுக்கங்கோ மாமி.. இனிமே இந்த மாதிரி நடக்காது.'

'ஏண்டி, உன் ஆம்படையானுக்கு இப்படிப் புத்தி போறது?'

'என்ன பண்றது மாமி... கல்யாணத்தப்பகூட அவாத்தில யாரும் இவர் இப்படிப்பட்டவர்னு சொல்லலை..'

'ஏமாத்திக் கல்யாணம் பண்ணிட்டாளா! சக்கரத்தாழ்வாருக்கு வேண்டிக்கோ... நாப்பத்தெட்டு நாளைக்கு எலுமிச்சம்பழ மூடில நெய்விளக்கு ஏத்திண்டு போ... புத்தியைக் கொடுப்பார்.'

'பாக்கலாம் மாமி.'

'மத்தபடி எப்படி?'

'மத்தபடி நன்னாத்தான் வெச்சிண்டிருக்கார். பராசக்தி, ஓரிரவு, வேலைக்காரி சினிமாக்குக் கூட்டிண்டு போனார். லாலா கடைல அல்வா வாங்கித் தரார். தவறாம கனகாம்பரம், கதம்பம், மல்லிப்பூ, பிச்சிப்பூ எல்லாம் வாங்கிண்டு வரார். அது என்னமோ குடுமியைக் கண்டா மட்டும் ஆவேசம் வந்துடறது... கத்தரிக்கோலைத் தூக்கறார்.'

'எல்லாம் சரியா போய்டும்.. உங்காத்துக்காரர் என்ன நட்சத்திரம்?'

'உத்தரட்டாதி.'

'இப்படித்தான் படுத்தும்... பங்குனிக்குள்ள சரியாய்டும்.'

'பங்குனி வரைக்குமா.. ஹூம்.'

'ஏன்?'

'வரவர ஜாஸ்தியாயிண்டு வரது... அடுத்த தடவை வடகலையார் மொட்டைப் பாட்டிகளுக்கெல்லாம் பட்டுப்புடவை கட்டிக்கச் சொல்லப் போறாராம். இது எங்க கொண்டு விடுமோன்னு பயமா இருக்கு.'

'சக்கரத்தாழ்வார் கோபத்தைக் கிளப்பாம இருக்கச் சொல்லு... பூமியே தாங்காது... பூசினாப்பல இருக்கே மூஞ்சி... உண்டாயிருக்கியா?'

'ஆமாம் மாமி.'

'எத்தனை மாசம்?'

'நாலு.'

'இரண்யகசிபுவுக்குப் பிரகலாதன் பொறந்தாப்பல உனக்கு ஒரு பிள்ளை பொறந்து அப்பனைத் திருத்தட்டும்... ஒரு நடை ஆத்தில ம்ருத்யுஞ்சய ஹோமமும் சுதர்சன ஹோமமும் பண்ணிடு.'

'ஐயோ... என்னை பலிபோட்டுருவார்.. அமாவாசைக்கு அப்பாவுக்கு தோப்பனாருக்குத் தர்ப்பணம் பண்ணிவெக்க வர வாத்தியார் சுவாமிகளை எல்லாம் விரட்டறார்?' ''

வரது சிந்தனையாளர்கள் மாநாட்டுக்கு சென்னைக்குப் போயிருந்தபோது அவனுக்கு ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு லோசனாவின் அப்பா கோவிந்தராஜன் என்று பெயர் வைக்க விரும்பினார். வரது அதற்கு இங்கர்சால் என்று வைக்க வேண்டும் என்றான். கடைசியில் லோசனா அடித்துச் சொல்லிவிட்டாள்... பரத்வாஜன் என்று பெயர் வைத்து பத்தாச்சி என்று கூப்பிட்டார்கள்.

குழந்தை அவளைக் கொண்டிருந்தது. குளிக்கப் போகும் போது வரது கையில் கொடுத்தால் ''சொல்லு.. அப்பா மாதிரி சொல்லு.. கடவுள் இல்லை... கடவுள் இல்லை..''

பத்தாச்சி ''கில்கா'' என்றது.

வரதுவிடமிருந்து பல பகுத்தறிவுச் சங்கங்கள் அவ்வப்போது நூறும் இருநூறும் வாங்கிக்கொண்டு வரதுவின் போட்டோவை போஸ்டர் அடித்து இந்த தினம், அந்த தினம் என்று பணம் பிடுங்குவதை லோசனா சாமர்த்தியமாகத் தடுத்துவிட்டாள். ''எங்காத்தில குழந்தை இருக்குப்பா... அதுக்குப் பசும்பாலும் பவுடர் பாலும் கொடுத்தே போண்டியாயிண்டிருக்கோம். இந்த வருஷம் இங்கர்சால் நினைவுநாள் வேண்டாம்.''

''தலைவர் கோபப்படுவாரே தங்கச்சி.''

''கோவிச்சுக்கட்டும்... நான் பாத்துக்கறேன். நீங்கதான் பெரிசா சங்கம் வெச்சிருக்கேளே... பத்திரிகை எல்லாம் நடத்தறவாளை கேட்டுக்கோ.''

வரதுவுக்கு ஆபீஸில் ஆடிட் வேலை இருந்ததால், கோபித்துக்கொள்ள அவகாசம் கிடைக்கவில்லை.

''லோச்சி, இங்கர்சால் நினைவு தினம்னு யாராவது வந்தாளா?''

''இல்லையே... யாரும் வரலையே.''

''என்ன... மறந்துட்டானுகளா?''

லோசனா அவன் கொள்கைகளை மாற்ற முயன்றாலும் அவன் தன் நம்பிக்கையில் தளராமலேயே இருந் தான். இடையில் லோசனா மறுபடி உண்டானாள். முதல் குழந்தைக்கு ஒரு பெரிய சிக்கல் ஏற்பட்டது. தடுப்பு ஊசி ஏதோ சரியாகப் போட வில்லையோ, என்னவோ... கக்குவான் இருமல் போல வந்தது. குழந்தை ஜுரம் வந்து கையில் நிற்காமல் கிழிந்த நாராகப் படுத்திருந்தது. ராத்திரியெல் லாம் டண் டண்ணென்று இருமியது. தேவி டாக்கீஸ் அருகே பாலாஜி என்கிற, குழந்தை டாக்டர் இருந்தார். அவரிடம் காட்டியதில் ஒன்றும் சொல்லவில்லையாம் ''உன் புருஷனுடன் வா'' என்றாராம். இருவரும் போயிருக்கிறார்கள். ''மிஸ்டர் வரதராஜன். குழந்தையை ஒரு வாரம் முன்னால் கொண்டுவந்திருக்க வேண்டும்... இப்ப ரொம்ப லேட்..''

''வாட் டு யு மீன் டாக்டர்?''

‘‘நெஞ்சில் கபம் கட்டி இருக்கிறது. மூச்சுவிடத் திணறுகிறது.. இன்ஜெக்ஷ னும் மருந்தும் கொடுத்திருக்கிறேன். ஆனால், எனக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை. மெட்ராஸில் குழந்தைகளுக்கான பெரிய ஆஸ்பத்திரி எழும்பூரில் இருக்கிறது. அதற்கு அழைத்துச் சொல்வது நல்லது.’’

‘‘இல்லைன்னா?’’

‘‘இதைவிட அப்பட்டமாக எச்சரிக்க என்னால் முடியாது. இல்லைன்னா குழந்தை பிழைக்காது.. கிளம்பறதுக்கு முன்னாடி ஒரு விசை காட்டிடுங்க குழந்தையை.’’

இருவரும் பிரமித்துப்போய் மாட்டு வண்டியில் வீடு திரும்பும்போது லோசனா பிழியப்பிழிய அழுதிருக் கிறாள். அழுதுமுடித்து ‘‘வாங்கோ’’ என்றாள்.

‘‘ஏங்க... மெட்ராஸ்க்கு ராத்திரி தா&ன வண்டி? அந்த சக்கரத்தாழ் வானைப் போய் கேட்கலாம்.’’

‘‘என்ன சொன்&ன? ஆழ்வானா?’’

‘‘ஆமாம்... நீங்க சொல்றது எல்லாம் உண்மை. பெருமாளும் இல்லை... ஒரு சுக்கும் இல்லை. நாப்பத்தெட்டு நாள் எலுமிச்சம் பழத்தில வெளக்கேத்தி ஊர்ல இருக்கற எல்லா சந்நிதியையும் சுத்தி எல்லா சுலோக மும் சொல்லியும் என் குழந்தையைக் காப்பாத்தலைன்னா என்ன தெய்வம் அது... வாங்கோ, கேட்டே ஆகணும்... நீங்களும் கேளுங்கோ.’’

‘‘நான்தான் அப்பவே புடிச்சு அடிச்சுண்டே&ன... தெய்வமே இல்லைன்னு..’’

‘‘அங்க இருக்கிற எல்லா விளக்கையும் உடைச்சு நாசம் பண்ணி எறியணும் போல வருது...’’

இருவரும் சக்கரத்தாழ்வார் சந்நிதிக் குக் குழந்தையுடன் போயிருக் கிறார்கள். அவள் படியருகில் குழந்தையை வைத்துவிட்டு ‘‘பாரு.. என் குழந்தையை! உன்னால் காப்பாத்த முடியலை பாரு.. நீயே பாரு... என்ன தெய்வம் நீ’’ என்று அழுதிருக்கிறாள்.

வரது அவளை அணைத்துக் கொண்டு ‘‘லோசனா, வா போகலாம்... இதனால ஒரு பிரயோசனமும் இல்லை. டுட்டிக்கோரின்ல மெட்ராஸ் போக டிக்கெட் ஏற்பாடு பண்றேன்.’’

கிளம்புவதற்குமுன் அதற்கான பலமும் தெம்பும் குழந்தையிடம் இருக்கிறதா என்று பார்க்க டாக்டரிடம் எடுத்துச் சென்றிருக்கிறார்கள்.

அவர் பரிசோதித்துப் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கி ‘‘போக வேண்டிய தேவையில்லை’’ என்றார்.

குழந்தை தூங்குகிறதா, ப்ராணன் போய்விட்டதா என்று தெரியாமல் சன்னமாக மூச்சுவிட்டுக் கொண்டிருந்தது.

டாக்டர் இருவரையும் தனியாக அழைத்தார்.

‘‘என்ன குடுத்தீங்க இதுக்கு?’’

‘‘புதுசா எதும் குடுக்கலை...’’

‘‘என்னவோ செய்திருக்கீங்க.’’

‘‘சக்கரத்தாழ்வார் சந்நிதிக்கு எடுத்துண்டு போய் படியில வெச்சு ‘இன்ன மாதிரி செய்தது நியாயமா, நியாயமா’ன்னு கேட்டா... உணர்ச்சி வசப்பட்டுட்டா... இதெல்லாம் தேவையில்லைன்னு சொல்லிச் சொல்லிப் பார்த்தேன். இவ கோபம் தணியலை.’’

பாலாஜி டாக்டர் ‘‘குழந்தைக்கு ஜுரம் இறங்கி இருக்கு. லங் கிளியராகி இருக்கு... பல்ஸ் சீராய்டுத்து’’ என்றார்.

க்ஷிக்ஷிக்ஷி

பெங்களூரில் பொறுப்பேற்பதற்கு முன் ஒரு நடை ஸ்ரீரங்கம் போயிருந்த போது வழக்கம்போல ரங்கு கடைக்குப் போ&னன். அங்கே கட்டுக் குடுமியும் பன்னிரண்டு திருமண்ணுமாக ஒரு சுவாமி வீற்றிருந்தார். என்னை ஒரு மாதிரியாகப் பார்த்து ‘சௌக்கியமா?’ என்றார். நான் பவ்யமாக ‘‘அடியேன் ரங்கராஜன்... சுவாமி திருநாமம் என்னவோ?’’

ரங்கு அட்டகாசமாகச் சிரித்து ‘‘டேய்... வரதுடா இது!’’

‘‘அட, வரதுவா.. என்ன ஆச்சு உனக்கு? பகுத்தறிவு, குடுமி, கழகம் எல்லாம்...’’

‘‘அதெல்லாம் ஞாபகப்படுத்தாதே. ரங்கு, ஸ்ரீபாஷ்யத்தில் ஒரு சூத்ரத்துக்கு எம்பெருமானார் வியாக்கி யானம் பாரு நாப்பது பக்கம்.’’

நான் அவனை வியப்புடன் பார்த்தேன்.

‘‘வரது, உன் நாஸ்திக வாதமெல்லாம்..’’

‘‘புறப்பாடாயிருக்கும்... அப்றம் சந்திக்கலாம்... நாராயணா ஹரீ ஹரீ லோச்சி வந்தா ஆத்துச் சாவியைக் கொடு’’ என்று சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

அவன் போனதும் லோசனா வந்தாள். ‘‘ரங்கு மாமா, இவர் வந்தாரோ..’’

‘‘இப்பதான் போறான்.. சாவி கொடுத்திருக்கான்.’’

‘‘எங்க போறதா சொன்னார்?’’

‘‘பெருமாள் புறப்பாட்டுக்கு!’’

‘‘இப்பல்லாம் ஒரு புறப்பாடு, திருமஞ்சனம் விடமட்டேங்கறார்.’’

லோசனா இன்னமும் பூரிப்பாக, அழகாகத்தான் இருந்தாள். ‘‘பத்தாச்சி, மாமாக்கு அபிவாதயே சொல்லு... மாமா பெரிய எழுத்தாளர்.’’

அருகே குட்டி ராமானுஜர் போல இங்கர்சால் என்று அழைக்கப்படவிருந்த பரத்வாஜன் நின்று கொண்டிருக்க, அருகே மற்றொரு,

''பொண்ணு பேர் என்ன?''

''பேர் சொல்லுடி மாமாக்கு!''

''வைதேகி'' என்றது சன்னமாக

''வைதேகி எப்டி இருக்கே?''

வைதேகி மெஷின் போல 'மாய்கயித்திங்கள் மதி நியைந்த நன்னா' சொல்வதற்குள் மூச்சு வாங்கியது.

''போறும்..''

''வரது எப்படி இப்படி மாறினான்? நீதான் மாத்தினியா லோசனா?''

''இல்லை. சக்கரத்தாழ்வார்தான்'' என்று ரங்குவைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''குழந்தைக்கு டாக்டர் பாலாஜி குடுத்த மருந்தில சாயங்காலத்துக்குள்ள சரியா போய்டும்னு சொன்னார். அவர்கிட்ட பேசி வெச்சுண்டு பெரிசா நாடகமாடி வரதுவை மனசை மாத்திட்டா... என்ன லோச்சி?''

''சொல்லாதீங்கோ மாமா. கதையா எழுதிடப் போறார்'' என்றாள்.

## 20. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - உஞ்சவிருத்தி



சில ஆண்டுகள் வடக்கே இருந்து விட்டு ஒரு முறை ஸ்ரீரங்கம் போன போது வழக்கம்போல் ரங்கு கடையில் போய் உட்கார்ந்தேன். ரங்கு 'அன்று கண்ட மேனிக்கு அழிவில்லாமல்' அப்படியே இருந்தான். புதுசாக கூலிங்கிளாஸ் போட்டிருந்தான். ஆண்டாளின் பையன் அமெரிக்காவில் இருக்கிறா&ன பாச்சாவோ, யாரோ... அவன் கொடுத்ததாம். வழக்கம்போல் தம்பு, சீது போன்றவர்கள் வந்து அரசியலையும் சினிமாவையும் அலசினார்கள். தம்பு தேவகாந்தாரிக்கும் ஆரபிக்கும் வித்தியாசம் என்னவென்று பாடிக் காட்டினான். சீது யாருக்கு மொட்டைக் கடுதாசி எழுதலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தான்.

''நீ எப்ப வந்தே?'' என்று கேட்டான் ரங்கு.

''நேத்திக்குதான்.''

''கொஞ்ச நாள் இருப்பியா?''

''ஒரு மாசம் இருக்கலாம்னு ஆன்யுவல் லீவ்ல வந்திருக்கேன்.''

''நீ ஏர்ஃபோர்ஸ்லதான இருக்கே?''

''ஏர்போர்ட்ல.''

''ப்ளேன் எல்லாம் ஓட்டுவியாமே! பாகிஸ்தான் மேல நீதான் பாம் போட்டதா பேசிக்கிறா.''

''ரங்கா... பாரு, சரியா புரிஞ்சுக்கோ! நான் இருக்கறது ஏர்போர்ட். டெல்லில சப்தர்ஜங்னு பேரு > விமானநிலையம். நீ சொல்றது ஏர்ஃபோர்ஸ். அது 'பாலம்'கிற இடத்தில் இருக்கு.''

''ரெண்டும் ஒண்ணுதா&ன.''

''இல்...லை.''

''பின்ன... ஏர்ஃபோர்ஸ்ல யார் இருக்கா?''

''மேலச் சித்திரை வீதில ரங்காச்சாரிடா அது... அவன்கூட பைலட் இல்லை.''

‘‘ஏர்ஃபோர்ஸ்னா எல்லாரும் பறக்க மாட்டாளோ?’’

‘‘மாட்டா!!’’

‘‘அப்ப நீ ஏர்ஃபோர்ஸ்ல இல்லை?’’

‘‘ஏர்போர்ட்... ஏர்போர்ட்!’’

‘‘பின்ன யாரோ, நீ ப்ளேன் ஓட்டறதா சொன்னாளே..?’’

‘‘அது சின்ன ப்ளேன். டிரெய்னிங் ப்ளேன்.’’

‘‘ஏர்போர்ட்ல பெரிய ப்ளேன்தா&ன இருக்கும்! போட்டுக் குழப்பறாங்கப்பா!’’

நான் அவனுக்கு மேலும் விளக்கும் முயற்சியைக் கைவிட்டேன். ரங்குவின் உலகம் அவன் வீடு, கடை இரண்டை விட்டு வெளியே எதும் கிடையாது. உலகம் முழுக்க அவன் கடைக்கு அரட்டையடிக்க வரும். இவன் இடத்தைவிட்டு நகரமாட்டான். பெருமாளைக்கூட பங்குனி, சித்திரை உற்சவங்களில் கடையைக் கடந்து செல்லும்போதுதான் சேவிப்பான்.

அப்போது ஒரு கிழவனார் கையில் சொம்புடன், ஒரு சிறுவன் குச்சியைப் பிடித்துக்கொண்டு அழைத்துச் செல்ல... ‘உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன்...’ என்று ஏறத்தாழ உளறலாகச் சொல்லிக்கொண்டு நட்ட நடுத் தெருவில் வந்துகொண்டிருந்தார். முகத்தில் ஒரு வாரத்துக்கு உண்டான வெண் தாடி. மார்பில் பூணூல். சவுக்கம். பத்தாறு வேஷ்டி.

‘‘ரங்கு, இது யாரு?’’

‘‘இவர் பேரு தேசிகாச்சாரி. ஜி.பி>னு ஐஸ்கூல்ல மேத் டீச்சர் இருக்காரே, அவரோட அப்பா.’’

‘‘ஆமாம். எதுக்கு சொம்பை கைல வெச்சுண்டு பிரபந்தம் சொல்லிண்டுபோறார்?’’

யாரோ அவர் சொம்பில் அரிசி போட்டுவிட்டு வணங்கி விட்டுச் சென்றார்கள்.

‘‘உஞ்சவிருத்தி.’’

‘‘புரியலை. ஜி.பி. இவரை வெச்சுக் காப்பாத்தலியா?’’

‘‘அதெல்லாம் இல்லை. பிடிவாதம்.’’

‘‘பணம் காசு இல்லையா? ஜி.பி. நிறையச் சம்பாதிக்கிறாரே!’’

‘‘இவருக்கே நிறைய சொத்து இருக்கு. சித்திரை வீதில ஜி.பி. இருக்கற வீடு இவர்துதான். மகேந்திர மங்கலத் தில் நெலம் எல்லாம் இருக்கு.’’

‘‘உஞ்சவிருத்தின்னா பிச்சை எடுக்கறதில்லையோ?!’’

‘‘ஆமாம். ‘பவதி பிக்ஷாம் தேஹி’ன்னு சொல்லலே... அவ்ளவுதான்!’’

‘‘புரியலை ரங்கு.’’

‘‘சில வேளைல பெரியவர்களுடைய பிடிவாதங்கள் புரியாது நமக்கு. இந்த பிராமணனுக்கு வீம்பு. போக்கடாத்தனம்.’’

ஜி.பி. என்னும் பார்த்தசாரதி செயலாக இருப்பவர். கணக்குப் பாடப் புத்தகம், நோட்ஸ் எல்லாம் போடுபவர். லட்சக்கணக்கில் விலை போகும்.

எஸ்.எஸ்.எல்.சி>க்கு ஒரு செக்ஷனுக்கு கிளாஸ் டீச்சர். ஹைஸ்கூலில் சீனியர் டீச்சர் என்று மதிக்கப்பட்ட ஆசிரியர். தேசிய விருது வாங்கியிருக்கிறார். அடுத்த ஹெட்மாஸ்டர் அவர்தான் என்று பேசிக்கொண்டார்கள். அவர் தந்தையார் பிச்சை எடுக்கிறார் என்றால்...

‘‘வேணும்னுட்டே, மகனை அவமானப்படுத்தறதுக்குன்னுட்டே..’’

‘‘கண்ணு வேற தெரியலை.’’

‘‘கண்ணெல்லாம் நன்னாத் தெரியறது. தன்மேல சிம்பதியை வரவழைச்சுக்க, கண் தெரியாத மாதிரி பாடசாலைப் பையனை வெச்சுண்டு குச்சியைப் பிடிச்சுண்டு போறார்.’’

‘‘என்ன ப்ராப்ளம் அவருக்கு?’’

‘‘வரார். கேட்டுப் பாரேன்.’’

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் போது அவரே கடைக்கு வந்து பெஞ்ச்சில் உட்கார்ந்தார். அவருடன் கொஞ்சம் ஈரம் காயாத வேஷ்டியின் நாற்றமும் வந்தது. எதையோ வாயிலே மென்றுகொண்டிருந்தார். கிட்டப் பார்க்கையில் ஆரோக்கிய மாகத்தான் இருந்தார். நல்ல மூங்கில் கம்பு. அதைப் பையன் ஒரு ஓரத்தில் வைத்துவிட்டு நின்றுகொண்டிருக்க...

‘‘ஓய்! லைப்பாய், ரெக்சோனான்னு சோப்பு ஏதாவது போட்டுக் குளிக்கிறதுதா&னா? கிட்ட வந்தாலே கத்தாழை நாத்தம்!’’

‘‘மாட்டுப்பொண்ணு எங்கடா சோப்பு கொடுக்கறா? ஒரு அண்டா தண்ணிகூட வெக்கமாட்டேங்கறா ரங்கு.’’

‘‘ஜி.பி>கிட்ட சொல்றதுதா&னா?’’

‘‘அவனா? பொண்டாட்டிதாசன்..! தொச்சு, அது என்னடா சாக்லெட்டு?’’

‘‘பட்டை சாக்லெட் தாத்தா.’’

‘‘அது எனக்கு ஒண்ணு இவனுக்கு ஒண்ணு கொடு! ரங்கநாதா..!’’ என்று பெஞ்ச்சில் உட்கார்ந்து, ‘‘தீர்த்தம் இருக்குமா? என்ன வெயில்.. என்ன வெயில்!’’

ரங்கு சாக்லெட் எடுத்துத் தர, மடியிலிருந்து அஞ்சு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தார்.

‘‘நீ யாரு... கோதை பேரன்தா&னா?’’ என்றார் என்னைப் பார்த்து.

‘‘ஆமாம் மாமா!’’

''நீ ஏர்போர்ஸ்ல இருக்கியா?''

''ஏர்போர்ட்! மாமா, எதுக்காக இந்த வெயில்ல அலையறீங்க? வெயில் தாழ வீதிப் பிரதட்சணம் போகக்கூடாதா?''

''பாரு, வைஷ்ணவனா பொறந்தா பஞ்ச சம்ஸ்காரங்கள்னு அஞ்சு காரியங்கள் செய்யணும். அதான் ஐயங்கார். ஊர்த்வ புண்ட்ரம், சமாஸ்ரணம், திருவாராதனம், ஆசார்யன்கிட்ட உபதேசம் கேக்கறது, பரன்யாசம் வாங்கிண்டப்றம் உஞ்ச விருத்தி. பிச்சைபோடற அரிசியைத் தான் சாதம் வெச்சு சாப்பிடணும்!''

''மாமா, அதெல்லாம் வசதியில்லாத வாளுக்கு!''

''இல்லை. வைஷ்ணவனா பொறந்த எல்லாருக்கும். உனக்கு, எனக்கு... அந்த நாராயண&ன மகாபலிகிட்ட யாசகம் போனான்.''

''நீங்க இப்படித் தெருவில போறது அந்தக் கடமையை நிறைவேத்தறதுக் காகவா?''

''ஆமா, வேறென்ன..?''

''உங்க ஃபேமிலியில அவாளுக்கு சங்கடமா இருக்காதோ?''

''எதுக்குச் சங்கடப்படணும்? எதுக்குங்கறேன்?''

''இல்லை மாமா... உங்க சன் பெரிய கணக்கு வாத்தியார். ஹெட்மாஸ்டர் ஆகப் போறார். நேஷனல் அவார்டெல்லாம் வாங்கினவர்.''

''அதனால?''

''மத்தவாள்ளாம் என்ன நினைச்சுப்பா? தோப்பனாரை சரியா வெச்சுக்காம தெருவில யாசகம் பண்ண அனுப்பிச்சுட்டார் பாரு, இவர் என்ன வாத்தியார்னு தா&ன நினைச்சுப்பா?''

''நினைக்கத்தான் நினைச்சுப்பா. அதுக்கு நான் என்ன பண்ண முடியும்?''

ரங்கு சில சமயம் பட்டென்று போட்டு உடைத்துவிடுவான்.

''ஓய்... உமக்கு மாட்டுப் பெண்ணோட சண்டை. ஜி.பி. அவ பேச்சைக் கேட்டுக்கறார். அந்தக் கோபத்தைத்தான் நீங்க இப்படி அவரை அவமானப்படுத்திக் காட்டறீர்னு ஊர் உலகமெல்லாம் பேசிக்கிறது. உஞ்சவிருத்தி குஞ்ச விருத்தியெல்லாம் சால்ஜாப்பு!''

''சரி, அப்படியே பேசிக்கிறான்னா நீ என்ன செய்யணும்?''

அவர் 'நீ' என்று அழைத்தது ரங்குவை அல்ல. அங்கு இல்லாத தன் மகன் ஜி.பி>யை. ''நீ என்ன செய்திருக்கணும்? 'அப்பா, நீங்க சொல்றதிலயும் நியாயம் இருக்கு. கொஞ்சம் தழைஞ்சு போங்கப்பா. நானும் அவளைத் தூக்கி எறிஞ்சு பேசாம இருக்கச் சொல்றேன்'னு சமாதானமா போகலாம் இல்லையோ..? எப்ப பார்த்தாலும் 'அவ சொல்றதுதான் ரைட்டு, அப்பா... வாயை மூடுங்கோ'னு அதட்டினா எனக்கு எப்படி இருக்கும்..?''

''தனியா இருந்து பாருமேன்.''

''அதைத்தான் யோசிச்சிண்டிருக்கேன்.''

''இப்ப வீட்ல சாப்பிடறதில்லையா?''

''ரெண்டு தளிகை. எனக்கு உண்டான ஒரு மெந்தியக் குழம்பு, அப்பளத்தை நா&ன பண்ணிக்கறேன். ஒரு நெய் கிடையாது, கறமுது கிடையாது, தயிர் கிடையாது. மோர்தான். ஓட்டல் சாப்பாடு ஒத்துக்கலையே ரங்கா! பேதியாறது. அவா என்னவோ சாப்ட்டுட்டுப் போகட்டும். எனக்கு?''

''பிள்ளை?''

''அவனோட பேசியே ஒரு மாசம் ஆச்சு, ஒரே ஆத்துல இருந்துண்டு.''

''இதெல்லாம் சரி, உஞ்சவிருத்தி எப்டி உடம்புக்கு ஆறது உமக்கு? ரேஷன் அரிசியும் புழுங்கரிசியும் கைக்குத்தலும் கலந்திருக்குமே?''

''ஏதோ ரங்கநாதன் கிருபையில கல்லையும் ஜீரணிக்கிறது இந்த வயிறு. ஓடிண்டிருக்கு வண்டி.. இன்னும் எத்தனை நாள்... பார்க்கலாம். நான் செத்துப் போ&னன்னா இந்தப் பாடசாலைப் பையன்தான் எனக்குக் கொள்ளி போடணும், கேட்டுக்கோ ரங்கு.''

''நீர் எங்கே செத்துப் போவீர்? இருக்கறவாளை சாகடிச்சுட்டுத் தான் போவீர். ஆயுசு கெட்டி உமக்கு!''

அவர் மறுபடி வீதி பிரதட்சிணத் துக்குப் புறப்பட, ''ஸ்ட்ரேஞ்ச்... வெரி ஸ்ட்ரேஞ்ச்'' என்றேன்.

ஹைஸ்கூல் எப்படி நடக்கிறது என்று... என் கிளாஸ்மேட்தான் கரெஸ்பாண் டெண்டாக இருந்தான், அவனை விசாரிக்கப் போயிருந்தபோது ஜி.பி-யைச் சந்தித்தேன். பொதுவாக மேத்ஸில் மல்ட்டிப்பிள் சாய்ஸ் கேள்விகள் வந்து தரமே போய்விட்டதாகச் சொன்னார். அவரேதான் ஆரம்பித்தார்...

''அப்பாவைப் பாத்தியோ..?''

''பாத்தேன் சார்.''

''என்ன பிடிவாதம் பாத்தியா?''

''அவர் சொல்றதைப் பார்த்தா அவருக்குச் சோறு தண்ணி கூட சரியா கொடுக்கறதில்லைன்னு...''

''அப்படியா சொன்னார்? ஒரு நா எங்காத்துக்கு வந்து மாமியை சந்திச்சுக் கேட்டுப்பாரு. என் அப்பாதான்... இல்லேங் கலை. ஆனா, அவர் கார்த்தாலை எழுந்திருக்கற திலிருந்து பண்ற அட்ட காசம்... எனக்கு நாலும் பொண்ணு. நாலும் நன்னாப் படிக்கறதுகள். அதுகளைப் படிக்க விடாம சத்தமா பாராயணம் பண்ணிண்டு, எல்லா ரையும் கண்டார... வல்லாரன்னு திட்டிண்டு, கோமணத்தோட புழக்கடைல அலைஞ்சுண்டு...''

''தனி வீடு பாத்துக் கொடுத்துர்றதுதா&ன?''

''போகமாட்டேங்கறாரே! 'என் வீடு, நான்தான் இருப்பேன்'கறார்!''

''சரி, நீங்க போய்டறதுதா&னெ?''

''யோசிச்சிண்டிருக்கேன். வாடகை கொடுத்து மாளுமா?''

''அவர்கிட்ட பணம் இருக்கில்லே?''

''இருக்கு. என்ன வெச்சிருக்கார்னு காட்டமாட்டார். வக்கீலைக் கூப்ட்டு நாலு தடவை வில்லை மாத்தி மாத்தி எழுதிட் டார். சீரங்கம்னு ஒரு பேத்தி மேல கொஞ்சம் பிரியம். அதுங் கிட்ட எதோ சொல்லிண்டிருக்கார்... 'உங்க யாருக்குமே நன்னி கிடையாது. தொச்சுக்குத்தான் எல்லாம்னு உங்கம்மா கிட்ட சொல்லிடு...' ''

''தொச்சுங்கறது...''

''பாடசாலைப் பையன். அவரை கார்த் தால கம்பு பிடிச்சு அழைச்சுண்டு போறா&னெ அவன். கேக்கறதுக்கு நன்னாவா இருக்கு? எதுக்குக் கிழத்துக்கு நான் சிசுருஷை பண்ண ணும்கறா என் ஆம்டையா! நான்தான் அவளை சமாதானப்படுத்தி வெக்கறேன்... 'அப்படியெல் லாம் செய்ய மாட்டார். கோபத்தில ஏதோ சொல் றார்'னு. அவ சொல்றது நியாயம்தா&னெ?''

''தா&னெ தளிப்பண்றதா...''

''அதெல்லாம் வெட்டிப்பேச்சு! ஆடிக் கொரு தடவை அமாவாசைக்கு ஒரு தடவை தளிப்பண்ற உள்ளை மாடு கன்னுபோட்ட எடம் மாதிரி பண்ணிட்டுப் போவார். என் அப்பாவா இருந்தாலும், இந்த மாதிரி ஒரு பிடிவாதம் புடிச்ச கிழவனை நான் பாத்ததில்லை. போய்த் தொலைஞ்சாலும் பரவாயில்லைன்னு சில சமயம் அவ்வளவு வெறுப்பேத்தறார்.''

''அவருக்கு என்ன வேணுமாம்? எதாவது மனசில குறை வெச்சுண்டு இருக்கலாம் ஒரு இன்சொல், ஒரு பரிவு... அல்லது, 'தாத்தா எப்டி இருக்கே?'னு பேத்திகள் கேட்டாலே போறுமா இருக்கலாம். உங்க மனைவியும் 'அப்பா, எப்டி இருக்கீங்க? கண்ணுக்கு மருந்து போடட்டுமா'னு எதாவது கேக்கலாம்.''

''அதெல்லாம் ஒரு புண்ணாக்கும் இல்லை. நீ வேணா சீதாகூட பேசிப்பாரு. நான் சொன்னது பாதிதான். அவ ஆங்கிள்ள பார்த்தா கதை ரொம்பக் கடுமையா இருக்கும். டெல்லிக்குப் போறதுக்கு முன்னாடி ஒரு தடவை சாப்பிட வா, எங்காத்துக்கு!''

போயிருந்தேன். நான்கு பெண்கள் பதினைந்து, பதின்மூன்று, பத்து, எட்டு என்று அலைந்தன. எனக்கு முன்னால் ஸ்டூல் போட்டு தீர்த்தம் எல்லாம் பதவி சாகக் கொண்டுவந்து கொடுத்தார்கள். எனக்காக மாமி ஜவ்வரிசிப் பாயசம் பண்ணியிருந்தாள். சமையல் எல்லாம் சூப்பராக இருந்தது.

நான் சென்றபோது, கிழவர் வாசல் திண்ணையில் காலை அகட்டி உட்கார்ந்து கொண்டு பனை விசிறியால் கீழே விசிறிக் கொண்டிருந்தார். நெற்றி சுருங்கி விரோதமாகப் பார்த்துக்கொண்டிருந்தார். ''இருக்கறவனுக்கு ஒரு வேப்பம்பூ சாத்துமது கிடையாது. வரவா போற வாளுக்கெல்லாம் பால்பாயசம். கேக் கறவா கிடையாது இந்தாத்துல'' என்றார்.

''வாங்களேன் மாமா... உங்காம்தா&னெ? வாங்கோ, பாயசம் சாப்டலாம்'' என்றேன்.

''இந்தாத்திலயா? ஒரு திருஸ்தம் கூட எடுத்துக்கமாட்டேன்.''

வாத்தியார் ஜி.பி-யின் மனைவி வெளிப்படையாகப் பேசினாள். ''எவ்வளவு தூரம் பொறுத்துக்கறது? 'பொறுத்துப் போ'னு இவர் பாட்டுக்கு சொல்லிட்டுப் பள்ளிக் கூடம் போய்டறார். இருபத்துநாலு மணி நேரமும் இவர் கூட மல்லுக் கட்ட வேண்டியிருக்கு. ரெண்டு பொண் வயசுக்கு வந்துட்டா. அவா முன்னாலயே கோமணத்தை அவுத்துக் கட்டிக்கறேர். ரெங்கராஜுவை கூப்ட்டு திண்ணைல உக்காந்துண்டு சர்வாங்க க்ஷவரம் பண்ணிக்கறேர். சாக்லெட்டு, பப்பர்மிட்டுனு வாங்கி ஒளிச்சு வெச்சுக்கறேர். பாட சாலைப் பையன்களுக்குக் கொடுத்தாலும் கொடுப்பேர்... பேத்திகளுக்குக் கொடுக்க மாட்டேர். அதுகளைப் படிக்க வெக்கறதே அவருக்குப் பிடிக்கலை. என்னைக் கண்டா ஆகவே ஆகலை...''

''இதுக்கெல்லாம் ஆதாரமா ஒரு சம்பவம் அல்லது காரணம் இருக்கணும் மாமி.''

''இருக்கு. அதைச் சொல்லிட்டுத் தான் ரசாபாசமாய்டுத்து! எங்காத்தில எனக்கு நிறைய செஞ்சிருந்தா. அதை அவர் அலமாரில வெச்சுப் பூட்டியிருந்தார். மாமியார் போறவரைக்கும் அதை நான் பார்த்தேன். பண்டிகை நாளில் என்னை எடுத்துப் போட்டுக்கச் சொல்வா. மாமியார் தங்கமான மனுஷி. அவர் போனதும், இது எதோ தங்கை பொண்ணு கல்யாணத்துக்கு எடுத்துக் கொடுத் துடுத்து போல! பாலிஷ் போட்டு வெள்ளிப் பாத்திரத் தையெல்லாம் கொடுத்திருக் கேர். போனாப் போறது, சொல்லிருக்கலாமில்லையா? ரங்கநாதன் கிருபை இவரும் சம்பாதிக்கிறேர். ஒரே ஒரு தடவை எச்சுமிக்கு தோடு செஞ்சு போடலாம். 'அப்பா, அம்மா என் நகையெல்லாம் எங்க வெச்சிருக்கா?'னு கேட்டதுக்கு, ''நகையா... உன்னை எதிர்ஜாமீன் இல்லாம இலவசமா கல்யாணம் பண்ணிண்டோம். உங்காத்துல உனக்கு என்ன போட்டா? உங்கப்பன் ஏமாத்திட்டான்'னார்.

எனக்கே தெரியும்... எனக்கு எத்தனை கேஷா கொடுத்தா, வைர மோதரத்துக்கு, பட்டு வேஷ்டிக்குன்னு... எத்தனை நகை போட்டான்னுட்டு. அதை எடுத்துச் சொன்னப்ப எல்லாம் கவரிங்னார். 'இதை அப்பவே சொல்லியிருக்கறதுதா&ன?'ன்&னன். இவ்வளவுதாம்பா கேட்டேன். அதிலேர்ந்து என் மேலயும் என் பெண்கள் மேலயும் வெறுப்புன்னா வெறுப்பு அப்படிப்பட்ட வெறுப்பு. நின்னா குத்தம்.. உக்காந்தா குத்தம்...''

இந்தச் சம்பாஷணை முழுவதும் அவருக்குக் கேட்டிருக்கவேண்டும்.

திண்ணையிலிருந்து சத்தம் போட்டார்... ''எல்லாத்தையும் சொன்னியே, உன் நகை அத்தனையும் சப்ஜாடா நான் திருப்பித் தந்ததைச் சொன்னியா?''

இவள் ''மொத்தத்தில கால்பாகம் கூடத் திரும்ப வரலைப்பா. ரெட்டை வடம் சங்கிலி என்ன ஆச்சு, பச்சைக்கல் தோடு என்னாச்சு, பேசரி என்னாச்சு, ஒட்டியாணம், நாககொத்து என்ன ஆச்சு, வங்கி என்னாச்சு..?'' என்றாள்.

''பச்சைப்பொய். உங்களுக்கெல்லாம் என் கெட்ட குணம் மட்டும் தான் தெரியும். நல்ல குணம் எதும் கண்ணுக்கே தெரியாது.''

இவள் சன்னமாக ''நல்லது எதாவது இருந்தா சொல்லுங்கப்பா'' எனறாள்.

நான் இந்தச் சண்டை ஓயாது என்று புறப்பட்டு வந்துவிட்டேன். என் சமாதான முயற்சிகள் அத்தோடு முடிந்தன.

அடுத்த வாரம், புறக்கடையில் பாசி வழுக்கி விழுந்துவிட்டார் கிழவர். தொடை எலும்பும் இடுப் பிலும் முறிந்துபோய் ஜி.பி. அவரை புத்தூருக்கு அழைத்துப் போக, அங்கே இன்னமும் சீரியஸாகி, அப்புறம் தில்லைநகரில் அவரை அட்மிட் பண்ணி, மாற்றி மாற்றி வாத்தியாரும் மாமியும் பதினைந்து தினம் அவருக்கு வேளா வேளைக்கு சாப்பாடு எடுத்துக் கொண்டு போய்... ரொம்பக் கஷ்டப்பட்டுத்தான் நான் ஊருக்குக் கிளம்பும் முதல் நாள்தான் இறந்து போனார்.

இத்தனைப் பாடுபட்டதுக்கு ஜி.பி>க்கோ மனைவிக்கோ பேத்திகளுக்கோ எந்தவிதப் பயனும் இல்லை. சொத்து முழுவதையும் தொச்சு என்கிற துரைசாமியின் பேரில் எழுதி வைத்துவிட்டு, அவன் மேஜராகும் வரை > பதினெட்டு வயசு வரும் வரையில் வக்கீலை அந்தச் சொத்துக்கு கார்டியனாகப் போட்டு பதினெட்டாம் வயதில் அந்தச் சொத்து அவன் படிப்புக்கும் பராமரிப்புக்கும் போகவேண்டும் என்று எழுதி வைத்திருந்தார்.

பாடி எடுக்குமுன் துக்கம் விசாரிக்க அவர் வீட்டுக்குப் போய் திண்ணையில் சற்று மௌனமாக உட்கார்ந்திருந்தேன். உள்ளே பேத்தி ஒருத்தி மட்டும் 'தாத்தாஆஆஆ...' என்று அழுது கொண்டிருந்தது. உஞ்ச விருத்திக்கு அழைத்துச் சென்ற பாடசாலைப் பையன் ''மாமா, நாளைலருந்து வரவேண்டாமா? வேற எதாவது ஒத்தாசையா இருக் கே&ன!'' என்றான். ''இந்த ஆமே உன்னுதுரா'' என்றார் ஜி.பி. விசும் பலுடன். அவனுக்குப் புரியவில்லை. மாமிக்கு ஆத்து ஆத்துப் போயிற்று. ''என்ன பாவம் பண்ணோம்னு இந்தத் தண்டனை கொடுத் துட்டுப் போனார் கிழவனார். எங்கப் பாம்மா போட்ட நகை எங்கேனு கேட்டது ஒரு பெரிய தப்பா? அதுக்கு இத்தனை பெரிய தண்டனையா?''

ரங்கு ஜி.பி-யிடம் ''ஓய்... இது பிதுரார்ஜித சொத்து. அதை எழுதி வெக்க கிழத்துக்கு உரிமையே கிடையாது. கிறுக்குப் புடிச்சாப்ல இப்படியெல்லாம் வில் எழுதினா கோர்ட்டில ஒத்துக்க மாட்டா. சண்டை போட்டு வாங்கிடலாம்.''

ஜி.பி-தான் ''ரங்கு, நமக்கு எது உண்டு, எது இல்லைன்னு தீர்மானிக்கிறதெல்லாம் ஸ்ரீரங்கநாதன்தான்'' என்றார்.

அதன்பின் நான் அலகாபாத் போய்விட்டு கல்கத்தா, டெல்லி, அல்மோரா, பதான்கோட், கொலம்போ என்று சுற்றிவிட்டு ஆறு வருஷம் கழித்துதான் ஸ்ரீரங்கம் திரும்ப முடிந்தது. ரங்குவை முதல் காரியமாக விசாரித்தேன்... ''ஜி.பி. வாத்தியார் என்ன ஆனார் ரங்கு?''

''ஏன் கேக்கறே... ஸ்கூல்ல புதுசா ஹெட்மாஸ்டரை நியமனம் பண்ணிட்டா. ரெண்டு பேருக்கும் ஆகலை. நோட்ஸ் போடக் கூடாதுன்னு தடை பண்ணிட்டா. கோவிச்சுண்டு ரிஸைன் பண்ணிட்டேர். மணச்சநல்லூர்ல போய்ச் சேர்ந்தேர். அங்கயும் சரிப்பட்டு வரலை. சம்பளம் சரியா வரலை. அதுக்கப்புறம் நோட்ஸ் போட்டு விக்கறதும் பாழாப் போச்சு. இவர் போட்ட நோட்ஸையே காப்பி அடிச்சு இன்னொருத்தன் போட்டு அரை விலைக்கு வித்தான். அவன்மேல கேஸ் போடறேன்னு வக்கீல்கள்ட்ட காசு நிறைய விட்டேர். ஏறக்குறைய பாப்பர் ஆறநிலைக்கு வந்துட்டேர். சொத்தும் இல்லை. பத்ரிக்கு போறேன்னு காலை ஓடிச்சுண்டேர். மனசொடிஞ்சு போய்ட்டேர். அப்றம்...'' என்று ரங்கு பேச்சை நிறுத்தினான்.

நான் சன்னமாக, ''எதாவது விபரீதமா ரங்கு?'' என்றேன்.

''அதை ஏன் கேக்கறே... கடைசியா ரங்கநாதன் கண்ணைத் திறந்துட்டார்.

''எப்படி?''

‘‘மூத்த பொண்ணு எச்சுமி இருக்கு பாரு, தொச்சுவைக் கல்யாணம் பண்ணிண்டு டுத்து. எல்லாம் சரியாப் போய்டுத்து. உஞ்சவிருத்தி தேசிகாச்சாரி சொத்து மறுபடி ஃபேமிலிக்கே வந்துடுத்து!’’

‘‘அந்தப் பையன் அதிகம் படிச்சிருந் தானா?’’

‘‘எட்டாம் கிளாஸ்க்கு மேல படிப்பு ஏறலை...’’

‘‘இந்தப் பொண்ணு?’’

‘‘எம்.சி.ஏ.’’

நான் வியப்புடன் ‘‘எப்படிக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சது அந்தப் பொண்ணு... ஃபேமலிக்காக தியாகமா?’’

‘‘அதெல்லாம் இல்லை, காதல்!’’ என்றான் ரங்கு.

## 21. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - என் முதல் தொலைக்காட்சி அனுபவம்!



ஸ்ரீரங்கத்துக்கு டெலிவிஷன் அம்பதுகளிலேயே வந்துவிட்டது என்று சொன்னால் நம்பமாட்டீர்கள்! தெற்கு உத்தர வீதியில் ‘தி ரங்கநாதா ரேடியோ அண்ட் டெலிவிஷன் டிரெயினிங் இன்ஸ்டிடியூட்’ என்ற போர்டு திடீர் என்று தோன்றியது. ‘ப்ரொப்: அண்ணாசாமி ஸி அண் ஜி லண்டன்’ என்று அடி வரியில் இருந்தது. நான் அப்போது எம்.ஐ.டி>யில் எலெக்ட்ரானிக்ஸ் படித்துவிட்டு மூன்றாம் ஆண்டு கடைசி செமஸ்டரில் ப்ராஜெக்ட் படலத்தில் ஜாலியாக இருந்தேன்.

ரங்கு கடையில் இதுபற்றித் தீவிர சர்ச்சை நடந்தது. ‘‘இண்டியாவிலேயே டெலிவிஷன் கெடையாது. எப்டிரா ஸ்ரீரங்கத்தில் மட்டும் வரும்?’’

‘‘வரும்ங்கறாரே! அண்ணாசாமி சொல்றார்... அமெரிக்காவில் காட்டறது நமக்கும் தெரியறதாம்.’’

‘‘புளுகுடா. நீ என்னடா சொல்றே... எலெக்ட்ரானிக்ஸ் படிச்சிருக்கியே?’’

‘‘சான்ஸே இல்லை!’’ என்றேன்.

‘‘அவர் வந்தா கேட்டுருவமே.

பெரிய படிப்பெல்லாம் படிச்சிருக்காராமே... ஆள் எப்படி?’’

‘‘சுமார் முப்பது வயசிருக்கும். லேசா தொந்தி முன்&னற்க வழுக்கை. சம்பா சம்பான்னு ஒரு பொண்ணு. சித்துப் பண்ணி வெச்சாப்பல இருக்குமே, நீங்கள்ளாம் பயங்கரமா சைட் அடிச்சிண்டிருந்தீங்களே... அவளைக் கல்யாணம் பண்ணிண்டிருக்கார்’’ என்றான் ரங்கு.’’

‘‘அமெரிக்கால படிச்சிருக்காராம். அதனால வயசு வித்தி யாசம் ஜாஸ்தியா இருந்தாலும் ஒத்துண்டிருக்கா.’’

''இதைவிட அநியாயம் உண்டா ரங்கு?'' என்று தம்பு ஆத்துப் போனான். தம்பு ஒரு காலத்தில் சம்பாவைக் காதலித்தவன்.

ஒரு முறை தெற்கு வாசலுக்கு கோயில் வழியாகப் போகாமல் தெற்கு உத்தர வீதி வழியாகச் சென்றபோது, அந்த போர்டைப் பார்த்தேன். வாசலில் பையன்கள் கோடுகிழித்து வீதி கிரிக்கெட் ஆடிக் கொண்டிருந் தார்கள். பெரிய திண்ணையுள்ள அகலமான வீடு. போர்டு புதுசாக எழுதியிருந்தது. அதை வெளிச்சம் காட்ட பல்பெல் லாம் இருந்தது. நெற்றியில் எலுமிச்சை > பச்சைமிளகாய் வைத்துக் கட்டியிருந்தது.

''அது என்னடா ஸி அண்ட் ஜி? ஓமியோபதியா?'' என்றான் ரங்கு.

''இல்லை ரங்கு. சிட்டி அண்ட் கில்ட்ஸ்னு லண்டன்ல ஒரு இன்ஸ்டிடியூட் நடத்தற பரீட்சை. ஏ.எம்.ஐ.இ. மாதிரி இதும் ஒரு பரீட்சை. பாஸ் பண்ணியிருக்கலாம்.''

''அதில் டெலிவிஷன் எல்லாம் கத்துத் தருவாளோ?''

''இருக்கலாம். அதனால அப்படி போர்டு போட்டுண்டு இருக்கலாம். ஆனா, ஸ்ரீரங்கத்தில் டெலிவிஷன் கிடையாது; தெரியாது!''

அவரே ரங்கு கடைக்கு ஒருமுறை வந்திருந்தார். ''ரங்கு, இன்சுலேஷன் டேப் இருக்குமா?''

''இல்லை. அது கறுப்பா சேப்பான்னு கூட தெரியாது!''

''கறுப்பு. இதெல்லாம் கடைன்னா வாங்கி வெச்சுக் கணும்.''

''எப்படி இருக்கும்?''

''தொட்டா ஒரு பக்கம் ஒட்டிக்கிறா மாதிரி இருக்கும். ஒயருக்கு கனெக்ஷன் கொடுக்கறப்ப, ஷாக் அடிக்காம இருக்க டேப் சுத்தணும்.''

ரங்கு தன் தொழில்நுட்ப அறிவை அதற்குமேல் விருத்தி செய்ய விரும்பவில்லை.

''அண்ணாசாமி... என்னமோ சொல்றா, உங்காத்தில டி.வி>யெல்லாம் இருக்காமே?''

''ஒரு தடவை வந்து பாரேன்...''

''நான் எங்க கடையை விட்டுட்டு வரது!''

''ஆமா, வியாபாரம் அப்படியே தட்டுக்கெட்டுப் போறது. ஈ ஓட்டிண்டிருக்கான். போய்ப் பார்த்துட்டுத்தான் வரலாமே!'' என்றான் தம்பு. அவனுக்கு சம்பாவை பார்க்க வேண்டும்.

''சம்பா சௌக்கியமா மாமா?''

‘‘டேய்! மாமா இல்லைடா அவர். சரி அண்ணா வரேன். அதென்னதான் சமாசாரம்னு புரியறா மாதிரி சொல்லும். என்னவோ பேசிக்கிறா... அம்மணக்குண்டி பொம்மையெல்லாம் தெரியறதாம்!’’

‘‘சேச்சே... அதெல்லாம் இல்லை!’’

‘‘பின்ன என்னதான் வெச்சிருக்கீர்?’’

‘‘எதிர்காலத்தில இண்டியா வுக்கு டெலிவிஷன் வரத்தான் போறது. இப்பவே டெல்லில பரீட்சார்த்தமா ஆரம்பிச்சிருக்கா. அது நாடு முழுக்கப் பரவினதும் டி.வி. ரிப்பேர் செய்ய நெறைய பேர் தேவைப்படுவா. அதை எதிர் கொள்ள நம் இளைஞர்களைத் தயார் பண்ணப் போறேன். இப்பவே சேந்தா சலுகைல கத்துத் தருவேன்.’’

‘‘எத்தனை?’’ என்றான் ரங்கு.

‘‘அவாவா வசதிக்கு ஏத்தாப்பல.’’

‘‘இதா&ன வேணாங்கறது. சில்றை எத்தனை... கரெக்டா சொல்லுமேன்.’’

‘‘ஏழையா இருந்தா இலவசமா கூட சொல்லித் தருவேன். முதல் பாடம் ஃபண்டமெண்டல்ஸ் ஆஃப் டெலிவிஷன், எல்லாருக்கும் இலவசம்!’’

‘‘பொம்மை தெரியுமா?’’

‘‘கட்டாயம்.’’

ரங்கு என்னைப் பார்த்தான். ‘‘நான்கூட சேரலாம் போலி ருக்கே. தம்பு சேர்றியா?’’

‘‘ஒரு நாள் போய்த்தான் பார்க்கணும்டா!’’ என்றான். ‘‘உன்னைக் கேட்டா டி.வி. கிடையாதுங்கறே?’’

எம்.ஐ.டி>யில் மூன்றாம் வருஷத்தில் எனக்கு பாடத்தில் டி.வி. உண்டு. அது வி.எச்.எஃப். அலைவரிசையைப் பயன்படுத்துவதும் லைன்ஆஃப் சைட் பற்றியும் படித்திருக்கிறேன். அதை ரங்குவுக்கு விவரிக்க முற்பட்டேன்.

''எல்லாம் சரி. நீ நிஜ டி.வி. பார்த்திருக்கியா?''

நிஜ டி.வி-யை ஒரு தடவைதான். சென்னைப் பல்கலைக்கழகத்தின் பொன்விழாக் கண்காட்சியின்போது பிலிப்ஸ்காரர்கள் கிண்டி இன்ஜினீயரிங் காலேஜில் ஒரு க்ளோஸ் சர்க்யூட் டி.வி. வைத்திருந்தார்கள். ஒரு ரூமில் காமிரா, மறு ரூமில் ரிசீவர் வைத்திருந் தார்கள். வந்திருந்த பெண்களையெல் லாம் காட்டினார்கள். கூட்டம் அலைமோதியது. ஒரு மணி நேரம் காத்திருந்ததால் திடுக்கிட்ட முகங்கள் தெரிந்தன.

ரங்குவுடன் தெற்கு உத்தர வீதிக்கு ஒரு நாள் சாயங்காலம் போயிருந்தேன். வாசலில் தெற்குச் சித்திரை வீதியுடன் பென்சில் மாட்ச் ஓடிக் கொண்டிருந் தது. நாங்கள் போனபோது பால்காரன் வந்து மடியில் தண்ணியடித்து பால் கறப்பதற்காக உருவிக் கொண்டிருந் தான். இடைவேளை விட்டிருந்தார்கள்.

அண்ணாசாமி, ''வாங்க வாங்க... சம்பா காபி போடு!'' என்று வரவேற் றார். உத்தர வீதிக்கு சாதாரணமாக நாங்கள் அதிகம் போகமாட்டோம். அவை எல்லாம் எங்களுக்கு அரைவீதிகள். ஒரு பக்கம்தான் வீடு. எதிர்ப்பக்கம் கோயிலின் மதில். முள்ளுச் செடியாக இருக்கும். எத்தனைதான் சொன்னாலும் யாராவது ஒருவர் அல்பசங்க்யைக்கு ஒதுங்கிவிடுவார்கள். மேலும் அந்த நாட்களில் மதில் சிதில நிலையில் இருந்ததால், தலைமேல் விழுந்துவிடும் பயமும் இருந்தது. ஆனால், கிரிக்கெட்டுக்கு ஒரு சாரி இல்லாததால் ஏகாந்தமான இடம்.

''மாமா மண்டி போட்டுண்டு க்ளான்ஸ் பண்றப்ப மார்ல பட்டா எல்.பி. கொடுக்கலாமா மாமா?'' என்று என்னை ஒரு சிறுவன் வந்து கேட்டான்.

எனக்கு உட&ன சொல்லத் தெரிய வில்லை. அண்ணா, ''வாங்க வாங்க'' என்று வரவேற்று, சலுகையாக பனியன் போட்டுக் கொண்டார். உள்ளே சென்றோம்.

''ஈயம் பூசறீங்களா என்ன?''

''இல்லை சால்டிரிங்'' என்றார்.

ஒரு ரேடியோ கவிழ்த்துப் பிரிக்கப்பட்டு, உள்ளே கசகச வென்று பார்ட்டுகளுடன் கிடந்தது. அதன் ஐ.எஃப். டிரான்ஸ்ஃபார்மரை ஒரு குட்டிப் பையன் பலகை மேல் நின்று சீண்டிக் கொண்டிருந் தான்.

என்னவோ சத்தங்கள் கேட்டன.

இந்த ஓரத்தில் நிர்வாணமாக ஒரு ஸ்பீக்கர் வைத்து, ரேடியோவின் பல பாகங்கள் பரவலாக இருக்க... விந்தையாக அதில் கரகரப்ரியாவில் ஒரு மாமி 'பக்கல நிலபடி' பாடிக் கொண்டிருந்தாள். 'ஆர்.எஃப். ஆம்ப்ளிஃபையர்' வெச்சா எல்லா ஸ்டேஷனும் கேக்கும்!'' என்றார் அண்ணா.

''எங்கய்யா உம் டெலி விஷன்?''

ஜமக்காளத்தால் மூடியிருந்த ஒரு வஸ்துவைக் காட்டினார். ''அதுக்குள்ள இருக்கு. பசங்க கிரிக்கெட் ஆடிண்டிருக்கான்... முடிக்கட்டும். பந்து அடிச்சா பிக்சர் டியூபு உடைஞ்சுடும்!''

''அதுல பொம்மை தெரியுமா?'' என்றான் ரங்கு.

''ஆமா.''

''என்ன புருடா விடறீர்?'' என்று என்னைப் பார்த்தான். ''ஏய் நீ பொம்மை வராதுன்னுதா&ன சொல்றே?''

''ஆமா...'' என்றேன்.

''டி.வி. ஸ்டேஷ&ன இல்லாம எப்டி ஓய் பொம்மை தெரியும்? இப்ப ரேடியோவுக்கு, ரேடியோ ஸ்டேஷன் வேணும். டி.வி-க்கு டி.வி. ஸ்டேஷன் வேணுமா, இல்லையா... நீ என்னடா சொல்றே?''

''நிச்சயம் வேணும். நான் படிச்சபடி நிச்சயம் வேணும்!'' என்றேன்.

அண்ணா என்னைப் புன்னகையுடன் பார்த்தார். ''அவ்வளவுதான் நீ படிச்சது. நீங்கள்ளாம் ஏட்டுச்சுரைக் காய். டெர்மன் போட்டிருக் கறதை அப்படியே நெட்ரு. நான் பிராக்டிக்கல். இந்த ரேடியோவைப் பார்த்த இல்லை... இது முழுக்க நா&ன அசெம்பிள் பண்ணது. டிரான்ஸ்ஃபார்மர் நா&ன சுத்தினது. டிராக்கிங், அலைன்மெண்ட், ட்யூனிங் எல்லாம் நான் பண்ணது. உன்னால முடியுமா சொல்லு! எங்கிட்ட ஹாம் லைசென்ஸ் இருக்கு.''

நான் பிடிவாதமாக, ''டி.வி. ஸ்டேஷன் இல்லாம டி.வி. தெரியாது!'' என்றேன்.

''அப்டின்னு நினைச்சிண்டிருக்கே. நீ கத்துக்க வேண்டியது நிறைய இருக்குப்பா.''

ரங்கு, ''ஓய் அவன் டி.வி. எல்லாம் படிச்சவன். எதுக்கு ஊரை ஏமாத்திண்டு, வாண்டுப் பசங்களுக்கெல்லாம் டி.வி. சொல்லித் தரேன்னு, ஒரொரு கிளாஸுக்கும் அஞ்சு ரூபா வாங்கறிராமே?''

''ரங்கு, நான் கொடுக்க வசதியுள்ள வாகிட்டதான் வாங்கறேன். என் கரிகுலம் பாரு முதல்ல. டி.வி. ப்ரின்சிப் பிள். அப்புறம் பிராக்டிக்கல். சால்டரிங், பென்ச் வைஸ், கார்ப்பெண்டரி அப்புறம் காயில் சுத்தறது. பார்க் ரேடியோ, பஞ்சாயத்து ரேடியோவெல் லாம் ரிப்பேருக்கு இங்கதான் வரது.''

நான் பிடிவாதமாக ''டி.வி. ஸ்டேஷன் இல்லாம டி.வி. தெரியாது!'' என்றேன்.

''முதல்ல அது என்ன பெட்டி... காட்டும். பார்த்தா நெல்லு கொட்டற பீப்பா மாதிரி இருக்கு.''

அண்ணாசாமி மிகுந்த கோபத்துடன் ‘‘அரைகுறையா படிச்சவா, சந்தேகப் படறவா, கேலி பண்றவாளுக்கெல்லாம் செட்டை காட்டமாட்டேன். ஒஸ்தி செட்டு இது. ஆர்.ஸி.ஏ. தெரியுமா?’’

‘‘காட்றதுக்கு எதும் இல்லைன்னு அர்த்தம்!’’

‘‘என்னவேணா நினைச்சுக்கோ.’’

சம்பா எல்லோருக்கும் வெள்ளி தம்ளரில் காபி கொண்டுவந்து வைத்தாள்.

தம்பு, ‘‘என்ன சம்பா சௌக்யமா?’’ என்று வாத்சல்யமாக விசாரித்தான். ‘‘பழசெல்லாம் ஞாபகமிருக்கா?’’ அண்ணா அதை ரசிக்கவில்லை.

‘‘சம்பா நீ உள்ளபோ!’’ என்றார்.

சம்பா ஏறக்குறைய அவர் மகள் போல இருந்தாள்.

நாங்கள் வெளிவந்தபோது அந்த எல்.பி.டபிள்யூ. தீர்மானத்தில் மாட்ச் கலைக்கப்பட்டுவிட்டது.

தம்பு ஆத்து ஆத்துப் போனான். ‘‘இந்த சம்பாவுக்கு நான் கொடுத்த லெட்டர் எல்லாம்... அவ போட்ட பதில் எல்லாம் காட்டினா ரசாபாசமாய்டும். போனாப் போறதுன்னு விட்டுக் கொடுத்தேன்’’ என்றான்.

‘‘சும்மார்றா! பழசெல்லாம் கிளறாதே.’’

ஒரு காலத்தில் தம்புதான் சம்பாவைக் கல்யாணம் செய்து கொள்வதாக நிறையப் போக்குவரத்தெல்லாம் இருந்தது. அவளுக்கோ இவனுக்கோ செவ்வாய் தோஷம் என்று கல்யாணம் நின்றுவிட்டதாம். மேலும் தம்பு அவ்வளவு வசதி யுள்ளவன் இல்லை. ஒரு வருஷம் சன்யாசியாகப் போகிறதாக யோசித்துவிட்டு ஸ்ரீனிவாச நகரில் ஜெயலக்ஷ்மி என்ற அடக்கமான பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு விட்டான். அடுத்தடுத்து இரண்டு பெண் குழந்தைகள். இருந்திருந்தால் என்னைவிட ரெண்டு வயதுதான் மூத்தவன்.

‘‘சில பேருக்கு அதிர்ஷ்டம்டா!’’ என்றான் தம்பு பொதுப்படையாக. டி.வி. சர்ச்சை அத்துடன் ஓயவில்லை. அண்ணாசாமி கடைக்கு வரும்போதெல்லாம் தம்பு அவரைப் பரிகாசம் செய்துகொண்டிருந்தான்.

‘‘என்ன அண்ணா... டி.வி. நன்னாத் தெரியறதா? அமெரிக்காகாரன் கப்பல் கார்ல போறதெல்லாம் தெரியறதாமே!’’

அண்ணாசாமி, ‘‘நம்பாதவாளுக்கு ஒண்ணும் தெரியாது. பகவான் மாதிரி அது. என்ன சொன்னாலும் நம்ப வைக்க முடியாது!’’ என்றார்.

‘‘மாடிபூரா ஏரியல் போட்டிருக் கீராமே... துணி உலத்தவா?’’

‘‘ஆமா யாகி அர்ரே. உங்களுக் கெல்லாம் சொன்னா புரியாது!’’ என்று டெக்னாலஜியை முகத்தில் வீசினார்.

அவர்போனதும், ‘‘யாகி அர்ரேன்னா என்னடா? என்ன புருடா விடறான்பாரு மனுஷன்!’’

‘‘இல்லை ரங்கு. அந்த மாதிரி ஒரு அர்ரே இருக்கு. சிக்னல் வீக்கா இருந்தா அதை அதும் பக்கம் திருப்பினா வாங்கிக்கும் > ஏரியல் மாதிரி.’’

‘‘அப்ப அவர் சொன்ன மாதிரி டி.வி. தெரியும்ங்கறே?’’

‘‘சான்ஸே இல்லை! சிக்னல் இருந்தாத்தா&ன?’’

‘‘அமெரிக்காகாரன் அனுப்பறது?’’

‘‘அதெல்லாம் இவ்வளவு தூரம் கடல் தாண்டி வராது ரங்கு’’ என்றேன்.

ஒரு நாள் ராத்திரி பத்தரைக்கு ரங்குகடையில் மூணுபேர் அலமாரிக்குப் பின்னால் ஜிஞ்சர் அடித்துக் கொண்டிருந்தபோது கடைக் கதவை மூடும் சமயம் அண்ணாசாமி சைக்கிளில் வந்து இறங்கி, ‘‘வாங்கடா எல்லாரும்!’’ என்றார்.

‘‘என்ன ஓய் பதற்றமாயிருக்கீர்? ஒரு ஜி.பி. அடிச்சுட்டுப் போமேன்’’ என்றான் தம்பு.

‘‘எல்லாரும் டி.வி. தெரியாது தெரியாதுன்னு பரிகாசம் பண்ணிங் களே... உட&ன வாங்க எங்காத்துக்கு.’’

‘‘என்ன தெரியறதா?’’

‘‘அச்சுக் கொட்டினாப்பல தெரியாது. ஆனா, தெரியறது!’’

‘‘வாடா இன்ஜினீயர்!’’ என்று என்னையும் விளித்தார். எனக்கு வியப்பாக இருந்தது. ‘‘திஸ் இஸ் நாட் பாஸிபிள்’’ என்றேன். அவர் வீட்டுக்குப் போனோம். மாடியில் எடுத்துக்கட்டி ஜன்னல் வழியாக சம்பா டார்ச்லைட்டை வைத்துக் கொண்டு மொட்டை மாடியில் நின்று கொண்டிருந்தாள் மாடிபூரா பரவியிருந்த அந்த ஏரியலை இவர் சொல்லச் சொல்ல மொத்தமாகத் திருப்பிக் கொண்டிருந்தாள்.

இங்கே கீழே கூடத்தில் ஒரு கறுப்பு > வெள்ளை டி.வி. இருந்தது அதில் மணல் ஓடிக் கொண்டிருந்தது.

‘‘சம்பா டியர்... திருப்பு திருப்பு!’’ என்றார்.

அவள் ‘‘தெரியறதா... தெரியறதா?’’ என்று கேட்டுக்கொண்டே மாடியில் ஏரியலைத் திருப்பினாள். ஒரு கணத்தின் பிரிவில் அந்தத் திரையில் ஒரு பிம்பம் தெரிந்தது. ஒரு பெண் பேசிக் கொண்டிருந்தாள். என்ன பாஷை தெரியவில்லை.

''நிறுத்து... நிறுத்து! அங்கதான் அங்கயேதான்'' என்று இங்கிருந்து சத்தம் போட்டார்.

''ரங்கு! இப்ப என்ன சொல்றே?''

''பஜ்னுதான் இருக்கு... ஆனா, மூஞ்சி தெரியறது.''

''டி.வி>யே வ்தெரியாதுன்னிங்களே... உங்க எக்ஸ்பர்ட் என்ன சொல்றார் இப்ப?'' என்று என்னைப் பார்த்துக் கண்ணடித்தார்.

நான், ''இப்போதைக்கு ஒண்ணும் சொல்றதுக்கில்லை எங்க புரொபசரைத்தான் கேக்கணும்'' என்றேன்.

''எதையும் இப்படி அலட்சியமா பேசப்படாது. இன்னம் அர்ரே எலிமெண்ட்ஸ் போட்டா நன்னாவே தெரியும். அதும் ராத்திரி ஆக ஆக... போகப் போக...''

மேலேயிருந்து சம்பா, ''போருமா... இன்னும் திருப்பணுமா?'' என்றாள்.

''சம்பா, போதும் கீழ வா! எல்லாருக்கும் பயத்தஞ்கஞ்சி கொடு'' என்று இவர் சொல்ல, மேலேயிருந்து தொபுக்கடீர் சப்தமும் ஐயோ சத்தமும் கேட்டது.

சம்பா எடுத்துக்கட்டிலிருந்து சுமார் பதினைந்து அடி விழுந்துவிட்டாள்.

அவளை கைத்தாங்கலாக நொண்டிக்கொண்டே அழைத்து வந்தோம். ''பார்த்து நடக்கக்கூடாதோ?'' என்றார். அவள் கால் சிவப்பாக இருந் தது. செமையாக வீங்கியிருந்தது. நிறைய வலித்திருக்கவேண்டும். தம்பு கண்ணீர் விட்டான்.

''என்ன ஒய்... எங்க ஊர் பொண்ண மாடியெல்லாம் ஏறவிட்டு பாடாப் படுத்தறீர். கொடுமைப் படுத்தறீர்!''

''உனக்கு என்னடா ஆச்சு?'' என்றார்.

''என்ன 'டா'வா? நாக்கை அடக்கிப் பேசும். எல்லா வண்டவாளத்தையும் வெளிலவிட்டா நாறிப்போய்டும்.''

''என்ன வண்டவாளம்... அவ என் பெண்டாட்டி. அவளை நான் என்ன வேணா செய்யச் சொல்வன். அதைக் கேக்க நீ யாரு?''

சம்பா, ''போருமே... போருமே...'' என்றாள்.

''நான் யார்றா? ரங்கு... சொல்றா நான் யாருன்னு!''

''தம்பு நீ வாடா! அப்றம் பேசலாம்.''

''இவர் கேக்கறதைப் பாரு! நான் யாரா...'' தம்பு, ரங்கு கடையில் ஜிஞ்சர்பரிஸ் போட்டிருந்தான். சுருதி ஏறியிருந்தான். நாக்கு தொளதொளத்து விட்டது.

''நான் யாரு... சொல்றன். இதே சம்பா, இதேசம்பா... எனக்கு மொத்தம் எத்தனை லெட்டர் எழுதிருக்கா தெரியுமா? காட்டட்டுமா... நான் எத்தனை எழுதிருக்கேன் தெரியுமா?''

அந்தக் கணத்தில் காலம் நின்று போகப் போகிறது என்றுதான் நான் எதிர்பார்த்தேன். இல்லை!

''எல்லா பைத்தியக்கார லெட்டரை யும் சம்பா கல்யாணத்துக்கு முன்னாடியே சொல்லிட்டா... காட்டிட்டா... போடா!'' என்றார்.

கடைசி செமஸ்டருக்கு எம்.ஐ.டி>க்கு சென்னைக்கு திரும்ப வந்தபோது பேராசிரியர் சோமயாஜுலுவை சந்தேகம் கேட்டேன். ஸ்ரீரங்கத்தில் அன்றிரவு டி.வி. தெரிந்தது எப்படி என்று கேட்டேன்.

அவர், ''அதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. டக்ட் (க்ஷயுஷபீ) ப்ராபகேஷன் என்று சில வேளை கடலின் இன்வர்ஷன் லேயர் இருக்கும்போது வேவ்கைடு மாதிரி ஃபார்ம் ஆகும் வி.எச்.எஃப். சிக்னல்கள் ஆயிரக் கணக்கான மைல்கள் கூட கடந்து வரும். அனாமலஸ் ப்ராப கேஷன் என்பார்கள். நீ பார்த்தது தெற்காசிய நாடுகளில் எதாவது ஒரு டி.வி>யாக இருக்கலாம்'' என்றார்.

ரங்கு இப்போதும் அதை ரங்கநாதன் கிருபை என்றுதான் சொல்கிறான்.

# 22. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - வேதாந்தம்



பாரில் நின் பாதமல்லால் பற்றிலேன் பரம மூர்த்தி - தொண்டரடிப்பொடி

ஒரு காலகட்டத்தில் மத்தியிலும் மாநிலத்திலும் காங்கிரஸ் ஆட்சியில் (சாஸ்திரி, பக்தவத்சலம்) இருக்கும்போது இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது தமிழகத்தில். துப்பாக்கிச் சூடு, கடையடைப்பு, ராணுவம் வந்து ரகளை எல்லாம் இருந்தது. ஸ்ரீரங்கத்திலும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் எதிரொலிகள் இருந்தன. கீழ உத்தர வீதியில் இருந்த நரசிம்மாச்சாரி என்னும் இந்தி வாத்தியாருக்கு வேலை போய்விட்டது. ரங்கு அவருக்கு ''ஒய் இனிமே 'லட்கா, லட்கி, யஹ் கலம் ஹை, தவாத் ஹை'ன்னு எதாவது குதிரை ஒட்டினீர்... கையை ஒடிச்சுருவா. பேசாம கொஞ்ச நாளைக்கு தொன்னை தச்சுண்டு, வாழைப்பட்டை உரிச்சுண்டு இரும். கலகமெல்லாம் அடங்கறவரைக்கும் லீவு எடுத்துண்டு ஆத்திலயே இரும்!'' என்று அவருக்கு அறிவுரை வழங்கினான்.

''என்னடா ரங்கு! ஜீவனத்துக்கு எங்கே போவேன்?'' என்று அழாக் குறையாகக் கேட்டார். நரசிம்மாச்சாரிக்கு இந்தி தவிர வேறு எதுவும் சொல்லித்தரத் தெரியாது. இவருக்கு முன் இருந்த பாச்சா இந்தி எதிர்ப்பை எதிர்பார்த்துச் சட்டென்று மேத்தமட்டிக்ஸூக்கு மாற்றிக் கொண்டார். சாரியை வாத்தியாராக வைத்துக்கொள்வதே சலுகைதான் என்று ஹெட்மாஸ்டர் சொன்னாராம். ரொம்ப ரொம்பக் கிட்டப்பார்வை. பகலில் பசுமாடு தெரியாது. பூதக்கண்ணாடி போன்ற சோடாபுட்டிக் கண்ணாடி போட்டும் புத்தகங்களை முகத்துடன் தொட்டுக் கொண்டுதான் படிக்க முடியும். பையன்கள் விஷமம் செய்தால் பொதுவாக அந்த திக்கைப் பார்த்து அதட்டுவார். யார் என்று அவருக்குத் தெரியவே தெரியாது. ''அங்க என்னடா சத்தம்?'' என்று மட்டும் கேட்பார். விஷமம் செய்யும் மாணவர் களைக் கிட்டத்தில் வந்தால்தான் அடிக்க முடியும். அவர்கள் சற்று துரத்தில் நின்றுகொண்டே சமாளிப்பார்கள். வீட்டில் கஷ்ட ஜீவனம்.

நான் அப்போது சிவில் ஏவியேஷனில் ஏ.டி.சி. ஆபீஸராக சென்னை மீனம்பாக்கத்தில் சேர்ந்திருந்தேன். தற்காலிகமாகத் திருச்சியில் போஸ்டிங். ஸ்ரீரங்கத்திலிருந்து செம்பட்டுக்கு தினம் ஜீப்பில் செல்வேன்.

இந்தி எதிர்ப்பால் பள்ளிகளுக்கு காலவரையறையின்றி லீவு விட்டிருந்தார்கள். இந்தி வாத்தியாரை வேலை நீக்கம் செய்தாகி விட்டது என்று நோட்டீஸ் போர்டில் போட வேண்டியிருந்தது. 'இல்லையேல், பள்ளி கொளுத்தப்படும். எச்சரிக்கை!' என்று போராட்டக்குழு அறிவித்திருந்தது. இந்தப் போராட்டக்குழுவில் ஸ்ரீரங்கத்து மூஞ்சிகள் யாரும் இல்லை. அது ஏதோ அந்நியப் படையெடுப்பு போல. எப்ப வருவார்கள், எப்பப் போவார்கள் என்று சொல்ல முடியவில்லை!

''பாவம்டா நரசிம்மாச்சாரி. எதாவது பண்ண முடியுமா பாரு... ஏதாவது உங்க ஆபீஸ்ல கிடைக்குமா பாரு.''

''இந்தி வாத்தியாருக்கா? ஏரோட்ரோம்லயா... என்ன விளையாடறியா?''

ரங்கு என்னிடம், ''நீ வேணா வேதாந்தம் கிட்ட சொல்லிப் பாரேன். உனக்கு ஃப்ரெண்டுதா&ன? ஏதாவது ஏற்பாடு பண்ண முடியுமான்னு பாரு. வீட்டில குந்துமணி அரிசிகூட இல்லைங்கறார். எங்க பார்த்தாலும் கடன். எனக்கே நூத்தம்பது பாக்கி!''

வேதாந்தம், ஸ்ரீரங்கத்தின் ஆர்.எஸ்.எஸ். சாகையின் தலைவன். அந்தக் கால ஆர்.எஸ்.எஸ். பற்றி கொஞ்சம் சொல்கிறேன். ஒரு காலத்தில் என்னை ஆர்.எஸ்.எஸ்-ஸில் சேர்ப்பதற்குத் தீவிர முயற்சிகள் நடந்தன. காலேஜில் கெமிஸ்ட்ரி வாத்தியார் ஆர்.எஸ்.எஸ்-ஸில் சேர்ந்தால் நிறைய மார்க் போடுகிறார் என்று கேள்விப்பட்டேன். நான் கெமிஸ்ட்ரியில் வீக். அதனால் ஒருநாள் போய்த்தான் பார்க்கலாமே என்று காலை முனிசிபல் லைப்ரரி பக்கத்தில் - இப்போது அதை நேத்தாஜி சாலை என்று சொல்கிறார்கள் - போனால் மைதானத்தில் எல்லாம் சம்ஸ்கிருதத்தில் கட்டளைகளாக இருந்தன. பையன்கள் காக்கி டிராயர் அணிந்துகொண்டு ஒல்லிக்கால் தெரிய தய்னா பாய்னா பண்ணிக் கொண்டிருந்தார்கள் 'நமஸ்தே சதா வத்ஸலே மாத்ருபூமி' பாடினார்கள். சிலர் கம்பு வைத்திருந்தார்கள். ஒரு சில தலைவர்களுக்கு விசில் இருந்தது.

மாமா மாமாவாக உள்ளவர் களெல்லாம் பனியனும் தொப்பை மேல் அரை டிராயரும் போட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்துச் சிரித்துவிட்டேன். அதனால் நான் வரிசையிலிருந்து நீக்கப்பட்டேன். மேலும் அதிகாலையில் எழுந்து போவது சிரமமாக இருந்தது. ஏனோ பாட்டியும் நான் சங்கத்தில் சேருவதை அங்கீகரிக்கவில்லை!

வேதாந்தம் இப்போது பார்த்தாலும் ''ஆர்.எஸ்.எஸ்-ல சேராம டபாச்சுட்ட பாரு...'' என்று விசாரிப்பான். அவன் வந்தால் ஒளிந்துகொள்வேன்.

இப்போது நரசிம்மாச்சாரிக்காக வேதாந்தத்தை பார்க்கப் போக வேண்டியிருந்தது.

''இந்தி வாத்தியாரை பள்ளிக் கூடத்தை விட்டு டெம்பரரியா நீக்கிட்டா வேது. பாவம் ரொம்பக் கஷ்டப்படறேர். அவரைக் காப்பாத்த வேற வழியிருக்கா?'' என்று கேட்டேன்.

அவன் யோசித்து, ''நரசிம்மாச்சாரிக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?''

''சும்மா... மனிதாபிமானம்தான்!''

''மனிதாபிமானமா... இல்லை அவாத்தில் மூணு பெண்ணு இருக்கே, அதில ஏதாவது...''

''சேச்சே நான் அவாத்துப் பக்கம் போனதே இல்லை. அவள்ளாம் கறுப்பா சேப்பான்னுகூட தெரியாது!'' என்றேன்.

‘‘எல்லாம் சேப்பு. பாக்க நன்னாவே இருக்கும்பா. ஒண்ணு பண்றேன்... தக்ஷிண் பாரத் இந்தி பிரசார் சபாவிலிருந்து ஒரு வியக்தி என்னைப் பார்க்க வருவார். அவர்கிட்ட சொல்லி பிரைவேட்டா ஏதாவது ஏற்பாடு பண்ண முடியுமான்னு பார்க்கறேன். எதுக்கும் சாரியை இந்தில எதும் உளறாம இருக்கச் சொல்லு. ஊரே கொல்லுன்னு போச்சு. அவனவன் கர்ச்சீப்பை தலைல கட்டிண்டு அரியலூர் வரைக்கும் போய் ரயில்வே ஸ்டேஷன்லாம் இந்தி எழுத்துக்களை தார் போட்டு அழிச்சுட்டு வரான். ஒரு ஸ்டேஷன் அழிச்சா நாற்பது ரூபாயும் பொட்டலமும் தராங்க. நான்கூட பிக்ஷாண்டார் கோயிலுக்கு தார் டின்னோட போ&னன். அதுக்குள்ள யாரோ அழிச்சுட்டான்!’’

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் முக்கிய அங்கம் அது. மைய அரசின் அலுவலகங்களில் இந்தியில் எழுதியிருப்பதை தார் பூசி அழிப்பது. அனைத்து போஸ்ட் ஆபீஸ்களிலும் ரயில்நிலையங்களிலும் கிடைத்த அத்தனை போர்டுகளையும் அழித்து ரோடு போட தார் இல்லாமல் பண்ணிவிட்டார்கள். இனிமேல் அழிக்கவேண்டுமானால் புதுசாக போர்டு எழுதினால்தான் உண்டு என்று பண்ணிவிட்டார்கள். ‘இந்தி ஒழிக... தமிழ் வாழ்க’ என்று மதில் எல்லாம் எழுதி ரங்கராஜா டாக்கீஸ் ‘அன்னையின் ஆணை’ பட போஸ்டர் ஒட்ட முடியாமல் - இடமே இல்லாமல் போய்விட்டது.

ஸ்ரீரங்கத்தில் பெண்கள்தான் அதிகம் இந்தி படித்தார்கள். எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்துவிட்டு திருச்சிக்கு காலேஜ் அனுப்பப்படாத பெண்கள் கல்யாணத்துக்குக் காத்திருக்கும்போது தையல் கிளாஸ், பாட்டு கிளாஸ், டைப் கிளாஸ் இவற்றுடன் இந்தி கிளாஸூம் போய் வந்தனர். அதற்கான சான்றிதழ்களை இந்தி பிரசார சபா கொடுத்துவந்தது. ப்ராத்மிக், மத்யமா, ராஷ்டிரபாஷா என்று எம்.ஏ. லெவல் வரைக்கும் படிக்கலாம். இந்த பரீட்சைகள் எல்லாம் ஒத்திப் போடப்பட்டிருந்தன. திருச்சி கெயிட்டி, ஜூபிடர் போன்ற தியேட்டர்களில் இந்திப்படம் காண்பிப்பதை நிறுத்தி ‘நீச்சலடி சுந்தரி’ என்று டப்பிங் படம் போட் டார்கள். உணர்ச்சிக் கொந்தளிப்பு வேளை. எங்களுக்கெல்லாம் ஓ.பி. நய்யாரின் இசை ரொம்பப் பிடிக்கும். ‘மிஸ்டர் அண்டு மிஸஸ் 55’, ‘ஆர்பார்’ போன்ற படங்களில் ‘ஆயியே மெஹரபான், ஹூன் அபிமே ஜவான்’ போன்ற பாடல்களை அர்த்தம் புரியாமல் பாடிக் கொண்டிருப்போம். இப்போது அவற்றை கிராமபோனில் கேட்பதை கொஞ்ச நாளைக்கு ஒத்திப்போட்டோம்.

தக்ஷிண் பாரத் இந்தி பிரசார் சபாவிலிருந்து ஷர்மா வந்திருந்தார். அவரிடம் நரசிம்மாச்சாரியின் வேதனையை வேதாந்தம் சொல்லி அழைத்துச் சென்றான்.

அவர், ‘‘நீங்கள் செய்யும் சேவை மகத்தானது. சபாவிலிருந்து உங்களுக்கு அரைச் சம்பளமாவது தரச்சொல் கிறேன். தனிப்பட்ட முறையில் பாடங் கள் நடத்த, படிக்கக் குடிமக்களுக்கு உரிமை இருக்கிறது. இங்கிலீஷ் கற்பதில்லையா? பிரெஞ்ச் கற்பதில் லையா... அதுபோல் ஒரு மொழியைக் கற்பதற்கு யாரும் ஆட்சேபணை தெரிவிக்க முடியாது!’’ என்று தைரியம் சொல்லிவிட்டு நரசிம்மாசாரி சாப்பாட்டுக்குக் கஷ்டப் படுதாகச் சொன்னபோது, ‘‘தா&ன தா&ன மே நாம் லிக்கா ஹை (ஒவ்வொரு தானியத்திலும் பெயர் எழுதியிருக்கிறது)’’ என்று பழமொழி சொன்னார்.

‘‘அதெல்லாம் சரி. இவர் கஷ்டம் தீர என்ன செய்ய?’’ என்றபோது நரசிம்மாச்சாரிக்கு ஐம்பது ரூபாயும் வேதாந்தத்துக்கு பத்து ரூபாயும் கொடுத்துவிட்டுப் போனார். ஒப்பந்தம் என்னவென்றால், ‘எங்கள் வீட்டு மாடியில் பிரைவேட்டாக இந்தி கிளாஸ் ஆரம்பிப்பது. யாராவது வந்து கேட்டால் அதை தையல் கிளாஸ் என்றோ பிரெஞ்ச் கிளாஸ் என்றோ சொல்லிவிட வேண்டியது. விளம்பரம் எதும் கூடாது. ஒரு அம்பது பேராவது சேர்ந்தால் தொடர்ந்து சபா பணம் அனுப்பும். அதற்குள் கலகங்கள் அடங்கிவிடும்!’ என்றார்.

எங்கள்வீட்டு மாடியில் வாசல் திண்ணை அருகில் மர ஏணி வைத்து மேலே ஹால் போன்ற இடம் இருந்தது. கம்பி கேட்டை பூட்டிவிட்டால் யாரும் மாடி ஏறி வர முடியாது. பத்திரமான இடம்தான்.

இருந்தும் முதல் கிளாஸ் ஆரம்பித்த போது சற்று டென்ஷனாகத்தான் இருந்தது. நரசிம்மாச்சாரி முகத்தில் சவுக்கம் போட்டு மறைத்துக்கொண்டு சாயங்காலம் வெயில் தாழ இங்குமங்கும் பார்த்துக் கொண்டுதான் உள்ளே நுழைந்தார். ‘‘கீழ வாசல்ல டி.கே-காரங்க வேஷ்டியை உருவறாங்க ரங்கு.’’

‘‘அந்த வழியா ஏன் வந்தீர்... நான் என்ன சொன்&னன்?’’

‘‘எனக்கென்னவோ பதஷ்டமா இருக்கு வேது!’’

‘‘பயப்படாதேயும்.’’

கிளாசில் சேர விரும்புபவர்களுக்கு தற்போது ‘பாஸ்வேர்டு’ என்கிறார்களே, அந்த மாதிரி ஒரு ரகசிய சமிக்ஞை வார்த்தை கொடுக்கப்பட்டிருந்தது. அதை உச்சரித்தால்தான் உள்ளே அனுமதி. நாற்பது பேர் சேருவதாகச் சொல்லியிருந்ததாக ரங்கு சொன்னான்.

ராத்ரி ஏழு மணிக்கு கிளாஸ் என்று பெயர். ஏழரை ஆச்சு... எட்டாச்சு... ஒருவரும் வரவில்லை. நான், வேதாந்தம், நரசிம்மாச்சாரி ஒரு கரும்பலகையில் சாக்கட்டியில் எழுதப்பட்ட ஸ்வாகத் அவ்வளவு தான்.

‘‘என்னடா ஆச்சு?’’

வேதாந்தம், ‘‘எல்லாரும் பயந்தாரிப் பசங்க ஓய்!’’

‘‘என்னடா வேது... வேதனையா இருக்கு. ஒரு பாஷை கத்துக்கறதுக்குக்கூட இந்த நாட்டில உரிமை கிடையாதா? என்ன சுதந்திரம் வந்து என்ன பிரயோசனம்?’’

வேதாந்தம், ‘‘நம்ம தாய்மொழியைப் புறக்கணிச்சுட்டு இந்தி கத்துக்கோன்னு சொன்னதுதான் தப்பு!’’

‘‘வேது, நீ யார் கட்சி?’’

‘‘என்னை சொந்த அபிப்ராயம் கேட்டா, எனக்கு இந்தி பிடிக்காது. சம்ஸ்க்ருதம்தான் எல்லாம். ஆனா, உம்ம சங்கடம் வேற. கவலைப்படாதேயும். இவங்களையெல்லாம் பாடித்தான் கறக்கணும்’’ என்றான் வேதாந்தம். காத்திருந்து பார்த்து எட்டரை மணிக்கு நரசிம்மாச்சாரியை வீட்டில் கொண்டு விட்டபோது அவர் முகத்தில் கவலை ரேகை படிந்திருந்தது.

‘‘என்ன பண்ணப்போறேனோ... பேசாம தமிழ் வாத்தியாரா இருந்திருக்கலாம். எங்கப்பா ஆனமட்டும் சொன்னார்...’’

‘‘நீர் போய்ப் படும். இந்த வயசில தமிழ் வாத்தியாரா மாறமுடியாது!’’

‘‘பாச்சாதாண்டா கெட்டிக்காரன்! சட்டுனு கணக்கு வாத்யாராய்ட்டான் பாரு... இத்தனைக்கும் எல்.டி. கூட இல்லை.’’

அப்போது தீர்த்தம் கொண்டு வந்து வைத்த மூத்த மகள் கல்யாணியைப் பார்த்தேன்.

''வேது, எனக்கு ஒரு ஐடியா...''

''எனக்கும் அதேதான் ஐடியா! எம்மா உனக்கு இந்தி தெரியுமா?''

''தெரியுமே மாமா!''

''எங்கே ஏதாவது இந்தில சொல்லு?''

''பாரத் ஹமாரா தேஷ் ஹை. பஹூத் படா ஹை. இஸ் மே கங்கா பெஹ்தி ஹை.''

''உன் போட்டோ இருக்கா?'' என்றான் வேதாந்தம்.

''இல்லையே... எதுக்கு?''

தெற்கு வாசலிலிருந்து கஸ்தூரியை அழைத்துவந்து அவளை 'சுள் சுள்' என்று நாலைந்து போட்டோக்கள் எடுக்க வைத்தான்.

''எதுக்கு மாமா?''

''எல்லாம் உங்கப்பாவுக்கு ஒத்தாசை பண்ணத்தான். அப்பாகிட்ட சொல்லாதே?'' என்றான்.

வேது திருச்சிக்குப் போய் அதை ப்ளாக் எடுத்து ஒரு நோட்டீஸ் அச்சடித்தான்

'இண்டர் நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபாரின் லாங்வேஜஸ்.

லேர்ன் ஆல் வேர்ல்டு லாங்வேஜஸ்.

காண்டாக்ட் வேதாந்தம் பிரின்ஸிபல்'

'ஒன்ஆஃப் அவர் டீச்சிங் ஸ்டாஃப்' என்று கல்யாணியின் போட்டோவை போட்டிருந்தான். புசுபுசு ரவிக்கையுடன் பக்கத்தில் ஒரு பூச்செண்டை தொட்டுக் கொண்டு எடுத்த போட்டோ அட்டகாச மாக இருந்தது. அதும் இத்தனை இளம்வயதில் மூக்கு குத்தியிருந்தது கிறக்கமாக இருந்தது.

வேது தம்பியின் கிரிக்கெட் சிநேகிதர்களைக் கூப்பிட்டு வீடு வீடாகப் போட்டுவிட்டு வரச் சொன்னான்.

''வேது, ப்ராப்ளம் ஏதாவது வருமா?''

''இதில எங்கயாவது 'இந்தி'ங்கிற வார்த்தை இருக்கா பாரு...'' என்றான்.

இல்லைதான். அந்தச் சுற்றறிக்கைத் துண்டுப்பிரசுரம் ஆச்சரியமான விளைவைத் தந்தது. வெள்ளிக்கிழமை மாலையிலேயே ஜனங்கள், ''மாமா இங்க எங்கயோ.... ஏதோ கத்துத் தாராளாமே... எங்க பட்டாபி கத்துக்கணும்னான்!'' என்று விசாரித்துக்கொண்டு வர ஆரம்பித்தார்கள். ''லைஃப்ல ஒண்ணு ரெண்டு லாங்வேஜ் கத்துக்கறது இம்பார்ட்டெண்ட் பாருங்கோ...''

முதல் கிளாஸ் ஹவுஸ் ஃபுல். கேட்டு கதவைப் பூட்ட வேண்டியிருந்தது.

வேதாந்தம்தான் கல்யாணியை அழைத்து வருமுன் 'நமஸ்தே சதாவத்சலே மாத்ருபூமி' பாடிவிட்டு ''பிரின்ஸிபல் ஓரிரு வார்த்தைகள் பேசுவார்'' என்றான்.

நரசிம்மாச்சாரியும் தன் அடர்ந்த தலைமயிரையும் தாடியையும் தள்ளி வாரிமுடிந்து புதுசாக மொரமொரவென்று தோச்ச கோட்டு போட்டுக்கொண்டு ஏறக்குறைய அழகாக இருந்தார்.

''நம் பாஷைகள் எல்லாமே ப்ராசீனமானவை. சம்ஸ்க்ருதத்தில் பிறந்தவை. அது தேவபாஷை. தேவநாகரி லிபி என்பதுதான் எல்லாவற்றுக்கும் ஆதாரம்'' என்று பாணினி, ஐந்திரம் என்று ஏதேதோ பேசினார். லேசான சலசலப்பு ஏற்பட்டது. ''அந்த டீச்சரை வரச்சொல்லு வேது!'' என்று குரல்கள் கிளம்பின.

''நாந்தாம்பா டீச்சர்..''

''அப்ப நோட்டீஸ் போட்டது?''

வேதாந்தம், ''வருவாடா... ஆலா பறக்காதீங்க. முதல்ல இண்ட்ரொடக்டரி கிளாஸ். அப்புறம்தான் மத்ததெல்லாம்.''

''வேது... என்னடா இது?'' என்றார் நரசிம்மாச்சாரி புரிந்தும் புரியாமலும். ''ஒண்ணுமில்லை ஓய்... நீர் பாடத்தை நடத்தும்.'' அப்போது கல்யாணி வந்தாள். ''கூப்டிங்களா மாமா?'' வகுப்பு மௌனமாகியது.

''கல்! வா! அப்பாவுக்கு ஒத்தாசையா அ ஆ இ ஈ சொல்லிக் கொடு. கல்யாணி போர்டில் எழுதியதை மாணவர்களை நோட்டுப் புத்தகங்களில் எழுதச் சொன்னான். அவர்கள் ஆர்வமாக எழுதி அவளிடம் திருத்தி வாங்க விரும்பினார்கள். நானோ வேதாந் தமோ திருத்தவேண்டாம் என்றார்கள். அருகில் சென்று சந்தேகம் கேட்டார்கள். மாணவர்களில் எல்லா வயதினரும் இருந்தனர். கீமான்தாங்கியான சீமாச்சுவிலிருந்து மாங்கொட்டை நாணு, தனகோபால், ரகு, நந்து எல்லோரையும் பார்த்தேன்.

கல்யாணி வளப்பமான பெண். அதனால் அவள் சிரத்தையாகக் கற்றுத் தந்தாலும் மாணவர்கள் கவனம் பிசகியது.

சாரியிடம் யாரும் சந்தேகம் கேட்க வரவில்லை.

கஸ்தூரியை வரவழைத்து வகுப்பை போட்டோவும் எடுக்க வைத்தோம்.

சாரியைப் பார்த்து அவர்கள், ''உமக்கேன் சிரமம்? டாட்டரே பாடம் நடத்தட்டும்!'' என்றார்கள்.

நரசிம்மாச்சாரி கோபமாக இருந்தார்.

அவர்கள் போனதும், ''வேதாந்தம் நீ பண்றது உனக்கே நன்னா இருக்கா? அது சின்னக்குழந்தைடா. அதுக்கு எதும் தெரியாது. அத்தனை பேர் பார்வையும் அலையறதுரா... அதுக்குத் தெரியவே இல்லை!''

‘‘பாரும்... ஆள் சேர்ற வரைக்கும் ஒரு வாரம் இவ வந்துட்டுப் போகட்டும். சபாவில இன்ஸ்பெக்ஷன் வர வரைக்கும்தா&ன? பாரும்... ஒரு ப்ராடக்டை விக்கணும்னா அதை அலங்காரமா கண்ணாடி, காயிதம் எல்லாம் போட்டு விக்கறதில்லையா... அந்த மாதிரிதான்!’’

‘‘எனக்கு இதில சம்மதமே இல்லை வேதாந்தம்!’’

‘‘ஒரு வாரம் சமாளிச்சு அம்பது பேர் சேந்துட்டா, ஆயிரம் ரூபா தர்றதா சொல்லியிருக்கா சபாவில.’’

மறுநாள் அட்மிஷனுக்கு இன்னும் சில பேர் விண்ணப்பம் செய்தார்கள். காலையே வந்து சிலர் விசாரித்து விட்டுப் போனார்கள். ஜாக்கிரதை யாகத்தான் பதில் சொன்னோம். எங்கும் இந்தி என்கிற வார்த்தையே பயன்படுத்தவில்லை. மாடி ஹாலில் முப்பது பேருக்கு மேல் உட்கார இடமில்லாததால் இரண்டு கிளாஸ் ஷிஃப்ட் போடுவதாக முடிவெடுத் தோம். யார் யாரோ மேல அடையவளைஞ்சான், நொச்சியம் போன்ற இடங்களில் எல்லாம் வந்து சேர விருப்பம் தெரிவித்தார்கள்.

விஷயம் இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழுவுக்குத் தெரிந்து போய்விட்டது. இவர்கள் மாற்றுப் பெயரில் இந்தி கற்றுத் தருகிறார்கள் என்பதை அறிந்த இளைஞர்கள், ‘புறப்படு தமிழா... ஆரிய மாயையை அடக்கக் கொதித்து எழு!’ என்று ஒரு கோஷ்டி நரசிம்மாச்சாரியின் வீட்டைச் சூழ்ந்துகொண்டு ‘‘ஆரியப் பதரே வெளியே வா!’’ என்று சத்தம் போட்டார்கள். சாரி புறக்கடையை விட்டு வெளிவரவில்லை. கல்யாணி தான் வெளியே வந்து, ‘‘அப்பா கோட்டைக்குப் போயிருக்கார்!’’ என்று பொய் சொன்னது. விஷயம் தீவிர மாகிவிட்டது. அவசர அவசரமாக ரங்கு கடைக்கு வந்து சாரியின் பக்கத்து வீட்டுப்பையன்!’’ ‘‘மாமா உங்களை இந்தி வாத்தியார் அழைச்சுண்டு வரச்சொன்னா"ர். ஒரே கலாட்டா... நெருப்பு வெக்கப் போறாளாம்.’’

நாங்கள் ஓடிச் சென்று பார்த்த போது ஊர்ப்பையன்கள் யாரையும் காணோம். பொன்மலையிலிருந்து வந்த ரௌடி கும்பல். அவனவன் கையில் கழி - கம்பு, அரிவாள் வைத்திருந்தார்கள்.

வேதாந்தம் நிலைமையை எடை போட்டான்.

‘‘பாருப்பா... யாரோ உங்களுக்குத் தப்பா சொல்லியிருக்கா. இந்தியாவது தொந்தியாவது... என்ன எங்களுக்குப் பைத்தியமா? தையல் கிளாஸ், பாட்டு கிளாஸ் நடத்தறா இந்தப் பொண்ணு.’’

‘‘இவளா, பாட்டா! ஏய் எங்க பாடு... பார்க்கலாம்’’ என்றான்.

கல்யாணி உட&ன கணீர் என்ற குரலில், ‘பாரத தேசம் என்ற பெயர் சொல்லுவார் துயர் வெல்லுவார்!’ என்று பாடி ‘நீராரும் கடலுடுத்த’வும் பாடினாள். எல்லாரையும் திகைக்க வைத்தாள். கூடவே அதன் தங்கையும் பாடியது. வேதுவும் சேர்ந்துகொண் டான்.

‘‘சார் கோட்டைக்குப் போயிருக் கார். வந்ததும் சொல்றேன். கலாட்டா பண்ணணும்னா நிச்சயம் பண்ணுங்கோ. இன்ஸ்பெக்டர் ராஜகோபாலுக்குச் சொல்லி அனுப்பிச்சிருக்கேன்.’’ ராஜகோபால் முரடர். சேர்த்தி உற்சவத்தின்போது மாந்தோலாலேயே மட்டையடி அடித்துக் கூட்டத்தைக் கட்டுப் படுத்துவார்.

இவர்கள் இந்தி கிளாஸ் எதுவும் நடத்தவில்லை என்ற உறுதிமொழியில் வேதாந்தத்தின் கையெழுத்தைப் பெற்றுக்கொண்டுதான் கலைந்தார்கள்.

வேதாந்தமும் நானும் உள்ளே சென்றோம். புறக்கடையில் தோக்கிற கல்லில் சாரி உட்கார்ந்திருந்தார். ''சாரி உமக்கு ஹெல்ப் பண்ண நினைச்சு, உயிருக்கே ஆபத்தாயிடுத்து. கொஞ்ச நாளைக்கு இந்தி கிளாஸே வேண்டாம்!'' என்றான்.

''நான் போய் காவேரில குதிக் கிறேன்'' என்றார்.

''அப்படி சொல்லாதீங்கப்பா..!''

''ஓய் காவேரில முழங்கால் அளவு கூட ஜலம் இல்லை. குதிச்சா முட்டிதான் பேரும். கொஞ்சம் பொறுமையா இரும்... நான் உமக்கு வழி சொல்றேன்'' என்றான்.

''நீ வரதுக்கு முன்னாடி வீதில நின்னுண்டு என்னவெல்லாம் கத்தினான் தெரியுமா? பொண்ணை அனுப்பு. இந்தி கிளாஸ் வேண்டாம் வேற கிளாஸ் நடத்தலாம்னான்!''

கல்யாணி, ''என்ன கிளாஸ்ப்பா..''

''சும்மாற்றி அறிவுகெட்ட முண்டம்!''

சாரிக்கு வேறு மார்க்கம் பார்க்க முடியாத நிலையில் எனக்கு டெம்பரரி டிரான்ஸ்ஃபர் முடிந்து லீவில் போன ஏ.ஏ.ஓ. வந்துவிட்டதால் மீண்டும் மீனம்பாக்கத்துக்கு டியூட்டிக்கு திரும்ப வரும்படி ஆர்டர் வந்துவிட்டது. எனக்குச் சாரியை நினைத்து வருத்தமாகத்தான் இருந்தது.

ஊருக்குக் கிளம்புமுன் ஸ்ரீரங்கம் ஸ்டேஷனில் ஜங்ஷன் போவதற்கு லால்குடி பாசஞ்சர் பிடிக்கக் காத்திருந்தேன். வாசலில் இந்தி எதிர்ப்பு உண்ணாநோன்பு என்று பெரிசாக போர்டு எழுதி பந்தல் போட்டுச் சிலர் ஜமக்காளத்தில் உட்கார்ந்திருந்தார்கள். போராட்டத்தை முன்னின்று நடத்துபவர் பேராசிரியர் மறையிறுதி என்று என் கையில் திணிக்கப்பட்ட நோட்டீஸிலிருந்து தெரிந்தது. அவர் தலைமையில் சாகும் வரை உண்ணாநோன்பு எனத் தெரிந்தது.

'மைய அரசே ராணுவத்தை வாபஸ் வாங்கு!' என அதட்டலாக எழுதியிருந்தது. நான் அந்தக் கூட்டத்தைக் கடக்கும்போது உண்ணாவிரதம் இருப்பவர் முன்னால் துண்டுவிரித்து 'போராட்ட நிதிக்கு பொற்குவை தாரீர்!' என்று எழுதி கண்ணாடிப் பெட்டியில் ரூபாய் நோட்டுகள் அடைந்திருந்தன. ''தமிழ் வாழ்க... இந்தி ஒழிக...'' என்று அவ்வப்போது கோஷம் லேசாக எழுந்தது. நிறைய நோட்டுகளும் நாணயங்களும் சிதறியிருக்க... அவ்வப்போது கண்ணாடிப் பெட்டியைத் திறந்து பெரிய பையில் திணித்துக் கொண்டிருந்தார்கள். பேராசிரியர் மறையிறுதியை கவனித்தேன். மூன்று நாள் தாடி... முழங்கையில் முறுக்கிவிட்ட ஜிப்பாவினால் அடையாளம் கண்டுகொள்ளச் சற்று நேரமாயிற்று.

''வேதாந்தம் நீயா?''

''வா... வா... பக்கத்தில உக்காரு. தோழர்களே இவர் என் நண்பர் அரங்கத்தரசு. தாய்மொழிக்காக எதுவும் செய்வார். ஆரம்ப எழுத்தாளன். மைய அரசுப் பணியை

நிராகரித்துவிட்டு நம் போராட்டத்தில் கலந்துகொள்ள வந்திருக்கிறார்... வா கொஞ்ச நேரமாவது உக்காரு. ரயில் எங்களை மீறிப் போகாது!''

''அரங்கத்தரசு வாழ்க!'' என்று கோஷம் எழுந்தது. சங்கடமாக இருந்தது. நான் அவன் அருகில் அசௌகரியமாக உட்கார்ந்து காதருகில், ''இதெல்லாம் என்னடா வேதாந்தம்?''

''தாய்மொழியைக் காப்பாத்தப் போராட்டம். ஒரே நாளில் ஐயாயிரம் ரூபாய் சேர்ந்திருக்கு.''

''இந்த நிதியை என்ன பண்ணப் போறே...''

மெள்ளக் குரலைத் தாழ்த்தி ''நரசிம்மாச்சாரிக்கு கொடுக்கப் போறேன்'' என்று கண் சிமிட்டினான் வேதாந்தம்.

## 23. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - பாப்ஜி



யாருளர் களைகண் அம்மா
அரங்கமா நகருளானே!
- திருமாலை

அமெரிக்கா சென்றிருந்தபோது 1999-ல் பெர்க்லி பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கையைத் துவக்கிவைத்துப் பேசச் சொன்னார்கள். ஜார்ஜ் ஹார்ட் போன்ற அறிஞர்களும் பல அமெரிக்கத் தமிழர்களும் தமிழ் மாணவர்களும் வந்திருந்தனர். தேநீர் இடைவேளையின்போது ஒருவர் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். என் வயசுதான் இருக்கும். 'இவரை எங்கேயோ பார்த்திருக்கிறேனே..' என்று என் அத்தனை ந்யுரான்களிலும் தேடினேன்.

அவரே அருகில் வந்து, ''ரிமெம்பர் மீ? ஐ'ம் பாப்ஜி!''

''மைகாட்! பாப்ஜி... டேய் இங்கே என்ன செய்கிறாய்?'' முன்மயிரை இழந்திருந்ததால் சட்டென்று கண்டு பிடிக்க முடியவில்லை. மனசுக்குள் அடர்ந்த முடியை வைத்துப் பார்த்த அடுத்த கணமே, அடையாளம் தெரிந்துவிட்டது. ஐந்தாவதிலிருந்து பி.எஸ்ஸி வரை என் கிளாஸ்மேட்.

''நான் அமெரிக்கா வந்து பதினைந்து வருஷமாகிறது. பெர்க்லியில் நான் இப்போது ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருக் கிறேன்.''

''இஸ் இட்? கிரேட்!''

''நீ பெரிய எழுத்தாளனாகிவிட் டாயாமே... என் கதையை எழுதி னாயா?''

''இல்லை... இன்னும் இல்லை!'' என்றேன்.

''நீ மட்டும் அன்றைக்கு என்கூட எஸ்.ஆர்.பி. காலில் விழ வரவில்லை யென்றால்... இந்த உலகம் ஒரு ந்யுரோபார்மாகாலஜிஸ்டை இழந்திருக் கும். எங்கேயாவது ஏ.ஜி. ஆபீஸில் கிளார்க்காக இருந்திருப்பேன்!'' என்று என்னைக் கட்டிஅணைக்காத குறையாகத் தோள்மேல் கைபோட்டு கிளாஸை உயர்த்தினான். அவன் அமெரிக்க மனைவி, அவனைவிடப் பெரியவள் போல இருந்தாள். ''ஜேன், ரிமெம்பர்? 'என்னைக் காப்பாற்றி யவன்' என்று சொல்வேனே... ரங்கி!''

''ராங்கி! ஓ... யா! எப்படி மறக்க முடியும்? பூ இதுவரை என்னிடம் அதை நூறு தடவை சொல்லிவிட் டாயே!'' என்று சொல்லி நகர்ந்தாள்.

கூட்டத்திலிருந்து விலகி மொட்டை மாடியில் இரண்டு சேரை இழுத்துப் போட்டு உட்கார்ந்தோம்.

''ரங்கி!'' என்னைக் கட்டித் தழுவிக்கொண்டு முதுகில் தட்டிக் கொடுத்தான்.

''லால்குடி பாசஞ்சர் - ஆபீஸர்ஸ் ட்ரெய்ன். பிஆர்எஸ். திஸ் இஸ் அன்பிலீவபிள். நானும் நீயும் பெர்க்கிலியில். நீ எழுத்தாளனாக; நான் ஆராய்ச்சியாளனாக!''

ஆபீஸர்ஸ் ட்ரெய்ன்!

திருச்சி ஜங்ஷனுக்கு லால்குடியி லிருந்து புறப்பட்டு ஸ்ரீரங்கத்துக்குச் சரியாகக் காலை ஒன்பது எட்டுக்கு வரும் லால்குடி பாசஞ்சரை, நாங்கள் 'ஆபீஸர்ஸ் ட்ரெய்ன்' என்போம். முனிசிபாலிட்டியில் ஒன்பது மணிக்கு சங்கு பிடிப்பார்கள். கீழச்சித்திரை வீதியிலிருந்து அப்போது புறப்பட் டால்கூட ஆராமாக ஸ்டேஷன் போய்ச் சேர்ந்துவிடலாம். என்னுடன் பாப்ஜியும் வருவான். இருவரும் சின்ன வயசிலிருந்து ஒரே கிளாஸ். ஒரே வயது. பூவராகவன் என்ற நிஜப் பெயர் சொல்லி யாரும் அழைப் பதில்லை. எல்லாருக்கும் பாப்ஜிதான். நன்றாகப் படிப்பான். பாடுவான். நன்றாக கிரிக்கெட் ஆடுவான். அப்போதெல்லாம் தமிழ்நாட்டிலேயே கிண்டி, அண்ணாமலை, காரைக்குடி என்று மூன்று இன்ஜினீயரிங் கல்லூரிகள்தாம். ஃபார்வார்டு கிளாஸ் என்பதால் இன்ஜினீயரிங் ஸீட் கிடைக்காதவர்கள் பி.எஸ்ஸி பிஸிக்ஸ் சேர்ந்தோம். கிளாஸில் பக்கத்தில் பக்கத்தில் உட்கார்வோம். ரொம்ப மடிசஞ்சி இல்லை. அவ்வப்போது சிகரெட் குடிக்கத் தயங்கமாட்டான். உற்சாகமாகப் பேசுவான். யாரையும் கிண்டல் பண்ணமாட்டான். எதையும் அலசிப்பார்த்து அறிந்துகொள்வான். பாப்ஜியும் நானும் ரயிலில் உட்கார ஸீட் இருந்தாலும் கதவைத் திறந்து வைத்து, காலைத் தொங்கப்போட் டுக்கொண்டு வழி நடையில் பயணம் செய்வதுதான் பெரிய சாதனையாகக் கருதுவோம். டவுன் ஸ்டேஷன் போவதற்கு முன் காலடியில் காவிரி ஓடும். இப்போதுபோல் பெண்களை சைட் அடிப்பதெல்லாம் கிடையாது. காரணம், பெண்களே கிடையாது. ஸ்ரீரங்கத்திலிருந்து ஹோலிகிராஸ் கல்லூரிக்கு அனுப்பமாட்டார்கள். போனால், 'சிஸ்டராக்கி விடுவார்கள்' என்கிற அபத்தமான பயம். இந்திராகாந்தி, எஸ்.ஆர்.சி. கல்லூரியெல்லாம் அப்போது இல்லை. அதனால் பெண்களில் மேற்கொண்டு படிக்க வெகு சிலரே சென்னைக்கு அனுப்பப்பட்டனர். ஸ்ரீரங்கம் கேர்ள்ஸ் ஹைஸ்கூலில் எஸ்.எஸ்.எல்.சி. படித்தபின் வீட்டில் இருந்துகொண்டு கல்யாணத்துக்குக் காத்திருப்பார்கள். தையல் கிளாஸ், இந்தி கிளாஸ், தவறாமல் பாட்டு கிளாஸ், சித்திரை வீதியெங்கும் பாட்டுக்கார நாணா வாத்தியார், அவரது புத்ர - புத்ரிகள் மேற்பார்வையில் 'லம்போதர'வை ஆர்மோனிய சுருதியுடன் அபஸ்வரத்தை இறைப்பார்கள். சில பெண்கள் வயலின் கற்றுக் கொள்வது பூனை பிரசவிப்பதுபோல் கேட்கும். பணக்கார வீட்டுப் பெண்கள் பரதநாட்டியம் கற்றுக்கொண்டு ஹைஸ்கூலிலோ ரங்கராஜா கொட்டகையிலோ, தேவர் ஹாலிலோ அரங்கேறுவார்கள். மற்ற பெண்கள் ஏரோப்ளேன், பாண்டி ஆடுவார்கள். புளியங்கொட்டை கிளித்தட்டு ஆடுவார்கள். நவராத்திரிக்கு அலங்காரம் பண்ணிக் கொள்வார்கள். ஒருத்தருக்கொருத்தர் மருதாணி இட்டுக்கொண்டு, 'உனக்குப் பத்திருக்கா... எனக்குப் பத்திருக்கா...' என்று சர்ச்சை பண்ணுவார்கள். போர்! இவ்வாறு தினம் தினம் கல்லூரிக்கு பி.எஸ்ஸி - பிஸிக்ஸ் பாடம் படிக்க ஜாலியாகச் சென்று கொண்டிருந்த பரவசமான நாட்களில், பாப்ஜியின் வாழ்க்கையில் ஒரு பெரும்புயல் அடித்தது. முதல் வருடம் படிக்கையில் எஸ்.ஆர்.பி. என்னும் எஸ்.ஆர். பரமேச்வரன் 'ப்ராப்பர்ட்டிஸ் ஆஃப் மேட்டர்' எடுப்பார். மொத்தம் நாற்பத்தைந்து நிமிஷ வகுப்பு. முப்பது நிமிஷம் சொல்லித் தருவார். பதினைந்து நிமிஷம் நோட்ஸ் கொடுப்பார். அதை நாங்கள் எழுதிக் கொள்ளவேண்டும்.

ஒரு முறை பாப்ஜி நோட்டுப் புத்தகம் எடுத்து வரவில்லையோ, பேனா பென்சில் இல்லையோ... உடம்பு சரியில்லையோ - ஏதோ ஒரு நியாயமான காரணத்துக்காக எல்லோரும் எழுதிக் கொண்டிருக்க... இவன் மட்டும் கன்னத்தில் கை வைத்துப் பக்கத்தில் எழுதிக் கொண்டிருந்த என்னைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஜோசப் காலேஜின் பி.எஸ்ஸி வகுப்பறைகள் காலரியாக இருக்கும். நவராத்திரி கொலு மாதிரி உட்கார்ந்திருப்போம். மாணவர்கள் எல்லாரும் விரிவுரை யாளர் கண்ணுக்குத் தெரிவார் கள். முன் பெஞ்சின் பின் பம்ம முடியாது.

எழுதாத பாப்ஜியை, எஸ்.ஆர்.பி. நோட்ஸ் கொடுப்பதை நிறுத்திவிட்டுப் பார்த்தார்: ''எனி ப்ராப்ளம்?''

அவருக்குச் சற்று மாறுகண். மாணவனைப் பார்க்கிறாரா, கடிகாரத் தைப் பார்க்கிறாரா என்பது சிலவேளை குழம்பும். பாப்ஜி என்னைத்தான் கேட்கிறார் என்று எண்ணி, என் முகத்தைப் பார்த்தான்.

''யூ வித் தி ப்ளூ ஷர்ட்! யு...'' என்றார். ''வாட்ஸ் ஹிஸ் நேம் மானிட்டர்?''

பாப்ஜிதான் நீலச்சட்டை.

''ஆர். பூவராகவன் ஸார்...''

''எழுந்திரு!'' என்றார். எழுந்தான்.

''உடம்பு சரியில் லையா?''

பாப்ஜி தலையாட்டி னான். நன்றாகப் படிப்பா&ன தவிர, இங்கிலீஷ் வராது. நாக்குப் புரள வில்லை.

''பின் ஏன் நோட்ஸ் எடுத்துக் கொள்ளவில்லை? உனக்கு எல்லாம் தெரியும் என்றால் கிளாஸுக்கு எதற்கு வருகிறாய்? என்னால் அறியாமையை மன்னிக்க முடியும். அலட்சியத்தை மன்னிக்க முடியாது!'' என்று இங்கிலீஷில் பிளந்துகட்டி நல்லபாம்பு போல மூச்சுவிட்டு பாப்ஜியை வெளியே அனுப்பினார்.

நாங்கள் ஒருத்தன்கூட எழுந்து, 'சார் அவன் அப்ப டிப்பட்டவன் இல்லை!' என்று ஒரு வார்த்தை சொல்லவில்லை. எல்லோருக்கும் பயம். பாப்ஜி கண்ணைத் துடைத்துக்கொண்டு வெளியே போனான்.

கிளாஸ் முடிந்ததும் வாயிற்படி யிலேயே கன்னத்தில் கைவைத்து உட்கார்ந்திருந்தான். மானிட்டர் ஜி.ஆர். ''ஏண்டா, உடம்பு சரியில்லை... ரங்கராஜன் நோட்ஸ் பார்த்து எழுத்திக்கறேன்னு சொல்றதுதா&ன?'' என்றான்.

''அந்த அளவுக்கு இங்கிலீஷ் தெரியாதுரா எனக்கு...''

எஸ்.ஆர். பரமேச்வரன், அவரது அடுத்த கிளாஸில் பாப்ஜியை முதலில் பார்த்து, ''என்ன நோட்ஸ் எழுதிக் கொள்ள உத்தேசமா, இல்லை உனக்கு நோட்ஸே தேவையில்லையா?''

அவன் அசட்டுச் சிரிப்பைத் தப்பாகப் புரிந்துகொண்டு அவனை கடைசி மேல் வரிசைக்கு அனுப்பி னார். விதி பாருங்கள்... அவனை வைத்தே விளையாடியது! அப்போதெல்லாம் சென் ஜோசப்ஸ் காலேஜில் நன்றாகப் படிக்கிற பையன்கள் ஒரு கோஷ்டி. வாளாடி, லால்குடி, பிக்ஷாண்டார்கோவில், உத்தமர்கோவில், ஸ்ரீரங்கம், திருச்சி ஆண்டார் ஸ்ட்ரீட், பட்டர்ஒர்த் ரோடிலிருந்து வரும் எங்களை 'தயிர்வடைகள்' என்பார்கள். முன் வரிசையில் அவசரமாக இடம்பிடித்து உட்காருவோம். படிக்காமல் ஊர் சுத்துகிற தடிப்பசங்கள் ஒரு கோஷ்டி. பெரும்பாலும் கண்டோன்மெண்ட் கேம்பியன் போல ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளிலிருந்து வருவார்கள். சிவப்பாக வாட்டசாட்டமாக இருப்பார்கள். ஹாக்கி, பாஸ்கெட்பால் நன்றாக ஆடுவார்கள். பிஸிக்ஸ், மேத்ஸ் எல்லாம் சுட்டுப்போட்டாலும் வராது. கடைசி மேல் வரிசையில் உட்கார்ந்துகொண்டு பாடப்புத்தகத் துக்குள் துப்பறியும் கதைகள் படிப் பார்கள். இங்கிலீஷ் பேசுவார்கள். லெக்சரர் போர்டில் ஏதாவது எழுதும்போது பேப்பர் அம்பு அடிக்கும் கெட்ட பழக்கம் சிலரிடம் இருந்தது. பாப்ஜியின் புது வரிசையிலிருந்து அப்படி திறமையாக ஏவப்பட்ட அம்பு ஒன்று கிளாஸ் முழுவதும் கிளைடர் போல பறந்து எஸ்.ஆர்.பி-யின் கிராப்பின் பின் பகுதியில் போய்ச் செருகிக் கொண் டது. அவர் தலை திருப்ப அதுவும் திரும்பியது.

பையன்கள் சிரித்துவிட... பாப்ஜி அதிகமாகவே சிரித்தது தப்பாகி விட்டது. அவர், ''பூவராகவன் கெட்அப்!'' என்றார் அநியாயமாக. ''உட&ன வெளியே போ. கிளாஸ் முடிந்ததும் என்னை ஸ்டாஃப் ரூமில் வந்து பார்!'' என்றார்.

அவன் துடைகள் நிஜமாகவே நடுங்கின. உட&ன ஜுரம் வந்திருக்கும். அவனைக் கடுமையாகப் பார்த்து, ''நீ நல்ல குடும்பத்துப் பையன் என்று நினைத்தேன். உனக்கு நான் ஏன் டி.சி. கொடுத்து அனுப்பக்கூடாது?''

''நான் என்ன சார் செய்தேன்?'' என்றான் அழாக்குறையாக.

''ஆரோ அடித்தது?''

''அது யாரோ அடித்தது சார்!''

''யார் சொல்லு... விட்டுவிடுகிறேன்.''

''நான் முன் பெஞ்ச் ஆசாமி சார். அவர்கள் பெயர்கூடத் தெரியாது.''

''அது யார், பெயர் என்ன என்பதை வியாழக்கிழமைக்குள் கண்டுபிடித்துக் காகிதத்தில் எழுதிக் கொண்டு வரவேண்டும். அதன்பின் தான் உன்னை கிளாஸில் உட்கார அனுமதிப்பேன். இல்லையேல் உனக்கு டிஸ்மிஸ்!'' என்றார்.

பாப்ஜி, ''என்னடா வம்பாப் போச்சு!'' என்று ஜி. ரங்கராஜனிடம் சொன்னான். அவன் தான் மானிட்டர்.

''டிசோஸாதான் அடித்தான். அவங்க யாரையும் காட்டிக் கொடுத்துடாதே. முரட்டுப் பசங்க. ஆக்கி ஸ்டிக்கால முட்டியைப் பேத்துடுவான்.''

''பின்ன நான் என்னடா செய்வேன்? வியாழக்கிழமை கேப்பாரேடா...''

''நான் வேணா சொல்லிப் பார்க்கறேன். ஆனா, அவர் கேக்கற ஜாதியா தெரியலை!''

''ஆரோ அடிச்சது யார்னு சொல்லலேன்னா டி.சி. கொடுத்துருவேன் கறார்ரா..''

''பண்ணினாலும் பண்ணுவேர். அது முசுடு. எதுக்கும் நீ நேஷனல்ல விசாரிச்சு வை. பாதி டெர்ம்ல எடுத்துப்பாளான்னு.''

''அங்க பி.எஸ்ஸி பிஸிக்ஸ் கிடையாதேடா!'' (அப்போதெல்லாம்)

''வேற எதாவது சேரேன். பி.ஏ. இங்கிலீஷ், ஹிஸ்டரினு...''

''எங்கப்பா கேட்டா, தோலை உரிச்சுருவார்றா!'' என்றான்.

''பேக் பெஞ்ச் பசங்க பண்றாங்க பாரு... அதுமாதிரி நோட்ஸ் எடுக் கலைன்னாலும் எடுக்கறாப்பல பாவனை பண்ணணும்டா. இந்த ட்ரிக் கூட தெரியலையா... அவர் ரொம்ப கோபிஷ்டு. எதை வேணா மன்னிப்பார். நோட்ஸ் எடுக்கலைன்னா மன்னிக்கவே மாட்டார். உனக்கு இருக்கு... என்னடா நாத்தம்?''

பாப்ஜி அடக்க முடியாமல் வேஷ்டியில் கொஞ்சூண்டு நம்பர்டூ போய்விட்டான். வந்தது வரட்டும் என்று வியாழக்கிழமை பிரச்னையை எதிர்கொள்ளாமல் பாலுவைப் போய்க் கேட்டான்.

அவன் ஒரு குருட்டு யோசனை சொல்லியிருக் கிறான். ''எஸ்.ஆர்.பி-யுடைய அடுத்த ரெண்டு மூணு கிளாஸை கட் அடிச்சுரு மறந்துருவேர்.''

நல்ல யோசனையாகப்பட்டதால் அவர் கிளாஸ் மூன்றை நழுவவிட்டான்.

நான், ''வேண்டாம்டா... விஷப்பரீட்சை!'' என்றேன்.

''பாரு! வேற எதாவது உருப்படியா யோசனை இருந்தா சொல்லு!''

எனக்கு சட்டென்று எதுவும் தோன்றவில்லை.

வியாழன், வெள்ளி, சனி, திங்கள்கிழமையும் நழுவவிட்டு, செவ்வாய் போவதாகத் தான் இருந்தான். சற்றும் எதிர்பாரா மல் திங்களன்று எல்.கே.கே-க்கு பதில் இவர் வந்துவிட்டார். பாப்ஜி சகலமும் ஸ்தம்பித்துப் போய் உட்கார்ந் திருக்க...

''பூவராகவன் ஸ்டாண்ட்அப்!'' என்றார். ''என் வகுப்புகளுக்கு வராமலிருந்தால் பொறுப்பிலிருந்து மீளலாம் என்று எண்ணுகிறாயா? நாளை பிரின்சிபால் அலுவலகத்தி லிருந்து லெட்டர் வாங்கிப்போ...''

''சார் ப்ளீஸ்...''

''நோ மோர் எக்ஸ்க்யூஸஸ். உன் மாதிரி ஒழுங்கற்ற மாணவனை நான் என் 25 வருஷ சர்வீஸில் பார்த்த தில்லை. கெட் அவுட்!''

பெனின்சுலார் ஓட்டலில் போய் தோசை, காபி சாப்பிடும்போது அவன் சாப்பிடவே இல்லை! பெல் அடிப்பதன்முன் லாலிஹாலில் நான், குல்ஸார், பாபு, கலாம், பாப்ஜி எல்லோரும்

பேசிக் கொண்டு இருக்கையில் அவன் நிஜமாகவே அழுதுவிட்டான். சொக்காயால் அடிக்கடி கண்ணைத் துடைத்துக்கொண் டான். ''எல்லாம் போச்சு. டி.சி. கொடுத்து அனுப்பிவிடத் தீர்மானித்துவிட்டார்றா! ஆபீஸில் கேட்டேன்.பிரின்ஸிபாலிடம் கையெழுத்து வாங்கியாச்சு. இனி என்னை ஸ்ரீரங்கநாதர்கூடக் காப்பாற்ற முடியாது. என்ன செய்வேன்? நாளைக்கு தபாலில் லெட்டர் போய்விடும்.''

''அதிகாலைல எழுந்து போஸ்ட் மேனை துரத்திப் புடிக்கலாமேடா.''

''அதையும் பார்த்துவிட்டேன். ரிஜிஸ்தர் தபால். கொடுக்கமாட் டான். பேசாம செத்துப்போய்டட் டுமா?''

''கேனத்தனமாப் பேசாதே.''

''எந்த மார்க்கமும் தென்படலை யேடா...'' என்றது, குரல் கம்மிப்போய் விட்டது.

ரங்கு கடையில் இதுபற்றிப் பேச்சு வந்தது. ''ரங்கு, எதாவது வழி சொல்லேன்.''

''ஒரே ஒரு மார்க்கம்தான் இருக்கு.''

''என்ன?''

''நேராப் போய் அவர் கால்ல விழுந்துரு. பிடிச்ச காலை விடாதே. எழுந்திருக்காதே. நம்ம வைஷ்ணவ சம்பிரதாயமே சரணாகதிதான்.''

பாப்ஜி என்னைப் பார்த்தான். ''நீயும் வரியாடா?''

''கால்ல விழறதுக்கா?''

''கால்ல விழவேண்டாம்டா. ஒரு மாரல் சப்போர்ட்டுக்கு.''

மெயின்கார்டு கேட்டில் முன் ஸ்டாப்பில் இறங்கி சர்ச்சைத் தாண்டி, ரோட்டைக் கடந்து ஐஸ்க்ரீம் பார்லருக்குப் பின்னால் கல்லூரி சார்ந்த ஸ்டாஃப் காலனி குவார்ட்டர்ஸில் இருந்தார் எஸ்.ஆர்.பி. நாங்கள் போனபோது நாலைந்து டியூஷன் பையன்கள் காத்திருந் தார்கள். ஓர் இளம்பெண், ''யார் வேணும்?'' என்றது.

நாங்கள் பதுங்கி, ''சார் இருக்காரா?'' என்றோம்.

''பேரு?''

''ரங்கராஜன்னு சொல்லுங்கோ..''

''என்னைப் போய்'ங்கோ'னு சொல்லிண்டு!'' என்று சிரித்தாள் அப்பெண். ''உக்காரு. வருவார். அப்பா... யாரோ ரங்கராஜனாம்...''

அந்தப் பெண் ஒரு ஆறு வயசுப் பையனை பாதுகாத்துக் கொண்டிருந் தாள். அந்தப் பையன் யாரையும் பார்க்காமல் சுவரையே பார்த்துக் கொண்டிருந்தது விநோதமாக இருந்தது. பாப்ஜி ஃப்ரெண்ட் பண்ணிக் கொள்ளும் உத்தேசத்தில் ''பையன் பேர் என்ன?''

''கோவிந்தன்'' என்றாள்.

''கோவிந்து, எப்படி இருக்கே? ஷேகாண்ட் குடு.''

அந்தப் பையன் கையைப் பிடித்தான். அவன் பாப்ஜியின் கைவிரலைப் பிடித்து எடுத்துப் பார்த்துக் கைகுலுக்கிவிட்டு 'களுக்' கென்று சிரித்தான்.

அந்தப் பெண் ஆச்சரியத்துடன், ''ரொம்ப நாள் கழிச்சு இப்படிப் பண்றான்!'' என்றாள்.

''இவனுக்கு என்ன?'' என்றேன்.

''பிறந்ததிலிருந்தே இப்படித்தான் இருக்கான். யாரையுமே நேரா பார்க்கமாட்டான். இன்னிக்கு ஒரு நாளைக்குத்தான் உங்களை நிமிர்ந்து பார்த்திருக்கான். தலை சின்னது. அதனாலதான்னு டாக்டர் சொல்லியிருக்கார் சரியாபோய்டும்னு. ஒண்ணு ரெண்டு தலைகீழா சொல்வான். ஃபிட்ஸ் வரும்.''

கோவிந்து, பாப்ஜியின் கைவிரலை, முன்னும் பின்னும் ஆட்டிச் சிரித்துக் கொண்டிருந்தான். உடல் நன்றாக வளர்ந்திருக்க... மூளைதான் சற்றுப் பின் தங்கியிருந்தது.

எஸ்.ஆர்.பி. வெளியே வந்தார். காலேஜில் புஷ்கோட்டும் பி.யூ. சின்னப்பா நடையுமாக இருப் பவரை, வீட்டில் பனியனுடன் பார்க்கும்போது அவ்வளவு பயமாக இல்லை.

''நீயா?'' என்றார். முகம் இறுகியது.

''உன் மேட்டர் முடிஞ்சு போச்சே. நத்திங் கேன் பி டன். பிரின்ஸிபாலை பார்த்துட்டு டி.சி. வாங்கிட்டுப்போ!''

''அப்பா! கோவிந்து இவனைப் பார்த்து சிரிச்சான்பா!''

''இஸிட்!'' என்றார்.

பாப்ஜி, தன் வாழ்க்கையே அதில் தான் தொங்குவது போல் கோவிந் துக்கு விளையாட்டுக் காட்டினான். 'ஆனை ஆனை அழகர் ஆனை' என்று கை ரெண்டையும் காதாக்கிக் கொண்டு தலையை ஆனை போல ஆட்டினான். கோவிந்து அடக்க முடியாமல் சிரித்தான்.

எஸ்.ஆர்.பி-யின் கண்களில் முதல் முறையாக நீரைப் பார்த்தேன்.

''ஏக் குஹசூ பிக்ஹ்க்சு க்ஷச்பிக் பீகுகூசூ ஸக்கிச்சுக். கடவுள் ஏதோ உன்னைப் பத்தி இவன் மூலம் சேதி சொல்ல விரும்பறார்.''

''ஆமா சார்.. ஆமா சார்.. இவன் நீங்க நினைக்கிற மாதிரி ரௌடி இல்லை சார்'' என்றேன்.

''நீ ஏண்டா அழறே?''

''ரொம்ப ஃப்ரெண்டு சார்.''

எஸ்.ஆர்.பி., பாப்ஜிக்கு கொடுத்த தண்டனையை மூன்றுநாள் தள்ளிப் போடச் சம்மதித்தார். நீ வராத நான்கு கிளாஸின் பாடங்களை நோட்ஸ் எழுதிப் படித்துவிட்டு வரவேண்டும். அதன்மேல் ஒரு டெஸ்ட் வைப்பேன். அதில் சரியாக எழுதிவிட்டால் மன்னிப்பு, போனால் போகிறது என்று.''

பாப்ஜி என்னைப் பார்த்தான். ''மூணு நாளா?''

''உட&ன ஒப்புக்க!'' என்றேன்.

பாப்ஜியின் பிரச்னை அதோடு தீரவில்லை.

என்னிடமிருந்து எல்லா நோட்ஸையும் வாங்கி காப்பி எடுத்துக்கொள்ள சாயங்காலம் வந்திருந்தான். நாலு மணிக்கு வந்தவன் தொடர்ந்து எழுதி இரவு எட்டு மணியாகிவிட்டது.

''ஐயோ இதை எல்லாம் படிக்கணுமே. ரெண்டு நாள்ல எப்படிடா படிக்கப் போறேன்?'' என்று ஏறக்குறைய அழுதுகொண்டே கேட்டான். ''எல்லாத்தையும் கடம் அடிச்சுரு!'' அவன் வீட்டுக்குத் திரும்பும்போது வானம் இருண்டு மழை வந்தது. தொப்பலாக நனைந்துவிட்டான். அவன் எழுதின நோட்ஸெல்லாம் பாழாகிவிட்டது. சொட்டச் சொட்ட நனைந்து வந்து வீட்டு சங்கிலி கேட்டை அசைத்தான். உள்ளே வந்து சட்டையைப் பிழிந்தான்.

''நான் அவ்வளவுதாண்டா! என் விதிதாண்டா என்னைத் துரத்தறது.''

''என்னடா ஆச்சு?'' என்றாள் பாட்டி.

''மழை வந்து எல்லாம் வீணாய்டுத்து பாட்டி. பெருமாள் சதி பண்றேர்.''

''இதுக்காக மழையில வந்தியா?''

''டேய்... நீ படிச்சிருக்கியாடா அந்தப் பாடமெல்லாம்!''

''ஆளை விடு! என்னால சொல்லித் தர முடியாது.''

''எனக்கு மட்டும் ஏண்டா இப்படி எல்லாமே தப்புத் தப்பா நடக்கணும்? என் ஜாதகம் அப்படியா? ஒரு நாள் நோட்ஸ் எழுதாம இருந்தது ஒரு பெரிய குற்றமா? அதுக்கு இப்படி அடுத்தடுத்துத் தண்டனையா... எனக்கு பேப்பர்ல அம்பு எப்படி பண்றதுன்னுகூடத் தெரியாது பாட்டி.''

பாட்டி, ‘‘கவலைப்படாதே. சில வேளைல கிரகம் அப்படித்தான் படுத்தும். திருமஞ்சனக் காவேரி தாண்டி, அம்மா மண்டபம் ரோட்டில் அனுமார் கோயில் இருக்கு பாரு! அவருக்கு வடைமாலை சாத்தறதா வேண்டிக்கோ.’’

‘‘பாட்டி, இத்தனை லேட்டா வேண்டிண்டா எந்த அனுமாரும் என்னைக் காப்பாத்த முடியாது!’’

‘‘அப்படித்தான் நினைச் சிண்டிருக்கே... உடனே சைக்கிளை எடுத்துண்டு போய் சேவிச்சுட்டு வேண்டிண்டு வந்துரேன்.’’

மெள்ள நசநசவென்று பெய்த மழை, அவன் திரும்பி வந்ததும் வலுத்தது. வானமே உடைவது போல சத்தம் கேட்டது. வளைகுடாவில் காற்றழுத்தம் குறைந்து சைக்ளோனிக் ஸ்டார்மாகி. ராத்திரி முழுக்கப் பேயாய் காற்றடித்தது. ஜன்னல்கள் எல்லாம் ‘மடேர் மடேர்’ என்று திட்டின. பக்கத்து வீட்டு பாலு குடையை எடுத்துக்கொண்டு தெருவில் நுழைந்த அடுத்தகணம் அது கூடாகி, கறுப்புத்துணி மட்டும் விண்ணில் பறந்தது. நல்லவேளை! குடையை கைவிட்டான். இல்லையேல் அவனை யும் தூக்கிக்கொண்டு போயிருக்கும். முழுமையான புயல்காற்று வீச... கரண்ட் போய்விட்டது. தந்திக் கம்பங்கள் கொண்டை ஊசிகள் போல வளைந்தன. சித்திரைத் தேர்முட்டியிலிருந்து ஒரு தகரப் பாளம் விடுதலை பெற்றுப் பிரிந்துகொண்டு சித்திரை வீதி முழுவதும் கன்னா பின்னாவென்று அல்லாடிவிட்டு ரங்கசாமி கோனார் வீட்டில் போய் மோதி ஓட்டைப் பெயர்த்தது. ஒருவரும் வெளியே போக முடிய வில்லை. பாப்ஜி வீட்டுக்குப் போகாமல் அரிக்கேன் லைட்டில் என் நோட்ஸை வைத்து உருப் போட்டான். ராத்திரி எங்களுடனேயே கூடத்தில் சுருண்டு படுத்துவிட்டான்.

‘‘ஒரு எழவும் மண்டைல ஏறலை!’’ என்றான்.

மறுநாள் காலைதான் கரண்ட் வந்தது. ரேடியோ போட்டதில் ஒரு வாரத்துக்குப் பள்ளிக்கூடங்கள் காலேஜ்கள் லீவு என்று அறிவித் தார்கள்.

‘‘சட்டுனு ஞாபகமில்லை. எஸ்.ஆர்.பி. என்ன சொன்னார். என்ன ஆச்சு?’’

‘‘புயல்னால ஒரு வாரம் லீவு கிடைச்சுடுத்தில்லை. நன்னா படிச்சுட்டேன். அவரானா டெஸ்ட் எல்லாம் வேண்டாம்னுட்டார். ரங்கி ஒண்ணு கவனிச்சியோ?’’

‘‘என்ன?’’

‘‘உங்க பாட்டி அன்னிக்கு அனுமாருக்கு வேண்டிக்கச் சொன்னா பாரு. நிஜமாவே வேண்டிண்டேன். பலன் கிடைச்சுடுத்து பாரு.’’

‘‘எப்படிச் சொல்றே?’’

‘‘அனுமார் யாரு? வாயுபுத்ரன். அன்னிக்கு அடிச்சது என்ன? புயல் காத்து.’’

‘‘போடாச்சீ. அமெரிக்கால உக்காந்துண்டு இதையெல்லாம் நம்பறியா? பாப்ஜி டெஸ்டுக்கு சரியா படிக்கலைன்னு பேய்க்காத்தை ஸ்ரீரங்கத்திலிருந்து நாகப்பட்டினம் வரைக்கும் ஊரெல்லாம் சேதம் உண்டாக்க அனுப்புவாரா? அவருக்கு வேற வேலை கிடையாதாடா?’’

‘‘எனிவே இப்படி நினைச்சுப் பார்க்க ரொமாண்டிக்கா இருக்கில்லை.’’

''எனக்குத் தோணலை. அப்புறம் நீ எஸ்.ஆர்.பி-யைப் பார்த்தியோ?''

''ஒரு முறை பார்த்தேன். எங்கப்பா போனபோது, ஸ்ரீரங்கம் போயிருந்தப்ப. அந்தப் பையன் கோவிந்து தொடர்ந்தேர்த்தியா ஃபிட்ஸ் வந்து போய்ட்டானாம். அந்தச் சோகத்திலேயே அவர் பாதியாயிட்டார். ஒரு காலத்தில இவரைப் பார்த்தா அப்படிப் பயந்தோம்னு இருந்தது.''

இருட்டிவிட்டது. அவன் மனைவி பின்னால் வந்து நின்றாள்.

''என்ன, எல்லாம் பேசியாகி விட்டதா... இந்த மனிதரை எதற்கு அமெரிக்கா அனுப்பினீர்கள்?'' என்றாள். வேடிக்கையாக அவன் மேல் ஒரு ஜாக்கெட்டை அணி வித்தாள்.

''இன்றைக்கு ஒரு ப்ரோஸாக்கும் ஒரு டைலான்டினும் அந்தப் பையனைக் காப்பாற்றியிருக் கும்!''

''பாப்ஜி, நீ என்ன ஆராய்ச்சி பண்ணுகிறாய் பெர்க்லியில்?''

''நியூரோ பார்மோகாலஜி. போஸ்ட் டாக்டரேட் ரிஸர்ச் பண்ணுகிறேன். அட்டென்ஷன் டெபிஷென்சி. சிண்ட்ரோம் பாராப்ளிஜியா எபிலெப்சி மாங்கோலிசம் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி அதற்கான மிதைல்ஃபெனிடேட் சார்ந்த ஒரு புது மாத்திரையும் கண்டுபிடித் திருக்கிறேன். ஆனா, இன்னிக்குகூட காகித அம்பு எப்படி அடிக்கிறதுனு தெரியாது!'' என்று சிரித்தான்.

''நீ கண்டுபிடிச்ச மருந்து பேரு என்ன?''

''கோவிந்த்!'' என்றான்.

# 24. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - மஞ்சள் சட்டை



'ஒரு மகள் தன்னை
உடையேன்
உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல
வளர்த்தேன்
செங்கண்மால் தான்
கொண்டுபோனான்'
- பெரியாழ்வார் திருமொழி

லால்குடி பாசஞ்சரில் பெட்டிக்குப் பெட்டி தினசரி வியாபாரங்கள் நடக்கும். இஞ்சிமுரப்பா, வேர்க்கடலை, அண்ணாக்கயிறு, பாச்சா உருண்டை, நாடா போட்ட பட்டாபட்டி டிராயர், கத்தரிக்கோல், கத்தி போன்ற வஸ்துக்கள், புருவத்தில் தடவ குல்கந்து, ஜெண்டு போன்ற வாசனாதி திரவியங்கள், நோட்டுப் புத்தகங்கள், இங்கிலீஷ் கற்றுக் கொடுக்கும் புத்தகங்கள், பேனா எதுவும் கிடைக்கும். நிறைய பேரம் பேசலாம்.

டவுன்ஸ்டேஷன் வரும் வரை வாக்குவாதம் நடக்கும். கடைசியில் சிறுவியாபாரி இறங்குமுன் கெட்டவார்த்தை சொல்லி விட்டுப் போவான். பால்வியாபாரிகள், வாழைத்தார், வாழை இலைக்கட்டு, கறிகாய், அரிசி - பருப்பு, கீரை போன்ற பலதரப்பட்ட வியாபாரிகள் திருச்சியின் நுகர்வோர் பொருளாதாரத்தின் நரம்பாக இருப்பவர்கள் அந்த பாசஞ்சரில் தான் பயணம் செய்வார்கள். மற்றொரு பெட்டியில் லைட்மியூஸிக். ஆர்மோனியம் வைத்துக்கொண்டு ஒருவர் இனிமையாகப் பாடுவார். கூடவே டோலக் வாசிப்பார்கள். 'வெய்யிற்கேற்ற நிழலுண்டு' என்ற பானுமதி - கண்டசாலா பாடிய பாட்டைப் பாதி பாடிக் கொண்டிருக்கும்போது அந்தப் பிச்சைக்காரன், பெட்டி தாவி வந்து வயிற்றில் பயங்கரமாக அடித்துச் சத்தம் பண்ணிக் கொண்டு தாளம்போட... அவனருகே ஒரு சிறுமி 'ஐயா... சிறுபெண் ஏழையென்பால் மனமிரங்காதா?' பாடுவாள்.

நான் சொல்வது ஸ்ரீரங்கம் ரயில்நிலையம், கார்டு லைனில் மீட்டர்கேஜில் இருந்த சமயம். நீராவி இன்ஜின்களின் சமயம். அதுவும் அந்த பாசஞ்சருக்கென்று சோனி இன்ஜின். புகையும் நீராவியும் பிரமாதமாக கக்குமே ஒழிய, வேகம் பிடித்து நான் பார்த்ததில்லை. அதனால்தான் ஒரு நாள் அதில் 'மோஷ'னில் ஏறப் போந்தேன் (அதுபற்றி அப்புறம்). சாதாரணமாகப் புறப்படும் போதே சக்கரங்கள் கொஞ்சம் வழுக்கும். பெரிசாகச் சுவாசிக்கும். பலவிதமான முக்கல் சத்தங்கள் கேட்கும். அந்த இன்ஜினை இப்போது டெல்லி மியூஸியத்தில் பார்க்கலாம்.

ஆபீஸர்ஸ் டிரெய்னில்தான் புரொபசர் பெருமாள்ராஜை முதலில் சந்தித்தேன்.

ஒரு முறை தள்ளிவைக்கப்பட்ட அரைவருடப் பரீட்சைக்கு அவசர அவசரமாகக் கடைசி நிமிஷம் வரை படித்துக்கொண்டிருந்ததால், ஒன்பது மணி சங்கு ஊதியதைக் கவனிக்கவில்லை. பாட்டி சொன்னாள், ''ஏண்டா இன்னிக்கு காலேஜ் லீவா?''

''உண்டு பாட்டி. போணும் பாட்டி!''

''சங்கு ஊதியாச்சு. ஃபுல்சூட் ஐயங்கார்கூடப் போயாச்சே?''

ஐயங்கார் குடுமி பறக்கச் சென்றுவிட்டார் என்றால், அதன் பின் ரயிலைப் பிடிக்க சான்ஸே இல்லை!

''ஐயோ, பாட்டி... இன்னிக்கு எனக்குப் பரீட்சை!''

தூரத்தில் 'ழே' என்று லால்குடியின் குரலும் கேட்டது.

எதையோ அள்ளிப் போட்டுக் கொண்டு சகலங்களையும் சேகரித்துக்கொண்டு இரைக்க இரைக்க ஓடி&னன். ஹைஸ்கூல் வாசலிலேயே 'லால்' லெவல் கிராஸிங்குக்கு வந்துவிட்டது. அன்றைக்குப் பார்த்து தாமதம் இல்லாமல் கிளம்பி நான் போய்ச் சேருவதற்குள் ரயில் புறப்பட்டு வேகம் பிடிக்க ஆரம்பித்து... எல்.வி. தெரிய ஆரம்பித்தது. நான் கூட ஓடி&னன். எனக்கு ஓடுகிற ரயிலில் தொத்தி ஏறிப் பழக்கமே இல்லை. எத்தனையோ பிச்சைக் காரர்களும் வியாபாரிகளும் சக மாணவர்களும் தினம் செய்யும் காரியம்தான். எனக்குப் பயிற்சி இல்லாத தால் பரீட்சை தவறிவிட்டால் என்ன ஆகுமோ என்கிற கிலியில் பைத்தாரத் தனமாகக் கம்பியைப் பிடித்து ஏற முயற்சித்தேன். நல்ல உயரம். ஒரு தடவை என்னை ரயில் இழுத்து ஒரு விசிறு விசிறியது. நான் காலி என்று நினைத்தேன். நல்லவேளை, கதவருகே நின்றவர் என்னை அப்படியே அணைத்து உள்ளே இழுத்து விட்டார். இல்லையேல் இந்தக் கதை எழுதியிருக்க முடியாது.

''என்ன தம்பி இத்தனை அவசரம்?''

''ரயில் போய்ட்டா பரீட்சை போய்டும்!''

''உயிர் போயிருக்குமே தம்பி.''

பெரிசாக மூச்சுவிட்டுக் கொண்டேன். 'ஹ.. ஹ..' என்றேன்.

ஃப்ளாஸ்கிலிருந்து காபி கொஞ்சம் மூடியில் கொட்டிக் கொடுத்தார்.

''இனிமே இந்த மாதிரி செய்யாதே'' என்றார் என்னைக் காப்பாற்றியவர்.

''ஐயா... உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்&ன தெரியலை!''

''உன் பேரு என்ன?''

சொன்&னன்.

''என் பேரு பெருமாள் ராஜ்.''

''உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்&ன...''

‘‘சமயம் வரப்ப சொல்றேன். நீ ஸ்ரீரங்கம்தா&னா?’’

‘‘ஆமா.’’

அவருக்கு முப்பது வயதிருக் கலாம். கையில் கறுப்பு ரெக்ஸின் பெட்டி வைத்திருந்தார். அமெரிக்கன் கிராப். பென்சில் மீசை வைத்து, சந்திரலேகாவில் ரஞ்சன்போல ஷோக்காகத்தான் இருந்தார். கண்களில் லேசாக மைதடவினாற்போல இருந்தது. எலுமிச்சை மஞ்சளில் பளிச்சென்று சட்டை அணிந்திருந்தார். அதன் கழுத்தில் ஒரு ‘போ’ டை, பட்டாம் பூச்சி போல இருந்தது. ஒருக்கால் ஏதாவது சர்க்கஸில் யானை, சிங்கம் பழக்குபவராக இருக்குமோ என்று யோசித்தேன். திருச்சிக்கு ஜெமினி சர்க்கஸ் போன மாதமே வந்து போய்விட்டதே!

‘‘நான் வாளாடிலருந்து தினம் வரேன். வாளாடி புள்ளம்பாடி எங்கருக்குத் தெரியுமா?’’

‘‘நான் கொள்ளிடம் பாலந்தாண்டி வடக்கே பிச்சாண்டார் கோயில் கூடப் போனதில்லை.’’

‘‘ஸ்ரீரங்கத்தில் எந்த வீதி?’’

‘‘கீழச் சித்திரைவீதி.’’

‘‘ஸ்ரீனிவாசநகர்னு ஒரு காலனி இருக்கா?’’

‘‘ஆமா லெவல்கிராஸிங் தாண்டி... ஏன்?’’

‘‘சும்மாதான்.’’

மறுதினம் வண்டியின் வாசலில் நின்றுகொண்டு என்னை வரவேற்றார் அதே மஞ்சள் சட்டை. பட்டாம் பூச்சி டை. என்னைப் பார்த்ததும், ‘‘ரங்கராஜி இங்க வா...’’

‘‘எம் பேரு ரங்கராஜி இல்லைங்க. ரங்கராஜன்.’’

‘‘எனக்கு நீ ராஜிதான்.’’

ஒரு முறை பிராக்டிகல் கட் அடித்துவிட்டு கெயிட்டியில் ‘ஆவாரா’ பார்த்துவிட்டுத் திரும்பும்போது பாட்டிக்கு லேட்டானதற்கு என்ன காரணம் பாக்கியிருக்கிறது என யோசித்து நடந்து கொண்டிருந்தேன்.

தெப்பக்குளத்தருகில் ‘‘ராஜி’’ என்று குரல் கேட்டது.

தெப்பக்குளத்தின் சுற்றுச் சுவரருகில் வெட்டவெளியில் உயரமான ஒரு ஸ்டாண்டின் மேல் பெட்டி வைத்துக் கொண்டு, ஒரு பெரிய லென்ஸ் வைத்துக்கொண்டு கைரேகை பார்த்துக் கொண்டிருந்தார்.

புரொபசர் பெருமாள்ராஜ் எம்.ஐ.ஏ.ஏ.

நான்கைந்து பேர் காத்திருந்தார்கள். அவர்களிடம் ஆளுக்கு நாலணா வாங்கிக்கொண்டு லென்ஸ் மூலம் கையைத் திருப்பித் திருப்பிப் பார்த்து விட்டு லேசாகப் புன்னகைத்துவிட்டு தியானம் போல கண்ணை மூடிக் கொண்டிருந்துவிட்டு, மடைதிறந்த பிரசங்கம்போல்,

''இஜ்ஜாதகருடைய கையில் தன ரேகையும் ஆயுள் ரேகையும் வலுவாக இருப்பதால் சமீபத்தில் ஏற்பட்ட உடலழற்சி மூலம் பவுத்திரம் ஃபிஸ்டுலா போன்ற உபாதைகளத்தனையும் விலகிப் போய், வரும் தை மாதத்துக்குள் அதாவது ஜனவரி பதினாலுக்குள் வடக்கேயிருந்து நல்ல சேதியும் வர வேண்டிய பணங்கள் குத்தகைப் பணங்கள் சம்பளங்கள் கொடுப்பினை களத்தனையும் வரும்'' என்று ஃபுல்ஸ்டாப் இல்லா மல் சொன்னார்.

கொடுத்த ஒரு ரூபாய் நோட்டை பஸ் கண்டக்டர் போல் மடித்துப் பெட்டி ஓரத்தில் செருகி பாக்கி சில்லறை கொடுத்துவிட்டு, ''நெக்ஸ்ட்'' என்று பெட்டியில் நாணயத்தால் தட்டி னார்.

''நடவுக்கு வெதை நெல் எடுக்க கடன் கேட்டிருக்கங்கய்யா'' என்றார் நாலணாவுக்கு ஜோஸ்யம் போதாத முந்தையவர்.

''மேல் வெவரம் வேணும்னா ஒரு ரூபாய் அட்வான்ஸ வெச்சுட்டு டீலக்ஸ் ஜோஸ்யம் பாத்துக் கறீங்களா..? மேலப்புலிவார் ரோட்டில பத்தாம் நம்பர்ல பத்து மணிக்கு வந்தா எல்லாப் பலாபலன்களும் சொல்றேன்.''

அந்த விவசாயி அவசர மாக, ''சின்னக்கடை வீதி வரை போய்ட்டு வரப்ப, வரேங்க'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

''இரு ராஜி முடிக்கிற சமயம் தான் என்ன தெகைச்சுப் போய் யோசிக்கிறே...''

''என்னவோ நீங்க பெரிய கடை வெச்சிருக்கறதா நெனைச்சேங்க.''

''மூலதனமில்லாத பெரிய கடை ஒரு மணி நேரத்துக்கு இருபது பேத்துக்கு பாத்துருவன். ஒரு மாதத்துக்கு ரயில்வே ஆபீஸருங்களவிட அதிகமா சம்பாதிக்கிறேன். லைட்டு போட்டு வெளிச்சம் கூடத் தேவையில்லை. விளம்பரம் இந்த போர்டு மட்டும்தான். ஜகஜ்ஜோதியா தெருவிளக்குங்க...

கிராமத்திலருந்து சரக்கெடுக்க வர்றவங்க அத்தனை பேரும் புரொபசர் ராஜ்கிட்ட கையைக் காட்டிட்டுத்தான் போவாங்க நல்ல சேதியா சொல்வேன் கெட்ட சேதிய மறைக்கமாட்டேன் இரு பத்மால காபி சாப்ட்டுட்டு போவோம்.'' என்றவர்,

''ராஜ், எங்கே உன் கையைக் காட்டு!'' என்றார்.

''எங்கிட்ட நாலணா இல்லை'' என்றேன்.

அவர் என்னை அடிபட்ட பார்வை பார்த்து, ''பாத்தியா... உங்கிட்ட காசு வாங்குவனா? உன்னால ஆகவேண்டி யது நிறையவே இருக்கு''

என் கையைப் பார்த்து, ''பிரமாதமான தனரேகை உண்டு. உனக்கு வாய்க்கப் போகிற பெண்ணால சௌபாக்கியங்கள் உண்டு.''

''இதெல்லாம் எங்க எழுதிருக்கு?''

''சீய்ரோ படிச்சிருக்கியா? இது ஒரு அற்புதமான சாஸ்திரம். கைரேகையில யும் மேடுகள்ளயும் விரல்களிலயும்தான் உன் வாழ்க்கையே எழுதி இருக்குது. இதபாரு... இது சந்திர மேடு. கற்பனாசக்தி. குழந்தைகளுடைய எண்ணிக்கை மூணு. படுக்கைல மஜா பண்ற திறமை எல்லாம் இதிலருந்து தெரியுது''

நான் கையை வேகமாக பின்வாங்க முயன்றேன். ''இது ஜூபிட்டருக்கு உண்டான மேடு. இது உனக்கு ஸ்ட்ராங்கா இருக்கு. உனக்கு ஈகோ ஜாஸ்தி. நிறைய சாதிக்கணும்னு வெறி இருக்கில்லை?''

''ம்... ஆமாங்க'' என்றேன், என்ன சாதிக்கவேண்டும் என்பதுதான் சரியாகப் புரியாமல். ''உன் கையைத் தொட்டுப் பார்த்தே எத்தனையோ சொல்லலாம். இது உழைக்காத கை, மிருதுவான கை, பெண்ணுடைய கை இது. இந்தக் கை படம்போடும். வாத்யம் வாசிக்கும்.''

''கிரிக்கெட் நல்லா ஆடுமா?''

''நான் சொல்றதில் நம்பிக்கை இல்லேல்லை?''

''உருப்படியா எதாவது சொல்லுங்க. 'ஆவாரா' மாதிரி ராஜ்கபூர் படம் இன்னொரு முறை பார்க்க சில்லறை வரும், கெமிஸ்ட்ரில தொண்ணூறு மார்க் வரும், இப்படி ஏதாவது சொன்னா... நடந்தா, நம்பறேன்.''

அவர் என் கட்டைவிரலை இப்போது ஆராய்ந்து கொண்டிருந்தார். அந்தத் தொடுகையிலேயே ஒரு நளின நாசூக்கு. இன்னும் கொஞ்சம் தொடலாம் போல இருந்தது. என்ன என்னவோ எண்ணிக்கை எடுத்தார். காகிதத்தில் கணக்குப் போட்டார். ''நிறைய வில்பவர்ப்பா உனக்கு. சரி உனக்காக ஒரே ஒரு விஷயம் - இந்த வாரம் நடக்கப் போற விஷயம் சொல்றேன்... உன் வீட்டு விலாசம் என்ன?''

''197, கீழ சித்திரை வீதி.''

''கூட்டினா எட்டு வருது. பரவாயில்லை, இதே விலாசத்துக்கு வியாழக் கிழமை ஒரு பொண்ணு உன்னை தேடிக்கிட்டு வரும். அவ பேரு ஜ எழுத்தில ஆரம்பிக்கும்.''

''அந்தப் பொண்ணு எதுக்கு என்னைத் தேடிண்டு வரணும்?''

''வர்றப்ப நீயே கேட்டுப் பாரேன்...''

வியாழக்கிழமை காலேஜிலிருந்து திரும்பியபோது பாட்டி, ''புது சகவாசம் எல்லாம் வராப்பல இருக்கு. உங்கப்பாவுக்கு லெட்டர் போடட்டுமா?''

''பாட்டி, என்ன சொல்றே?''

''யாரோ ஜயந்தியாம். திமுசுக்கட்டை மாதிரி ஒரு பொண்ணு உன்னைத் தேடிண்டு வந்தது. இல்லைன்னு சொல் விட்டேன்!''

''பாட்டி, எனக்கு எந்த ஜயந்தியையும் தெரியாது.''

''உம் பேர் சொல்லி, ரங்கராஜு இருக்கரான்னு கேட்டுது.''

எனக்கு சட்டென்று பொறி தட்டியது. புரொபசர் பெருமாள்ராஜ் சொன்ன பெண்.

''என்னவாம்?''

''காயிதத்ல எழுதிக் கொடுத்துட்டுப் போயிருக்கா. நீ போற போக்கே சரியில்லை. கெட்ட சகவாசம். சிகரெட் குடிக்கிற தத்தாரிப் பசங்க ளோட சினிமா போறே. கேக்கவே நன்னால்லை!''

''பாட்டி, இதெல்லாம் சொல்லியாச்சு. அந்தப் பொண்ணு என்ன ஏதுன்னு விசாரிக்காம...''

''உனக்கு அந்தப் பொண்ணைத் தெரியுமா, தெரியாதா?''

''நிச்சயம் தெரியாது!''

''அப்றம் ஏன் உன்னைத் தேடிண்டு வரணும்?''

''விசாரிக்கறேன்...''

''ஒண்ணும் வேண்டாம். உனக்கு சம்பந்தமில்லைன்னா உட&ன வெட்டிடணும். அலையறாளுக கெடந்து!''

''அந்தக் காயிதம் இருக்கா?''

''கிழிச்சுப் போட்டுட்டேன்.''

''நல்ல காரியம் பண்ணே...'' என்றேன் ஏமாற்றத்துடன்.

நல்லவேளை, நாலாகத்தான் கிழித் துக் குப்பைத்தொட்டியில் போட்டிருந்தாள். ஒட்டிப்பார்த்ததில் ஒரு ஸ்ரீனிவாச நகர் அட்ரஸ் எழுதியிருந்தது.

சேர்மன் வீட்டைத் தாண்டி ரயில்வே கேட்டுக்கு அந்தப் பக்கத்தில் இருந்தது அந்த வீடு. ஸ்ரீனிவாச நகர் என்பது ஸ்ரீரங்கத்தின் முதல் புறநகர். வசதியுள்ளவர்கள். தனி வீடுகள். தோட்டத்தோடு கட்டிக்கொண்டு குடியேறிய முதல் காலனி. அந்த வீட்டு வாசலில் ஆர். காளிதாஸ் என்று பெயர்ப்பலகை இருந்தது. ஒரு பிரவுனி நாய் கட்டியிருந்தது. வராந்தாவில் ஊஞ்சல் போட்டிருந்தது. நிறைய செடி கொடிகளும் வாதா மரமும் மாமரமு மாக பச்சு பச்சென்று இருந்தது. மல்லிகைப் பந்தல் இருந்தது. மஞ்சள் ரோஜாச்செடி இருந்தது. லட்சுமி சிலை தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தது.

''யாருப்பா?''

''ஜயந்தின்னு..''

''நீ யாரு?''

அந்த மாது, ''வா தம்பி உக்காரு'' என்று தம்ளரில் தண்ணீர் கொடுத்தாள். நடுத்தர வயதுப் பெண்மணி. அவள் என்னை சந்தேகமாகக் கொஞ்ச நேரம் பார்த்தாள்.

''ஜயந்தி வரச் சொல்லிருந்தாங்க.''

''ரங்கராஜா கொட்டாய்ல படம் மாத்திட்டாங்களா?''

நான் விழிக்க, ஜயந்தி என்பவள் என்னை வந்து சந்தித்தாள்.

''வா மாடிக்குப் போலாம்'' என்றாள். எனக்கு பல்ஸ் எகிறியது.

பெண்மணி, ''அரிதாஸ் ஓடிக்கிட்டிருந்தது. எடுத்துட்டாங்களா?'' என்றாள்.

நான் யோசிக்க, ''இதுக்கெல்லாம் பதில் சொல்லிக் கிட்டிருக்காதே. கிறுக்கு இது. இந்த வீடே கிறுக்குப் பட்டாளம்'' என்றாள் ஜயந்தி.

மாடியில் தரையில் புலித்தோல் விரித்து தலைமட்டும் முழுசாக, கோபமாக இருந்தது. வீட்டில் யாரோ வேட்டைக்காரர் போலும். மான், கொம்புடன் சுவரில் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. அருகே மாட்டியிருந் தது 'நிஜ துப்பாக்கியா?'

ஜயந்தி பாவாடை - மேலாக்கு அணிந்திருந்தாலும் வாட்டசாட்டமாக வயசு என்னைவிட அதிகம் - இருபதுக்கு மேல் இருக்கும். நிறைய நகை போட்டிருந்தாள். தங்க வளையல் எடுத்ததுக்கெல்லாம் சத்தம் பண்ணியது. என்னை உன்னிப்பாகப் பார்த்தாள்.

''யார்கிட்டேயும் சொல்லாதே!'' என்றாள்.

''என்ன?''

''உனக்கு பெருமாளை எப்படித் தெரியும்?''

எனக்கு கனெக்ஷன் புரிந்தது. ''அவர்தான் உன்னை அனுப்ச்சாரா?''

''ஆமாம். உன்னைப் பாக்கச் சொல்லி சேதி அனுப்பியிருந்தாரு. தினம் அவரை டிரெய்ன்ல பாக்கிறியாம்!'' என்றபடி தன் ரவிக்கையில் குத்தி யிருந்த பேனா எடுத்து சரசரவென்று ஒரு காகிதத்தில் எழுதினாள். ''மாள் கிட்ட கொடுத்துர்றியா? இந்தப் பைத்தியக்கார ஊட்டுல ஒரு வாரம் தாங்காதுன்னு கண்டிஷனா சொல்லிரு. நல்லா இருக்கேன்னு சொல்லு. அவருக்குத்தான் காத்துக் கிட்டிருக்கேன்னு சொல்லு. கக்கூஸ் கூட தனியா போக விடமாட்டேங்கறாங்கன்னு. கல்யாணத்துக்கு மும்முரமா ஏற்பாடு பண்றாங்கனு சொல்லு. சொல்லு... இதை எப்படியா வது அவர்கிட்ட சேத்துரு!''

''உனக்கு பெருமாள் ராஜை எப்படித் தெரியும்?'' என்றேன்.

''அது பெரிய கதை. கைரேகை பார்க்கத்தான் முதல்ல போ&னன். கையைத் தொட்டுட்டு உள்ளத்தைத் தொட்டுட்டாரு. அப்றம் சொல்றேன்'' என்று கண் சிமிட்டினாள். எனக்குப் பெருமாள் மேல் பொறாமையாக இருந்தது. ''பெருமாள் பெரிய ஆளு தான்!'' என்றேன். அவள் அந்தக் கடிதத்தை என்னி டம் கொடுக்கும்போது, ''ஜயந்தி'' என்று குரல் கேட்டது.

''ஐயோ... வந்துட்டான் அப்பன். பாடம் படிக்க வந்ததாச் சொல்லு. என்ன? பயப்படாத... சமாளிக்கலாம்'' என்றாள்.

மரப்படிகளில் ஏறிவரும் சத்தம் கேட்டது. காலடி ஓசையே அதட்டலாக இருந்தது.

‘‘ஜயந்தி, என்ன பேச்சுக் குரல் கேக்குது?’’

அவர் லெக் அம்பயர் மாதிரி தொப்பி வைத்திருந்தார். பெரிசாக மீசை. என்னைக் கண்களால் பதம் பார்த்தார்.

‘‘யாருப்பா நீ?’’

‘‘நைனா... இது வந்து கிளாஸ்மேட். உஷாவுடைய தம்பி. நோட்ஸ் கொடுக்க வந்திருக்கான்.’’

சுற்றுமுற்றும் பார்த்தார். சுவரில் மாட்டியிருக் கும் துப்பாக்கியைப் பார்த்தார். பத்து நிமிஷத்துக்குள் அதைப் பிரயோகிக்கும் உத்தேசம் கண் களில் தெரிந்தது.

‘‘ஏய் பக்கெட் சாம்பார், தயிர்வடை, யார் அனுப்னது... உண்மை சொல்லு!’’

நான் அவளைப் பார்த்தேன். கிடைத்த சின்ன சந்தர்ப்பத்தில் ‘சொல்லாதே’ என்று சைகை செய்தாள். அவர் என்னருகே வந்து காலரைப் பிடித்தார். ‘‘லொக் லொக்’’ என்றேன்.

‘‘யாரையாவது, எதாச்சும் பார்க்கறேன்னு தெரிஞ்சுது... சுட்டுப்போட்டு மான் தலை பக்கத்தில் மாட்டிருவேன். உனக்கும்தான். கைல என்ன? காயிதம் கொடுத்தாளா?’’

‘‘இல்லைங்களே... பஸ் டிக்கெட் - காலாவதியானது.’’

‘‘கையக் காட்டு.’’

காட்டி&னன்.

‘‘பையைக் காட்டு...’’

காட்டி&னன். ‘‘நை...னா... ஆனாலும் நீங்க மோசம். இந்தப் பையனைப் பார்த்தா எத்தனை சாது?’’

‘‘பின்ன எதுக்கு வந்தே?’’

ஜயந்தி மேல் பரிவு வந்துவிட்டது. அவள் என்னை அழுத்தமாகப் பார்த்த பார்வை ‘பொய் சொல்... பொய் சொல்’ என்று கட்டளையிட்டது. ‘‘சொல்றேனில்லை... எங்கக்கா, ஜயந்தி கிளாஸ்மேட்டு.’’

‘‘இப்ப என்ன பண்ணுது உங்கக்கா?’’

‘‘மேற்கொண்டு படிக்கலை. வீட்டில வீணை கத்துக்கிட்டிருக்கா. அவதான் பொறந்த நாளைக்கு கூப்பிட்டு வரச் சொன்னா’’ இஷ்டத்துக்கு சுத்தி&னன். எனக்கு அக்காவே கிடையாது.

‘‘ஜயந்தி வூட்டைவிட்டு வரமாட்டான்னு சொல்லு. வேணும்னா உங்கக்கா வந்து பாத்துக்கட்டும், பொம்பளைங்க... உம்மாதிரி தயிர்வடை பசங்கன்னா பரவால்லை. நீ ஐயங்கார்தா&னா? யாரோ பேமானி பையனைப் பாத்து வெச்சிருக்கா. சொல்லமாட்டா... அழுத்தக்காரி!’’

‘‘நைனா!’’ என்றாள் அதட்டலாக.

‘‘நான் நோட்ஸ் கொடுக்க வந்தேன் ஆமாம்.’’

‘‘எந்தத் தெரு?’’

‘‘தெற்கு அடைய வளைஞ்சான்.’’

மாற்றிச் சொன்&னன்.

‘‘அங்க கண் டாக்டர் இருக்காரே... அந்த வூடா?’’

‘‘பக்கத்தில்’’ என்றேன்.

தன் மகளைக் கடுமையாகப் பார்த்தார். ‘‘இது ஒடுகாலி. எப்படிச் செல்லம் கொடுத்து ராஜாத்தி மாதிரி வளத்தேன் தெரியுமா? ஒரே பொண்ணு. ஆயி வேற சரியில்லை. அரைக்கிறுக்கு?!’’ அவர் சென்றதும்தான் நான் மூச்சுவிட்டேன். ஜயந்தி ‘‘ஸாரிடா’’ என்று என் தலையை மார்போடு அணைத்து, ‘‘நல்லவேளை சமாளிச்சே. லெட்டரை என்ன பண்ணே?’’ என்றாள்.

நான் வாயிலிருந்து எடுத்துக் காட்டி&னன். ‘‘வேற எழுதிக் கொடுத்துரு!’’

கன்னத்தில் முத்தமிட்டாள்.

‘‘ஆமடா’’ என்றேன் மறுதினம் ரங்கு கடையில்.

‘‘எப்படி இருந்தது?’’ ‘‘ஜில்லுனு இருந்தது வாசனையா..’’

‘‘உதைபடப்போறே. மஞ்சச் சட்டையும் மாட்டப் போறான். அந்தாள் காளிதாஸ்... யாரு தெரியுமோ? கள்ளுக்கடைக் குத்தகைக்காரன். நுங்கு சீவறாப்பல சீவிடுவான்.’’

‘‘நான் முட்டாளில்லை ரங்கு. தெற்கு அடையவளைஞ் சான்னு தப்பா விலாசம் சொல்லிட்டு, பேர்கூடச் சொல்லலை.’’

‘‘அவ அப்பனால கண்டுபிடிக்க முடியாதுன்னு நினைக்கிறயா? பைத்தியக்காரா. அந்தப் பொண்ணு உங்காத்துக்கு வந்ததா இல்லையா?’’

‘‘ஆமாம்.’’

‘‘அவளை வேவு பாத்திருக்கமாட்டான்னு என்ன நிச்சயம்?’’

‘‘ஆமடா... சொல்லாதே எனக்கு பாத்ரூம் வரது!’’

மனசாட்சி தலையெடுத்ததை ஆர்வமும் பொறாமையும் வென்றுவிட, அந்தக் கடிதத்தைப் படித்தும் விட்டேன்.

‘என் தெய்வமே! புதன் கிழமைக்காகக் காத்திருப்பேன். வரவில்லையென்றால் என்னை மறந்துவிடவும். இறந்து போவேன்.’

மறுதினம் லால்குடி பாசஞ்சரில் பெருமாள் ஆவலுடன் எனக்குக் காத்திருந்தார். வண்டி பிளாட்பாரத்தில் நிற்பதற்குள் ''ராஜி வா இங்க வா...'' என்று அனைவரும் திரும்பிப் பார்க்கும் படி கூப்பிட்டார்.

நான் வண்டியில் ஏறிக் கொண்டதும்,

''பாத்தியா ஜயந்தியை?''

''என்ன சார்... விவகாரம் இப்படின்னு சொல்லியிருக்க வேண்டாமா? வெட்டிவம்பில மாட்டிவிட்டுட்டிங்க!''

''ஏன்... என்ன ஆச்சு?''

''அந்தாளு கோவக்காரர். துப்பாக்கியைத் தூக்கிட்டார்.''

''அவ என்ன சொன்னா?''

நான் கடிதத்தை இங்குமங்கும் பார்த்து விட்டுக் கொடுத்தேன். ''தப்பிச்சது தம்பிரான் புண்ணியம். இனிமே இந்த தூது வேலைக்கெல்லாம் என்னைப் பயன்படுத்தாதீங்க.''

''தாங்க்ஸ் ராஜி. இந்த உதவியை என்னிக்கும் மறக்கமாட்டேன். இனிமே எங்களால உனக்கு எந்தத் தொந்தரவும் வராது!''

''ஒரே ஒரு விஷயம் தெரிஞ்சுக்கலாமா?''

''தெரியும். என்னையும் அந்தப் பொண்ணையும் பொருத்த முடியலைன்னு கேப்பே. அதான் லவ். அப்புறம் புரியும். அந்தப் பொண்ணை நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். எந்த... எந்த இவனும் தடுக்க முடியாது. நீயும் தாலுகாபீஸ் வரியா?''

''ஆளை விடுங்க சார்!''

புதன்கிழமை சென்ஜோசப்பில் அரைநாள் வாராந்திர லீவு. மத்யானம் வந்ததும் ரங்கு கடையில் ஒரு அன்ருல்டு வாங்கப் போனபோது ரங்கு, ''நீ இன்னம் உயிரோட இருக்கியா?'' என்றான்.

''ஏன் ரங்கு?''

''தெற்குவீதில நம்ம சுந்தாச்சு இல்லை... மொட்டை கோபுரத்துக்குள்ள கடையில உக்கார்ந்திருப்பா&ன மஞ்சச்சட்டை போட்டுண்டு..''

''ஆமா..''

''அவனை காளிதாசுடைய ஆட்கள் ஓட ஓட விரட்டி நாயடி அடிச்சுட்டாங்களாம். அப்புறம்தான் ஆள்மாறாட்டம், சீனிவாசநகர்ப் பக்கமே போனதில்லைன்னு மூதரிச்சப்றம்தான் விட்டாங்களாம். இப்பதான் உன்னைத் தேடிண்டு நாலு பேர் வந்தாங்க. பாட்டிகிட்ட கேட்டிருக்கான். விஷயம் தெரியாம ரங்கு கடைக்கு அனுப்பிச்சிருக்கா.''

''என்னையா?''

‘‘உன் முப்பத்திரண்டு பல்லையும் பேத்துக் கைகால் எலும்பெல்லாம் முறிக்கப்போறதா சொல்லிருக்காங்க!’’

‘‘ஐயோ...’’

‘‘நீ என்னடா கிருஷ்ண பரமாத் வா? எதுக்குடா... யாரோ, யாரையோ காதல் பண்ணட்டும். நீ தூது போற? தான் கெட்டதும் இல்லாம சந்திர புஷ்கரணியையும் கெடுத்தானாம்ங்கற மாதிரி என்னைப் போட்டு ரெண்டு சாத்துச் சாத்திட்டுப் போனாங்க. நல்லவேளை, அடையாளம் சொன்னனோ... விட்டாங்க. சுந்தாச்சு மாட்டிண்டான் பாவம்.’’

‘‘என்ன அடையாளம் ரங்கு?’’

‘‘நீதான் சொல்லிருக்கியே உன் புது சி&னகிதனைப் பத்தி? மஞ்சள் சட்டை, கழுத்தில் பட்டாம்பூச்சி டை, தெப்பக்குளத்தின் பக்கத்திலன்னு...’’

‘‘ஐயோ... எதுக்குரா சொன்ன?’’

‘‘இல்லாட்டா? கொத்தா அள்ளிப்பிடிச்சுத் திருகிண்டே கேட்டா, எவனும் ஆண்டவனையே காட்டிக் கொடுத்துடமாட்டானா? மஞ்சச் சட்டை போட்டுண்டிருந்தவாளெல்லாம் அடிக்கறானுவளாம். ரொம்ப வலிச்சுதுரா. குரலே கம்மிப் போச்சே, தெரியலை?’’

எனக்கு உள்ளம் பதறியது.

‘‘இன்&னரம் உன் புரொபசர் காலி. கிறிஸ்தவாளா? எரிப்பாளா, புதைப்பாளாடா?’’

நான் மற்ற எதையும் யோசிக்காமல் பஸ் ஸ்டாண்டுக்கு ஓடி மெயின்கார்ட் கேட்டுக்கு டிக்கெட் எடுத்து தெப்பக்குளத்தருகே புரொபசரின் ஆஸ்தான இடத்துக்கு ஓடி&னன்.

காலியாக இருந்தது.

அருகே பதினைந்து அடி தள்ளி ‘புரொபசர் யோகேச்வரன், ஆரூட நிபுணர்’ என்று ஒருவர் நின்று விவசாயிகளுக்கு ரேகை பார்த்துச் சொல்லிக் கொண்டிருந்தார்.

‘‘ஐயா, இங்க புரொபசர் பெருமாள் ராஜ்னு...’’

‘‘அவரை புதன்கிழமைலருந்து காணலைப்பா. ஏதாவது தகவல் தெரியுமா... யாரோ சொன்னாங்க?’’

நான் மேலே கேட்க விருப்பமின்றி நொந்து போய் தொய்ந்துபோய் தெப்பக்குளத்தின் பக்கத்துக் கட்டைச் சுவரில் சாய்ந்து கொண்டு தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தேன்.

அதற்கப்புறம் பெருமாளை நான் பார்க்கவில்லை. ஜயந்திக்கு என்ன ஆச்சு? விசாரிக்க ஸ்ரீனிவாச நகர் போக தைரியம் இல்லை. கால்வருடப் பரீட்சை முடிந்து மைக்கெல்மாஸ் லீவு விட்டிருந்தார்கள். ஒவ்வொரு முறையும் தெப்பக்குளத்தைக் கடந்து செல்கையில் அந்த வெற்றிடத்தைக் குற்ற உணர்ச்சியுடன் பார்த்துக் கொண்டுதான் செல்வேன். லீவு முடிந்து மறுபடி காலேஜ் போவதில் அசதியுடன் வருத்தமும் இந்த முறை இருந்தது. இப்போதெல்லாம் ஜன்னலோரம் ஸீட் கிடைத்தால் பட்டென்று உட்கார்ந்துவிடுகிறேன். சீட்டாட்டத்தைக் கவனிப்ப தில்லை. திருப்புகழ் பஜனை டிரெய்னில் ஏறுவதில்லை.

வியாபாரிகளும் பிச்சைக்காரர்களும் வண்டி தாவிக் கொண்டிருக்க, அவர்களைக் கவனிப்பதை நிறுத்திவிட்டேன். நான் உண்டு என் படங்கள் உண்டு. லால்குடி பாசஞ்சர் எனக்குப் பொலிவிழந்து விட்டது.

ஒரு முறை 'ஐயா... சிறுபெண் ஏழையென்பால் மனமிரங்காதா?' என்று ஒரு பிச்சைக்காரச் சிறுமியின் 'கணீர்' பாடலும் அவள் தோளில் கைவைத்த பிச்சைக்காரனும் என் கவனத்தைக் கவர்ந்தார்கள்.

காரணம், அவனும் அந்தப் பெண்ணும் தம் ஏழ்மைக்குப் பொருத்தமில்லாத சட்டை அணிந்திருந்தார்கள். மஞ்சள் சட்டை.

''இங்க வாய்யா... இந்தச் சட்டையை யார் கொடுத்தாங்க?''

''உங்க மாதிரி ஒரு சீமானுங்க. பெரிய மனுசங்க. முன்னல்லாம் நெதம் இந்த வண்டிலதான் வருவாரு. ரேகை பாக்கறவரு. ஒரு நா என்னைக் கூப்ட்டு ஆறு சட்டை மஞ்ச கலர்ல கொடுத்தாருங்க'' என்று அடுத்த பெட்டிக்குத் தாவினான்.

நான் இதன் முழு அர்த்தம் புரியாமல் திகைத்துக்கொண்டிருக்க... ''ரங்கராஜி'' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டேன்.

புரொபசர் பெருமாள்ராஜ் முழுவதும் மாறியிருந்தார். மஞ்சள் சட்டை கிடையாது. கருநீல அரைக்கை சட்டை. கிராப்பை மாற்றி நேர் வகிடெடுத்திருந்தார். வெயில் கண்ணாடி அணிந்திருந்தார்.

''கம்பெனி ரெப்பா இருக்கேன் ராஜி.''

''சார்... ரொம்ப பயந்து போய்ட்டேன். உங்களுக்கு ஒண்ணும் ஆகலியே?''

''தப்பிச்சேன்பா. ரௌடிப்பசங்க மஞ்ச சட்டைங்களைத் துரத்தி அடிக்கறாங்கன்னு கேள்விப்பட்டதுமே கம்ப்ளீட்டா அடையாளம் மாறிட்டேன். இப்ப என் பேரு ராஜ்மாள்.''

''ஜயந்தி?''

''பத்திரமா புள்ளம்பாடில இருக்குது. யாருக்கும் சொல்லாதே. காளிதாஸ் ஆளுங்க இன்னும் தேடிக்கிட்டிருக்காங்க. ஒரு முறை வீட்டுக்கு வா. கொஞ்சம் களைப்பில இருக்கு. பொண்ணு பொறந்தா ராஜின்னும்.. பிள்ளைன்னா ரங்கராஜின்னும் வெக்கப் போறேன்.''

''ரங்கராஜன் சார்'' என்றேன்.

# 25. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - ராமன்



தொத்தார் பூங்குழல்
கன்னி ஒருத்தியை
சோலைத்தடம்
கொண்டுபுக்கு
முத்தார்
கொங்கைபுணர்ந்து
இராநாழிகை
மூவேழு சென்றபின்
வந்தாய்...
- பெரியாழ்வார்

புண்ணியத்தலமானதால் ஸ்ரீரங்கம் தொழில்துறையில் முன்&னறவில்லை. அரங்கநாதப் பெருமாள் சார்ந்த சிறுதொழில்கள் தான் அதிகம். தொன்னை தைப்பார்கள். கதம்பம்

மல்லிகை பூ கட்டுவார்கள் பூப்பல்லக்கு கட்டுவார்கள். சந்தனம் அரைப்பார்கள். தெற்குவாசலில் புனுகுப்பூனை வைத்து வாசனைத் திரவியங்கள் தயாரிப்பார் ஒருவர். தேர் இழுக்க வடம் கொண்டுவருவார்கள். சீசந்திக்கு கிருஷ்ணன் கோட்டை வாசலில் சுண்ணாம்பு அடித்து, மீசை வைத்த ஆசாமிகள் பொட்டுவைத்த பெண்கள் சித்திரங்களைக் காவி வண்ணத்தில் வரைவார்கள். சிறு தொழில்கள்தான் இருந்தன. எஸ்.எஸ்.எல்.சி. வரை நான் பார்த்த சிக்கலான தொழில்நுட்பங்கள் சாணை பிடிப்பதும் தரையில் துருத்தி வைத்து ஈயம் பூசுவதும்தான். ஒரு டார்ச்லைட் ரிப்பேருக்குக்கூட கோட்டைக்குத்தான் செல்லவேண்டும். திருச்சியும் அப்படி ஒன்றும் பெரிசாக முன்&னறவில்லை. காவிரிப் பாசனத் தால் நெல், நெல், நெல், வாழைதான். கரும்பு ஆரம்பித்திருந்தது. மின்சார மீட்டர்கள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலை இருந்தது. சில பல லேத்துப்பட்டறைகள் இருந்தன. ஜங்ஷன் போகும் வழியில் டி.வி.எஸ். இருந்தது. கோல்டன் ராக் - பொன்மலையில் ரயில்வே வொர்க் ஷாப். ராமகிருஷ்ணா தியேட்டர். எதிரில் ஹாட்டின் பீடி தொழிற் சாலை. உறையூரில் சுருட்டு... அவ்வளவுதான். பி.எச். இ.எல்., ஸ்மால் ஆர்ம்ஸ் ஃபாக்டரி எல்லாம் வராத நாட்கள். திருச்சி ஒரு கல்வி மையமாகத்தான் பெயர் பெற்றிருந்தது.

இந்தச் சூழ்நிலையில் ஆர். வீர ராகவ ஐயங்கார் ஒரு புரட்சியைத் துவக்கி வைத்தார் என்றுதான் சொல்ல வேண்டும். ஸ்ரீரங்கத்தை ஒரு தொழில் பேட்டையாக்கும் முன்னோடியாக விரும்பினார். ரயில்வே கேட் தாண்டி அந்தப் பக்கம் இருந்த ஹ்யூம் பைப் கம்பெனியை பெரிசாக தொழிற்சாலை என்று சொல்லமாட்டேன். பெரிய வட்டவடிவ கான்க்ரீட் குழாய்கள் எங்கோ பாதாள சாக்கடை போடுவதற்கு இங்கே போட்டு அனுப்பப்பட்டன. மற்றபடி தென்னஞ்சோலை. அதில் அவருக்கு தோப்பு இருந்தது.

அங்கே ‘வி.ஆர். இண்டஸ்ட்ரீஸ்’ என்று ஆரம்பித்து முதன் முதலாக, இப்போது எங்கு பார்த்தாலும் சீப்படுகிறதே கிரைண்டர்கள், அவற்றை மோட்டாருடன் தயாரிக்கத் தொழிற்சாலை நிறுவினார். வீயார்தான் மா&னஜிங் டைரக்டர் அவர் மச்சினன் தேவநாதன் பார்ட்னர், ஆடிட்டர், அக்கௌண்டண்ட் எல்லாம். மகன் கோபால் என் க்ளாஸ்மேட், எம்.ஐ.டி-யில், வெகு வேகமாக ஓடிவந்து ரொம்ப ஸ்லோவாக ‘போல்’ பண்ணுவான் அவன். இதைப் பற்றிக் கவலைப்படாமல் அப்பாவின் ஃபாக்டரியைப் பற்றிக் கேட்கும்போது ‘போது

போகலை... அது என்னவோ பண்ணிண்டிருக்கு!' என்று அஃறிணை யில் பேசுவான். ஒருமுறை போய்ப் பார்த்தேன். அஸ்பெஸ்டாஸ் கூடத்தில் சுறுசுறுப்பாக இருந்தது. ஒரு ஓரத்தில் காயில் சுத்தும் கைமெஷின்கள் இருந்தன. மற்றொரு புறத்தில் பெஞ்ச் வைஸ் வைத்துத் தட்டிக்கொட்டி டின்ஸ்மித்துகள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். பிறிதோர் ஓரத்தில் மோட்டார்களை அசெம்பிள் பண்ணிக்கொண்டிருந்தார்கள். அசெம்பிளி இன்ஸ்பெக்டர் ஒருவர் காதில் பென்சில் வைத்துக்கொண்டு எல்லோரையும் அதட்டிக் கொண்டிருந்தார். ஓவராலில் நான்கைந்து திருவானைக்காவல் பெண்கள் உலவினார்கள். பேக்கிங் செக்ஷன் தனியாக இருந்தது. பூர்த்தி செய்த கிரைண்டர்கள் ஓரத்தில் பளபளப்பாகக் காத்திருந்தன. தார் உருகிய வாசனை, டர்ப்பண்டைன் வாசனை, சால்டரிங் ஈயம் உருகும் வாசனை, கெரசின் வாசனை... எல் லாம் விரவியிருந்தது. ஒரு கண்ணாடித் தீவின் உள்ளே வி.ஆர். உட்கார்ந்து போன் பேசிக்கொண்டிருந்தார்.

சுமார் பத்துப் பன்னிரண்டு தொழிலாளர்கள், லாளிகள். தொழில் நுட்பம் வீ.ஆருடையதே. அவர் வடக்கே மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் படித்தவராம். மிலிட்டரியில் இருந்திருக்கிறார். இரண்டாவது உலக யுத்தத்தில் எகிப்தில் சண்டைபோட்டிருப்பதாக ரங்குவிடம் சொல்வார். அவனுக்கு அவரிடம் இருந்த சில அம்கு போட்டாக்கள் மீது பிரேமை. ஒரு தடவை காட்டியிருக்கிறான், ஷூவைக் கழட்டாமல் கெட்டகாரியம் பண்ணும் ஜோடிகள்.

வி.ஆரைப் பார்த்தால் தொழிலதிபர் போல் தெரியாது. நெற்றியில் ஒற்றை ஸ்ரீசூர்ணம், சாம்பு மூக்கு, வேஷ்டி, கோட்டு. ஒரு கிளார்க் மாதிரி இருப்பார். நல்ல செயல்திறன் உள்ளவர். மோட்டார் ஆர்மேச்சர், காயில் சுத்துவது டரான்ஸ்ஃபார்மர் டிஸைன் பட்றை வேலைகள் எல்லாம் அவருக்குத் தெரிந்திருந்தது. மற்ற சாமக்கிரியைகள் கல்லுரல் தகரஃப்ரேம் தற்கால டில்டிங் கிரைண்டர்களுடன் ஒப்பிட்டால் அவர் செய்தது புராதனம் ஆனாலும் அவருக்கு கோவையிலிருந்தும் மதுரையிலிருந்தும் ஆர்டர்கள் இருந்தன. ஒருமுறை ரங்கு கடையில் வீ.ஆரைப் பார்த்தேன்.

''என்ன ஓய் கொழிக்கிறீராமே... ஏண்டா நீயும் இன்ஜினீயர்தா&ன இவர் கம்பெனியில சேர்ந்துடேன். எதுக்கு டெல்லிக்கெல் லாம் இண்டர்வியூ போயிண்டு லோல் பட்டுண்டு...'' என்றான்.

வி.ஆர். என்னைப் பார்க்காமல், ''ரங்கு! எனக்கு எஸ்.எஸ்.எல்.சி., டிப்ளமா ஆசாமிகள் போதும். என் பையனையே சேர்த்துக்கலையே... இவாள்ளாம் அதிகம் படிச்சவா.''

''ஃபாக்டரி எப்படிப் போயிண்டிருக்கு?''

''எல்லாம் ரங்கநாதன் கிருபை'' அவர் இங்குமங்கும் சதிப்பார்வை பார்த்து, ''ஒரு ரகசியம் காப்பாத்து வியா?''

''காப்பாத்தறேன்... எங்கம்மா மேல சத்தியம்! சொல்லும்.''

''உங்கம்மா போய் பத்து வருஷம் ஆச்சேடா.''

''பரமபதத்தில் தினப்படி அக்கார அடிசில் சாட்டுண்டு இருக்கா. ராத்திரி கனால வரா. சொல்லும்.''

''சத்தியமா. இங்க உள்ளவா யார்ட்டயும் சொல்ல மாட்டயே?''

‘‘ரங்கு, நான் புறப்படறேன்’’ என்றேன்.

‘‘இருப்பா... நீயும் இரு! ரங்கு எனக்கு கோயமுத்தூர்லருந்து ஒரு பெரிய ஆர்டர் வந்திருக்கு. எட்டு லட்சம் ரூபாய்க்கு.’’

ரங்கு தாழ்வாகச் சீட்டியடித்தான்.

‘‘அவா லேபலைப் போட்டுண்டு சிங்கப்பூருக்கு எக்ஸ்போர்ட் பண்றா. போட்டுக்கட்டுமே. நாய் வித்த காசு குலைக்குமா என்ன? யார்கிட்டயும் சொல்லாதே ரங்கு.’’

‘‘ரொம்ப சந்தோஷம். என் சின்ன மச்சினனுக்கு எதாவது வழிபண் ணுமே. கழுதை, மண்டபத்தில உக்காந்துண்டு பங்கி அடிச்சிண் டிருக்கான். வேலை போட்டுக் கொடுத்தா சந்தோஷப்படுவேன்.’’

‘‘பேர் என்ன?’’

‘‘ராமன்.’’

நான் ‘ஐயோ’ என்று வாய் பொத்திக்கொண்டேன். ராமனை எனக்குத் தெரியும்.

‘‘அனுப்பு. பேக்கிங் கேஸ்ல அட்ரஸ் எழுதற வேலை. கோணிஊசி, சாக்குப்பை தச்சு பேக் பண்ணணும்.’’

‘‘எட்டூருக்குப் பண்ணுவன். படிக்கலையே தவிர பதவிசு.’’

‘‘ராமனா.’’

‘‘சும்மார்றா சும்பா.’’

அவர் போனதும் ‘‘ரங்கு, அநியாயம். ராமனையா அனுப்பப்போற? தூணுக்கு புடவை கட்டிருந்தாகூட விடமாட்டா&ன.’’

‘‘மாறிட்டாண்டா. இப்பல்லாம் சொன்ன பேச்சு கேக்கறான். வேளைக்கு வந்து கொட்டிக்கறான். என் ஆம்டையாளுக்கு ஒத்தாசையா டீத்தூள், நெருப்புபெட்டி, ரேஷன் அரிசி எல்லாம் வாங்கிண்டு வரான். அந்த கன்னியப்பன்கிட்ட உதை வாங்கினப்புறம் பொம்மனாட்டி பக்கமே திரும்பறதில்லை. அவாள்ளாம் தெய்வம்ங்கறான். என்ன கொஞ்சம் காசு திருடுவான். அலமாரில நாலணாக்கு மேல வெக்கக்கூடாது!’’

‘‘அவனா?’’ என்று உறுமிவிட்டு வந்தேன்.

ராமன் கீழசித்திரைவீதியிலும் வடக்கு வீதியிலும் கைவைக்க முயற்சிக்காத பெண்களே கிடையாது! ஓவர்சியர் பெண் மாலாவிலிருந்து ஆரம்பித்து செவளா என்கிற வீதி கூட்டுகிற பெண், பரட்டைத்தலை பைத்தியக்காரி முத்தம்மா வரை வயசு, ஜாதி, மனநிலை எந்த வித்தியாசமும் பார்க்காமல் ‘இதுமட்டும் கெடைச்சா...’ என்று முணமுணத்துக்கொண்டே கடையில் காலாட்டி உட்கார்ந்து கொண்டு கையாண்ட அழிச்சாட்டியன். ‘அவனைப்போய் ஃபாக்டரி வேலைக்கு அனுப்ப ரங்கனுக்கு பைத்தியம் பிடித்திருக்க வேண்டும். அதும்

பெண்கள் வேலை செய்யும் ஃபாக்டரிக்கு' என்று எண்ணி&னன். மச்சினனானதால் கண்ணை மறைக் கிறது. வீ.ஆரிடம் சொல்விடலாம் என்றுதான் யோசித்தேன். அதற்குள் ராமன் ஃபாக்டரியில் சேர்ந்து விட்டான்.

பின் நான் ஒருமுறை டெல்லிக்கு யு.பி.எஸ்.சி. இண்டர்வியூவுக்குப் போய்த் திரும்பி வந்தபோது கடையில் வீ.ஆர். உட்கார்ந்திருந்தார். பெரிசாக ரங்குவிடம் வாதாடிக்கொண்டிருந்தார். ''போக்கடா ராஸ்கல்டா உம்மச்சினன். ஃபாக்டரில இருக்கற நாலு பெண் களையும் ட்ரான்ஸ்ஃபார்மர் காச்சற சேம்பர் பின்னாலயே... சேச்சே, இத்தனை மோசமான ஆளுன்னு முன்னாலயே சொல்லிருக்கணும் ரங்கு!''

''சரி... விடும்! அவனை நான் கண்டிச்சு வெக்கறேன்.''

''கண்டிச்சாவது... சீட்டைச் கிழிச்சுட்டேன். இன்னும் பத்து நாள் இருந்தா நாலையும் புள்ளைத்தாச்சி ஆக்கிடுவான்'' அவர் போனதும்,

''என்னாச்சு ரங்கு'' என்றேன்.

''ஒண்ணுல்லை! இவர் பெரிசு பண்றார். ராமன் போய் ஃபாக்டரில ரெண்டு மூணு குட்டி களோட கொஞ்சம் விஷமம் பண்ணிருக்கான். அதுல ஒண்ணு புருஷன்காரன் அருவாளைத் தீட் டிண்டு அவரை வெட்ட வந்துட்டான்.''

''என்ன ரங்கு, சாதாரணமா சொல்றே?''

''என்னடா இப்ப? இவன்தான் கையைப்புடிச்சு இழுத்தா அந்தப் பொண்ணுகளுக்கு புத்தி எங்க போச்சு?''

அப்போது ராம&ன, ''அத்திம்பேரே! ஒரு எட்ணா குடுங்க அர்ஜண்டா. சக்கரத்தாழ்வாருக்கு வெளக்கேத்த நெய் வாங்கணும்'' என்று வந்தான்.

''படவா! நெய்யா வாங்கறே? என் வார்த்தைக்கு மதிப்பு வெச்சு வீரராகவ மாமா ஃபாக்டரிக்கு சேத்துண்டப்ப... தலை குனிய வச்சுட்டியே ராமா.''

ராமனைப் பார்த்தால் பெண் களிடம் அவன் வசீகரம் உட&ன புரியும். மல் ஜிப்பா. கழுத்தில் துவளும் சங்கிலி. கன்னத்தில் அதக்கிய பன்னீர்புகையிலையின் கம். உதட்டில் லேசான வெற்றிலைக்காவிக்கறை. ஒழுங்கான பல்வரிசை. அப்படி ஒரு கொள்ளைகொள்ளும் சிரிப்பு. கனமான அழுத்தமான பாடிக்காட்டி விடக்கூடிய குரல் வளம். குறும்புத் தனமான கண்கள். கண்ணன் என்று பெயர் வைத்திருக்க வேண்டும்.

''அண்ணா, எப்படி இருக்கே? வேலை ஏதவாவது கெடைச்சுதா? நான்வேணா ஏற்பாடு எண்ணட்டுமா? நங்கவரம் பண்ணைல ஒரு பெரிய ஃபாக்டரி திறக்கபோறா.''

''ஒண்ணும் வேண்டாம். உனக்கு கொடுத்த வேலையை தக்க வெச்சுக்கோ முதல்ல!'' என்றான் ரங்கு. அவனுக்கு ரொம்ப கோபம். ராமன் அருகே வந்ததுமே ஒரு கலந்த வாசனை தூக்கியது. லட்சணமான போக்கிரி.

அப்போது ஒரு ஹைஸ்கூல் பெண் வந்து, ''மாமா, நாப்பது பக்கம் அன்ரூல்டு இருக்கா?''

''உனக்கில்லாமயா எச்சுமி'' என்று நோட்டை எடுத்து, கூட ஒரு காகித பென்சில், ரப்பர் எல்லாம் சேர்த்து அவளைக் கையைத் தொட்டுத் தடவிக்கொடுத்தான். ''எத்தனாவது படிக்கறே?''

''பத்தாவது மாமா.''

''அடுத்த வருஷம் எஸ்.எஸ்.எல்.சி. போகணும்.''

''ஆமாம் மாமா.''

''நன்னா படிக்கறயா? வயசுக்கு வந்துட்டியா? கோம்பளி எப்படி இருக்கா?''

''அக்கா சீவில்லிபுத்தூர் போயாச்சே.''

''பிரசவத்துக்கு வருவாளோல் லியோ?''

அவள் போவதைக் கண்களால் தொடர்ந்தான்.

ரங்கு, ''யார்றா கோம்பளி?'' என்றான்.

''இதுன் அக்கா கோமளா. நின்னு விளையாடும். முதல்ல ரங்கநாயகி. அப்புறம் அலமேலு. அப்புறம் கோம்பளி. அப்புறம் எச்சி. அதுக்கடுத்தது ஒண்ணு இருக்கு. பட்டுபட்டுங்கறா. முழு பேர் இன்னம் தெரியலை. பட்டாபிக்கு அஞ்சும் பொண்ணு. பீஜத்தில எதோ இருக்கு. அத்திம்பேரே, நீரும்தான் வருஷா வருஷம் முக்கறீர்... ஒரு புழு பூச்சி?'

என்னைப் பார்த்துக் கண்சிமிட்டி ''ரங்கநாயகிலருந்து எல்லாத்தையும் பாத்தாச்சு!'' என்றான்.

''புளுகு'' என்றேன் பொறாமையுடன்.

''ஒவ்வொண்ணும் அப்படி ஒரு அட்டகாசமான கட்டை. வரட்டும் விசாரிக்கறேன்.''

''பிள்ளைத்தாச்சியையா டேய்!''

''அதனால என்ன?'' என்றான். ''இப்பவே எவ்வளவு தலைமயிர் பாரு இதுக்கு... சாட்டை மாதிரி.''

''உன்னைப் பத்தித்தான் ராமா பேசிண்டிருந்தோம்.''

''என்னைப் பத்தி நல்லதா எதும் அத்திம்பேர் சொல்லமாட்டாரே...''

''அத்திம்பேர்னு கூப்டாதே. வம்சத் துரோகி. இப்ப அவருக்கு எட்டு லட்சம் ரூபாய்க்கு ஆர்டர் வந்திருக்கு. நீ மட்டும் அவர்கிட்ட ஒழுங்கா வேலை செய்திருந்தே... இந்நேரம் எங்கேயோ போயிருப்ப...''

''என்னது? எட்டு லட்சம் ரூபாயா?'' என்றான். அவன் கண்கள் விரிந்தன.

ரங்கு துணுக்குற்றான். வாக்கு மீறிவிட்டான். ''அதென்னவோ... சொன்னார். எனக்கு சரியா காதில விழலை.''

''எட்டு லட்சம் ரூபாயா? அடடா! தெரியாமப் போச்சே. அதான் அரசல் புரசலா எக்ஸ்போர்ட் ஆடர்னு பேசிண்டா. அப்படியா சேதி... ம் பாத்துர்றேன்.''

''வேண்டாம்டா. வாக்கு கொடுத்திருக்கேண்டா. யார்கிட்டயும் சொல்லலைன்னு!''

''பின்ன ஏன் என் கிட்ட சொன்னீங்க?''

''வாய் தவறி வந்துடுத்து. நீ அங்க போய் எதாவது வில்லங்கம் பண்ணி வெக்காதே.''

''நான் எதுக்கு பண்றேன். எனக்குத்தான் சொட்டை சீட்டுக் கிழிச்சுட்டா&ன. எட்டு நாளைக்கு வேலை செஞ்சிருக்கேன்... ஆறுநாள் சம்பளம்தான் கொடுத்தான். ஒரு நோட்டீஸ் உண்டா... ஒரு வார்னிங் உண்டா?'' என்று ராமன் தலையை ஆட்டிக் கொண்டே சென்றான். ''இரு.. இரு..''

அடுத்த வாரம் எனக்கு ஓ.சி.எஸ். வேலைக்கு யு.பி.எஸ்-ஸிலிருந்து இண்டர்வியு கார்டு வந்ததும், மறுபடி டெல்லிக்குப் போக வேண்டி இருந்தது. வி.ஆர். கடைக்கு வந்தபோது ரொம்ப உற்சாகமாக இருந்தார். ''சொன்ன டயத்தில் சப்ளை பண்ணிட்டேன். கஸ்டமர் ரொம்ப ஹாப்பி. ரங்கு, என் மச்சினன் கீழ நாராயணன்னும் ரங்கநாதன்னும் அக்கௌண்டண்ட் இருக்காங்க. அப்பழுக்கில்லாம பளிங்கு மாதிரி கணக்கு. ஒவ்வொரு வவுச்சரும் தேதி வாரியா ஃபைல்பண்ணி வெச்சிருக்கான். கமர்ஷியல்டாக்ஸ் ஆபீஸருக்கு ஸ்டேட்மெண்ட் அனுப்பிச்சிருக்கோம். பாரு... பாத்துட்டு அவருக்கு ரொம்ப சந்தோஷம். கண்ல ஒத்திண்டு 'வீர்ராகவன், நோ ப்ராப்ளம் அட்ஆல். உட&ன க்ளியர் பண்ணிடறேன். என்னை வந்து ஆபீஸ்ல பாருங் கோ'ன்னு கூப்ட்டிருக்கார். ரங்கு, நான் பாக்யம் பண்ணவண்டா. சுத்துப்பட்ட மனுசாள்ளாம் ரொம்ப நல்லவா. ஒவ்வொருத்தனும் ஜெம், உன் மச்சினனைத் தவிர.''

''அவன் பேச்சை எடுக்காதேயும். என்னவோ உமக்கு நல்லது நடந்தா ஸ்ரீரங்கத்துக்கே நல்லது. ஃபாக்டரி பெரிசாயி ஸ்ரீரங்கத்தில பல பேருக்கு வேலை கொடுப்பீர்..''

''தாராளமா. அடுத்த வருஷம் நூறு பேரை ரெக்ரூட் பண்றதா ப்ளான். இந்த வருஷம் டாக்ஸ் போக நெட் ப்ராஃபிட் என்ன தெரியுமோ? '' ரங்கன் காதருகில் சொன்னார்.

அவன் ''இஸிட்!'' என்று வியந்தான். ''ஸ்ரீரங்கத்தில திண்ணை தேச்சுண்டிருக்கற அத்தனை மிராசுகளையும் அடிச்சுட்டீர்.''

அதன்பின் ஒரு வாரம் நான் அவரைப் பார்க்கவில்லை. தஞ்சாவூர் டீம் ஒன்று எங்களுடன் மேட்ச் ஆட வருகிறார்கள் என்று கேவி ஒரு டீம் தயாரித்துக் கொண்டிருக்க... நெட் ப்ராக்டீசில் பிசியாக இருந்துவிட்டேன். நான்தான் ஓபனிங் போக வேண்டும் என்று கேப்டன் அம்பி சொன்னான்.

ஒரு சாயங்காலம் ப்ராக்டீஸ் முடிந்து களைத்துத் திரும்பியபோது வி.ஆரும் களைத்துப் போய் கன்னத்தில் கைவைத்து உட்கார்ந்திருந்தார்.

என்னைப் பார்த்ததும், ''ரங்கு, உனக்கு கமர்ஷியல் டாக்ஸ் ஆபீஸ்ல யாரையாவது தெரியுமா?''

''தெரியாதே...''

''உங்கப்பா என்னவா இருக்கார்?''

''அவர் எலெக்ட்ரிசிட்டி டிபார்ட்மெண்டலன்னா இருக்கார். என்ன ப்ராப்ளம் ரங்கு?''

வி.ஆர். என்னை வேதனையுடன் பார்த்தார். ''பிக் ப்ராப்ளம், வெரி பிக் ப்ராப்ளம்...''

''என்னாச்சு...''

''ஏன் கேக்கறே... அன்னிக்கு ஆபீஸரை போய் பார்த்தேனா, அவன் முதல்ல என்ன சொன்னான்? கணக்கெல்லாம் சரியாத்தான் இருக்கு. க்ளியர் பண்ணிடறேன்னுதா&னா? இப்ப ரெண்டாயிரம் ரூபாய் கொடும்னான். நான் கணக்கு வழக்கெல்லாம் சரியா இருக்குன்னா எதுக்கு ரெண்டாயிரம் கொடுக்கணும்&னன்?''

''சரி, அப்டின்னா நாளைக்கு வந்து லெட்டர் வாங்கிண்டு போம்னான். செவ்வாக்கிழமை மூணு - நாலரை ராகு காலத்தில போ&னன். அவன் லெட்டர் டைப் அடிச்சு கொடுத்திருக்கான் பாரு, மோட்டார் எக்சைஸபிள் அயிட்டமாம். க்ளாசிபிஃகேஷன் சரியில்லையாம். அம்பதாயிரம் டாக்ஸ் பாக்கி கட்டிருக்கணுமாம். உட&ன கட்டினா கிளியரன்ஸ் தரேன்னான்.''

''கணக்கெல்லாம் சரியா இருந்துமா...''

''யார் கேக்கறது? ஏதோ ஒரு ஆக்ட்ல ஏதோ ஒரு கிளாஸை கோட் பண்றான்.''

''பேசாம ரெண்டாயிரம் ரூபாயை கொடுத்துர வேண்டியதுதா&ன...''

''எதுக்கு கொடுக்கணும்? கணக்குல தப்பு பண்ணேனா.. ஒவ்வொரு அயிட்டத்துக்கும் சின்னத் திருகாணி விடாம டேட் வாரியா வவுச்சர் காட்டி சேல் டாக்ஸ், சென்ட்ரல் - ஸ்டேட் டாக்ஸ் லொட்டு லொசுக்கு எல்லாம் காட்டி...''

''அதாவது இரண்டாயிரம் லஞ்சம் கேக்கறான்... மாட்டேங்கறீர்..''

''எதுக்கு கொடுக்கணும்... வென் மை அக்கௌண்ட் இஸ் ஃப்ளாலெஸ்? அப்புறம் ரெண்டாயிரத்தோட நிறுத்துவான்னு என்ன நிச்சயம்கறேன்?''

''இப்ப என்ன?''

''வக்கீல்கிட்ட கேட்டேன். உட&ன கமிஷனருக்கு அப்பீல் போட்டிருக்கார். இந்த ஆர்டரை எதிர்த்து பெட்டிஷன் கொடுத்திருக்கேன்.''

''அவ்வளவுதா&ன..?''

''தீர்ப்பாற வரைக்கும் அம்பதா யிரத்துக்கு பேங் கியாரண்டி கொடுக்கணுமாம்.''

''கொடுத்தீரா?''

''வேற வழி? என்ன ஒரு அநியாயம் பார்த்தியா. ப்ளெட்ஜ் பண்ணி கடன் வாங்கி&னன். அம்பதாயிரத்தைப் போட்டு எடுக்க முடியாது. சே... இந்த தேசத்தில ஒருத்தன் ஜனங்களுக்கு நல்லது பண்ண நெனச்சா, அதிகாரிகள் கரப்டா இருக்கறதால...''

''எனக்கென்னவோ ரெண்டாயிரத்தோட தொலையறதுன்னு குடுத்துறலாம்னு...''

அவர் முகம் சிவந்தது. ''ரங்கு, உன்னை மாதிரி ஆசாமிகள் இருக்கறதாலதான் இந்த தேசமே உருப்படல. அநியாயத்தை எதிர்க்கணுமா இல்லையா..?''

''வேற யாராவது எதுத்துட்டுப் போறா... இப்ப உம்ம சரக்கு போச்சா இல்லையா..?''

''இல்லை ரிலீஸ் ஆகலை. அப்பல்லேட் கமிஷனர் என்ன சொல்றார்ங்கறதைப் பொறுத்தது. நான் இதை விடமாட்டேன். சுப்ரீம் கோர்ட் வரை போவேன்.'' வி.ஆர். என்னைப் பார்த்தார்.

''என்ன சொல்றே, நான் சொல்றது ரைட்டா இல்லையா?''

ரங்குவுடன் ஒத்துப் போகலாம் என்றுதான் தோன்றியது. அவர் கோபத்தில் கன்னத்தில் பளார் என்று அறைந்து விடுவார் என்று தோன்றி யது.

''நீங்க செய்றதுதான் ரைட்டு மாமா...''

''தட்ஸ் தி ஸ்பிரிட். நம்ம நாட்ல இளைய சமுதாயத்துங்கிட்டதாண்டா நம்பிக்கை இருக்கு. ரங்கு, யாரோ எக்ஸ்போர்ட் ஆர்டரைப் பத்தி கமர்ஷியல் டாக்ஸ் ஆபீஸ்ல வத்தி வெச்சிருக்கான். நானா எக்ஸ்போர்ட் பண்றேன்? கோயமுத்தூர்காரன்னா பண்றான்.''

''யார் வத்தி வெச்சானோ... யாராயிருக்கும்?''

''யாராயிருக்கும்?'' என்று ரங்கு நெளிந்தான்.

''உன் மச்சினன்ட்ட இதைப் பத்தி பேசினியா?''

''சேச்சே!'' என்று ரங்கு என்னைப் பார்த்தான்.

அவர் போனதும் ''ரங்கு, ராமன்தான் இதை செய்திருக்கணும். வரான் பாரு. ராமா, உன் மேலதான் பலத்த சந்தேகம்.''

''என்ன சந்தேகம்?''

''டாக்ஸ் ஆபீஸ்ல வத்தி வெச்சிட்டியாமே...''

''நான்தான் சொன்&னன். என்ன திட்னானா? மவ&ன... என்னை அனுப்ச்ச இல்லை, இப்பப் பாரு... ஒரு மோட்டார் போகாது. சிங்கி அடிக்கப்போறது.''

''என்னடா இப்டி பண்ணிட்டே..''

''அதெல்லாம் இரக்கம் கூடாது அத்திம்பேர். நான் என்ன தப்பு செஞ்சேன்? டீ கொடுக்கறப்ப அங்க ஒரு பொண்ணு... என்னவோ பேர் சொன்னாளே முத்தம்மாவோ அங்கம்மாவோ.. டயம் கேட்டுது.. சொன்&னன். கண்ல தூசின்னுது ஊதி&னன். புடவை தலைப்பை வெச்சு ஒத்தடம் கொடுத்தேன். இது தப்பா? ரவிக்கை பட்டன் போட்டுவிட்டேன்.''

''அவர் என்னமோ நீ ட்ரான்ஸ்ஃபார்மர் பின்னால அழைச்சுண்டு போனதா?''

''ஆமாம்! எல்லாருக்கும் முன்னால பட்டன் போட்டுவிட முடியுமா... அதும் கல்யாணம் ஆன கட்டை.''

''கேக்கவே நன்னால்லை ராமா..''

''இப்ப கூட அவர் எனக்கு வேலை தரவேண்டாம். கூட்டு வெச்சு வேலை குடுக்க ஆள் இருக்கு எனக்கு. என்னை எல்லாருக்கும் முன்னால அவமானப்படுத்தினது தப்புன்னு மன்னிப்பு கேக்கட்டும்... அவர் டாக்ஸ் பிரச்னையை தீர்த்து வெக்கறேன்னு சொல்லு!''

''ஒப்புத்துக்கமாட்டார். சுப்ரீம்கோர்ட் வரை வாதாடப் போறேன்னு சொல்லிருக்கார்.''

அலகாபாத்தில் டிரெயினிங் எடுத்து முடிந்து கல்கத்தா, பம்பாயில் பிராக்டிக்கல் போய்விட்டு மீனம்பாக் கத்தில் போஸ்டிங் பெற்று திரும்பி வர... நடுவே ஒரு வாரம் ஜாய்னிங் டைமின்போது ஸ்ரீரங்கம் வந்திருந் தேன்.

முதல் காரியமாக ''வி.ஆர். ஃபாக்டரி என்ன ஆச்சு?'' என்று ரங்குவைக் கேட்டேன்.

''வி.ஆர். போயிட்டாரே.. தெரியாது? 'இண்டு' ஆபிச்சுவரிலகூட வந்திருந்ததே.''

''அடப்பாவமே! எனக்கு தெரியாத போச்சே ரங்கு. வடக்கே போய்ட் டனா.. அந்த கேஸ் என்ன ஆச்சு?''

''அது இழுக்கடிச்சுது. அப்பெல் லேட் கமிஷனர் சாதகமாத்தான் தீர்ப்பு கொடுத்தார். இந்த பிராமணன் போய் ஆபீஸர் ரூம்ல போய் சத்தம் போட்டுட்டு, கன்னாபின்னான்னு அவனைத் திட்டியிருக்கார். கியாரண்டியை ரிலீஸ் பண்றதுக்கே முதல்ல இழுத்தடிச்சான். அப்புறம் அவரையே அந்த ஆபீஸர் கூப்ட்டனுப்பிச்சான். ஏன் இந்த மாதிரி பிடிவாதமான இருக்கீர்? பேசாம ரெண்டாயிரம் ரூபா கொடுத்திருந்தா உம்ம ஃபைல் எல்லாத்தையுமே பாஸ் பண்ணியிருப் பேனில்லையா. அடுத்த கன்ஸைன் மெண்டையும் அதே காரணத்துக்காக நிறுத்தி வெக்கப் போறேன்னானாம்.''

''இதனால ரொம்ப நொந்து போய் பி.பி. எகிறிப்போய் எட்டு வருஷமானாலும் சரி, நியாயம் என் பக்கத்தில இருக்கறதால சொத்தையெல்லாம் அழிச்சுட்டு உன்னை மாதிரி கரப்ட் ஆசாமிகளை காட்டிக் கொடுத்துட்டுத்தான் மறு காரியம்னு கத்திட்டு வந்திருக்கார். அன்னி ராத்திரியே செரிப்ரல் எமர்ரேஜ் வந்து பதினஞ்சு நாள் கோமாவில இருந்து போய்ட்டார்.''

''ஐயோ, பாக்டரி என்ன ஆச்சு?''

''அவர் பையன் - உன் க்ளாஸ் மேட் கோபாலன்தான் எடுத்து நடத்தறான். நீயே போய்ப்பாரேன்.''

போனபோது கோபு, ''வா ரங்குஸ்கி... எப்படி இருக்க? டேய் டீ கொண்டாப்பா.''

''உங்கப்பா போய்ட்டாராமே... ரொம்ப சாரிடா கோபு. அவர்னா உதாரண புருஷர். ரொம்ப பிரின்சிப்பிள்டு மேன். கடைசி வரைக்கும் விட்டுக் கொடுக்காம லஞ்சம் கொடுக்க மாட்டேன்னுட்டாரே. அவர் மாதிரி மனுஷாள்ளாம் ரொம்ப ரேர் கோபு!'' என்று புகழ்ந்து தள்ளி&னன். ''எப்படி அந்த டாக்ஸ் மேட்டரை சமாளிச்ச?''

''நானா, அவர் செத்துப் போய் சுபஸ்விகாரம் ஆன கையோட அந்த ஆபீஸரே வந்திருந்தான். பாத்து, கொடுக்க வேண்டிய பணத்தை ராமன் சாரை கொடுத்துரச் சொல்லிட்டேன். தொந்தரவு தீர்ந்தது.''

''ராமனா..''

''எப்படி இருக்கேண்ணா..''

ராமன் நீலத்தில் சீருடை அணிந் திருந்தான். 'வி.ஆர். இண்டஸ்ட்ரீஸ்' என்று பேட்ஜ் அணிந்திருந்தான். அதே வெற்றிலைக் காவிக்கறை. சிரிப்பு. வாயோரத்தில் அதக்கிய புகையிலை.

''ராமன் சார்தான் அட்மின் பார்த்துக்கறார். டாக்ஸ் ஆபீஸ்ல ப்ராப்ளமே இல்லை. என்ன பண்றது? எடுத்து நடத்த வேண்டியதாயிடுத்து. எனக்கு குவைத்தில ரிஃபைனரில வேலை காத்துண்டிருக்கு. அதுக்குள்ள இந்த ஃபாக்டரியை ஒரு வழி பண்ணி ஸ்திரப்படுத்திட்டு வித்துறலாம்னு பாத்தேன். பாத்தா பெரிய ஆப்பர்ச் சூனிட்டி டைவர்சிஃபை பண்ணிட்டேன். இப்ப சிங்கிள் ஃபேஸ், திரீ ஃபேஸ் டிரான்ஸ்ஃபார்மர்லாம் பண்றேன். நிறைய ஆர்டர்.''

ஃபாக்டரி விரிவடைந்திருந்தது வெளிப்படையாகத் தெரிந்தது.

''அப்பப்ப டாக்ஸ் ஆபீஸருக்கு ரூபாய் கொடுத்துர்றேன். அவா கோமில்க், வைகுண்ட ஏகாதசி பெருமாள் முத்தங்கி, ரத்னங்கி சேவைக்கெல்லாம் ஏற்பாடு பண்றது... மற்றதெல்லாம் ராமன்சார்தான் பாத்துக்கறார். இவருக்கு டாக்ஸ் ஆபீஸ்ல ஏகப்பட்ட நண்பர்கள். ஃபிலோமினான்னு ஒரு அசிஸ்டண்ட் இருக்காங்க. ரொம்ப நல்ல மாதிரி. நாம போகவே வேண்டியதில்லை. அவாளே வந்து உடனுக்குட&ன ராமன் சார் ரூமுக்கு வந்து ஃபைலை க்ளியர் பண்ணிடறா. அது என்ன மேஜிக்கோ..''

கோபுவின் அலுவலக அறை நவீனமாக இருந்தது. டீ சாப்பிடும் போது, வீரராகவனின் போட்டோ பெரிசாக மாட்டப்பட்டிருந்தது.

''இருக்கேளா... பெரியவர் படத் துக்கு இன்னிக்கு வெள்ளிக்கிழமை பூஜை.''

வி.ஆரின் போட்டோவைப் பார்த் தேன். ரத்னா ஸ்டூடியோவில் பெரிது பண்ண போட்டோ. அவர் அங்கிருந்து மொத்தத் தொழிற்சாலையையும் மௌனமாக மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார்.

''எப்பேர்ப்பட்ட மகாபுருஷன்! ரங்கநாதருக்கு அடுத்தபடியா எங்களுக்கு வி.ஆர்-தான்'' என்று ராமன் 'குலந்தரும் செல்வம் தரும்' பாடினான். அவனருகில் ஒரு டைப்பிஸ்ட் பயபக்தியுடன் நின்று கொண்டு அவளும் பாடி முடித்தாள்.

''உன்னை பார்த்த மாதிரி இருக்கே?'' என்றேன்.

''நம்ம எச்சுமி'' என்றான் ராமன்.

''அப்பா போட்டோவை திருப்பி வை'' என்று கோபுவிடம் சொன்னது அவனுக்குப் புரியவில்லை.

# 26. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - வாழ்வா சாவா



''விடம் கலந்த பாம்பின்மேல் நடம் பயின்ற நாதனே''
- திருச்சந்த விருத்தம்

பள்ளி நாட்களில் நான் 'வீரசிம்மன்' என்கிற நாடகத்தில் பெண்வேஷம் போட்டதையும் அப்போது என் வயசுக்காரர்களுக்கு ஓர் அரிஸ்டாட்டில் போல இருந்த வரதனைப் பற்றியும் ஸ்ரீரங்கத்து தேவதைகள் முதல் பாகத்தில் சொல்லியிருக்கிறேன். படித்தவர் களுக்கு ஞாபகம் இருக்கலாம். இந்த வரதன் ஜி. வரதன். 'ஜி.வி.'

என்ற பெயரில், அரு. ராமநாதனின் 'காதல்' பத்திரிகையில், 'சலனம்' என்ற ஒரு கதை எழுதியவன். இலக்கிய ஆர்வம் உள்ளவன். 'வீரசிம்மன்' உட்பட பல நாடகங் களை எழுதி நடித்தவன். இவன் வேறு, பகுத்தறிவுப் பாசறை வரதராஜன் (ஏ.வ. அரசு) வேறு. இரு வரையும் குழப்பிக்கொள்ளாதீர்கள்.

ஸ்ரீரங்கத்தில் ரங்கநாதன், ரங்கராஜன், வரதராஜன் போன்ற பெயர்கள் நிறைய வரும். தெருவில் நின்றுகொண்டு 'வரதூ' என்று கூப்பிட்டால், குறைந்தபட்சம் நாலு பேர் திரும்பிப் பார்ப்பார்கள்.

'வீரசிம்மன்' நாடகத்தின்போதே வரதனுக்கு முப்பத்தைந்து வயது. வேலை யேதும் அப்போதும் பார்த்ததில்லை. திண்ணையில் கால்மேல் கால்போட்டு உட்கார்ந்துகொண்டு, கீழச்சித்திரை வீதியில் போவோர், வருவோரை விசாரித்துக்கொண்டிருப்பான்.

சின்னப் பயல்களைப் பலவகை 'எர்ரண்டு'களுக்கு அனுப்புவான். அவர்களுக்கு லெமன் ஸ்பூன் ரேஸ், காய்ந்த ரொட்டியை யார் சீக்கிரம் கடித்துச் சாப்பிடுகிறார்கள் போன்ற பந்தயங்கள் வைப்பான். ராமனுடன் இவனுக்குப் புகையிலை சிநேகிதம்.

நான் சிவில் ஏவியேஷனில் சேர்ந்து, சென்னை மீனம்பாக்கத்தில் பொறுப் பேற்றுக்கொண்டு, பரீட்சை பாஸ் பண்ணி டெல்லிக்கு மாறி, சப்தர்ஜங் விமானநிலையத்தில் டெக்னிக்கல் ஆபீஸ ராக வேலைபார்த்துக் கல்யாணமாகி, அப்பா ரிட்டயராகி, ஸ்ரீரங்கத்தில் செட்டில் ஆகி, ஒரு முறை ஸ்ரீரங்கம் வந்தேன்.

'நான் ஒரு எழுத்தாளனாவேன்' என்று தெரிவதற்குள், பாட்டி 1955-ல் பாபனாசத்தில் இறந்துபோனாள். பாட்டி, பரமபதத்தில் 'இந்தப் பிள்ளை என்ன செய்கிறானோ, எப்படிப் பிழைக் கிறானோ?' என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பாள். 'பாட்டி ஐம் ஓகே' என்று எஸ்.எம்.எஸ். அனுப்ப முடிய வில்லை.

இன்ஜினீயரான என் மாமனார், அப்போது திருச்சியில் போஸ்டிங் ஆகியிருந்தார். அதனால் என் இரு பிள்ளைகளும் ஸ்ரீரங்கத்தில்தான் பிறந்தார்கள். மனைவி பிரசவம் முடிந்து தாய்வீட்டில் இருந்தபோது 'குழந்தையை யும் பார்த்துவிடலாம், அப்பாவுட னும் இருக்கலாம்' என்று லீவு சேர்த்துக்கொண்டு ஸ்ரீரங்கம் வந்தேன். மறுபடி வரதனை ஏறத்தாழ பன்னிரண்டாண்டு இடைவெளிக்குப் பின் ரங்கு கடையில் சந்தித்தேன்.

''என்னடா, டெல்லியெல்லாம் எப்படி இருக்கு? கல்யாணமாயி அதுக்குள்ள குட்டி போட்டுட்டியே... பேஷ், பேஷ்!''

வரதன் மாறியிருந்தான். தலைமுடி நரைத்துப்போய், தொப்பை வந்து பொலிவிழந்திருந்தான். டயாபடிஸாக இருக்கலாம். ஸ்ரீரங்கத்தில் ஒவ்வொரு பண்டிகைக்கும் அக்காரவடிசிலும் அதிரசமும் குஞ்சாலாடும் சாப்பிட்டே பலருக்கு டயாபடிஸ்.

நீண்டநாள் புகையிலைப் பழக்கம்... பற்களில் வெளுப்பே தெரியவில்லை. இப்போதும் அரை மணிக்கொரு தடவை கொப்பளித்துக் கொண்டிருந்தான். முன்பெல்லாம் வெள்ளி தம்ளர், கூஜா. இப்போது வெண்கலம்.

கொஞ்சம் இளைத்திருந்தான். கண்களில் மட்டும் பழைய பிரகாசம். ''எப்படி இருக்கே வரதன்? 'வீரசிம்மன்' டிராமாவெல்லாம் இன்னும் போட்டுண்டிருக்கியா?''

''ஓ! வருஷா வருஷம மார்கழித் திருநாள்ம்போது என் டிராமா இல்லாமயா? இருப்பியா... பாத்துட் டுப் போறியா... ஆக்ட் பண்றியா?''

நான் அவசரமாக, ''வேண்டாம்... வேண்டாம். நான் மெட்ராஸ் போயிண்டே இருக்கேன்...''

நான் நடித்த முதல் நாடகம் ஒரு கெட்ட கனா போல் இப்பவும் நடு இரவில் திடீர் என்று உடலெங்கும் வியர்வையுடன் என்னை எழுப்பும்.

வீரசிம்மன் (வரதன்) சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்க, படுதா ஓரத்தில் நின்று கொண்டு தோழிப்பெண்ணாக நான் விசிற, என் மேலாடை விலகி பெரிய கலாட்டாவானதும் ஒரு குடிகாரன் என்னைத் துரத்தினதும் இப்போது நினைத்தாலும் வயிற்றில் ஐஸ்கத்தி பாய்ச்சுகிறது.

''டிராமாவெல்லாம் சரி... ஜீவனத்துக்கு என்ன பண்ணிண்டிருக்கே?''

''நிலத்திலிருந்து வருமானம் போறாது. விளைச்சல் சரியில்லைன்னா, தாத்தாச்சாரியார் தோப்புக்குப் பக்கத்தில் பிளாட் போட்டு, ப்ராபர்ட்டி டெவலப் பண்றேன். கொள்ளிடம் பக்கத்தில நொச்சியம் இந்த மாதிரி எடத்திலயும் பேசிண் டிருக்கேன். அர்பன் லேண்ட் சீலிங் வந்தப்பறம் அக்ரிகல்ச்சர் லேண்டை மாத்தறதுக்கு லஞ்சம் கொடுக்கவேண்டியிருக்கு. ஃபிலிம் ஃபீல்டுலயும் வரப்போறேன். ஒரு படம் எடுக்கலாமானு யோசிச்சிண்டிருக்கேன். உங்கிட்ட நல்ல ஸ்டோரி இருக்கா, ஜெய்யை வெச்சு? விகடன்லல்லாம் எழுதறியாமே...''

''சும்மா போதுபோக்குக்கு!''

''இப்ப டிஸ்ட்ரிப்யூஷன் பண்ணிண் டிருக்கேன்...''

''அட!''

''புதுப் படத்தை எடுக்கமாட்டேன். ஒரு தடவை ஓடிக் களைச்சதை செகண்ட் ரன் எடுத்து, டூரிங் கொட்டாய்ல எல்லாம் பெட்டி மாத்தி ஓட்டறது. அங்கங்கே போய் கலெக்ஷன் பண்றதுக்கு காரியஸ்தன் இருக்கான். வண்டி ஓடணுமோல்லியோ?''

''பசங்கள்லாம்?''

''பையன் ஜமால்ல படிக்கிறான்... பொண்ணு எஸ்.எஸ்.எல்.சி.!''

''அப்பப்ப கலைச்சேவை...'' என்றான் ரங்கு. ''இந்த வருஷம் யார் வரா, கேளு...''

''இந்த வருஷம் வர மாசம் 'வாழ்வா, சாவா'னு ஒரு சமூக நாடகம் போடறேன். அதுக்குத் தலைமைதாங்க சாவித்திரி வர்றாங்க...''

''சாவித்ரின்னா?''

''நடிகை சாவித்திரி... நீ 'மிஸ்ஸியம்மா' பார்த்ததில்லை?''

''பாத்திருக்கேன்... நிஜமாவா?''

''என்னடா இவன்! அம்பி, நீ ஆத்துக்குப் போய் மாமிகிட்ட 'சாவித்திரி எழுதின கடுதாசியை மாமா கேக்கறார்'னு வாங்கிண்டு வா...''

''சாவித்திரியா...''

''என்னடா வாயைப் பொளக்கறே?''

''நிஜமாவே சாவித்திரியா?!''

ரங்கு, ''சாவித்திரி என் அபிமான நடிகை. அருமையா நடிப்பாங்க...''

''இந்தியாவிலயே பெஸ்ட் - 'தேவதாஸ்'ல பார்வதியா வருவா பாரு... 'ஓ ஓ ஓ தேவதாஸ்...' பாத்தல்ல?'' என்றான் வரதன்.

ரங்கு ''ஏய், வரதா... என்னை ஒரு முறை இண்ட்ரோட்யூஸ் பண்ணிர்றா. ஒரு முறை கையைக் குலுக்கிடறேன். ரத்னா ஸ்டூடியோல சொல்லி, போட்டோ எடுத்துரலாம். மை காட்! அது என்ன 'வாராயோ வெண்ணிலாவே...'னு பாடுவா பாரு... ஃபேஸ்ல ஒரு இன்னொசென்ஸ்!''

''இந்த வருஷம் டிராமாவுக்கு அத்தனை டிக்கெட்டும் புக் ஆயிடும் முதல் ரெண்டு வரிசையில சோபா போட்டு, 'டோனர்'னு அம்பது ரூபா டிக்கெட். மற்றதெல்லாம் பாரபட்சம் இல்லாம பத்து, பத்து ரூபா. லாஸ்ட் ரோ நின்னுட்டுப் பாக்கணுமானா, அஞ்சு ரூபா...''

''எல்லாமே கொஞ்சம் வெலை ஜாஸ்தியா இருக்கே!''

''காத்துள்ளபோதே தூத்திக்க ணும்... என்ன ரங்கு?''

''ஆமாண்டா!''

இதற்குள் அந்தக் குட்டிப்பையன் அந்தக் கடிதத்தைக் கொண்டுவந் தான்.

''கொண்டா...'' என்று ரங்கனுடைய கண்ணாடியை இரவல் வாங்கிப் போட்டுக்கொண்டு படித்துக் காட்டினான்.

அந்தக் கடிதம் இங்கிலீஷில் இருந் தது. லெட்டர்ஹெட்டில் சாவித்திரியின் சிரிக்கும் போட்டோ இருந்தது.

'அன்புள்ள ஸ்ரீ ஜி. வரதராஜன்.

தங்கள் கடிதம் பார்த்து மிஸ் சாவித்திரி மிகவும் மகிழ்ந்தார். இதனுடன் கையெழுத்திட்ட புகைப்படம் இணைத்திருக்கிறோம்.

இப்படிக்கு

(கையெழுத்துப் புரியவில்லை!)

மிஸ் சாவித்திரியின் செக்ரெட்டரி...'

''ஸ்ரீரங்கத்துக்கு வர்றதா போடலையே...''

''இரு... இதுக்கப்புறம் போன்ல பேசி &னன். ரமேஷ் ராகவ்னு அவருடைய செக்ரெட்டரியை அகஸ்மாத்தா சந்திச்சேன். பெருமாளைச் சேவிக்க வந்திருந்தார். சாவித்திரியும் வராங்களாம். அப்படியே நம்ம நாடகத்தையும் அட்டெண்ட் பண்ணிட்டு, ராத்திரியே கார்ல புறப்பட்டுர்றா மாதிரி ஏற்பாடு பண்ணிடலாம்னார். சாவித்திரிக்கு ஒரு ரசிகர் மன்றம் ஆரம்பிக்கப் போறேன்...''

''நான் வரேன். எனக்கு ஏகப்பட்ட வேலை இருக்கு. போஸ்டர் அடிக்கணும். நோட்டீஸ் அடிக்கணும். டிக்கெட் புக் நம்பர் போடணும். கேன் சேர், தகர சேருக்கு ஏற்பாடு பண்ணணும். இதுக்கு நடுவில் ரிகர்சல் பண்ண ணும். எனக்குன்னா பரவாயில்லை, சமாளிச்சுருவேன். கோட்டையில் இருந்து லேடி ஆர்ட்டிஸ்ட் வரா. சுட்டுப் போட்டாலும் தமிழ் வரலை. இப்பக்கூட லேட்டில்லை... நீ நடிக்க வரேன்னா, ஒரு பார்ட் பாக்கியிருக்கு...''

''அய்யோ... நான் வரலைப்பா...'' என்று பதறி&னன்.

'' 'வீரசிம்மன்'ல நீ லேடி காரெக்டர் பண்ணதை, இத்தனை வருஷம் கழிச்சும் ஜனங்கள் ஞாபகம் வெச்சிண்டிருக்கு!''

மறுபடி ஐஸ்கத்தி. ''அதான் பிரச்னை...'' என்றேன்.

அவன் போனபின் ரங்குவிடம், ''இவன் சம்பாத்தியம் எப்படி ரங்கு? அரிசி, பருப்புக்கெல்லாம் என்ன பண்றான்?''

''ஏன் கேக்கறே... சம்பாத்தியமே கிடையாது. பெருங்காய சொப்பு. வீட்ல நெலமெல்லாம் வித்தாச்சு. பெஞ்சு, நாற்காலியெல்லாம் வித்துண்டிருக்கான். இவாத்துல பழைய காலத்து சோபா, கட்டில், இவன் தாத்தா பெரிய ஸ்காலர்... அவர்ட்ட ஏகப்பட்ட அரிதான

புஸ்தகங்கள்லாம் இருக்கு... எல்லாத்தையும் கோட்டைக்குக் கொண்டுபோய் எடைக் குப் போட்டுருவான். பழைய கிராமபோன், நல்ல நல்ல பிளேட்டு... அரியக்குடி, எம்.எஸ்.!''

''அடப்பாவமே... நீ உதவி பண்ணக் கூடாதோ?''

''கேக்கமாட்டா&ன... ரொம்ப வெத்து ஜம்பம். கார்வார்... இப்படித்தான் ஐயங்கார் ஜாதியே சீரழிஞ்சிண்டிருக்கு. படிப்பு இருக்கறவன் பொழைச்சுக்கறான். எல்லாரும் ஊரைவிட்டுப் போயிட்டாங்க. சித்திரை வீதில பாதிக்குமேல வீட்டை வித்தாச்சு. முன்பக்கம் லாந்திட்டு வாசல்ல, சிமெண்ட் பூசின வீடெல்லாம் புதுசா வந்தவா வீடு. நம்முது எல்லாம் கூரை...''

''கொஞ்ச நாள்ல வாசல்ல ஆடு கட்டினாலும் ஆச்சரியப்படமாட்டேன்...''

''இதெல்லாம் தவிர்க்கமுடியாத சமூக மாறுதல்கள் ரங்கு...''

''என்னவோ போறது... டிராமாவில் நிகரமா பத்தாயிரம் ரூபா பண்ணா, ஒரு வருஷம் ஓட்டிடுவான். அதில்தான் ஹோப் வெச்சுண்டு, சப்புகொட்டிண்டு இருக்கான். சாவித்திரி, சரஸ்வதினு ஊருரா அலையறான் கிடந்து...''

''சாவித்திரி வருவாங்களா?''

''வரணும்... யாருக்கோ அட்வான்ஸ் கொடுத்திருக்கான். சாவித்திரி வரலைன்னா, கொட்டாயை எரிச்சுருவாங்க... ரிஸ்க்கு. அந்தப் பேரைச் சொல்லித்தான் டிக்கெட் அடிச்சு விக்கப்போறான்...''

அடுத்த வாரம் ஸ்ரீரங்கம் எங்கும் நடிகை சாவித்திரியின் போட்டோ போட்டு சுவரொட்டிகள் இருந்தன.

மிஸ்ஸியம்மா ஸ்ரீரங்கம் வரு கிறார். 'வாழ்வா, சாவா' நாடகத்துக் குத் தலைமைதாங்கவும் ஸ்ரீரங்கம் சாவித்திரி ரசிகர் மன்றத்தைத் துவக்கி வைப்பதற்கும்... டிக்கெட்டுக்கு முந்துங்கள். இவண் ஜி. வரதராஜன், செயலர், ஸ்ரீரங்கம் சாவித்திரி ரசிகர் மன்றம் (ரி)... மொட்டைமாடியில் 'வாழ்வா, சாவா' ஒத்திகை நடந்துகொண்டு இருந்தது.

- சேகர் இதுதான் உன் கடைசி முடிவென்றால், நான் கிணற்றில் விழுந்து உயிரிழப்பேன்.

- கலங்காதே கண்மணி.

- என் வயிற்றில் வளரும் சிசுவினை மனதில்கொண்டு என்று கக்குண்டு பேசிக்கொண்டிருந்தான். வரதன் டைரக்ட் பண்ணிக்கொண்டிருந்தான். இதில் நடிக்கும் பெரிய ஆபத்திலிருந்து தப்பித்தேன் என்று மனசுக்கள் மகிழ்ந்தேன்.

''வாடா... எல்லா டிக்கெட்டும் வித்துப்போச்சு. எக்ஸ்ட்ரா டிக்கெட்டுக்கு ஏகப்பட்ட டிமாண்டு. இன்னும் ரெண்டு ரோ சேர் போடலாம்னா, கந்தசாமி கடையில மேற்கொண்டு சேர் இல்லை... கரூர், குளித்தலை போனா கிடைக்கும்ங்கறான். ரொம்ப செலவு...''

''சாவித்திரி கன்ஃபர்ம் பண்ணிட்டாங் களா?''

‘‘அதுதான், இப்ப பெரிய ப்ராப்ளம். கிணத்துல கல் போட்டாப்பல இருக்கு. சாவித்திரி வந்துருவாங்க. அவங்களுக்குத் தந்தி அடிச்சுட்டு, லெட்டரும் போட்டுட்டேன். மார்கழி மாச உச்சவத்துக்கு எப்படியும் வந்தே தீரணும். கல்லணையில ஷூட்டிங் வேற இருக்காம்...’’

‘‘அதாவது, நீ எங்கிட்ட காட்டின ஃபேன் லெட்டரைத் தவிர, சாவித்திரிகிட்டருந்து வேற எதும் வரலை?’’

‘‘அப்படி இல்லைடா... அதுக்கப் புறம் நாலு லெட்டர் போட, ரமேஷ் ராகவுக்கு ஸ்ரீரங்கம் புரோகிராம் விவரத்தையும் சேர்த்து அனுப்பிருக்கேன்...’’

‘‘பதில் வந்ததோ?’’

‘‘வரலை... அப்படின்னா என்ன அர்த்தம்... சம்மதம்னுட்டுதா&னெ?’’

‘‘அது எப்படி வரதன்?’’

‘‘சம்மதம் இல்லைன்னு இத்தனை நாழி அடிச்சுப் புடைச்சுண்டு லெட்டர் வந்திருக்கணுமில்லையா?’’

‘‘வந்திருக்கணும்...’’

‘‘வரலையே இதுவரைக்கும்...’’ - எனக்கு இந்த விநோதமான லாஜிக் புரியவில்லை.

‘‘போன் போட்டுப் பேசினியா?’’

‘‘ ‘குண்டூசி’யில ஒரு நம்பர் கொடுத் திருந்தா. யாரோ தெலுங்கில பேசினா. நான் விவரத்தைச் சொல்லிட்டு அட்ரஸையும் கொடுத்திருக்கேன்...’’

‘‘ஆனாலும் உனக்கு ரொம்ப தைரியம் வரதன்... எந்தவிதமான உத்தரவாதமும் இல்லாம டிக்கெட் அடிச்சு வித்துட்டு...’’

‘‘என்ன சொல்றே நீ?’’

‘‘எதுக்கும் நீ ஒரு தடவை மெட்ராஸ் போய்ப் பார்த்துப் பேசிட்டு வர்றது நல்லது வரதன்...’’

‘‘எங்கடா டயம்... நான் ஒருத்த&ன எல்லாத்தையும் பாத்துக்கணும்னா?’’

நான் டெல்லிக்குத் திரும்பும்போது, ஒரு நாள் சென்னையில் இருப்பதால் விசாரிப்பதாகச் சொன்&னன்.

அவன் உட&ன எட்டு இடமும் குளிர்ந்து, ‘‘உண்மையான ஃப்ரெண்ட் நீதாண்டா எனக்கு வேணும்... இந்த டிராமா பண்ணிட்டேன்னா, எங்கயோ போகப்போறேன் பாரேன்...’’

‘‘யார் இந்த ரமேஷ் ராகவ்? யாருக்கு போன் பண்ணே? எல்லா விவரமும் சொல்லு...’’

அழுக்கான ஒரு விசிட்டிங்கார்டைக் கொடுத்தான். அதில் 'ரமேஷ் ராகவ்' என்ற பேர் போட்டு, ஒரு பிபி நம்பர் டெலிபோன் எண் போட்டிருந்தது.

சென்னைக்குக் காலை வந்து சேர்ந்து, க்ளாக் ரூமில் பெட்டி படுக்கையைப் போட்டுவிட்டு, மாலைதான் ஜி.டி. பிடிக்கவேண்டும் என்பதால், நேரமிருந்தபோது சித்தப்பா வீட்டிலிருந்து டெலிபோன் செய்தேன்.

''அப்படி யாரும் இல்லையே இங்க...'' என்றார்கள்.

''இந்த நம்பர் என்ன?''

''இது தையக் கடைன்னா...''

என்னிடம் 'குண்டூசி' கொடுத்த சாவித்திரியின் எண்ணும் இருந்த தால், அங்கே போன் பண்ணபோது ஒரு இளம் குரல் ''ஷுட்டிங்லோ... ஷுட்டிங்லோ...'' என்றது. எனக்குத் தெரிந்த ஒரே தெலுங்கு வார்த்தை யைப் பிரயோகித்து, ''எக்கட?'' என்றேன். ''வாஹினிலோ, ப்ரசாத்லோ, ஏவிஎம்லோ தெலியலேது...''

நான் டிரங்கால் புக் பண்ணி, ரங்கநாதா மெடிக்கல்ஸ் மூலம் வரதனைக் கூப்பிட்டுப் பேசி&னன்.

''வரதன், நீ கொடுத்த அந்த நம்பர் தப்பு. அவனுக்கு ஏதாவது பணம் கொடுத்தயா?''

''அதை ஏன் கேக்கறே? பணத்தை வாங்கிண்டு கம்பி நீட்டிட்டான்... ஆள் அட்ரஸே இல்லை. அட்வான்ஸ் கேட்டான். ஆயிரம் ரூபா வாங்கிண் டான்...''

''என்ன வரதா... நீ இப்படிப் போய் ஏமாந்திருக்கியே! நாடகம் எப்ப?''

''நாளைக்குடா... டேய், நீ எனக்கு ஒரு உபகாரம் பண்ணனும். நான் வரமுடி யாது. நீ ஏவிஎம்மோ, வாஹினியோ போய், சாவித்திரி... அவங்களை எப்படியாவது சந்திச்சு, நான் எழுதின நாலு கடுதாசியைப் பத்திச் சொல்லி...''

ஏவிஎம்மில் ஒரு பாடல் காட்சியில் நாகரா ஒலிக்க, ஒரே வரியை எட்டு தடவை எடுத்துக்கொண்டிருந்தார்கள். என்னால் அந்தச் சந்தடியில் மிஸ் சாவித்திரியை கிட்டே போய்ச் சந்திக்க முடியவில்லை. சட்டென்று கார் ஏறிப் போய்விட்டார். அவரது செக்ரெட்டரி யைக் காட்டினார்கள். சந்தித்து என்னை அறிமுகம் செய்து கொண்டு விவரம் சொன்&னன்.

''ரமேஷ் ராகவ்... அப்படி யாரையும் தெரியாதே! ஓயெஸ்... யாரோ ஒரு ஆள் வந்து ராகவனோ, யாரோ... டேட்ஸ் கேட்டார்... இல்லை. அப்ப ஊட்டி ஷுட்டிங் போறம், வருஷம் பூரா டேட்ஸ் இல்லைனு சொல்லிட்டே&ன...''

''சார்... உங்களுக்கு ஒரு அட்வைஸ். அந்தாளை நம்பாதீங்க. எல்லார்கிட்டயும் 'சாவித்திரி டேட்ஸ் வாங்கித் தரேன்'னு பொய் சொல்லிக்கிட்டுத் திரியறார். பணம் கேட்டாரா?''

வரதனை போனில் பிடிக்க முடிய வில்லை. தந்தி கொடுத்தேன் - நைபீச்சி ஹநூநூ ஹசுசுஹபிகீக்ப்பிபீசூ. நஹஹ்கூபீகுசுகூ பிச்பீ ஷச்ப்கூபிகீ' என்று. எனக்கு வரதன் அதை எப்படிச் சமாளிக்கப் போகிறான் என்று கவலையாக இருந்தது.

டெல்லி திரும்பினவுடன் ஆபீஸில் காலிப்ரேஷனுக்காக அகர்தாலா போகச் சொன்னார்கள். போய்வந்து ஒன்றரை மாதம் கழித்து திருச்சி விஓரை காலிப்ரேட் பண்ண சந்தர்ப்பம் வந்தபோது கிடைத்த அவகாசத்தில் ஸ்ரீரங்கம் சென்றிருந்தேன்.

''ரங்கு, வரதனுடைய 'வாழ்வா சாவா' என்ன ஆச்சு?''

''ஏன் கேக்கறே... அமோகமா நடந்தது!''

''சாவித்திரி வந்தாங்களா?''

''வந்தாங்களே!''

''வந்தாங்களா... எப்படி?''

''திருச்சியிலிருந்து சாவித்திரி மாதிரி இருக்கிற ஒரு நடிகையை அழைச்சுண்டு வந்துட்டான். கடைசி நிமிஷத்துக்கு அது பொளந்து கட்டிடுத்து. மிமிக்ரி மாதிரி, சாவித்திரி மாதிரியே பேசிக் காட்டினா. முன்வரிசையில இருந்தவாகிட்ட 'சினிமா நட்சத்திரமெல்லாம் நேர்ல பாக்கறதுக்கும் மேக்கப்போட சினிமால பாக்கறதுக்கும் வேற மாதிரி இருப்பா'னு சமாதானம் சொல்லிட்டு, லைட்டை அடிச்சே சமாளிச்சுட்டான். இன்னும் முக்காவாசி பேருக்கு, வந்தது நிஜ சாவித்திரி இல்லைன்&ன தெரியாது...''

அப்போது வரதன் வந்து உட்கார்ந்தான். ''என்னப்பா... எப்படிருக்கே? டெல்லியெல் லாம் எப்படி இருக்கு?''

'' 'வாழ்வா சாவா' நன்னா போச்சாமே!''

''அமோகம் போ... அடுத்தது சிவாஜி சாரைக் கூப்பிடலாம்னு இருக்கேன்!'' என்றான் வரதன்.

ஹ

# 27. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - மாஞ்சு



'மானிடவர்க்கென்று
பேச்சுப்படில்
வாழகில்லேன் மன்மத&ன'
- ஆண்டாள் நாச்சியார்
திருமொழி

ராமானுஜம், பார்த்தசாரதி என்று பெருமாள் பெயராக சுந்தாச்சு ஐயங்கார் தன் மகன்களுக்கு வைத்தார். அந்தப் பெயர்கள் மாஞ்சு, பாச்சு என்று சுருக்கப்பட்டது அவருக்கு வருத்தம்தான். இருந்தும் சாகும்வரை மகன்களை முழுப்பெயர் வைத்துதான் கூப்பிட்டார்.

சுந்தாச்சு ஐயங்கார் எங்கள் ஞாபகத்தில் வேலைக்குப் போய்ப் பார்த்ததில்லை. கல்யாணம் லேட்டாகப் பண்ணிக்கொண்டார். டயாபடீஸின் விளைவுகளால் சீக்கிரமே ஆசார்யன் திருவடி எய்துமுன் காங்ரின் வந்து ரொம்ப அவஸ்தைப்பட்டார். அவர் செத்துப்போனபோது மாஞ்சுவுக்குப் பன்னிரண்டு வயசு. பாச்சாவுக்குப் பத்து. இடையே ஒரு பெண் பிறந்து போய் விட்டது.

ஐயங்கார் இறந்தபின் அவர் விட்டுப்போன கடன்கள், மெள்ள மெள்ள கலைந்த புற்றிலிருந்து புறப்படும் குட்டிப்பாம்புகள் போல பிராமிஸரி நோட்டு வடிவங்களில் வெளிவந்தன.

ஒரு பட்டாளமே பழுப்பான காகிதங்களைக் கொண்டுவந்து அதட்டிவிட்டுப் போனார்கள். ஆண்டாள் என்ன செய்வாள்? பாவம்... பிள்ளைகள் படிப்புக்கு ஃபீஸ் கட்ட வேண்டும். பால் தயிர், பண்டிகை என்று பல செலவினங்களை முதல் மாதங்களில் பாத்திரம், நகைகளை தெற்குவாசல் கடையில் அடகு வைத்துச் சமாளித்தாள். அவள் பெயரில் அவள் அப்பா விட்டுப்போனது திருச்சி டவுன் ஸ்டேஷன் அருகில் கொஞ்சம் நிலம் மட்டுமே. வாழை போட்டிருந்தார்கள். அது லிட்டிகேஷனில் இருந்ததால் ஐயங்கார் அதை விற்கவில்லை. அது ஜி.எஸ்.டி. பைபாஸ் அருகில் இருந்ததால், வீட்டுமனையாகப் பிரித்து விற்றால் நல்ல காசு வரும் என்று வில்லங்கங்களை நீக்கி விற்றுக் கொடுப்பதில் கணவனின் தூரத்து உறவு ஆராவமுதன் ரொம்ப ஒத்தாசையாக இருந்தார். ''இங்கே தனியாக இருந்துகொண்டு ஏன் கஷ்டப்படுகிறாய்? என்னுடன் வந்து இரு. தளிகை பண்ணிப்போடு. உன்னை ராஜாத்தி மாதிரி வைத்துக் கொள்கிறேன். மரகதம் ஒன்றும் சொல்லமாட்டாள். அவளுக்குப் புத்ரபாக்யம் இல்லை. உன் இரண்டாமவனை சுவீகாரம் எடுத்துக் கொள்கிறேன். இருவரையும் இ.ஆர்.ஹைஸ்கூலில் சேர்த்துவிடுகிறேன். சுந்தாச்சு உன் அழகையும் மதிப்பையும் தெரியாதவன்!'' என்று சொல்லிப் பார்த் தார். ஆண்டாள் மறுத்துவிட்டாள். ''வர மாட்டேன். அவர் போனபின் எனக்கென்ன வாழ்வு? வேறு ஒருத்தரை நினைக்கிறதே மகா துரோகம், பாவம். அவர் போகிறபோது கையைப் பிடித்துச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார் - 'ஆண்டு! பசங்களை நன்னா படிக்கவை'னு. என் பிள்ளைகளைப் படிக்கவைத்து எப்படியோ பிழைத்துக் கொள்கிறேன்... போய்ச்சேரும் பிராமணா!'' என்று சொல்லிவிட்டாள்.

ஆண்டாளின் அழகான தோற்றம் அவளுக்கு இடைஞ்சலாக இருந்தது. கணவன் இல்லாதபோது வந்து பார்க்கிறவர்களின் பார்வைகள் தப்பான இடத்தில் நிலைக்கும். லேசான அத்துமீறல்கள் அவளைத் தொந்தரவு செய்தன. தென்கலையாரில் விதவையானால் மொட்டையடிக்கும் வழக்கம் கிடையாது. நெற்றியில் ஸ்ரீசூர்ணம் இட்டுக்கொள்ளலாம். கலர்புடவையும் உடுத்திக்கொள்ளலாம்.

ஆராவமுது மாசாமாசம் வந்து விசாரித்து விட்டுப் போவார். பிடி கொடுத்தே பேசமாட்டாள். பிள்ளைகள் இருவரில் மாஞ்சுவுக்குப் படிப்பு வரவில்லை. தகப்பனைக் கொண்டு விட்டான் போலும். எட்டாம் வகுப்பில் ரெண்டு வருஷம் இருந்தான். தத்தித் தத்தி ஒன்பதாம் வகுப்புக்கு போகுமுன் அவனுக்கு டைபாய்டு ஜுரம் வந்து விட்டது. நிறையச் செலவழித்து கோட்டைக்குப் போய் ஒரு நாள்விட்டு ஒரு நாள் ஊசி போட்டுக்கொள்ள வேண்டிய தாகியிருந்தது. பள்ளிப்பாடங் களைத் தவறவிட்டான். அடுத்தவன் அவனை ஓவர்டேக் பண்ணிவிட்டான். ஒரே கிளாஸ், ஒரே செக்ஷனுக்கு வந்துவிட்டான். பாச்சு ரொம்ப நன்றாகப் படித்தான். பள்ளியில் உள்ள அத்தனை ஸ்காலர் ஷிப்புகளையும் பெற்றான். அவன் படிப்புக்கு ஆண்டாள் ஒரு காசு செலவழிக்கவில்லை. மாறாக, பள்ளியில் இருக்கும் போதே இவனுக்கு வந்த உதவித் தொகைகள் வீட்டுச்செலவுக்குப் பயன்பட்டன.

''பையன்கள் கேலி பண்ணுகிறார்கள். வேறு பள்ளிக்கூடம் போகி றேன்'' என்ற மாஞ்சு, திருவானைக் கோவிலில் ஒரு பிரைவேட் ஸ்கூலில் சேர்ந்தான். அங்கேயும் சரியாகப் படிக்கவில்லை.

ஆண்டாளின் முழுக்கவலையும் இப்போது மாஞ்சுதான். பாச்சு என்ன படிக்கிறான், எந்த கிளாஸ், எந்தப் பள்ளிக்கூடம் என்றுகூட கவலையேபடவில்லை. மத்தியானம் ஸ்கூலிலிருந்து வெயிலில் செருப்பு இல்லாமல் நிழலோரமாக நடந்து வந்து அவள் கொடுக்கும் மோர் சாதத்தையும் ஊறுகாயையும் கையை நக்கிக்கொண்டு சாப்பிட்டுவிட்டு உடனே பள்ளிக்குப் போய்விடுவான். வேப்பமர நிழலில் எல்லா ஹோம் வொர்க்கையும் அஞ்சு நிமிஷத்தில் முடித்துவிடுவான். கொஞ்ச நேரம் மேல அடையவளைஞ்சானில் போய் பெரியவர்களுடன் பூப்பந்து ஆடுவான். சனிக்கிழமை சக்கரத்தாழ்வார் சந்நிதிக்குப் போவான். அடுத்த கிளாஸ் பாடத்தை வாங்கிப் படிப்பான். டியூஷன் எடுப்பான். மார்புக்கூடெல்லாம் பின்னி, ஒல்லியாகத்தான் வளர்ந்தான். ஆனால், மூளை ரொம்ப ஷார்ப். மாஞ்சு தாட்டியாக, ஆளழகு துப்பட்டிக்காரன் என்று இருந்தான். காலையில் புறப்படுவான். கீழ வாசலில் ரங்கு கடைக்குப் போகமாட்டான். ஒரு மளிகைக் கடையில் உட்கார்ந்து கொண்டு அவ்வப்போது பொட்டுக் கடலையை வாயில் போட்டுக்கொண்டு சிவாஜி படங்களை விமரிசனம் செய்வான். மத்தியானம் ஒழுங்காகச் சாப்பிட வந்துவிடுவான். மெந்தியக் குழம்பு ரொம்பப் பிடிக்கும். டிபனுக்கு காசு வாங்கிக்கொள்வான். ஒரு தூக்கம் போட்டுவிட்டு தெற்கு வாசல் போய்விடுவான். ராத்திரி பத்து மணிக்குத்தான் வருவான். கெட்ட பழக்கங்கள் ஏதும் இல்லை. அவன் ஒரு க்ஷசுகூகிபீக்சு; பாச்சுவுக்கு இவன் தர்மசங்கடம். அண்ணனே இல்லை போல ஒருத்தரை ஒருத்தர் வீதியில் எதிரெதிரே செல்வார்கள். அவன் வம்புக்கு இவன் போகமாட்டான்! எப்பவாவது, ''என்னடா நன்னா படிக்கிறயா?'' என்று அண்ணனின் பொறுப்புடன் விசாரிப்பான். எத்தனாவது, என்ன சப்ஜெக்ட் என்றெல்லாம் கேட்பான். ''மேத்ஸ் நன்னா போடு. அதிலதான் நிறைய மார்க் வாங்கலாம். பழைய கொஸ்சன் பேப்பர் எல்லாம் சால்வ் பண்ணிடு!'' என்பான்.

நிகுநிகுவென்று வளர்ந்திருந்த தன் மூத்த மகனுக்கு எதிலும் இன்டரஸ்ட் இல்லை... ஏதாவது தொழில் கற்றுக்கொள்ள பாலிடெக்னிக்கில் சேர்க்கலாம் என்று ஆடிட்டர் ராமசாமியிடம் அப்பா தாயே என்று ஆண்டாள் கெஞ்சி திருச்சி துப்பாக்கி ஃபாக்டரியில் ஃபவுண்டரியில் ஒரு டிரெய்னியாகச் சேர்த்தாள். அங்கே மூன்று நாள் சென்றபின், ''இந்தச் சூடு எனக்கு ஆகவில்லை. உடம்பெல்லாம் எரியறது. காத்தாலை ரத்தவாந்தி எடுக்கறது'' என்று சொல்லிவிட்டான். ''அதெல்லாம் பட்டறை வேலைம்மா. பிராமணாள் பண்ண முடியாது''

என்றான். ‘‘ஏண்டா இப்படி தாயாருக்கு பாரமா இருக்கே?’’ என்று கேட்டதற்கு வீட்டைவிட்டு ஓடிப்போய் விட்டான். ஆண்டாள் பதறிப் போய் ஆராவமுதுவுக்கு தகவல் சொல்ல, அவர் உடனே வந்தார். ‘‘நாந்தான் சொன்னேனே... உன்னால் தனியாகப் பிள்ளைகளை சமாளிக்க முடியாது. என்கூட வந்துவிடேன். உன்னை ராணி மாதிரி வெச்சுக்கறேன். நியாயமா பார்க்கப்போனா நான்தான் உன்னைக் கல்யாணம் பண்ணிண்டிருக்கணும். சுந்தாச்சு வோட அத்தங்காதான் இல்லா ததும் பொல்லாததும் சொல்லி கல்யாணத்தைக் கலைச்சுட்டா. மரகதத்தை என் தலையில எல்லாரும் சேர்ந்து கட்டிட்டா. இப்பவும் ஒண்ணும் குடி முழுகிப் போயிடலை!’’ என்று மறுபடி கூப்பிட்டார். அன்று ராத்திரி கெக்கேபிக்கே என்று நடந்துகொண்டார்.

நல்லவேளை... சமயத்தில் மாஞ்சு திரும்பி வந்துவிட்டதால் விலகிக் கொண்டார். ‘‘எங்கேடா போனே?’’ என்றால், ‘‘புதுக்கோட்டை போற வழியில் நார்த்தாமலை பக்கத்தில் சித்தன்னவாசலுக்கு என் ஃப்ரெண்டு கூப்பிட்டான். மனசு சரி யில்லை. போனேன்’’ என்றான். ‘‘உங்கம்மாவிடம் சொல்லிட்டுப் போகக்கூடாதோ..’’ என்றதற்கு, ‘‘அம்மாதான் தெண்டச்சோறுன்னு வெய்ய றாளே...’’ என்றான்.

மாஞ்சு பழையபடி ஆகிவிட்டான். ‘‘அவனை எதும் கேக்காதேம்மா!’’ என்று பாச்சு சொல்லி விட்டான். அவளும் அப்படியே தீர்மானித்தாள்.

மாஞ்சு இதனால் வெத்து என்று இல்லை. சமூகத்துக்கு ஒத்தாசையாகத்தான் இருந்தான். மாய்ந்து மாய்ந்து பொதுக்காரியம் செய்வான்.

‘‘எங்க மாஞ்சு படிக்கலையே ஒழிய, எல்லா சாமர்த்தியமும் உண்டு அவனுக்கு. எங்கு போனாலும் பிழைச்சுப்பான் மாமி!’’ என்பாள் ஆண்டாள்.

‘‘ஒரு கல்யாணத்தைப் பண்ணி வெச்சுரு. சரியாப் போய்டும்.’’

‘‘அதுக்குத்தான் அலையா அலையறேன். முதல்ல அவன் சொந்தக் கால்ல நிக்கட்டும் மாமி. ரங்க நாதர் அவனுக்கு ஏதோ வெச்சிருக்கார்னு தெரி யறது... என்ன வெச்சிருக்கார்னுதான் புரியலை.’’

இடையே பாச்சு ஸ்டேட் ராங்க் வாங்கி ஐ.ஐ.டி-யில் என்ட்ரன்ஸ் எக்ஸாம் எழுதி முதல் பத்து ரேங்க்குகளில் வந்தான். சென்னை ஐ.ஐ.டி-யில் சேர்ந்தான்.

ஆண்டாள் சுற்றுப் பட்ட ஜீயபுரம், திருவெள்ளறை போன்ற இடங்களில் ஏழை பிராமணப் பெண்ணாக மாஞ்சுவுக்குப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

‘‘சீர்செனத்தி எதும் வேண்டாம்மா. பொண்ணு அவனுக்கு பாந்தமா இருந்தா போறும். ரொம்ப படிச்சிருக்க வேண்டாம். தம்பிக்காரனுக்கு இப்பவே டெல்லி, கல்கத்தா, அமெரிக்கான்னு ஜாதகமா வந்து குமியறது. பெரியவனுக்குப் பண்ணிட்டுதானே சின்னவனுக்குப் பண்ணணும்...’’ என்றாள்.

‘‘ஏம்மா கவலைப் படறே... எனக்கு வேளை வரலை.’’

‘‘எப்படா வரும்... அம்பது வயசானப் பறமா?’’

‘‘வரும்... வரும்! எனக்காக ஒருத்தி பிறந்திருக்கா... அவ எங்க இருக்கானுதான் தெரியலை. கண்டுபிடி.’’

பாச்சு ஐ.ஐ.டி. முடித்த கையோடு எம்.எஸ். படிக்க ஹார்வர்டுக்குப் போய்விட்டான். அவனுக்கு ஸ்டான்ஃபோர்டு பர்ட்யு உள்பட எட்டு இடத்தில் அட்மிஷன், அசிஸ்டண்ட்ஷிப்புடன் கிடைத்தது. ‘‘இதுதான் இருக்கறதுக்குள்ளயே பெஸ்ட்னு போயிருக்கான் அங்க’’ என்று மாஞ்சு பெருமையாகச் சொல்லிக்கொண்டான்.

மாஞ்சுவுக்கு வயது முப்பதைத் தாண்டிவிட்டது ‘‘எனக்கு ஏம்மா அவசரப்படறே... நிறைய வரன் வரதுன்னா அவனுக்கு முன்னால கல்யாணம் பண்ணிடு. எனக்கு ஆட்சேபனையே இல்லை’’ என்றான்.

‘‘உறவுக்காராள்ளாம் சொல்லிக் காட்டுவாளேடா...’’

‘‘அவா என்ன வேணா சொல்லிட்டு போகட்டும்! நான் எதும் சொல்லலையே... எதுக்கு கவலை? என் ஜாதகத்தின்படி ஏழரை நாட்டுச் சனி விலகினாத்தான் கல்யாணம் ஆகும்னு புஜ்ஜி சாஸ்திரி சொல்லிருக்கார்.’’

இதனிடையில் படித்துக் கொண்டிருக்கும்போதே பாச்சுவுக்கு ஏழெட்டு கம்பெனிகள் வேலை கொடுக்க முன்வர, ‘பாச்சுஸ் அல்காரிதம்’ என்று கர்மார்கர் போல லீனியர் ப்ரொக்ராமிங்கில் வேகமாக இயங்கக்கூடிய வழிமுறையைக் கண்டுபிடித்து பேட்டண்ட் எடுத்தான். ஐ.பி.எம்., எச்.பி. அல்காடெல், போன்ற பெரிய கம்பெனிகள் அவனை அழைத்தன. இன்டர்வியூவுக்கு அவன் இருக்குமிடத்துக்கு எச்.ஆர்.டி. மா&னஜரை அனுப்பினார்கள்.

க்ரீன் கார்டுக்கும் மனு கொடுத்து விட்டான். அது வருவதற்குள் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டியது விசா விதிகளின் படி தேவையாயிற்று. மாஞ்சுவுக்கு போன் பண்ணி ‘‘அம்மாகிட்ட சொல்லு... பதினஞ்சு நாள் லீவில வருவேன். ரெண்டு அல்லது மூணு பெண் பார்த்து வைக்கச் சொல்லு.

ஜாஸ்தி வேண்டாம். கன்ஃப்யூஸ் ஆயிடுவேன். எனக்கு இந்த ஊர்ப் பொண்ணுகள் வேண்டாம். ஒவ்வொருத்தியும் மூணு பாய்ஃப்ரெண்டு, கல்யாணத்துக்கு முன்னால செக்ஸ்னு கேக்கவே நன்னால்லை. அம்மா மாதிரி ஒரு பெண் வேணும்னு சொல்லு’’ என்றான்.

மாஞ்சு, பாச்சுவின் ஜாதகத்தை சரியாகக் கணித்து காப்பி எடுத்து ‘மங்கையர்மலர்’, ‘ஹிண்டு’வில் எல்லாம் விளம்பரம் கொடுத்து, போட்டோ அனுப்பி எல்லா ஏற்பாடுகளும் செய்தான்.

ஜாதகங்கள் வந்து குவிந்தன. இறுதியில் ஹேமலதா என்கிற லதா பாச்சுவுக்கு பொருத்தமாக இருப்பாள் என்றான். அவள் அப்பா சக்ரவர்த்தி என்று பி.எச்.இ.எல்.லில் டி.ஜி.எம். நல்ல சுயமாச்சார்யாள். போபாலிலும் டெல்லியிலும் வளர்ந்த பெண். அவர்களும் தென்கலை... ஜாதகம் நன்றாகப் பொருந்தியது. அழகான பெண். முக்கியமாக அசப்பில் பார்த்தால் சின்னவயசில் ரத்னா ஸ்டுடியோவில் எடுத்த ஆண்டாள் போட்டோ போலவே இருந்தாள். மாஞ்சுவிடம் பாச்சு, ‘‘அண்ணா, நீ ஓகேன்னா எனக்கும் ஓகேதான்... உங்களையெல்லா ரையும் அமெரிக்காவுக்கு கூட்டிண்டு போகப் போறேன்’’ என்றான்.

பாச்சுவின் பெயர் இங்கிலீஷ் கல்யாணப் பத்திரிகையில் பார்த்திஸந்தா என்று போட்டிருந்தது. திருச்சி தென்னூரில் புதிதா கக் கட்டிய பெரிய கல்யாண மண்டபத்தில் முதல் கல்யாணமாக பாட்டுக்கச்சேரி எல்லாம் வைத்து விமரிசையாக நடந்தது. பார்த்தவர்கள் எல்லாம் ‘என்ன அழகான ஜோடிப் பொருத்தம்!’ என வியந்தார்கள்.

ஆண்டாள் புதுமணத் தம்பதியை வாழ்த்தும்போது கண்ணில் நீர் பெருகியது. ‘‘அம்மா, அம்மா... ஸ்டாப்பிட் அம்மா... நான் மாஞ்சுக்கு ஒரு ப்ரைடை ஏற்பாடு பண்ணு கிறேன்...

ஓகே?'' என்றான். காம்கார்டரில் நிறைய விடியோ எடுத்தார்கள். பாச்சுவின் மாமியாரே இளமையாக இருந்தாள். ஆண்டாள் ஒருநாளைக்கு அரக்கு கலரில் பட்டுப்புடவை உடுத்தி இருந்ததை ஆராமுது கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார். பாச்சுவின் மாமியார், ''கவலைப் படாதீங்க மாப்பிளை... உங்க பிரதர்க்கு தைமாசத்துக்குள் நல்ல பொண்ணா பாத்து வைக்கவேண்டியது என் பொறுப்பு. ஏண்டி... நம்ம கோமளா பொண்ணுக்கு என்ன வயசு?''

கல்யாணமான ஒரு வாரம் பெங்களூர், ஊட்டி என்ற சுற்றிவிட்டு அடுத்த வாரமே லதாவை டூரிஸ்ட் விசாவில் அமெரிக்கா அழைத்துச் சென்றுவிட்டான் 'மிஸ்'ஸாகத் தான் அவள் சென்றாள். மாமியார் வீட்டில் லதா ஒரு நாள்தான் இருந்தாள். ''ஃபேன் இல்லையா?'' என்று அங்கலாய்த்தாள். தெற்குவாசலுக்குப் போய் மாஞ்சு ஒரு ஃபேன் வாடகைக்கு எடுத்து வந்தான். பாச்சு அமெரிக்கா போய் சட்டவிதிகளுக்காக இன்னொரு கல்யாணம் செய்ய வேண்டும் என்பதெல்லாம் ஆண்டாளுக்கோ மாஞ்சுவுக்கோ புரியவில்லை.

மாஞ்சு இப்போது லேசாகச் சிரித்து மழுப்பும் வழக்கத்தைக் கொண்டிருந்தான்

''மாஞ்சு, எப்படா கல்யாணம்? தம்பிக்கே ஆயிடுத்து... உனக்கு எப்படா?''

சிரிப்பு.

''யாரையாவது பாத்து வெச்சிருக்கியா? சொல்லிடு...''

சிரிப்பு.

பாச்சா அம்மாவை அமெரிக்காவுக்குக் கூப்பிட்டான்.

''அங்க இப்ப வந்தா பிரயோஜ னம் இல்லை. ஒரு நல்ல சேதியா சொல்லு. வந்துர்றேன். உங்கண்ணனுக்கு ஒரு கால்கட்டைப் போடணுமே... எப்படி அவனைத் தனியா விட்டுட்டு வரது?''

''நீ போயிட்டு வாம்மா. நான் சந்த்ரா லாட்ஜ்ல சாப்ட்டுக்கறேன்.''

''இல்லைடா... அடுத்து உன் கல்யாணம்தான். இப்பவே ரொம்ப தள்ளிப் போயிடுத்தே...''

மாஞ்சுவுக்கு கடைசியில் ஒரு நல்ல வரன் வந்தது. அலமேலு, பாச்சு கல்யாணத்தின்போது சமையலுக்கு ஒத்தாசையாக கறிகாய் நறுக்கிக் கொண்டிருந்தாள். பெண் பளிச்சென்று இருப்பதை ஆண்டாள் பார்த்திருந்தாள். வயது இருபத்திரண்டு. செவ்வாய் தோஷ ஜாதகம். பரவாயில்லை. ஆனால், வயசு வித்தியாசம் ரொம்ப இருக்கிறதே என்று கேட்கத் தயங்கினாள். பெண் வீட்டார் இதைக் கேள்விப்பட்டு, ''இருந்தா என்ன... பையனுக்கு வயசே தெரியலையே. உங்காத்தில சம்பந்தம் வெச்சுக்க நாங்க குடுத்து வெச்சிருக்கணும்'' என்றார்கள். அவர்கள் ஏழை. அப்பா சரக்கு மஸ்டர். அம்மா கல்யாணங்களுக்கு கறிகாய் நறுக்குபவள், அப்பளம் இடுபவள். அலமேலு ஆறு பெண்களில் மூத்தவள். ''மாஞ்சுவை பாத்தியாடி... பண்ணிக் கிறாயா?'' என்று கேட்டதில் உட&ன சம் மதித்து விட்டாள். ''இங்க இருந்துண்டு மூணுவேளை தளிகை பண்ணிண்டு, ஒரு தாவணியையே தோச்சுத் தோச்சுப் போட்டுண்டு, சாக்கடை குத்திண்டு இருக்கறதில இருந்து விடுதலை கிடைக்கிறதால நான் ராமானுஜனைக் கல்யாணம் பண்ணிக்கறேன்!'' என்று சொன்னாள்.

நிச்சயதார்த்தம் பழம்பாக்கு வெற்றிலை மாற்றிக்கொண்டார்கள். சரக்கு மாஸ்டரிடம் பணம் இல்லை. வரவேண்டிய பணம் ஒன்று இருந்ததால் சித்திரை மாசத்தில் கல்யாணம்

வைத்துக்கொள்ளலாம் என்றார்கள் பெண்வீட்டில்.. பாச்சுவுக்கு கலெக்ட் கால் போட்டு பேசியதில் ''பணத்தைப் பத்தி பிரச்னையே வேண்டாம்மா. நாமளே செலவழிக்கலாம். நான் நிறையவே சம்பாதிக்கிறேன். ஆறாயிரம் டாலர்ங்கறது எனக்கு பெரிசே இல்லை. அவாளை இதுக்காக தள்ளிப்போடச் சொல்லாதே. சட்டுபுட்டுனு முடிச்சுரு'' என்றான்.

கடைசியாக மாஞ்சுவுக்கு கல்யாணம் என்று தேர்முட்டி தள்ளிக்கூட தெருவே பேசிக் கொண்டது. எல்லாரும் வந்து சந்தோஷமாக ஆண்டாளை விசாரித்தார்கள். அந்தப் பெண்ணும் இரண்டு முறை சேஷ வாகனத்தின் போதும் தைத்தேர் பார்க்கவும் வந்தபோது இவர்கள் அகத்துக்கு வந்து ஓடியாடி ஒத்தாசை செய்தது. ஆண்டாளுக்கு அவளை ரொம்ப பிடித்துப் போய்விட்டது. இப்பவே அம்மா என்று கூப்பிட்டது (பாச்சுவின் மனைவி லதா 'ஆன்ட்டி' என்றுதான் கூப்பிட்டாள்) ''மாட்டுப் பெண்ணை அவா கண்லகூட காட்டலை. ஒரு நா இருந்துட்டு அமெரிக்கா போயிட்டா. நீதாண்டி என் மாட்டுப்பெண். எங்க மாஞ்சுவுக்கு பெருமாள் கண்திறந்துட்டேர்'' என்றாள்.

பாச்சு அனுப்பிய ஆயிரம் டாலரை மாற்றி அவளுக்கு நாராயணசாமி கடைக்குப் போய் நல்ல பட்டுப்புடவை வாங்கித் தந்தாள். திருமாங்கல்யம், தோடு, நெக்லஸ் போடுவதாகச் சொன்னாள்.

மாஞ்சுவும் ஒருமுறை அவர்கள் வீட்டுக்குப்போய் கன்றுக்குட்டியிலிருந்து எல்லோரையும் விசாரித்துவிட்டு வந்தான் ''ஏண்டி, அவ்வளவு வயசு தெரியலை யோல்லியோ..?'' என்றாள் கோமளா சற்றே கவலையுடன். மாஞ்சுவை சாப்பிடச் சொன்னார்கள். தயக்கமில்லாமல் பிகு பண்ணாமல் உட்கார்ந்து சம்பிரமமாக ரெண்டுதடவை சாத்தமது கேட்டு வாங்கி உறிஞ்சிச் சாப்பிட்டுவிட்டு வந்தான்.

''ஏண்டா கல்யாணம் ஆற துக்கு முன்னாடி அவாத்தில சாப்ட்டே?'' என்றாள் ஆண்டாள்.

''அதான் நிச்சயம் ஆய்டுத்தேம்மா... ஏன்?''

''சம்பந்தம் முடியறதுக்கு முன்னாடி சாப்பிடக்கூடாதும்பா.''

''பரவாயில்லைம்மா. இதெல்லாம் யார் பாக்கறா...''

அடுத்த முறை போனபோது பட்டும்படாமலும் பேசினார்கள். ''பரீட்சை எழுதி முடியட்டும் மாமி... அவசரமென்ன? கிணத்து ஜலத்தை வெள்ளமா கொண்டு போயிடும்?'' என்றார்கள். என்ன பரீட்சை என்றால் சரியாகச் சொல்லவில்லை.

அதன்பின் அவர்கள் வேறு பெரிய இடம் பார்ப்பதாக அம்புலு வந்து சொன்னாள். அங்கே போய் விசாரித்தால் ''வயசு வித்தியாசம் ஜாஸ்தியிருக்கேன்னு எல்லாரும் சொல்றா மாமி... யோசிக்கணும். பேட்டைவாய்த்தலை ஜோசியருக்கு கடுதாசி போட்டிருக்கோம். பதில் வந்ததும் சொல்லிடறோம். நீங்க வாங் கிக் கொடுத்த புடவை பிரிக்காம அப்ப டியே இருக்கு'' என்றாள். இதை மாஞ்சுவிடம் சொல்லத் தயங்கினாள் ஆண்டாள். 'என்ன இவனுக்கு இப்படி அச்சான்யாமாவே இருக்கு' என்று வேதனைப்பட்டாள்.

பங்குனி உற்சவத்தின்போது அந்தப் பெண்ணும் அவள் தங்கைகளும் கோமளாவும் வீதியோடு போனார்கள். இந்தப் பக்கம் திரும்பக்கூட இல்லை.

மாஞ்சு புரிந்துகொண்டுவிட்டான். ''கவலைப்படாதேம்மா. இவ இல்லைன்னா வேற பொண்ணு'' என்றான். அவன் குரலில் விரக்தி இருந்தது. ''எப்படியும் அந்தப் பெண்ணுக்கும்

அமெரிக்காவில் இருந்து ஒரு பையன் வந்து உடக்ன கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொல்லிருக்கானம். உங்காத்து பாச்சாதான் அட்ரஸ் கொடுத்தா னாம்'' என்றாள் அம்புலு.

''அதான் அவா பட்டும்படாம பேசறா'' என்றான்.

அதன்பின் அந்தப் பெண்ணின் கல்யாணக் கடுதாசி தபாலில் ஸ்டாம்பு குறைச்சலாக ஒட்டி வந்தது. திருப்பி அனுப்பினால் தப்பாக எடுத்துக்கொள் வார்கள் என்று மாஞ்சு அபராதம் கட்டி வாங்கிக்கொண்டான். அதே தென்னூர் மண்டபத்தில் கல்யாணம். இடையே பாச்சு போன் பண்ணியிருந்தான். அவனிடம் விவரம் சொன்னபோது, ''நான்தாம்மா அட்ரஸ் கொடுத் தேன். என் அண்ணாவுக்கு நிச்சயமான பெண்ணை போய் பார்த்துட்டு போட்டோ அனுப்புன்னு கொடுத்தேன். அவன் கொத்திண்டுட்டான். ஒருவேளை சொல்லியிருக்ககூடாதோ... அம்மா, ரெண்டு பேரும் அமெரிக்கா வந்துருங்கோ. மாஞ்சுவுக் கும் ஒரு சேஞ்சா இருக்கும். நயாக்ரா ஃபால்ஸ், டிஸ்னி லேண்டெல்லாம் சுத்திக்காட்ட ரவுண்டு டூர் டிக்கெட் ஏற்பாடு பண்றேன்'' என்றான்.

லதா உண்டாகியிருக்கிறாள் என்றும் அவள் அம்மா வால் இப்போது அமெரிக்கா வரமுடியாது என்றும் லதாவின் அக்காவுக்கும் பிரசவ டைம் என்பதும் தெரிந்தது. ஆண்டாள் முதலில் போய் மூன்று மாசம் இருந்து குழந்தையைப் பார்த்துக்கொண்டால் லதாவின் அம்மா வந்துவிடுவாள். குழந்தை அமெரிக்காவில் பிறக்க வேண்டியது அவசியம். அப்போதுதான் அது அமெரிக்கன் சிட்டிஸனாகும் என்றான் பாச்சு.

டிராவல் ஏஜெண்ட் அம்மாவுக்கும் மாஞ்சுவுக்கும் அவசரமாக பாஸ்போர்ட் எடுத்தார்கள். பாச்சு தன் சம்பாத்தியம், வேலை, ஷேர் விவரங்கள், தன் மதிப்பு எல்லாவற்றையும் விவரித்து ஸ்பான்சர் லெட்டர் அனுப்பியிருந்தான். தன் பிள்ளைக்கு இத்தனை சொத்தா என்று ஆண்டாள் பெருமைப்பட்டாள். இருவருக்கும் விசாவுக்கு மனுப் போட்டதில் ஆண்டாளுக்கு கிடைத்தது. மாஞ்சுவுக்கு காரணம் போதவில்லை என்று மறுத்துவிட்டார்கள்.

ஆண்டாள் ரொம்ப சங்கடப்பட்டாள். ''உன்னை தனியா விட்டுட்டு எப்படிரா போறது?''

''நான் என்னம்மா சின்னக் குழந்தையா?''

''கல்யாணத்தையாவது பண்ணியிருந்தா அவ பாத்துப்பாளே...''

''அதான் ஆகலையே... நீ இப்ப அமெரிக்கா போயாகணும்.''

''தனியா எப்படிரா போவேன்?''

''அதெல்லாம் பிரச்னையே இல்லை மெட்ராஸ்ல பிளேன் ஏறினா நேர எங்கயுமே இறங்க வேண்டியதில்லை. எட்டூருக்குப் பாத்துப்பா மாமி'' என்றான் ஏஜெண்ட்.

ஆண்டாள் பல்வேறு சீட்டுகளையும் எழுதிக்கொண்டு பருப்பு பொடி, கரு வேப்பிலைபொடி, குழம்புப்பொடி, ரசப் பொடி, முறுக்கு, தட்டை எல்லாம் எடுத்துக் கொண்டு பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானத்தில் ஏறினாள். மாஞ்சு சென்னை ஏர்போர்ட் தடுப்பு வரை கொண்டு விட்டான். மாஞ்சு கொஞ்சம் இருமினான். ஆண்டாள் புறப்படும்போது ரொம்ப அழுதாள்.

பிளேனைவிட்டு நகரவில்லை. ஒரு ஹாஸ்டஸ் நன்றாகப் பார்த்துக் கொண்டாள். லண்டன் வரை தமிழ் பேசினாள். ஜே.எஃப்.கே-யில் பாச்சாவும் லதாவும் பாஸ்டனிலிருந்து வந்து கப்பல் காரில் அழைத்துச் சென்றார்கள். ''மாஞ்சுதாண்டி பாவம்... அதிர்ஷ்டமே இல்லை.''

''இல்லை ஆன்ட்டி... ஒழுங்கா படிச்சிருந்தா மச்சினரும், தன்னைப் போல முன்னுக்கு வந்திருக்கலாம்னு பார்த்தி சொன்னார். முதல்லருந்தே சரியா வளர்க்கலையாம்'' என்று லதா சொன்னது ஆண்டா ளுக்கு உறுத்தியது.

''டைபாய்டு வந்து ஒரு வருஷம் பின்தங்கினதும் அவனுக்கு சுவாரஸ்யம் போயிடுத்து. அவனும் பாச்சு போல வந்திருக்க வேண்டியவன்தான்.''

பாச்சு, ''மாஞ்சுவா? ஹ!'' என்றான்.

லதா கடகடவென்று அர்த்தமில்லாமல் சிரித்து பாச்சுவுடன் முன்ஸீட்டில் ஒட்டிக் கொண்டாள்.

'இவ என்ன சொல்றது!' என்று ஆண்டாளுக்கு வருத்தமாக இருந்தது.

வீடு பெரிசாக நாலு ரூம் மச்சும் கீழுமாக இருந்தது.

லதாவுக்கு ப்ரீச் பேபியாக இருந்ததால் சிசேரியன் பண்ணி எடுக்கவேண்டும் என்றார்கள். அவள் பெட்ரூமைவிட்டு நகர வில்லை. நாள் பூரா காதில் மாட்டிக்கொண்டு பாட்டு கேட்டாள். எதையோ கொரித்துக் கொண்டே இருந்தாள். பிள்ளைத்தாச்சி பத்தியமாக இருக்கவேண்டும் என்று சொல் லிப்பார்த்தாள். ''அதெல்லாம் மாறிப்போச் சும்மா'' என்றான் பாச்சு.

அந்த ஊர் டி.வி. புரியவில்லை. பாச்சு மைக்ரோவேவ், ரைஸ் குக்கர், ப்ளெண்டர் போன்றவற்றை எப்படி இயக்குவது என்று சொல்லிக் கொடுத்தான். காஸ், எலெக்ட்ரிக் அடுப்பு எல்லாம் சௌகரியமாக இருந்தது. பாச்சுவுக்கு வேளைக்கு வேளை வெங்காய பஜ்ஜியும், தோசையும், இட்லியும், அடையும், தேன்குழலும், முள்ளு முறுக்கும், பருப்பு உசிலியும் மாற்றி மாற்றி பண்ணிப்போட்டாள். கீரை, வாழைக்காய், உருளைக்கிழங்கு, சேப்பங் கிழங்கு ரோஸ்ட் எல்லாம் வகை வகையாகச் செய்து போட்டாள். பிள்ளையும் மாட்டுப் பெண்ணும் 'திஸ் இஸ் கிரேட், கூல், ஆஸம்' என்று சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆபீஸிலிருந்து வந்த உட&ன ''அம்மா, சாயங்காலத்துக்கு என்னம்மா டிபன்?'' என்று கேட்பான்.

இண்டியன் ஸ்டோரில் அத்தனை காய்கறியும் கொட்டிக்கிடந்தது. பால் ஏராளமாகக் கிடைத்தது. நியூஜெர்சியிலிருந்து தன் நண்பர்களைக் கூப்பிட்டு பிரமாதமாக ஒரு விருந்து சமைக்கச் சொன்னான். அத்தனை பேரும் ஒன்று விடாமல் சாப்பிட்டு, ''ஆன்ட்டி, எங்க வீட்டுக்கு வந்து இந்த மாதிரி வடை போடறது எப்படின்னு வொய்ஃபுக்கு சொல்லி கொடுங்க... பார்ட்! உங்கம்மாவை கிட்நாப் பண்ணிட்டு போறேன்'' என் றார்கள். பார்ட்டிக்கு மாஞ்சுவுக்கு பார்த்த அந்தப் பெண் அலமேலு அவள் கணவனுடன் வந்திருந்தாள். ஆளே மாறிப்போய் இருந்தாள். தலையை கிராப் வெட்டிக்கொண்டு ஆண்பிள்ளை சொக்காய் போட்டுக் கொண்டு அவளே சொல்லிக் கொண்ட பின் தான் அலமேலு என்று தெரிந்தது. அவள் கணவன் அவளை அடிக்கடி லூலூ என்று அழைத்தான்.

அவ்வப்போது ''உன் அண்ணன் என்ன பண்ணிக்கொண்டிருக்கிறானோ...'' என்று அங்கலாய்ப்பாள். ''அம்மா, இங்க வந்தாச்சு நீ. நோ நியூஸ் இஸ் குட் நியூஸ்.''

''இல்லைடா... அவனுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிருந்தா...''

''இதையே சொல்லிண்டிரும்மா'' என்றான் பாச்சு. அன்று லேசாக குடித்திருந்தான். ''உன் ரெண்டாவது பிள்ளையை எப்பவாவது தட்டிக்கொடுத் திருக்கியாம்மா? ஸ்டேட்லயே முதலா

வந்தே &னம்மா... ஒரு திருக்கண்ணமுது பண்ணிப் போட்டிருக்கியா? என்னை அணைச்சு ஒரு முத்தம் கொடுத்திருக்கியாம்மா? ஸ்காலர்ஷிப் பணத்தை யெல்லாம் கொண்டுவந்து கொட்டி&ன&ன... எப்பவாவது தாங்ஸ் சொன்னியம்மா? அப்பப்போ ஐந்நூறும் ஆயிரமும் டாலர் டாலரா அனுப்பிச்சே&ன... எப்பவாவது போன்ல கூட்டு 'பாச்சு உன்னைப் பிள்ளையா பெத்ததுக்கு எனக்கு பெருமைடா பாச்சு'ன்னு ஒரு வார்த்தை... ஒரு வார்த்தை? எப்பப் பாத்தாலும் மாஞ்சு கல்யாண மாகலையே, மாஞ்சு சாப்டலையே, மாஞ்சுக்கு கொத்த மல்லி தொகையல் பிடிக்குமே, மாஞ்சுக்கு அடை பிடிக்குமே, வெல்லக் கொழக்கட்டை பிடிக்குமே...

உனக்கு ரெண்டு பிள்ளைம்மா! உன் ரெண்டா வது பிள்ளையோட அல் காரிதம் இப்ப உலகமே யூஸ் பண்றது தெரியுமா?''

ஆண்டாள் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தாள். லதா தன் கை நகங்களுக்கு பாலீஷ் பூசிக்கொண்டிருந்தாள்.

''பாச்சு நீ மாறிப் போயிட் டேடா'' என்றாள்.

பாச்சு அப்புறம் அவள் ரூமுக்கு வந்து விளக்கைப் போட்டான். ஆண்டாள் படுக்கை யில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். அணைத்துக்கொண்டு ''ஐம் ஸாரிம்மா... நான் அப்படிப் பேசியிருக்க கூடாது'' என்றான். அவனிடம் சாராய வாசனையும் சிகரெட் வாசனையும் இருந்தது.

பாச்சுவுக்கு ஆண்குழந்தை பிறந்து மூணாவது நாள் அனுப்பிவிட்டார்கள். ஏகப்பட்ட துணிகளில் சுற்றி குழந்தை வீட் டுக்கு வந்தது. அதற்கென்று தனியாக ஒரு அறையை நீலகலரில் பேப்பர் ஒட்டி மிக்கி மௌஸ் பொம்மைகள் எல்லாம் இட்டு தொட்டி லில் ஜில்ஜிலாப்பு தொங்கவிட்டு குழந்தை கையைக் காலை உதைத்துக்கொள்வதை பார்த்து மகிழ்ந்து ''இப்பவே பார்றா... என்ன புத்திசாலி... அப்பா மாதிரி!'' என்றாள் ஆண்டாள். ''பெரியப்பா மாதிரி இல்லாட்டா சரி'' என்றான் லதா.

அவளை 'உனக்கென்னடி தெரியும் அவ னைப்பத்தி?' என்று கேட்டுவிடத்தான் துடித்தாள். எதற்கு வந்த இடத்தில் சண்டை என்று பல்லைக் கடித்துக்கொண்டாள். அவளுக்கு அமெரிக்கா பிடிக்கவில்லை. சிறைவாசம் போல இருந்தது. வாரம் ஒரு நாள் இண்டியன் ஸ்டோருக்கு கூட்டிப் போவான். நடுராத்திரியில் நாற்பது மைல் போய் பால் கேன் வாங்கி வருவதும் பழைய நாகேஷ் படங்களை காஸெட் எடுப்பதும் உதவாத சாமான்களை வாங்கி டிக்கியை ரொப்பு வதும் ஆண்டாளுக்குப் பிடிக்கவில்லை.

வேளாவேளைக்கு பாச்சுவுக்கு தளிகை பண்ணி போடவேண்டும். சுடவைக்கக்கூடாது. சத்தம் போடுவான். கைக்குழந்தையை வளர்ப்பது ஆண்டாளுக்கு மறந்து போய்விட்டது. அது ஓயாமல் அழுதது. இப்போதே அதை தனி ரூமில் போட்டுவிட்டார்கள். டாக்டர்கள் வரவே மாட்டார்கள். ரொம்ப பயந்து கொண்டேதான் இருந்தாள். குழந்தை விச்சுளியாய் இருந்தது. தாய்ப்பால் கிடையாது.

''லதா, உங்கம்மா எப்ப வரப்போறா?'' என்று கேட்டாள்.

''இன்னும் ரெண்டு மாசம் ஆகும் ஆன்ட்டி.''

''இல்லை... நான் மாஞ்சுவை தனியா விட்டுட்டு வந்திருக்கேன். உங்கம்மாவோட பேசிப் பாரேன்... சீக்ரம் வரட்டுமே...''

சாயங்காலம் பாச்சுவும் லதாவும் பேசிக் கொண்டிருந்தார்கள். பாச்சு பட்டென்று கதவை திறந்து ''அம்மா, உனக்கு இங்க என்ன குறை?''

''குறைன்னு இல்லைடா... வந்து ஆறு மாசம் ஆச்சு.''

''நாலு மாசம். ஸோ வாட் அம்மா?''

''எனக்கு ஊருக்கு போகணும் போல இருக்கு.''

''அங்க என்ன வெச்சிருக்கு உனக்கு?''

''மாஞ்சு.''

''மாஞ்சு. மாஞ்சு... மைகாட்! மாஞ்சுவுக்கு நாப்பது வயசும்மா!''

''முப்பத்தஞ்சு.''

''சரி, முப்பத்தஞ்சு... அவனுக்கு இனிமே கல்யாணம் ஆகாது.''

''எப்படி ஆகும்... நீதான் தம்பிக்கார&ன கலைச்சுட்டியே. வேற ஜாதகம் பாத்துக் கொடுத்துட்டியே அலமேலுவுக்கு'' என்று வாய்தவறிச் சொல்லிவிட்டாள். பிலுபிலு வென்று பிடித்துக்கொண்டான்.

''என்ன சொன்&ன? நானா... நானா?'' என்று அவளை அடிப்பதற்கு கை ஓங்கினான். லதாதான் அவனைத் தடுத்தாள்.

''அம்மா, நான் தெளிவா சொல்றேன் லதாவோட அம்மா வரவரைக்கும் நீ இங்க இருந்ததுதான் ஆகணும். உன்னை பிளேன் சார்ஜ் கொடுத்து அழைச்சண்டு வந்திருக்கேன். ஒரு டிக்கெட், இண்டியன் ருப்பீஸ்ல என்ன வெல தெரியுமா... எழுபதாயிரம்.''

''நான் வேணா நிலத்தை வித்து கொடுத்துர்றேம்பா.''

''அம்மா, ஏம்மா புரிய மாட்டேங்கறது உனக்கு...''

இதற்குள் லதா, ''பாச்சு... நான் இன்னிக்கே அம்மாவுக்கு போன் போட்டுர்றேன். ஆன்ட்டி, எங்கம்மாகிட்ட பேசி எவ்வளவு சீக்கிரம் வரமுடியுமோ வரச் சொல் றேன். பல்லைக் கடிச்சுண்டு, ஒரு மாசம் இருங்கோ போறும்.''

பாச்சு, ''அம்மா, நிஜமாவே சொல்லு... உனக்கு பேரன் பொறந்ததில பெருமை இல்லையா? சுந்தரராஜன்னு பேர் வெக்க றேம்மா. அப்பா பேரு, ஞாபகம் இருக்கா... வேணும்னா ராமானுஜம்னு வெக்கறேன்.''

ஆண்டாள் மௌனமாக இருக்க...

''பாச்சு, இட்ஸ் நோ யூஸ். ஷி வில் நெவர் அண்டர்ஸ்டாண்ட்'' என்றாள் லதா.

ஆண்டாளுக்கு சங்கடம் பண்ணியது. இங்கு வந்து மாட்டிக்கொண்டு விட்டோம்... என்னை விடவேமாட்டார் கள் என்று வயிற்றில் புளியைக் கரைத்தது.

அடுத்த நாளே ஸ்ரீரங்கத்திலிருந்து ஆராமுது போன் பண்ணியிருந்தார் - மாஞ்சுவுக்கு உடம்பு சரியில்லை. தில்லை நகரில் அட்மிட் ஆகியிருக்கிறான் என்று. ஆண்டாள் பதறிப்போனாள்.

பாச்சுவை ஆபீஸில் கூப்பிட்டு சொல்லச் சொன்னாள். பாச்சு லேட் டாக வந்தான். ''அம்மா, இந்த ட்ரிக் எப்பம்மா கத்துண்டே? லெட்டர் எழுதிப் போட்டியா?''

''என்னடா சொல்றே?''

''இல்லை... மாஞ்சுவுக்கு உடம்பு எப்படிம்மா கரெக்டா மணி அடிச்சாப்பால வரது?''

''நீ என்ன சொல்றன்&ன புரியலை பாச்சு... நீ வரவர நடந்துக்கற விதம், உன் தாயாரை நீ மதிக்காததும் மனசை நோகடிக்கறதும் நன்னாவே இல்லை. கொஞ்ச நாள் பிரிஞ்சு இருந்தா ரெண்டு பேருக்கும் ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்க முடியும்னு தோணறது. நான் ஊருக்குப் போயிட்டு மாஞ்சு வுக்கு சரியானப்புறம் வந்துர்றேன்.''

''வரவே வேண்டம். அங்கேயே இரு... தாயார் சந்நிதி மண்டபத்தை யெல்லாம் முதுகு தேச்சுண்டு உண்டக்கட்டி சாப்ட்டுண்டு.''

லதாவின் அம்மாவும் வருவதாகச் சொல்லிவிட, ஆண்டாளை மறுபடி பிளேன் ஏத்தி அனுப்பிவிட்டான்.

ஆண்டாளுக்குச் சந்தோஷமாக இருந்தது. 'மாஞ்சுவுக்கு ஒன்றும் இல்லை. நான் இல்லாமல் ஏங்கிப் போயிருக்கிறான். நான் போய் ரெண்டுவேளை மெந்தியக் குழம்பும் சுட்ட அப்பளமும் பண்ணிப் போட்டாலே சரியாப் போய்டும்' என்றுதான் போனாள்.

மாஞ்சு இவள் போனபோது தில்லைநகர் தனியார் ஆஸ்பத்திரியில் கோமாவில் இருந்தான். அவன் மார்பைப் பிறாண்டி ''மாஞ்சு, முழிச்சுப் பார்றா... அம்மா வந்திருக்கேன். கண்ணைத் திறடா'' என்று சொல்லிப் பார்த்தாள். திறக்கவில்லை. மூச்சு விடுவதற்கு ரொம்ப சிரமப்பட்டான். ஆக்ஸிஜன் வைத்தார்கள்.

அவனுக்கு என்ன வியாதி என்று சரியாகச் சொல்லமாட்டேன் என்றார்கள். 'கிண்ணி சரியில்லை கிண்ணி சரியில்லை...' என்று சொன்னார்கள். நம் தேகத்தில் எங்கு கிண்ணி இருக்கிறது என்று ஆண்டாளுக்குப் புரியவில்லை.

அவர்கள் சொன்னது கிட்னியை. மாஞ்சு இவளைக் கண்திறந்து பார்க்காமலேயே இறந்து போய்விட்டான்.

ஸ்ரீரங்கத்துக்காரர்கள் அத்தனை பேரும் வந்திருந்தார்கள்.

பாச்சு உட&ன பிளேன் பிடித்து, ராக்ஃபோர்ட் பிடித்து ரெண்டு நாளில் வந்துவிட்டான். அதுவரை மாஞ்சுவை ஐஸ் பாளத்தில் வைத்திருந்தார்கள். நெற்றியில் பளிச்சென்ற தென்கலைத் திருமண் இட்டு, ஊதுவத்தி கொளுத்தி வைத்து, ஈ விரட்டி பேருக்குப் பேர் தவணை முறையில் அழுது...

பாச்சு வந்த உட&ன எல்லாக் காரியங்களும் துரிதமாக நடந்தன. நடுக்கூடத்தில் கிடந்த உடலை தொப்பலாக நனைத்தார்கள் திருமங்கை மன்னன் படித் துறையில். அவன்தான் கொள்ளி போட்டான்.

முதலில் மாஞ்சு போய்விட் டான் என்பது ஆண்டாளுக்கு உறைக்கவில்லை. உறைத்த போது ஒரே கேள்வியைத் திருப்பித் திருப்பிக் கேட்டாள், ‘‘எதுக்குடா ஜென்மம் எடுத்தே? எதுக்குடா... எதுக்குடா?’’

சுபசுவீகாரம் முடிந்ததும் பிரபந்த கோஷ்டி சொன்னார்கள். சரமஸ்லோகம் சொன்னார்கள். மாஞ்சு, ஆசார்யனை அனுசரித் திருக்கிறான்... நிச்சயம் சொர்க்கத்துக்குப் போவான் என்று சொன்னார்கள்.

பாச்சு அம்மாவை கட்டி அணைத்துக்கொண்டு அழுதான். ‘‘மாஞ்சு மாதிரி ஒரு அண்ணன் கிடைக்க நான் குடுத்து வெச்சிருந்தேம்மா... சரியா படிக்காட்டாலும் எனக்கு பல விஷயங்களில் ஒரு அண்ணனா இருந்து கைடு பண்ணிருக்காம்மா’’ என்றான்.

மாஞ்சுவின் காரியங்கள் முடிந்தபின் பாச்சு ‘‘புறப்படும்மா’’ என்றான்.

ஆண்டாள், ‘‘எங்கே?’’

‘‘அமெரிக்காவுக்கு... நம்மாத்துக்கு.’’

‘‘இவனுக்கு மாசியம், சோதம்பம் எல்லாம் ஆய்டட்டுமே...’’

‘‘எல்லாம் அமெரிக்காவில பண்ணிக்கலாம். நான்தா&ன பண்ணப்போறேன். மாஞ்சு இல்லாம நீ எப்படிம்மா தனியா இருப்பே... அம்மா, நான் பேசினதெல்லாம் மறந்துடு. மாஞ்சு போனப்புறம் ஈக்வேஷ&ன மாறிப்போச்சு. இப்ப நிலைமையே வேற. உன்னால தனியா இருக்க முடியாது. இருக்கக்கூடாது.’’

லதாவும் போன் பேசினாள். ‘‘உங்க பேரன் இப்பவே பாத்திங்கறான். வந்துடுங்கோ அம்மா... பிட்ஸ்பர்க் போலாம்’’ என்றாள்.

பாச்சு இவளுக்கும் சேர்த்து டிக்கெட் புக் பண்ணிவிட்டான்.

‘‘அதை கான்சல் பண்ணிடு பாச்சு... நான் கண்டிப்பா வரேன். இப்ப உட&ன குழந்தையை பாத்துக்கத்தான் அவ அம்மா வந்துட்டாளே... கொஞ்ச நாள் போகட்டும்... வரேன்’’ என்றாள். ‘‘கொஞ்ச நாளைக்கு வரேன். ஆனா, பளிச்சுன்னு சொல்லிடறேன்... எனக்கு சீரங்கத்தை விட்டு வரமுடியாது.’’

‘‘தனியா எப்படிம்மா இருப்பே?’’

‘‘தனியா இருக்கப் போறதில்லை. மேல சித்திரை வீதில ஆராமுது ஆத்தில மாடியும் கீழுமா நிறைய இடம் இருக்கு’’ என்றாள்.

## 28. ஸ்ரீரங்கத்து தேவதைகள் - கதையா ? கற்பனையா ?



'சற்றே பெரிய சிறுகதைகள்' என்று வர்ணிக்கப்பட்ட (சிறுகதைகளுக்கு உச்சவரம்பு உண்டா என்ன?) ஸ்ரீரங்கத்து தேவதைகள் இரண்டாவது ஈடு சென்ற வாரம் முடிந்தது. இவற்றைப் படித்தவர்கள் பலர் என்னைத் திரும்பத் திரும்பக் கேட்ட கேள்வி - கதைகளில் எவ்வளவு கற்பனை, எவ்வளவு நிஜம்?



இந்தக் கேள்வியே ஒரு வகையில் எழுத்தின் வெற்றி என்று கொள்கிறேன். முழுவதும் கற்பனைக் கதையை யாராலும் எழுத முடியாது. அதேபோல் டெலிபோன் டைரக்டரி, ரயில்வே டைம்டேபிள் தவிர, முழு வதும் உண்மையும் சாத்தியமில்லை. உண்மை, சொல்லும்போதே சற்றுப் பொய்யாகிவிடு கிறது என்பது என் அனுபவம். உண்மைக்கு மிக அருகில் எழுதினால், இலக்கியத்துக்கு வெளிப்பட்ட காரணங்களுக்காகக் கோபித் துக்கொள்ள பலர் காத்திருக்கிறார்கள். ஒரு பள்ளியைப் பற்றிய ஒரு வரிக்காக, விகடன் ஆசிரியரே மன்னிப்புக் கேட்கும்படியான சூழ்நிலை ஏற்பட்டது.

'ஸ்ரீரங்கத்து தேவதைக'ளில் நிஜமானது ஸ்ரீரங்கம் மட்டும்தான். அதுவும் அம்பதுகளின், அறுபதுகளின் அரங்கம். இன்றைய ஸ்ரீரங்கம், திருச்சி கார்ப்பரேஷனின் ஓரங் கம். ஏ.டி.எம்-களும் தாறு மாறான கேபிள்களும் அம்மா மண்டபத்திலிருந்து தொடர்ந்து நிற்கும் ஆம்னி பஸ்களும் பெண்கள் கல்லூரியும் புதிய பள்ளிகளும் என்ன என்னவோ நகர்களும் மேம்பாலங்களும் என்னுடைய ஸ்ரீரங்கமல்ல!

ஸ்ரீரங்கத்தில் மாறாதது - ஸ்ரீரங்கநாதனின், ரங்கநாயகித் தாயாரின் விக்கிரகங்களும் கோயிலின் சில பகுதி களும். கோபுரங்களை யெல்லாம் அவசரப் பட்டு வானவில் வண்ண அக்ரிலிக் பெயிண்ட் அடித்து விட்டார்கள். சாளுக்கியர், கிருஷ்ணதேவராயர், நாயக்கர் காலம் என்று மூன்று கால கட்டங்களைக் கடந்த மண்டபங்களும் சிலை களும் சிதிலமாகிக் கொண்டிருக்கின்றன. கிழக்குவாசல் தாண்டி பள்ளிக்குச் செல்லும் பாதையில் உள்ள கட்டைகோபுரத்தில், விறகுக் கடை சுவரில் சாணிதட்டி காட்டுச்செடிகள் பீறிடுகின்றன. ஆறாம் நூற்றாண்டிலிருந்து தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப் பட்ட கோயில், தம்மிடையே தினப்படி பார்வையில் துருத்திக்கொண்டு இருப்பதைப் பற்றிக் கவலை இல்லாத இன்றைய நகரம் ‘மன்மதராசா’வையும் ‘மாத்தியோசி’யும் பாடிக்கொண்டிருக்கிறது. பக்தர்களை அரைமணிக்கொரு முறை டீசல் புகையுடன் கொண்டுவந்து உதிர்க்கிறார்கள். அரங்கனின் சந்நிதிக்கு வரிசைகளை ஒழுங்குபடுத்திக் கம்பி, சங்கிலித்தடுப்பு வைத்து டிக்கெட் வருமானம் அதிகரித்து... இன்றைய ஸ்ரீரங்கம் கடந்தகாலத் தொடர்புகள் பலவற்றை வேகமாக இழந்துகொண்டிருக் கிறது.



அதனால், அதைப் பதிவுசெய்ய வேண்டியது எழுத்தாளன் என்கிற தகுதியில் எனக்குக் கட் டாயமாகிவிட்டது. அந்த நாட்களின் வார்த்தை கள், பேச்சு வழக்குகள் எல்லாமே மாறிவிட்டன. எழுத்தில் நிரந்தரப்படுத்துவது அவசியம் என்று உணர்ந்து இந்தக் கதைகளை எழுதி&னன்.

இன்றைய ஸ்ரீரங்கம்?



தேசிகன்

சாஃப்ட்வேர் திறமையாளரும் என் கதை, கட்டுரைகள் அனைத்தை யும் சேர்த்துவைத்து எது, எந்தப் பத்திரிகையில், எப்போது வந்தது என்பதை நா&ன அவரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளும் அளவுக்கு ஒழுங்காக ஒரு தகவல்தளம் அச்சு வடிவத்திலும் நெட்டிலும் வைத்திருக் கும் நண்பர் தேசிகன். போதாக் குறைக்கு ஒரு திறமை வாய்ந்த ஓவியர். அவரை ஸ்ரீரங்கத்துக்குச் சென்று, சில காட்சிகளை வரைந்து தருமாறு கேட்டுக்கொண்டேன்.

சிலவற்றைத் தந்திருக்கிறேன். ஸ்ரீரங்கத்துக் கதைகள் அனைத்தும் புத்தகமாக வரும்போது இவையும் பயன் படும். பக்கக் கட்டுப்பாடு காரணமாகச் சுருக்கப்பட்ட ‘மாஞ்சு’ கடைசிச் சிறு கதையும் முழுவடிவத்தில் அந்தப் புத் தகத்தில் வரும். தேசிகன் ராஜகோபுரம் ராயகோபுரமாக, மொட்டைக்கோபுர மாக முற்றுப்பெறாமல் இருந்தபோது எப்படி இருந்தது என்பதை ஏ.கே. செட்டியாரின் பழைய புத்தகத்திலிருந்து பார்த்து வரைந்தார். மற்றவை நேரடியாக வரைந்தவை. நான் வளர்ந்த காலத்தில் கோபுரம் இப்படித்தான் இருந்தது. இப்போது இலங்கையை எட்டிப் பார்க்கிறது. கீழச்சித்திரை வீதி அதிகம் மாறவில்லை. வெள்ளை கோபுரம் ஒரு ‘அல்பைனோ’ போல

உள்ளது. கம்பன் மண்டபம், சேஷ ராயர் மண்டபம், கிருஷ்ணன் கோட்டை வாசல், கொட்டாரம், கருடமண்டபம் போன்றவை பாதிக்கப்படவில்லை. சித்திரை, உத்திரை வீதிகள் கொஞ்சம் பழசை ஞாபகப்படுத்துகின்றன. மற்றபடி, ஸ்ரீரங்கத்தின் வெளிநகரம் முழுவதும் அடையாளமிழந்துவிட்டது.

கலாப்ரியாவின் 'வனம் புகுதல்' தொகுப்பிலிருந்து அண்மைக் கவிதை ஒன்றுடன் நிறைவுசெய்கிறேன்.

'தூங்கும் முன்
கழுத்தைக் கட்டிக்கொண்டு
கதைகேட்ட
குழந்தைக்கு
கதை முடிந்ததும்
நீதியைச்
சொல்ல ஆரம்பித்தேன்
தூக்க சுவாரஸ்யமோ
போதனையின் அசுவாரஸ்யமோ
உன் கதையை நீயே வைத்துக்கொள் போ
திரும்பிப் படுத்துக்கொண்டது
சொன்னபின்
யாருக்குச் சொந்தம் கதை?
சொன்ன கதையை
திரும்பிவாங்கிப்
புலனுக்குள் பூட்டக்
கதைசொல்லிக்கு
முடியுமோ?'

என் அனுபவத்தில் முடியாதுதான்! கதை சொன்னபின், அது உலகுக்குச் சொந்தமாகி, ஸ்ட்ரக்சரிலஸ்டுகள் பந்தாடுவார்கள்.

வணக்கம்.